கலைமாமணி விக்கிரமனின்

# சரித்திரக் கதைகள்



தொகுதி - 1

## சித்திரவல்லி

## தியாகவல்லபன்

கலைமாமணி விக்கிரமனின்

# சரித்திரக் கதைகள்

## தொகுதி - 1

## (சோழர்காலம்)

சித்திரவல்லி
தியாகவல்லபன்

**மதன் பதிப்பகம்**

207, ஆர்.கே.மடம் சாலை,
மந்தைவெளி, சென்னை - 600 028
தொலைபேசி : 2495 1097

rketing by -

**VAIRAVAN AGENCIES,**

No.64, 1st Cross Street, East C.I.T. Nagar,
Nandhanam, Chennai - 35 Ph : 4260 4144

# சித்திரவல்லி

## 1

பிள்ளையார் சிலையைப் பல்லவத் தளபதி பரஞ்சோதி வாதாபி யினின்று தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்தார். அந்த மகத்தான நிகழ்ச்சிக்குச் சில நூறு ஆண்டுகளுக்குப் பிறகு ராஜேந்திர சோழர் கங்கையைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்தார்.

சோழகங்கம் எனும் கடல் போன்ற பெரும் ஏரியை வெட்டி அதில் கங்கைநீரைச் சேர்ப்பித்தார். காலையிலும் மாலையிலும் கதிரோனின் நீள்கரங்கள் ஏரிநீரைத் தழுவிப் பொன்னேரியாக்க முயலும். பொன்னேரி என்று அந்த ஏரிக்குப் பெயர் சூட்டியவர் மேதையாகத்தானிருக்க வேண்டும்.

சோழகங்கப் பொன்னேரியில் ஒருநாள் இளம் காலைப்பொழுதில் படகு ஒன்று கரையை நோக்கி வந்துகொண்டிருந்தது. துடுப்பை இளம் பெண் ஒருத்தியும் வாலிப வீரனொருவனும் மாறி மாறிப் போட்டுப் படகை விரைவாகச் செலுத்த முயன்று கொண்டிருந்தனர்.

"இப்படியே இந்த ஏரியில் நீ படகைச் செலுத்த, நான் உன் முகத்தையே பார்த்துக்கொண்டு காலமெல்லாம் கழிக்க வேண்டும் போல் தோன்றுகிறது சித்திரவல்லி!" என்றான் இளைஞன்.

அந்த இளைஞனின் வீரத் திருவிழி கொண்ட முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சித்திரவல்லியின் முகம் தடாகத்தில் காலையில் அலரும் மெல் அரும்பு போல் முறுவல் பூத்தது.

"ஆகா! ஏரியில் இளம் பெண்ணுடன் உங்களைப் போன்ற வீரர்கள் காலத்தைக் கழித்தால் இந்த நாட்டை எளிதில் எதிரிகளிடம் ஒப்படைத்து அடிமையாக வேண்டியதுதான்" என்று கூறிய சித்திரவல்லியின் முகத்தில் சற்றுக் கோபமும் தெரிந்தது.

அந்த வீர வாலிபன் ஜெயசிம்மன் மெல்ல சித்திரவல்லியின் கன்னத்தை வருடி, "நீ வேடிக்கையாகக் கோபிப்பதில்கூட அழகு இருக்கிறது சித்திரவல்லி.

உன் விழிகளில் இப்பொழுது தெரிந்ததே ஓர் ஒளி, அது உன் தந்தை உலைக்கூடத்தில் பழுக்கப் பழுக்க வேலினைக் காய்ச்சும் பொழுது தோன்றும் பிரகாசத்தைவிட பதின்மடங்கு அதிகமாய் இருக்கிறது'' என்றான்.

''இன்றைக்கு என்ன உங்களுக்கு எல்லாம் வர்ணனையாகவும் கற்பனையாகவுமே தோன்றுகின்றன? போர்ப்படையிலிருந்து விலகிப் புலவர் யாரிடமாவது சீடராகப் போகப்போகிறீர்களா?'' என்று கேட்டாள் சித்திரவல்லி. ஜெயசிம்மன் சிறிது நேரம் சிந்தித்தான். படகிலே வந்து மோதும் சிறு சிறு அலைகளைக் கண்டு அவன் மனம் சுழன்றது.

ஜெயசிம்மன் சித்திரவல்லியைச் சந்தித்து முழுமையாக ஒரு திங்கள்கூட ஆகவில்லை. ஆனால், அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த பாசமோ - யுக யுகாந்தரம் ஆனது போல் தோன்றியது.

மாவலிராயன் உலைக்கூடம் கங்கைகொண்டசோழபுரத்தின் ஊர்க் கோடியில் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்தது. அவருடைய உலைக்கூடத்தில் எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை நடந்து கொண்டேயிருக்கும். உலை என்றுமே அணைவதில்லை. பெரும் சக்கரத்தை இரண்டு சிறுவர்கள் எப்பொழுதும் சுழற்றிக்கொண்டே கனல் கொழுந்துவிட்டு எரிவதற்குக் காற்றினை வீசச் செய்து கொண்டே இருப்பார். மாவலிராயன் உடல் இரும்பைவிட உறுதி படைத்திருந்தது. அந்த இரும்பு மனிதனுக்கு வாய்த்த மகளோ படரும் கொடிபோல், துவளும் இடையுடன், நடைபயிலும் தோகை என அந்தக் குடிலைச் சுற்றிச் சுற்றி வருவாள். ஆறப்போட்டிருக்கும் இரும்பினுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். புடம் போடுவதற்காக வரட்டிகளைக் கொண்டு வந்து சேர்ப்பாள். தந்தை கூப்பிடும் குரலுக்கு மறுமொழி கூறிக்கொண்டே கைவேலைகளைக் கவனிப்பாள். உலைக்கூடத்திற்கு வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்பாள்.

இப்படித்தான் ஒருநாள் குதிரை மீது இருந்து கம்பீரமாகக் குதித்த ஜெயசிம்மன், ''இதுதான் மாவலிராயன் குடிலோ?'' என்று அதிகாரத்துடன் கேட்டான்.

சித்திரவல்லி அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள். அந்தக் குரலிலிருந்த பரபரப்பு அடக்க முடியாத சிரிப்பை அவளிடமிருந்து வரவழைத்தது. 'களுக்'கென்று சிரித்துவிட்டாள். ''ஆமாம்'' என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு அவள் விரைந்து தந்தையிடம் சென்று அருகே குனிந்து அவர் காதில் ஏதோ கூறிவிட்டு உள்ளே சென்று மறைந்தாள்.

ஜெயசிம்மன் வேகமாக உள்ளே வந்தான். பரபரப்பாக அந்தக் கூடத்தில் வேலை நடந்துகொண்டிருந்தது. சம்மட்டியை எடுத்து இரும்பைப் பதம் பார்த்த ஆடவரும், பலவிதமான அளவுகள் கொண்ட ஒருவித மண்ணால் செய்யப் பட்ட வார்ப்படங்களில் இரும்பைக் காய்ச்சி ஊற்றிக்கொண்டிருப்பவர்களும் மெருகு கொடுத்து மேலும் கூர்மையாக்கிச் சாணை பிடித்துக் கொண்டிருப்பவர்



களுமாகச் சுறுசுறுப்பு இயல்பாக இயங்கிக்கொண்டிருந்தது. புகைமண்டலம் அந்த இடம் முழுவதும் சூழ்ந்துகொண்டிருந்தது. சற்று இருள் நிறைந்திருந்த இடத்திற்குப் பளிச் பளிச் என ஒளிவீசும் தணலே ஒளி தந்துகொண்டிருந்தது.

மாவலிராயனுக்கு எழுபதைத் தாண்டிய வயதாக இருந்தாலும் பார்வை சிறிதுகூட மங்கவில்லை. ஜெயசிம்மனைத் தொலைவி லிருந்து ஏற இறங்கப் பார்த்தான்.

''வா, தம்பி! என்ன செய்தி?'' என்று பரிவுடன் அழைத்தான் அவன். பிறகு அருகே இருந்த முக்காலியின் மீது படிந்திருந்த சாம்பலை ஊதித் தட்டி அதிலே அவனை அமரச்செய்தான். ஜெயசிம்மன் ஒருமுறை உலைக்கூடம் முழுவதையும் நோட்டம் விட்டுத் தனது நெற்றியிலே அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டு, ''நான் தண்டநாயகத்திட மிருந்து வருகிறேன்'' என்று கம்பீரமாகக் குரலை வரவழைத்துக்கொண்டு சொன்னான்.

இரண்டு பாக்கை வாயிலே போட்டுக்கொண்டு 'கடுக்' என்று கடித்து விட்டு மாவலிராயன் ஜெயசிம்மனைப் பார்த்து, ''நீல கங்கரையன் அனுப்பினாரா?'' என்று கேட்டான். ஜெயசிம்மனுக்கு வியப்பாக இருந்தது.

சோழப்படைகளைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தண்டநாயகம் தலைவராக இருந்து வந்தனர். அவர்களின் கீழ் சிறு சிறு படைக்குழுக்களுக்குத் தலைவராகத் திறமைமிகுந்த இளைஞர்கள் பொறுப்பு வகித்தனர்.

நீலகங்கரையன் என்னும் படைத்தலைவரின் குழுவில் ஜெயசிம்மன் பணியாற்றி வந்தான். அந்தத் தளபதியின் கீழ் பணியாற்றுகிறோம் என்பது கிழவருக்கு இவ்வளவு தெளிவாக எப்படித் தெரிந்தது என்று வியப்பாய் இருந்தது. திகைப்பை மாவலிராயன் புரிந்துகொண்டான்.

''தம்பி! போன சதுர்த்தி அன்றுதானே நீ உறுதிமொழி எடுத்துக் கொண்டாய்? உன்னைப் பற்றி நீலகங்கரையன் நிறைய எனக்குச் சொல்லி விட்டான். குறி தவறாமல் வேல் வீசக் கூடியவனாம் நீ! வாள் எடுத்துச் சளைக்காமல் சுழற்றுபவனாம்! இப்பொழுது என்ன விஷயம்? என்னால் ஆகக் கூடியது ஏதாவது இருந்தால் உடனே செய்கிறேன். உங்கள் தளபதி ஊரில் இருக்கிறாரா அல்லது தொண்டை மண்டலத்திற்குச் சென்றுவிட்டாரா?'' என்று நாட்டு நலன் விசாரித்தான் மாவலிராயன்.

நீலகங்கரையன் தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியில் குறுநில மன்னனாகவும் விளங்குகிறான். அங்குதான் முதன்முதலில் ஜெயசிம்மன் நீலகங்கரையனைச் சந்தித்தான்.

''நேற்றுத்தான் அவசர காரியமாக அவர் காஞ்சி சென்றார். போவதற்கு முன்பு எங்கள் படைப்பிரிவில் உள்ளவர்களுக்குப் புதிய வேல்களை மிக

விரைவாகத் தயாரித்துத் தங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு என்னிடம் கட்டளையிட்டார். அதனால்தான் நான் தங்களுடைய இடத்தைத் தேடி விசாரித்து வருவதற்குச் சற்றுத் தாமதமாகி விட்டது'' என்றான்.

இவ்வளவு நேரம் மிகவும் அமைதியாக வேலையே இல்லாமல் ஓய்வில் இருப்பவர் போல அவனிடம் பேசிக்கொண்டிருந்தவர், இப்பொழுது மளமள வென்று பணியில் கருத்தைச் செலுத்திக் கொண்டே, ''சரி, அப்படியே ஆகட்டும் தம்பி. நீ போய் வா. இன்னும் இரண்டு தினங்களுக்குள் நான் தேவையான வற்றைச் செய்து வைத்துச் சொல்லியனுப்புகிறேன். நீ எங்கே தங்கி இருக்கிறாய். கோட்டைக்குள்ளேதானா? அல்லது வெளியே புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் விடுதிகளிலா?'' என்று கேட்டார்.

''நான் வடக்கு வாசலுக்கு அருகே உள்ள விடுதியில் தங்கியிருக்கிறேன். நானே தங்களிடம் வந்து விசாரித்துவிட்டுப் போகிறேன்'' என்ற ஜெயசிம்மன், முதலில் பார்த்த அந்த இளமங்கையின் முகம் மீண்டும் தென்படுகிறதா என்று சுற்று முற்றும் பார்த்தான்.

அந்தப் பட்டறைக்கூடத்தை விட்டு வெளியே வந்தவுடன் புதிய காற்று அவன் மீது வீசவே, இவ்வளவு நேரம் கடுமையான வெப்பச் சூழ்நிலை மாறி இருந்தது. அவனுடைய புத்துணர்ச்சிக்குத் துணை செய்வது போல் சற்று முன்பு 'களுக்' என்று சிரித்துவிட்டுச் சென்ற அந்த இளங்கொடி இடையில் சுமந்த குடத்து நீருடன் ஒயிலாக நடந்துகொண்டிருந்தாள். அவளுடன் சற்று நின்று பேச வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது. 'பேசுவதா, வேண்டாமா' என்று யோசித்துக்கொண்டிருக்கும் போது அவள், ''என் தந்தையைப் பார்த்துப் பேசிவிட்டீர்களா? எவ்வளவு வேல் செய்யச் சொன்னீர்கள்?'' என்று கேட்டாள்.

ஜெயசிம்மன் இயற்கையிலேயே குறும்புத்தனம் மிகுந்தவன்.

''முப்பது வேல்கள் வேண்டும். ஆனால், இருபத்தெட்டு செய்தால் போதும்'' என்று அவளுடைய விழிகளை உற்றுப் பார்த்துக் கொண்டே சொன்னான். சித்திரவல்லிக்கு அவனுடைய பேச்சிலே மறைந்திருக்கும் அர்த்தம் புரியவில்லை.

''ஏன், மீதி இரண்டு வேல்களைப் பயன்படுத்தும் சுத்த வீரர்கள் யாரும் உங்களுடைய கோஷ்டியில் இல்லையோ!'' என்று கேட்டுவிட்டு அவன் மறுமொழியை எதிர்பார்க்காமலே சென்று விட்டாள்.

எதிர்பாராத அந்தச் சொல்வீச்சில் அவன் ஒரு கணம் தடுமாறினாலும், ''அந்த இரு வேல்களை அடையத்தான் நான் இருக்கிறேனே'' என்று உடனே உரத்த குரலில் சொல்ல வேண்டும்போல் அவனுக்குத் தோன்றியது.

இப்படியாக ஏற்பட்டதுதான் அவர்களுடைய முதல் சந்திப்பு. பிறகு பல தடவை அவன் மாவலிராயனுடைய உலைக்கூடத்திற்கு வரநேர்ந்தது. என்ன, வருவதற்கான சந்தர்ப்பங்களை அவன் ஏற்படுத்திக்கொண்டான். சித்திரவல்லி தன்னிடம் இனம் புரியாத புத்துணர்ச்சியொன்று ஏற்பட்டிருப்பதை உணர்ந்தாள்.



அவளிடம் ஏற்பட்டிருந்த மாறுதலையும் உற்சாகத்தையும் மாவலிராயன் கவனித்தான். தாயில்லாப் பெண்ணின் உள்ளத்துணர்ச்சியைத் தடுக்கவோ தடைசெய்யவோ அவன் விரும்பவில்லை.

உலைக்கூடத்திலே செய்யப்பட்ட ஏராளமான ஈட்டிகளையும் வேல் களையும் சூடு தணியாநிலையில் எடுத்துச்சென்று அவற்றைப் பொன்னேரியில் ஓர் இடத்தில் நன்றாகத் தண்ணீரில் அமிழ்த்தி ஒருநாள் முழுவதும் விட்டிருந்து மறுநாள் திரும்பவும் கொண்டுவருவது வழக்கம். அந்தப் பணி சித்திர வல்லியின் மேற்பார்வையில் நடைபெறும். உலைக் கூடத்துப் பணியாட்கள் ஓரிருவர் சித்திரவல்லிக்கு உதவுவர். அன்று பணியாட் களுக்குக் கடுமையான வேலையிருந்ததால் சித்திரவல்லி ஜெயசிம்மனை அழைத்துக்கொண்டு படகில் ஏறிச் சென்றாள். ஏரியின் ஓரத்தில் ஈட்டிகளையும் வேல்களையும் நன்றாகக் கட்டித் தண்ணீரில் அமிழ்ந்திருக்குமாறு வைத்துவிட்டு அவர்கள் அங்கிருந்து திரும்பிக் கொண்டிருந்தனர்.

''இப்பொழுது சமீப காலமாக ஏராளமான ஆயுதங்களைச் செய்கிறார்களே எதற்கு?'' என்று சித்திரவல்லி ஜெயசிம்மனைக் கேட்டாள். ஜெயசிம்மன் வாய் திறக்கவில்லை.

''ஓகோ! போர் ரகசியங்களை வெளியே சொல்லக்கூடாது அல்லவா? நான் தெரியாமல் கேட்டுவிட்டேன்'' என்று சொல்லிச் சிரித்தாள் சித்திரவல்லி.

அவளுடைய விழிகளை உற்றுப் பார்த்துக் கொண்டே, ''உனக்கும் உன் தந்தைக்கும் தெரியாத ரகசியம் கங்கை கொண்ட சோழபுரத்தில் வேறு என்ன இருக்க முடியும் சித்திரவல்லி? தெரிந்துதான் கேட்கிறாயா? வடக்கே சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதற்கு ஆயத்தங்கள் நடைபெறுவது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டான் ஜெயசிம்மன்.

ஒன்றுமே தெரியாதவள் போல் முக உணர்ச்சியை வரவழைத்துக் கொண்டு, ''உண்மையிலேயே எனக்குத் தெரியாது. வருஷத்திற்கு ஒருமுறை இப்படித்தான் பழைய போர்க்கலன்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பது வழக்கம். அதுபோல்தான் இப்போதும் செய்கிறோம் என்று நான் நினைத்தேன். ஆனால், ஏராளமான புதிய இளைஞர் களைப் படைகளில் சேர்க்கும் பொருட்டுப் பட்டிதொட்டிகளில் எல்லாம் முரசு அறிவித்துக்கொண்டிருக்கும் செய்தி எனக்குச் சமீபத்தில்தான் தெரியவந்தது. அதனால்தான் கேட்டேன்'' என்றாள் சித்திரவல்லி.

''பல மாதங்களாகவே படைதிரட்டும் வேலை நடைபெற்று வருகிறது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்களைத் தேடிப்பிடித்துப் படையிலே சேர்த்து வருகிறார்கள். திறமை மிகுந்த வாலிபர்கள் அயல்நாட்டினின்று வந்தவர்களாயினும் சேர்த்துக் கொள்கிறார்கள். காஞ்சிநகரில் அப்படிச் சேர்ந்தவன்தான் நான்'' என்றான் ஜெயசிம்மன்.

சித்திரவல்லி மௌனமாக இருந்தாள், ஏரிநீரில் சிறிது எடுத்து வேடிக்கையாக ஜெயசிம்மன் மீது தெளித்தாள்.

"இதுவரை நான் என் சுயபிரதாபத்தைத்தான் சொல்லி வந்திருக்கிறேன். நீங்களும் என்னைப் பற்றித்தான் விசாரித்து அறிந்தீர்கள். உங்களுடைய ஊர் எது என்று நான் கேட்கவில்லை உற்றார் உறவினர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று நான் இதுவரையில் கேட்கவில்லை. கேட்க விரும்பியதுமில்லை."

"என்னைப் பற்றி நீ அறிந்துகொள்ள வேண்டாமா! அதைப் பற்றிக் கேட்க உனக்குப் பிடிக்கவில்லையா?"

சித்திரவல்லியின் முகம் திடீரென நாணத்தால் சிவந்தது. அவள் உதடுகள் ஏதோ கூறுவதற்குத் துடித்தன.

"யாரைப் பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டுமோ அவரைப் பற்றி முழுவதும் தெரிந்துகொண்டு விட்டேன்!"

"உம். என்னைப் பற்றி என்ன தெரிந்துகொண்டாயாம்?"

"நீங்கள் மிகவும் பொல்லாதவர் என்று தெரிந்து கொண்டேன். பேதைப் பெண்களை அடிமைப்படுத்துவதில் வல்லவர் என்பதைத் தெரிந்து கொணடேன்" என்றாள் சித்திரவல்லி.

ஜெயசிம்மன் ஒரு கணம் திடுக்கிட்டான். "என்ன சொன்னாய்? பேதைப்பெண்களையா? நான் பணிய வைத்தேனா?"

"மன்னிக்க வேண்டும்; பெண்களை என்றா சொல்லி விட்டேன்? பேதைப்பெண்ணை என்று நான் சொல்லியிருக்க வேண்டும்" என்று கூறி நகைத்தாள் சித்திரவல்லி.

ஜெயசிம்மனும் சேர்ந்து சிரித்தான்.

அந்தச் சிரிப்பொலி அந்த அமைதியான காலைவேளையில் ஏரிக்கரை யெங்கும் பரவியது. தங்களுக்குப் போட்டியாக ஒலிக்கும் சிரிப்பொலியைக் கேட்டுச் சில பறவைகள் பறந்தோடின.

கரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த படகை திசை திருப்பினாள் சித்திரவல்லி.

"இப்படிச் சென்றால் கரை அருகே வந்துவிடுமே?" என்று கேட்டான் ஜெயசிம்மன்.

"இப்படியே போனால், ஏரிக்கு அடியிலுள்ள கட்டடங்களின் மீது மோதிப் படகு உடைந்துவிடும். உங்களுக்குத் தெரியாதா? கோட்டையின் ரகசியவழி இங்கேதான் இருக்கிறது" என்று கூறியவாறு படகைத் திருப்பினாள் சித்திரவல்லி.

சித்திரவல்லியின் முகத்தையே பார்த்தவாறிருந்த ஜெயசிம்மன் பெருமூச்சு விட்டான். தன் ஊர், உற்றார், உறவினர் தெரியாமல் உள்ளத்துணர்ச்சி



ஒன்றை மட்டும் புரிந்து காதல் வயப்பட்ட சித்திரவல்லியிடம் தன்னைப் பற்றிய உண்மையைக் கூறி விடுவோமா என்று ஒரு கணம் நினைத்தான்.

சாளுக்கியநாட்டைச் சேர்ந்தவன் என்பதையும் வெஞ்சினங் கொண்டு சோழர்களைப் பழிக்குப்பழி வாங்க வந்திருப்பதையும் சொல்லி விடுவோமா என்று எண்ணினான். தூய காதல் கொண்டு விட்ட சித்திரவல்லி அதனால் தன்னை மறுத்துவிட மாட்டாள் என்று எண்ணினான்.

படகு திசை திருப்பிச் சென்று கொண்டிருந்தது. ஏரிக்கடியில் உள்ள மாடங்களின் மேல்தளம் சிறிது தெரிந்தது.

பல ரகசியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் தன்னைப் பற்றிய உண்மையைச் சொல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தான்.

## 2

**வை**கறைவேளை நெருங்கிக்கொண்டிருந்தது. ஜெயசிம்மன் படுக்கையில் புரண்டு படுத்தான். சாளரத்தின் வழியே மங்கிய ஒளி கொடுத்துக்கொண்டிருந்தான் சந்திரன். தொலைவில் மேற்குக் கோட்டை வாயில் தெரிந்தது. கோட்டைக்குச் செல்லும் இரகசிய வழியைப் பற்றி தொடர்ந்து அதைப் பற்றிப் பேச்சுக் கொடுத்து இரகசிய வழியை அறிந்துகொள்ள வேண்டும் எனும் ஆவல் அவனுக்கு அதிகமாயிருந்தது. 'சோழ அழகியின் விழிக்கு அடிமைப் பட்டு விடாதே' என்று உள்மனம் எச்சரித்தது. அதே சமயம் சித்திரவல்லியின் நட்பினால் பல ரகசியங்களை அறிந்துகொள்ள வழி ஏற்படும் என எண்ணினான்.

பாவம்; சித்திரவல்லி தன்னை நம்பி, தன் உயிரையே அவனிடம் ஒப்படைக்கும் அளவு அவள் இதயத்தில் காதல் மலர்ந்து விட்டது. மொட்டிலேயே அந்தப் பேதையின் காதலை மலராது செய்துவிடலாம்; கோட்டையின் ரகசியவழி, துவாரபாலகர் சிற்பம் இருக்குமிடம், மேலும் பல அரசியல் நடவடிக்கைகளை அறிந்து கொள்ள அவள் உதவியாக இருப்பாள் உம்...

துவாரபாலகர் சிலை! ஜெயசிம்மன் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தான். ஒரு நாட்டுக்கு இழைக்கக் கூடிய அவமானம் இதை விட வேறு என்ன இருக்க முடியும்?

சோழர்கள் சாளுக்கியநாட்டின் மீது படையெடுத்தனர். வெற்றியின் மமதையால் பேயாட்டம் ஆடினர். செல்வங்களைக் கொள்ளைகொண்டு சென்றனர். அவையெல்லாம் வெற்றி பெறும் நாடு செய்யும் செயல்தான். ஆனால், சோமேஸ்வரர் ஆலயத்துக்குள் நுழைந்து துவாரபாலகர் சிலையைப் பெயர்த்துச் சென்று விட்டனரே...

கங்கைகொண்டசோழபுரம் வந்த அன்றே நகரின் அகலமான வீதிகளையும் பண்டங்கள் விற்கும் கடை வீதிகளையும், பல அடுக்கு மாளிகைகளையும்விட அவனைக் கவர்ந்தது கம்பீரமாக உயர்ந்துநிற்கும் கங்கைகொண்டசோழீசர் கோயில் விமானம்! பெரிய கோயில் - மிகப்பெரிய கோயில்; கோட்டைக்குள்ளே கோட்டை என்று கூறும்படியாகக் கோயிலின் மதில்.

ஜெயசிம்மன் சீற்றம் மிக அதிகமாயிற்று. பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சி வலுப்பெற்றது. துவாரபாலகர் சிலை எங்கே இருக்கிறது என்பதை ஒரு முறை பார்க்க வேண்டும். இருக்குமிடம் தெரிந்து விட்டால் அதை மீண்டும் பெயர்த்து எடுத்துச்செல்வதற்கான திட்டத்தை உருவாக்கிவிடலாம் என்ற எண்ணத்துடன் கோயில் முழுமையும் சுற்றினான். அந்தச் சிலையைக் காணவில்லை.

சோழீசர் கருவறையிலுள்ள பிரமாண்டமான லிங்கமான பெருவுடையாரைப் பார்த்தபோது, அதற்கு ஏற்ற துவாரபாலகரைத் தான் சோழ அரசன் கொண்டுவந்திருக்கிறான் என்று ஜெயசிம்மன் எண்ணினான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. மீண்டும் அதைக் கவர்ந்து சென்று விடச் சாளுக்கியன் ஒருவன் கங்கைகொண்டசோழபுரத்தில் உலவுகிறான் என்பது தெரியாமல் சோழமன்னன் நிம்மதியாக உறங்குகிறான் என்று எண்ணியபோது ஜெயசிம்மன் மீண்டும் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

''ஐயா, ஐயா...!'' என்ற குரல் கேட்டவுடன் ஜெயசிம்மன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

படைவீரன் ஒருவன் வணங்கி நின்றான். சேனைத்தலைவர் நீலகங்கரையன் உடனே அழைத்து வரச் சொன்னதாகத் தெரிவித்தான்.

ஜெயசிம்மன் புருவம் கேள்விக்குறியால் சுருங்கியது. அதிகாலை வேளையில் தலைவர் அழைக்கக் காரணம்? நீலகங்கரையனிடம் ஜெயசிம்மனுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. காஞ்சியில் தங்கியிருந்து வடபகுதிப் பாதுகாவலைக் கவனித்து வரும் அவரிடம்தான் முதன்முதலில் அறிமுகக் ஓலையுடன் ஜெயசிம்மன் பல நாட்களுக்கு முன்னர் வந்தான். தன்னைப் பிறர் சந்தேகப்படும் அளவுக்கு நடந்துகொள்ளாமல் திறமையே துணைகொண்டிருப்பது போல் நடித்த அவனைச் சாதாரணப் படைவீரனாகச் சேர்த்துக்கொண்டார். அவனது திறமையைப் புரிந்துகொண்ட பின்னர் படிப்படியாக அவனது பதவியை உயர்த்தினார். மேலும் அவனது திறமையை வளர்க்கும் பொருட்டு சோழநாட்டுத் தலைநகரான கங்கைகொண்டசோழபுரத்திற்கு அனுப்பிவைத்தார். பல நாட்களுக்குப் பிறகு அவரைச் சந்திக்கப் போகிறோம் என்பதில் அவனுக்கு மகிழ்ச்சி ஒருபுறமும் தன்னை மீண்டும் காஞ்சிக்கே அழைத்துச் சென்று விடப் போகிறாரோ என்ற கவலை ஒருபுறமும் சேர்ந்தது.

நீலகங்கரையர், ஜெயசிம்மனைப் புன்முறுவலுடன் வரவேற்றார்.



''இரவெல்லாம் சிந்தனையோ? உறக்கமில்லாததால் விழிகள் சிவந்திருக்கின்றனவே. உறக்கமற்ற இரவுகள் வருவதற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன ஜெயசிம்மா....'' என்று அவர் கூறியபோது ஜெயசிம்மன் திடுக்கிட்டான். எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாய் என்று கேட்காமலிருந்தாரே!

ஜெயசிம்மன் ஏதோ கூற வாயெடுத்தபோது நீலகங்கரையரே பேசினார்: ''ஜெயசிம்மா, ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்கவே உன்னை அழைத்தேன். நான் இப்பொழுது காஞ்சி சென்றுகொண்டிருக்கிறேன். சாளுக்கியநர்ட்டில் மின்னல் வேகத்தில் படைதிரட்டுகிறார்கள். ஒற்றர்களைச் சோழநாடு முழுமையும் பரவியிருக்குமாறு அனுப்பியிருக்கிறார்கள். ஒற்றர் என்று அறிய முடியாதபடி அவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார்கள்...''

ஜெயசிம்மன் உடல் மெல்ல சிலிர்த்தது.

''அதற்கெல்லாம் பயந்துவிட முடியுமா? உன்னைப் போன்ற திறமை மிக்கவர்கள் நூறு பேரிருந்தால் சாளுக்கியர்களைப் பூண்டோடு நசுக்கிவிடலாம். மன்னருக்கு அப்பொழுதே சொன்னேன். மேலைச்சாளுக்கிய அரசரையும் அவருடைய சந்ததியர்களையும் உருத்தெரியாமல் ஆக்கி நமது படைகளை அங்கே நிரந்தரமாக நிறுத்தி வைப்போமென்று...'' நீலகங்கரையர் சற்று நிறுத்தினார்.

ஜெயசிம்மன் தன் உள்ளத்திலெழுந்த சினத்தைப் புன்முறுவலால் மறைத்து, ''தலைவரே! சாளுக்கியர்கள் படைதிரட்டுவதற்கு முன்பு நாம் படைகளுடன் சென்றுவிட்டால்...'' என்று கூறவும் நீலகங்கரையர், ''அதே திட்டம்தான்.'' என்று அழுத்தமாகக் கூறி அவன் தோளின் மீது தனது இடது கரத்தை வைத்து, வலதுகரத்தை வாளின் மீது ஊன்றி, ''ஜெயசிம்மா, இன்னும் சில நாட்களில் நமது படைகள் அணி அணியாகச் சாளுக்கியநாட்டை நோக்கிச் செல்லப் போகிறது. போர்த்திட்டம் வகுத்தாகிவிட்டது. இங்கே கோட்டைக் காவலுக்கு உன்னை நியமிக்க நான் சிபாரிசு செய்திருக்கிறேன்'' என்றார்.

ஜெயசிம்மன் திடுக்கிட்டான். கோட்டைக்காவலுக்காக இருந்தால் படைகளுடன் களம் செல்ல முடியாதே என்ற கவலை அவனை ஒரு கணம் ஆட்டியது.

''என்ன மௌனமாகிவிட்டாய்? கோட்டைக்காவல் என்றால் இலேசானது அல்ல. கோட்டை முற்றுகை நேரும் போது பலவீனமான பகுதியை முன்பாகவே அறிந்திருக்கும் எதிரிகள் அந்தப் பகுதியைத் தாக்கி அவ்வழியே நுழைய முயல்வர். கோட்டைக்கதவுகளை யானைகளைக் கொண்டும் பெரும் இருப்பு உலக்கைகளைக் கொண்டும் மோதச் செய்து பெயர்க்க முயல்வர். இரகசிய வழியை அறிந்துகொண்டு அதன் வழியே உள்ளே நுழைந்து விடுவர். கோட்டையைக் காக்க வேண்டியவர்கள் மிகவும் நம்பிக்கை உடையவர்களாயிருக்க வேண்டும்... அதனால் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்...'' என்றார் நீலகங்கரையர்.

ஜெயசிம்மன் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக்கொண்டு, ''எந்தப் பணியாயிருந்தாலென்ன, பகைவரை எதிர்க்கும் எந்தப் பணியையும் சிரமேற் கொள்ளத் தயார்...!'' என்றான்.

''பகைவரை எதிர்ப்பதுடன் நாட்டைக் காக்கும் பணியையும் என்று சேர்த்துச் சொல்லு,'' என்று கூறினார் நீலகங்கரையர்.

''ஆம், ஆம்... நாட்டை... தாய்நாட்டைக் காப்பதற்காகத்தானே பகைவரை எதிர்க்கிறோம். அதுவே என் மூச்சு'' என்றான் ஜெயசிம்மன்.

நீலகங்கரையர் அவனது தோளைத் தட்டி, ''உன் திறமையைப் பற்றி மகாமண்டலேச்வரரிடமும் மன்னரிடமும் சொல்லியிருக்கிறேன். சோழ நாட்டில் பிறக்காததால் சோழநாட்டின் மீது பற்று இல்லாமல் போய்விடுமா... அதற்குத் தக்கவாறு உன் பெயரையும் என் பெயரையும் காப்பாற்றி நாட்டையும் காப்பாற்றுவது உன் கடமை... அடுத்த பௌர்ணமிக்குள்ளாகவே படையெடுப்பு நிகழலாம்.... எதற்கும் தயாராக இரு....'' என்றார்.

பாதி உற்சாகமும் பாதி சோர்வுமாக ஜெயசிம்மன் அந்த இடத்தை விட்டு நீலகங்கரையர் அகலும்வரை நின்றிருந்தவன் அங்கிருந்து மெல்ல நடந்தான். குதிரை மீது ஏறிச் செல்லாமல் நடந்தே சித்திரவல்லியின் வீட்டை நோக்கிச் சென்றான்.

**கா**லை இளங்கதிர்கள் மெல்ல மெல்லத் தவழ்ந்து வந்து கொண்டிருந்தன. சேவலொன்று ஏதோ அவசரமாக வேலையிருப்பது போல் இங்குமங்கும் கொண்டையை அசைத்துக்கொண்டு சென்றது. இரவெல்லாம் விழித்திருந்த தால் வெள்ளைநிற நாய் ஒன்று சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது. தலையில் பெரும் கூடை நிறையப் பண்டங்களைச் சுமந்து கொண்டு கடைவீதி நோக்கிப் பெண்கள் சென்றுகொண்டிருந்தனர்.

சரக்கொன்றை மலரை அலகால் பறித்துக்கொண்டிருந்தாள் சித்திரவல்லி. வேலி ஓரமாக ஜெயசிம்மன் வருவதைக் கவனித்த அவள் இதயம் குதூகலித்தது. புரிய முடியாத படபடப்பு ஏற்பட்டது. என்றாலும், அந்தக் காலை வேளையிலும் ஜெயசிம்மன் தன்னைத் தேடி வருவது அவளுக்குப் பிடிக்க வில்லை. திறமையால் படையில் பெரும் பதவி பெறவேண்டிய அவர் அடிக்கடி தன்னைச் சந்திப்பதன் மூலம் கவனத்தைச் சிதறடிக்கப் போகிறாரே என்ற கவலை அவளுக்கு. இது குறித்து மெல்ல எச்சரிக்கவும் விரும்பினாள். ஆனால், தன்னுடைய எச்சரிக்கையைத் தவறாகப் புரிந்துகொண்டு காதலை உதறித்தள்ளிவிட்டால் என்ன செய்வது என்ற கவலையும் அவள் இதயத்தில் குடிகொண்டது.

சித்திரவல்லி கூடையில் பறித்த பூக்களைப் போட்டுக்கொண்டு வேலிப் படலைத் தள்ளி வெளியே செல்ல முயன்றாள்.



''பூவையரைப் பூவுடன் பார்க்கும் போதுதான் எது அழகு என்பது புரிகிறது'' என்று ஜெயசிம்மன் பேச்சைத் தொடங்கினான். சித்திரவல்லி நிற்கவில்லை.

சித்திரவல்லி அதை ரசிக்கவில்லை என்பதை உணர்ந்த அவன், ''எங்கே புறப்பட்டுவிட்டாய் சித்திரவல்லி'' என்று கேட்டான்.

''கோட்டை விநாயகருக்கு வாரம் ஒருநாள் நான்தான் மலர் பறித்துத் தருவேன். நேரமாகிறது... உங்களுக்கு அவசரமான காரியம் எதுமில்லை போலிருக்கிறது'' என்றாள் சற்று நின்று.

''மிக மிக அவசரமான வேலை என்னைப் படுக்கையிலேயே தட்டி எழுப்பிவிட்டது. ஒரு சந்தோஷமான செய்தியைத் தெரிவிப்பதற் காகத்தான் நான் ஓடிவந்தேன்.''

சித்திரவல்லி கேட்கவில்லை. தன் ஆவலையும் துள்ளும் காதல் தாபத்தையும் புலப்படுத்த விரும்பாத சித்திரவல்லி, வேலி அருகே தழைத்திருந்த செம்பருத்தி மலர் ஒன்றைப் பறித்து அதன் அழகை ரசிப்பது போலிருந்தாள்.

''என்ன தெரியுமா? கோட்டைக்காவல் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்....'' என்றான் ஜெயசிம்மன் ஆவலுடன்.

''இதில் சந்தோஷச் செய்தி என்ன இருக்கிறது?''

''என்ன அப்படிக் கேட்டுவிட்டாய்? தளபதி என் திறமையில் வைத்திருக்கும் நம்பிக்கை அதிலிருந்து தெரியவில்லையா?''

''சோழநாட்டுப் படை வீரருள் ஒருவராக உம்மைத் தேர்ந்தெடுத்த போதே. நம்பிக்கை வைத்தே அப்படிச் செய்திருக்கிறார்கள். வீரர்கள் தமது திறமையால் முன்னேற வேண்டுமே தவிர, தளபதி வைக்கும் நம்பிக்கையால் மட்டும் ஏற்படும் முன்னேற்றம் முன்னேற்றமாகாது...''

சித்திரவல்லியின் உற்சாகமற்ற பேச்சு ஜெயசிம்மனைச் சோர்வு கொள்ளச் செய்தது. ஏனோ சரிவர அவள் முகம் கொடுத்துப் பேசவில்லை என்று உணர்ந்த ஜெயசிம்மன், தனக்கும் அவள் மீது சற்றுக் கோபம் ஏற்பட்டிருப்பது போல் நடக்க வேண்டுமென்று நினைத்தவனாகப் பேச்சை மாற்றி ''இவ்வளவு அதிகாலையில் வந்தது சந்தோஷச் செய்தியைச் சொல்வதற்காக மட்டுமல்ல... உன் தந்தையைப் பார்த்துச் சில செய்திகளைச் சொல்லிப்போகத்தான்...'' என்று கூறியவாறு அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் உலைக் கூடத்திற்குள் நுழைந்தான்.

அவ்வளவு சீக்கிரமாகப் பணியாட்கள் வரவில்லை. மாவலி ராயனையும் காணவில்லை. கணப்பின் அருகே இளஞ்சென்னி அமர்ந்து ஏதோ சரிபார்த்துக் கொண்டிருந்தான். மாவலிராயன் சகோதரியின் மகன் அவன்.

ஜெயசிம்மன் வந்ததைக் கவனித்த அவன் திரும்பிப் பார்க்காமலேயே, "சித்திரவல்லி இங்கில்லையே!" என்றான்.

அவன் குரலில் குறும்புத்தனம் நிறைந்திருப்பதை உணர்ந்த ஜெயசிம்மன், "காலைவேளையில் கோட்டைத் தளபதி சித்திரவல்லியைத் தேடி வரவேண்டிய அவசியமில்லை..." என்றான்.

"ஓகோ! மாலைவேளையில்தான் தேடுவீர்கள் போலிருக்கிறது..."

"அதிகப்பிரசங்கி! மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக் கொள்ளப் பழகு! மாவலிராயர் எங்கே?"

"மேன்மை தங்கிய ஜெயசிம்மன் அவர்களே, தாங்கள் கோட்டைத் தளபதி ஆன செய்தி எனக்குத் தெரியாது. தங்களை நிற்க வைத்துப் பேசுவதற்குப் பொறுத்தருள்க. இதோ இந்த ஆசனத்தில் அமருங்கள்" என்று மிகவும் பயபக்தியுடன் பேசுவது போல் அவன் நடித்தான்.

பிறகு, "மாவலிராயர் இரவெல்லாம் உலைக்கூடத்தில் வேலை செய்தார். இப்போதுதான் சற்று உறங்கச் சென்றார். என்னால் ஆகக்கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். உங்கள் வாளைச் சாணைபிடிக்க வேண்டுமா? முனை மழுங்கிய ஈட்டியைக் கூர்மையாக்க வேண்டுமா?" என்று மிகவும் பணிவான குரலில் பேசுவது போல் பேசினான்.

இளஞ்சென்னியுடன் தொடர்ந்து பேச ஜெயசிம்மன் விரும்பவில்லை. மறுமொழி ஏதும் கூறாமல், வந்தது போலவே திரும்பிவிட்டான். உள்ளே பேசிவிட்டுத் திரும்பி வரும் போது பேசலாம் என்று கொன்றைமர நிழலில் நின்றிருந்த சித்திர வல்லியையும் கவனிக்காமல் மிக வேகமாகத் திரும்பிச் சென்றான்.

சித்திரவல்லி ஓடிவந்தாள். ஜெயசிம்மனை எவ்வாறு அழைப்பது? திகைத்து ஜெயசிம்மன் செல்லும் திசையைப் பார்த்தவாறு நின்றாள்.

"கோட்டைத் தளபதியாம்! அவரே தன் பதவியைப் பற்றிச் சொல்லிக் கொண்டார். அவர் உன்னைத் தேடி வரவில்லை சித்திரவல்லி... உன் தந்தையைத் தேடி வந்தாராம்! ஆமாம்... அடிக்கடி இங்கே வந்து எத்தனை வேல்கள் தயாராகியுள்ளன, எத்தனை ஈட்டிகள் தயாராகியுள்ளன என்று கேட்கிறாரே... உண்மையிலேயே வேலைப்பற்றி அறிய ஆசையா? அல்லது வேல்விழிகளை ஆராய ஆசையா?" என்று இளஞ்சென்னி கேட்கவும் திடுக்கிட்டுத் திரும்பிய சித்திரவல்லி "உன்னை ஏதும் கேட்கவில்லை. உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!" என்று சீறிவிட்டு உள்ளே விரைந்தாள். விநாயகருக்குக் கொன்றைமலர் அன்று கிடையாது.

ஜெயசிம்மன் கோபமாகச் சென்றுவிட்டதை உணர்ந்த சித்திரவல்லி அவனை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று விரும்பினாள். சரிவர முகங்கொடுத்துப் பேசாததால் கோபமாகச் சென்றுவிட்டாரோ என்றும் கலங்கினாள்.



தன்னைத் தேடிச் சித்திரவல்லி வருவாள் என்று ஜெயசிம்மன் எதிர்பார்க்கவில்லை. வடக்குக் கோட்டைமதிலின்மீது ஏறி முரசு மண்டபத்தின் அமைப்பையும் அங்கிருந்து தெரியும் நகரத் தோற்றத்தையும் நோக்கியவாறிருந்த ஜெயசிம்மன், தனக்கு மிக அருகே மல்லிகை மணமும் மெல்லிய மூச்சின் ஸ்பரிசமும் ஏற்படவே திடுக்கிட்டுத் திரும்பினான். ஒரு கணம் அவளையே உற்று நோக்கிய ஜெயசிம்மன் "விநாயகருக்கு மலரைச் சூட்டிவிட்டாயா?" என்றான்.

"இல்லை... இந்த விநாயகர் புதுப்பணியைத் தொடங்குகிறாரே என்று சமர்ப்பிக்க வந்தேன்... அதற்குள் தங்களுக்கிட்ட பணியைத் தொடங்கி விட்டீர்களா?"

"ஆமாம், ஒரு வினாடியைக்கூட இனி வீணாக்க முடியாது. உல்லாசமாகக் காலங்கழித்ததெல்லாம் போய்விட்டது" என்றான் ஜெயசிம்மன் எங்கோ பார்த்தபடி.

"என்னுடன் பேசுவதற்காவது சிறிது நேரம் கிடைக்குமல்லவா!"

"மாவலிராயன் மகளுக்கு நேரம் கிடைத்தால் இந்தச் சாதாரணப் போர் வீரனுக்குக் கிடைப்பது ஒன்றும் கஷ்டமில்லை..." என்று கூறியவாறு மதிலின் மீது அவன் நடந்தான்.

"மதிலின் பலத்தையும், பாதுகாப்பையும் ஆராயும் போது, ரகசிய வழிகளின் பலத்தையும் ஆராயவேண்டும்..." என்று கூறிப் பேச்சை மாற்ற முயன்றாள் சித்திரவல்லி.

"ரகசியவழி, ரகசியவழி என்று கூறுகிறாயே சித்திரவல்லி! இவ்வளவு பிரபலமாக இருக்கும் வழிக்கு ரகசியவழி என்று யார் பெயர் வைத்தார்கள்?" என்று கேட்டான் ஜெயசிம்மன்.

"பிரபலமாக இருக்கிறதா? இன்னும் யார் சொன்னார்கள் உங்களுக்கு?" சித்திரவல்லியின் முகத்தில் கேள்விக்குறி படர்ந்தது.

"நீ ஒருத்தி சொன்னாயே போதாதா? பெண்கள் படை பலத்தைப் பற்றி அறிந்திருக்கிறார்கள் என்றால் அது பிரபலமாகாது என்பது என்ன நிச்சயம்?" என்றான் ஜெயசிம்மன்.

சித்திரவல்லியின் முகம் சிவந்தது. உதடுகள் துடித்தன. "உலக வாழ்வையொட்டி எல்லாப் பெண்களையும் ஒரே அளவில் மதிப்பிடாதீர்கள். எனக்குத் தெரிந்த ரகசியம் முழுவதையும் பறைசாற்றி விடுவேன், என்று நினைக்காதீர்கள். என் மீதுள்ள நம்பிக்கையில்தான் மாளிகைக்குள் என்னைத் தங்கு தடையின்றிப் போக அனுமதிக்கிறார்கள். மன்னர்பிரானைச் சந்திக்கக் கூட எனக்குத் தடை கிடையாது. மந்திரிப் பிரதானிகளுடன் தாராளமாகப் பேசுவேன். ஆனால், கோட்டைத்தளபதியுடன் பேசவதென்றால் மட்டும் அவரது சூழ்நிலை, மனப்போக்கு அறிந்துதான் பேசவேண்டும்..." என்று கூறியவாறு அங்கிருந்த படிக்கட்டுகள் வழியே இறங்க முற்பட்டாள்.

அவள் கரத்தைத் தாவிப்பிடித்த ஜெயசிம்மன், ''வேடிக்கையாகச் சொன்னேன் சித்திரவல்லி!'' என்றான்.

அவனுடைய அழுத்தமான பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள் சித்திரவல்லி. புதிய ஸ்பரிசம் அவளை மெய் மறக்கச் செய்தது.

கோட்டை மீது நிழல் உருவங்கள் போல் இருவர் நிற்பதைக் கீழே இருந்து கவனித்தார் உலகளந்த சோழபிரம்மராயர் என்று அரசரால் மிகவும் பயபக்தியுடன் அழைக்கப்படும் வாசுதேவ நாராயணன். எதிர்பாராத விதமாகத் தனது குற்றேவலர்களுடன் வந்த அவர் அந்த முதிய பருவத்திலும் நாட்டின் நலனில் மிகவும் அக்கறை கொண்டு அவ்வப்போது மன்னருக்கு யோசனைகள் கூறி வந்தார்.

''மதிலின் மீது ஓர் ஆணும் பெண்ணும் நிற்பது போல் தெரியவில்லை?'' என்று தனது புருவத்தின் மீது வலதுகையை வைத்து உற்று நோக்கியபடி கேட்டார் உலகளந்தார்.

அவர் அப்படிக் கேட்கிறார் என்றால் உடனே அவர்களிருவரையும் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்று பொருள். அவரது கூர்மையான நோக்கினின்று எவரும் தப்பமுடியாது!

## 3

''யாரது?'' என்று குரல் கொடுத்தார் ஆகவமல்லன். அவர் இளைப் பாறிக் கொண்டிருந்த அந்த விசாலமான கூடத்தின் வெளியே யாரோ நடமாடும் காலடி ஓசை கேட்டது. வெளியே இருள் கப்பிக் கொண்டு அந்தப் பகுதியின் அமைதியை மேலும் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தபோது அரசர் இருந்த அந்தக் கூடத்திலும் விளக்கேற்றப்படவில்லை. இருளில் தனிமையை அணு அணுவாக அனுபவிப்பவர்போல் மன்னர் மஞ்சத்தில் அமர்ந்திருந்தார். காற்றுக்கு இருள் என்றும் வெளிச்சம் என்றும் பாகுபாடு தெரியாததால், அந்தக் கூடத்தின் வாயிலில் அலங்கரித்த திரைச்சீலையை - பலமாக அசைந்தாடச் செய்தது. மன்னர் மேலும் அழுத்தமான குரலில், ''யார் அங்கே?'' என்று கேட்டார்.

பணிப்பெண் சந்தடியின்றி மற்ற இடங்களில் ஒவ்வொரு விளக்காக ஏற்றிக்கொண்டு வந்தாள். பகலில் காவல் புரியும் மாளிகைக்காவல்காரர்கள் இரவுநேரக் காவலர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கும் அரவம் எழுந்தது. கூட்டினை அடையும் பறவைகள் விரைந்து வந்து தத்தம் இருப்பிடத்தைச் சேர எழுப்பும் ஒலி, போர்க்களத்தே பகைவரிடம் புறமுதுகிட்டு வீரர்கள் ஓடிவரும்போது எழும் ஓசையை ஒத்திருந்தது. அந்த ஓசை ஆகவமல்லன் மனநிம்மதியைக் குலைத்தது. பறவைகளை அமைதியாக இருக்கச் சொல்ல



யாரால் முடியும்? அவர் இதயத்தில் எழும் பேரிரைச்சலையே அவரால் அடக்க முடியவில்லையே!

திரையை விலக்கிக்கொண்டு மெல்ல நடந்து அரசி பாலாதேவி வந்துகொண்டிருந்தாள்.

''யார்.... தேவியா?'' ஆகவமல்லனின் குரலில் களைப்பு நிறைந்திருந்தது. பாலாதேவி தன் கையிலிருந்த இரவு உணவுப் பாத்திரத்தை அருகேயுள்ள பீடத்தில் வைத்துவிட்டு, ''இன்னும் இங்கே விளக்கேற்றவில்லையா? யாரங்கே? லட்சுமம்மா... கோதாவரி... எங்கே போய்விட்டீர்கள்?'' என்று உரத்த குரலில் பேசினாள்.

ஆகவமல்லன் மெல்ல பாலாதேவியின் கரத்தைப் பிடித்துத் தன் அருகே இழுத்து, ''ஆமாம் தேவி, இன்னும் இங்கே விளக்கேற்ற வில்லை'' என்று கூறி நகைத்து அவளது கரத்தைத் தன் இதயத்தில் அழுத்திக்கொண்டார். ''தேவி... நான்தான் இங்கே விளக்கேற்ற வேண்டாம் என்று கூறினேன். வெளிச்சத்தில் இருந்தபோது, எனக்கு இருளின் அனுபவமே இல்லை. அதனால் இருளிலிருந்து ஒளியின் சிறப்பை அறிய விரும்பினேன்...''

ஆகவமல்லனுக்கு மூச்சு வாங்கியது. இதயப் படபடப்பு அதிகமாகியதைத் தேவி உணர்ந்தாள்.

''தேவி... இந்த மாளிகை சென்ற வருடம் இப்படியா களை இழந்திருந்தது? கல்யாணபுரம் என்ற பெயருக்கேற்ப மங்களகரமாக இருந்ததே. பொறாமை பிடித்த சோழர்கள் இந்த நகரத்தைப் பார்த்து இதன் அழகைக் குலைக்க வேண்டுமென்று திட்டம் போட்டே அழித்துவிட்டார்கள்.''

பாலாதேவி மன்னரை மெல்ல அணைத்து, படபடப்பு மிகுதியாக இருக்கும் அவர் மார்பை மெல்லத் தடவி, ''உணர்ச்சி வசப்படக்கூடாது என்று வைத்தியர் எச்சரிக்கவில்லையா? இப்படி இருட்டறையில் அமர்ந்திருப்பதால் வாழ்வில் வெளிச்சம் வந்துவிடப் போகிறதா? அதோ... சோமேசுவரர் கோயிலில் பூஜை நேர மணியோசை கேட்கிறதே... ஒவ்வொரு நாளும் இந்த நேரத்தில் நாம் இறைவனைத் துதிக்கச் செல்வோமே... நீங்கள் கோயிலுக்கு வராவிட்டாலும் இங்கிருந்தே இறைவனைத் துதிக்கலாமல்லவா? நம்மைக் காப்பாற்ற அவர் ஒருவரைத் தவிர நமக்குத் துணை யார்?'' என்று கூறித் தன் மனவேதனையைத் தெரிவித்துக்கொண்டாள்.

ஆகவமல்லன் நகைத்தார். அதில் விரக்தி கலந்திருந்தது. ''சோமேசுவரர் நம்மைக் காப்பாற்றப் போகிறாரா? அவரது கர்ப்பக்கிரஹ வாசலில் காவல் காத்து நிற்கும் துவாரபாலகரைச் சோழ வீரர்கள் கொண்டுசென்ற போது காப்பாற்றிக் கொள்ள இயலாத ஈசர் என்னையும் உன்னையும் இந்த நாட்டையும் காப்பாற்றி விடப்போகிறாரா?'' என்று கூறவும் மன்னரது அணைப்பிலிருந்து சற்று விலகி, இவ்வாறு சோர்வும் விரக்தியும் கலந்த மனப்பான்மையுடன் பேசிக்கொண்டிருப்

பதால் யாருக்கும் பலனில்லை என்பதை உணர்த்த விரும்பி, "தங்களுக்குத் தெரியாததை நான் சொல்லிவிடப் போவதில்லை. நான் ஒன்று கேட்கிறேன். தயவுசெய்து அதற்கு மறுமொழி சொல்லமுடியுமா? நான் கேள்வி கேட்கிறேன் என்று கோபப்படாமல் இருக்க முடியுமா?" என்று கேட்ட தேவியின் கரத்தை மீண்டும் பிடித்திழுத்துத் தன் உடலோடு தழுவிக்கொண்டு, "கேள் தேவி, என்ன வேண்டுமானாலும் கேள்வி கேள். இந்தச் சாம்ராஜ்யத்தை விரோதிகளிடமிருந்து பாதுகாக்கத் தெரியாத ஓர் அரசனும் அவனைப் படைத்த ஆண்டவனும் இன்னும் இந்த நாட்டில் வாழ்வது ஏன் என்று கேள்" என்றார்.

மீண்டும் அவரிடமிருந்து விடுபட்டு, "இதோ, விளக்கை ஏற்றுமாறு பணிப்பெண்ணை அழைக்கிறேன். இருள் தங்களுக்குச் சௌகரியமாக உதவுகிறது" என்று கோபிப்பது போல் பாவனை செய்து கைதட்டிப் பணிப்பெண்ணை அழைத்துவிட்டு, "அரசே! நான் கேட்பதற்குத் தயவுசெய்து பதில் சொல்லுங்கள்" என்றாள்.

தலையசைத்தார் அரசர்.

"கல்யாணபுரத்துக்குப் பெருமை தரும் - ஏன், இந்தத் தென்னகத்துக்கே பெருமை தரும் - சோமேசுவரர் கோயிலைக் கட்டியவர் யார்? சொல்ல முடியுமா?"

"நான் கட்டவில்லை... என் தந்தையும் கட்டவில்லை. முப்பாட்டனார் கலை ஆர்வம் மிகுந்தவர். தெய்வபக்தி மிகுந்தவர். அவர் கட்டினார்."

"தங்கள் தந்தை மேலும் அழகுபடுத்தினார் என்று கூறுவீர்களே?"

"ஆம் தேவி... முன்மண்டபம் கட்டினார். மண்டபத்தில் சிற்ப அற்புதங்களைப் படைத்தார். அதிசய துவாரபாலகர் சிலையை அமைத்தவரும் அவரே. நான் அப்போது சிறுவன்...."

"சரி... மற்றொன்றும் கூறுவீர்களே... மரணப்படுக்கையிலே அவர் கூறியதாக..."

"ஆம். உயிர் பிரியும் சமயத்தில் சோமேசுவரர் ஆலயத்தை மேலும் அழகு படுத்துமாறு கூறினார். அதன்படி நான் சிற்பிகளை வரவழைத்துப் பல சிற்பங்களைச் செதுக்கச் சொன்னேன். ஆனால், அந்தத் துவாரபாலகர் சிலைகளைப் போலவோ, என் மூதாதையர் அமைத்த சிற்பங்களைப் போலவோ புகழ்மிக்க சிற்பங்களை என்னால் அமைக்க முடியவில்லை..."

"கோயிலை அழகுபடுத்தும் கடமையை ஒப்படைத்த உங்கள் தந்தை அதைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஒப்படைத்தார் அல்லவா?"

"இதென்ன கேள்வி? மன்னரின் கடமையே நாட்டைக் காப்பதுதானே? கபடமாகச் சோழமன்னன் நமது நகரத்தைத் தாக்கி ஊரைச் சூறையாடியதால், பொன் பொருள் உடைமைகளை விட்டு விட்டு மக்கள் ஓடினார்களே! அவர்களைக் காப்பாற்ற முடிய வில்லையே என்ற வேதனையால்தானே தேவி,



நான் இப்படித் தனிமையாக மனம் நொந்து அணு அணுவாகச் சிதைந்து காலம் கழிக்கிறேன்."

"நாட்டையும் மக்களையும் கோயிலையும் கோயில் சிற்பங்களையும் காப்பது உங்கள் கடமையாக இருக்கும் போது சோமேசுவரர் மீது - கடவுள் மீது - வீணே ஏன் பழியைப் போடுகிறீர்கள்? நம் மூதாதையர் செய்த பூஜாபலன் என்னைப் பூவும் பொட்டுமாக வாழ வழி செய்தாரே! அந்த சோமேசுவரரை நான் ஒவ்வொரு நொடியும் பிரார்த்திக்கிறேன். என் மாங்கல்யத்தைக் காத்தாரே! அந்த முழுமுதற்கடவுளை நான் நினைத்துப் போற்றாத நேரமே இல்லை..."

தேவியின் விழியில் கோர்த்து நின்ற நீர்த் துளிகள் அந்த அறையில் ஏற்பட்ட ஒளியில் மன்னரை மேலும் நெகிழச் செய்தன.

"தேவி, விழிநீரைத் துடைத்துக்கொள்... இந்த நாட்டில் தனது குடும்பத் தலைவரையும் பிள்ளைகளையும் பொன்னையும் பொருளையும் இழந்து கதறிய பெண்டிர்களின் துயரத்தைத் துடைத்து விட முடியும் என்ற நம்பிக்கை ஒன்றினால்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்."

"நான் நம்பமாட்டேன். வஞ்சக நெஞ்சம் கொண்ட சோழர்படை வீரர்கள் தாங்கள் அடைந்த வெற்றி மமதையில் நகரத்தைச் சூறையாடியதோடு தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ளாமல், மாளிகைக்குள் நுழைந்து செய்த அக்கிரமத்திற்குப் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்பதற்காகவும் நீங்கள் உயிர் வாழவில்லையா?" என்று கேட்டபோது, மஞ்சத்தில் இதுவரை தலையணையில் சாய்ந்திருந்த ஆகவமல்லன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அந்தப் பயங்கர நிகழ்ச்சி நடந்த நாளின் நினைவு அவர் கண்முன் தோன்றியது!

போர்க்களத்தில் மேலைச்சாளுக்கியர்களின் படைகளுக்குப் படுதோல்வி! நான்கு பக்கமும் சிதறுண்டு ஓடினர். வெறிபிடித்த சோழவீரர்கள் கல்யாணபுர மாளிகையை அணு அணுவாகச் சிதைக்க முற்பட்டனர். ஒருபுறம் மாளிகை தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது. ஆகவமல்லன், தன் தேவியருடன் ரகசியவழியின் மூலம் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுவிட்டார். ஆகவமல்லனுக்கு ஓடி ஒளிந்துகொள்வதில் விருப்பமில்லை. ஆயினும் அமைச்சர் தளபதிகளின் வற்புறுத்தலினால் மறைந்துகொண்டார். அவ்வப் போது சோழர்களின் அட்டூழியச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. திடீரென்று செய்தியொன்று கிடைத்தது. வீரன் ஒருவன் ஓடிவந்தான். "அரசே! அந்தப் புரத்திற்குள்ளும் சோழர் படைகள் நுழைந்து விட்டன. பெண்டிர் அனைவரையும் சிறைபிடித்துச் சோழநாட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறார்களாம். அரசியாரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அரசியார் கிடைக்கா விட்டால் பெண்டிர் அனைவரையும் மானபங்கப்படுத்தப் போகிறார்களாம்" என்று அவன் கூறியது கேட்டு ஆகவமல்லன் செய்வதறியாது திகைத்தார்.

அமைச்சர் சமாதானப்படுத்தி யோசனையையும் கூறினார். ''நமது தேவியரை அவர்கள் சிறை பிடித்துவிட்டால்... சற்றுத் தந்திரத்தைக் கையாள வேண்டியிருக்கிறது.... இராசாதிராசர் தெய்வபக்தி மிக்கவர். கலையரசர். பெரிய சிவன்கோயிலைக் கட்டிய இராசேந்திர சோழரின் திருக்குமாரர். நமது சோமேசுவரர் கோயிலின் பெருமையை அவரிடம் எடுத்துக் கூறுகிறேன். அங்கே சிற்பச்செல்வங்கள் நிறைந்துள்ள செய்தியை விவரிக்கிறேன். இராசாதிராசர் மனம் மாறும். அவரது வீரர்களின் அட்டூழியம் நிற்கும்....''

அமைச்சரின் சமயோசித யோசனை சரி என்றே ஆகவமல்லனுக்குத் தோன்றியது. அமைச்சரும் தளபதியும் படைவீட்டில் தங்கியிருந்த இராசாதி ராசரைக் காண வெள்ளைக் கொடி பிடித்துச் சென்றனர்.

ஆகவமல்லன் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகியது. பாலாதேவி பதறிப்போனாள்.

''அரசே.... அரசே... ஏன்.... என்ன நேர்ந்தது? கலங்கினாலும் கண்ணீர் விட்டறியா நீங்கள் இப்பொழுது விம்மியழுவதேன்?'' என்று பரபரப்புடன் அவர் விழிநீரைத் துடைத்தாள்.

ஆகவமல்லன் சற்றுச் சாந்தமடைந்தார். ''பழைய சம்பவம் என் கண் முன்னால் தோன்றுவதை என்னால் மறக்க முடியவில்லை. மாபெரும் சாளுக்கிய சாம்ராஜ்ய மாமன்னன் அந்த அவமான நிகழ்ச்சியை நினைக்கும் போது குன்றிச் சாகாமல் என்ன செய்வது...?''

''ஓகோ! அமைச்சருக்கு நேர்ந்த அந்த அவமானத்தைச் சொல்கிறீர்களா? சோமேசுவரர் கோயிலைப் பற்றி நல்லதற்காகத்தான் அவர் சோழ அரசரிடம் எடுத்துச் சொன்னார். ஆனால், அதுவே வேறுவித தீவினையாக முடிந்து விட்டதே... இராசாதிராசர் கோயிலைக் காண வந்தார். கோயிலின் சிற்ப அற்புதங்கள் அவரை மெய் மறக்கச் செய்தன. அவரை மிகவும் கவர்ந்த துவாரபாலகர் சிலையைப் பழுதுபடாமல் பெயர்த்து எடுத்து வருமாறு கட்டளை யிட்டார். அராஜகத்தை நிறுத்துமாறு தனது வீரர்களுக்கு கட்டளையிட்டார். இல்லாவிடில் அந்தப் பாவிகள் கல்யாணபுரத்தை மண்ணோடு மண்ணாக ஆக்கியிருப்பார்கள்...'' என்றாள் தேவி.

''அவர்கள் பாவிகள் அல்லர் தேவி... அவர்கள் கலை ஆர்வம் மிகுந்தவர்கள்.'' - ஆகவமல்லன் வேதனை நிறைந்த குரலில் கூறினார்.

''கலை ஆர்வமா? வெறி என்று கூறுங்கள். துவாரபாலகர் சிலையைப் பெயர்த்தபோது சைவமடத்துத் தலைவர் சங்கமேஸ்வரர் இராசாதிராசரை அணுகி நமது ராஜநர்த்தகி நர்மதாதேவியை அவர் முன் நிறுத்தி, உயிரற்ற சிற்பத்தை விட இந்த உயிருள்ள ஜீவசிற்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள்... துவாரபாலகர் சிலையைத் தயவுசெய்து விட்டுவிட்டுச் செல்லுங்கள் என்று எவ்வளவோ வேண்டிக் கொண்டார். ஆனால், அரசரோ சிற்பக் கலையழகு இந்த அழகிக்கு



வருமா? நாளுக்கு நாள் இவள் அழகு குறையும். சிற்ப அழகு குறையுமா? எனக்குச் சிற்பம்தான் வேண்டும்.... இதை ஆர்வம் என்று எப்படிக் கூறுவது? வெறி என்றுதான் கூறவேண்டும்'' என்றாள் பாலாதேவி எரிச்சலுடன்.

''ஆமாம் தேவி! சோழநாட்டில் இல்லாத பெண்களா? அவர்கள் இப்போது சிற்பத்தைத்தான் தேடுகிறார்கள். தன் பாட்டன் தஞ்சையில் பெரிய கோயிலைக் கட்டினான். அவர் மகன் ராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் பெரிய கோயிலைக் கட்டினான். தந்தையையும் பாட்டனையும் போல் தானும் ஏதாவது செய்தாக வேண்டும் என்று இராசாதி ராசன் துடிக்காமல் இருப்பானா? இந்தச் சிலை அவன் கண்ணில் பட்டுவிட்டது. ஆயிரம் பெண்களை இழக்கத் தயார். ஆனால், அந்தச் சிற்பத்தை இழந்ததுதான் என்னை வேதனைக்குள்ளாக்கி விட்டது. அந்தச் சிலையைத் திரும்பவும் பார்க்காவிடில் என் உயிர் போய்விடும்...'' - ஆகவமல்லன் உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார். மேலே பேச முடியாமல் அவர் நெஞ்சடைத்தது. அதையும் மீறிப் பேச முயன்றதால் ஒருவிதக் கேவல் ஒலி பயங்கரமாக எழுந்தது.

''தேவி... தேவி! நீங்கள் இங்கே இருக்கும் போது மன்னர் வேதனைப் படலாமா? உணர்ச்சிவசப்பட்டால் இரத்த அழுத்தம் அதிகமாகி அவர் உயிருக்கே ஆபத்து வந்துவிடுமே... அவரது உயிருக்கு ஆபத்து நேர வேண்டும் என்பதற்காகவா அவர் தன் உயிரையும் துரும்பென மதித்துச் சோழநாட்டிற்குச் சென்றிருக்கிறார்?'' என்ற குரல் கேட்டது. அரசி பாலாதேவியும், ஆகவமல்லனும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

தேவகிதேவி வந்துகொண்டிருந்தாள். வேங்கிநாட்டுத் தளபதியின் மகள் அவள். சிறிது காலமாகக் கல்யாணபுரத்திலேயே தங்கியிருக்கிறாள்.

''யாரது... தேவகிதேவியா? வா, குழந்தாய்... ஏதோ நாங்கள் சிறுபிள்ளைத் தனமாகப் பழைய சம்பவங்களை நினைத்து வேதனைப்படுகிறோம். ஆனால், என் இளவலோ என்னைக் காப்பாற்ற, இந்த நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தினின்று மீட்க, அதற்கும் மேலாக அந்தத் துவாரபாலகர் சிலையை எப்படியாவது மீண்டும் கொண்டுவந்து அதே இடத்தில் நிறுவச் சபதம் பூண்டு சென்றிருக்கிறான்... ஆம்... அவனுக்காக நான் வாழவேண்டும்... ஐயோ... அதிலும் நான் தவறு செய்துவிட்டேன். விரோதியின் நாட்டிற்குத் துணிந்து செல்ல அவன் சம்மதித்தாலும் நான் சம்மதித்திருக்கக்கூடாது... அவன் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால்... நாட்டில் என்ன பேசிக்கொள்வார்கள்? தம்பியைச் சதி செய்து கொல்வதற்காகவே எதிரியின் நாட்டிற்கு அனுப்பியதாகச் சொல்வார்கள்... அவனிடமிருந்து செய்தி வந்து பல மாதங்களாகி விட்டன. அந்தக் கவலை என்னை மிகவும் வாட்டுகிறது'' என்று ஆகவமல்லன் வேதனையுடன் பேசினார்.

தேவகிதேவி பணிவு நிறைந்த குரலில், ''மாமன்னா! ஊர்வாய் பொல்லாதது. என் தந்தையே அப்படித்தான் பேசிக்கொள்கிறார். ஆனால், அவர்

சபதத்தை நிறைவேற்றி விட்டுத் திரும்புவதாகக் கூறிச் சென்றிருக்கிறார். அவர் தன் செயலில் முன்னேறி வருவதாகச் செய்தி வந்திருக்கிறது...." என்று கூறினாள்.

"ஜெயசிம்மனிடமிருந்து செய்தியா? எங்கே.... எங்கே?" ஆவலுடன் எழுந்தார் ஆகவமல்லன்.

தேவகிதேவி ஓர் ஓலைச் சுருளை அவரிடம் நீட்டினாள். அதைப் படித்த ஆகவமல்லனின் முகம் மகிழ்ச்சியாலும் அதே சமயம் கவலையாலும் மாறியது.

## 4

ஜெயசிம்மனுடைய அணைப்பிலிருந்து விடுபட்டாள் சித்திரவல்லி. ஏக்கத்தோடு நோக்கும் ஜெயசிம்மனது கன்னத்தை மெல்லக் கிள்ளி, "கோட்டைக்காவலரே, மிகக் கவனத்துடன் இருக்க வேண்டும். காலைப் பொழுது என்பதை மறந்துவிடாதீர்கள்" என்றாள் குறும்பாக நகைத்தவண்ணம்.

"அதற்குள் புறப்பட்டுவிட்டாயே! என்னுடன் மதில் மீது வருவாய் என்று நினைத்தேன்." ஜெயசிம்மன் பெருமூச்சு விட்டவண்ணம் கேட்டான்.

"உங்களுக்குத் துணையாக ஓரிரு நம்பிக்கையான வீரர்களைச் சேர்த்துக்கொண்டு நான்கு கோட்டைவாயில்களையும் சுற்றி வாருங்கள். ஒரு பெண்ணுடன் சென்றால் உங்கள் காரியத்தைக் கோட்டைவிட வேண்டியதுதான்" என்றாள் சித்திரவல்லி.

"என்னைத் தேடி ஏன் வந்தாய்? அமைதியான தடாகத்தில் உன் விழியால் சலனத்தை ஏற்படுத்தியது ஏன்?" ஜெயசிம்மன் மீண்டும் சித்திரவல்லியை நெருங்கினான்.

படிக்கட்டில் வேகமாக இறங்கியவாறு, "இனிமேல் தங்களைச் சந்திக்க வரமாட்டேன். அமைதியான தடாகத்தில் சலனம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன்" என்ற சித்திரவல்லியைத் தாவிப் பிடித்து, "திடீரென்று கோபம் வந்து விடுகிறது. கோபத்தால் மாறும்போதும் உன் முகம் அழகாகத் தானிருக்கிறது. கோபமுக சித்திரவல்லியைப் பார்ப்பதைவிடக் குளிர்முகச் சித்திரவல்லியைப் பார்ப்பதில்தான் என் மனம் நிம்மதியடைகிறது. நான் பல காத தொலைவுக் கப்பாலிருந்து வந்தவன். உன்னைச் சந்தித்ததால்தான் எனக்கு மனநிம்மதி ஏற்பட்டது" என்றான்.

சித்திரவல்லி திரும்பிப் பார்த்து, "வீரனுக்கு உறுதுணை வேலும் வாளும். அவனுக்கு நிம்மதியை அளிப்பது களவெற்றியே தவிர, கன்னியின் கடைக்கண் அல்ல" என்று கூறி அவனிடமிருந்து மிக எளிதாக விடுபட்டு ஒரே தாவில் ஏழெட்டுச் சுழல் படிக்கட்டுகளில் இறங்கியவள், திகைத்து நிற்கும் ஜெயசிம்மனைப் பார்த்து, "கோட்டைக்காவலரே! எனக்கு நிறைய வேலை



இருக்கிறது. கணக்கு விநாயகர் கோயிலுக்குக் கொன்றைமலர் கொண்டுசேர்க்க வேண்டும். உச்சிவேளையில் சோழீசர் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அதனால்தான் இவ்வளவு அவசரம்... இல்லாவிடில் இந்த மதிலையே என் இருப்பிடமாகக் கொண்டுவிடுவேன்" என்றாள்.

"கணக்கு விநாயகர் கோயிலா?" ஜெயசிம்மன் ஆவலுடன் கேட்டான். பிறகு தொடர்ந்து, "உச்சிவேளையில் சோழீசர் கோயிலில் என்ன வேலை?" என்று கேட்டவாறு வேகமாகப் படிக்கட்டுகளில் இறங்கி வந்தான்.

"இன்று திருவாதிரை நாள். இராஜேந்திரசோழருடைய பிறந்த நாள்."

"என்ன அப்படித் திகைக்கிறீர்கள்? நம் மாமன்னர் இராசாதி ராசருடைய தந்தையார். தந்தையிடம் நம் அரசருக்குப் பக்தியும், அன்பும் அதிகம். ஒவ்வொரு திங்களிலும் திருவாதிரை நட்சத்திரத்தன்று சோழீசர் கோயிலில் விசேட பூசையும் அபிடேகமும் நடைபெறும். இராசாதிராசர் வருவார். இராசேந்திரர் வருவார்."

"இராசேந்திரரா? மன்னரின் தந்தை உயிருடனிக்கிறாரா? கங்கை கொண்ட சோழர் இன்னும் வாழ்கிறாரா?"

"இராசாதிராசனின் இளவல் தன் தந்தையின் பெயரையே சூட்டிக் கொண்டுள்ளார். வீராதிவீரர் அவர். இளவரசுப்பட்டம் அவருக்குச் சூட்டி இரண்டாண்டுகள் ஆகின்றன. கங்கநாடு சென்று இப்போது தான் திரும்பி வந்துள்ளார்."

"ஓகோ... எனக்கு மாமன்னரைச் சந்திக்க வேண்டும் என்ற பேரவா. அவ்வளவு எளிதில் மன்னரைச் சந்திக்கமுடியாதாமே? மன்னரைச் சந்திக்க வேண்டுமென்றால் யாரோ பிரமராயராம், அவரை முதலில் சந்திக்க வேண்டுமாம். எங்கள் நாட்டில்..." ஜெயசிம்மன் சட்டென்று நாக்கை அழுத்திக் கொண்டான். மறந்தும் தன் சுயவடிவைச் சொல்லிவிடக்கூடாது என்ற கவலை அவனைச் சூழ்ந்தது. பேச்சை உடனே மாற்ற விரும்பி, "சித்திரவல்லி, உன்னை அதிக நேரம் நிக்கவைத்து விட்டேன். உன் கடமையைத் தடுத்து, என் கடமையிலிருந்து தவறி, எல்லாம் உனது பொல்லா விழிகள் படுத்தும்பாடு" என்று கூறி நகைத்தான், சமாளித்தவாறு.

சித்திரவல்லி அவ்வளவு எளிதில் பேச்சின் தடம் மாறக்கூடியவள் அல்ல. "உங்கள் நாடு எது என்று நானும் கேட்கவில்லை. நீங்களும் சொல்லவில்லை. உயர்ந்தநாட்டில் பிறந்தவராயிருக்கலாம். ஆனால், இப்போது வாழ்வது சோழநாட்டில். சேவை செய்வது சோழநாட்டில். வீழ்வதும் சோழநாட்டிற்காகத் தானிருக்க வேண்டும். பிரம்மராயர் என்று சொன்னீர்களே, மன்னரின் குருதேவர் அவர். அவர் சாதாரணமானவரல்லர். பாராசிரியன், வாசுதேவ நாராயணனாகிய உலகளந்த சோழ பிரமராயர். பிரம்மராயர் என்று சுருக்கமாக அழைப்பார்கள். அவரும் இன்று உச்சிக்கால பூஜைக்கு வருவார். மன்னர் வருவார். அனைவரையும் ஒருங்கே சந்திக்கலாம்."

"நீயும் வருவாய் அல்லவா?"

"நீங்களும் வருவீர்களல்லவா?"

இருவரும் கலகலவென்று நகைத்தனர். அப்பப்ப! சித்திர வல்லியின் சிரிப்பில்தான் எவ்வளவு கவர்ச்சி. அவள் விழிக்கு வலிமை அதிகமா, முல்லை நகைக்கு மோகப்படுத்தும் சக்தி அதிகமா?

'டாண் டாண்' என்ற மணியோசை எழுந்து நான்கு திசைகளிலும் பரவியது. கங்கைகொண்டசோழபுரத்துப் பெரிய கோயிலில் வீற்றிருக்கும் பெருவுடையாருக்கு சிறப்பாக அபிடேகம் நடை பெறுவதை மணியோசை அறிவித்தது. கோயிலில் வழக்கத்துக்கு மீறிய பரபரப்பு நிறைந்திருந்தது. உச்சிப்போது திருமஞ்சனத்துக்குப் பெரும் அண்டாக்களில் கங்கை நீர் நிறைக்கப் பெற்றிருந்தது! ஓர் அண்டாவில் செண்பகமொட்டு, ஏலவரிசி, இலாமிச்சம் ஆகியவற்றை ஊறவைத்த நீர் திருமஞ்சனத்துக்குத் தயாராக இருந்தது. பூசை செய்யும் சைவாச்சாரியரும் அவருக்கு உதவியாக நான்கு பிரம்மசாரி இளைஞர்களும் மன்னர் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

கோயில்மண்டபத்தில் ஒரு பரபரப்பு. இராசாதிராச சோழதேவர், தம் இளவல் இராசராசனோடும் குருதேவர் வாசுதேவ பிரமராயருடனும் வேளக்காரப் படையினருடனும் பட்டத்தரசி திரைலோக்யமுடை யாளுடனும் பலர் புடைசூழ கருவறையை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

ஏராளமான நெய் விளக்குகள் கோயில் மண்டபத்தைப் பல சூரிய ஒளிபோல் ஒளிபெறச் செய்தன.

அபிடேகம் நடந்து, பூசை முடிந்து, தீப ஆராதனை ஆனவுடன் கணீரென்று நாற்பத்து எட்டுப்பேர் ஒரே குரலில் திருப்பதிய விண்ணப்பத்தை இசையுடன் பாடினர்.

பத்துப்பேர் தேவாரப் பாடல்களைப் பண்ணுடன் இசைத்தனர். கனபாடிகள் சாமகனம் இசைத்தனர்.

பக்கவாத்திய இசையுடன் வீணைகளுடன் காந்தர்விகள் இன்னிசை பாட, நடன மாதர்கள் நடனமாடினர். அவற்றிற்கும் மேலாக மொரலியம், வங்கியம், பாடலியம், உடுக்கை, சங்கம், உவச்சுப்பறை, சகடை முதலிய இசைக்கருவிகள் ஒரே சமயத்தில் முழங்கி, ஆதிரை நாள் விழாவுக்குச் சிகரம் வைத்ததுடன், கைலாயத்தில் நடைபெறுகிறதோ என்ற பிரமையையும் ஏற்படுத்தியது.

மாவலிராயன் தன் மகள் சித்திரவல்லியுடன் கண்குளிர இறைவனைத் தரிசித்துவிட்டுக் கையில் திருநீற்றை வாங்கி அணிந்து கொண்டு தன் மகளிடமும் நீட்டினார். சித்திரவல்லி திருநீறு எடுத்து நெற்றியில் அணிந்து கொண்டு தன் சுழலும் விழிகளால் நாற்புறமும் பார்த்தாள். ஜெயசிம்மனைத் தேடின அவ்விழிகள்.



இளஞ்சென்னி பெரும் பாத்திரங்களுடன் அங்கு வந்தான். "பாத்திரம் பெரிதாக இருக்கிறதே. இரவு உணவிற்கு இறைவன் பிரசாதத்தைக் கொண்டுவந்து விட்டாயா?" என்று சித்திரவல்லி கேட்டாள். பிரசாத வாசனை மூக்கைத் துளைத்தது.

"ஆமாம். நெய்யமுது, தயிரமுது, ஒரு பாத்திரத்தில், உனக்குத் தெரியுமா சித்திரவல்லி, இதில் அப்பக்காய் அமுது, புளியங்கறி அமுது," என்று கூறி நாக்கைச் சப்புக்கொட்டி மூச்சை இழுத்து, "ஆகா, நறுமணமே மூக்கைத் துளைக்கிறது. சித்திரவல்லி, அப்பக்காய் அமுது உனக்குச் செய்யத் தெரியுமா....?" என்றான். அவளுடைய மறுமொழியை எதிர்பார்க்காமலே, "பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் இவற்றைக் கலந்து செய்ய வேண்டும்...." என்று உரத்தகுரலில் உற்சாகமாய்ப் பேசியவனை மாவலிராயன் தடுத்து, "சரி, சரி... வீட்டிற்கு எடுத்துப் போ. இதோ வருகிறோம்" என்றார்.

"என்ன மாவலிராயரே, நலமுடன் இருக்கிறீர்களா? தொழில் எப்படி நடக்கிறது?" என்ற குரல் கேட்டு மாவலிராயர் திரும்பினார்.

கையில் வெள்ளிப்பூண் போட்ட புலிமுகத்தடியுடன் வாசுதேவப் பிரம்மராயர் வந்துகொண்டிருந்தார். மாவலிராயன் தன் மேல் துகிலை இடுப்பிலே எடுத்துக் கட்டிக்கொண்டு வணக்கம் தெரிவித்தார்.

"உங்கள் புண்ணத்திலேயும் இதோ கோயிலில் குடி கொண்டிருக்கும் பெருவுடையார் கிருபையாலும் எல்லாம் நன்றாக நடக்கின்றன சுவாமி" என்றார் மாவலிராயன்.

பிரம்மராயர் மெல்லச் சிரித்தவாறு, "சோழீசர் இப்படி பெரும்போரை வரவழைத்துக்கொண்டிருந்தால் உங்கள் பாடு யோகம்தான். ஆயிரக்கணக்கான வேல், வாள் - என்ன, இன்னும் அதிகமாக - செய்திருப்பாயா?" என்று கேட்டார்.

மாவலி பூமியைப் பார்த்தவாறு, "நான் இன்னும் கணக்குச் செய்யலீங்க... இரவுபகலா வேலையைத் தவறாமல் செய்கிறேன்" என்று அடக்கமாகக் கூறினார்.

பிரம்மராயர் அவர் அருகே நெருங்கி அவர் தோளின் மீது தன் வலக்கரத்தை வைத்து, "மாவலி! சோழநாட்டில் உண்மையான தொழிலாளி நீதான்! எவ்வளவு ஆயுதங்கள் தயாராகின்றன என்பதை என்னிடம் தெரிவிக்கவும் யோசனை செய்கிறாய் அல்லவா? அது தான் நியாயமானது. இந்த யுத்த காலத்தில் ரகசியம்தான் முக்கியம். ஒற்றர்கள் எந்தச் சமயத்தில் எந்த வேடத்தில் நடமாடுவார்கள் என்று சொல்லமுடியாது" என்று கூறிய அவரது விழிகள் அருகேயிருந்த சித்திரவல்லியின் மீது சென்றது.

மாவலிராயர் உலகளந்த பிரமராயரைச் சட்டென்று ஏறிட்டுப் பார்த்து, "சாமி, என்னை வெட்டிக் கழுகுக்குப் போட்டால்கூட ரகசியத்தைக்

கூறமாட்டேன். எத்தனையோ யுத்தம் பார்த்தவனாச்சே சாமி, பெரிய சோழராசா கங்கைக்கரைக்குப் போனபோது அதற்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்தவன் நான்தானே சாமி! என்னிடமுள்ள பணியாட்களும் நம்பிக்கைமிக்கவர்கள்'' என்று கூறினார்,

தலையை அசைத்துக்கொண்டே பிரம்மராயர், அருகே நின்று கொண்டிருந்த சித்திரவல்லியை நோக்கி, ''இவள் உன் மகளா?'' என்று கேட்டார்.

''ஆமாம் சுவாமி... சித்திரவல்லியை மறந்துவிட்டீர்களா? நாவுக்கரசர் திருநட்சத்திரத்தின் போது பதிகம் பாடினாளே, மெய்மறந்து ரசித்துப் பாராட்டினீர்களே, மறந்து விட்டீர்களா?'' என்று கூறிச் சித்திரவல்லியின் பக்கம் திரும்பி, ''என்ன குழந்தாய், சுவாமியை மறந்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

பிரம்மராயர் குறும்பாக நகைத்து, ''நேற்று இருந்த மங்கை இன்று இல்லை. பெண் வளர்ச்சி சாதாரணமானதா?'' என்று கூறிக் கொண்டே சித்திரவல்லியை நேருக்கு நேர் விழியால் ஆராய்வது போல் நோக்கினார்.

சித்திரவல்லி நாணம் மிக்குத் தலையைக் குனிந்துகொண்டாள் என்றாலும் அவளுடலில் லேசான நடுக்கம் பரவியது.

''மாவலி, மகளுக்கு எப்போது திருமணம்? பரிசம் போட உறவுப் பையன் யாராவது இருக்கிறானா?'' என்று கேட்டார் பிரம்மராயர்.

மாவலிராயனும் மீசையை ஒதுக்கிக்கொண்டு நகைத்தவாறு, ''நான் இன்னும் அவளுடைய திருமணத்தைப் பற்றி நினைக்கவில்லை. தாய் இல்லாப் பெண். அவளுடைய விருப்பம் எப்படியோ அப்படித்தான் நடக்கவேண்டும் என்று காலத்தை ஓட்டிவிட்டேன். சில சமயங்களில் இவள் என் மகள் என்ற நினைவே எனக்கு இல்லாமல் ஒரு மகன் இருந்தால் எப்படியோ அப்படியே பல வேலைகளை விட்டு நடத்தச் செய்கிறேன். எப்பொழுதாவது நான் அவளுடைய திருமணத்தைப் பற்றிப் பேச்சை எடுத்தால் அவள் வருத்தமுற்று 'என்னைத் தங்களிடமிருந்து ஓட்டிவிடப் பார்க்கிறீர்களா? அப்பா?' என்று கூறிக் கண்ணீர் விடுகிறாள்'' என்றார்.

பிரம்மராயர் உடல் குலுங்க நகைத்து, ''உண்மைதான். பெண்கள் முதலில் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பார்கள். பெரியாழ்வார் கண்டெடுத்த பெருஞ்செல்வம் கோதை திடீரென்று இறைவன் மீது காதல் கொண்டு அவனையே மணப்பேன் என்று பிடிவாதம் பிடித்தபோது பெரியாழ்வார் மனம் வருந்தி என்ன சொன்னார் தெரியுமா? 'ஒரு மகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான்...' இந்தப் பாசுரம் உனக்கு நினைவுக்கு வரவில்லையா! பெண்கள் இப்பொழுது அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். தன் மனத்துக்குப் பிடித்தவன் கிடைத்தவுடன்... பெண் உள்ளத்தின் ஆழத்தை



அளவிடமுடியாது. அப்படித்தானே சித்திரவல்லி?'' என்று அவள் பக்கம் திரும்பிக் கேட்டவுடன் சித்திரவல்லியின் உள்ளத்தில் ஏதோ குத்துவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''பெண்ணே! உன் தகப்பனார் உன்னை மகனைப்போல் வளர்க்கிறேன் என்று சொல்கிறார். அதற்காக நீ ஆண்பிள்ளைகள் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யலாமா? கோட்டைமதில்மீது ஏறி நிற்கிறாயே! தவறி விழுந்து விட்டால்?'' என்று பிரம்மராயர் கேட்டவுடனேயே சித்திரவல்லி புரிந்து கொண்டு விட்டாள். ஒரு கணம் முன்பு தான் நினைத்தது சரிதான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டாள். பிரம்மராயர் வேறு ஏதாவது வார்த்தைகளைக் கிளப்பி வாயைக் கிளறுவார் என்ற எண்ணத்தில், ''அப்பா, தங்களுக்காக மற்றவர்கள் உணவு கொள்ளாமல் காத்திருப்பார்களே.... சுவாமிகளையும் அழையுங்களேன். இன்று அவருடன் சேர்ந்து நாம் உணவருந்தலாம்....'' என்றாள்.

பிரம்மராயர் தனது விழிகளைச் சுற்றும் சுழலவிட்டு, ''பெண்ணே, மற்றொரு சமயம் வருகிறேன். போய் வா. எதற்கும் மிகவும் எச்சரிக்கையாகப் பழகு. உலகம் பொல்லாதது'' என்றார் மனத்துக்குள் சிரித்துக்கொண்டே

சித்திரவல்லியும் மாவலிராயனும் மெல்லப் பேசிக்கொண்டே சென்றனர்.

''அப்பா, சுவாமிகளுக்கு என்ன வயதிருக்கும்?''

''என்னைவிடப் பெரியவர் அம்மா. சோழநாட்டில் ஒவ்வொரு இடமும் அவருக்குத் தெரியும். நமது அரசர் அவர் இட்ட கோட்டைத் தாண்டுவதில்லை. சுவாமிகள் போர் வேண்டாம் என்று கூறுகிறாராம். ஏனோ அரசர் போர்ப்பித்துப் பிடித்து அலைகிறார். சுவாமிகள் ஒருவருடனும் இவ்வளவு நேரம் நின்று பேசவேமாட்டார். நாம் செய்த பாக்கியம்....''

தந்தை கூறிக்கொண்டே இருக்கும் போது சித்திரவல்லி ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். பிரம்மராயர் நின்றுகொண்டிருந்தார். தங்களையே அவர் பார்த்துக்கொண்டிருப்பதைக் காண அவள் உடல் ஏனோ மெல்லச் சிலிர்த்தது.

இந்த நடுக்கத்தின் காரணம் அவளுக்குத் தெரியும். ஜெயசிம்மனுடன் மதிள்மீது நின்றுகொண்டிருந்ததை பிரம்மராயர் கண்டிருக்கிறார். தன் காதல் இன்னும் தந்தைக்கே தெரியாதே.

பிரம்மராயர் எப்படியோ அறிந்துகொண்டிருக்கிறார். ஜெயசிம்மனைப் போன்ற முக்கியப் பதவியிலுள்ளவர்களுடன் நெருங்கிப் பழகுவது ஒருவேளை பிரம்மராயருக்குப் பிடிக்காமலிருந் திருக்கலாம். சித்திரவல்லி இவ்வாறு சிந்தித்துக் கொண்டு நடந்தாள்.

''என்னம்மா, சுவாமிகள் சொன்னதைக் கேட்டாயல்லவா? உனது திருமணத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிவிட்டார். எனக்குக் கவலையில்லாமலா இருக்கும்? உனக்கு ஏற்ற வரனை

நான் முன்பே முடிவுசெய்து வைத்திருக்கிறேன். சமயம் வரும்போது அதை எடுத்துச் சொல்வேன். இருந்தாலும் இந்த நல்ல நாளிலே உன்னை ஒன்று கேட்கட்டுமா?'' என்றார் மாவலிராயன்.

இதுவரை அவர் பேசியது அரைகுறையாகத்தான் சித்திரவல்லியின் காதில் விழுந்தது. தனக்காக ஒரு வரனை ஏற்கனெவே முடிவுசெய்து வைத்திருப்பதாகத் தந்தை கூறிய ஒரு சொல் மட்டும் கணீர் என்று அவள் காதில் கேட்டது. திடுக்கிட்டாள்!

''என்னப்பா, என்ன சொல்கிறீர்கள்?''

''என்னம்மா, நான் இவ்வளவு நேரம் சொல்லிக்கொண்டு வந்தது ஒன்றுமே உன் காதில் விழவில்லையா?''

''இல்லையப்பா. நீங்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டுதான் வந்தேன். எனக்கு இப்போது திருமணத்திற்கு என்னப்பா அவசரம்? படையெடுப்பு முடிந்து, வெற்றிவிழா கொண்டாடிய பிறகு திருமணத்தைப் பற்றி முடிவு செய்யலாமே?'' சித்திரவல்லியின் குரலில் உற்சாகமும் சோகமும் இணைந்திருந்தன.

மாவலிராயன் தலையசைத்தார். ''அதுவும் நியாயம்தான். வெற்றிக் களிப்புடன் நகரம் இருக்கும் போது திருமண விழா நடப்பது ரொம்பவும் சரி...''

சித்திரவல்லிக்கு ஒரு கணம் மகிழ்ச்சி பொங்கியது. மறுகணம் தந்தை கூறியது, கங்காபுரி பெரிய கோயில் விமானம் சரிந்து தலையில் வீழ்ந்தது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

''ஒருவேளை இளஞ்சென்னிக்கும் போர்க்களம் செல்ல அழைப்பு வரலாம். அவன் வெற்றியுடன் திரும்பி வந்த பிறகு வெற்றித் திரு போன்ற உன்னை அவன் மணப்பது சிறப்புத்தானே!''

திடுக்கிட்ட சித்திரவல்லியின் உள்ளம் விம்மியது!

## 5

சித்திரவல்லி கிணற்றிலிருந்து நீர் சேந்திக்கொண்டிருந்தாள். அவளுடைய நினைவெல்லாம் வேறு எங்கோ இருந்ததால் மெல்ல மெல்லக் கயிற்றைப் பிடித்துக் குடத்தை மேலே தூக்கிக் கொண்டிருந்தாள். குடத்தில் தண்ணீர் நிரம்பி இருக்கிறதோ இல்லையோ, அவள் தனது பலத்தையெல்லாம் கொடுத்துக் குனிந்து இழுப்பதைப் பார்த்தால் பெரும் பாத்திரத்தைக் கிணற்றுக்குள் போட்டு இழுப்பது போல் தோன்றியது. கடந்த இரு நாள்களாக அவள் யாருடனும் கலகலப்பாகப் பேசுவதில்லை. தந்தை செய்து வைத்திருந்த முடிவு அவளைக் கலங்க வைத்திருந்தது.



எலுமிச்சை மரத்தினின்று ஒரு குருவி ஜிவ்வென்று பறந்து செல்லும். அவளுடைய அபிமான கன்றுக்குட்டி துள்ளி ஓடிவரும். சித்திரவல்லி பெருமூச்சு விடுவாள்.

'இப்படித்தானே கலகலப்புடன் இருந்தேன்? என் இதயக் கண்ணாடி தெளிவாக இருந்ததே. ஏன் இப்படி மாற்றம்? ஏன் வந்தார் அவர்...? சரி, அவர் தன் கடமையைச் செய்துகொண்டிருக்கிறார். நான் ஏன் அவர் இதயத்திற்குள் புகுந்தேன்? அவர் உள்ளத்தில் நான் குடிபுகுந்து, என் உள்ளத்தினின்று அவரை மாற்றமுடியாமல் நான் தவிப்பதைப் பார்த்து, 'உன் உடம்புக்கு என்ன சித்திரவல்லி?' என்று பார்ப்பவர்கள் கேட்குமாறு ஆகிவிட்டதே...'

இப்படி நினைத்துக்கொண்டே தன்னை மறந்து கயிற்றை இழுத்தால் கயிறு மேலே வருமா?... இப்போதைக்குக் குடம் நீருடன் வருமா?

மற்றொரு கரம் துணைக்கு வந்தது. சித்திரவல்லிக்கு உதவி செய்யும் வகையில் கயிற்றை வந்து பிடித்துக்கொண்டான் இளஞ்சென்னி. சித்திரவல்லி திடுக்கிட்டாள். உதவி வேண்டாம் என்பதை விழியாலேயே அவனுக்குத் தெரிவித்தாள்.

இளஞ்சென்னி அதைக் கவனிக்காதவன்போல் கயிற்றை மளமளவென்று மேலே இழுத்தான். வெறும் குடம்தான் மேலே வந்தது.

''வெற்றுக்குடத்தை இழுப்பதற்காகவா இப்படிப் பலம் கொண்டு இழுப்பது போல் நீ நடித்தாய்?'' இளஞ்சென்னி சிரித்தான்.

''உதவிக்கு நான் உன்னை அழைக்கவில்லையே!'' என்று சீறினாள் சித்திரவல்லி.

''கிணற்றில் விழுந்து விடுவது போல் நீ மிகவும் குனிந்து பலங்கொண்ட மட்டும் இழுப்பது போல் எனக்குத் தொலைவிலிருந்து தோன்றியது. உதவ வந்தேன்.''

''கிணற்றில் நான் விழுந்துவிட்டால் யாருக்கு என்ன வந்ததாம்?'' சித்திரவல்லி முகத்தைத் திருப்பிக்கொண்டு வெற்றுக் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டாள். வேதனை நிறைந்த நெஞ்சத்திலிருந்து வெடித்து வந்தது சினம்.

''எனக்குக் கவலை கிடையாதா? உனக்கு உதவ ஓடிவந்த என்னை உதாசீனப்படுத்துகிறாயே... என்னைப் பார்க்கும் பொழுது மட்டும் உனக்குக் கோபம் வருகிறது. ஆனால்...'' இளஞ்சென்னியின் குரலில் வேதனை மிளிர்ந்தது.

''ஆனால்... ஏன் நிறுத்தி விட்டாய்? வார்த்தையை முடித்து விடு.''

''நானும் எந்த விதத்திலும் குறைந்தவன் அல்லன்... இப்பொழுது படையில் சேர்ந்தால்கூட எதிரிகளை நொடியில் வீழ்த்தும் சக்தி இருக்கிறது.

போர்முறையும் எனக்குத் தெரியும். ஆனால், என்னைக் கண்டால் மட்டும் நீ சிடுசிடு என்று எப்பொழுதும் நடந்து கொள்கிறாய். நமது பழக்கம் இன்று நேற்றா? இளம் பருவத்திலிருந்து ஒன்றாகப் பழகவில்லையா? இப்பொழுது உலைக்கூடத்தைவிட்டு அதிகமாக வெளிவர முடியவில்லை. பருவ எழிலில் பூத்துக் குலுங்கும் மலரை பார்த்து ரசிக்கக் கூட எனக்கு நேரமும் காலமும் வரவில்லை.'' இளஞ்சென்னி உருக்கமாகப் பேசினான்.

''என்ன சொல்கிறாய் இளஞ்சென்னி? மதுபோதையில் பேசுவது போல் இருக்கிறது உன் பேச்சு. நான் உன்னிடம் சிடுசிடுவென்று பழகுகிறேனா? அப்படி ஏன் நீ தவறாக நினைக்கிறாய்? அதுதான் போகட்டும். நான் வேறு யாருடனாவது பேசுகிறேனா?'' சித்திரவல்லியின் குரலில் கடுமை மிகுந்தது.

இளஞ்சென்னி மெல்ல நகைத்தான். ''உன் முகத்தில் ஒவ்வொரு நொடியும் மாறும் உணர்ச்சிப் பிரதிபலிப்பைக் கண்டு எனக்கே வியப்பாய் இருக்கிறது. இவ்வளவு மாறுதலை எப்படி நீ கைவரப் பெற்றிருக்கிறாய்? உனக்கு இவ்வளவு அழகான முகத்தோற்றம் எப்படியெல்லாம் வருகிறது? உனக்கு அவற்றையெல்லாம் யார் கற்றுக்கொடுத்தார்கள்.

அவனது புகழ்ச்சிப் பேச்சில் அவள் மயங்கிவிடவில்லை. ''இப்பொழுது நீ எதற்காக இங்கே வந்தாய்? பேசுவது என்னவென்று தெரியாமல் பேசுகிறாய். எனக்கு வேலை இருக்கிறது. தந்தை குளிப்பதற்குத் தொட்டியில் தண்ணீர் நிரப்பியாக வேண்டும். என்னைத் தனியே விட்டுவிட்டுத் தயவுசெய்து போய்விடு'' என்று கூறினாள் சித்திரவல்லி.

''வெறுங்குடத்தால் தண்ணீர் நிறைந்து விடுமா?'' என்று சிரித்த இளஞ்சென்னி, சற்று முன்பு கேட்டாயே 'நான் யாருடனாவது குதூகலமாகப் பேசுகிறேனா?'' என்று. சொல்லட்டுமா? அந்த அந்நிய நாட்டவன் வந்தால் உன் முகம் புதுமலர் போல் ஆகிறதே... என்னை வெறுத்து அவனுடன் சிரித்துப் பழக, என்னைவிட அவனிடம் என்ன அழகு இருக்கிறது சித்திரவல்லி? இதைத்தான் நான் நீண்ட நாட்களாக உன்னிடம் கேட்கத் துடித்தேன்'' என்றான்.

சித்திரவல்லிக்கும் சிரிப்பு வந்தது. ''அதெல்லாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? உன்னைக் கண்டால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. சிறுவயதிலிருந்து உன்னை எனது சகோதரன் என்று எண்ணிப் பழகினேன். நீ வேறுவிதமாக என்னை நினைத்து வந்திருப்பாய் என்று தெரிந்திருந்தால் எப்பொழுதோ தந்தையிடம் சொல்லியிருப்பேன்.''

''என்ன சொல்லியிருப்பாய்?'' இளஞ்சென்னி, திடுக்கிட்டுக் கேட்டான்.

''என்ன சொல்லியிருப்பேனா? சீக்கிரமாக இந்த இளஞ்சென்னிக்கு உடனே கல்யாணம் செய்து வையுங்கள் என்று சொல்லியிருப்பேன். இப்போது மட்டும் நாளாகிவிடவில்லை. நான் அப்பாவிடம் சொல்லி உன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். சரிதானா?'' என்று கேட்டாள்.



''ஆகா. நன்றாகச் சொல்லு. உன் தகப்பனார் எனக்குக் கல்யாணம் நிச்சயித்துத்தானிருக்கிறார். பெண் யார் தெரியுமா?'' என்று அவன் கூறுவதற்குள் சித்திரவல்லிக்குக் கோபங்கோபமாக வந்தது.

அவன் என்ன சொல்லப்போகிறான் என்பதை அவளறிவாள். இரண்டு நாட்களுக்கு முன்பே தந்தை கூறியதை இவன் உறுதிப்படுத்தப் போகிறான். அவளுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. மறுமொழி எதும் பேசாமல் அங்கிருந்து வேகமாக நடந்தாள்.

இளஞ்சென்னி அவள் செல்வதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான். ஜெயசிம்மன் குறுக்கே புகாமல் இருந்தால் சித்திரவல்லி மனம் மாறியிருக்கமாட்டாள். இளஞ்சென்னிக்கு ஜெயசிம்மன் மீது கோபங்கோபமாக வந்தது. அவனை வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வேகம் உள்ளத்தில் எழுந்தது.

சித்திரவல்லி வெறும் குடத்தை டண் என்று கீழே வைத்தாள். 'நான் ஜெயசிம்மனுடன் பழகுவது இளஞ்சென்னியின் மனத்தில் பொறாமையை விதைத்துவிட்டது. அவர்மீது நான் கொண்டுள்ள காதலை அவன் ரகசியமாகப் பின்தொடர்ந்து வந்து அறிந்திருக்கிறான். தெரிந்துகொண்டால் என்ன? என்னுடைய தெய்வீகக் காதலைப் பற்றி சோழீசர் கோயில் விமானத்தின் மீது ஏறி நின்று சொல்லச் சொன்னாலும் நான் கவலைப்படமாட்டேன். இந்த இளஞ்சென்னி யார்?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டாள்.

''என்னம்மா சொல்கிறாய்?'' என்று கேட்டவாறு மாவலிராயன் வந்தார்.

''ஒன்றுமில்லை அப்பா... என் போக்கில் யாராவது குறுக்கே நின்றால் எனக்குக் கோபம்தான் வரும். என் குணம் உங்களுக்குத் தெரியாதா?'' சித்திரவல்லி நிலத்தைப் பார்த்தவாறு பேசினாள்.

''உன் குணம் எனக்குத் தெரியாதா? ஒரு நிமிடம் கோபம் வரும்... மறுநிமிடம் கொஞ்சி விளையாடுவாய். கோபம் இருக்குமிடத்தில் தான் குணம் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இளஞ்சென்னிக்குத் தெரியாதே. அவன் அழுத்தக்காரன். மௌனமாக இருப்பான். எரிமலை போல் பிறகு சீறுவான். நீங்கள் எப்படித்தான் இருவரும் ஒருவரையொருவர் சகித்துக் கொண்டு இருக்கப் போகிறீர்களோ!'' என்று சிரித்தார் மாவலி.

''இருந்தால்தானே அந்தக் கவலை? அப்பா. நீங்கள் நினைப்பது போல் நான் அவரை மணக்கமாட்டேன்!'' சித்திரவல்லி அழுத்தந்திருத்தமாகக் கூறினாள்.

மாவலிக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''அவன் இந்த வீட்டில் எத்தனை காலமாக வாழ்ந்து வருகிறான்! உனக்காகத்தான் அவன் என்று நான் எப்போதோ முடிவுசெய்து விட்டேன். சொந்தப்பிள்ளைப் போல் வளர்த்து வரும் அவனை நான் எப்படி மறக்க முடியும்?''

"அதனால்தான் சொல்கிறேன். அவரை நான் சொந்தச் சகோதரன் போல் நினைக்கிறேன். என்னை வற்புறுத்தாதீர்கள்." என்று கூறிக் கொண்டே திரும்பிக்கூடப் பார்க்காமல் வீட்டின் வெளியே வந்து வேகமாக எங்கோ சென்று கொண்டிருந்தாள்.

"எங்கே வேகமாய்ச் செல்கிறாய் சித்திரவல்லி?" என்று கேட்டுக் கொண்டே ஜெயசிம்மன் வந்தான்.

சித்திரவல்லியின் இதயம் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தது.

"நான் எங்கே போனால் உங்களுக்கென்ன? உங்களுக்கு உங்கள் வேலை... எனக்கு... எனக்கு எந்த வேலையும் கிடையாது.... இலட்சியம் கிடையாது... ஒன்றுமே கிடையாது...." சீறினாள் சித்திரவல்லி.

ஜெயசிம்மன் திகைத்து நின்றுவிட்டான். திடீரென்று சித்திரவல்லிக்கு என்ன வந்துவிட்டது? சில தினங்களாகச் சந்திக்காததால் ஏற்பட்ட கோபமா? ஆவலுடன் வந்தவனுக்கு இப்படியொரு வரவேற்பா?

ஜெயசிம்மன் மௌனம் சித்திரவல்லியின் கோபத்தை உடனே தணித்துவிட்டது.

"வாருங்கள். வடக்குவாசல் எல்லைக் காளிகோயிலுக்குப் போவோம். எனக்கு இனிப் பயமில்லை. இரகசியமாக இனி நான் ஏன் இருக்க வேண்டும்?" - சித்திரவல்லியின் தொடர்பற்ற பேச்சு ஜெயசிம்மனுக்குப் புரியவில்லை.

அவள் விருப்பப்படியே வடக்குக்கோட்டை வாயில் அருகேயுள்ள காளிகோயில் அருகே, குதிரை மீது முன்னே சென்று காத்திருந்தான்.

சித்திரவல்லியின் அன்றைய மனமாறுதலை அறியத் துடித்தான் ஜெயசிம்மன்.

"எனக்கு ஏன் அப்படிக் கோபம் வந்தது என்று நினைக்கிறீர்களா? நாம் அன்று மதில்மேல் நின்று பேசிக்கொண்டிருந்ததை பிரம்மராயர் பார்த்துவிட்டு என் தந்தையிடம் என்னென்னவோ சொல்லி யிருக்கிறார்" என்று பேச்சைத் தொடங்கினாள் சித்திரவல்லி.

"என்ன சொன்னார்? அந்தப் பிரம்மராயர் பொல்லாதவர். அவரது யோசனைப்படி மன்னர் எல்லாக் காரியங்களையும் செய்கிறார். உம்.... என்ன சொல்லியிருப்பார்? நம் இருவரையும் மதில்மீது பார்த்தால் என்ன? காதலர்கள் என்று நினைத்திருப்பார். அதனால்தான் அவர் மூளை வேலை செய்திருக்கிறது" என்றான் ஜெயசிம்மன்.

"நான் அன்று கவலைப்பட்டேன். காதல் வெளியே தெரியக்கூடாது என்று எண்ணியிருந்தேன். இனி தெரிந்தாலும் கவலைப்படப்போவதில்லை. அது இருக்கட்டும். நான் உங்களை ஒன்று கேட்கலாமா...?" என்று அவனுடைய முகத்தை உற்று நோக்கியவாறு கேட்டாள் சித்திரவல்லி.



என்ன கேட்கப் போகிறாளோ என்ற ஆவலுடன் எதிர்பார்த்தான் ஜெயசிம்மன்.

"உங்களை 'அந்நிய நாட்டவர், அந்நிய நாட்டவர்' என்று எல்லோரும் சொல்கிறார்களே? நீங்கள் எந்தத் தேசத்தவர்?" என்று கேட்டாள் சித்திரவல்லி.

ஜெயசிம்மன் சிரித்தான். "சித்திரவல்லி, திடீரென உனக்கு ஏன் சந்தேகம் தோன்றிவிட்டது? இவ்வளவு நாள்கள் எந்த நாட்டவன் என்ற எண்ணத்தில் பழகினாய்?"

சித்திரவல்லி ஒரு கணம் மௌனமாக இருந்தாள். "தங்களுடன் பழகும்போது எனக்கு நாடு, தேசம் என்ற வித்தியாசம் தெரியவில்லை."

"இப்பொழுது மட்டும் ஏன் கேட்கிறாய்? யார் யார் உன்னை அதுபற்றிக் கேட்கிறார்கள்?"

சித்திரவல்லி இப்பொழுது மீண்டும் மௌனமானாள். "கேட்டுவிட்டுப் போகட்டுமே... நான் கவலைப்படவில்லை. சோழ தளபதியே பெரும் பொறுப்பை எந்த நாட்டவன் என்று பாராமல் ஒப்படைத்திருக்கும்போது, மற்றவர்களுக்கு என்ன கவலை? பொறாமைபிடித்தவர்கள் கிளப்பும் கதை. அதற்கு நான் அஞ்சிவிட மாட்டேன். நீங்களும் பயந்துவிடக்கூடாது. என்னை மறந்து விடுமாறு பெரிய இடத்து நிர்ப்பந்தம் வரலாம். நீங்கள்..." சித்திரவல்லியின் குரல் ஏனோ தழுதழுத்தது.

ஜெயசிம்மனின் இடதுகரம் அவளை மெல்லத் தழுவித் தன்னருகே ரகசியம் பேச அழைப்பது போல் நெருக்கியது.

"சித்திரவல்லி, எனக்கு ஏற்பட்ட பதவி உயர்வு பல பொறாமைக் காரர்களுக்குச் சகிக்கவில்லை. கோட்டைக் காவல் பதவியை நீலகங்கரையர் எனக்கு அளித்தார். ஆனால், இன்று பிரம்மராயர் அதை மாற்றிவிட்டார்" என்று சொல்ல ஆரம்பித்தான்.

"என்ன, பிரம்மராயர் உங்களிடமும் தன் பார்வையைச் செலுத்தி விட்டாரா? அவரிடம் ஜாக்கிரதையாக இருக்குமாறு நான் சொல்லவில்லையா?" - சித்திரவல்லி பரபரப்புடன் கேட்டாள்.

ஜெயசிம்மன் அமைதியாகக் கூறினான் : "பிரம்மராயரின் மனத்தில் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. சென்ற இரண்டு நாட்களாக நான் கோட்டையின் மதில் முழுமையும் ஏறிச் சுற்றிப் பார்த்தேன். கோட்டைக் கதவுகளின் பலத்தை ஆராய்ந்தேன். பாதுகாவல் அரண்களில் உள்ள குறைகளைக் கண்டறிந்தேன். கோட்டைக்கு வெளியே செல்லும் ரகசியவழியைத் தெரிந்து கொண்டேன்...."

"என்ன? ரகசியவழியை அறிந்துகொண்டீர்களா?" சித்திரவல்லி ஆவலுடன் கேட்டாள்.

''ஆமாம்... இரகசியவழியைச் செப்பனிடச் செய்யும் திட்டத்தை மேற்கொண்டபோதுதான் பிரம்மராயரைச் சந்தித்தேன். எதிர்பாராத வகையில் அவர் என் அருகே வந்து திடீரென்று என் தோளைத் தொட்டார். 'தம்பி! உன் பெயர்தான் ஜெயசிம்மனா?' என்று கேட்டார்.''

''உங்கள் நாட்டைப் பற்றிக் கேட்டாரா?'' என்று சித்திரவல்லி வினவினாள்.

''இல்லை! என் திறமையைப் பற்றி உன் தந்தை புகழ்ந்ததாகக் கூறினார்.''

''என் தந்தையா...?''

''ஆமாம்... 'மாவலிராயன் ஒருவரையும் புகழமாட்டான் தம்பி. ஆனால்' உன்னைப் பாராட்டிச் சொன்னான். நீ வேல் வீசுவதில் வல்லவனாம். குதிரைப் படை, யானைப்படை ஆகியவற்றைப் பழக்குவதில் திறமைசாலியாம்'' என்றார்.

''என் தந்தைக்கு உங்கள் திறமையைப் பற்றி இவ்வளவு தெரியுமா?''

''என் திறமையை மாவலிராயரிடம் அவர் கேட்டுத் தெரிந்திருக்க வேண்டாம். என்னைப் பற்றிப் புகழ்ந்துவிட்டு, 'தம்பி, அடுத்த பௌர்ணமிக்குள் படையெடுப்பு உறுதி. நீ குதிரைப் படைகளை நடத்திச் செல். கோட்டைப் பாதுகாவலுக்கு எவ்வளவோ பேர் உள்ளார்கள். நாகைப்பட்டினத்தில் சோனக நாட்டினின்று நிறையக் குதிரைகள் வந்து மரக்கலத்தில் இறங்கியுள்ளன. அவற்றை இங்கே கொண்டுவர ஏற்பாடு செய்'' என்றார்.

சித்திரவல்லியின் உதடுகள் துடித்தன. ஜெயசிம்மனின் இறுக்கமான அணைப்பினின்று மெல்ல விடுவித்துக்கொண்டு, ''அன்பே! அந்த பிரம்மராயர் தன் திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்,'' என்று பரபரப்புடன் கூறினாள்.

''எப்படி?''

''என் தந்தையிடம் எனக்குத் திருமணம் நிச்சயிக்க ஏற்பாடு செய்யச் சொன்னார். என் தந்தை இளஞ்சென்னியை நிச்சயிக்க ஏற்பாடுகள் செய்கிறார். கங்கைகொண்டசோழபுரத்தில் நீங்கள்...'' - சித்திரவல்லியின் குரலில் சோகம் நிறைந்திருந்தது.

ஜெயசிம்மன் அவளது சோகக் குரலைக் கேட்காதவன் போல், ''போர்க்களம் செல்ல வேண்டியது என் கடமை இல்லையா சித்திரவல்லி? ஆனால், என் கவலையெல்லாம் அந்த அழகிய சிலையை இன்னும் நான் காணவில்லையே என்பதுதான்'' என்று கூறிய ஜெயசிம்மனின் மனப்பான்மையை விசித்திரமாக நோக்கினாள் சித்திரவல்லி. ''எந்தச் சிலையை?'' என்று அவள் வாய்விட்டுக் கேட்கவில்லை. தனக்குள்ள ஆர்வமும் காதல் வேகமும் ஜெயசிம்மனுக்கு இல்லையே என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது.



# 6

பிரம்மராயர் ஜெயசிம்மனுடன் பேசியவாறு நடந்தார். அவரது பேச்சு பொதுவாக இருந்தாலும் பொருள் நிறைந்திருந்தது. ஜெயசிம்மன் மிகவும் கவனமாக மறுமொழி கூறிக்கொண்டு அவருக்கு ஈடுகொடுத்து நடந்தான். அந்த முதிய பருவத்திலும் அவரிடமிருந்த மிடுக்குக் குறையவில்லை. ஜெயசிம்மனுடன் நீண்ட நாட்கள் பழகியவரைப் போல் அவர் பேசினார்.

''போர் என்றாலே எனக்குப் பிடிப்பதில்லை ஜெயசிம்மா. அமைதியான மக்கள் வாழ்வைக் குலைக்க வருவதன் மறுபெயர் யுத்தம். ஓர் உயிரைக் கொல்லும் சக்தி வாளுக்கு. ஆனால், ஓர் உயிரைப் படைக்கும் சக்தி அதற்கு உண்டா? நீ என்ன நினைக்கிறாய் ஜெயசிம்மா?''

பிரம்மராயர் எதற்காகத் தன்னைப் பார்த்துக் கேட்கிறார்? ஒருவேளை தன்னைப் பற்றிய உண்மை தெரிந்து கொண்டிருப்பாரோ? உண்மை தெரிந்த பிறகும் நாட்டில் தன்னை உலவவிடச் சோழர்களின் புத்தி இன்னும் மங்கிவிடவில்லை.

''என்ன யோசிக்கிறாய் ஜெயசிம்மா?'' பிரம்மராயர் விடவில்லை.

''யோசிக்க என்ன இருக்கிறது? என்னைப் போன்றவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும்.''

''ஏன், இளைஞர்கள் என்றால் போர் புரியத்தான் வேண்டுமா? போர்வீரனாக ஒவ்வொரு இளைஞனும் மாறி, படையில் சேர்ந்துவிட்டால், மற்ற தொழில்களை யார் செய்வது? அது எனக்குப் பிடிக்கவில்லை. வேளக்காரப்படையினரைத் தவிர, படைவீரர்களே சமாதான காலத்தில் இருக்கக்கூடாது. ஏர் பிடிக்க வேண்டும். நூல் நூற்று ஆடை நெய்யவேண்டும். கலை பயில வேண்டும். கற்றதை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும். போர் முரசம் கேட்டவுடன் தத்தம் தொழிலை விட்டுவிட்டு அப்படியே ஓடிவரவேண்டும்!'' பிரம்மராயர் அழுத்தந்திருத்தமாகப் பேசினார். அடிக்கடி வெள்ளிப் பூண் கைத்தடியைத் தட்டிக்கொண்டே பேசினார்.

ஜெயசிம்மன் மெல்லச் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறாய் ஜெயசிம்மா? நான் சொல்வதில் அதிசயம் ஏதுமில்லை. தொண்டைநாட்டிலும் சோழநாட்டிலும் அப்படித்தான் தலைமுறை தலைமுறையாக நடைபெறுகிறது. உம்.... நீ பிறந்தது எந்த ஊர் என்று சொன்னாய்? ஏன், உனக்குத் தெரியாதா என்ன?'' - மிகவும் சாதாரணமாகக் கேட்பது போல் கேட்டார்.

''யாதும் ஊரே சுவாமி!''

''பண்டைய இலக்கியங்களைப் படித்திருப்பாய் போலிருக்கிறது. ஆனால் பேச்சில் பிராகிருதம், தெலுங்கு வாசனை வீசுகின்றன.''

''எந்த இலக்கியமும் படிக்கவில்லை. சிறுவயதிலிருந்தே காளஹஸ்தியில் வாழ்ந்தேன். முரட்டுத்தனமான கலைகள் பயின்றேன். நிழலுக்குக்கூடத் தமிழ்ப்பள்ளியில் ஒதுங்கவில்லை. எல்லாம் கேள்விச் செல்வம்.''

''கற்றலில் கேட்டல் நன்று.''

''கொஞ்ச நாள் காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்திலும் படித்தேன்.''

''ஓ! காஞ்சியிலா? காஞ்சி மாநகரம் நகரங்களில் சிறந்தது. அங்கே கைலாசநாதருக்கும், வைகுண்ட பெருமாளுக்கும் சரிசமமாகக் கோயில் எடுப்பித்துள்ளார்கள். சக்கரவர்த்திகளிடமும் அதைத்தான் சொல்கிறேன். சோழீசருக்கு எடுத்துள்ள பெரிய கோயிலைப் போல், விஷ்ணுவுக்கும் கோயில் எடுக்குமாறு கூறுகிறேன். பொருள் வேண்டாமா என்கிறார் அரசர். பணம் - பொன் - பொருள் சோழ சக்கரவர்த்திகளிடமில்லாததா?'' இப்படிச் சொல்லி விட்டுப் பிரம்மராயர் சற்று நிறுத்தினார். கடைக்கண்ணால் ஜெயசிம்மன் முகத்தை அளந்தார், உலகளந்த பிரம்மராயரான வாசுதேவன்!

''ஏன் நடை தளர்கிறது ஜெயசிம்மா? வேறு அலுவலுக்குச் செல்பவனை நான் திசை திருப்பிவிட்டேனா? முக்கியமான இடமொன்றை உனக்குக் காட்டவேண்டும் என்று உன்னை அழைத்து வந்தேன்'' என்று அவர் கூறியவுடன் ஜெயசிம்மன் அவரைத் திரும்பிப் பார்த்தான். அவன் மனத்தில் கேள்விக்குறியொன்று எழுந்தது.

உலகளந்தார் என் மனத்தை அளக்கப் பார்க்கிறாரா? தன்னிடம் திடீரென அன்பும் பரிவும் ஏற்படுவானேன்? முக்கியமான இடத்தைக் காட்டப் போகிறாராமே? கோட்டைக்காவல் பிரிவினின்று மீண்டும் படைப்பிரிவுக்கே மாற்றிவிட யோசனை கூறிய இவர், முக்கிய இடத்திற்கு என்னை ஏன் அழைத்துச்செல்கிறார்? எந்த இடமோ? எதற்கோ...?

''ஜெயசிம்மா, நீ பிறந்த ஊர் காளத்தி என்றுதானே கூறினாய்? நான் ஒருமுறை கண்ணப்ப நாயனார் அவதரித்த திருக்காளத்திக்குச் சென்றிருக்கிறேன். அந்த ஊரினின்று தான் பதியிலார் நாற்பது பேரை மாவீரர் இராஜராஜர் தஞ்சைக்கு அழைத்து வந்தார். தெரியுமோ உனக்கு?''

''தெரியும் சுவாமி.''

''தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பூஜைவேளையில் நாட்டியமாட அவர்களை அழைத்து வந்தார். தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கே அர்ப்பணித்து இறைவனுக்கே தம் கலை என்று வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பரம்பரையில் வந்தவர்கள் சிலரை ராஜராஜரின் புதல்வர் ராஜேந்திர சோழர் கங்கைகொண்ட சோழபுரத்திலும் குடியேற்றினார்....''

பிரம்மராயர் இப்படிக் கூறியவுடன் ஜெயசிம்மன் சிரித்தான்.

''எதற்காகச் சிரிக்கிறாய் ஜெயசிம்மா?''



''பதியிலாதார் பரம்பரையைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் குடியேற்றியதாகக் கூறினீர்களே, அது எப்படிச் சாத்தியமாயிற்று? பதியிலார் குடும்பம் எப்படி வளர்ந்தது என்று யோசித்தேன். சிரிப்பு வந்தது....''

பிரம்மராயரும் உள்ளூரச் சிரித்தார். ''பொல்லாத பிள்ளையப்பா நீ... அந்த ஆராய்ச்சி செய்வதற்காக உன்னை நான் அழைத்து வரவில்லை'' என்று கூறிய அவர் சிறிது நேரம் மௌனமாக நடந்தார்.

பிறகு அகன்ற வீதியினின்று கிளை பிரிந்த சிறு வீதிக்குள் நுழைந்தார்.

'ஜல் ஜல்' என்ற சதங்கையொலி கேட்டது. மேகங்கள் சேரும்போது எழும் ஓசையோ என்பது போல் மத்தள ஓசை ஒலித்தது. குழலின் இனிய இசையும் வீணையின் சுநாதமும் தென்றல் போல் குளுமையாகப் பரவின.

திண்ணையின் தூணைப் பிடித்து நின்றிருந்த மை விழியார்கள், தாழ்வாரத்தில் ஒயிலாக அமர்ந்திருந்த தளிர் நிறத்தார்கள், பலகணியின் வழியே பார்வையை வீசும் பாவையர்கள் திடீரென எழுந்து உள்ளே ஓடினார்கள்.

வண்டிரண்டு மொய்த்தனவோ எனத்தகும் இமை உடையாரும், எட்பூ எனக்கு நிகரோ எனத்தகும் நாசி உடையாரும் செங்கலசமோ, செவ்விளநீரோ என்று பிரமை தட்டும் தனங்களுடையாரும் ஆலிலை போல் வயிறுடையாரும் அதிலே வெள்ளச்சுழிபோல் நாபிக் கமலமுடையவரும் அபிநயம் செய்வதற்கேற்ப வேயுறு தோளுடைய வரும் பிடியின் துதிக்கையோ என்ற கரங்களுடையவரும் பொய்யோ மெய்யோ இவருக்குண்டோ இடை எனும் ஐயமேற்படுத்தும் துடியிடையாளரும் வீடுதோறும் ஏற்படுத்திய கலகலவென்ற ஒலி ஒரு கணம் அடங்கி, மழை நின்றபின் ஏற்படும் அமைதியை அந்த வீதியில் ஏற்படுத்தியது.

''வாழ்நாளைக் கலைக்காகவே அர்ப்பணித்த இந்தக் கணிகையருக்கு அளிக்கப்பட்டுள்ள மான்யம் போதாதென்று நான் மன்னரின் இளவலிடம் தெரிவித்தேன்,'' என்றார் பிரம்மராயர்.

தாமரைத்தடாகத்தில் இலைகளிடையே மறைந்தும் மறையாமலும் தெரியும் மலர் போன்று சாளரத்தின் வழியே தென்பட்ட பாவையர் முகத்தைப் பார்த்தும் பார்க்காதவன் போல் நடந்த ஜெயசிம்மனின் பார்வை ஒரு வீட்டில் நிலைபெற்று நின்றது. அந்த விழிக்குடை அரம்பையை எங்கோ சந்தித் திருக்கிறோம் என்ற சிந்தனையை ஓடவிடுவதற்குள், ''இந்த வீதி வழியே இளம் வாலிபனான உன்னை அழைத்து வந்து சிந்தையைத் தடுமாற வைக்கும் எண்ணமில்லை எனக்கு, ஜெயசிம்மா. இந்த வீதியைக் கடந்துதான் கல்தச்சர் வீதிக்கும் செல்ல வேண்டும். ஸ்தபதி ஆடவல்லானைச் சந்திக்க நாம் செல்கிறோம்'' என்ற பிரம்மராயரின் வார்த்தைகள் அவன் பார்வையைத் திருப்பின.

'சிற்பியின் இல்லத்திற்கா? கங்கைகொண்டசோழபுரத்து அமர சிற்பங் களைச் சிருஷ்டித்த சிற்பியின் குடிலுக்கா? ஆகா, அந்த ஒரு சிற்பம் போதுமே!

உமாதேவியார் அருகே அமர்ந்திருக்க, பரமேச்வரன் சண்டேச்வரருக்கு மாலை சூட்டும் அமர சிற்பத்தைப் படைத்த சிற்பியை நாம் காணப்போகிறோம்.

இதயமே! சற்று அமைதியாக இரு.... படபடப்பால் ஏதாவது விபரீதத்தை ஏற்படுத்திவிடாதே. உன் நாட்டின் செல்வத்தைக் கொள்ளை கொண்டுவந்து அற்புதக்கோயிலைக் கட்டிய சோழமன்னன் மீதுள்ள ஆத்திரத்தை இப்போது வெளிப்படுத்தி விடாதே. இதயமே, மௌனமாயிரு.

கண்களே, பொறாமையை வெளிப்படுத்திவிடாதீர். உம் தாய் நாட்டுக் கோயிலைப் பாழாக்கிய சோழனது பெருமையை நிலைநாட்டும் சிற்பங்களை உருவாக்கிய சிற்பியின் திறமையைக் கண்டு கலங்கிக் கண்ணீர் உகுக்காதீர்கள். கண்களே, கண்ணீர் பெருக்காதீர்கள்.

நாவே! உனக்கு அனந்தகோடி நமஸ்காரம். உன் அடக்கமான கிருபையால்தான் நான் இவ்வளவு காலமாக விரோதியின் நாட்டில் சிக்கிக் கொள்ளாமல் வாழ்கிறேன். நீ இந்தச் சமயத்தில் காட்டிக் கொடுத்துவிடாதே!

பிரம்மராயர் தங்கள் குடிலைத் தேடி வந்திருக்கிறார் என்றவுடன் சிற்பிகள் முகமலர மிகவும் பயபக்தியுடன் வரவேற்பளித்துத் தலைமைச் சிற்பியிடம் தெரிவிக்க ஓடினர்.

சிற்பி ஆடவல்லான் விரைந்து வந்தான் வரவேற்க.

"தந்தை ஜீவியந்தராக இருந்தபோது இங்கே ஒரு முறை வந்திருக்கிறேன்" என்று கூறிச் சுற்று முற்றும் பார்த்தார் பிரம்மராயர்.

ஆடவல்லானுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பரபரப்புடன், "தங்கள் ஆசியாலும் மன்னர்பிரான் கிருபையாலும் என் தந்தையின் பெயரை நிலைநாட்ட முயன்று வருகிறேன்" என்று அடக்கமாகக் கூறியவன், அவரைப் புறக்கடைத் தோட்டத்துக்கு அழைத்தான்.

'கிணிங் கிணிங்' என்ற சிற்றுளி ஓசை எழுந்துகொண்டிருந்தது. சிறு சிறு தீப்பொறிகள் உளி மோதும்போது ஏற்பட்டன.

"வாளோடு வாள் மோதும்போது எழும் ஓசையைவிட இந்த ஒலி மனத்துக்கு இதமாக இருக்கிறது" என்று ஜெயசிம்மன் கூறியவுடன் பிரம்மராயர் அவன் பக்கம் திரும்பி, "வாளோடு வாள் மோதாவிட்டால் உனக்கு வேலையில்லாமல் போய்விடுமே!" என்று கூறி நகைத்தார். பொல்லாதவர் பிரம்மராயர்.

ஆடவல்லான் ஜெயசிம்மனை அறிந்துகொள்ள விரும்புபவன் போல் நோக்கினான்.

"இந்த இளைஞனுக்குச் சிற்பக்கலையைக் கற்றுக் கொடுங்களேன். சிற்பம் என்றால் நேரம் போவது தெரியாமல் நின்று விடுவான். உங்கள் சிற்பக்கூடத்தில் சேர்த்துக்கொண்டால் வேலையும் வாளையும் எறிந்து விடுவான்" என்று கூறி ஜெயசிம்மனைக் கூர்ந்துநோக்கினார் பிரம்மராயர்.



"சிற்பக்கலை பயில ஆசைதான். ஆனால், சாளுக்கிய நாட்டுப் படையெடுப்பு முடிந்து வெற்றி வாகை சூடிய பிறகுதான்" என்றான் ஜெயசிம்மன் உற்சாகமாக.

ஏதோ நினைத்துக்கொண்டவன்போல் ஆடவல்லான் "சுவாமி, மறந்து விட்டேனே. நமது சக்ரவர்த்திகள் கல்யாணபுரத்திலிருந்து கொண்டுவந்த துவாரபாலகர் சிலையைப் போல் மற்றொன்று தயாரித்து முடித்துவிட்டேன். தாங்கள் பார்க்க வேண்டும். சக்ரவர்த்திகளையும் அழைத்து வந்து காட்டவேண்டும்" என்றான்.

"அதற்காகத்தானே நான் வந்தேன்! அந்தத் துவாரபாலகர் சிலையைத் தாராசுரத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சக்ரவர்த்திகள் திருவுளங் கொண்டுள்ளார்" என்றார் பிரம்மராயர்.

"இங்கே பெரிய கோயிலிலேயே வைக்கப்போவதாக நினைத்தேன்."

"இல்லை... இல்லை... தாராசுரத்துக் கருவறை வாயிலில் துவாரபாலகர் சிலை இல்லை. இந்தச் சிலையை அங்கே அமைப்பது சாலச் சிறந்தது. உம். இந்தச் சிலையின் அடிப்பீடத்தில், 'ஸ்வஸ்திஸ்ரீ உடையார்ஸ்ரீ விஜயராசேந்திர தேவர் கலியாணபுரம் எறிந்து கொண்டுவந்த துவாரபாலகர்' என்று பொறித்துவிடுங்கள். மன்னர் பெற்ற வெற்றியைத் துவாரபாலகர் என்றுமே தெரிவித்துக்கொண்டு நிற்கட்டும்."

"சாளுக்கிய மன்னர் ஆகவமல்லனை நிற்கவைப்பதற்கு மாறாக, சிலையை நிற்கவைக்க வேண்டும் என்பது மன்னர் திருவுளம் போலும்" என்றான் ஆடவல்லான்.

ஜெயசிம்மன் இதயம் படபடத்தது. உடல் துடித்தது. கரங்கள் உடைவாளைத் தொட்டன.

"இந்தத் தடவை நடக்கும் போர் சாளுக்கியர்களைப் பூண்டோடு அழித்துவிடும் போராக இருக்கும். அந்த நாட்டில் முக்கியமானவர் களைச் சிறைப்பிடித்துக் கொண்டுவந்துவிட வேண்டும் என்பது சக்ரவர்த்தியின் திட்டம். அந்த வெற்றியைக் கொண்டாட தாராசுரத்தைக் கலைக்கூடமாக்க முடிவுசெய்துள்ளார். உன் திறமை முழுமையும் நீ புலப்படுத்த வேண்டும்." என்று கூறிய பிரம்மராயர், "இந்தச் சிலையை மிகவும் கவனமாக, பின்னப் படாமல் தாராசுரத்துக்கு அனுப்ப வேண்டும். பல காத தூரத்திலிருந்து கொண்டு வரப்பட்டபோது துளிகூட மூளியாகவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்று கூறிவந்த பிரம்மராயர், ஜெயசிம்மனுடன், ஏதோ கூறித் திரும்பினார்.

நம் ஜெயசிம்மனை அங்கே காணவில்லை.

சிற்பங்களைக் காணச் சென்றவன், உயிருள்ள ஜீவ சிற்பத்தையே கண்டுவிட்டான். சற்று முன்பு வீடொன்றின் நிலைப்படியருகே கண்ட

கண்ணழகியே அந்த ஜீவசிற்பம். அவள் செதுக்காத பாறையொன்றின் மறைவில் நின்றுகொண்டிருந்தாள்.

''நீ இங்கேயா இருக்கிறாய்? எவ்வளவு நாட்களாக?'' அவளருகே நெருங்கிக் கேட்டான்.

அவள் இதழ்களைக் குவித்து, 'உஸ்' என்று சைகை செய்து, ''அந்தக் கிழவனுக்குப் பாம்புச்செவி. நாளை இரவு பெரியகோயிலின் முதல் மாடத்தில் என்னைச் சந்தியுங்கள். விவரம் கூறுகிறேன்'' என்றாள்.

# 7

கங்காபுரி என்றும் கங்கைகொண்டசோழபுரம் என்றும் அழைக்கப்படும் சோழநாட்டுத் தலைநகரில் நடுநாயகமாக விளங்கும் சோழீசர் ஆலயத்தின் கம்பீரமான விமானத்தை அடைய மேல்தளம் - மாடம் ஒன்றைச் சிறப்புறக் கட்டி அங்கே செல்ல படிக்கட்டுகளையும் சிற்பக் கலைஞர் திட்டமிட்டு அமைத்திருந்தார். அந்தத் தளத்திலிருந்து பார்த்தால் வானளாவ உயர்ந்த விமானத்தை ரசிக்கலாம். சற்று நெருங்கிப்பார்த்தால், கீழே கரு அறையையும் கரு அறையில் மிகப் பெரியலிங்கத்தையும் மேலே குடைந்து எடுத்ததுபோல் அமைக்கப்பட்டிருந்த விமானத்தில் உட்குழிவுத் தோற்றத்தையும் கண்டு பிரமிக்கலாம்.

ஜெயசிம்மன் குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்று முன்பே வந்து சோழர்களின் சிற்பத்திறனை, கட்டட அமைப்பு மேதைத்தன்மையைக் கண்டு வியந்து உள்ளத்தில் பொறாமைத்தீயை, பழிவாங்கும் உணர்ச்சியை வளர்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நிலவும் உதவியது. அந்தப் பெரிய கோயிலின் மீது தண்ணிலவைப் பொழிவது போல் மதியவன் குளிர்க் கிரணங்களை அபிடேகம் செய்துகொண்டிருந்தான்.

கோட்டை வாயிற் கதவு அடைக்கப்பட இருப்பதன் அறிகுறியாக அதிரும் முரசம் தொலைவில் கேட்டது.

கோயிலில் அர்த்த ஜாமபூசை முடிவடைந்து பண்ணிசைத்து, நர்த்தனம் நடந்து மூலகருவறைக் கதவைத் தாளிடும் ஓசையும் கேட்டது.

அவள் வரவில்லை. இங்கு தானே வந்திருப்பதாகக் கூறினாள். அவள் பெயர்.... அவள் பெயர் உடனே நினைவுக்கு வரவில்லை. ஆனால், அவளைக் கல்யாணபுரத்தில் கண்டிருக்கும் நினைவு மட்டும் மறக்கவில்லை. அவ்வளவு எளிதில் ஆடவர் இதயத்தினின்று மறையக்கூடிய வடிவமல்ல. எழில் முகம் ஏழேழு ஜன்மங்களுக்கும் தொடர்ந்து கண்ணெதிரே நிழலாடும்.

கல்யாணபுரத்திலிருந்து கங்காபுரத்திற்கு இவள் எப்போது வந்தாள்? ஏன் வந்திருக்கிறாள்? சாளுக்கியநாட்டிற்கு வேண்டியவளா அல்லது தன்னை



வேவுபார்க்க இப்படி வேடம் போடுகிறாளா? உம். எப்படியிருந்தாலும் எதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

கால் சிலம்பொலி கேட்டது. நந்தவனத்தில் பூத்த நறுமலர்களின் மணம் திடீரென்று வீசியது. அவள் வருகிறாள்.

''வந்து நேரமாகிறதா?'' என்ற குரலில் மதுரம் கலந்திருந்தது. அப்பொழுதுதான் உட்கார்ந்தான் ஜெயசிம்மன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு. நின்று, உலவி நடந்து அவன் பாதங்கள் நொந்தன. உட்கார் உட்கார் என்று கெஞ்சின.

கலீர் என்று சிரித்தாள் நடன அழகி. ''எவ்வளவு நாழிகை ஆடினாலும் எங்கள் பாதம் நொந்ததே கிடையாது'' என்று கூறிக் கொண்டே ஜெயசிம்மன் அருகே வந்தாள்.

''அர்த்தஜாமப் பூசையின் போது நடனமாடும் முறை என்னுடையது. அதை முடித்துக்கொண்டு வந்தேன். சற்றுத் தாமதமாகிவிட்டது'' என்றவாறு அவனருகே அமர்ந்தாள்.

நிலவொளியில் சிற்பமொன்று உயிர் பெற்று எழுந்து வந்தது போல் தோன்றியது. வண்ணச்சித்திரம் வடிவு பெற்று நடனமாடுவது போல் தோன்றியது.

''இளவரசே'' என்று மெல்ல அழைத்தாள் அவள்.

படிக்கட்டுகளில் சிலர் ஏறிவரும் அடியோசை கேட்டது. சட்டென்று ஜெயசிம்மன் அவள் வாயைப் பொத்தி, ''நான் ஜெயசிம்மன். சோழநாட்டுப் படைவீரன். உம்... உன் பெயரை மறந்து விட்டேனே. ஆமாம், ஆமாம் குணரேகா!'' என்று அவள் செவிகளில் மட்டும் விழுமாறு பேசினான்.

படிக்கட்டுகளில் ஏறிவந்த கோயில் பணியாட்கள் கையிலுள்ள தீவத்தியுடன் சற்றுத் தொலைவிலேயே வணக்கம் தெரிவித்து, ''தாங்கள் இங்கிருந்து புறப்படும் முன்பு எங்களை அழையுங்கள். மாடத்துக்கதவைப் பிறகு தாளிடுகிறோம்...'' என்று கூறிப் பிறகு, ''இடையே தொந்தரவு கொடுத்ததற்கு மன்னித்துவிடுங்கள்'' என்று சொல்லி அங்கிருந்து அகன்றனர். திரும்பிப் போகும் போது அவர்கள் ஒருவருக்கொருவர் கண்சிமிட்டி மெல்லச் சிரித்துக்கொண்டனர்.

குணரேகா சிரித்தாள். ''காவலருக்குக் காவலர்கள் வணங்கு கிறார்கள்'' என்று கூறிய அவள் வாயைப் பொத்தின ஜெயசிம்மனின் அவளுடைய கரங்களில் கரம் சிறைப்பட்டிருந்தது.

''வேறு யாரோ என்று பார்த்தேன். கோவில் காவலர்கள். உம்... அவர்கள் காதில்கூட 'இளவரசே' என்ற சொல் வீழ்ந்து விடக்கூடாது'' என்று கூறிக்கொண்டே தன் கரத்தை அல்லித் தண்டினைப் போன்ற சிறையினின்று விடுவித்துக்கொண்டான்.

"ஆமாம். இங்கே இளவரசர் என்றால் இராசேந்திரர்... மன்னரின் தம்பி. நீங்களும் மன்னரின் சகோதரர். ஆனால், உங்கள் அழகுக்கும் கம்பீரத்திற்கும் வீரத்திற்கும் அவர் இணையாவாரா?" என்று தேனமுது சொட்டக் கூறியவாறு அவனருகே நெருங்கினாள்.

"என் பெயர் குணரேகா. எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் என் பெயரைத் தாங்கள் மறக்காதது என் அதிர்ஷ்டம்தான்." அவள் குரல் மிக அருகே பாய்ந்தது.

அவள் தலையில் சூடியிருந்த மலரின் மணமும், பூசியிருந்த வாசனைத் தைலத்தின் மணமும் பருவச்செழிப்பால் வளமை கொழிக்கும் அவள் அங்கங்களினின்று எழுந்த பெண்மையின் மணமும் சேர்ந்து போதையை அழைத்து வந்தன. அவளது கரங்கள் மெல்ல ஜெயசிம்மன் பாதத்தைப் பிடித்துவிட்டன. "உங்கள் பாதங்களைத் தொட நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்."

ஜெயசிம்மன் தன் கரங்களைச் சற்று நகர்த்திக்கொண்டு "குணரேகா, வந்த விஷயத்தை உடனே சொல். விவரமாகச் கூறுகிறேன் என்றதை உடனே சொல். இங்கே அதிக நேரம் தங்கியிருக்கமுடியாது. பகிரங்கமாக இப்படிப்பட்ட இடத்தில் அமர்ந்து பேசுவதால் யாரும் சந்தேகிக்கமாட்டார்கள் என்பதால் இங்கே வரச் சம்மதித்தேன். சொல்ல வேண்டியவற்றை உடனே சொல்லி விடு" என்று கூறிவிட்டுச் சட்டென்று தன் உடைக்குள் மறைத்திருந்த உடைவாளை எடுத்து. "ரேகா, சாளுக்கியநாட்டின் வேவுகாரி நீ இல்லை என்று நான் அறிந்துவிட்டால் மறுகணமே உன்னை இந்த உடைவாள் உணவாக்கிக் கொள்ளும்" என்று கடுமையாகக் கூறவும் குணரேகா திடுக்கிடவில்லை மெல்ல நகைத்தாள்.

தனது மேலாடையை மெல்ல விலக்கி இடையைச் சுற்றியிருந்த அரைஞாணை வெளியே சிறிது இழுத்து அதன் முனையில் வட்ட வடிவமாக இருந்த இலச்சினை ஒன்றை ஜெயசிம்மன் கண்ணில் படுவதுபோல் காட்டினாள்.

அவள் இப்படித் திடீரென்று செய்வாள் என்பதை ஜெயசிம்மன் எதிர்பார்க்கவில்லை. அவன் கண்களை மூடிக்கொண்டான்.

"உடைவாளைவிடக் கூர்மையான ஆயுதத்தால் மறுமொழி கொடுத்து விட்டாய் ரேகா. உன் தொழிலின் பழக்கத்தினால் உனக்கு நாணம் குறைந்திருக்கலாம். இந்தச் செய்கையால் என்னைத் தலைகுனிய வைத்து விட்டாய். ஆனால், உன்னைச் சந்தேகித்தது என் கடமை காரணமாக..." ஜெயசிம்மன் குரல் தழுதழுத்தது.

ஆடையைச் சரிசெய்யவும் தோன்றாமல் ஜெயசிம்மன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த குணரேகா, "இளவரசே! உயிரைப் பணயம் வைத்து



இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதை அறிந்த நான் எப்படியாவது தங்களைச் சந்திக்கத் துடித்தேன். நான் குடியிருக்கும் வீதிக்குச் சோழநாட்டுப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் வருவார்கள். அவர்களுள் நீங்களும் இருக்கிறீர்களோ என்று என் விழிகள் தேடும். அப்படித் தேடியபோது, இன்று தங்களைச் சந்தித்தேன்..." என்றாள். அவள் இதழ்கள் எதையோ எதிர்பார்த்துத் துடித்தன.

"நான் பதியிலாதாரைத் தேடிவரவில்லை. என்னைப் பிரம்மராயர் அழைத்து வந்தார். சரி ரேகா! சொல்ல வேண்டியவற்றைச் சொல். பிறகு எப்போது எங்கே சந்திக்கப் போகிறோமோ..."

"ஏன் சந்திக்க முடியாது? என் குடிலின் கதவுகள் தங்களுக்காக எப்போதும் திறந்திருக்கும். என் இதயக்கதவுகள் மூடாமல் தங்கள் வருகைக்குக் காத்திருக்கும். என் குடிலிலேயே தங்க வேண்டும் என்று அழைக்க வந்தேன். பதியிலார். இறைவன் அடிமைகள் என்ற பட்டப்பெயருடன் எங்களைக் குடியேற்றிச் சகல சௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் இந்நாட்டு மக்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு இராஜராஜசோழர் உயர்தரமான நோக்கத்துடன் தான் எங்களைப் போன்றவர்களைத் தஞ்சைமாநகரில் குடியேற்றினார். ஆனால், காலம் மாற மாற யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எங்களுக்குப் பதியாகிவிடலாம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. ஆண்டவனின் அடிமைகள் மட்டுமல்லர் நாங்கள்... ஆசைப் பட்டவர்கள் அத்தனை பேரின் அடிமைகள் நாங்கள். உங்கள் அடிமையாக மட்டும் ஏன் வாழக்கூடாது? என் குடிலில் நீங்கள் தங்கியிருக்கிறீர்கள் என்றால் நினைத்தவர்கள் நுழையப் பயப்படுவார்கள்..." என்று கூறிக்கொண்டே ஜெயசிம்மன் அருகே மெல்ல நகர்ந்தாள் குணரேகா.

ஜெயசிம்மன் சற்று நகர்ந்தான். "காற்று நுழைந்து செல்லச் சற்று இடைவெளி கொடு ரேகா. இது கோயிலின் புனிதமான மேல்தளம். நாம் முக்கியமான விஷயங்களைப் பேச வந்தோம். பயங்கரமான படையெடுப்புக்குச் சோழநாடு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. இந்த விவரங்களைக் கல்யாண புரத்திற்கு உடனே அனுப்ப வேண்டும். இன்று பகல் உயிருக்குயிரான துவாரபாலகர் சிலையைச் சிற்பியின் வீட்டில் கண்டதிலிருந்து எனக்கு நிலை கொள்ளவில்லை. அந்தச் சிலையை மீட்டாக வேண்டும். இப்படிப்பட்ட முக்கிய விஷயங்கள் இருக்கும்போது என்னோடு சல்லாபமாக இருக்கவா இங்கே வந்தாய்?" - குரலில் சற்றுக் கடுமை ஒலித்தது.

அவள் மௌனமாயிருந்தாள். சற்று நகர்ந்துகொண்டாள். எதிர்பாராதது நடக்காததால் அவள் தோள்கள் குலுங்கின. இதயம் விம்மித் தணிந்தது. நிலவொளியில் அவை ஜெயசிம்மன் கண்களை உறுத்தின.

"இளவரசே! எனக்கு எல்லாம் தெரியும். இங்கு நடைபெறும் செய்திகள் கல்யாணபுரத்திற்குச் செல்கின்றன வாரம் ஒருமுறை. தங்களைப் பற்றியும் பலமுறைகள் செய்தி அனுப்பிவிட்டேன்." குணரேகா முத்துப்பல் தெரியச் சிரித்தாள்.

"செய்தி வாரம் ஒருமுறை அனுப்புகிறாயா? என்ன செய்தி? எப்படி அனுப்புகிறாய்?"

"அதுதான் பரமரகசியம். ராமேசுவரம் செல்லும் யாத்திரைக் குழுவினர் நாள்தோறும் இங்கே சோழீசர்கோயிலைத் தரிசிக்க வருகிறார்கள். அவர்களிடம் சொல்லி அனுப்புவேன். எழுதியனுப்புவேன்..."

"அங்கிருந்து செய்தி வருகிறதா? எனக்கு ஏதும் இதுவரையில் கிடைக்கவில்லை!" - ஜெயசிம்மன் ஏக்கத்துடன் பேசினான்.

சாளுக்கியநாட்டு ஒற்றர்படை திறமையுடன் பணியாற்றுகிறது என்பதை அறிய அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

குணரேகா அவனை அப்படியே விழியின் வழியே விழுங்கி விடுவது போல் பார்த்தாள். "கல்யாணபுரத்தினின்று செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், குறிப்பிடும்படியான செய்தி ஏதுமில்லை," என்றாள்.

"அப்படியென்றால் என்னை இங்கே வரச்சொன்ன நோக்கம் என்ன?" ஜெயசிம்மன் நேரத்தைக் கடத்த விரும்பாமல் கேட்டான்.

"இளம் மங்கை வாலிபனொருவனை இரவு நேரத்தில் பால் நிலவு பொழியும் வேளையில் எதற்காக வரச்சொல்லுவாள்?" குணரேகாவின் முகத்தில் தோன்றிய தாபம் நிலவொளியில் சுடர்விட்டது.

ஜெயசிம்மன் மேலும் நகர்ந்துகொண்டதுடன் எழுந்தும் நின்றான்.

ரேகா ஒரு கணம் மௌனமாக நின்றாள். பிறகு, "இளவரசே, தங்களுடைய உறுதியை நான் பாராட்டுகிறேன். ஒரு முக்கியமான சேதியை உங்களிடம் தெரிவிக்கவே தங்களை வருமாறு அழைத்தேன். பிறகு சொந்த விஷயமும் இருந்தது...."

"என்ன முக்கிய சேதி?"

"துவாரபாலகர் சிலையைத் தாராசுரத்திற்கு எடுத்துச் செல்லப் போகிறார்கள். நானும் தாராசுரம் செல்கிறேன்..."

ஜெயசிம்மன் பரபரப்புடன், "ரேகா, அந்தச் சிலையை அங்கே செல்லாமல் தடுக்கமுடியாதா?" என்றான்.

குணரேகா குறும்புப் பார்வையுடன், "அதெப்படி முடியும்? பிரம்மராயர் சொல்லிவிட்டார். சிற்பி உடனே அந்தக் கட்டளையை நிறைவேற்ற வேண்டியதுதான்."

"அந்தச் சிலை தாராசுரம் செல்லாமல் சிறிது நாட்களாவது தடுத்து நிறுத்த முடியாதா?"

அவள் சற்று யோசிப்பதுபோல் பாவனை செய்தாள்.

"ரேகா, உனக்குச் சிற்பியிடம் செல்வாக்கு இருக்குமல்லவா? ஏதாவது ஒரு யோசனை செய்யேன்."



அவள் மௌனமாயிருந்தாள்.

"அந்தச் சிலையை மீண்டும் கல்யாணபுரத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். அது என் முதல் லட்சியம். சோழவம்சத்தைப் பூண்டோடு நசுக்கவேண்டும். அது மற்றொரு லட்சியம். தாராசுரம் சென்றுவிட்டால், அந்தச் சிலையை மீண்டும் வடக்கே கொண்டு செல்ல முடியாது. பின்னமடையாமல் கொண்டு செல்லமுடியாது. சிலையின் அடியில் பெயர் செதுக்கப் போகிறார்களாம். சாளுக்கிய நாட்டிற்கு அவமானம் ஏற்படும் அந்தக் காரியத்தை நான் பார்த்துக் கொண்டிருக்கலாமா? அதைத் தடுக்கும் திறமை உனக்கு இருந்தும் நீ சும்மாயிருக்கலாமா?"

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் விரகதாபம் கொப்பளித்தது.

"என்ன சிரிக்கிறாய் குணரேகா? நேரமாகிறது..."

"ஆமாம். நேரமாகிறது. நிலவும் இரவும் வீணே கழிந்து கொண்டிருக்கின்றன."

"இனியும் இந்த இடத்திலிருந்தால் சந்தேகப்படுவார்கள்."

"அதற்காகத்தான் என் குடிலுக்கு அழைக்கிறேன். அங்கே சென்று பேசுவோம். யாரும் கேட்கமாட்டார்கள்."

"ரேகா, நீ வேறு எண்ணம் கொண்டு அழைக்கிறாய்..."

"முதல் எண்ணம் சிலை செல்வதைத் தடுப்பது. திட்டமொன்று உருவாகி விட்டது. அடுத்த எண்ணம்..." குணரேகா சிரித்தாள். அவள் உடல் ஏனோ துடித்தது.

"திட்டம் உருவாகிவிட்டதா ரேகா?"

"ஆம். இப்பொழுதே புறப்படுவோம். விடியும்வரை திட்டம் தீட்டுவோம். வெற்றி நமக்கே. வீழ்ந்தான் சோழன்." - அவள் முத்துப்பல் வரிசை பளிச்சிடச் சிரித்தாள். அவள் கரங்கள் அவனை அழைத்துச் செல்வதற்காக நீண்டன.

ஜெயசிம்மன் அவளைப் பின்தொடர்ந்தான். அவன் எண்ணம் முழுவதும் சிலையை மீட்பதிலேயே இருந்தது.

குணரேகாவின் எண்ணத்தில் சிலையை மீட்பதுடன் கூட ஜெயசிம்மனுடன் இரவை மகிழ்ச்சியுடன் கழிப்பதும் இருந்தது.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002
4-29786/58 77309.

8

குணரேகாவின் குடிலுக்குள் அந்த நேரத்தில் தாம் செல்லப் போகிறோமென்பதைக் கனவில்கூட நினைக்கவில்லை ஜெயசிம்மன். அவளைத் தொடர்ந்து நடந்து வரும்போது யாரோ முன் பின் தெரியாதவர் போல் உடன் சென்றான். வீதி முனையில் மங்கலாக எரிந்துகொண்டிருந்த தீவத்தி ஒளியை நிலவின் பூரண ஒளியில் கவனிப்பவர் யாருமிலர்.

குடில் சிறியதாக இருந்தாலும் எளிமையாகவும் எடுப்பாகவும் தூய்மையாகவும் கலையழகு நிறைந்தும் காணப்பட்டது.

"சாளுக்கியநாட்டு இளவரசருக்கு அமர்வதற்கு இந்தச் சிறு இருக்கையைத் தான் அளிக்க வேண்டியிருக்கிறது." என்று குணரேகா கூறினாள், தன் கூர்மையான பார்வையை அவன் மீது வீசிக்கொண்டே.

"வசதியாக உட்காருவதற்கு இங்கு வருவதில்லையே... மஞ்சத்தில் தலையணையும் மெத்தையும் சௌகரியமாகப் போட்டிருக்கும் போது உட்காருவதற்குள்ள அசௌகரியத்தை யார் பொருட்படுத்துவார்கள்?" என்றான் ஜெயசிம்மன் மெல்லச் சிரித்தவாறு.

விழிகள் விரிய பரபரப்புடன், "அதுதான் நானும் கேட்டுக் கொண்டேன் - இன்று இரவு இங்கு தங்கி, உறங்கிச் செல்லலாம் என்று" எனக்கூறிய குணரேகா, அங்குமிங்கும் நடந்து பழக்கூடையை எடுப்பதும் பால்செம்பினை எடுப்பதுமாகச் சுறுசுறுப்பாக இருந்தாள்.

அவளுடைய ஒவ்வொரு செய்கையிலும் பிரதிபலித்த அங்க அசைவுகள் திடசித்தமுள்ள ஜெயசிம்மனைக்கூடத் திணற அடித்தன.

ஜெயசிம்மன் நகைத்தான். "இரவு உறங்குவதற்கு நான் வரவில்லை. என் நிலையில் நீ இருந்தால் உறங்குவாயா? உன்னைத் தொடர்ந்து வந்தது எதற்குத் தெரியுமா? அந்தச் சிலையை இங்கிருந்து அப்புறப்படுத்துவதைச் சிறிது நாட்களுக்காவது தடுக்க வேண்டும்... அதைப்பற்றிய உன் திட்டத்தைச் சொல், நேரமாகிறது" என்றான்.

குணரேகா தீபத்தைத் தூண்டிவிட்டாள். "இரவு நேரம் விரைந்து செல்கிறதே என்றுதான் இங்கு வருபவர்கள் ஏங்குகிறார்கள்" என்று கலீரெனச் சிரித்தவாறு கூறிய குணரேகா, மாம்பழத்தைத் தண்ணீர் விட்டுக் கழுவலானாள். செம்மாங்கனியின் மணம் குபீரென்று எங்கும் பரவியது.

"நான் கேட்டதற்கு மறுமொழி கூறவில்லையே... சரியென்று சொல்லவில்லையே?" என்றான் ஜெயசிம்மன்.

"இரவு நேரத்தில், நிலவு காயும் வேளையில், தனி இடத்தில், அந்தரங்கமாக ஒரு பெண்ணைச் சரியென்று சொல்லுமாறு ஆடவர் கேட்பதும் அதற்கு மறுமொழி கூறாமல் பெண்கள் முகத்தோற்றத்தால் புலப்படுத்துவதும் சகஜம்தான்." குணரேகா கலகலவென நகைத்தாள்.

மிக லாகவமாக அவள் கரம் மாம்பழத்தைத் துண்டம் துண்டமாக்கியது. சுற்றிலும் மஞ்சள் நிறமும் உட்பக்கம் சிவந்த நிறமுமாகத் தனி மணம் வீசி, தன் ருசியைப் பறைசாற்றிக் கொண்டிருந்த மாங்கனித்தட்டை ஜெயசிம்மன் அருகே கொண்டு வைத்து, ஒரு துண்டத்தை எடுத்து அவன் வாயருகே கொண்டுவந்து, "ஒரு துண்டத்தைச் சுவைத்துப் பாருங்கள்" என்றாள். படரும் கொடிபோல் அவள் மேனியின் பாதிப்பாகம் அவன்மேல் சாய்ந்திருந்தது.



"ரொம்ப ரொம்பச் சுவை" என்று கூறிக்கொண்டே, தன்னைத் தழுவ முயலும் அவளிடமிருந்து மிகவும் திறமையுடன் விடுவித்துக் கொண்டு, "பெண்களின் குணங்களைப் பற்றி ஏராளமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்... நினைத்ததை எப்படியாவது சாதித்துக் கொள்ளும் திறமை மிக்கவர்கள் என்று. அதிலும் தொழில்முறையும் உடன் சேர்ந்த குணரேகாவின் திறமைக்குக் கேட்க வேண்டுமா?" என்றான்.

தீயை ஸ்பரிசித்தவள்போல் விலகினாள் அவள்.

"இளவரசே! என்னைத் தவறாக எடைபோட்டுவிட்டீர்கள். நான் பிறக்கும் போதே இந்தத் தொழில் செய்வதற்காகப் பிறக்கவில்லை. எனது அழகும் நான் பரத சாத்திரத்தைப் பயின்று தேர்ந்து அடைந்த திறமையும் என் இலட்சியத்தை நிறைவேற்ற உதவுகின்றன. என் இலட்சியம் ஆடவர்களுடன் கொஞ்சிக் குலவிப் பசியைத் தீர்த்துக் கொள்வதென்றால் என் பிறந்த நாட்டை விட்டுச் சோழநாட்டிற்கு வந்தா இத்தொழில் செய்து பிழைக்க வேண்டும்? இளவரசே! சுருக்கமாகச் சொல்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கல்யாணபுரத்தில் இருந்தபோது தங்கள் வடிவழகில் தணியா மோகம் கொண்டேன். தங்களை எப்படியாவது அடைவது என்று திட்டமிட்டேன். ஆனால், விதி வேறு விதமாக விளையாடியது. ஒற்றர் படைத் தலைவர் என்னை அழைத்தார். சோழநாட்டிற்குச் செல்லவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை எடுத்து விளக்கினார். சோழநாட்டில் நடந்துகொள்ள வேண்டிய விதத்தைச் சிறு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது போல் சொல்லிக் கொடுத்தார்.

"நான் திருப்பதி அருகே காளஹஸ்தியை வந்தடைந்தேன். தஞ்சை மாநகருக்கு அங்கிருந்துதான் கோயில் தொண்டு செய்யும் பெண்டிரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வந்தனர். என் அழகு, இளமை, திறமை இவற்றால் உடனே எனக்கு வேலை கிடைத்து விட்டது. பதி இலாதாள் எனும் பட்டப் பெயர் வேறு! ஆம். விதிபுருடன் பார்வையினால் நாடு விட்டு நாடு வந்த எனக்குப் பதி இலாதாள் என்னும் பட்டப் பெயர் நியாயமே! தங்களை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த நாட்கள் உண்டு. நாடு விட்டு நாடு வந்து கங்கை கொண்ட சோழீசருக்கு நாள்தோறும் தொண்டாற்றும் புண்ணியச் செயலை ஒரு புறமும் என் அழகை, உடலை ரசிப்பவருடன் சல்லாபித்து அர்ப்பணிக்கும் பாபச்செயலை ஒரு புறமுமாக நான் செய்து வருகிறேன்.

"ஆனால், பாபபுண்ணியத்தைச் சீர்தூக்கிப் பார்த்துக் காலங்கழிப்பதை விட சாளுக்கிய நாட்டிற்கு எந்தெந்த விதத்தில் உதவி செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பதுடன், பிறவி எடுத்த பயன் அதுவே என்று திடமாக நம்பி நாளைக் கழித்து வருகிறேன். இப்படி இருக்கையில்தான் ஒரு நாள் உற்சாகமும் ஒளியும் என் இதயத்தில் தோன்றின. தாங்கள் இந்த ஊருக்கு வந்திருக்கிறீர்கள் என்ற செய்திதான் அது.

''ஒவ்வொரு நாளும் தங்களைச் சந்திக்கத் துடித்தேன். நேரமும் காலமும் சேர்ந்தன. இளவரசே! இன்னும் எவ்வளவு நாட்கள் நான் இந்த ஊரிலிருப்பேனோ? படையெடுப்பிற்கான வேலைகள் முடிவடைந்து விட்டனவாம். பிறகு எனக்கு இங்கு வேலை இல்லை.

''நான் சொல்லித்தான் தாங்கள் அறிவீர்கள் என்பதில்லை. கல்யாண புரத்தினின்று செய்தி வந்திருக்கிறது எனக்கு. இளவரசே! சாளுக்கியநாட்டிற்கு எமன் போன்ற மூவர் இங்கிருக்கின்றனர். அவர்களைத் தீர்த்துக்கட்டும் பணி எனக்கிடப்பட்டிருக்கிறது...'' குணரேகா பெருமூச்சுவிட்டாள்.

ஜெயசிம்மன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனை அறியாமலேயே ஹூங்காரம் செய்தான். அவன் தோள் துடித்தது. உடல் புல்லரித்தது. விழிகள் ஜ்வலித்தன. ''மூன்று எமன்களா?''

''ஆம், இளவரசே! முத்தீப் போன்று காலனையும் நடுநடுங்க வைக்கும் மூவர். கங்கைகொண்டசோழபுரத்தை நிர்மாணித்த இராசேந்திர சோழருக்கு ஆறு புதல்வர்களும் ஒரு மகளும் உண்டு. அவர்களுள் மூத்தவர் இப்பொழுது அரசராக உள்ள இராசாதிராசர்.''

''இப்பொழுது அரசராக உள்ள...'' - ஹூங்காரம் செய்து நகைத்த ஜெயசிம்மன், ''நன்றாகச் சொன்னாய்... இப்பொழுது அரசராக உள்ள என்று. நாளைக்கு அவர் இருக்கமாட்டார் என்பது உறுதி. உனக்குத் தெரியுமோ, தெரியாதோ குணரேகா... கல்யாணபுரத்தைச் சிதைத்து, அமைச்சர்களை அவமானப்படுத்தி, துவாரபாலகர் சிலையைக் கவர்ந்து வந்த அந்தக் கொடியவரா?'' என்று தன் சீற்றத்தை வார்த்தைகளால் வெளிப்படுத்தினான்.

''அவரைவிட அவரது தம்பி இளவரசர் இராசேந்திரர் மிகப் பொல்லாதவர்...''

''இராசேந்திரர் - தந்தை பெயரையே வைத்துக்கொண்டிருக்கும் தீயவரா?''

''அவருக்கு என்மீது ஒரு கண் உண்டு. அவருடைய தம்பி வீர ராசேந்திரன், இருவரையும் விடக் கொடியவர்...''

''மூன்று கார்க்கோடகர்...''

''ஆம், முதல் கொடிய நாகத்தை நீங்கள் கவனித்துக் கொள்ளப் போகிறீர்களாம்... இரண்டாவது, மூன்றாவது கருநாகங்களை நான் எப்படியாவது தீர்த்துவிட்டுக் கல்யாணபுரம் வந்துவிட வேண்டும் என்று ஒற்றர் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.''

''நல்ல திட்டம்... ஆனால், சோழ இளவரசர்களைக் கொன்ற பாவத்தை ஒரு பெண் ஏற்க வேண்டுமா? என் வாள் முனை மழுங்கிவிடவில்லையே?''

''உங்கள் வீரத்திற்கும் திறமைக்கும் வேறு வேலை இருக்கிறது.... சோழமன்னரைக் கவனித்துக் கொள்வதற்கே உங்கள் பொழுது சரியாகி விடும்....''



''அதெப்படிச் சொல்கிறாய், சோதிடநிபுணர்போல்?''

''ஒற்றருக்குக் காதும் கண்ணும் எங்கும் இருக்கும்... பிரம்மராயர் தங்களுக்குப் புதுப்பதவியை அளிக்கப் போகிறார்...''

''குணரேகா, உண்மையிலேயே நீ ஒற்றர்படைக்குத் தலைமை வகிக்கத் தகுதி வாய்ந்தவள்தான். நான் கேட்டுக்கொண்டேனே அதற்கு ஏற்ற மறுமொழி கூறாமல் உனது சரித்திரத்தை மட்டும் இதுவரை கூறிவிட்டாய்...''

''இளவரசே! சிலையை அடைவது மட்டும் நமது நோக்கமாயிருந்தால் மற்ற வேலைகளை விட்டுவிட வேண்டும். வேறு சிலையை எப்பொழுது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம், ஆனால்...''

''சிலையைச் செய்வது என்பது இப்பொழுது பிரச்னை அல்ல... நமது கலைச்செல்வத்தைக் கொள்ளையடித்து வந்து, அந்தச் சிலை அடியில் பெயரையும் எழுதி அழியாத அவமானப்படுத்திய சோழர் முகத்தில் கரியைப் பூச வேண்டும். அதுதான் என் முதல் இலட்சியம்.''

''அதை நிறைவேற்றுவதாக நான் வாக்களித்துவிட்டேனே... ஆனால் என் வேண்டுகோள் - தாபமெனும் தடாகத்தில் தத்தளிக்கும் என்னைக் காப்பாற்றக் கூடாதா? இதோ, என் மேனியைத் தொட்டுப் பாருங்கள், அல்லித் தண்டு உடல் அனல்போல் கொதிப்பதை, இனிய இதயத்தைக் கேளுங்கள், அது உங்கள் பெயர் கூறி ஒலிப்பதை... உற்றாரைவிட்டு, உயிரைப் பணயமாக வைத்து உடலையும் விற்று, நாட்டைக் காப்பாற்ற வாழும் என் வேண்டுகோளை ஒரு முறை - ஒரே ஒரு முறை... நிறைவேற்றக் கூடாதா இளவரசே?''

ஜெயசிம்மன் நெருங்கி வந்து குணரேகாவின் கரங்களைப் பிடித்துக் கொண்டான். அவன் உணர்ச்சிவயப்பட்டிருந்தான். ஆனால், அது பெண்மையின் தாபத்திற்கு இரங்கி, அவளது ஆசைக்கு இணங்கி வரும் உணர்ச்சி அன்று. அவன் விழிகளில் ஏனோ நீர் தளும்பியது. அவளது கூந்தலை மெல்ல வருடி, ''குணரேகா, உன்னைப் போன்ற நாட்டுப்பற்று மிக்கவர்களால் தான் சாளுக்கியநாடு இன்றளவும் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. பெண்களின் தியாக உணர்வும் இளைஞர்களின் வீரமும் இருந்தால்தான் கடல் போன்ற பலமிகுந்த சோழர்களை வெல்ல முடியும்.

''குணரேகா! உனது கோரிக்கை அப்படியொன்றும் நடக்க முடியாததன்று. உனது மேனியுடன் உறவாட எவ்வளவோ பேர் தவமிருப்பார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு கல்யாணபுரத்தில் உன் விழியைச் சந்தித்தது கிடையாது. என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாள் இன்னொருத்தி. அவளைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நான் இந்தக் கடுமையான விஷப் பரீட்சையை ஏன் ஏற்றேன்? சோழ மன்னனைக் கொன்றுவிடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவே இந்த நகரத்திற்கு வந்தேன், அவனைப் போன்று மற்றும் இரு கருநாகங்கள் இருப்பதை இப்போதுதான் அறிந்தேன். நாகத்துடன் விளையாடிக்கொண்டே அதை நசுக்கவேண்டும். அந்த மகத்தான பணியை

ஏற்றிருக்கும் நீ, சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அதற்குப் பரிசாக என்னைக் கேட்கிறாய். உனது நெடுநாளைய ஏக்கத்தைத் தீர்க்கச் சொல்கிறாய்...

"குணரேகா! என்னை மன்னித்துவிடு. நான் இரு சபதங்கள் செய்து வந்துள்ளேன். சோழமன்னனை அழிப்பது ஒன்று. மற்றொன்று சபதம் நிறைவேறும் வரையில் எந்தப் பெண்ணிடமும் வசப்பட்டு, என்னை இழப்பதில்லை என்பது."

குணரேகா குபீரெனச் சிரித்தாள். "இளவரசே! நல்ல சபதம்தான். என்னைத் தழுவத் தங்களுக்கு மனமில்லை என்பதற்காகச் சபதத்தைக் கூறித் திசையைத் திருப்பாதீர்கள். இந்த நகரத்திற்கு வந்ததிலிருந்தே தங்களுடைய இதயத்தில் இடம் பிடித்துக்கொண்டு விட்டாள் ஒரு சோழநாட்டு மங்கை. நான் குணரேகா இல்லை குணக்கேடி. ஒழுக்கம் தவறியவள். அதனால் என்னைத் தீண்டுவதைக் கௌரவக் குறைவாக நினைக்கிறீர்கள். நாட்டிற்காக உடலை மட்டுமன்று, உயிரையே தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கும் ஒரு பேதை - தங்கள் வேண்டுகோள்படி சிலை அப்புறப்படுத்துவதைத் தடுத்து நிறுத்தப்போகும் ஓர் எளியவளின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதால் எந்தச் சபதபங்கமும் ஏற்பட்டுவிடாது. சோழ நாட்டுப் பெண்ணுக்கு நான் எந்தவிதத்திலும் குறைந்தவல்லள்..." குணரேகா ஜெயசிம்மனை நெருங்கினாள்.

வானத்து மதி மேல்திசையில் இறங்க முயன்று கொண்டிருந்தது. விடிந்து விட்டதோ என்ற பிரமையில் ஓரிரு பறவைகள் கூவின. சிறகடித்துப் பறந்து சென்று மீண்டும் கூடடைந்தன. சில்லென்று காற்று வீசியது. பலகணியின் திரைச்சீலை மெல்ல அசைந்தது.

"குணரேகா! எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்கும் நீ ஒன்றை மட்டும் அறியவில்லை. சோழநாட்டுப் பெண்ணுடன் நான் பழகுவதை வேறுவிதமாக எண்ணிவிட்டாயா? காரண காரியத்திற்காகத்தான் பழகுகிறேன். அந்த மங்கை என்னை நெருங்கும் ஒவ்வொரு கணமும் உண்மையைக் கூறிவிடவேண்டும் என்று துடிககிறேன்..."

"எந்த உண்மையை? சாளுக்கியநாட்டு இளவரசர் என்ற உண்மையையா?" - குணரேகா குறும்பாகச் சிரித்தாள்.

"தேவைப்பட்டால் அதையும் நான் சொல்லத் தயங்கமாட்டேன். அவளும் அதற்காக வெறுத்துவிடமாட்டாள். நாட்டிற்காக ஒரு பேதைப்பெண்ணை ஏமாற்றுகிறேனே என்ற வேதனை எனக்கு. பெண் பாவம் பொல்லாது என்பார்கள். ஆனால், மன்னரின் உயிரை மாய்க்க அவளது உதவி தேவைப் படுகிறது. அதனால்தான் உண்மைக் காதல் கொண்டுவிட்ட அந்தப் பெண்ணிடம் இன்னும் உண்மையைக் கூறவில்லை. சாளுக்கியநாட்டவன் என்ற உண்மையைவிட மற்றொரு உண்மையை நான் கூறினால் அந்தப் பேதைப்பெண்ணின் இதயம் வெடித்து விடும்..."



"சாளுக்கிய நாட்டு - சொந்த நாட்டு - மங்கை தாபத்தால் இதயம் சுக்கு நூறாகும் போது, சோழநாட்டவளின் இதயம் வெடித்துத்தான் போகட்டுமே. அப்பேர்ப்பட்ட உண்மை - ரகசியம் என்னவென்று தான் சொல்லி விடுங்களேன்... நாட்டுப்பணிக்காக வந்தவர்கள் நங்கை சுகம் நாடக்கூடாது என்ற கட்டுப்பாடு எங்குமில்லை. சொல்லப்போனால், நாணம் விட்டுச் சொல்லப்போனால், உங்கள் பணிக்கு மங்கை தரும் சுகம் மேலும் உற்சாகத்தை அளிக்கும்..." - ஜெயசிம்மனைக் குணரேகா இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

ஜெயசிம்மன் ஒரு கணம் திகைத்தான். பிறகு தன் முரட்டுத் தனமான பலத்தைப் பயன்படுத்தி அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவனாக அவள் காதருகே, அந்த உண்மையை - இதுவரை மறைத்து வந்த ரகசியத்தைக் கூறினான்.

கருடாஸ்திரத்தில் விடுபட்டுத் துவண்டு விலகிய சர்ப்பம்போல் குணரேகா அவனிடமிருந்து சரேலென விடுபட்டு நகர்ந்தாள்.

அவன் முகத்தையே ஒரு கணம் உற்று நோக்கிய அவள் இரு கரங்களாலும் தன் முகத்தை மூடி கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

"இளவரசே, மன்னித்துவிடுங்கள். நான் துரோகி ஆகமாட்டேன். அவளுக்குத் துரோகம் செய்யமாட்டேன். உங்கள் இதயத்தைப் புரிந்து கொள்ளாமல் இதுவரை நடந்ததற்கு மன்னித்துவிடுங்கள். நீங்கள் கவலையின்றிப் போய் வாருங்கள். துவாரபாலகர் சிலை இங்கிருந்து அகற்றப்படாமல் பார்த்து கொள்ளவேண்டியது என் பொறுப்பு" என்றாள்.

ஜெயசிம்மன் நிம்மதியான மனத்துடன் வீதி வழியே நடந்து தன் இருப்பிடம் நோக்கிச் சென்றான்.

மேலும் கடினமான மனத்துடன் உள்ளத்தில் காதல் தீ பொங்க, குணரேகா மஞ்சத்தில் புரண்டாள்.

## 9

கூடை நிறைய வீட்டிற்கு வேண்டிய தானியங்களைத் தலையில் சுமந்துகொண்டு சித்திரவல்லி வந்துகொண்டிருந்தாள். அவளுடைய நடையில் வழக்கத்தைவிட வேகம் இருந்தது. கொடிய வெயில் அவள் முகத்தை வாடச் செய்திருந்தது. அந்த வாட்டத்துடன் ஏமாற்றமும் சேர்ந்து இருந்ததால் சித்திரவல்லியைத் திடீரென்று காண்பவர்கள் அவளுக்கு ஏதோ நேர்ந்துவிட்டதென்று நினைப்பார்கள்.

வெயில் ஏறுமுன்பே, அடுத்த கிராமத்திலிருந்து தானியங் களை வாங்கிக்கொண்டு உடனே வீட்டிற்கு வந்திருக்கலாம். ஆனால் வடக்குக்

கோட்டைவாயிலருகேயுள்ள காளிகோயிலில் அவள் காத்திருந்தாள். யாருக்காகக் காத்திருப்பான்? கடந்த சில நாட்களாக ஜெயசிம்மனைச் சந்திக்க முடியவில்லையே எனும் ஏக்கம் அவளுள்ளத்தில் ததும்பி நின்றது. எப்படியும் ஜெயசிம்மன் அந்த வழியாக வருவான் என்பது அவளுக்குத் தெரியும். நேரமாகியும் ஏனோ அவனைக் காணவில்லை. நேரம் ஆக ஆக, வெயிலின் கடுமை அனல் காற்றாய் வீச அதைத் தாங்கமுடியாமல் அவள் சோர்ந்த உள்ளத்துடன் புறப்பட்டாள்.

பெரிய வீதிகளின் வழியாக வரவிரும்பாமல் சிறு சிறு வீதிகளின் வழியாக வந்தபோது, அவளுக்குக் களைப்பு அதிகமாகியது. நல்லவேளையாக அங்கே மாந்தோப்பு தென்பட்டது. மாந்தோப்பின் நடுவே சிறு குடில். அவளது தாய்வழி உறவினரின் குடில்தான் அது. அங்கே சிறிதுநேரம் இளைப்பாறினால்தான் அவளது மனக்குழப்பமும் களைப்பும் ஓரளவுக்கு அடங்கும் என்று தோன்றியது.

"மா... மா..." என்று குரல் கொடுத்தாள்.

மறுமொழி ஏதும் வரவில்லை. குடிலின் கதவு திறந்திருந்தது. ஆனால், வீட்டில் யாருமில்லை. மாமா சற்றுத் தொலைவில் மாமர நிழலில் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார். திண்ணையிலேயே கூடையை இறக்கி வைத்து விட்டுத் தாகம் தீரத் தண்ணீர் குடிக்க உள்ளே சென்று செம்பு நிறைய நீரை மடமடவென்று குடித்த பிறகு தான் ஏமாற்றத்தாலும் அலைச்சலாலும் ஏற்பட்ட களைப்பு ஒரு வகையாகத் தீர்ந்தது.

வெளியே யாரோ வரும் அரவம் கேட்டது. எட்டிப்பார்த்தாள். இளஞ்சென்னி வந்துகொண்டிருந்தான். போர் வீரன் உடையிலிருந்த அவனைக் காண அவளுக்கு வியப்பாயிருந்தது. மேலும் அந்த நேரத்தில் அங்கே அவன் ஏன், எதற்காக வந்தான்?

சித்திரவல்லி அவனுடன் பேச்சுக் கொடுத்து திடீரென்று, அந்த வேடத்தில் அவன் வந்திருப்பதற்கான காரணத்தை அறிய ஆவல் கொண்டாள்.

"கோடை வரும் முன்பே வெயில் கடுமையாகிவிட்டது" என்று பேச்சைத் தொடங்கினாள் சித்திரவல்லி, இளஞ்சென்னியின் விழிகளைக் கூர்ந்து நோக்கியவாறு.

அவள் முகத்தில் புலப்பட்ட களைப்பையும் சோர்வையும் கண்ட இளஞ்சென்னி, தலைப்பாகையைக் கழற்றிவிட்டுத் திண்ணையில் அமர்ந்தான். இவ்வளவு நாட்களாக இல்லாத வழக்கமாகச் சித்திரவல்லி தன்னுடன் உற்சாகமாகப் பேசமுற்பட்டதால் அவன் உள்ளம் துள்ளியது.

"இதென்ன புது வேடம்? எனக்கு முதலில் அடையாளமே தெரிய வில்லை" என மீண்டும் பேச்சைத் தொடங்கினாள் சித்திரவல்லி.

இளஞ்சென்னிக்கு உற்சாகம் கரை புரண்டது. "சித்திரவல்லி, உனக்குத் தெரியாதா? நான் படையில் சேர்ந்துவிட்டேன். பிரம்மராயர் நம் வீட்டிற்கு வந்திருந்தாரே, அன்று என்னைச் சேரச் சொல்லிவிட்டார்."



"என்று வந்திருந்தார்? நான் எங்கே போயிருந்தேன்?" என்று சித்திரவல்லி கேட்டதற்கு, இளஞ்சென்னி மெல்லச் சிரித்தான். அதில் குறும்புத்தனம் மிளிர்ந்தது.

"அதிருக்கட்டும்... இந்தக் கொளுத்தும் வெயிலில் எங்கே போய் வருகிறாய் சித்திரவல்லி?" இளஞ்சென்னி கேட்டான்.

கூடையைச் சுட்டிக்காட்டிய சித்திரவல்லி, "வாங்கி வர நேரமாகி விட்டது," என்றாள்.

"துவரையும் உளுந்தும் மட்டும் எடுத்துக்கொண்டு வந்திருந்தால் இவ்வளவு நேரமாகியிருக்காது. காளிகோயிலில் காத்திருந்து கண் பூத்துப் போய்விட்டது. இல்லையா?" என்று ஒன்றுமே தெரியாதவன்போல் கேட்டான்.

அவன் எதைச் சுட்டிக்காட்டுகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள் சித்திரவல்லி. கொஞ்சம் இடம் கொடுத்தால் இளஞ்சென்னி மடத்தைப் பறித்துவிடுவான்.

"இதோ பார், வீணாக என் விஷயத்தில் தலையிடாதே என்று எப்போதோ சொல்லிவிட்டேன். எங்கோ மூன்றாவது மனுஷர் வீட்டிற்கு வந்திருக்கும்போது வம்பு வேண்டாம். எனக்கு இங்கே என்ன வேலை? நான் புறப்படுகிறேன்." சித்திரவல்லி சீறினாள்.

"உடனே கோபப்படுகிறாயே! உன் மனத்தைக் கவர வேண்டும் என்பதற்காகவே படையில் சேரவும் நான் துணிந்துவிட்டேன். வீரனைப் பெண் விரும்புவாள் என்பது எனக்குத் தெரியும். வடக்கு நோக்கிப் படையெடுப்பு உறுதியாகிவிட்டது. முன்னணிப் படையில் நானும் செல்கிறேன்" என்று இளஞ்சென்னி சொல்லிக்கொண்டே போகும்போது சித்திரவல்லி குறுக்கிட்டு "நீ ஆயிரம் காரணங்கள் சொல்லு. எனக்கு என்னவோ உன்மீது வேறுவிதமான ஆசையே ஏற்படவில்லை" என்று கூறினாள்.

"போர்க்களத்தில் வெற்றிவாகை சூடி வரும் எனக்கு நீ மணவாகை சூடமாட்டாயா?" இளஞ்சென்னியின் குரலில் கொஞ்சுதலிருந்தது. கெஞ்சுதலும் பிரதிபலித்தது.

"இளஞ்சென்னி, நாம் வேறு ஏதாவது பேசுவோமே... கல்யாணம் காதல் இவற்றைச் சற்று மறந்திருப்போமே..." என்று சலிப்புடன் கூறினாள் சித்திரவல்லி.

இளஞ்சென்னி விஷமச்சிரிப்புடன், "சித்திரவல்லி! காதல் காதல் என்று அந்த அந்நிய நாட்டு வாலிபன் மீது உயிரை விடுகிறாயே, அந்தக் காதலை நீ மறந்துவிடும் காலம் அதிகத் தொலைவிலில்லை. அதைச் சொல்லவே நான் வந்தேன்" என்றான்.

கோபம் பொங்கியது சித்திரவல்லிக்கு. உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்தாள். "இதோ பார்! நான் உன்னுடன் பேசவே விரும்புவதில்லை. ஏதோ

இந்த வெயில் வேளையில் உன் மனத்துக்கும் சற்றுக் குளுமையாக இருக்குமாறு பேசுவோமே என்று முகம் கொடுத்தால், பேச்சின் திசையையே எங்கோ மாற்றுகிறாய். இனி உன்னுடன் எனக்கு என்ன பேச்சு? என் காதல் எக்கேடு கெட்டால் உனக்கு என்ன? இந்த ஜென்மத்தில் நீ என்னை அடைய முடியும் என்று மட்டும் மனப்பால் குடிக்காதே'' என்று கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு நடக்க முயன்றாள்.

இளஞ்சென்னி அவளைத் தடுப்பவன் போல் நின்று, ''சித்திரவல்லி, கோப்படாதே! உன் நன்மைக்காகத்தான் நான் அறிந்தவற்றைச் சொல்ல வந்தேன். நீ ஏமாறக்கூடாது என்பதை எச்சரிக்கவே வந்தேன். சிறு வயது முதல் உன் குணம் எனக்குத் தெரியும். கண்டிப்பு மிகுந்தவள். நெருங்க முடியாத நெருப்புப் போன்றவள். யாரும் உன்னை ஏமாற்ற முடியாது. அப்படிப்பட்ட நீயும் ஏமாந்துவிட்டாயே என்று நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. ஏமாற்றம் உனது வாழ்வைப் பாதித்துவிடுமே, அதை உன்னால் தாங்க முடியாதே...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், ''என் வாழ்வைப் பாதிக்கக்கூடியதா? ஏமாற்றமா? என்ன சொல்கிறாய் இளஞ்சென்னி? ஏதாவது கற்பனையாகக் கூறி என் மனத்தை மாற்றப்பார்க்காதே,'' என்று சித்திரவல்லி குறுக்கிட்டாள்.

''கண்ணால் கண்டவற்றைச் சொல்கிறேன். நேற்று இரவு அர்த்த ஜாம பூசைக்குப் பிறகு சோழீசர்கோயில் மேல்தளத்தில் ஒரு பெண்ணும் ஜெயசிம்மனும்...'' என்று இளஞ்சென்னி சொல்வதற்குள், ''இளஞ்சென்னி, உனக்கு அவரைப் பிடிக்க வில்லை... அதனால் இப்படி ஏதாவது கூறலாமென்று திட்டமிட்டு விட்டாயோ?'' என்று அவள் கூறியதையும் லட்சியம் செய்யாமல், ''குலாவிக்கொண்டிருந்தார்கள். நான் மட்டுமா பார்த்தேன்? கோயில் காவலர்களும் பார்த்தார்கள்'' என்றான்.

''என்ன சொன்னாய் இளஞ்சென்னி? என்னிடம் உடைவாள் இருந்தால் அபாண்டம் கூறும் நாவைக் கூறுபோட்டு விடுவேன். என்னிடமே நெருங்கிப் பழக யோசனை செய்யும் அவர், கோயிலின் மேல்தளத்தில் குலாவிக் கொண்டிருந்தாரா? நீ சொல்வது பொய்யாக மட்டும் இருக்கட்டும்...'' என்று கூறும்போது சித்திரவல்லியின் உடலில் ஒருவிதப் படபடப்பு இருந்தது.

''ஜெயசிம்மனைப் பற்றி அபாண்டம் கூறி எனக்கென்ன ஆகவேண்டும்? மேல்தளத்தில் இருவரும் நடுநிசிக்கு அப்பாலும் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு இருவரும் கோயிலைவிட்டு வெளியே சென்றனர். நானும் அவர்களைப் பின்தொடர்ந்தேன்...''

''உனக்கு ஏன் அந்த வேலை?''

''இல்லாவிடில், உண்மையை அறிந்து உன்னிடம் சொல்லியிருக்க முடியுமா?''

''உம்... பிறகு?''



''அவள் வீட்டில் அவன். விடியும்வரை இருந்தான். பேச்சு, பேச்சு! அப்படியென்னதான் பேச்சிருக்குமோ. காதலர்கள் என்றால் காலம் போவது தெரியாமல் பேச வேண்டுமா? சிரிப்பு, வளையல் ஒலி, சிங்கார முணுமுணுப்பு- என்ன இருந்தாலும் ஓர் அழகியின் வீட்டில் ஒரு யுவனுக்கு இரவு முழுமையும் என்ன வேலை?''

''அந்த அழகி யார்? உனக்குத் தெரிந்தவளா?''

''எனக்கு மட்டுமா? உனக்கும்தான் தெரிந்தவள். இந்த ஊரிலுள்ளவர்கள் அனைவருக்கும் தெரிந்தவள். இறைவனுக்குத் தொண்டாற்றுவதற்கே பிறவி எடுத்த பயன் என்று வாழ்நாளைக் கழிப்பதாகக் கூறுபவள்...''

''ஓ! பதியிலாதாளா?''

''ஆம். ஒரு பதியிலாதாள். குணரேகா எனும் கர்வக்காரி.''

''ஏன், எப்பொழுதாவது உன் முகத்தில் கரியைப் பூசிவிட்டாளா?''

''இதுவரை எனக்கு யாரும் கரியைப் பூசவுமில்லை; பூசவும் விடமாட்டேன்.''

''சரி, சரி! விஷயத்தைச் சொல்லு.''

''இனி, என்ன விஷயம்? உன்னைக் காதலிப்பதாக நடித்துப் பரத்தையர் இல்லம் செல்லும் அவனிடம் நீ ஏமாந்துதானே விட்டாய்?''

''சங்க காலத்தில் தலைவன் தலைவியை மறந்து பரத்தையர் வீடு செல்வதைப் பற்றிப் படித்திருக்கிறேன். நீ தமிழ் படித்திருந்தால் உனக்கும் தெரிந்திருக்கும். தலைவன் பிறகு திருந்திவிடுவான். நீ உன் வேலையைப் பார்த்துச் செல்லலாம். போர்க்களம் செல்லும்வரை உடம்பை கவனமாகப் பார்த்துக்கொள்'' என்று சித்திரவல்லி கோபமாகக் கூறிவிட்டு அங்கிருந்து திரும்பிப் பாராமலேயே அந்தக் கடும் வெயிலில் நடந்தாள்.

இளஞ்சென்னியிடம் அவ்வாறு சொல்லிவிட்டாளே தவிர, அவள் இதயத்தில் ஏற்பட்ட வேதனை கொஞ்சமன்று. அப்பொழுதே ஜெயசிம்மனைச் சந்தித்து, ''இதுதான் உங்களுடைய லட்சணமா?'' என்று கேட்கவேண்டும் என்று துடித்தாள்.

வீட்டுக்குச் சென்றவுடன் பசி, வெயிலின் கொடுமை, களைப்பு, சோர்வு, ஏமாற்றத்தால் அதிர்ச்சி - அனைத்தும் சேர்ந்து அவளைக் கண்ணயரச் செய்தன. எவ்வளவு நேரம் உறங்கி யிருப்பாளோ, திடீரென்று விழித்துக்கொண்டாள். பொழுது சாய்ந்து வெகு நேரமாயிருந்தது.

கோயிலுக்குச் செல்லும்போது சந்திபூசை நடந்து முடிந்திருந்தது. ஒருவேளை ஜெயசிம்மன் அங்கே வரக்கூடும் என்று எதிர்பார்த்து, தேவியின் சந்நிதி அருகே நின்றுகொண்டிருந்தவளின் எதிரே குணரேகா தென்பட்டாள். பார்த்தும் பார்க்காததுபோல் இருக்க முற்பட்டாள் சித்திரவல்லி. குணரேகாவின்

செழுமையான அழகு இதயத்தில் முள்போல் குத்தியது. தன் இதயம் நிறைந்தவரைத் தன் வலையில் சிக்கவைத்த மாயக்காரி என்று கறுவினாள். அவளுடன் பேசவும் விரும்பவில்லை.

''நீதானே சித்திரவல்லி?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். குணரேகா அவள் அருகே நின்றுகொண்டிருந்தாள். ''உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று அவளது தோளைத் தொட்டாள் குணரேகா.

சித்திரவல்லி ஒருகணம் அவளைப் பாதாதிகேசம் வரை அளப்பதுபோல் நோக்கினாள். குணரேகாவின் அழகு ஒரு சமயம் தெய்வத்துக்கே அர்ப்பணிக்கப்பட்ட தேவமலர் போன்றும் தோன்றியது.

''என்ன கேள்விப்பட்டிருக்கிறாய்? அப்பாவிப் பெண்... சுலபமாக ஏமாறக்கூடியவள் என்றா?'' - பாக்கை வெட்டுவதைப் போலிருந்தது பேச்சு.

''சித்திரவல்லி, பெண்கள் அனைவருமே அப்பாவிகள்தான். பாவிகளான ஆடவர்கள் அவர்களைச் சுலபமாக ஏமாற்றி விடுகிறார்கள். ஆனால், உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்டது உன் உயர்ந்த குணத்தையே'' என்றாள் குணரேகா, அவள் கரத்தை மெல்லத் தடவி.

கரத்தை மெல்ல விடுவித்துக்கொண்டு, ''உன்னிடம் வருபவர்கள் என்னைப் பற்றிப் பேசுகிறார்களா? அப்படி வம்பு பேசுபவர் யார்?'' என்றாள் சித்திரவல்லி.

சித்திரவல்லியின் அழகை அந்த மங்கிய ஒளியிலும் அளந்து, ''சித்திர வல்லி, உன்னிடம் பழகுபவர் என்னிடம் எப்படி வரத் துணிவர்? நான் காலில் மிதிபடும் மலர். நீயோ தேவனுடைய சிரசை மட்டும் அலங்கரிக்கத்தக்கவள். உன்னை அடையவிருப்பவர் கொடுத்துவைத்தவரே'' என்று உருக்கமாகப் பேசினாள் குணரேகா.

''நானும் ஓரளவுக்கு அறிந்திருக்கிறேன் குணரேகா. உன்னை மனம் விட்டுக் கேட்கிறேன். கண்ணகியிடமிருந்து கோவலனைப் பிரித்ததுபோல் நீயும் என்னைப் பிரிக்கப்பார்க்கிறாயா?''

குணரேகா மெல்ல நகைத்தாள். ''நான் மாதவியும் அல்லள். உன் இதயம் கவர்ந்த அவர் கோவலனும் அல்லர். ஆனால், உன்னைக் கண்ணகி என்று கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன். சித்திரவல்லி! அதிகமாகப் பேச எனக்கும் பொழுது இல்லை. உன்னவரை நான் மயக்கமுடியாது. நான் என்ன, எவருமே மயக்க முடியாது. அவர் யாருக்கும் இலேசில் மயங்கி அடிமையாகி விடமாட்டார். போர்க்களம் செல்லும்வரை வாழ்த்தி நல்விடை கொடுத்து அனுப்பு. வரட்டுமா? உன்னைப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது. பார்த்துவிட்டேன்...''

''எனக்கும் உன்னைப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது...''



''இல்லை... இல்லை.... என்னைக் கண்டவுடன் உனக்கு வெறுப்பு ஏற்பட்டது.''

''ஆம். முதலில் அப்படித் தோன்றியது உண்மைதான். நேற்று இரவு உன் வீட்டில் அவர் தங்கினாரே அவர் தன்னை இழந்து விட்டாரா?'' சித்திரவல்லியின் குரலில் ஏக்கமும் பரிதவிப்பும் இருந்தன.

குணரேகா சிரித்தாள். சித்திரவல்லிக்கு ஆத்திரமாக இருந்தது.

''ஒற்றர்போல் மறைந்திருந்து கேட்டு உனக்கு யார் சொன்னார்கள்? சொன்னவர்கள் தவறாகக் கூறியிருப்பார்கள். உனது 'அவர்' ராமபிரானைப் போன்றவர், அவர் தன்னை இழந்துவிட மாட்டார்'' குணரேகா அழுத்தத் திருத்தமாகக் கூறினாள். அங்கிருந்து புறப்பட்டாள்.

சித்திரவல்லி கண்களை மூடிக்கொண்டாள். உதடுகள், ''இறைவா, என்னைக் காப்பாற்றினாய்'' என்று முணுமுணுத்தன.

அன்று இரவு வழக்கம்போல் கல்யாணபுரத்துக்கு ரகசியமாக எழுதி அனுப்பும் லிகிதத்தில் குணரேகா ஜெயசிம்மனைப் பற்றியே அதிகமாக எழுதியிருந்தாள்! ''.... ஜெயசிம்மன் இங்கே அழகியின் கடைக்கண் வீச்சிற்குப் பலியாகிவிட்டார். போர்க்களம் புறப்படுமுன்பே அவர்கள் திருமணம் நடந்துவிடும்...''

கல்யாணபுரத்தில் அந்தச் செய்தி பெரும் புயலை உண்டாக்கி விட்டது. உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தானே குணரேகா அவ்வாறு எழுதினாள்!

## 10

அன்று ராஜகேசரி ராஜாதிராஜ சோழதேவரின் பிறந்தநாள். பூரம் நல்லோரை நாள். ஊரெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. கங்கை கொண்டசோழீசரை வணங்கிவிட்டு, மன்னர் ஊரின் மேற்கே இருக்கும் பழைய மாளிகையை நோக்கித் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டார். அங்குள்ள விநாயகர் கோயிலுக்குச் சென்று ஆண்டிற்கு ஒரு முறை வழிபடுவது அவரது வழக்கம். ராஜாதிராஜசோழ தேவருடன் படைத்தலைவர் மாவலிவாணராயரும் ஜெயங்கொண்ட வாணகோவரையரும் நீலகங்கரையரும் தண்டநாயகன் வெண்காடன் சங்கரனும் உடன் வந்தார்கள். குதிரை மீதிருந்து மன்னர் கம்பீரமாக இறங்குவதைக் காண்பவர்கள் ஐம்பது பிராயத்தைக் கடந்தவர் என்று ஒருவரும் கருதமாட்டார்கள்.

நுழைவாயிலில் சற்றே நின்ற மன்னர் யார் வருகைக்கோ காத்திருப்பது தெரிந்தது.

சிவிகையில் மன்னருடைய குரு உலகளந்த சோழபிரம்மமாராயர் வந்திறங்கினார். குருதேவரை வணங்கி வரவேற்று, விநாயகர் வழிபாடு செய்தபின் அருகேயிருந்த மாளிகைக்குள் செல்ல முற்பட்டார் மன்னர்.

இராஜேந்திரசோழதேவர் காலத்திலேயே அந்த மாளிகை பயன்படுத்தப் படாதிருந்தது. பொலிவிழந்து காணப்பட்டாலும் மாளிகையின் உள்ளே விசாலமான கூடங்களும் சிற்ப வேலைப்பாடு மிகுந்த தூண்களும் காணப்பட்டன. இருளில் சுகமாகக் காலங்கழித்த வௌவால்களின் தவத்தைக் கலைப்பதுபோல் வெளிச்சம் ஏற்படவே, அவை விடுதலையை நாடிப் பறந்து செல்ல முற்பட்டு அங்குமிங்கும் பறந்தன.

துரிஞ்சல்கள், வௌவால் இவற்றின் மணமும் காற்று அதிகம் பரவாததால் ஏற்படும் ஒருவித நெடியும் கலந்து அந்த மாளிகையின் பழமையை மேலும் அதிகரிக்கச் செய்தன.

அரசர் அந்த மாளிகைக்கு வருவாரென்ற செய்தி முன்னமே அறிந்திருந்தால் பணியாட்கள் பெருக்கிச் சுத்தப்படுத்தியிருப்பர். திறந்து வைத்துத் தூய்மையான காற்று மாளிகைக்குள் நடமாட வழி செய்திருப்பர். விளக்குகளை ஏற்றியிருப்பர். குங்குலியம், அகில் முதலியவற்றை இட்டு நறுமணங் கமழச் செய்திருப்பர்.

இராஜாதிராஜருக்கு அங்குவரும் திட்டம் திடீரென உதித்தது. பழைய மாளிகையிலுள்ள முத்து மண்டபத்தைக் காணவேண்டும் எனும் அவா அவருக்கு அப்போதுதான் தோன்றியது. இராஜாதிராஜரின் அருமைத் தந்தையார் கங்கைகொண்டசோழர் இராஜேந்திரன் விரும்பிக் கட்டிய மாளிகை அது. அந்த மாளிகையின் நடு மண்டபத்தில்தான் அழகிய தேர் ஒன்று வைக்கப் பட்டிருந்தது. பலர் அந்தத் தேரைப் பார்த்திருக்கமாட்டார்கள். ராஜாதிராஜர் தேர் நிறுத்தப்பட்டிருக்கும் மண்டபம் நோக்கி விரைந்தார். அரசருக்கு ஈடாக, ஏன் அவரை விட வேகமாகவும் நடக்கக்கூடியவர் பிரம்மராயர் ஒருவரே. மற்ற அதிகாரிகள் ஓட்டமும் நடையுமாக வந்தனர் என்று கூறலாம்.

தேர் நின்று கொண்டிருந்த மண்டபத்துச் சாளரங்கள் திறந்து வைக்கப்பட்டன. புத்தொளி எங்கும் பரவியது. தேரின்மீது ஒளி வீசியது. அனைவருடைய அதரங்களும் 'ஆஹா' என்ற வியப்பொலியை எழுப்பின.

அத்தகைய அழகிய தேரை அவர்கள் இதுவரை பார்த்ததில்லை. சிறிய தேர், அற்புதமான தேர் ஒன்று அந்த மாளிகையில் இருக்கிறது என்று மட்டும் சிலருக்குத் தெரியும். தேரின் அழகில் மெய்மறந்து மயங்கி நின்றிருந்த அனைவரையும் நோக்கி, பரவசமும் கம்பீரமும் பெருமையும் கலந்த குரலில், "இந்தத் தேரை இதற்கு முன்பு நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார் இராஜாதிராஜர்.

அந்தத் தேரைப் பற்றிய வரலாறு அவர்களுக்குத் தெரியாது. மாவலி வாணராயர் வியப்புடன், "எவ்வளவு தடவை நகரத்திற்கு வந்திருக்கிறேன்! கவனிக்கப்படாத இந்த மாளிகையையும் பார்த்திருக்கிறேன். ஆனால், இங்கே இப்படியோர் அழகிய தேர் இருக்கும் என்று கனவில் கூட எண்ணியது



கிடையாது. தேரின் சிற்பவேலைப்பாடுகளைப் புகழ்வதா? வைரவைடூரியங் களால் இழைக்கப்பட்ட அழகைப் புகழ்வதா? சூரிய ஒளியில் மின்னும் தங்கத் தகடுகள் வேயப்பட்ட கோபுரம் போன்ற அமைப்பைப் புகழ்வதா?" என்று வர்ணிக்கத் தொடங்கிவிட்டார்.

அரசர் புன்முறுவலுடன் விவரித்தார் :

"இந்தத் தேர் நமது சோழீசர் ஆலயத்தின் விமானத்தைப் போல் கம்பீரமாக இருக்கிறதல்லவா? இந்தத் தேரைச் செய்தவர் தேவலோகத் தச்சராக இருக்க வேண்டும். எனது அருமைச் சோழநாட்டு அதிகாரிகளே, படைத்தலைவர்களே! இந்தத் தேரின் அமைப்பை மற்றொரு முறை கவனியுங்கள். பல ஆண்டு களுக்கு முன் எனது பாட்டனார் இராஜராஜசோழதேவர், கடல் கடந்து வெகு தொலைவிலுள்ள காம்போச நாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கே பலப்பல கோயில் விமானங்கள் இத்தகைய தேரைப்போல கம்பீரமாக உயர்ந்திருப்பதைக் கண்டார். அதைப்போல் தஞ்சை மாநகரில் தாம் கட்டிய கோயில் விமானமும் சிறப்பாக உயரமாக அமையவேண்டும் என்று எண்ணினார். எண்ணியதை முடித்தார். என் பாட்டனார் வழியை என் தந்தை பரகேசரி இராசேந்திர சோழதேவரும் பின்பற்றினார். நம் நகரத்துக் கங்கைகொண்டசோழாது கோயிலும் அதன் விமானமும் அமைந்தன.

"நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்... என் தந்தை என்னைப் போல் இங்கேயே சுற்றிக்கொண்டிருக்கவில்லை. கடல் கடந்த நாடுகளுக் கெல்லாம் சென்றார். நம் நாட்டு மரக்கலங்கள் பண்டங்களை ஏற்றிக் கொண்டு நாலா திசையும் சென்றன. ஒரு சமயம் நமது வணிகர்களின் மரக்கலங்களைக் கடல்நடுவே கொள்ளையர் வழிமறித்துக் கொள்ளையிடுகிறார்களே என்ற செய்தி வந்தபோது என் தந்தை கொதித்தெழுந்தார். பெரும் படைகளுடன் சென்று கடல் கடந்த நாடுகளில் உள்ள ஒவ்வொரு அரசரிடமும் கடலில் ஏதாவது கொள்ளைக்கூட்டத்தாரால் தொல்லை ஏற்பட்டால் அவர்கள்தாம் பொறுப்பு என்று எச்சரித்துப் பணிய வைத்துத் திரும்பினார். அந்த விஜயத்தின்போது காம்போச நாட்டு அரசர் என் தந்தைக்கு நெருங்கிய நண்பரானார். அவர் தனது நல்லெண்ணத்தைப் புலப்படுத்த ஏராளமான பரிசுப் பொருள்களை அனுப்பினார். அவற்றுள் இந்த மணித்தேரும் ஒன்று.

"நாகப்பட்டினத்துறையில் ஒருநாள் பெரும் மரக்கலத்தில் இந்தத் தேர் குலுங்கிய வண்ணம் வந்து இறங்கியது. நான் அப்பொழுது சிறுவன். தேர் வந்திருக்கும் செய்தியைத் தூதவர்கள் வந்து தந்தையிடம் தெரிவித்தனர். என் தாயும், நானும், இதோ அருமைக் குருதேவரும் நாகப்பட்டினத்திற்குச் சென்றோம். மரக்கலத்திலிருந்து மிகக் கவனமாகத் தேரை இறக்கினார்கள். என் தந்தையும் தாயும் வாய்விட்டுப் புகழ்ந்த வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றன. தங்கத்தகட்டாலும் வைர வைடூரியங்களாலும் பவழ முத்து நவரத்தின மணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட இந்தத் தேரின் மதிப்பை

அரண்மனையின் பொற்கொல்லர்களும் பாண்டியநாட்டு முத்து வியாபாரிகளும் ஈழநாட்டுப் பவழ வியாபாரிகளும் வடநாட்டு வைர வைடூரிய வணிகர்களும் மதிப்பிட முடியாமல் திகைத்தனர்.

"ஏனோ என் தந்தை இந்தத் தேரை இந்த மாளிகையில் அடைத்து வைத்தார். காட்சிப்பொருளாகத் திகழும் இந்தத் தேரை நான் நாள்தோறும் பார்த்துப் பெருமூச்சு விடுவேன். பெருமூச்சு விட்டு என்ன பயன்? என் பாட்டனாரைப்போல் பெருவுடையார்க் கோயிலை அமைத்தேனா? என் தந்தையைப் போல் கங்கைகொண்ட சோழபுரத்தை நிர்மாணித்தேனா? என் புகழ் நிலைத்து நிற்க நான் என்ன செய்தேன்? ஆண்டு ஒவ்வொன்றாகக் கழிகிறதே! என் பெயர் நிலைத்து நிற்க நான் என்ன அரிய பணி செய்தேன்? வீரம் நிலைக்க ஏதாவது ஓர் வெற்றி - ஹூம்... சில ஆண்டுகளாக இந்தத் தேரை, இந்த மண்டபத்தை, மாளிகையை நான் பார்க்கவில்லை. இன்று மறுபடியும் இதைப் பார்ப்பதன் மூலம் புத்துணர்ச்சி ஏற்படுத்திக் கொள்ளவே வந்தேன்..."

மன்னர் சொல்லிக்கொண்டே போகும்போது நீலகங்கரையன் தொண்டையைக் கனைத்தவாறு, "சக்ரவர்த்திகள் தம்மை அப்படிக் குறைவாக மதிப்பிட்டுக்கொள்ளக்கூடாது. சாளுக்கியநாட்டு வெற்றி சாமான்யமானதா? கல்யாணபுரத்தில் வெற்றித்தூண் நாட்டியது ஏதாவது விளையாட்டுக் காரியமா?" என்றான்.

இராஜாதிராஜர் சோர்வு நிறைந்த சிரிப்புடன், "என்ன பலன்? மேலைச் சாளுக்கியநாட்டை வென்றேனே தவிர, அந்த நாட்டுப் பொக்கிஷத்தினின்று ஒரு சிறு கோயில் கட்டுமளவுக்குக்கூடச் செல்வம் கொண்டுவரவில்லையே! ஒரே ஒரு சிலையை எடுத்து வந்தேன். மேலைச்சாளுக்கிய ஆகவமல்லன் பெரும் படை திரட்டுகிறானாம். பழிக்குப்பழி வாங்கத் திட்டமிட்டிருக் கிறானாம். கடல்போன்ற படைகளுடன் வந்த நம்மை நிர்மூலமாக்கப் போகிறனாம். படையெடுப்பு முக்கியமா, கோயில் கட்டுவது முக்கியமா?" என்றார்.

"இரண்டுமே! படையெடுப்போம். இந்தத் தடவை சாளுக்கிய நாட்டை நிர்மூலமாக்குவோம். பொக்கிஷத்தினின்று செல்வங்களைக் கொண்டுவந்து பெரிய நகரத்தையே நிர்மாணிப்போம்" என்று ஒரு குரல் கேட்டது.

அனைவரும் குரல் வந்த திசையையே திரும்பிப் பார்த்தனர். ஜெயசிம்மன் கையை உயர்த்தி உற்சாகமாகவும் கம்பீரமாகவும் பேசினான். நீலகங்கரையன் அவனையும் அங்கு அழைத்து வந்திருந்தான்.

நீலகங்கரையன் மன்னர் அருகே சென்று, "சக்ரவர்த்திகளே! முன்பு சொன்னேனே அந்த வாலிபன் இவன்தான். சாளுக்கிய போர்த் தந்திரங்களை மிகவும் அறிந்தவன். சோழநாட்டு வெற்றியே தனது ஜீவநாடி என்று நினைத்திருப்பவன்" என்று ஜெயசிம்மனை அறிமுகப்படுத்தினான்.



இராஜாதிராஜருடைய விழிகள் ஜெயசிம்மனை ஆராய்வதுபோல் கூர்ந்து நோக்கின. "ஓ! மும்முனைத் தாக்குதல் திட்டம் தயாரித்துள்ளதாகக் கூறினாயே... அந்த வீர வாலிபனா? கோட்டைக் காவல் பாதுகாப்பை அளித்திருப்பதாகக் கூறியது இவனைப் பற்றித்தானா?" என்றார். ஜெயசிம்மனுடைய வீர வடிவம் அவருக்குப் பிடித்திருந்தது. மேலும், படையெடுப்பின் போது இப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நீலகங்கரையனிடம் தெரிவித்த திட்டமும் போர்த்திறன் மிகுந்ததாக இருந்தன.

பிரம்மராயர் குறுக்கிட்டு, "இப்போது ஒரு பகுதி படைக்குத் தலைவன். இளைஞன் வீரன் மட்டுமல்லன்... சிற்ப, சித்திர ரசிகன். இந்தப் போரில் வெற்றி பெற்றவுடன் கோயிலொன்றைக் கட்டும் பொறுப்பை இவனிடம் ஒப்படைக்கலாம். ஆனால், நான் இப்போதே சொல்லிவிட்டேன். வீரநாராயணருக்கு ஒரு பெரிய கோயில் கட்டவேண்டும், சம்மதமா? உனது பாட்டனாருக்குப் பாட்டனார் பெயரே வீரநாராயணர்... தெரியுமா?" என்றார்.

இராஜாதிராஜர் முகம் மலர்ந்தது. "குருதேவா, தங்கள் சம்மதத்தைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டுவிட்டது" என்றார்.

பிரம்மராயர் புருவத்தை உயர்த்தி, "வடக்கே படையெடுத்துச் செல்வதற்கு என் சம்மதம் கிடைத்துவிட்டது என்று சொல்கிறாயா? இப்பொழுது கூட எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை. இதுவரை சாளுக்கியநாட்டின் மீது மூன்று முறை படையெடுத்துச் சென்றாயே; அதனால் உனக்கு ஏற்பட்ட பலன் என்ன? நமது நாட்டுப் படைவீரர்களைக் களத்திலே பலிகொடுத்துவிட்டு, அங்கிருந்து பொன்னையும் பொருளையும் கொண்டுவருவதால் இழந்த உயிரை மீட்டுவிட முடியுமா? கணவரை இழந்து பெண்டிரும் மகனை இழந்த தாயும் அடைந்த துயரைத் துடைக்க முடியுமா? போர் என்றாலே மகளிர் நடுங்குகின்றனர். இம்முறை ஆகவமல்லனுடன் போர் தொடுத்துத்தான் ஆக வேண்டுமா?" என்று கேட்டார்.

ஜெயசிம்மனுக்கு ஏனோ அதிர்ச்சி ஏற்பட்டது. உலகளந்த பிரம்மராயரை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னை அவர் ஒருபுறம் புகழ்கிறார். மறுபுறம் சந்தேகக்கண்ணுடன் பார்க்கிறார். போர் வேண்டாம் என்று இங்கு வாதாடுகிறார். போருக்கான திட்டங்களைத் தயாரிப்பவர்களை உற்சாகப் படுத்துகிறார். தமக்குள்ள செல்வாக்கினால் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திவிடுவார் போல் தோன்றுகிறதே என எண்ணினான்.

நீலகங்கரையன் பேச்சில் குறுக்கிட்டான். "சக்ரவர்த்தி அவர்களே! குருதேவர் அறியாதது எதுவுமில்லை... என்றாலும் ஆகவமல்லன் மீது போர் தொடுக்காவிடில் சோழநாட்டில் அமைதி நிலவி, போரே வராது என்பது என்ன நிச்சயம்? பெரும் படைகளை ஆகவமல்லன் திரட்டிவிட்டான். எந்த நேரமும் சாளுக்கியப்படைகள் சோழநாட்டை நோக்கி வரலாம். அதற்குள் நாம்

முந்திக்கொள்ள வேண்டும். அடிபட்ட வேங்கை என்றுமே சீறிப்பாயும். படையெடுப்பு எவ்வளவு சீக்கிரம் முடிவடைகிறதோ அவ்வளவுக்கு நாம் பலனடைவோம்.''

குருதேவர் ஒன்றும் பேசவில்லை. நீலகங்கரையன் கூறியதை மறுக்கத் தக்க வார்த்தைகளை அவர் கூற விரும்பவில்லை. அவருடைய மௌனத்தைச் சாதகமாகக் கொண்ட இராஜாதிராஜர், ''குருதேவர் எப்போதும் மிக கவனத்துடன் நாமிருக்க எச்சரிக்கை செய்வார். அது போன்றே இப்போதும் கூறுகிறார். அவரது ஆசியுடன் படையெடுப்புக்கான திட்டங்களை வகுப்போம். சேனாதிபதிகளே, தண்டநாயகரே. தங்கள் அபிப்பிராயம் என்ன? முழு உதவியையும் அளிப்பதாக உறுதிகூறுவீர்களா?'' என்று கேட்டார்.

''ஒத்துழைப்போம்! ஒத்துழைப்போம்'' என்று அனைவரும் முழங்கினர். வாளை உருவி நெஞ்சுக்கு நேரே உயர்த்திப் பிடித்து, ''சோழநாட்டின் புலிக்கொடி என்றும் தாழாது பறப்பதற்கு, விஜயாலய சோழதேவர் வளர்த்த சோழவம்சம் மேன்மேலும் வளர்வதற்கு, செம்பியன் பரம்பரைச் சந்ததி ஓங்குவதற்கு, ராஜகேசரி இராஜ ராஜசோழ தேவர் திருக்குமாரர் பரகேசரி இராஜேந்திர சோழர் அவர் திருக்குமாரர் ராஜகேசரி இராஜாதிராஜ சோழதேவர் வெற்றி கண்டு எந்நாளும் புகழுடன் வாழ்வதற்கு. எங்கள் உயிர் பொருள் உடல் அனைத்தையும் அளிக்கச் சித்தமாய் இருக்கிறோம்'' என்று குரல் கொடுத்தனர்.

தேரில் கட்டப்பட்டிருந்த வெள்ளிமணிகள் கலகலவென ஓசை எழுப்பின. ஓரிரு வெளவால்கள் சடபடவென இங்குமங்கும் பறந்தன.

குருதேவர் கம்பீரமான குரலில், ''இராஜாதிராஜா! போருக்குப் புறப்படும் முன்பு சோழர்களின் பரம்பரைக் குலதெய்வம் ஆரூர் தியாகேசரைச் சென்று வணங்கும் வழக்கத்தை மறந்துவிடாதே'' என்றார். வாய் திறந்து போரை ஆதரிக்கிறேன் என்று அப்பொழுதும் அவர் கூறவில்லை.

''ஆமாம் குருதேவா! திருவாரூர் தியாகேசருக்கு விசேட அபிடேக ஆராதனைகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டேன்.'' என்றார் மன்னர். ''அன்று இராஜராஜன் நாடகம் உண்டு. தேவராஜனும், தேவராட்டியும் வருகிறார்கள். சந்நதம் பாடி ஆடப்போகிறார்கள். போர் போர் என்று கூக்குரல் இடுவார்கள். வெற்றி வெற்றி என்று தேவராட்டி முழங்குவாள். வெற்றி முழங்க எதிரொலியுடன் நமது படைகள் புறப்படும்...'' என்று மேலும் உற்சாகத்துடன் கூறினார் மன்னர்.

''போர், போர், வெற்றி, வெற்றி'' என்று முழங்கினர் அங்கிருந்தோர். ஜெயசிம்மன் வெளித்தோற்றத்திற்கு ''போர், போர்'' என்று கூவினானே அன்றி, அவன் இதயக் குரல், ''பழிக்குப்பழி!'' என்று எதிரொலித்தது.

இரவு வெகு நேரம் கழித்து குணரேகாவின் வீட்டுக்கதவை ஜெயசிம்மன் தட்டினான்.



''ஆ! நீங்களா? வாருங்கள். வாருங்கள். கனவு காண்கிறேனா? தங்களைப் பற்றியே இப்போது நினைத்துக்கொண்டிருந்தேன்'' என்று பரபரப்புடன் வரவேற்றாள்.

''குணரேகா, அன்றுபோல் வீண் பேச்சுப் பேச எனக்கு நேரமில்லை. போருக்கு நாள் குறித்துவிட்டார்கள். ஒரு சந்தோஷச் செய்தி! மன்னர்பிரான் என்னுடன் பேசினார். படையெடுப்பிற்காகத் திட்டம் வகுக்கும் பெரும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத் திருக்கிறார். குருதேவரும் என்னை நம்புகிறார். மன்னரும் பூரணமாக நம்புகிறார். என் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிவிடும். ஆனால், அந்தச் சிலை... அதை அடைந்தாக வேண்டும். அதன் பொறுப்பு உன்னிடம்... என்ன செய்திருக்கிறாய்? அதைக் கேட்கவே வந்தேன்...'' என்றான் ஜெயசிம்மன் நின்றவாறே.

ஜெயசிம்மனை அந்த நேரத்தில் பார்த்ததால் ஏற்பட்ட மன நெகிழ்ச்சியும் அவன் தெரிவித்த செய்தியால் ஏற்பட்ட மன மகிழ்ச்சியும் சேர்ந்து அவள் உணர்ச்சியைத் தூண்டவே, ஜெயசிம்மன் எதிர்பாராத நிலையில் திடீரென்று அவனை ஆரத்தழுவி, அவன் இதழ்களில் தன் அதரங்களைப் பதித்து ''சிலையைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள் என் இளவரசே! என் உயிரைக் கொடுத்தேனும் அதை மீட்பேன்'' என்றாள்.

ஜெயசிம்மன் அவளது செய்கையை வெறுத்து உதறித்தள்ளி தன்னை விடுவித்துக்கொண்டு, ''என்னைப் பற்றி மிகவும் புகழ்ச்சியாகச் சித்திர வல்லியிடம் கூறிய நீ இப்படி எனக்குக் களங்கம் ஏற்படுத்தலாமா? ராம பிரானைப் போன்றவன் என்று பாராட்டிய நீ சூர்ப்பனகையாக ஏன் மாறுகிறாய்? குணரேகா! துவாரபாலகர் சிலையை அப்புறப்படுத்த ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதை நிறைவேற்ற நீ ஒத்துழைக்க வேண்டும். அதை விடுவித்து என் மேல் மோகங்கொள்வதை விட்டுவிடு'' என்று கோபமாகப் பேசினான்.

குணரேகா அவனிடமிருந்து விலகி, ''சித்திரவல்லியை நீங்கள் சந்தித்தீர்களா? அவளிடம் அப்படிப் பேசியது உண்மைதான். ஆனால், எனக்கென்னவோ கவலையாயிருக்கிறது... அவளுடைய காதல் வெற்றி யடைந்து விடுமோ என்று நினைக்கிறேன்...'' என்றாள். தாபத் தணல் அவளுடலைப் பொசுக்கிக்கொண்டிருந்தது.

''சித்திரவல்லியின் காதல் தெய்வீகமானதுதான். ஆனால், என் இதயத்தை மாற்றத் தெய்வத்தாலும் முடியாது. ஒரு காரியத்திற்காக அவளைக் காதலிப் பதைப் போல் நடித்தேன். நாடகம் முடிவடையும் வேளை வந்துவிட்டது. படைகளுடன் நான் வடக்கே சென்று விட்டால் அவள் யாரோ நான் யாரோ,'' என்றான்.

குணரேகா தன் உதடுகளை மெல்ல மடித்துக் கொண்டாள். ஜெயசிம்மன் பொய் சொல்கிறான் என்று எண்ணினாள். அதைப் புலப்படுத்திக்கொள்ளாமல் ''நான் என்ன செய்ய வேண்டும் கட்டளையிடுங்கள்'' என்றாள்.

"குணரேகா! இன்னும் மூன்று நாள்களில் சோழச் சக்ரவர்த்தி திருவாரூர் செல்கிறார். அது சமயம் அந்தச் சிலையை அப்புறப்படுத்தி விடவேண்டும். அதற்கான திட்டத்தை நாளை கூறுகிறேன்," என்றான்.

குணரேகா தலையசைத்தாள். என்றாலும் அவள் ஏனோ சிரித்துக் கொண்டாள். கல்யாணபுரத்தில் இந்த நேரத்தில் ஏற்படும் விளைவுகளை எண்ணும்போது ஜெயசிம்மனை ஒருவிதத்தில் பழிவாங்கிவிட்டோம் என்று சிரிப்பு வரத்தான் செய்தது.

## 11

கல்யாணபுரத்து மாளிகையின் அந்தப்புரத்தில் தேவகிதேவி, கங்கை கொண்டசோழபுரத்தினின்று வந்த லிகிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அந்த ஓலையிலுள்ள எழுத்துகள் ஒவ்வொன்றும் ஜெயசிம்மனே நேரே பேசுவது போல் தோன்றின. அந்த லிகிதத்திலுள்ள செய்தியைப் படிக்குமுன்பு அதைக் கொண்டு வந்தவரைச் சில கேள்விகள் கேட்டாள்.

"இந்த ஓலையை நேரே அவரிடமிருந்தே கொண்டு வருகிறீர்களா?"

"ஆமாம், தேவி. அவரிடமிருந்தே, ராமேச்வரம் சென்று கடலாடி விட்டு வரும்போது முன்பே ஏற்பாடு செய்தபடி செய்தியைப் பெற்று வருகிறேன். மன்னர்பிரானுக்கு ஒரு செய்தி. தங்களுக்கு ஒன்று. தங்களிடம் நேரடியாகவே சேர்ப்பிக்குமாறு அவரது கட்டளை..."

செய்தி கொண்டுவந்தவர் சொல்லும்போது தேவகிதேவிக்கு மெய்சிலிர்த்தது. இன்னும் இன்னும் அவரைப் பற்றிய செய்திகளைக் கேட்க வேண்டும்போல் ஆவல் ஏற்பட்டது.

பிரிவு - அதைப் போன்றே பொல்லாத கூற்றுவன் இந்த உலகில் வேறு கிடையாது. தனக்கு ஏற்பட்டது போன்ற பிரிவாற்றாமை வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக்கூடாது என்று தெய்வத்தை வேண்டிக் கொண்டாள்.

திருமணம் ஆன மறுவாரமே ஜெயசிம்மன் கல்யாணபுரத்தை விட்டுப் புறப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதே நிலா முற்றம்... ஜெயசிம்மன் வேகமாக வருகிறான். நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையைத் தேவகி தன் மெல்லிய துகிலினால் துடைக்கச் செல்கிறாள்.

"இதுபோன்ற வியர்வையையும் குருதித்துளிகளையும் துடைப்பதற்கு நேரங்கூட இல்லாமல், இரவு பகலென்று கருதாமல் பணியாற்றச் செல்கிறேன். தேவி, மகிழ்ச்சியோடு விடைகொடு. உல்லாசமாகக் கழிக்கவேண்டிய நேரத்தில் உன்னைப் பிரிந்து துயரத்தை அள்ளித் தந்து செல்கிறேன்" என்று கூறி விடைபெற்றபோது தேவகியின் முகத்தில் வருத்த ரேகைகள் முதலில்



படர்ந்தன. பிறகு தன் கணவர் நாட்டின் அவமானத்தைத் துடைக்கும் பெரும் கடமையை மேற்கொண்டு செல்கிறார் என்பதை உணர்ந்தவுடன் மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தனுப்பினாள்.

இப்போது லிகிதத்தைப் பார்க்கும் போது அவருடைய இனிய முகம் கண் எதிரே தோன்றுகிறது. ஓலையிலுள்ள செய்தியைப் படிக்கும் முன்பு ஓலையைக் கொண்டுவந்தவரிடம் மேலும் பேச்சுக் கொடுத்து, செய்தியை அவர் வாய்மூலம் அறிய விரும்பினாள்.

"அவர் நலமுடனிருக்கிறாரா?" என்று தேவகி கேட்டாள். மண்ணிலும் கல்லிலும் படுத்துறங்குகிறாரோ என்ற கவலை அவளுக்கு. அவர் உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற கவலை.

"மகிழ்ச்சியுடனிருக்கிறார். உற்சாகமாக இருக்கிறார்...." என்று கூறிய அவர் மிக்வும் பணிவான குரலில், "தேவி, கங்காபுரியை விட்டுத் தங்கள் கணவர் இனித் திரும்ப வழியே இல்லையா? நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பது உயர்ந்த செய்கைதான். அதற்காகச் சோழநாட்டில் காலாகாலத்திற்கும் இருந்தாக வேண்டுமா?" என்று கேட்டார்.

தேவகிக்குப் பெருமையாக இருந்தது. "ஆமாம், விரோதியின் நாட்டில் பெரும் படையில் முக்கியப் பதவியை வகிப்பவர் என்றைக்கும் அங்கேயே இருப்பவர்போல் தோன்றுமாறு செய்வது நியாயம்தானே? நீங்கள் அதுபோல் நம்பும் வகையில் அவர் சோழ நாட்டவர்போல் இருக்கிறார் என்றால் வெற்றி அவருடையதுதானே? தமது நாட்டைக் காப்பாற்றும் கடமையில் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் அங்கு இருக்கிறார் என்றால், இந்த மாங்கல்ய பலம்தான் அவரைக் காப்பாற்றுகிறது" என்று பெருமையுடன் கூறினாள். ஜெயசிம்மன் மீது அழிக்கமுடியாத அன்பு தேவகிக்கு. விரும்பிய வண்ணம் மணம் புரிந்துகொண்ட பெருமை அவளுக்கு.

செய்தி கொண்டுவந்தவர் நகைத்தார். "தேவி! நீங்கள் மாங்கல்யத்தைத் தொட்டுக் கணவரை வேண்டிக்கொள்வது போல் மற்றொரு பெண் தனது மாங்கல்யத்தைத் தொட்டுத் தன் கணவர் கங்கைகொண்டசோழபுரத்தை விட்டு நகரக்கூடாது என்று வேண்டிக் கொள்கிறாளே... இரண்டு மாங்கல்யத்தில் எந்த மாங்கல்ய பலம் வெல்லும்?" என்று கேட்டார்.

தேவகி திடுக்கிட்டாள். "இரண்டு மாங்கல்யமா? பெண்கள் இரண்டு மாங்கல்யம் அணிவது சகஜந்தான். நீங்கள் எதைச் சொல்லுகிறீர்கள்?..."

எதையோ சொல்வதற்குத் தயங்குவதுபோல் பாவனை செய்த அவர், "நான் அதைச் சொல்லவில்லை தேவி. தங்களைப் போன்றே ஜெயசிம்மனிடம் உயிரையே வைத்திருக்கும் மற்றொரு பெண் மாங்கல்யம் அணியத் துடிக்கும் மங்கையைச் சொல்கிறேன்" என்றார்.

தேவகி குழம்பினாள்: "மற்றொரு பெண்ணா...? என்ன சொல்கிறீர்கள்? அவருக்குத் திருமணமாகிவிட்டதா?"

''தேவி! நான் கங்கைகொண்டசோழபுரத்தில் இரண்டு நாள்கள் தங்கியிருந்தேன். போர்க்கலன்கள் செய்யும் தொழிலாளியின் மகள். அழகானவள். அரச குடும்பத்தில் பிறந்திருந்தால் அரசியாவதற்குத் தகுதி வாய்ந்தவள். அவள் எப்படியோ தங்கள் கணவரைத் தன் வலையில் வீழ்த்திவிட்டாள். எனக்குப் பயமாகக் கூட இருக்கிறது. இளவரசரின் உண்மை நிலை அறிந்து அவரைத் தக்க சமயத்தில் காட்டிக்கொடுத்துவிட இப்படி அவள் மயக்கி இருக்கிறாளோ என்றுகூட நான் அஞ்சுகிறேன். ஜெயசிம்மன் கங்கைகொண்ட சோழபுரத்தை விட்டுப் போகவேகூடாது என்று அவள் தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொள்கிறாள். அதனால்தான் கேட்டேன், எந்த மங்கையின் பலம் வெல்லும் என்று.''

தேவகி தன் இதயத்தில் விழுந்த தாக்குதலை வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல், ''ஐயா, என் கணவர் அப்படியே மற்றொரு பெண்ணை மணந்து இருந்தாலும், அல்லது மணந்து கொள்வதாக நடித்தாலும் தன் காரியத்தை நிறைவேற்றத் தான் இருக்கும். ஒரு நாளும் அவள் பலம் வெல்லாது. என்மீது அவர் தம் உயிரையே வைத்திருக்கிறார். என் பிரார்த்தனை வெல்லும்...'' என்று கூறும்போது சொற்கள் சரியாக வரவில்லை.

பிறகு ஓலையைப் பிரித்துப் படித்த தேவகிக்குத் தெம்பு வந்தது. ஜெயசிம்மன் தன் உணர்ச்சிகளைக் கொட்டி எழுதியிருந்தான். சோழ நாட்டினின்று படைகள் விரைவில் புறப்படப் போவதைப் பற்றியும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து அவை வரப்போவதைப் பற்றியும் எழுதியிருந்தான். ஒரு பிரிவுக்குத் தான் தலைமை வகித்து வரப்போவதாகவும், கல்யாணபுரம் வருவதற்குச் சில காத தூரத்திற்கு முன்பே தான் மறைந்துவிடப் போவதாகவும் பிறகு சோழர்படைகளை நிர்மூலமாக்கும் திட்டங்களை மன்னருக்குத் தெரிவிப்பதாகவும் எழுதியிருந்தான். தான் வரும் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கு மாறும் அங்கு வந்த பிறகு ஒரு நாளும் பிரியப்போவதில்லை என்பதையும் தெரிவித்திருந்தான். அங்கு வந்த பிறகு, சோழர் படைகள் நிர்மூலமான பிறகு, தன் சகோதரரிடம் நாட்டை இரண்டு பாகமாகப் பிரித்துத் தருமாறு கேட்கப்போவதாகவும், ஒரு பகுதிக்குத் தான் அரசனானால் தேவகிதேவி தான் அரசி என்று பெருமையாகவும் எழுதியிருந்தான்.

தேவகி அந்த ஓலையை மார்புடன் அணைத்துக்கொண்டாள். சோழ நாட்டில் வேறு ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டிருந்தால் இவ்வாறு எழுதுவாரா?

அந்த ஓலையை எடுத்துக்கொண்டு அரசியிடம் விரைந்தாள்.

அரசியிடம் ஓலைச்சுருளை நீட்டினாள். மன்னர் ஆகவமல்லனும் அருகே இருந்தார். அரசி ஓலையை மன்னரிடம் கொடுத்தாள். தேவகி, தான் சந்தேகப்பட்டவற்றை அரசியிடம் தெரிவித்தாள்.



ஆகவமல்லன் முகத்தில் புதுக்களை பிறந்தது. தேவகிதேவி எழுப்பிய ஐயப்பாட்டையோ, பாதி ராஜ்யம் கேட்கப்போவதாக ஜெயசிம்மன் எழுதியதைப் பற்றியோ அவர் கவலைப்படவில்லை. ஜெயசிம்மன் படைகளுடன் வருவதைப் பற்றிய செய்தியை அறிந்து மகிழ்ந்தார். விவரமாக மற்றொரு லிகிதத்தை எதிர்பார்த்திருந்தார்.

அவர் எதிர்பார்த்தவாறே ஜெயசிம்மனிடமிருந்து மற்றொரு ஓலை வந்தது. குணரேகா அனுப்பிய செய்தியும் வந்து சேர்ந்தது. ஜெயசிம்மன் சோழநாட்டு மங்கை மீது மையல் கொண்டிருக்கும் செய்தியை அவளும் எழுதியிருந்தாள்.

தேவகிதேவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உடனே தன் தந்தைக்கு விவரத்தை எழுதியனுப்பினாள். அவள் தந்தை வேங்கிநாட்டுப் படைத்தலைவர்.

ஆகவமல்லனுடைய தேவி - அரசிக்கோ நாட்டை இரண்டாகப் பிரிக்குமாறு கேட்கப்போவதாக ஜெயசிம்மன் எழுதியிருப்பதைப் பற்றிப் பெரும் கவலை ஏற்பட்டது.

உடனே தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகளை வரவழைத்தாள். ஜெயசிம்மனின் நாட்டைப் பிரிக்கும் ஆசையை முறியடிக்க ரகசியமாகத் திட்டம் வகுக்கலானாள்.

குணரேகா எதிர்பார்த்தபடியே கலியாணபுரத்தில் அவளுடைய ஓலையும் செய்தி அனுப்பியவர் கூறிய தகவலும் தகுந்த குழப்பத்தை ஏற்படுத்திவிட்டன. சிற்பக்கூடத்திற்கு அன்று அவள் திருப்தியுடனேயே சென்றாள். ஜெயசிம்மனிடம் வாக்களித்தபடி அந்தச் சிலையை தாராசுரத்திற்கு எடுத்துச் செல்வதை நிறுத்தியாக வேண்டுமே...

குணரேகாவின் வருகை அந்தச் சிற்பக்கூடத்தில் பெரும் கலகலப்பை ஏற்படுத்தியது. தத்தம் பணிகளில் ஈடுபட்டிருந்த சிற்பிகள் சிற்றுளி முகத்தை நிறுத்தி விட்டு உயிருள்ள சிற்பம் போல் நடந்து செல்லும் குணரேகாவின் ஒயிலான நடையைக் கவனிக்கலாயினர். அவள் அங்கங்களை மனத்திற் குள்ளேயே வர்ணித்துக்கொண்டனர் சிலர்.

அவள் நடந்து செல்லும் பின்னழகைச் சிலர் கண்டு பெருமூச்சு விட்டனர். அவளிடம் பேசி இன்பமடைய விரும்பிய இளஞ்சிற்பி யொருவன் ஏதோ கூறுவதற்கு அவளை நெருங்கினான்.

''குருநாதர் வெளியே சென்றிருக்கிறார்'' என்று அவன் அவளருகே சென்று பேச்சைத் தொடங்கினான். குருநாதர் என்று கூறியது சிற்பக்கூடத் தலைவரை.

பின்னர் சுற்றுமுற்றும் விழியைச் சுழலவிட்டு, ''சில நாள்களுக்கு முன் இங்கே ஒரு சிற்பத்தை உங்கள் குருநாதர் அழகுபடுத்திக் கொண்டிருந்தாரே...'' என்று கேட்டாள்.

"ஓ! அதுவா... இன்று காலைதான் கண் திறந்தார்" என்று ஒரு சிற்பி கூறினார்.

"கண் திறந்தாகிவிட்டதா?" என்று திடுக்கிட்டவாறு கேட்டாள் குணரேகா. கண் திறப்பது என்பது சிற்பத்தில் கடைசியாகச் செய்யும் பணி. கண் திறந்து விட்டால் சிற்பம் முடிவடைந்தாற்போல.

"ஆமாம். மிகவும் நேர்த்தியாக அமைந்துவிட்டது" என்று பேச்சைத் தொடர்ந்தான் இளஞ்சிற்பி.

"எங்கே, நான் பார்க்கலாமா? திருஷ்டிபட்டுவிடுமா..." என்று கேட்டாள் குணரேகா.

"உங்கள் அழகிய பார்வை பட அது கொடுத்து வைத்திருக்க வேண்டுமே..." என்று கூறிய சிற்பி ஒருவர் அவளை அந்தச் சிற்பமிருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார். மற்ற சிற்பிகளும் குணரேகாவின் ஸ்பரிசம் படுவதுபோல் இடித்து மோதிக்கொண்டு சென்றனர்.

கல்யாணபுரத்தினின்று கொண்டுவந்த துவாரபாலகர் சிலையைப் போன்று அமைந்திருந்த அந்தச் சிற்பத்தைச் சிற்பி மிகவும் அழகாகச் செய்திருந்தார்.

"ஆகா! மிக அற்புதம்!" என்றாள் குணரேகா. "உங்கள் சிற்பியின் திறமையே திறமை!" என்று புகழ்ந்தாள்.

பல்லை இளித்த ஒரு சிற்பி, "தங்களைப் போன்ற அழகிய சிற்பமொன்று செய்ய எங்கள் குருநாதருக்கு நீண்ட நாட்களாக ஆசை" என்றார். மற்ற சிற்பிகள் அவனைக் கொன்று விடுவதுபோல் பார்த்தனர்.

"ஏன்... உங்கள் குருநாதருக்கு தான் அத்தகைய ஆசையோ... உங்கள் ஒருவருக்குமில்லையோ... என்னைப்போல் நீங்கள் சிலையைச் செய்யுங்களேன்..." என்று குணரேகா சொல்லாலேயே மோகனாஸ்திரத்தை வீசினாள்.

"வேண்டாம்.... வேண்டாம். யானை.... ஆளி... குதிரை இவற்றைச் செய்யத்தான் இவனுக்குத் தெரியும். உங்களைப் போல் செய்கிறேன் என்று கூறிப் பத்திரகாளியை உருவாக்கிவிடுவான்" என்று ஒரு சிற்பி கூறவும் மற்றவர் சிரித்தனர்.

"ஆமாம்... வடக்கே இருந்துகொண்டு வரப்பட்ட சிலையைப் பார்த்துச் செய்ததுதானே இந்தச் சிற்பம்? அந்தச் சிற்பத்தைப் பார்த்தால்தான் இந்தச் சிற்பத்தின் பெருமை புலப்படும். எங்கே அந்தத் துவாரபாலகர் சிலை...?" என்று கேட்டாள் குணரேகா.

சிற்பிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். குணரேகா ஏதும் தெரியாமல் திகைத்தாள்.



"ஏன்... அந்தச் சிற்பம் எங்கே? அதற்கு என்ன ஆயிற்று?" என்று கவலையுடன் கேட்டாள்.

சிற்பிகள் அனைவரும் குணரேகாவை ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கே, துவாரபாலகர் சிற்பம் வைக்கோல் கொண்டு மிகவும் ஜாக்கிரதையாகச் சுற்றப்பட்டு இருந்தது.

"இந்தச் சிலையை சர்வ ஜாக்கிரதையாக எடுத்துச்செல்லுமாறு கட்டளை வந்திருக்கிறது. அதனால், சிலை பின்னப்படாமலிருக்க வைக்கோலைச் சுற்றி இருக்கிறோம்" என்றார் சிற்பி ஒருவர்.

குணரேகா பரபரப்படைந்தாள். ஜெயசிம்மனிடம் தான் அளித்த வாக்குறுதி என்ன ஆவது? சிலையைக் கொண்டுசெல்லப் போகிறார்களாமே!

"சிலையை எங்கே கொண்டுசெல்கிறார்கள்?" குணரேகா கேட்டாள்.

"தெரியாது. தஞ்சைக்கோ, திருக்குடந்தைக்கோ..."

"எப்போது எடுத்துச் செல்லப்போகிறார்கள்?..."

"இன்று மாலை!"

குணரேகா அங்கே நிற்கவில்லை. ஜெயசிம்மனைத் தேடி விரைந்தாள். எங்கெல்லாமோ சுற்றிக் கடைசியில் ஜெயசிம்மனைக் கண்டுபிடித்தாள். சிலை எடுத்துச்செல்லப்படப் போகும் செய்தியைக் கூறினாள்.

"சிற்பியின் வீட்டினின்று அதைக் கொண்டுசெல்லாமல் எப்படித் தடுப்பது?" என்று கவலையுடன் கேட்டாள் குணரேகா.

"சிற்பியின் வீட்டினின்று செல்வதைத் தடுக்க முடியாது. செல்லுமிடத்தை அது அடையாதபடி தடுக்கலாம்..." என்றான் ஜெயசிம்மன்.

"எப்படி?"

"அதை இப்பொழுது விவரிக்க முடியாது. குணரேகா... இனி எல்லாம் கவனத்துடன் நடைபெற வேண்டும். இன்னும் இருநாள்களில் சோழர்படைகள் கங்காபுரியைவிட்டுப் புறப்படப் போகின்றன. நீயும் இனி இங்கிருப்பது சரியன்று. மன்னரும் மற்றவர்களும் திருவாரூருக்குச் சென்றிருக்கும் சமயம் நீ இங்கிருந்து தப்பிவிடுவதுதான் சரியென்று தோன்றுகிறது. யாத்திரிகர்கள் குழு ஒன்று நாளை வடக்கே செல்கிறது. அவர்களுடன் சென்றுவிடு..." என்றான் ஜெயசிம்மன்.

"சிலை?" குணரேகா கவலையுடன் கேட்டாள்.

"நான் பார்த்துக்கொள்கிறேன்..."

"நீங்கள்..." குணரேகாவின் கவலை அதிகரித்தது.

"நான்தான் ஒரு பிரிவுப் படைக்குத் தலைமை தாங்கிச் செல்லப் போகிறேன். யானைப்படைகளின் எண்ணிக்கை, குதிரைப் படைகளின்

எண்ணிக்கை, இவை எனக்குத் தெரிய வேண்டும். சித்திரவல்லி இன்று எண்ணிக்கையைத் தெரிவிப்பாள்..."

"படைகளின் கணக்கு அவளிடம் இருக்கிறதா?" குணரேகா ஏளனமாகக் கேட்டாள்.

"இல்லை... இல்லை... அந்தந்தப் படைகளுக்கு அளிக்கப்பட்ட வேல், ஈட்டி இவற்றின் எண்ணிக்கை அவளிடமிருக்கிறது..."

"ஓ! அதை அறியத் தான் இவ்வளவு காதல் நாடகமா?" குணரேகா கேட்டாள்.

"நாடகமா... பாவம் சித்திரவல்லி... அவள் காதலை உண்மை யாகவே ஏற்றால் என்ன என்று தோன்றுகிறது. கல்யாணபுரத்தில் தேவகிதேவி சம்மதிக்கமாட்டாளே?" என்று பெருமூச்சுவிட்டான் ஜெயசிம்மன்.

குணரேகாவின் இதயத்தில் எரிமலை வெடித்தது.

## 12

சோழமாளிகையின் மந்திராலோசனை மண்டபத்தைப் பார்த்து ஜெயசிம்மன் பிரமித்துப்போனான் என்றே சொல்ல வேண்டும். அகன்ற கூடமும் நூற்றுக்கணக்கானவர் ஒரே சமயத்தில் அமர்ந்து பேசத்தக்க இருக்கைகளும், சக்ரவர்த்தி அமர்வதற்கு உயர்ந்த பீடமும் சிற்பவேலைப் பாடமைந்த தூண்களும்... தலையை உயர்த்திப் பார்த்தான். மிக உயரத்தில் தெரியும் விதானமும் விதானத்தினின்று தொங்கிக்கொண்டிருந்த தோரணங் களும் இயற்கையாகக் காற்று தங்கு தடையின்றி வீச அமைந்திருந்த காலதர்களும், பகலவன் ஒளியைச் சீராக அளிக்கத்தக்க பலகணிகளும் சோழநாட்டின் பெருமைக்குச் சான்றாகத் திகழ்ந்தன. பெருமை தரும் அந்தக் கூடம் ஜெயசிம்மன் உள்ளத்தில் பொறாமையைப் பொங்கச் செய்தது.

வழவழப்பான சுண்ணாம்புக்காரை பூசப்பட்ட சுவரில் சோழர்குலத் திலகங்களின் உருவச் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. அவர்கள் நிகழ்த்திய போர்க்காட்சிகள் சிறப்பாக இடம் பெற்றிருந்தன. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே அவன் வந்துவிட்டபடியால் சுவர் ஓவியங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தான். எல்லாச் சித்திரங்களும் சோழர்கள் பாண்டியரை வென்றதையும் பல்லவ கடைசி அரசனை யானை மீது கொன்றதையும் வேங்கியை அடிமைப்படுத்தியதையும் சேரரைப் பணிய வைத்ததையும் கங்கநாட்டவரைக் கப்பம் கட்டச் செய்ததையும் சித்திரித்தன.

அவன் எதிர்பார்த்த அந்த ஓவியமும் இருந்தது. சாளுக்கியரின் மானம் மரியாதையைப் போக்கிவிடும் ஓவியத்தைக் காணக் காண ஆத்திரம்



பொங்கியது. வெளியே புலப்படுத்தாமல் அடக்கிக் கொண்டான். இன்னும் சில நாள்கள்தாம்... சோழர்குலத்துக்கே முடிவு ஏற்படுத்தும் வரையில் சகித்திருக்க வேண்டியதுதான்.

பொழுது விடிந்தால் இராசாதிராசரும் அவரது இரு இளவல்களும் திருவாரூருக்குச் செல்லப்போகிறார்கள். அதற்கு முன்பு இன்று இரவே படைகள் புறப்படும் நாள், நேரம், சில போர்த்தந்திரங்கள் மற்றும் முக்கிய ஆலோசனைகள் நடத்த மந்திராலோசனை சபை கூட்டப்பட்டிருந்தது.

சோழநாட்டின் முக்கியமானவர்கள் நிறைந்துள்ள சபையில் தன்னையும் அழைத்திருப்பது முதலில் சற்று அச்சத்தை அளித்தது. தனது வேடம் கலைந்து விட்டால்... அதை நினைக்கவே அவனுக்கு முடியவில்லை. புலிக்குகைக் குள்ளேயே நுழைந்துவிட்டோமே என்று ஒரு கணம் கவலைப்பட்டான். அடுத்த கணம் படையெடுப்பைப் பற்றி ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைக் கூறுவதைக் கேட்கும் போது கவலை கலைந்தது.

இராசாதிராச சோழதேவர் அருகே அவரது தம்பிகள் இருவரும் அமர்ந்திருந்தனர். குணரேகா வர்ணித்தாளே அது மிகவும் சரியாகத் தானிருந்தது. ஜெயசிம்மன் இமைக்காமல் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். சோழர் பரம்பரைக்குள்ள வீரமும் உடன்பிறந்த செருக்கும் போர் போர் என்று தினவெடுக்கும் தோள்களும் வைர வைடூரிய கோமேதக ரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஒளிவீசும் மகுடமும் பரந்த மார்புடன் உறவாடும் முத்துமாலை களும் கொண்டு மன்னாதி மன்னர்களாய் அவர்கள் வீற்றிருப்பதைக் காண ஜெயசிம்மனுக்குக் குருதி கொதித்துக்கொண்டிருந்தது. சோழர்குல மூன்று வித்துக்களையும் கூண்டோடு நசுக்கப்போகிறோம் என்று எண்ணும்போது சற்றுக் கம்பீரமாகக் கூட அவன் விளங்கினான்.

அவன் யோசனையை இராசாதிராசர் ஏற்றுக்கொண்டு விட்டார். இவ்வளவு பேர் இருக்கும் போது ஜெயசிம்மன் யோசனையை அவர் ஏன் கேட்டார்? அப்படியே ஏன் ஏற்றார்? சோழர் படைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிந்து செல்லுமாறு ஆணையிட்டான். யானைப் படைகளுக்கு மன்னர் தலைமை வகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். கல்யாணபுரத்தை ஒரே ஒரு பக்கமாகத் தாக்குவதைப் போல் பாசாங்கு செய்து, சாளுக்கியப் படைகள் வந்து எதிர்க்கும் போது மற்ற இருமுனைப் படைகளும் சூழ்ந்துகொள்ள வேண்டும் என்றான். இளவரசர் இருவரும் ஒவ்வொரு முனைப் படைகளுக்குத் தலைமை தாங்கவேண்டும் என்றான். இராசாதிராசருக்குக் கிடைத்த தகவலின்படி வாழ்வா அல்லது மரணமா என்ற இறுதி யுத்தத்திற்குத் ஆயத்தமாகும் சாளுக்கியப் படைகளை நிர்மூலமாக்க ஜெயசிம்மனின் யோசனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது.

அவருக்கு அது வெற்றி தரும் திட்டம். ஜெயசிம்மனுக்கோ சோழப் பரம்பரையையே அழிக்கப்போகும் திட்டம். ஒவ்வொருவரும் தத்தம்

கருத்தினைக் கூறித் திட்டம் வகுத்து முடிய இரவு நடுநிசிக்கு மேலாகிவிட்டது. ஜெயசிம்மன் உள்ளம் முழு நிறைவுடனிருந்தது.

தன் இருப்பிடம் சென்ற ஜெயசிம்மன் உறங்க முயன்றான். உறக்கம் வரவில்லை. காலையில் சித்திரவல்லியைச் சந்திக்க வேண்டும் எனும் ஆவல் அவனுள்ளத்தில் நிறைந்திருந்தது.

அதே வேளையில் சிற்பக்கூடத்தின் வாயிலில் இரட்டைக் காளைகள் பூட்டிய வண்டியொன்று நின்றிருந்தது. பெருமுயற்சியுடன் பலர் சேர்ந்து கல்யாணபுரத்துத் துவாரபாலகர் சிலையை வண்டியில் ஏற்றிவிட்டனர். பிரம்மராயர் கைத்தடியை அசைத்தவண்ணம் தலைமைச் சிற்பியிடம் ஏதோ கூறினார். அவர் யார் வருகைக்காகவோ காத்திருப்பது போல் தோன்றியது. சக்ரவர்த்தியுடன் திருவாரூருக்குச் செல்லவில்லை. முதல்நாள் இரவு மந்திராலோசனைக் கூட்டத்திற்கும் வரவில்லை. ஆனால், அவர் இரண்டு நாள்களாகச் சுறுசுறுப்பாக இயங்கி வந்தார்.

அவர் எதிர்பார்த்தபடி குணரேகா அங்கு வந்து விட்டாள். மலர்ந்த முகத்துடன், அவளை வரவேற்று நலன் விசாரித்தார். அவள் கலைத்திறனைப் பாராட்டினார். நகரமக்கள் அவளைப் பற்றி உயர்வாகப் பேசிக்கொள்வதையும் சக்ரவர்த்தியின் செவியிலும் அவள் திறமை விழுந்துவிட்டதையும் கூறி, "குணரேகா, சக்ரவர்த்திகள் உனது திறமையைக் கேள்விப்பட்டவுடனேயே ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். அண்மைக் காலமாகத் திருக்குடந்தை அருகிலுள்ள இராசராசபுரத்து ஐராவதேச்வரர் கோயிலைப் பிரபலப்படுத்த வேண்டும் எனும் எண்ணம் அவருக்குத் தோன்றியிருக்கிறது. ஏராளமான பொன்னும் பொருளும் அளித்திருக்கிறார். அந்தக் கோயிலுக்கே செலவிடப் போகிறார். கங்கைகொண்டசோழீசருக்கு நடைபெறும் ஆறுகால பூசை, நைவேத்யம், மற்றும் நடன, நிருத்ய, வாத்ய கோஷங்கள் போல் அங்கும் நடைபெற வேண்டும் என்பது சக்ரவர்த்திகள் திருவுள்ளம். நடன மாதர்கள் பலர் அங்கு செல்ல வேண்டும். அவர்களுள் நீ தலைமைப் பெண்டிராக இயங்க வேண்டும் என்பது அவர் விருப்பம். இன்றே நீ தாராசுரம் புறப்பட்டுச் செல்ல வேண்டும். அதற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் உடனே அளிக்கப்படும்" என்று கட்டளை போல் தெரிவித்தார்.

அவளுடைய மறுபேச்சை எதிர்பாராமலேயே யாரையோ கூவி விளித்து, "இளஞ்சென்னியை அழைத்து வரச் சென்றது யார்? நேரமாகிறதே!" என்று கேட்டார்.

கேட்டு முடிப்பதற்குள் இளஞ்சென்னி வந்து வணங்கினான்.

"இளஞ்சென்னி, நீ புறப்படப் போவதை உன் மாமாவிடம் தெரிவித்து விட்டாயல்லவா?" என்று கேட்டார்.



"சொல்லிவிட்டேன் சுவாமி" என்று பயபக்தியுடன் கூறினான் இளஞ்சென்னி.

"இந்த வண்டியில் விலைமதிப்பற்ற பொக்கிஷம் உள்ளது. தாராசுரத்திற்குக் கொண்டு சேர்க்கவேண்டிய பொறுப்பு உன்னுடையது" என்று பிரம்மராயர் அவன் முகத்தை உற்றுப் பார்த்தவாறு உத்தரவிட்டார்.

"ஏன் சுவாமி, சிலையை அங்கே சேர்ப்பித்துவிட்டுப் போர்க்களம் செல்லலாமல்லவா?"

பிரம்மராயர் மெல்ல நகைத்தார். "நீ போய்த் திரும்புவதற்குள் நமது படைகள் வடபெண்ணையைத் தாண்டிவிடும். ஏன், சித்திரவல்லி ஏதும் சொன்னாளா?"

"படைகளுடன் செல்லப்போவதாகப் பெருமையுடன் கூறியிருந்தேன். அது நடைபெறப்போவதில்லை என்றவுடன் அவளுக்கு ஏளனம். மேலும் அவள் மனத்தைக் கவர்ந்த ஜெயசிம்மன், சக்ரவர்த்திகளுடன் செல்கிறானாம். அவளுக்குப் பெருமை. சுவாமி, நான் கேட்கிறேனேயென்று தவறாக நினைக்காதீர்கள். நேற்று வந்த அந்த அந்நியனுக்கு என்ன அவ்வளவு பெரிய அந்தஸ்து?" இளஞ்சென்னியின் குரலில் ஏக்கமும், கவலையுமிருந்தன.

"அந்நியன், நம் நாட்டவன் என்று பிரிக்கக்கூடாது இளஞ்சென்னி. அவனிடம் திறமை இருக்கிறது. சாளுக்கிய நாட்டுப்போர் முறைகளை அறிந்தவன். அதனால் அவனைப் பயன்படுத்திக்கொள்கிறோம். சிலை, சிற்பம் என்றால், ஜெயசிம்மனுக்குப் பைத்தியம். போர்க்களம் செல்லாமல் தாராசுரம் செல்கிறேன் என்று எங்கே சொல்லிவிடப் போகிறானோ என்று உன்னை அனுப்புகிறேன். இந்த வண்டியில் இருப்பது சோழநாட்டின் வெற்றிச் சின்னம். மிகவும் ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்த்து விடு. இதை ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்ச் சேர்த்தாலே நாம் போரில் வென்றது போல்" என்றார். மீண்டும் அவன் பக்கம் திரும்பி, "கவலைப்படாதே! சித்திரவல்லிக்குக் கடைசியில் நீதான் மாலை அணிவிக்கப் போகிறாய்" என்றார் ஆறுதலாக.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த குணரேகா சிரிப்புத் தாங்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

வடக்குக் கோட்டைவாயில் காளிகோயிலில் ஜெயசிம்மனின் வரவுக்காகச் சித்திரவல்லி காத்திருந்தாள். அவனுக்கே அது வியப்பாக இருந்தது. அவள் கையில் குங்குமச்சிமிழ் இருந்தது. சிமிழைத் திறந்து தனது அழகிய விரலால் திலகமெடுத்து ஜெயசிம்மன் நெற்றியில் அணிவித்தாள். அவள் கரங்கள் நடுங்கவில்லை. ஆனால், ஜெயசிம்மன் உடல் சிலிர்த்தது. வேல்களாலும் வாள்களாலும் தாக்கப்படும்போது நடுங்காத உடல் நடுங்கியது.

"வெற்றிவாகையுடன் திரும்பிவரக் காளிதேவி அருள் புரியவேண்டும்" என்றாள் சித்திரவல்லி.

ஜெயசிம்மன் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டு ஜோடி விழிகள் அவன் எதிரே தெரிந்தன. கல்யாணபுரத்தில் அவனுக்கு விடை கொடுத்தனுப்பிய தேவகிதேவியின் ஏக்க விழிகள், தன்னை அடையத் துடிக்கும் காமம் உமிழும் குணரேகாவின் விழிகள் இந்தச் சோழப்பெண்ணின் விழிகளில் அமைதி குடிகொண்டிருக் கிறது. தனிமையான இடம். பிரிவு எனும் ஏக்கம் இவற்றால் அவள் விழி மூலம் தன் தாபத்தைத் தெரிவிக்கலாமே...

"நாளை இந்நேரம் இந்தக் கோட்டைவாயில் வழியே நமது படைகள் அணிவகுத்துச் செல்லும். முரசு முழங்கும். புலிக்கொடி அசைந்தாடும். மதில்மேல் ஏறி நின்று கையசைத்து என் அன்பைத் தெரிவிப்பேன்" என்று சித்திரவல்லி உற்சாகத்துடன் கூறினாள்.

ஜெயசிம்மன் அவளது கன்னத்தில் மெல்லத் தட்டி, "உன்னைப் போல் நூறு பெண்கள் நாட்டுப்பற்றுடன் இருந்தால் இந்த நாட்டை வெல்ல யாராலும் முடியாது" என்றான்.

"சோழநாட்டு மண்ணுக்கே தேசபக்தி உடன்பிறந்ததாயிற்றே. அதனால் தான் இந்த நாட்டின் எல்லையைக்கூட யாராலும் மிதிக்க முடியவில்லை" என்ற பெருமையுடன் கூறினாள் சித்திரவல்லி.

ஜெயசிம்மன் உள்ளூரச் சிரித்துக்கொண்டான். 'பேதைப் பெண்! நன்றாக ஏமாறப்போகிறாள். என்னைப் பற்றிய உண்மையை அவள் அறிந்த பிறகு, இவளுடைய பக்தி நாட்டின் மீதா, அல்லது உயிருக்குயிராய் நேசிக்கும் என் மீதா என்பது தெரியவேண்டும்,' என்று எண்ணினான்.

"உங்களுக்குள்ளேயே சிரித்துக்கொள்கிறீர்களே... வெற்றிச் சிரிப்பு இப்போதே மலர்ந்துவிட்டதா?" என்று கேட்டாள் சித்திரவல்லி.

"போர் முடிவு எப்படி இருக்கப் போகிறதோ. சாளுக்கியர்களையும் சாதாரணமாக நினைத்து விட வேண்டாம். இப்போதே விடைபெற்றுக் கொண்டேன். என்னை மறந்து விடமாட்டாயே சித்திரவல்லி" என்று உண்மையிலேயே உள்ளம் நெகிழக் கேட்டான்.

சித்திரவல்லி அவன் முகத்தையே இமை கொட்டாமல் நோக்கினாள். "நீரில் எழுதினாலும் மறைந்துவிடும். கல்லில் எழுதினாலும் சிதைந்து விடலாம். இதயத்தில் எழுதப்பட்ட ஓவியம் மறைந்துவிடுமோ? களப்போரில் நீங்கள் அடையப் போகும் வெற்றியை எண்ணி எண்ணி இந்தக் காளிகோயில் வாசலில் காத்திருப்பேன். 'ஜெய விஜயீ பவ' - என்று ஆயிரமாயிரம் குரல்கள் வெற்றியுடன் திரும்பி வரும்போது ஒலிக்கையில் உங்களுக்கு வெற்றிமாலை யிடத் துடிதுடிப்பேன்!" அவள் கண்களில் பளிச்சிட்டன நீர் முத்துக்கள்.

ஜெயசிம்மன் கரம் நீண்டது. அவள் விழிநீரை மெல்லத் துடைத்து, "என் பிரிவு வேதனையைத் தருகிறதா?" என்றான்.

"வேதனை, வருத்தம், சோகம், சோர்வு எதுவுமே இப்போது கொள்ளக் கூடாது. போர்க்களம் செல்லும் நாயகனை முகமலர்ச்சியுடன் வீரத்திலகமிட்டு



வெற்றியுடன் திரும்பி வருமாறு வாழ்த்தி அனுப்புவது சோழர்குல மரபு - இதயத்தில் ஏற்றிவிட்ட தங்களை, சக்ரவர்த்திகளின் உயிருக்குத் துணையாகச் செல்லும் தங்களை வெற்றியுடன் திரும்பி வருமாறு வாழ்த்த வந்திருக்கும் எனக்கு வேதனை இல்லை." சித்திரவல்லி உணர்ச்சியுடன் பேசினாள்.

ஜெயசிம்மன் நகைத்தான். "சோழசக்ரவர்த்தியின் உயிருக்கு நான் துணையா? வேடிக்கைதான். கடல் கடந்த நாடுகளில் அரசர்களைக் காப்பாற்றிய சோழ சக்ரவர்த்திக்கு உறுதுணையாக அவரது தம்பிகள் இருவரும் வருகிறார்கள். அவர்களால் காப்பாற்ற முடியாவிட்டாலல்லவா என் துணை தேவை? நான் ஒரு துரும்பு; சாதாரண வீரன்..." என்று கூறும்போது சித்திரவல்லி குறுக்கிட்டு, "என்ன சொல்கிறீர்கள்? சக்ரவர்த்திகளுடன் அவரது சகோதரர்கள் வருகிறார்களா? இல்லையே... யார் சொன்னது? ஒரு தம்பி பாண்டியநாடு செல்கிறார். மற்றவர் தலைநகரிலேயே தங்கியிருக்கிறார். நமது சக்ரவர்த்திகள் மட்டும்தான் உங்கள் துணையுடன் செல்கிறார். கவனத்துடன் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

ஜெயசிம்மன் திடுக்கிட்டான். "நேற்று இரவு மந்திராலோசனை சபையில் செய்த முடிவு என்ன, இப்போது வேறுவிதமாக மாறிவிட்டதே," என்று திகைப்புடன் கூறினான் ஜெயசிம்மன்.

"ஆம். நேற்று அப்படி முடிவெடுக்கப்பட்டதாகத்தான் நான் கேள்விப் பட்டேன். காலையில் அந்தத் திட்டத்தை மாற்றிவிட்டார்கள். போர்க்களம் சென்று என்னை மணப்பதாகச் சபதம் செய்துள்ள இளஞ்சென்னியைப் படைகளுடன் அனுப்பப் போவதில்லை." - சித்திரவல்லியின் குரலில் மகிழ்ச்சியிருந்தது.

"யார் செய்த முடிவு?"

"இளஞ்சென்னி சிற்பத்துக்குக் காவலாகத் தாராசுரம் செல்கிறான்."

"ஏன்?"

"ஆம். உங்களைக் கவரப் பார்த்துத் தோல்வியுற்ற குணரேகாவும் நிரந்தரமாகத் தாராசுரம் செல்கிறாள். இனி அவள் அங்கே நடனமாடுவாள்."

"குணரேகா செல்கிறாளா? யார் செய்த முடிவு?" ஜெயசிம்மன் பரபரத்தான்.

"பிரம்மராயர். இதோ இந்த நேரம் தெற்குக் கோட்டைவாயில் வழியே சிலையை ஏற்றிக்கொண்டு வண்டி செல்லும். இளஞ்சென்னி வண்டியில் சிவனே என்று அமர்ந்திருப்பான். குணரேகாவுக்கு இளஞ்சென்னியைப் பிடிக்காதோ?" - சித்திரவல்லி 'ஹோ ஹோ' என்று சிரித்தாள்.

அவள் சிரிப்பொலியைக் காதில் போட்டுக்கொள்ளாமலே, ஜெயசிம்மன் ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதுபோல், சித்திரவல்லியிடமும் சொல்லிக்கொள்ளாமல் அங்கிருந்து தெற்குக் கோட்டை வாயிலை நோக்கி ஓடினான்.

# 13

மேற்குத் திசையில் மிக வேகமாகக் கதிரவன் இறங்கிக் கொண்டிருந்தான். கொள்ளிட நதியின் மணல் வெளிக்கு அப்பாலுக்கும் அப்பாலாய் எங்கோ தொலைவில் உள்ள, கண்களுக்குப் புலப்படாத தோற்றத்திற்கும் பின்னணியில் வட்டத் திகிரியோன் செம்பொற்கோளமாய்ச் சுழன்று சுழன்று மறைந்து கொண்டிருந்தான். ஓர் ஓரமாகச் சலசலவென்று ஓடிக்கொண்டிருந்த கொள்ளிட நீரில் செவ்வொளி பிரதிபலித்தது. மேல்வானத்தில் மேகக் கூட்டம் குருதிவண்ணத்தில் காட்சியளித்தது.

இளஞ்சென்னி கண்ணிமைக்காமல் அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தான். கூட்டங்கூட்டமாய்ப் பறவைகள் வெகு தொலைவிலிருந்து வந்துகொண்டிருந்தன. அவை அணிவகுத்துப் பறந்துவரும் காட்சியும் வானவெளியில் மேகக்கூட்டங்களின் செவ்வண்ணமும் அவனைப் பெருமூச்சு விடச் செய்தன.

''வானவெளியில் அப்படிப் பார்த்து மகிழ என்னதான் இருக்கிறது?'' என்ற குரல் கேட்டு இளஞ்சென்னி திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் செவியருகே குரலுடன் மெல்லிய மூச்சும் ஒலித்தது. குளிர்ந்த நீரில் இரு துளிகள் அவன் கழுத்தில் பட்டுச் சிலிர்க்க வைத்தன.

''ஓ, நீயா?'' என்று கூறிவிட்டு இளஞ்சென்னி மீண்டும் மேல் வானத்து அழகை ரசித்துக்கொண்டிருந்தான்.

''அஸ்தமனச் சூரியனை ரசிக்கிறீர்களா?'' என்று குணரேகா மெல்லச் சிரித்துக்கொண்டு கேட்டாள். சலசலவென ஓடும் நீரில் அமிழ்ந்து குளித்துவிட்டு, கூந்தல் ஈரம் போக்கத் தோளில் தவழவிட்டுக் கொண்டு அந்திவேளை மோகினி போல் நின்றாள். கூந்தலினின்று தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

''அந்திவேளைக் கதிரவன் என் மனத்தில் பலவிதமான எண்ணங்களைத் தோன்றச் செய்கிறான்'' என்று அவன் அவளைத் திரும்பிப் பாராமலேயே பேசினான்.

''காலையில் உதயசூரியன் காட்சி, மயிலின் மீது முருகன் அமர்ந்திருப்பது போன்ற வடிவத்தை நினைவூட்டுகிறதாகப் பெரியவர்கள் கூறுவார்கள். அஸ்தமன சூரியன் எதை நினைவூட்டுவான்?'' என்று கேட்டவாறு குணரேகா அவன் எதிரே வந்து நின்றாள்.

அவள் நின்ற கோலமும் அந்திமாலை ஒளியில் எழில் பூத்துப் பொங்கும் அவள் வடிவமும் அலங்காரம் செய்து கொள்ளாமலேயே இயற்கை அவளுக்களித்திருந்த கவர்ச்சியும் இளஞ்சென்னியைத் தடுமாற வைத்தன. சில நாட்களுக்கு முன்பு அவளுடன் நெருங்கிப் பேச வேண்டும் என்ற அவா



அவனுள்ளத்தில் எழுந்ததுண்டு. இதோ, அவள் மிக அருகே நிற்கிறாள். இன்றைய இரவுப்பொழுதைக் கொள்ளிடக்கரையில் கழித்தாக வேண்டும். இன்று என்ன, நாளைக்குக்கூட ஆற்றில் நீரளவு குறையும் வரை அங்கே தங்கியிருக்க வேண்டும். சிலையை ஏற்றியுள்ள வண்டிதான் ஆற்றைக் கடப்பது கடினம். அவள் சென்றிருக்கலாம். ஆனால், ஏனோ அவளும் அங்கே தங்குகிறாள். ஆற்று நீரில் நிம்மதியாக நீராடிவிட்டுப் பூத்த புதுமலர் அவன் முன்னே நிற்கிறாள். அவனுடன் பேச விரும்புகிறாள். அவன் பேசாமல் இருப்பது சரியா? அவள் கேட்ட கேள்விக்கு விடையளிக்க முனைந்தான்.

''அஸ்தமன சூரியன் போர்க்களத்தை நினைவூட்டுகிறான். மார்பிலே வேல்பட்டு, ரத்தம் சொட்டப் பலர் வீழ்ந்து கிடக்கும் ரணகளத்தை நினைவு படுத்துகிறான். மண்ணிலே படிந்துள்ள சிவப்பு ரத்தம் நினைவுக்கு வருகிறது... மேகத்திரள் மீது கதிரவன் பூசியுள்ள செந்நிறத்தைக் காணும் போது...'' என்று இளஞ்சென்னி உற்சாகத்துடன் பேசினான்.

''மிக வேகமாகச் சுழன்று இறங்கும் சூரியன்?'' குணரேகா தன்னிரு கரங்களையும் நீட்டிக்கொண்டே கொஞ்சும் குரலில் கேட்டாள்.

''சோழவேந்தன் யானை மீது கம்பீரமாக அமர்ந்து போர்க்களம் செல்வதை நினைவூட்டுகிறான்'' என்று கூறிய இளஞ்சென்னி தன்னை அறியாமலேயே தன்னை நோக்கிப் படரும் கொடி போல் நீண்ட அவள் கரங்களைப் பற்றிக்கொண்டான்.

''உவமை சரியில்லை, இளஞ்சென்னி. இன்னும் சிறிது நேரத்தில் கதிரவன் மறைந்து விடுவான்... சோழமன்னரும்...'' குறும்புத்தனத்தை அள்ளி வீசிய குணரேகா தன்னை அணைக்க முனைந்த அவனது கரத்திலிருந்து நழுவினாள்.

''உவமை ஏன் சரியில்லை? மாலையில் கதிரவன் மறைந்தால் காலையில் உதிப்பதில்லையோ? அதுபோல் மறுநாள் போருக்கு மன்னர் பொங்கி வருவார்.'' என்று கூறினான். அவள் கரங்களை மீண்டும் பற்றிக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது. ஆனால் குணரேகா அங்கு நிற்காமல் நடந்துகொண்டிருந்தாள். அந்த நடை அவளுக்கு இயற்கையாக அமைந்ததா, தன் இதயத்தை வெட்டுவதற்காக அவள் அங்கங்களை அப்படி அசைக்கிறாளா?

மரத்தடியில் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. தீவத்தியொன்று ஏற்றப்பட்டிருந்தது. சற்றுத் தொலைவில் இரவு உணவுக்காக அடுப்பை மூட்டிக் கொண்டிருந்தார்கள்.

''மயன்கூடத் தோற்று விடுவான் போலிருக்கிறதே! அதற்குள் அழகிய கூடாரம்!'' என்று வியந்தான் இளஞ்சென்னி.

''கூடாரம் மட்டுமா? உள்ளே வாருங்கள்... அதோ பாருங்கள்'' என்று அவனை அழைத்தாள் குணரேகா. மீண்டும் தன் கரத்தைப் பிடித்தழைக்கக்

கூடாதா? சித்திரவல்லியிடம் நுகர முடியாத தீண்டும் இன்பத்தை இவளிடம் இன்று அடைந்தால் என்ன என்று இளஞ்சென்னிக்கு ஒரு கணம் தோன்றியது.

கூடாரத்திரையை விலக்கினாள் குணரேகா. ஓர் அழகிய மஞ்சம். இலவம்பஞ்சுப் பஞ்சணை. மெல்லிய மணம் பரவிக் கொண்டிருந்தது அருகிலுள்ள தூபக்காலிலிருந்து.

"பெண்களுக்கு என்றால் உடனே எல்லா தேவைகளையும் பூர்த்திசெய்து சகல சவுகரியங்களையும் ஏற்பாடு செய்து விடுகிறார்கள்..." என்றான் இளஞ்சென்னி.

"ஆமாம். நாங்கள் இருமுறை வாழ்நாளில் செத்துப் பிழைக்கிறோம். அதுவும் என்னைப் போன்றவள் ஒவ்வொரு நாளும் மறுபிறவி எடுக்கிறோம்" என்று கூறிய குணரேகா மஞ்சத்தில் அமர்ந்தாள்.

தானும் அவளருகே உட்காரும் பாக்கியம் கிடைக்காதா என்று ஆவல் கொண்ட இளஞ்சென்னி நின்ற இடத்தை விட்டு நகராமல், "நாள்தோறும் மறுபிறவி எடுப்பது என்றால் எப்படி?" என்று கேட்டான்.

குணரேகா அவனது அறியாமையைக் குறித்து நகைத்த விதம் அவனுக்கு அந்த மங்கிய ஒளியில் புலப்படவில்லை.

"உனக்கு அதைப் புரிந்துகொள்ளும் வயது போதாது" என்றாள் குணரேகா, மஞ்சத்தில் சாய்ந்தவாறு. அவளது நிழல் தோற்றம் இளஞ்சென்னியின் சித்தத்தைக் கலக்கியது. தன்னை அவள் சிறுவன் என்று நினைக்கிறாள். தனக்கு வயது போதாது என்று நினைக்கிறாள். அதனால்தான் தன்னை நெருங்கத் தயங்குகிறாள்.

"என்னைச் சிறுவன் என்று எண்ணிவிட்டாயோ?" என்று துணிந்து கேட்டுவிட்டான்.

மீண்டும் அவள் நகைத்தாள், "சிலைக்கு துணையாகப் பெரும் வீரரை அனுப்பியிருக்கிறார்களே, சிலை எங்காவது ஓடிப்போய் விடுமா?" என்று அவள் கேட்ட கேள்விக்கு அவனால் உடனே மறுமொழி கூறமுடியவில்லை.

"சிலைக்கு மட்டுமா துணை? உனக்காகவும் அனுப்பி இருக்கலாம்." இளஞ்சென்னி சிரிக்க முயன்றான். ஆமாம். சிலைக்கு ஏன் காவல்? தன்னைப் போர்க்களம் அனுப்பாமல் தடுக்க யாரோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். ஜெயசிம்மனாக இருக்கலாம்... சித்திரவல்லியாகவும் இருக்கலாம்... இருவரும் சேர்ந்தே சூழ்ச்சி செய்திருக்கலாம். போர்க்களம் சென்று வெற்றிவாகையுடன் திரும்பி வந்தால் தன்னை மணக்க வேண்டிவரும் என்று சித்திரவல்லி சதிசெய்து சிலைக்குக் காவலாக அனுப்பியிருக்கலாம்.

"உனக்குத் தெரிந்தால் சொல்லேன். சிலைக்கு எதற்காகக் காவல்? நாளை இந்த நேரம் சோழர்படைகளுடன் சென்று கொண்டிருக்க வேண்டியவன்..." என்று கேட்ட இளஞ்சென்னிக்கு வார்த்தைகள் வரவில்லை.



"ஏன் இப்பொழுதுகூடத் திரும்பிப் போகலாம்" என்று ஒரே வார்த்தையில் கூறி இடதுபுறமாகத் திரும்பிப் படுத்தாள் குணரேகா.

இளஞ்சென்னி கண்களை மூடிக்கொண்டான். அது போன்ற காட்சிகளைக் கற்பனை செய்து கொண்டிருக்கிறான். ஆனால் நேரடியாக கண்டதில்லை. இப்பொழுதே அந்த மஞ்சத்தில் அவளருகே அமர்ந்து விடுவோமா?

"குணரேகா, இனி கங்கைகொண்டசோழபுரம் திரும்பி வரமாட்டாயா? எவ்வளவோ காலமாக நாமிருவரும் அங்கே இருந்தும் இப்படிச் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு, பழகும் வாய்ப்பு நதிக்கரையில் கிடைத்திருப்பது சிறப்புதான்" என்று கூறி மஞ்சத்தை நெருங்கினான்.

"நானும் கங்காபுரியில் உன்னைப் பல ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறேன்" என்று கூறிய குணரேகா திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள். கைகளை மேலே தூக்கிச் சோம்பல் முறித்தாள். மேலாடை இயற்கையாக நழுவி, கச்சணியா ரகசியத்தை அம்பலப்படுத்தியது. சிறுவிளக்கு இருந்திருக்கக்கூடாதா? இருள் சதி செய்தது.

"குணரேகா, அகல்விளக்காவது எடுத்து வருகிறேன்" என்று சொல்லி விட்டு விளக்கொன்றை எடுத்து வர வெளியே விரைந்தான். விளக்குடன் வரச் சற்று நேரமாகிவிட்டது.

கூடாரத்திற்குள் யாரோ பேசும் குரல் கேட்டது. கேட்ட குரலாக இருந்தது. ஜெயசிம்மன் இங்கு எங்கே வந்தான்? எங்கும் எப்பொழுதும் என்னுடன் அவனுக்குப் போட்டிதானா? நாளைக்குப் படைகள் புறப்படப் போகின்றன. இந்த நிலையில் அவனுக்கு இங்கே என்ன வேலை? என்ன பேசுகிறார்கள் இருவரும்? குணரேகாவிடமுள்ள சபலம் முக்கியமான நேரத்திலும் விட்டபாடில்லையே! இவனை நம்பியிருக்கிறாள் பேதை சித்திரவல்லி?

தொண்டையை மெல்லக் கனைத்துத் திரையை விலக்கிக் கொண்டு கூடாரத்திற்குள் நுழைந்தான். கூடாரத்தில் யாருமில்லை. குணரேகா பூச்சரம் போல் மஞ்சத்தின் நடுவே கிடந்தாள். உதடுகளில் மெல்லிய நகை.

"யாரோ பேசும் குரல் கேட்டதே? ஜெயசிம்மன் வந்தானா?" இளஞ்சென்னியின் குரலொலி மாறுபட்டிருந்தது.

"யாரது, ஜெயசிம்மன்?" சாதாரணமாகக் கேட்டாள் குணரேகா. இளஞ்சென்னிக்கு அப்போது வந்த ஆத்திரத்தில் அவள் சாகசத்தைப் பொசுக்க வேண்டும்போல் தோன்றியது.

"அவன் குரலைக் கேட்டேனே?"

"பிரமை. இளஞ்சென்னி, போய் ஓய்வெடுத்துக் கொள். வழி நடைக் களைப்பு போதையாக மாறுவதற்குள் படுத்துறங்கு. இல்லாவிடில் இரவு உறக்கம் வராது. உறக்கம் வராவிட்டால் நாளைக்குச் சிலைக்குக் காவலாய்ச் செல்ல

முடியாது. சிலையை யாராவது இடுப்பில் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள். எனக்கும் தூக்கம் விழிகளைத் தழுவுகிறது'' என்று கொட்டாவி விட்டாள்.

'சே! இவளும் ஒரு பெண்ணா? என்னைச் சிறுவன் என்று எண்ணி விட்டதால்தானே, மேல் ஆடை நழுவியதுகூடப் பாராமல் என்னுடன் பேசத் துணிகிறாள்? நான் சிறியவனா என்பதை இன்று பொழுது விடிவதற்குள் நிரூபிக்கிறேன்.'

இளஞ்சென்னி விளக்கை ஓர் ஓரமாக வைத்துவிட்டுச் சீற்றத்துடன் திரும்பினான். அவனுக்கு உறக்கம் வரவில்லை. ஜெயசிம்மன் குரல் தெளிவாகக் கேட்டிருக்கிறது. உள்ளே பார்த்தால் அவனைக் காணவில்லையே. மர்மமாயிருக்கிறதே... அவள் கூறியதுபோல் பிரமையா? யோசித்துக் கொண்டிருந்தபோதே தூக்கம் அவன் கண்ணைச் சுழற்றியது.

நடுநிசி. யாரோ அவனைத் தட்டி எழுப்பியதுபோல் தோன்றியது. திடுக்கிட்டு எழுந்த அவன் சுற்று முற்றும் பார்த்தான். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். தீவத்தி வெளிச்சத்தைக் காணோம். சிலையை ஏற்றியிருந்த வண்டியைக் காணவில்லை. கூடாரத்தில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. விரைந்து சென்ற அவன் மஞ்சத்தில் குணரேகாவின் ஆடைகள் மட்டும் வீசியெறியப்பட்டிருப்பதைக் கண்டான்.

''குணரேகா...!'' என்று கூவினான் இளஞ்சென்னி. காற்றில் மரக்கிளைகள் அசைந்தன. அவன் போட்ட கூச்சலில் மரத்தினின்று ஓரிரு பறவைகள் திடுக்கிட்டுப் பறந்தன.

நிலவொளியில் சிலையை ஏற்றியிருந்த வண்டிச்சக்கரங்கள் மீண்டும் கங்கைகொண்டசோழபுரம் பக்கமே சென்றிருக்கும் தடம் தெரிந்தது. இளஞ்சென்னியின் உடல் படபடத்தது. குதிரை மீதேறி விரைந்தான்.

அதோ... அதோ! செல்கிறது வண்டி. அகப்பட்டுக் கொண்டார்கள். ''ஏய்... ஏய்! யாரது? வண்டியை நிறுத்து'' என்று அதட்டிக் கொண்டே வண்டியின் முன்னால் போய் நின்றான். வண்டியில் ஏராளமான வேலும் கேடயங்களும் மற்றும் போர்த் தளவாடங்களும் ஏற்றப்பட்டிருந்தன. வண்டியோட்டியும் புதியவன்.

''ஏய், நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? வண்டியில் என்ன?'' இளஞ்சென்னி கடுங்குரலில் கேட்டான்.

''ஏய்.... நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? ஏன் வண்டியை நிறுத்துகிறாய்?'' வண்டியோட்டி சீறினான். இந்தக் குரலையும் எங்கோ கேட்டிருக்கிறோம்.

''வேல்கம்புகளை ஏற்றிக்கொண்டு எங்கே செல்கிறாய்?'' இளஞ்சென்னி கோபத்துடன் கேட்டான்.

''பார்த்தால் படை வீரன்போல் தெரிகிறது. போர் ரகசியங்களைக் கேட்கிறாயே! உனக்கே தெரியாதா எங்கிருந்து வருகிறது - எங்கே போகிறது



என்பது?'' வண்டியோட்டியும் சளைக்கவில்லை. இளஞ்சென்னி குரலிலுள்ள கடுமையைக் குறைத்துக்கொண்டு, ''அதில்லே அண்ணே. இந்தப் பக்கம் வேறு ஏதாவது வண்டி போனதா? அதில் சிலை இருந்தது. அதனால் கேட்டேன்'' என்றான்.

''ஓ! அந்த வண்டியா? இப்பத்தானே மிக வேகமாக இந்த வண்டியை முந்திக்கொண்டு ஒரு வண்டி போனது'' என்றான் வண்டியோட்டி.

''ஆமாம், ஆமாம். அந்த வண்டியைத்தான் கேட்கிறேன்'' என்று படபடப்புடன் கூறிய இளஞ்சென்னி வண்டி போன திசையை நோக்கி விரைந்தான். சிறிது தூரம் சென்ற பிறகு இளஞ்சென்னிக்குச் சந்தேகம் வந்தது. ''பளுவான சிலையை ஏற்றிக்கொண்டு வண்டியொன்று விரைந்து செல்வதா? நம்பக்கூடியதாயில்லையே? வண்டிக்காரன் நம்மை ஏமாற்றிவிட்டான். இந்த இளஞ்சென்னியா ஏமாறக்கூடியவன்? விட்டேனா பார்'' என்று சொல்லிக் கொண்டு மீண்டும் வந்தவழியே திரும்பி விரைந்தான்.

அவன் நினைத்தது போல்தான் வேல், கேடயங்கள் ஏற்பட்ட வண்டி நின்று கொண்டிருந்தது. அருகே குதிரை மீது ஜெயசிம்மன். அருகே மற்றொரு வீரன்.

''ஏ, துரோகி! உன்னை எப்போதோ அடையாளம் கண்டு கொண்டேன். ஆனால், என் சொல் அம்பலம் ஏறவில்லை. உன்னை அனைவரும் நம்பிவிட்டார்கள்...'' என்று கூவிக்கொண்டே வாளை உருவியவாறு குதிரையினின்று குதிப்பதற்குள் மின்வெட்டும் நேரத்தில் ஜெயசிம்மனது வாள் இளஞ்சென்னியன் அடிவயிற்றில் பாய்ந்தது. நடுமண்டையை நோக்கிப் பலமாக வீழ்ந்தது அடி. இளஞ்சென்னி ரத்தவெள்ளத்தில் மிதந்தான்.

மற்றொரு இளம் வீரன் வடிவிலிருந்த குணரேகாவின் அதிர்ச்சி அடங்குவதற்குள் ஜெயசிம்மன் பரபரப்புடன் ''உம். ஆக வேண்டியதைக் கவனி. இவனைத் தீர்க்காவிடில் என்றுமே ஆபத்து தான்...'' என்றான்.

''அடுத்து என்ன செய்ய வேண்டும்?'' குணரேகா கேட்டாள்.

''வண்டியை ஓட்டிக்கொண்டு வண்டிக்காரன் செல்வான். அதை எங்கே கொண்டு சேர்க்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். நீ இந்தக் குதிரை மீதேறி விரைவாகச் செல்,'' என்றான் ஜெயசிம்மன்.

''யாராவது பார்த்துவிட்டால்?''

''இனி யாரும் சந்தேகிக்கமாட்டார்கள்... கொள்ளிடக் கரையிலேயே காவல்காரர்களைத் தீர்த்துக்கட்டி நாணல் புதரில் போட்டாகிவிட்டது. இளஞ்சென்னிக்கும் மேலுலக வழி காட்டியாகிவிட்டது. இரவுக்கு இரவே பயணம் செய்து சிதம்பரத்தை அடைந்துவிடு. அங்கே சென்று இந்த வேடத்தைக் கலைத்துவிடு. பெண்ணுக்கு மீசை நன்றாக இல்லை. ஒரே இரவு. பொறுத்துக் கொள்... அங்கே யாத்ரீகர்கள் கோஷ்டியுடன் சேர்ந்துவிடு. யாரும் கண்டுபிடிக்க முடியாது.''

"நீங்கள்...?"

"நாளைக் காலைப் புறப்படப் போகும் படைகளுடன் நானும் புறப்படுகிறேன். சக்ரவர்த்தியின் அருகிலேயே இருப்பேன். கல்யாணபுரத்தில் என் சகோதரருக்கு முன்பே நான் சொல்லி யனுப்பியதுபோல் எல்லாத் திட்டங்களும் சரிவர அமைந்திருந்தால் வெற்றி என் பக்கம். தைரியமாகச் செல். கல்யாணபுரத்தில் சந்திப்போம்..."

குணரேகா மெல்ல ஒட்டு மீசையைத் தடவிக்கொண்டு குதிரை மீது ஏறினாள். அவளது இடுப்பைப் பிடித்துக் குதிரை ஏற உதவி செய்தான் ஜெயசிம்மன்.

நிலவொளியில் குருதி குளிப்பாட்டக் கிடந்த இளஞ்சென்னியை ஒருமுறை திரும்பிப் பார்த்த குணரேகா, "பாவம்! மாலையில் இளஞ்சென்னிக்கு என்னிடம் நெருங்க ஒரே துடிப்பு. அடைய நினைப்பவர்க்கு அடைய முடியவில்லை. கல்யாணபுரம் வந்த பிறகாவது என் கோரிக்கையை நிறைவேற்றுவீர்களா?" என்று கூறி மெல்ல அவன் மீது சாய முற்பட்ட குணரேகாவை குதிரை மீது சரிவர அமரச் செய்து. "குணரேகா, இதோ ரத்தவெள்ளத்தில் கிடக்கும் இளஞ்சென்னியைப் பார்! இதைப்போல் என்னுடலும் கிடக்க வேண்டுமென்றால் உன் மோக அஸ்திரத்தை இங்கேயே வீசலாம். சாளுக்கியநாடு பிழைக்க வேண்டுமென்றால் உனது மோகத்தை அடக்கிக்கொள்வதுதான் நல்லது" என்றான்.

குணரேகா பெருமூச்சு விட்டாள். கையை அசைத்தவாறு சிதம்பரம் செல்லும் பாட்டையில் சென்றாள். மீண்டும் அவள் ஜெயசிம்மனை எப்போது சந்திக்கப் போகிறாளோ?

## 14

நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டுமாம், ஒரு பகுதிக்கு தேவகி தேவி அரசியாக வேண்டுமாம்! - இதை நினைத்துப் பார்க்கவே ஆகவமல்லனுடைய பட்டத்தரசிக்குக் கசப்பாக இருந்தது. நேற்றுவரை அன்புடன் பழகியவள், இன்று ஒரு சிறு லிகிதத்தின் மூலம் விரோதியாகிவிட்டாள். நேற்றுவரை 'ஐயோ பாவம், கணவனைப் பிரிந்து கண்ணீர் விடும் காரிகை' என்று பரிதாபத்துடன் பார்த்தது போக, இன்று தேவகியை நயவஞ்சகி என்று கடிந்து கூறுமளவுக்கு அவள் மனத்தை ஓலையிலுள்ள சில வரிகள் மாற்றிவிட்டன.

தேவகிதேவியின் தியாகத்தைப் பற்றி அரசரிடம் மனம் விட்டுப் பாராட்டிப் பேசியிருக்கிறாள். ஆனால், இன்று அவள் போட்டியாக வரப் போகிறாள் என்பதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஜெயசிம்மனுடைய



திட்டத்தை எப்படியாவது முறியடிக்க வேண்டும் என்று முடிவுசெய்துவிட்டாள். தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகளை அழைத்து ஆலோசனை கேட்டாள். அவளுக்கு உறக்கமே வருவதில்லை. ஆனால், மன்னர் ஆகவமல்லனோ முன்பு எப்பொழுதையும் விட நிம்மதியாக உறங்குகிறார். அவருக்கு எப்படித்தான் தூக்கம் வருகிறதோ, தன் சகோதரன் நாட்டில் பாதி கேட்கிறான். அவனைப் பற்றிக் கவலைப்படவில்லையே அவர். கவலைப்படுவதற்குப் பதிலாக அவர் மிகுந்த உற்சாகத்துடன் காணப்படுகிறார். பரபரப்பும் மிகுந்திருக்கிறது.

மந்திரி மண்டலத்தாரை அழைக்கிறார். படையின் பல பிரிவுத் தளபதிகளைக் கலந்தாலோசிக்கிறார். "சோழர்ப்படைகள் மூன்று பிரிவுகளாக வருகின்றனவாம். ஒரு பிரிவுக்குச் சோழ சக்ரவர்த்தியே தலைமை வகித்து நடத்தி வருகிறாராம். அவருடன் நமது இளவரசர் ஜெயசிம்மனும் வருகிறாராம். பார்த்தீர்களா? சோழப்புலியைக் கூண்டில் அடைத்துக்கொண்டு வருகிறான் ஜெயசிம்மன். புலியை அழிக்கத் திட்டமிடுவது நமது திறமை" என்று மகத்தான சந்தோஷத்துடன் கூறுகிறார்.

மன்னரின் உற்சாகம் அரசிக்கு வெறுப்பை அளித்தது. ஜெயசிம்மனுடைய திறமையைப் பற்றிப் பேசும்போது அவளுக்கு எரிச்சல் வந்தது.

ஜெயசிம்மனுடைய சாகசங்களைப் பற்றி அரசியிடம் எடுத்துக் கூறி, "சோழர்படைகளை இனி எந்த நாளும் தலைதூக்காதபடி அழித்துவிடுவோம்" என்று பெருமையுடன் கூறினார் மன்னர்.

"அழித்து என்ன பயன்?" என்ற சலிப்புக் குரல் அரசியிடமிருந்து வெளிவந்தது.

ஆகவமல்லன் திடுக்கிட்டார். 'தேவிக்கு உடல்நிலை சரியில்லையா? உற்சாகமிழந்து பேசுகிறாளே, ஏன்?'

"என்ன சொல்கிறாய்? நம் நாட்டிற்கு ஏற்பட்ட இழுக்கை அடியோடு ஒழித்துவிடப் போகிறோம். அதை எண்ணி மகிழ்ச்சியடையாமல் சலிப்படைகிறாயே. ஏன், என்ன நேர்ந்து விட்டது உனக்கு?" ஆகவமல்லன் கனிவுடனும் கவலையுடனும் கேட்டார்.

"எனக்கு என்ன நேர்ந்துவிட்டது? நமக்குத்தான் நேராதது யாவும் நேரப்போகிறது. சாளுக்கிய சாம்ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதியாயிருந்த காலம் போய், பாகப்பிரிவினை கொண்ட சிறுநாட்டின் அரசராகப் போகிறீர்கள் நீங்கள். நான் அரசியாகப் போகிறேன் கையகல நாட்டிற்கு!" அரசியின் குரலிலிருந்தது கவலையா, கொதிப்பா?

"என்ன சொல்கிறாய் நீ?" ஆகவமல்லன் கவலையுடன் கேட்டார்.

"நான் என்ன சொல்லப்போகிறேன்... உங்கள் சகோதரர் எழுதியனுப்பிய ஓலை சொல்கிறது. அதை நீங்கள் படிக்கவில்லையா?"

''நன்றாய்ப் படித்தேன். அதைப் படித்த பிறகு எனக்குப் புதுத் தெம்பு வந்தது. ஜெயசிம்மன் முப்பெரும் படைகளுடன் வருகிறான். வரும் சோழர்படைகளை எப்படித் தாக்க வேண்டும் என்பதையும் சொல்லி யிருக்கிறான்... எதிரி நாட்டில் உயிரைப் பணயம் வைத்து உலாவியவன், எதிரியுடனேயே இங்கே வருகிறான் என்றால் என்ன துணிவு அவனுக்கு! நாட்டைக் காப்பாற்றுவதில் அவன் செய்துள்ள சேவைக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்....''

''கைம்மாறு கருதாத செயலை உங்கள் சகோதரர் செய்யவில்லை, பாதிநாட்டை எதிர்பார்த்துத்தான் இவ்வளவு செயலும். வெளிப்படையாகவே கேட்டுவிட்டாரே, நாட்டைப் பிரித்துக் கொடு என்று! அதை நீங்கள் படிக்கவில்லையா?''

ஆகவமல்லன் கடகடவென நகைத்தார். ''நாட்டில் சரிபாதிதானே! அவன் கேட்காமலேயே நானே கொடுப்பதாக இருந்தேன். அவனுடைய மகத்தான சேவைக்கு இந்த நாட்டையே அளித்துவிடலாமே? இன்னும் சொல்லப்போனால் இந்த நாடு அவனுடைய பரம்பரைச் சொத்து. தேவி! உனக்குத் தெரிந்திராவிடில் சொல்கிறேன். ஜெயசிம்மன் எனது சொந்தச் சகோதரன் அல்லன். அவனுடைய பாட்டனார்தான் இந்த நாட்டை ஆண்டு வந்தார். அவருக்கு வெகுகாலம் வரை சந்ததி இல்லை. தனது சகோதரனான எனது பாட்டனாருக்கு அரசு உரிமையை அளித்தார். ஆனால், வயதான காலத்தில் அவருக்குக் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை வளர்வதற்குள்ளேயே என் தந்தை அரியணை ஏறிவிட்டார். பிறகு நான். இப்படியாக அந்தப் பரம்பரையில் நியாயமான வாரிசு யாரோ, அவர்கள் அரியணை ஏறமுடியாமலேயே இருந்தது. இளவரசர் என்ற பெயருடனேயே இந்த நாட்டிற்குத் தொண்டு செய்து வந்தார்கள். இளம் வயதினனான ஜெயசிம்மன் தானே அடுத்துப் பட்டம் ஏற வேண்டியவன். அவனுக்குப் பாதி ராஜ்யம் எதற்கு? முழு ராஜ்யத்தையே அளித்துவிடுகிறேன். வெற்றிவிழாக் கொண்டாடியதும் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்து விட்டுப் பிறகு வடக்கே மலைச்சாரலுக்குச் சென்று மீதி நாட்களை அமைதியுடன் கழிப்போம்.''

ஆகவமல்லனுடைய இந்தப் பேச்சு தேவியைக் கண்கலங்க வைத்தது.

'மாட்டேன்.... மாட்டேன்.... முடியாது! என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. மலைக்கும் காட்டுக்கும் சென்று வாழ்வின் கடைசி நாட்களைக் கழிப்பதா? தேவகி அரசியாக ஆடம்பரமாக வாழ்வது... நான் காட்டில் அலைவதா? முடியவே முடியாது. அரசருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? ஜெயசிம்மனுக்கு நாட்டைத் தா ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன். ஆண்டவனே... வரும் வழியிலேயே சோழமன்னர் அவரைக் கொன்று விடக்கூடாதா?'

இப்படி எண்ணினாளே தவிர, அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை. கண்கள் உள்ளத்தை எதிரொலித்தன.



ஆகவமல்லன் தேவியின் மனநிலையைப் புரிந்துகொண்டான். ''தேவி! என் மனநிலையை நீ இன்னும் புரிந்துகொள்ளவில்லை. அதனால்தான் உன் கண்கள் கலங்குகின்றன. ஜெயசிம்மன் சோழநாட்டிற்குத் தன் சொந்தத்திட்டப்படி சென்றபோதே, நான் தம்பியைப் பலிகொடுக்க அனுப்பிவிட்டதாகப் பலர் பேசிக் கொண்டனர். எதிரி நாட்டில் அவனது வேடம் கலைந்து, அங்கேயே அவனைக் கண்ட துண்டமாக வெட்டிப்போட்டிருந்தால் என் நிலை என்ன ஆகியிருக்கும்? இங்கே உள்நாட்டுக் கலகமே ஏற்பட்டிருக்குமே! ஜெயசிம்மன் இப்போது சோழமன்னனுடன் வருகிறார். ஒரு மகத்தான சதித் திட்டத்துடன்தான் சோழ மன்னருடன் நெருங்கிப் பழகுகிறான்...''

மன்னர் இவ்வாறு கூறும்போது அரசி குறுக்கிட்டு, ''இல்லை, இல்லை... ஓர் ஒப்பந்தத்துடன் வருகிறார். பாதி நாட்டைப் பெற்றுத் தர சோழமன்னருடன் ரகசிய ஒப்பந்தம்...'' என்று கூறவும், ஆகவமல்லன் ஏளனமாகச் சிரித்து, ''மறுபடியும் மறுபடியும் அவனுக்கு நியாயமாகச் சேரவேண்டிய நாட்டைப் பற்றியே பேசுகிறாய். அவன் எடுத்துக்கொண்ட ஜீவமரணப் போராட்டத்திற்குக் கைம்மாறாக நாட்டை அளிப்பதைவிட வேறு என்ன செய்ய முடியும்?'' என்று கூறினார்.

''அவர் செய்வது கடமை. கடமைக்குப் பரிசு எதற்கு?''

''கடமையாக இருப்பினும், சுத்த வீரன் போர்க்களத்தில் மடிவதையே பரிசாகக் கருதுவான். எதிரியின் நாட்டில் சிக்கிக் கொண்டு உயிர் விடுவதை விரும்பமாட்டான். மேலும், ஜெயசிம்மன் பழிக்குப்பழி வாங்கச் சூளுரைத்துச் சென்றிருக்கிறான்... அவனால் நமது நாட்டிற்கும் அமைச்சர்களுக்கும் ஏற்பட்ட அவமானத்தை மறக்கவே முடியாது. அவமானம் இழைத்த சோழ மன்னன் ராஜாதி ராஜனைப் பழிக்குப்பழி வாங்காதிருக்க மாட்டான்...''

''எதிரிகள் வெற்றி கொள்ளும் போது நாட்டைஅழிப்பதும் செல்வத்தைக் கொள்ளையிடுவதும் சகஜம்தான். அதற்கு மாறாக பொன்னும் பொருளும் சோழமன்னன் தங்கள் இளவரசனுக்குத் தந்து விலைக்கு வாங்கிவிட்டார்....''

''கொள்ளையிடுவதும் தீயிடுவதும் போரில் வெற்றி பெற்றவர் செய்யும் நியாயச் செயல்கள்... ஆனால்...''

''போரில் தர்ம நியாயம் பார்க்க முடியுமா?''

''அதைச் சொல்லவில்லை தேவி... நீ மறந்திருக்கமாட்டாய் என்று நினைக்கிறேன். சோழர்களின் வெறியாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சாளுக்கியநாடே நிர்மூலமாகப் போகிறது என்ற அச்சத்தில் மந்திரி மண்டலத்தார் சோழமன்னனுடன் சமாதானமாகப் போக யோசனை தெரிவித்தனர். நான் அதற்குச் சம்மதித்தேன். மந்திரிகள் இருவர் சமாதானத் தூதுவராகச் சென்றனர். வெள்ளைக் கொடி பிடித்து, சோழமன்னன் பாடி வீட்டிற்குச் சென்றனர். சமாதானம் கேட்டு வந்தவர்களைக் கர்வம் பிடித்த சோழமன்னன் என்ன செய்தான் தெரியுமா? அமைச்சரிருவரது தலையை மொட்டை அடித்தான்.

கரும்புள்ளி, செம்புள்ளி குத்தினான். ஒருவருக்கு ஆண் வேடமும் மற்றவருக்குப் பெண் வேடமும் அணிவித்தான். ஒருவருடைய முதுகில் ஆகவமல்லன் என்று எழுதினான். மற்றொருவருடைய முதுகில் ஆகவமல்லி என்று எழுதினான். கழுதை மீது ஏற்றினான். கல்யாணபுரத்தை நோக்கி அவர்களை ஓட்டினான். எனக்கும் உனக்கும் செய்த அவமானம், இந்த நாட்டிற்குச் செய்த அவமானம். இதைக் கேள்விப்பட்ட ஜெயசிம்மன் கொதித்தெழுந்தான். திருமணமாகிச் சில மாதங்கள்கூட ஆகாத போது, இளம் மனைவியை விட்டு விட்டுச் சோழர் தலைநகரம் சென்றான். இப்போது சோழ மன்னருடனேயே திரும்பி வருகிறான். பழிக்குபழி உணர்ச்சியுடன் வருகிறான். இத்தகைய மகத்தான தியாகம் செய்த ஜெயசிம்மனுக்கு இந்த நாட்டைக் கொடுத்தால் என்ன?''

ஆகவமல்லனுடைய ஆவேசப் பேச்சு அரசிக்கு ஏற்கவில்லை, தேவகிதேவி அரசியாவதா என்ற வெறுப்பில் ஜெயசிம்மனுக்கு எதிராக அந்தரங்கமாகச் சதித் திட்டங்களை உருவாக்குவதில் முனைந்தாள்.

தேவகிதேவியோ, தனது இடத்தைப் பிடிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றொருத்தி உருவாகிவிட்டதால் அவளைத் தீர்க்க என்ன வழி என்ற யோசனையில் மூழ்கியிருந்தாள். வேங்கி நாட்டினின்று அவளுடைய தந்தையும் வந்து சேர்ந்தார்.

முடிவு - போரின் போது ஆகவமல்லனுக்கு உதவாமல் இருப்பது என்பதே.

கல்யாணபுரத்தில் ஆகவமல்லனும் அரசியும் தேவகிதேவியும் மூன்று விதமான திட்டங்களைத் தீட்டி வரும் சமயத்தில் கங்கை கொண்ட சோழபுரத்தினின்று காலைக் கதிரவன் உதிக்கும் முன்பே சோழர்களின் பிரமாண்டமான படைகள் புறப்பட்டன.

'வெற்றிவேல், வீரவேல்' என்று வேளக்காரப் படையினர் முழங்கினர்.

தூசிப்படையினர் அணிவகுத்து நடந்து செல்லும் ஓசை கடல் முழக்கம் போல் வெகு தொலைவுக்குக் கேட்டது.

நடக்கும் போது எழும் தூசு மேகமண்டலத்தைத் தாண்டிக் கதிரவனை மறைக்க முயன்றது.

கோட்டை வாயிலின் மீதிருந்து மக்கள் தூவிய மலர், தேவலோகத்தினின்று கந்தர்வர்கள் தூவும் மலர்போல் இருந்தது.

போர்முக வாத்தியங்கள் ஒலி, படைவீரர்களின் உடலில் புதுத்தெம்பை ஊட்டிக்கொண்டிருந்தது.

''யானைகள் கம்பீரமாக அசைந்தன. குதிரைகள் நடன ஜதிபோல் கால்களை வைத்து நிமிர்ந்து சென்றன.

வீரர் கைகளில் கேடயமும் வேலும் பளபளவென மின்னின.



சோழர் மன்னன் இராஜாதிராஜர் அருகே ஜெயசிம்மன் கம்பீரமாகக் குதிரை மீது அமர்ந்து வந்தார்.

கெடில நதியையும், தென்பெண்ணையையும் பாலாற்றையும் கடந்து படைகள் விரைந்து சென்று கொண்டிருந்தன. தொண்டை மண்டலத்தில் காஞ்சிமாநகருக்கருகே இளைப்பாறப் பாடி வீடமைத்துத் தங்கின.

காஞ்சிமாநகரத்துக்கு அருகேயுள்ள தக்கோலம் என்னும் ஊரினின்று கங்கைகொண்டசோழருக்கு அபிடேகப் பொருள்கள் வருவது வழக்கம். தக்கோலத்து இறைவனைத் தரிசிக்க இராஜாதிராஜன் சென்ற போது ஜெயசிம்மனும் உடன் சென்றான்.

தக்கோலத்தைப் பார்த்தபோது சோழமன்னனுக்குப் பழைய நினைவுகள் வந்தன. தக்கோலம் போரில் அரசரது முப்பாட்டனார் ஒருவர் உயிரிழந்திருக்கிறார்.

''போரின் விளைவு என்னவாயிருக்கும் என்று நினைக்கிறாய். ஜெயசிம்மா?'' என்று அரசர் கேட்டார்.

ஜெயசிம்மன் திடுக்கிட்டான். என்ன காரணத்தால் தன்னை அவர் அவ்வாறு கேட்கிறார்...?

''முடிவைப் பற்றிய சந்தேகம் ஏன் சக்ரவர்த்தி?'' என்று மிகவும் பயத்துடன் கேட்டான் ஜெயசிம்மன்.

''அதைக் கேட்கவில்லை. ஆகவமல்லன் சிறந்த மல்லன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவனுடன் நேருக்கு நேர் மல்யுத்தம் புரிய வேண்டுமென்பது என் ஆசை. அந்த யுத்தத்தில் நான் ஆகவமல்லனின் முதுகுக்கு மண்காட்டி அவன் நெஞ்சின் மீது ஏறி நின்று முயலகன் மீது நடராசர் ஆடிய நடனம் போல் ஆடி.... ஹ ஹ்ஹ ஹ்ஹா!'' என நகைத்தவாறு கூறினார்.

ஜெயசிம்மன் இதயத்தில் அவர் நடனமாடுவது போன்ற உணர்ச்சி. ஆகவமல்லன் விழப்போகிறாரா - இவர் விழப் போகிறாரா பாவம் - என்று எண்ணினான்.

திடீரென்று இராஜாதிராஜர் ஜெயசிம்மனை நோக்கி ''எங்கள் முப்பாட்டனார் சரித்திரம் உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

சோழநாட்டுச் சரித்திரம் அவனுக்கு எதற்காகத் தெரிய வேண்டும்? போர் வெறி பிடித்து, சாளுக்கியர்களை நசுக்குவதே லட்சியம் என்று உலவிய வெறியர்களது கதை எதற்கு?

''ஜெயசிம்மமா! என் பாட்டனாருக்குப் பாட்டனார் விஜயாலயர் வீரப்போர் புரிந்து மார்பிலே விழுப்புண்களைப் பெற்றிருக்காவிடில் இந்தச் சாம்ராஜ்யமே உதயமாயிருக்காதே! ஆனால், அவரது தலைப்பிள்ளை ஆதித்த கரிகாலன் போர்க்களத்தே மாண்டான். எங்கள் வம்சத்திற்கே ஒரு சாபக்கேடா? தலைப்பிள்ளைகள் போர்க்களத்தே வீர சுவர்க்கம் அடைகிறார்கள். நானும்

மகத்தான வீரர் இராஜேந்திர சோழதேவரின் தலைப்பிள்ளை. எனக்கும் வீர மரணம் வரவேண்டும். ஆனால், ஆகவமல்லனை அழித்து, கல்யாண புரத்தைக் கொள்ளையிட்டு, யானை மீது ஏற்றக்கூடிய அளவுக்குப் பொன்னும் பொருளும் தலை நகரத்திற்கு அனுப்பிய பிறகுதான்...''

ஜெயசிம்மன் மௌனமாயிருந்தான்

ஜெயசிம்மா!... உன்னை என் அருகே ஏன் அழைத்து வந்தேன் தெரியுமா? உனக்கு சாளுக்கியநாட்டின் மூலை, முடுக்குகள் எல்லாம் தெரியுமாம். ஆகவ மல்லன் ஓடிஒளிந்தால் கூடக் கண்டுபிடித்து விடுவாயாம். ஆகவமல்லனைப் பழிதீர்க்க உனக்கு ஆசையாம். உன் கையாலேயே அவனைக் குத்திக்கொன்றுவிடச் சபதம் செய்திருக்கிறாயாம். ஆனால் உனக்குக் கட்டளையிடுகிறேன் - ஆகவமல்லனை நீ கொன்று விடக்கூடாது. நான்தான் அந்தப் பெருமையை அடைய வேண்டும். வருங்கால வரலாற்றிலேயே சாளுக்கிய ஆகவமல்லனைக் கொன்ற பெருமை வேறு ஒருவருக்கும் சென்று விடக்கூடாது... நீ முந்திக்கொண்டு விடப்போகிறாய். எச்சரிக்கிறேன்...'' என்று கூறி நிறுத்திய வேந்தர் ஜெயசிம்மனை நோக்கி, ''சோழநாட்டின் வெற்றிக்காகப் பாடுபடும் உனக்கு வெற்றி விழாவில் ஒரு பரிசு தரப் போகிறேன்... என்ன தெரியுமா அது?'' என்ற புதிரைப் போட்டார்.

சோழ சக்ரவர்த்தியின் பேச்சை ஜெயசிம்மனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டு அர்த்தத்தில் பேசுகிறானோ என்று கூடச் சந்தேகப்பட்டான். அவன் சந்தேகம் தெளிவதற்குள் சோழசக்ரவர்த்தி சொன்னார் :

''ஜெயசிம்மா! உன்னைப் பற்றிய விவரம் எல்லாம் நான் கேள்விப் பட்டேன். மாவலிராயன் மகளை நீ காதலிக்கிறாய். காதலியைப் பிரிந்து போர்க்களம் வந்துள்ள உனக்கு, போர் முடிந்தவுடன் அவளையே பரிசாகத் தரப்போகிறேன். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம், உனக்குச் சித்திரவல்லி மீது காதலா, அல்லது நடனமாது குணரேகாவின் மீது ஆசையா?'' என்று கண்களைச் சிமிட்டியவாறு கேட்டார்.

ஜெயசிம்மன் ஏனோ நடுங்கினான். தனது நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ள சக்ரவர்த்திக்குப் போகப் போகத் தனது நிஜத்தோற்றம் புரிந்துவிடுமோ என்ற கவலை ஏற்பட்டது.

## 15

கவலையே உருவாகச் சித்திரவல்லி இளஞ்சென்னியின் படுக்கையருகே அமர்ந்திருந்தாள்.

இளஞ்சென்னியின் வயிற்றில் மூன்று இடங்களில் கத்தியால் குத்தப் பட்டிருந்தது. அரண்மனை வைத்தியர் தக்க முயற்சி எடுத்துக் கொண்டிராவிடில்



இளஞ்சென்னி பிழைத்திருக்கமாட்டான். வைரம் போன்று உறுதியான அவனுடைய உடல், தாக்குதலுக்கு ஈடு கொடுத்திருந்தது.

கோட்டைவாயிலின் அருகே நின்று மலர் தூவி ஜெயசிம்மனை வழியனுப்பிவிட்டு, ஆயிரக்கணக்கான படைவீரர்கள் அணிவகுத்துச் செல்வதைப் பார்த்துப் பாராட்டி, மலர் தூவி விட்டு, குடிலுக்குத் திரும்பி வந்தவளுக்குப் பலவிதத்தில் வேதனை மிகுந்திருந்தது. சொல்லமுடியா வகையில் நெஞ்சை ஏதோ அடைப்பது போலிருந்தது. தன்னிடமிருந்து ஏதோ பறிக்கப்பட்டு எங்கோ சென்று விட்டது போன்ற உணர்ச்சி. கலக்கத்துடன் அமர்ந்திருந்த அவளுக்கு அப்போது கிடைத்த செய்தி இளஞ்சென்னிக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றியது. சாலையின் ஓரத்தே கிடந்த அவனை உழவர்கள் சிலர் கண்டு தங்கள் இல்லத்திற்கு எடுத்துச் சென்றனர். இரத்தப்பெருக்கை நிறுத்திவிட்டு வீரர் உடையிலிருந்ததால் உடனே கங்காபுரிக்குக் கொண்டுவந்தனர்.

ஓரிரு நாட்கள் ஆதுர சாலையில் தங்கியிருந்த இளஞ்சென்னியை மாவலிராயன் தன் குடிலுக்கே அழைத்து வந்து விட்டான். எதற்கும் கலங்காத மாவலிராயனின் விழிகள் குளமாயின. சித்திரவல்லிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைச் சொல்லத் தரமன்று. தனக்கே ஏற்பட்டது போன்ற உணர்ச்சியை அந்த ஆபத்து ஏற்படுத்தியது. இளஞ்சென்னியின் அருகே இரவு பகலாக விழித்திருந்தாள்.

இளஞ்சென்னி கண் விழித்தான். தன்னைச் சுற்றிலும் அமர்ந்திருந்தவர்களை ஒருமுறை நோக்கினான். சோர்ந்த முகத்துடன் மாவலிராயன் அமர்ந்திருப்பதையும் இப்போது தெளிவு மெல்ல மெல்ல ஏற்படுவதையும் கண்டான். சித்திரவல்லி கவலை தோய்ந்த முகத்துடன் இருப்பதைக் கண்டவுடன், அவனுக்குச் சற்றுத் தெம்பு பிறந்தது என்றுகூடச் சொல்லலாம். மெல்லப் புன்னகை புரிய முயன்றான். அவன் உதடு அசைவதைக் கண்ட மருத்துவர் அமைதியாக இருக்குமாறு சைகை காட்டினார். சித்திரவல்லி அவன் அருகே மிகவும் நெருங்கி அமர்ந்தாள். மாவலிராயனால் மௌனமாக இருக்க முடியவில்லை. சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

''அம்மா குழந்தே, நீ அவனை வெறுத்தாய். போர்க்களம் சென்று வெற்றியுடன் திரும்பி வந்தாலாவது நீ அவனை மதிப்பாய் என்று நினைத்தான். எந்தப் பாவியோ அவனைக் குத்திவிட்டான். அவனுக்கு விரோதி என்று ஒருவருமே கிடையாது என்பது எனக்குத் தெரியும். உலைக்களத்தைவிட்டு, நம் வீட்டைவிட்டு எங்கும் சென்றதும் கிடையாது. பொன்நிற மேனியை இரும்புக்கருகே நின்று நின்று கருமையாக்கிக் கொண்டான். உடல்தான் இரும்பு போல் ஆனது ஆனால், அவன் மனசு குழந்தை மனசு. என்னென்னவோ கனவு கண்டேன். அவற்றையெல்லாம் நீ கலைத்துவிட்டாய். அவன் கண் விழித்து 'மாமா' என்று அழைப்பானா என்று ஏங்குகிறேன். மருத்துவர் ஐயா! குழந்தை கண் திறந்து விட்டான். அவனுக்கு இனி ஆபத்து ஒன்றுமில்லையே! பார்த்துச் சொல்லுங்கள்...'' மாவலிராயருடைய குரல் தழுதழுத்தது.

மருத்துவர் சொன்னார்: "மாவலிராயரே, நீங்கள் இனி கவலைப்பட வேண்டாம். இளஞ்சென்னிக்கு இனி ஆபத்தில்லை. ஓய்வுதான் மிக மிகத் தேவை. அவனுக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றி நீங்கள் பேசி அதிர்ச்சியை அளிக்காமலிருந்தாலே போதும்."

இளஞ்சென்னியின் நன்மைக்காக மாவலிராயரும் சித்திர வல்லியும் மெல்ல அங்கிருந்து நடந்தனர். அங்கிருந்தவரை சித்திரவல்லிக்குச் சற்றுத் தெம்பாக இருந்தது. அந்த இடத்தைவிட்டு வெளியே வந்தவுடனே அவள் மனத்தில் பயங்கரப்புயல் வீசத் தொடங்கியது. அவளுடைய கணிப்பு, குதூகலம், உற்சாகம் யாவும் எங்கோ மறைந்தன. உன்மத்தம் பிடித்தவள் போல் மாறிவிட்டாள்.

அந்தி சாயும் போதில் இளஞ்சென்னி படுத்திருக்குமிடத்தில் விளக்கேற்றி வைக்கச் செல்வாள். இளஞ்சென்னி ஆழ்ந்த நித்திரையிலிருப்பான். தீப ஒளியும் தேவாரப் பதிகங்களைச் சித்திரவல்லி மெல்லப் பாடுவதும் அவன் துயிலைக் கலைக்கும். கண் விழித்த இளஞ்சென்னி, சித்திரவல்லியை ஆவல் விழிகளுடன் நோக்குவான். அவள் தன் அருகே வந்து உட்காரமாட்டாளா என்று தோன்றும். ஆனால், பேச முடியாது.

இளஞ்சென்னிக்கு அன்று உடலில் சற்றுப் புத்துணர்ச்சி ஏற்பட்டது. விளக்கேற்ற வழக்கம்போல் வந்த அவளைப் பார்த்துப் புன்முறுவல் புரிந்த அவன், "சித்திரவல்லி!" என்றழைத்தான்.

சித்திரவல்லி ஓடிச் சென்று அவன் அருகே அமர்ந்தாள். இளஞ்சென்னியின் பார்வையில் ஆயிரம் ஆயிரம் செய்திகள் புதைந்திருந்தன.

அந்தப் பார்வை அவள் நலத்தை வினவியது. சித்திரவல்லியின் உடல் சிலிர்த்தது. இளஞ்சென்னியின் நெற்றியை மெல்லத் தன் காந்தள் விரல்களால் தடவினாள்.

"சித்திரவல்லி, உன் முகம் ஏன் வாடி இருக்கிறது?" என்று இளஞ்சென்னி கேட்டான். தன்னைத் தாக்கியவன் ஜெயசிம்மன் என்பதை அவன் எப்படிச் சொல்வான்?

சித்திரவல்லி உதட்டில் விரலை வைத்து 'உஸ்...' என்ற ஒலி எழுப்பி, "சிறிது நாள்களாவது தாங்கள் அமைதியாக இருக்க வேண்டும். எனக்கு எந்தவிதக் கவலையுமில்லை. நீங்கள் கவலைப்படாமல் இருந்தால்தான் உடல் நலமடையும்" என்று அன்புடன் கூறினாள்.

பேச்சுக்குத்தான் வழி இல்லாமல் போய் விட்டது. வாழ்வதற்கே உனக்கு வழி இல்லை என்று என்னை இந்த உலகத்தைவிட்டு அனுப்பிவிட முயன்றானே ஜெயசிம்மன்... அவனுக்கு என்ன துரோகம் செய்தேன்? அவனன்றோ என் சித்திரவல்லியை அபகரித்துக் கொண்டான்!'

விலாவில் இலேசாக வலி ஏற்பட்டது.



அவனை அறியாமல் கண்கள் உள்ளத்துணர்ச்சியைப் புலப்படுத்தின. அவனை அலட்சியப்படுத்திய சித்திரவல்லி இதோ அவனருகே அமர்ந்திருக்கிறாள். 'நெற்றியைத் தடவுகிறாள். தடாகத்து அல்லித் தண்டெடுத்துப் பூசுகிறாளா? வாய் திறந்து பேசாதே என்கிறாள். ஆனால், வாய்விட்டுக் கதறவேண்டும் போலிருக்கிறதே. ஓவென்று அலறினால் புண்ணுக்கு இடப்பட்டிருக்கும் மருந்துக் கட்டு விட்டுவிடுமாம். விலகட்டுமே! அங்கே போர்க்களத்தே வேலால் தாக்குண்டும் ஈட்டியால் மார்பு பிளந்தும், வாளால் வெட்டப்பட்டும் துடிக்கும் என் தோழப் போர்வீரர்களுக்கு யார் மருந்திடுவார்கள்? இனிய ஸ்பரிசத்தை அளித்து வலி தெரியாமல் யார் செய்வார்கள்? எனக்கு மட்டும் எதற்கு?

சித்திரவல்லி போர்க்களம் செல்லட்டுமே! அவள் அபிமான ஜெயசிம்மனைச் சந்திக்கலாம். மண்ணிலே கிடக்கும் வீரர்களுக்கு மருந்திடலாம்.

இந்த மருத்துவருக்கும் இங்கேயே என்ன வேலை? போர்க்களத்திற்குச் சென்றால் குற்றுயிராய்க் கிடக்கும் வீரர்கள் பிழைப்பார்களே. என்னைக் காப்பாற்றி என்ன பலன்? நான் வாழ்ந்து என்ன பயன்?

மாவலிராயருக்குச் சம்மட்டி அடிப்பதற்கு ஆள் கிடைக்க மாட்டார்களா?

இனி நெருப்பின் பக்கமே போகமாட்டேன். நான் எந்தக் கனவோடு இவ்வளவு நாள் மௌனமாக இரும்புடனும் நெருப்புடனும் கழித்தேனோ அந்தக் கனவு சிதைந்த பிறகு இனி இரும்பின் முகத்தில் விழிக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. நெருப்புடன் விளையாட ஆசையில்லை. உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் காதல் தீ அணைந்துவிட்ட பிறகு எந்தத் தீயையும் நெருங்கத் தயாராயில்லை...

இளஞ்சென்னியின் விழிகள் பெருக்கிய கண்ணீருடன் இப்போது விம்மலும் சேர்ந்தது. உடல் குலுங்கிற்று. ஏதோ சொல்ல அவன் உதடுகள் துடித்தன.

சித்திரவல்லி அருகே குனிந்து மிக நெருங்கி அவன் கண்ணீரைத் துடைத்து, "இளஞ்சென்னி, இளஞ்சென்னி... என்ன இது? ஏன் அழுகிறாய்? பயங்கரமாக உள்ள ரணம் ஆறவேண்டாமா? எனக்காக நீ கண்ணீர் விடுவதை நிறுத்தக்கூடாதா?" என்று கூறினாள். அவன் கன்னங்களில் வடிந்திருந்த நீரை அவளது பூ விரல்கள் துடைத்தன.

'ஆஹா! இப்படியே அழுதுகொண்டிருக்கலாம் போல் தோன்றுகிறதே. அந்த விரல்கள்தாம் என் உடல் நோவை நொடியில் ஓட்டிவிடும் மாயசக்தி படைத்தவையாயிருக்கின்றன. இவ்வளவு நாள் ஏமாற்றத்திற்கும் இந்த அந்திவேளை போதுமே! அழுதாலே ஓர் இன்பம் பிறக்கிறதென்றால் இப்படியே அழுதுகொண்டிருக்கலாம் போல் தோன்றுகிறது. நான் இனி யாருக்காக வாழ

வேண்டும் என்று சற்று முன்பு எண்ணினேன். இனி நான் எனக்காக வாழப்போகிறேன்... நான் இப்படியே துயரப்பட்டுக்கொண்டிருப்பதற்காக வாழப்போகிறேன். அப்பொழுதுதானே நீ என் அருகே இருந்து என் துயர் துடைக்கப் பாடுபடுவாய்?'

சித்திரவல்லியின் நெஞ்சத்திலும் புரியமுடியாத ஒரு வேதனை. இளஞ்சென்னியின் கண்ணீர் ஏதாவது சேதி சொல்லிவிட்டதா?

"சித்திரவல்லி..." என்று மெல்ல அவன் அழைத்தான். சித்திரவல்லியின் கரங்கள் அவனுக்கு இதமளிக்க முயன்று கொண்டிருந்தன.

"நமது படைகள் புறப்படும்போது நீ வழியனுப்பினாயா?" இளஞ்சென்னி கேட்பதற்கு முன்பே படை புறப்பட்ட செய்தியையும், மலர் தூவி வழியனுப்பியதையும் சித்திரவல்லி சொன்னாள்.

"வடக்குக் கோட்டைவாயில் வழியே ஆயிரக்கணக்காக வீரர்கள் அணிவகுத்துச் செல்லும்போது நீயும் கம்பீரமாகச் செல்வாய் என எதிர்பார்த்தேன். ஆனால், உனக்கு மற்றொரு முக்கிய பணியை அளித்திருந்தார்கள் போலும்" என்று கூறிச் சித்திரவல்லி அவனுக்கு உற்சாகமூட்ட விரும்பினாள்.

"மகத்தான பணிதான். ஆனால், அந்தக் கடமையிலும் நான் வெற்றியடையாமல் விதி குறுக்கிட்டுவிட்டது..." இளஞ்சென்னி பேசமுடியாமல் பேசினான்.

"யாரோ பாதகன் உன்னைப் பயங்கரமாகத் தாக்கியிருக்கிறான். யார் செய்த புண்ணியமோ நீ பிழைத்துவிட்டாய்!" சித்திரவல்லி தேற்றினாள்.

"பாதகன் என்று கடும் சொல்லால் தாக்குவதால் என்ன பயன்? அவன் தன் கடமையைச் செய்தான். தன் நாட்டின் மானம் காக்கச் சிலையை மீட்க வேண்டும் என்பது அவனது குறிக்கோள். சோழநாட்டு மானத்தைக் காப்பாற்ற முடியாமல் நான் மண்ணில் வீழ்ந்தேன்." - இளஞ்சென்னி மெல்ல பேசினாலும் அதிலே சீற்றம் மிகுந்திருந்தது.

"சிலைக்காகவா உன்னைத் தாக்கியிருக்கிறான் அந்தக் கொடியவன்?"

"பாதகன், கொடியவன். சிலை மட்டும் அவனது குறிக்கோளன்று. தன் தாய்நாட்டின் மானங்காக்க அதை மீட்பது அவனது முதல் லட்சியம்."

"எதிரி நாட்டுத் துரோகி உன்னைக் குறிவைத்தானே, அவன் வாழ்வானா? ஐயோ, அந்தச் சிலை என்ன ஆகியது? உன்னிடமிருந்து நடந்த செய்தியைக் கேட்டறிய ஒற்றர் படைத் தலைவர் இரண்டு நாட்களாக அலைகிறார். பிரம்மராயர் பலமுறை வந்து விட்டார். சிலை தாராசுரம் போய்ச் சேரவில்லையாம். அவரை நான் நெருங்க விடவில்லை. உன்னைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன்."

"விஷயம் அறிந்தால் துரோகி என்று உன் இதயம் சபிக்கும். அவன் இந்த நாட்டுக்குச் செய்திருக்கும் பாதகம் மன்னிக்கக் கூடியதேயில்லை சித்திர



வல்லி. நானே ஒருவகையில் இந்த நாட்டுக்குத் தீங்கு செய்துவிட்டேனோ என்று அஞ்சுகிறேன். மூன்று இடங்களில் கூர்மையான வாளால் தாக்குண்டு குற்றுயிராய்க் கிடந்த நான் இறந்து போயிருந்தால் நிலையே வேறு. உயிர் பிழைத்துவிட்டேன். சுயநினைவு வந்தவுடனே நான் சதிக்கும்பலைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும். உன்னைத் தவிர என் அருகே வேறு யாரும் நெருங்கவில்லை."

"ஏன், என்னிடம் சொல்லியிருக்கக்கூடாதா? சோழநாட்டில் சதி செய்பவர்கள் இருக்கிறார்களா? படையெடுப்பு வேளையில் சதிகாரர்கள் இங்கே நடமாடியிருக்கிறார்களா?" சித்திரவல்லி பரபரப்புடன் கேட்டாள்.

"ஆமாம். சித்திரவல்லி, உன்னிடம் எப்படிக் கூறுவது என்று தயங்கினேன்."

"ஏன், எனக்கு அரசியல் விவகாரங்கள் தெரியாதா? வீட்டுக்குள் அடைந்து கிடக்கும் பேதை என்று எண்ணிவிட்டாயா?"

"அப்படி நினைக்கவில்லை சித்திரவல்லி. உன் மனம் வேதனைப்படுமே என்று கவலைப்பட்டேன்."

"என்ன சொல்கிறாய் இளஞ்சென்னி? துரோகிகளைப் பற்றிக் கூறினால் நான் வேதனைப்படுவேனா?"

"சொந்த நாட்டின் உப்பைத் தின்று அதற்கு இரண்டகம் நினைப்பவன் துரோகி. ஆனால், தன் நாடு வாழப் பிறநாட்டில் தன் உயிரைப் பணயமாக வைத்துக் காரியத்தைச் சாதித்துச் செல்பவனை என்ன வென்றழைப்பது?"

"என்ன பெயர் சொல்லி அழைப்பது என்பதைப் பிறகு ஆராயலாம். சிலையின் கதியென்ன?" - சித்திரவல்லி பரபரப்படைந்திருந்தாள்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன். சிலை தாராசுரம் போய்ச் சேர்ந்திருக்காது. அதை மீண்டும் சாளுக்கியநாட்டிற்கே எடுத்துச் சென்றிருப்பார்கள். அதைத் தக்கவர்களிடம் எடுத்துக்கூறாமல் நான் இவ்வளவு நாட்களைக் கழித்துவிட்டேனே..." இளஞ்சென்னி வேதனைப்பட்டான்.

"இன்றுதானே சற்றுக் கண்விழித்தாய்? இப்போதே சொல்லு. எதிரி நாட்டு ஒற்றர்கள் இங்கே சதிசெய்து விட்டார்களா?"

"ஆமாம் சித்திரவல்லி. சிலையை மீட்க மட்டும் வரவில்லை. நமது மாமன்னரைக் கொல்லவும் வந்தவர்கள்."

"ஆ...!" என்று கூவினாள் சித்திரவல்லி.

"சித்திரவல்லி, என் விலாவில் ஒரு குத்து. அடிவயிற்றில் ஒரு குத்து. இதயத்தின் அருகே ஒரு குத்து - இவ்வளவையும் நான் தாங்கிக் கொண்டு பிழைத்துவிட்டேன், ஆனால்..."

"ஆனால், ஆனால் என்று பீடிகை போட்டு ஒவ்வொரு கணத்தையும் வீணாக்குகிறாயே! சதிகாரர்களைக் கண்டுபிடிக்க வேண்டாமா? குணரேகாவும் சிலையுடன் சென்றாளே, அவளுக்கும் ஆபத்து நேர்ந்ததா?" சித்திரவல்லி துடித்தாள்.

"ரேகா... பெண்ணென்னும் போர்வையில் அவள் ஒரு சதிகாரி!"

"ஐயோ... என் நெஞ்சை வலிக்கிறதே. அவள் பல ஆண்டுகளாக இங்கே இருந்தாளே..."

"சதிக்குக் காலம் நேரம் பெரிதல்ல..."

"இளஞ்சென்னி, இப்படி ஏன் சுற்றி வளைக்கிறாய்?"

"தாமதப்படுத்தும் அந்தச் சிறு கணமாவது நீ அதிர்ச்சியடையாமல் இருப்பதற்காகவே..."

"நான் அதிர்ச்சியடைவேனா... சோழநாட்டிற்குச் சதி செய்தவனைப் பற்றிக் கேள்விப்படும் ஒவ்வொரு குடிமகனும் அதிர்ச்சியடைவான்."

"சொல்லு இளஞ்சென்னி, சிலையைக் கடத்தியவர் யார்? மன்னரைக் கொல்லச் சதி செய்தவர் யார்?"

இளஞ்சென்னி தன் மார்பைப் பிடித்துக்கொண்டான். "சித்திரவல்லி, உன் இதயத்தைக் கல்லாக்கிக்கொள். அதிர்ச்சியைத் தாங்க இதயத்தைத் ஆயத்தப் படுத்திக்கொள்," என்று கூறிச் சிறிது நேரம் மௌனமானான். பிறகு, "மலர் மாலையில் பூநாகம் போன்று, உன்னுடன் உறவாடிய... ஜெயசிம்மன்...!" அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. ஓவென்று பெரும் கூக்குரல்.

சித்திரவல்லி சிலையானாள்.

## 16

ஒவ்வொரு நாளும் சோழர்படைகளின் முன்னேற்றத்தைச் சாளுக்கிய நாட்டு ஒற்றர்கள் ஆகவமல்லனுக்கு அறிவித்த வண்ணமிருந்தனர். ஜெயசிம்மனைத் தவிர ஒற்றர்படையைச் சேர்ந்தவர்கள் பலர் சோழநாட்டில் ஊடுருவி இருந்தனர். மூன்று கிளைகளாகச் சோழர்படைகள் பிரிந்து வந்து தாக்கப்போவதை எதிர்பார்த்து, எதிர்த்து நிற்கவும் திருப்பித்தாக்கவும் முறியடிக்கவும் தோற்று ஓடும் சோழர்படைகளைத் துரத்தி ஓட்டவும் திட்டமிட்டிருந்தான் ஆகவமல்லன். ஒவ்வொரு நாளும் நடுநிசியையும் தாண்டி மந்திராலோசனை சபைக் கூட்டம் நடக்கும். ஆகவமல்லனின் பட்டத்தரசிக்கு அரசரின் ஆலோசனைக் கூட்டம் எரிச்சலை அளிக்கும். "பாதி நாடு கேட்கும் ஜெயசிம்மனை முறியடிக்கத் திட்டம் வகுக்காமல் சோழர்படைகளையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறாரே அரசர்" என்ற வருத்தம் அரசியை ஊண்



உறக்கமின்றித் தவிக்கச் செய்தது. தனது தகுதியை இழக்க விரும்பாத அரசி நாகார்ஜுனரது உதவியை நாடினாள்.

"நாகார்ஜுனரே, இன்றைய செய்தி என்ன?" என்று கேட்டாள் அரசி.

"சோழர்படைகள் காஞ்சி நகரில் தங்கியிருக்கின்றனவாம். அங்கே பல சிற்றரசர்கள் தங்கள் படைகளுடன் சோழமன்னருக்கு உதவியாகச் சேர்ந்து விட்டனராம்" என்றார் நாகார்ஜுனர்.

பெருமூச்சு விட்டாள் அரசி. "நாகார்ஜுனரே! ஒரு சாளுக்கிய நாட்டைத் தாக்க எவ்வளவு படை பார்த்தீர்களா? சோழர்படைகள் மட்டுமே வந்தால் போதாதா? இதில் ஏதோ பின்னணிச் சதி இருக்கிறது என்று உங்களுக்குப் புரியவில்லையா?" என்று கேட்டாள் அரசி.

நாகார்ஜுனருக்கு ஜெயசிம்மனைக் கண்டால் என்றுமே பிடிக்காது. சமயம் பார்த்து தூபக்காலில் குங்குலியம் தூவியதுபோல், "தேவி, என்னைக் கோபிக்கக்கூடாது... தவறாகவும் நினைக்கக் கூடாது" என்று பேச்சைத் தொடங்கினார்.

"தங்களைத் தவறாக நான் நினைத்தால் முக்கியமான ஆலோசனைக்கு உங்களுடன் பேச விரும்புவேனா?"

தொண்டையைக் கனைத்துக்கொண்டு நாகார்ஜுனர், "தேவி, ஜெயசிம்மன் சாளுக்கியநாட்டை அபகரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். இல்லாவிட்டால் சோழமன்னருடன் சரிசமமாக அணிவகுத்து வருவாரா?" என்றார்.

தேவி நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள். "உம்... சொல்லுங்கள்... சொல்லுங்கள்... இந்த நாட்டை அபகரிக்க விரும்பும் இளவரசரின் சதியை முடியடிக்க நான் உறுதி கொண்டுவிட்டேன்" என்று உற்சாகமூட்டினாள்.

"அப்படியா? ஜெயசிம்மனை மன்னர் முழுமையாக நம்புகிறாரே..."

"வெளுத்ததெல்லாம் பால் அவருக்கு. பாதி சாம்ராஜ்யம் கேட்கிறார் இளவரசர். ஆனால், முழுராஜ்யத்தையும் அபகரிக்கத் திட்டமிடுகிறார். அவரைத் தடுப்பது எப்படி நாகார்ஜுனரே? அரசரின் அத்யந்த நண்பரான நீங்கள், அரசரைப் பதவி இழக்க விடுவீர்களா?" என்று அரசி கேட்டாள்.

"இந்தச் சமயத்தில் மிகவும் கவனமுடன் இருக்கவேண்டும். ஜெயசிம்மனை முறியடிக்க நாம் திட்டம் தீட்டுவதாக வெளியே தெரியக் கூடாது. சோழர்கள் பொல்லாதவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டைக் கொள்ளையடித்து நிர்மூலமாக்கி விடுவார்கள்..."

நாகார்ஜுனரின் பேச்சு சற்றுக் கவலையைக் கொடுத்தது. "என்ன செய்ய வேண்டும் நாகார்ஜுனரே...?"

"சோழர்படைகளை முறியடித்த பிறகு இளவரசரைக் கவனித்துக் கொள்ளலாம்..."

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

இப்படிச் சொன்னவுடன் அரசி நகைத்தாள். அதில் ஏளனம் கலந்திருந்தது...!

"சோழர்படைகளை முறியடிக்கும் வரை இளவரசர் மௌனமாக இருப்பாரா? அவரும் சோழர்படைகளுடன் சேர்ந்துகொண்டுதானே வருகிறார். பயங்கரத் தாக்குதலை நம்மால் எப்படி முறியடிக்க முடியும்?"

"ஜெயசிம்மன் மகா தந்திரசாலி. சோழர்களின் நண்பராகக் காட்சியளித்தாலும் கடைசியில்தான் அவருடைய திட்டம் - தானே சாளுக்கிய நாட்டை வசப்படுத்திக்கொள்வது..."

நாகார்ஜுனரின் பேச்சு தேவிக்குப் புரியவில்லை. "என்ன சொல்கிறீர்கள் நாகார்ஜுனரே! சோழர்களுடன் நண்பராக வருகிறார். யுத்தத்தில் சோழர்கள் வென்றால் முழு நாடு அவருக்கு. சோழர்கள் முறியடிக்கப்பட்டால் அரசருடன் பேரம் பேசி, பாதி நாட்டைக் கேட்பார். எப்படிப் பார்த்தாலும் ஆபத்துதானே?"

தேவி எளிதாக மடக்கிவிட்டது நாகார்ஜுனரின் வாயை அடைத்துவிட்டது. "உம்... உம்..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

"நாகார்ஜுனரே! சோழரின் நண்பராக வந்தாலும் விரோதியாக வந்தாலும் இளவரசரால் நமக்கு ஆபத்து...! என்று கூறத் தொடங்கினாள். நாகார்ஜுனர் தலையை அசைத்தார்.

"சாளுக்கியநாட்டின் எல்லையை நெருங்கும்போதே இளவரசரை இந்த உலகைவிட்டே அனுப்பிவிட்டால்..." தேவியின் இந்த யோசனை நாகார்ஜுனரை மெய்சிலிர்க்க வைத்தது.

"என்ன மௌனமாய் இருக்கிறீர்கள்? அதற்குண்டான வழி வகையை யோசனை செய்யுங்கள். சாளுக்கியநாடு காப்பாற்றப்பட வேண்டுமானால் இளவரசர் ஒழிய வேண்டும். நாளைக்குள் எனக்குத் திட்டம் தெரிய வேண்டும்....!" - தேவி கண்டிப்பாகக் கூறினாள்.

அரசியின் கட்டளையை ஏற்று, ஜெயசிம்மனை எவ்வாறு ஒழித்து விடுவது என்று சிந்தித்தவாறு நாகார்ஜுனர் சென்று கொண்டிருந்தார்.

வழியில் அந்தப்புரத்துப் பணிமகள் ஒருத்தி அவரைச் சந்தித்தாள். தேவகிதேவி அவரைக் காண விரும்புவதாகத் தெரிவித்தாள். நாகார்ஜுனர் திடுக்கிட்டார். என்றாலும் தனது படபடப்பை ஒருவகையாகத் தேற்றிக் கொண்டு தேவகிதேவியைச் சந்திக்கச் சென்றார்.

தேவகிதேவியின் தந்தை அவருடைய இளவயது நண்பர். ஜெயசிம்மனுடைய போக்குத்தான் அவருக்குப் பிடிக்காதே தவிர, தேவகி தேவியிடமோ, அவரது தந்தையிடமோ அவருக்கு எந்தவிதக் குரோதமும் இல்லை.

தேவகி அவரை வரவேற்றாள். அவள் முகத்தில் கவலை குடி கொண்டிருந்தது.



"வாருங்கள் மாமா, இந்தப் பக்கமே வருவதில்லை. உங்கள் மருமகள் நலமாக இருக்கிறாளா என்று விசாரிப்பதுகூட இல்லை..." என்று வரவேற்றாள் தேவகி.

அவரது சிரிப்பில் அசட்டுத்தனம் தவழ்ந்தது.

"தங்களிடம் ஒரு முக்கிய யோசனை கேட்க வேண்டும் என்று எண்ணினேன். என் தந்தைக்கு மிகவும் வேண்டியவர் தாங்கள்..." என்ற பீடிகையுடன் பேச்சைத் தொடங்கினாள் தேவகி. நாகார்ஜுனருக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. இவள் என்ன கேட்கப் போகிறாளோ...?

"என் கணவர் எத்தகைய ஆபத்தான நிலையில் சோழநாடு சென்றார் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று கூறிய தேவகி, அவரது முகத்தையே உற்று நோக்கினாள்.

"ஆமாம் தேவகி. மிகவும் ஆபத்தான நிலை..." என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டே கூறினார் நாகார்ஜுனர்.

"அதைவிட ஆபத்தானது சோழமன்னருடன் தொடர்ந்து வருவது."

"ஆமாம், தேவகி! இளவரசருக்கு அசாத்தியத் துணிவு..."

"அதைவிட ஆபத்தானது அவர் பாதிராஜ்யம் கேட்டிருப்பது..." இதைக் கூறிவிட்டு தேவகி மௌனமானாள். நாகார்ஜுனரும் ஏதும் பேசவில்லை.

"வேறு ஏதாவது செய்தி தங்களுக்குத் தெரியுமா, மாமா?" என்று கேட்டாள் தேவகி. நாகார்ஜுனருக்கு நடுக்கம்தான்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "ஏதும் தெரியாதே தேவகி. சோழர்படைகள் காஞ்சிபுரத்தில் தங்கி இருக்கின்றவாம்..." என்றார்.

தேவகி வருத்தம் தோய்ந்த குரலில், "அதைக் கேட்கவில்லை மாமா. அவர், சோழநாட்டில் மற்றொரு பெண்ணை மணந்து கொண்டு வருகிறாரா என்பதை உங்களால் அறிந்து சொல்ல முடியுமா?" என்றாள்.

நாகார்ஜுனருக்கு உயிர் வந்தது. மெல்லச் சிரித்தார். "தேவகி, ஆண்கள் - அதிலும் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நூற்றுக் கணக்கான பெண்களை மணப்பார்கள். அதற்காகக் கவலைப் படலாமா?"

"கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்? என் தலைவர் பாதி ராஜ்யம் கேட்பதும், சோழநாட்டிலிருந்து மணம் புரிந்துகொண்ட பெண்ணை அழைத்து வருவதும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டதுபோல் தோன்றுகிறது. சோழநாட்டுப் பெண்ணுக்கு அரியணையில் இடம் கொடுப்பதாக வாக்களித்திருக்கலாம். அதனால் சோழமன்னர் என் தலைவருக்கு உதவிசெய்வதாகக் கூறியிருக்கலாம்." - தேவகியின் இந்தப் பேச்சு நாகார்ஜுனரின் சிந்தனையைத் தூண்டியது.

மேலும் அவளது உள்ளத்திலுள்ளதை வெளியே கொண்டுவர விரும்பி, "எந்தப் பெண் வந்தாலும் உனது உரிமையைப் பறிக்க முடியாது தேவகி. நாங்களெல்லாம் எங்கே போய்விட்டோம்?" என்றார்.

"மாமா, அதற்காகத்தான் நான் தங்களை அழைத்தேன். ஒரு யோசனை தோன்றுகிறது... பாதிராஜ்யம் வேண்டாம் என்று சொல்லிவிட்டால்...?"

"நீ சொல்லிவிட்டால் போதுமா? உன் கணவர் சொல்ல வேண்டாமா?"

"உண்மையில் என் கணவர் பாதிராஜ்யம் கேட்கவே மாட்டார்."

"ஏன், முழுராஜ்யமே கேட்பாரோ?"

"கேட்டாலும் என்ன தவறு? நியாயமாக அவரைச் சேர வேண்டியதுதான் இந்த நாடு. ஆனால், அவருக்கு அப்படிப்பட்ட ஆசை இல்லை. தனது சகோதரர் கூறுவதை மீறமாட்டார். அவருக்கு விரோதமாக ஏதும் செய்யமாட்டார். அவரை மணந்துள்ள சோழ மோகினியின் தூண்டுதலாகத்தான் இருக்க வேண்டும்."

"அதனால்...?"

"சாளுக்கியநாட்டு எல்லைக்குள் அவர் நுழையுமுன்பே... அந்தச் சோழமோகினியைத் திருப்பி ஓடுமாறு செய்துவிட வேண்டும்.."

"அதெப்படி முடியும்? உன் கணவர் விரும்பித்தானே அவளை மணந்திருப்பார்? மேலும், சோழமன்னரின் பக்கபலம் அந்தப் பெண்ணுக்கு இருக்கலாம்... அவளை எப்படி விரட்ட முடியும்?"

"சோழமன்னரின் ஆதரவு இருக்கலாம். ஆனால், அவள் அரச வம்சத்தைச் சேர்ந்தவளாக இருக்க முடியாது... ஒரு சாதாரண குடிமகள் என் கணவரை நிர்ப்பந்தப்படுத்தி மணந்திருக்கலாம். அல்லது என் கணவர் ஏதாவது காரணத்திற்காக அவளை மணந்து கொண்டிருக்கலாம். அந்தக் காரணம் என்னவாக இருக்க முடியும்- சோழநாட்டின் ரகசியத்தை அறிவதற்காகவே இருக்கலாம். சாளுக்கிய நாட்டு எல்லைக்குள் நுழைந்த பிறகு அவள் தயவு எதற்கு? அவளை ஒழித்துவிட வேண்டியதுதானே?"

தேவகிதேவியின் அழுத்தந்திருத்தமான இந்தப் பேச்சு நாகார்ஜுனரைத் திகைக்க வைத்தது. அவர் பேச வாயெடுக்கு முன்பு, "எனக்காக ஓர் உதவி செய்ய முடியுமா? என் தலைவருடன் அவளும் உடன் வருகிறாளா என்று அறிந்து வரமுடியுமா?" என்று கேட்டாள்.

"என்னைப் போகச் சொல்கிறாயா?"

"வயதான காலத்தில் தங்களை ஏவுவேனா? ஒற்றர்களின் உதவியுடன் தான் செய்யச் சொல்கிறேன்..."

"ஏனம்மா, இதை அரசரிடம் நீயே சொன்னால் அவரே செய்து விடுவாரே..."

"இல்லை, மாமா. என்னை அரசரிடம் இப்போதெல்லாம் நெருங்க விட அரசி சம்மதிப்பதில்லை. என்னைக் கண்டாலே வெறுக்கிறாள்..."



நாகார்ஜுனர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு, "உன் கணவருடன் அவள் வருவதாகவே வைத்துக்கொள்வோம். அவளை எப்படி ஓட்டிவிடுவாய்?" என்று கேட்டார்.

"அதைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். பாதிராஜ்யத்தை அடைய வேண்டாம். என் கணவரின் பாதிப்பாகத்தை மற்றொருத்தி அபகரிக்கவிட மாட்டேன். என் தந்தையிடமும் சொல்லிவிட்டேன். அவருக்குக் கோபம் பொங்கி வழிகிறது. அவர் படைகளைச் சாளுக்கியநாட்டிற்கு அனுப்பி உதவப்போவதில்லை."

"அதெப்படி அம்மா, நாட்டைக் காப்பதற்கு உதவாவிடில் பிறகு எப்போது தான் உதவுவாராம்?"

"அதெல்லாம் வேறு விஷயம். இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? ஒற்றர்கள் மூலம் செய்தி அறிந்து சொல்லப் போகிறீர்களா, இல்லையா?" கண்டிப்பான குரலில் கேட்டாள் தேவகி.

நாகார்ஜுனர் ஏதும் பேசவில்லை. 'இதென்ன இவள் ஏன் என்னைப் பிடித்தாள். ஜெயசிம்மனுக்கு விரோதமாக நான் திட்டமிடுவதை அறிந்திருப்பாளோ? எப்படி இருந்தால் என்ன? இதுவும் நன்மைக்கே. தேவகி தேவியின் வேண்டுகோளை நிறைவேற்றுவதுபோல் நடிப்போம்...' என்று மனத்தில் திட்டமிட்டு, "தேவி, உனது வேண்டுகோளை இன்றே ஒற்றர்படைத் தலைவரிடம் சொல்கிறேன்" என்று கூறிவிடை பெற்றுக் கொண்டார்.

நாகார்ஜுனருக்குப் புதுப்பிரச்னை தேவகிதேவியின் தந்தை இராட்டிர கூட நாட்டுத் தளபதி. இந்த மகத்தான யுத்தத்தில் சாளுக்கியர்களுக்கு அவர் உதவவில்லை என்றால் போரின் முடிவு எப்படி ஆகுமோ - மன்னர் இதை அறிவாரோ, மாட்டாரோ என்ற எண்ணத்தில் மன்னரிடம் சென்றார்.

சாளுக்கிய சக்கரவர்த்தி ஆகவமல்லன் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

## 17

"வருக வருக நாகார்ஜுனரே தங்களைத்தான் இப்போது நினைத்தேன்" என்று உற்சாகமாக வரவேற்றார் ஆகவமல்லன்.

"சோழநாட்டுப் படைகள் காஞ்சியில் இருக்கின்றனவாம். அமாவாசை கழிந்ததும் புறப்படும். தனது மூலபல சைன்ய பலத்துடன் வருகிறான் சோழன். பலிபீடத்திற்குச் செல்லும் ஆடு மகிழ்ச்சியுடன் செல்வது போல..." என்று கூறிய ஆகவமல்லன் மிக மெல்லிய குரலில், "நாகார்ஜுனரே! போரில் சோழமன்னன் தோற்று ஓடுவது கூட எனக்குப் பெரும் வெற்றியாகத் தோன்றவில்லை. அவன் கவர்ந்து சென்றானே துவாரபாலகர் சிலை. அதை மீண்டும் நாம் அடையப் போவதுதான் வெற்றியிலும் வெற்றி!" என்றார்.

நாகார்ஜுனருக்கு ஏதும் தெரியவில்லை.

"நாகார்ஜுனரே, என் தம்பி ஜெயசிம்மனுடைய சேவையை என்ன வென்று கூறுவது? அந்தச் சிலையை ஒரு வண்டியில் ஏற்றி அனுப்பியுள்ளான். படைகளுக்கு முன்பாகவே அந்த வண்டி வந்துவிடும். கல்யாணபுரத்துச் சிவபெருமான் தனது துவார பாலகரைத் திரும்பவும் பெற்று விடுகிறார் என்பது மகிழ்ச்சிகரமான செய்தி அல்லவா? சோழநாட்டு வீரர்கள் உண்மையிலேயே கெட்டிக்காரர்கள் இல்லை. ஒரு குருட்டதிர்ஷ்டம் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தருகிறது. இனி துரதிர்ஷ்டம் அவர்களைச் சூழ்ந்துவிட்டது. இந்தச் சிலையை நாம் அடையப் போகிறோம். அதேபோல், நமக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கும் சோழனிடமிருந்து நிரந்தர விடுதலையும் அடையப் போகிறோம். இதற்கெல்லாம் ஜெயசிம்மனின் முயற்சிதான் காரணம். இந்த நாடு என்றும் அவனுக்குக் கடமைப்பட்டுள்ளது." ஆகவமல்லன் சொல்லிக்கொண்டே போகும் போது நாகார்ஜுனருக்கு எரிச்சலாக இருந்தது.

"நாகார்ஜுனரே! உமக்கு ஒரு மகத்தான பணி. துவாரபாலகரை நீங்கள்தான் வரவேற்க வேண்டும்... சிலை வடபெண்ணை ஆற்றங்கரையை அடைந்துவிட்டதாம். முட்டாள்கள் இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியில் கொண்டுவருகிறாள்கள். நீங்கள் உடனே புறப்பட வேண்டும். நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியிலே அந்தச் சிலையைக் கொண்டுவரவேண்டும். உங்களைத் தவிர வேறு யாராலும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது...." என்றார்.

நாகார்ஜுனர் மறுமொழி பேசவில்லை. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

அரசியிடம் ஓடினார். "தேவி! தங்களுடைய திட்டத்தை நிறைவேற்ற நானே போகிறேன். இப்போதே போகிறேன். சிலையைக் கொண்டு வருவேன். வீரர்களை மறைவாக நிறுத்தி வைத்து ஜெயசிம்மனைத் தீர்த்துவிட்டு வரச் செய்வேன்" என்றார்.

அரசியின் உடல் சிலிர்த்தது.

சித்திரவல்லி சிலையாய் நின்றாள். மாவலிராயன் தன் எதிரே வந்து நிற்பதைக்கூட அவள் உணரவில்லை.

"மகளே!" என்று அவர் அழைத்தது அவள் காதில் விழவில்லை. அவளுடைய சிந்தனையெல்லாம் சோழர்படைகளின் இடையே கம்பீரமாகச் செல்லும் சோழமன்னனின் மீது இருந்தது. அவர் அருகே செல்லும் ஜெயசிம்மனின் மீது இருந்தது.

'மன்னருக்கு உறுதுணையாக அவர் செல்லுவார் என்று எண்ணினோம். நாகப்பாம்பை அல்லவா உடன் அழைத்துச் செல்கிறார் மன்னர்! மூவேந்தர்களையும் அடக்கி முப்பெரும் நாடுகளையும் ஆளும் அரசருக்கு ஜெயசிம்மன் அன்னிய நாட்டவன், சதிகாரன் என்பது எப்படிப் புலப்படாமல் போய்விட்டது?



'சித்திரவல்லி! நீ மட்டும் எப்படி அவரை நம்பினாய்? ஒரு சதிகாரனைக் காதலித்தாயே! சோழநாட்டிற்குச் செய்த பெரிய துரோகமல்லவா அது!' என்று அவளது உள் மனம் கேட்டது.

"நான் துரோகி ஆகமாட்டேன். துரோகி ஆகமாட்டேன்" சித்திரவல்லி தலையை அசைத்தாள். விம்மினாள்.

"குழந்தாய்... உன் உடல் ஏன் இப்படி நடுங்குகிறது?" மாவலிராயன் சித்திரவல்லியின் தோள்களை அணைத்தபடி கேட்டான்.

கல்லணை திறக்கப்பட்டவுடன் பாய்ந்துவரும் காவிரி வெள்ளம்போல் அடக்கி வைத்திருந்த துக்கத்தை, "அப்பா" என்ற பெரும் அலறலால் புலப்படுத்தி, அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். சிறிது நேரம் கழித்து ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய், "அப்பா, இப்பொழுதே பிரம்மராயர் சுவாமிகளைச் சந்திக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

சோழீச்சர்கோயிலில் இறைவனையும் இறைவியையும் மெய்மறந்து சிறிது நேரம் துதித்துவிட்டு பிரம்மராயர் வீட்டிற்கு ஓடினாள்.

பிரம்மராயர் வசிக்கும் குடில் அதிக ஆடம்பரமில்லாதது. அவர் உறங்கிக்கொண்டிருந்தார்.

சித்திரவல்லி அவர் பாதத்தருகே வந்து நின்றாள். எழுப்பலாமா வேண்டாமா என்று ஒரு கணம் எண்ணினாள்.

'சுவாமி, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். என்னால் சோழ நாட்டுக்கு எந்தவித ஆபத்தும் வந்துவிடக்கூடாது' என்று முணுமுணுத்தாள். தன் இடுப்பிலிருந்த ஓலையொன்றை எடுத்து அவரது தலைப்பக்கம் வைத்தாள், திரும்பினாள்.

அன்று நடுநிசியில் இளம்சென்னி இருக்குமிடம் சென்றாள். அவனும் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான். சோழீசர் கோயில் திருநீற்றை அவன் நெற்றியிலிட்டாள். வெளியே வந்தாள். அவளது உறுதிக்கும் முடிவுக்கும் அந்த இருள் ஒரு பொருட்டா?

பொழுது புலர்ந்தது. மாவலிராயனைத் தூக்கத்திலிருந்து எழுப்பியவர் பிரம்மராயர். மாவலிராயன் திடுக்கிட்டான். அந்த வேளையில் சுவாமிகள் தன்னைத் தேடிவந்த காரணம் என்ன? மாவலி பரபரப்புடன் எழுந்தான். "சுவாமி, வாருங்கள், வாருங்கள்" என்று வரவேற்று, "இவ்வளவு காலையில் ஏழையின் குடிலுக்கு வந்த காரணம் என்னவோ? சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே..." என்றார்.

"சொல்லி அனுப்பியிருந்தால் வந்திருப்பாய்... ஆனால் உன் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும் போது நானும் தொந்தரவு செய்வது சரியா?"

என்று கூறிய பிரம்மராயர் சுற்று முற்றும் பார்த்தார். மாவலிராயனுக்குப் 'பகீர்' என்றது. தன்னைத் தேடி அவர் வந்திருப்பதும், மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கூறுவதும் ஏதோ மகத்தான காரியத்திற்காகத்தான் என்பது அவருக்குப் புரிந்து விட்டது.

''மாவலி, இந்த உலைக்கூடம் இந்த வேளையில் இப்படி ஓய்ந்திருக்குமா... பணியாட்கள் சுறுசுறுப்பாய் வேலை செய்து கொண்டிருப்பார்கள். இளஞ்சென்னி தான் உனக்கு வலது கரம்போல் உதவிக்கொண்டிருப்பான்,'' என்றார் பிரம்மராயர்.

''பிழைத்து எழுந்து இளஞ்சென்னியாக நடமாடுவானா சுவாமி?''

''ஏன், அதில் என்ன உனக்குச் சந்தேகம்? வைத்தியர் சொல்லிவிட்டார், நேற்று உன் மகளுடன் பேசிக்கொண்டிருந் திருக்கிறானே...''

''ஆமாம், சுவாமி. வழக்கத்தைவிட சித்திரவல்லி அவனிடம் அதிக அன்பு கொண்டிருந்தாள்...''

'புனர்ஜென்மமடைந்தவனைப் பரிவுடன் நடத்தத் தெரிந்து கொண்டு விட்டாள் உன் மகள்... ஆமாம்... எங்கே சித்திரவல்லி? சீக்கிரமாகவே எழுந்துவிடுவாள் இல்லையா...?'' என்று பிரம்மராயர் சுற்று முற்றும் பார்ப்பது போல் மாவலியின் முக உணர்ச்சியை உற்று நோக்கினார்.

மாவலி அப்பொழுதுதான் அருகே பார்த்தான். சித்திரவல்லியின் படுக்கை சுருட்டப்படாமலே இருந்தது. பொதுவாக அவள் மிகவும் சீக்கிரம் எழுந்துவிடுவாள். படுக்கையைச் சுருட்டி வைத்து, மாடத்திலிருந்து விளக்கை ஏற்றிவிட்டுத்தான் மற்ற வேலைகளைக் கவனிக்கச் செல்வாள். சித்திரவல்லி எங்கே...? மாவலிக்குக் கவலை ஏற்பட்டது.

''சுவாமி... நேற்று அவள் நேரம் சென்றே வந்தாள். தங்களைச் சந்திக்கப் போவதாகச் சொன்னாள்... இவ்வளவு சீக்கிரம் எங்கே போயிருப்பாள்?'' என்று கூறிய மாவலி வாயிலுக்கும் உள்ளுக்குமாக நடந்தார்.

''பொழுது புலருமுன்னம் எங்கே சென்றுவிட்டாள் என்று கவலைப் படுகிறாயா? இளஞ்சென்னியைப் பார்க்கப் போயிருப்பாள். அவனைப் பார்க்காமல் அவளால் இருக்கமுடியுமா?''

பெருமூச்சு விட்டார் மாவலி. பிரம்மராயர் எழுந்து நின்று, ''வா, இளஞ்சென்னியைப் பார்த்து வரலாம்'' என்றழைத்தார்.

இளஞ்சென்னி நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான். மாவலி இளஞ்சென்னியை எழுப்ப முயன்றபோது கையசைத்து, ''அவனே இன்னும் சிறிது நேரத்தில் எழுந்துவிடுவான். சித்திரவல்லியும் அவனை எழுப்பாமல் போயிருக்கிறாள் கவனித்தாயா? அதுவரையில் வெளியே நின்று பேசுவோம். காலைத் தூக்கத்தில் தொந்தரவு செய்யக்கூடாது'' என்றார்.



பிரம்மராயரும் மாவலிராயனும் பேசிக்கொண்டிருந்தபோது ஒற்றர் படைத்தலைவர் அங்கே வந்துகொண்டிருந்தார். பிரம்மராயரை அவர் வணங்கினார். தனக்கு முன்பே பிரம்மராயர் வந்திருப்பது அவருக்கு வியப்பை அளித்தது.

''இளஞ்சென்னி பேசும் நிலையிலிருப்பதாகக் கேள்விப் பட்டேன். ஒரு வாரமாக நான் துடியாய்த் துடித்துவிட்டேன். நினைவே வராமல் போய் விட்டால்...'' ஒற்றர்தலைவர் கூறவும் பிரம்மராயர் மெல்ல நகைத்து, ''இளஞ்சென்னியைத் தாக்கியவர் யார் என்றறிய முடியாமல் போய்விடுமே என்று கவலைப்பட்டீர்களா?'' என்றார்.

''அது மட்டுமா? வண்டியோட்டியையும் உடன்சென்ற வீரர்களையும் கொன்று உடலை நாணல் புதரில் போட்டுவிட்டார்கள். கழுகுகள் வட்டமிட்டுப் பறந்ததைக்கொண்டே அவர்கள் உடல்களைக் கண்டு பிடித்தோம். பிறகுதான் சிலை தாராசுரம் போய்ச் சேரவில்லை என்பதும் தெரிந்தது. ஒற்றர்கள் எட்டுத்திக்கும் சென்றிருக்கிறார்கள்..'' என்று ஏதோ கூற வாயெடுத்த தலைவரை நோக்கி பிரம்மராயர் சைகை காட்டவும் அவர் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டார்.

''மாவலி, நேற்று என்னைக் காண விரும்புவதாக உன் மகள் கூறினாளே, எதற்காக?'' என்றார் பிரம்மராயர்.

''தெரியாது சுவாமி. நான் கேட்கவில்லை. சோழீசர்கோயிலுக்குச் சென்று திருநீறு வாங்கி இளஞ்சென்னிக்கு அளித்துவிட்டுப் போ என்றேன்.''

''விபூதி வாங்கி வந்தாளா?'' என்று கேட்ட பிரம்மராயர் உள்ளே சென்றார். இளஞ்சென்னியின் நெற்றியைப் பார்த்தார்.

இளஞ்சென்னியின் நெற்றியில் திருநீறு இடப்பட்டிருந்தது. தன்னிட மிருந்த ஓலையை எடுத்துப் பார்த்தார். முகர்ந்தும் பார்த்தார். திருநீற்றின் மணம் வீசியது.

இளஞ்சென்னி புரண்டு படுத்தான்.

பிரம்மராயர் அவன் அருகே அமர்ந்து அவனது வலதுகரத்தைத் தன் கரங்களில் பற்றி, ''இந்த உறுதியான கரத்தை மறைந்திருந்து தாக்கிவிட்டார்கள். ஒருவனல்ல, பல பேர்'' என்றார். அக்குரலில் பாசம் பொங்கி வழிந்தது.

''இல்லை சுவாமி... ஒருவன்தான்... என்னைவிட வல்லவன்...!''

''ஓ.. ஆனால், தெய்வபலம் இருந்தது. பிழைத்துவிட்டாய். ஆனால், அந்த நாட்டியப் பெண்தான் இறந்துவிட்டாள்...''

''ஆ!... இறந்துவிட்டாளா! அவளை யார் என்ன செய்தது? சதிகாரியைக் கொல்லக்கூட ஒரு சதிகாரன் இருந்தானா?''

''சதிகாரியா... யாரைச் சொல்கிறாய்... குணரேகாவையா?''

''ஆமாம் சுவாமி... சோழநாட்டில் யார் துரோகி, யார் விசுவாசமுள்ளவர்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை...''

''அதிருக்கட்டும்... சோழீசர்கோயில் திருநீற்றை உனக்கு யார் அளித்தார்கள்?''

இளஞ்செென்னி திடுக்கிட்டான். ''திருநீறா... எனக்கா... ஓ! சுவாமி... இரவு கனவு கண்டேன். என் உடலை மயிலிறகினால் தேவமாது தடவுகிறாள்... உடல் பஞ்சுபோல் ஆகிவிடுகிறது. மேகக் கூட்டத்தில் நான் ஏறி அமர்கிறேன்... ஆம், ஆம்... சித்திரவல்லி தான் அவள். என் இதயத்தில் அழியாது வீற்றிருக்கும் வல்லி...''

''இளஞ்செென்னி... அவள்தான் உன் நெற்றியில் விபூதியை இட்டவள்...'' பிரம்மராயர் அவன் காதருகே பேசினார்.

இளஞ்செென்னி பரபரப்புடன் ''சுவாமி... உங்களுக்குத் தெரியுமா? சித்திரவல்லி வந்தாளா... என் நெற்றியைத் தொட்டாளா? ஆகா! அவள் மாறிவிட்டாள்... மாயையினின்று விடுபட்டு விட்டாள்...'' என்றான்.

பிரம்மராயர் அவனையே உற்றுப்பார்த்தார். ''ஆமாம், இளஞ்செென்னி. சித்திரவல்லி மாயையினின்று விடுபட்டுவிட்டாள். இதோ பார், இந்த ஓலையை...'' என்று கூறி, சித்திரவல்லி அவரருகே வைத்துவிட்டுச் சென்ற ஓலைச்சுருளைக் கொடுத்தார்.

இளஞ்செென்னி அமைதியாகப் படித்தான். அவன் முகத்தில் ஏதும் சலனமில்லை.

''சுவாமி... சித்திரவல்லி எங்கே...?''

''நானும் அவளைத் தேடுகிறேன். சித்திரவல்லியைக் காலையிலிருந்து காணவில்லை. பாவம்... அவள் மிகவும் அதிர்ச்சியடைந்திருப்பாள்...''

''எதனால் சுவாமி...?''

''இளஞ்செென்னி... உன்னைத் தாக்கியவரைப் பற்றி அவளிடம் நீ சொன்னவுடன்...''

''பிரம்மராயர் கூறியதைக் கேட்டு இளஞ்செென்னி திடுக்கிட்டான். அவனைப் பேசவிடவில்லை அவர்.

''இளஞ்செென்னி! சில செய்திகளை அறிந்து போகத்தான் நான் வந்தேன். ஒற்றர்படையினருக்குத் தெரியாத உண்மை உனக்குத் தெரியும். நாட்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. சோழப்படைகள் பல காதம் சென்றிருக்கும். சோழர்படைகளிலேயே எதிரி நாட்டு ஒற்றர்கள் கலந்திருந்தால்...? உனக்குத் தெரிந்ததைச் சொல்லு!''

''சுவாமி!... சிலைக்குக் காவலாக என்னை அனுப்பினீர்கள். நான் நினைத்தேன்... சிலைக்கு எதற்குக் காவல் என்று. கொள்ளிட நதிக்கரையில்



அந்திவேளையில் தங்கினோம். குணரேகாவின் கூடாரத்திற்குச் சென்றேன். சற்று மதி மயங்கினேன். நடுநிசியில் எழுந்து பார்த்தேன். சிலை ஏற்றியிருந்த வண்டியைக் காணவில்லை. குணரேகாவைக் காணவில்லை. விரைந்து ஓடினேன். சிறிது தொலைவிலேயே சந்தித்துவிட்டேன். குணரேகா ஆண் வேடத்திலிருந்தாள். சிலை இருந்த வண்டியில் ஏராளமான ஆயுதங்கள் ஏற்றப்பட்டிருந்தன...'' – இளஞ்செென்னி சற்று நிறுத்தினான்.

''நீ தடுக்க முயன்றாய்... உன்னைத் தாக்கிவிட்டனர். ஆண் உடையிலிருந்த குணரேகா தாக்கினாளா... சொல்... சொல்... சொல்... ஏதோ பெரிய சதி நடந்திருக்கிறது. சில சந்தேகங்கள் எனக்கு உண்டு...''

இளஞ்செென்னி சிறிது யோசனை செய்தான். பிரம்மராயருக்கு இன்னும் முழுஉண்மை தெரியவில்லை. என்னைக் கொல்ல முயன்றவன் ஜெயசிம்மன் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வில்லை. நான் அதைச் சொல்லிவிட்டால்...

ஜெயசிம்மனுடன் சித்திரவல்லி பழகிவந்ததை பிரம்மராயர் அறிந்திருக்கிறார். சதிக்கு அவளும் உடந்தை என்று அவர் முடிவு செய்துவிட்டால்...? ஐயோ... என் சித்திரவல்லியைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். சோழநாட்டின் துரோகி எனும் அவப்பெயர் அவளுக்கு ஏற்பட, அவளுக்குக் கொடுந்தண்டனை கிடைக்க, நான் காரணமாக மாட்டேன்...

இளஞ்செென்னி ஏதோ சொல்ல முயன்றான். அவனால் பேச முடியவில்லை. பேசும் சக்தியையே அவன் இழந்துவிட்டானோ?

## 18

காஞ்சிமாநகரத்தில் பாடி வீடமைத்துச் சோழர் படைகள் ஒரு வாரத்திற்குமேல் தங்கிவிட்டன.

''ஒரே மூச்சில் கல்யாணபுரத்தை நோக்கிச் சென்றால் தான் வீரர்களுக்கும் உற்சாகமாக இருக்கும்'' என்றான் ஜெயசிம்மன்.

படைத்தளபதிகளும் சிற்றரசர்களும் சூழ்ந்து நின்று மேல் நடவடிக்கைகளைப் பற்றித் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தனர். ஜெயசிம்மன் கூறியதைக் கேட்டு அனைவரும், ''ஆமாம், ஆமாம்'' என்று ஆமோதித்தனர்.

''மேலும் தாமதப்படுத்தினால் கூடல் சங்கமத்துறையைக் கடக்க முடியாமல் போய்விடும். வெள்ளம் அதிகமாகிவிடும். யானைகளைக் கூட அடித்துச்செல்லும் அளவுக்கு ஆற்றின் வேகம் அதிகமாயிருக்கும்'' என்றான் ஜெயசிம்மன்.

அவன் உள்ளத்தில் பரபரப்பு. சீக்கிரமாகச் சோழர்படைகளைச் சாளுக்கியநாட்டு எல்லைக்குள் புகவிட்டுவிட்டால், தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என நினைத்தான்.

சோழர் சக்ரவர்த்திகள் கடகடவென்று நகைத்தார். ''வெள்ளம் வரட்டுமே. நூற்றுக்கணக்கான படகுகளைத் தயாராகக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன்'' என்று கூறியவர், சுற்றும் ஒருமுறை கண்களைச் சுழலவிட்டு, ''ஒரே மூச்சில் தாவித்தான் செல்லப் போகிறோம். அப்போதுதான் சாளுக்கியப் படை வீரர்களின் மூச்சை ஒரேயடியாக நிறுத்த முடியும்,'' என்றார். தொடர்ந்து, ''ஜெயசிம்மா, காஞ்சியினின்று புறப்பட்டுவிட்டால் இடையில் படைகள் எங்குமே நிற்காது. பத்தே நாட்கள், கல்யாணபுரம் தீக்குளிக்கப் பத்தே நாட்கள்... இப்போது அதிக ஓய்வு கொடுத்து நமது வீரர்களை உற்சாகப்படுத்தி, அவர்கள் மனம் போனபடி ஓய்வெடுக்கவிட்டு, களிப்பும் கூத்துமாக உல்லாசமாக இருக்கவிட்டால், 'வேல்.... வேல்... வீரவேல்...' என்று பாய்ந்து சென்றுவிடமாட்டார்களா!'' என்று கூறினார் கம்பீரமாக.

சக்ரவர்த்திகளின் திறமையை அனைவரும் பாராட்டினர். சக்ரவர்த்திகளுக்கு உற்சாகம் அதிகமாகியது. ஜெயசிம்மன் பக்கம் திரும்பி, ''நாமெல்லாம் போர்க்களம் ஒன்றையே எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பவர்கள். ஆனால், நமது வீரர்கள் அப்படியில்லை. அவர்களது கவனம் சிதறும். வெவ்வேறு தொழிலைச் செய்பவர்கள் வீரர்களாகச் சேர்ந்திருப்பார்கள். வீட்டு நினைவு... குழந்தைகளின் நினைவு; உற்றார் உறவினர் நினைவு... மணமாகாதவர்களாயிருந்தால் காதலியின் நினைவு வந்து கொண்டேயிருக்கும். அந்த நினைவுகளைத் திடீரென்று மாற்றிவிடக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக மாற்றவேண்டும். பிறகு போரின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்திவிட்டால் பாய்ந்து சென்று எதிரிகளின் தலைகளை உருளச் செய்துவிடுவார்கள். அதனால்தான் காஞ்சியில் சில நாட்கள் தங்க வைத்தேன். கலைப் பூமியாயிற்றே! சிருங்காரத்திற்கும், சிங்காரிகளுக்கும் குறைவில்லை இங்கே'' என்று கூறி நகைத்தார். பிறகு, ஜெயசிம்மன் செவிகளில் மட்டும் விழுமாறு, ''நமக்கு மட்டும் இந்த உணர்ச்சி இல்லையா? பாவம், உன்னைப் போன்ற இளம்வீரனை நினைத்தால் வேதனையாயிருக்கிறது. குணரேகாவை வீரர்களுடன் வரச் சொல்லியிருக்கலாம். அல்லது சித்திரவல்லியையாவது...'' என்று கண்களைச் சிமிட்டினார்.

ஜெயசிம்மன் பெருமூச்சுவிட்டான். 'நல்லவேளை, சக்கரவர்த்தி களுக்கு என்மேல் சந்தேகம் ஏற்படவில்லை. சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவன் என்று எள்ளளவாவது சந்தேகித்துவிட்டால் இவ்வளவு நேரம் நம் உயிர் நம்மிடம் இருக்குமா?' என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டான்.

'சக்ரவர்த்திகள் அடிக்கடி குணரேகா, சித்திரவல்லி என்று கூறுகிறாரே! அவருக்கு யார் சொல்லியிருப்பார்கள் தன் சொந்த விவகாரத்தைப் பற்றி' என்று எண்ணினான். கங்கைகொண்ட சோழபுரத்தில் சித்திரவல்லி எப்படியிருக்கிறாளோ! இளஞ்சென்னி மரணமடைந்த செய்தி கங்காபுரிக்கு எட்டியிருக்கும். சித்திரவல்லி என்ன நினைத்திருப்பாள்?



இரவு நிலவு காய்ந்துகொண்டிருந்தது. கூடாரங்களில் போர் வீரர்களின் குதூகலக் களியாட்டம். ஆங்காங்கே தீவத்தி ஒளிர்ந்து கொண்டிருந்தது. பாட்டும் கூத்துமாக வீரர்கள் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருந்தனர்.

ஜெயசிம்மன் பாடிவீட்டை நோக்கி மெல்ல நடந்து வந்தான். தேன்பாங்கும், பக்திப்பாடலும் குறவஞ்சியும் சிந்தும் அவரவர்களுக்கு முடிந்த உரத்த குரலில், தெரிந்த ராகத்தில் பாடிக் கொண்டிருந்தனர்.

ஒரு கூடாரத்தில் மட்டும் சற்றுச் சலசலப்பு.

''என்னை விட்டுவிடுங்கள்... வேண்டுமானால் ஒரே ஒரு பாட்டுப் பாடிவிடுகிறேன்.'' மெல்லிய குரல்.

''பாட்டா? ஒரு பாட்டுப் பாடவா உன்னை அழைத்து வந்தோம்?'' ஒரு குரல் - ''ஓகோகோ'' சிரிப்பு.

''அப்படியென்றால் ஆடச் சொல்லட்டுமா?''

''டேய் முட்டாள், பாடவும் ஆடவும் நமக்கெதற்கடா வம்பு? இதோ எதிரே அழகுக்கிளியை நிறுத்தியுள்ளோம். அது பாடும், ஆடும்!''

''கிளி பாடுமா? ஆடுமா?'' உடனே அட்டகாசச் சிரிப்பு.

''நான் பாடச் சொல்கிறேன். நீங்கள் தள்ளி நில்லுங்கள்'' என்று அதட்டினான் ஒருவன்.

பயந்து நடுங்கி, பூனையைக் கண்ட கிளிபோல் கூடாரத்தில் மூலையில் நின்றுகொண்டிருந்தவள், ''அண்ணன்களே! என்னை விட்டுவிடுங்கள். உங்களுக்காக ஒரு பாட்டுப் பாடுகிறேன். ஒரு தடவை ஆடுகிறேன்'' என்று கெஞ்சினாள்.

மறுபடியும் அங்கே சிரிப்பு.

''ஏன் பெண்ணே - பெண் என்பதா, பிள்ளை என்பதா?'' என்று ஒருவன் கேட்டபோது, மறுபடியும் சிரிப்பு. அந்த மங்கை நல்லாள் ஆண் உடையில் இருந்தாள். அரும்பு மீசை. தலையில் தலைப்பாகை.

''பெண்ணேதான். குரல் தெரியவில்லையா? நடை தெரியவில்லையா? நளினமாக நடிப்பது தெரியவில்லையா? பயந்து நடுங்குவதுபோல் பாசாங்கு செய்வது தெரியவில்லையா?''

''ஏ! நளினமான பெண்ணே! இப்படியே ஆட வேண்டாம். தலைப் பாகையை எடுத்துவிடு. ஒட்டுமீசையை எடுத்து எறிந்துவிடு. கால் சராயைக் கழற்றிவிடு.''

மீண்டும் எட்டுத் திக்கும் அதிரும்படியான சிரிப்பு.

அவள் தன் கரங்களை மார்பில் பொத்திக்கொண்டாள். தைரியத்தைக் கைவிடாமல், ''நேரமோ ஆகிவருகிறது. ஒரு பாட்டு. ஒரு நடனம். உங்கள்

மனம் குளிர ஆடிவிட்டுப் போய்விடுகிறேன். எனக்கும் களைப்பு இல்லையா?'' என்று கெஞ்சும் குரலில் பேசி மெல்ல ஒருவனை நெருங்கினாள்.

அவளிடம் குறுகத்தி இருந்தது. அதை எடுத்து அனைவரையும் பயமுறுத்தி ஓடிவிட முடியுமா? பிறகு எங்கேதான் போவது?

''ஆடிவிட்டுப் போய்விடுகிறாயா? எங்கே போவாய்? இந்த இருட்டு வேளையில் எங்கே போய்விடுவாய்? இங்கேயே படுத்துக் கொள்ளலாம். பழங்கள் கொண்டு வந்து தருகிறோம். சூடான கஞ்சி தருகிறோம்'' என்றான் ஒருவன்.

''வேண்டுமானால் இவன் காலைக்கூடப் பிடித்து விடுவான்'' என்று கேலியாக மற்றொருவன் கூறவும் திடீரென அவன் முகத்தில் ஒரு குத்து விழுந்தது.

''என்னைக் கால்பிடிப்பவன் என்று நினைத்துவிட்டாயா?'' என்று அவன் மீது பாய எத்தனித்தான் முதலில் தாக்கியவன்.

ஒரு கணத்தில் அங்கே குழப்பம் நிலவத் தொடங்கியது. அந்த நடனக்காரி இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்தி வெளியே ஓடி வந்தாள்.

''டேய், நமது சண்டையில் கிளி பறந்துவிட்டது'' என்று கூறிக் கொண்டே அவளைத் தொடர்ந்து வெளியே ஓடிவந்தனர்.

ஜெயசிம்மன் அங்கே நின்றுகொண்டிருந்தான். அவனது தோளின் மறைவில் அடைக்கலம் புகுந்தவள் போல் அவள் நின்று திகைப்பும் பீதியும் நிறைந்த விழிகளுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜெயசிம்மனை அவர்கள் அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை. ''இதுதான் வீரர்களின் லட்சணமா? ஒரு பெண் அகப்பட்டு விட்டால் அதோ கதிதானா?'' கர்ஜித்தான் அவன்.

''ஆண்வேடத்தில் திரிந்துகொண்டிருந்த இவளைப் பிடித்தோம். ஒற்றன் எனச் சந்தேகித்தோம்!'' சமாதானம் கூறினர் வீரர்கள்.

''ஒற்றனை ஆடச் சொன்னீர்கள், பாடச் சொன்னீர்கள். இரவு இங்கேயே படுத்துக்கொள்ளச் சொன்னீர்கள்!'' ஜெயசிம்மன் சீறினான்.

முகத்தில் அசடு வழிய, வீரர்கள் கூடாரத்திற்குச் சென்றனர்.

அந்த ஆண் உடையிலிருந்த பெண்ணை விரைவாகத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்ற ஜெயசிம்மன், ''குணரேகா, என்ன காரியம் செய்துவிட்டாய்!'' என்று பதறியவாறு கேட்டான்.

குணரேகா பேசவில்லை. அவன் தோள்மீது சாய முயன்றாள். அவளைத் தடுத்து நிறுத்தி எதிரே உள்ள மஞ்சத்தில் அமரச் செய்து, ''குணரேகா, இவர்களிடம் எப்படிச் சிக்கினாய்? நமது திட்டத்தையே சுக்குநூறாக்கி விடுவாய் போலிருக்கிறதே! இந்த நேரத்தில் நீ சாளுக்கியநாட்டு எல்லையை



அடைந்திருக்க வேண்டாமா? சிலையை ஏற்றிச் சென்ற வண்டி எங்கே? அதுவும் காஞ்சிபுரத்திலேயே இருக்கிறதா?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

குணரேகா, தலைப்பாகையைக் கழற்றினாள். மீசையை அகற்றினாள். சோம்பல் முறித்துக்கொண்டு, ''எனக்கு இப்போது பசி. மகா பசி. ஏதாவது வயிற்றுக்குள் தள்ளிய பிறகுதான் மற்ற கதையெல்லாம்'' என்றாள்.

''கதையா? கதையா கேட்கிறேன்? நான் உயிருக்குப் போராடுகிறேன். நீ உல்லாசமாகக் காஞ்சிபுரத்தில் நடனமாடுகிறாய். போர்வீரர்களின் மத்தியில் கும்மாளமிடுகிறாய். அவர்களை மயக்கி உனது பசியைத் தீர்த்துக்கொள்ளத் திட்டமிட்டாயா? உனது தொழிலின் கடையை இங்கே திறக்கத் திட்டமா?'' ஜெயசிம்மன் ஆவேசத்துடன் பேசினான்.

''சே....'' என்ற ஒரே வார்த்தை. குணரேகா கோபமாக எழுந்தாள். ''மற்றொரு முறை சொல்லாதீர்கள். தொழில் நடத்துபவள் இப்படி மாறு வேடத்தில் உயிரைப் பணயம் வைத்து வந்திருக்க வேண்டாம். என் பசிக்குக் கங்கைகொண்டசோழபுரமே போதும்.''

ஜெயசிம்மனும் கேலிக்குரலில், ''குணரேகா, நீ கற்புக்கரசி என்பது எனக்குத் தெரியும். ஆண் உடையில் காஞ்சியில் உனக்கென்ன வேலை?'' என்று கேட்டான்.

''துப்பறிந்து சாளுக்கியநாட்டிற்குச் செய்தி அனுப்ப...'' குணரேகா உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

ஜெயசிம்மன் முகம் சிறுத்தது. கறுத்தது. குணரேகாவின் பேச்சில் ஒரு மாறுதலையும் அலட்சியப்போக்கையும் ஜெயசிம்மன் உணர்ந்தான்.

குணரேகா சிதம்பரத்தை விட்டுப் புறப்பட்டது முதல் காஞ்சி வந்தடைந்தது வரையில் கூறி, ''நேற்றே காஞ்சியைவிட்டுப் புறப்பட்டிருப்பேன். மாற்றுக்குதிரை கிடைக்கவில்லை. சிலையை ஏற்றிக் கொண்டு நான்கு குதிரை பூட்டிய வண்டி, சோழர்படைகள் காஞ்சியை வந்தடையுமுன்பே சென்று விட்டது. குதிரை கிடைக்காமல் நான் பகலெல்லாம் மறைந்திருந்தேன். குளித்து இரண்டு நாட்கள் ஆனதால் குளிப்பதற்காக இருட்டும் வேளையை எதிர்நோக்கியிருந்தேன். பாலாற்றில் மறைவான ஓரிடத்தில் ஆடைகளைக் கழற்றி வைத்துவிட்டு அமிழ்ந்து குளித்தேன். கரையேறிய போது என்னை நான்கு பேர்களும் தூக்கிக்கொண்டு வந்தனர். நீங்கள் வந்திராவிட்டால்...'' குணரேகா பெருமூச்சு விட்டாள்.

சற்றே அமைதி. பிறகு ஜெயசிம்மன், ''நீ நாளைக் காலையில் புறப்பட்டு விடவேண்டும். ஏனென்றால், சோழர்படைகள் நாளை மறுநாள் இங்கிருந்து புறப்படுகின்றன. அதற்கு முன்பு நீ கல்யாணபுரம் செல்லவேண்டும்'' என்றான்.

பின்னர் சிறிது நேரத்தில் தட்டில் ஆகாரத்துடன் திரும்பி வந்தான். இருவரும் பேசவில்லை. குணரேகா உண்டவுடன் உறங்கி விட்டாள்.

நடுநிசியையும் தாண்டி வெகுநேரம் ஜெயசிம்மன் ஏதேதோ சிந்தித்தவாறு உறங்காமலிருந்தான். பிறகு எப்போது தூங்கினானோ தெரியாது. விழித்து எழுந்த பிறகு, அவனுக்கு ஓர் அதிர்ச்சி! குணரேகா படுத்திருந்த இடத்தில் அவளைக் காணவில்லை.

அன்று இரவு மதி உதயமாகவில்லை. பின்னிலவுக்காலம். தீவத்திகள் எரிந்துகொண்டிருந்தன. படைவீரர்கள் பெரும் வெளியில் கூடியிருந்தனர். தொலைவில் உயரமான மேடை அமைக்கப் பட்டிருந்தது. பலவித வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. பல பெண்கள் நடனமாடி வீரர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டிக் கொண்டிருந்தனர்.

மேடையின் முன்வரிசையில் சோழசக்ரவர்த்தி அமர்ந்திருந்தார். அவரருகே தளபதிகள். ஜெயசிம்மனும் உட்கார்ந்து நாட்டியத்தை ரசிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். அவனது எண்ணமெல்லாம் குணரேகா காஞ்சிநகர எல்லையை விட்டுச் சென்றாளோ இல்லையோ என்பதிலேயே வட்டமிட்டது.

மின்னல் தோன்றுவது போல மேடை மீது குணரேகா கால் சதங்கை ஒலிக்க நடனமாடிக்கொண்டே தோன்றினாள்,

போர்வீரர்களின் உற்சாகக் குரல், ''குணரேகா... குணரேகா...'' என்று ஒலித்தது.

ஜெயசிம்மன் திடுக்கிட்டுத் திகைப்புடன் நோக்கினான். ''குணரேகா!'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

குணரேகா அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

## 19

கங்கைகொண்டசோழபுரத்தைவிட்டு இளங்காலையில் புறப்பட்ட சித்திரவல்லியின் நெஞ்சில் ஒரே இலட்சியம் சோழநாட்டின் மானத்தைக் காக்க வேண்டும் என்பதே.

சோழநாட்டின் மதிப்பும் மரியாதையும் மானமும் மூன்று செயல்களில் அடங்கியிருந்தன.

சாளுக்கியநாட்டிற்கு அந்தச் சிலை செல்லாமல் தடுப்பது. சோழ சக்ரவர்த்திக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்றுவது. உயிருக்கு உயிராய் நேசித்த ஜெயசிம்மனின் மனத்தை மாற்றி, சோழ நாட்டிற்கு உண்மையாய்த் தொண்டுசெய்பவராக மாற்றுவது.

மூன்றும் இலேசான செயலா? சித்திரவல்லி நடந்துகொண்டே யோசித்தாள். கால்நடையாக நடந்து சென்று சோழர்படைகளுடன் சேர்ந்து விட



முடியுமா? வேகமாக நடந்தாள் சித்திரவல்லி. ஓடிப் பார்த்தாள். காலையில் 'ஜிவ்'வென்று பறவைகள் பறந்து சென்றன. அதுபோல் தனக்குச் சிறகு இருந்தால் பறந்து செல்லலாம்.

குதிரை மீது ஏறிச் சிலர் விரைந்து சென்றுகொண்டு இருந்தார்கள். அப்படி யாராவது குதிரை மீது ஏற்றிச் செல்லலாம். சே... என்ன அசட்டு நினைவு. குதிரை மீது ஓர் ஆணுடன் பெண் அமர்ந்துசெல்வதா? ஏன், நமக்கே குதிரை கிடைத்தால் வாயு வேகமாக ஓட்டிச்சென்று விடலாம். குதிரை ஏறப் பழகிக்கொண்டது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது! அவளுடைய தந்தை சொல்லுவது நினைவுக்கு வந்தது. ''உனக்கு ஏனம்மா குதிரை ஏற்றம், யானை ஏற்றம்? நீ என்ன போர்க்களம் செல்லப்போகிறாயா?' என்று மாவலிராயர் கேட்பார்.

சித்திரவல்லி சிரித்தபடி, ''ஆண் மகன் இல்லையே என்ற குறை உங்களுக்கு உண்டே. அதை நீக்குவதற்காகத்தான் நான் முயல்கிறேன். நாளைக்கே ஒரு வீட்டுக்கு ஒரு பிள்ளையைப் போர்க்களத்துக்கு அனுப்பச் சொன்னால் என்ன செய்வது?'' என்பாள்.

அது உண்மையாகிவிட்டது. சித்திரவல்லி போர்க்களம் செல்கிறாள். அவளை யாரும் அழைக்கவில்லை. அவளாகவே சோழநாட்டின் மானம் காக்கச் செல்கிறாள். சொல்லப்போனால் தன்மானம் காக்கச் செல்கிறாள்.

சித்திரவல்லிக்குக் காலைவேளையில் நடப்பது உற்சாகமாகத் தான் இருந்தது. தன்னைத் தேடிக்கொண்டு குதிரை மீது தன் தந்தை வந்துவிடலாம். அல்லது யாரையாவது அனுப்பிவிடலாம். சித்திரவல்லி திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றாள். ஓரிடத்தில் சாலையினின்று இறங்கிக் குறுக்குவழியாக நடக்கலானாள். அப்பாதை சிறிது தூரம் சென்றவுடன் கிளை வழியாக மாறும். அதற்குப் பிறகு காட்டோடையைக் கடந்தால் கொடிப்பாதைந வரும். கொடிப்பாதைக்குப் பிறகும் ஒற்றையடிப்பாதை சிறுகாட்டின் வழியே செல்லும். ஒரு பகல் ஓரிரவு மூச்சைப் பிடித்துக்கொண்டு நடந்தால் தில்லைச் சிற்றம்பலத்தை அடைந்துவிடலாம். சிறிது ஓய்வுக்குப் பிறகு ஒரு குதிரை கிடைத்தால் காஞ்சிமாநகரத்தை அடைந்து விடலாம்.

ஆகா... நல்ல யோசனை. சித்திரவல்லியின் நடையில் வேகமிருந்தது. உள்ளத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டது. உடலில் புதுத் தெம்பு பொங்கியது.

''உனக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்? உலைக்கூடத் தொழிலாளியின் மகளுக்கு அரசியலில் ஏன் ஈடுபாடு? தொல்லைப்படு.'' என்று அவள் மனம் கூறியது.

''அரசியலில் ஈடுபட்டேனா? ராஜாங்கச் செய்திகள் என்றால் காதை மூடிக்கொள்வேனே... இந்தப் பொல்லாத கண்கள் செய்த சதி. அவை ஏன் அவரைச் சந்திக்க வேண்டும்? கண்கள்தாம் தெரியாமல் சந்தித்துவிட்டன

என்றே வைத்துக்கொள்வோம். ஏ, மனமே! நீ என்ன செய்துகொண்டிருந்தாய். நீ அழகிய பீடத்தை அமைத்தாய். அதில் அவரை அமரவைத்தாய். காதல் சாம்ராஜ்யத்துக்கு அவரை அதிபதியாக்கினாய். அவரை யாரென்று கேட்கவில்லை. ஊர் அறியவில்லை. உற்றார் அறியவில்லை. அது மட்டும் என்ன நியாயம்?'' என்று வாய் முணுமுணுத்தது.

அவள் சிரித்துக்கொண்டாள். 'என்ன துணிவுடன் செல்கிறாய்? காஞ்சி மாநகரத்துக்கருகே ஜெயசிம்மனைச் சந்தித்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். என்ன கூறி அவர் மனத்தை மாற்றுவாய்? அவர் உன் மனத்தை மாற்றிவிட்டால்? காதல் பெரிதா, நாடு பெரிதா? எப்படி முடிவுஎடுப்பாய்?'

நல்ல கேள்வி. என்ன மறுமொழி கூற முடியும்? சித்திரவல்லி யோசித்த வாறே நடக்கலானாள். நடையில் தளர்ச்சி. குதிரையின் குளம்படியோசை கேட்டது. மரங்களடர்ந்த அந்த இடத்தில் கிளைப்பாதை வளைந்து சென்றதால், குதிரை மீது வருபவர் யார் என்று தெரியவில்லை. எதிர்ப் பக்கத்திலிருந்து ஓசை வருவது மட்டும் தெளிவாகக் கேட்டது. ஓசை நெருங்கி வந்தது. குதிரைக்கு வழி விடுவதற்காக அவள் சற்று ஒதுங்கி நின்றாள்.

அவளைத் தாண்டிக் குதிரை சென்றது. குதிரை மீது நடுத்தர வயதுடைய ஒருவன் அமர்ந்திருந்தான். அவளைத் தாண்டிச் சென்ற அவன் சிறிது தூரம் சென்ற பிறகு நின்று, மீண்டும் திரும்பி வந்தான். அவளருகே வந்து நின்று, குதிரையிலிருந்து இறங்கிக் கொச்சையான தமிழில், "நீங்கள் சித்திரவல்லி தானே?" என்றான். பிராகிருதம் கலந்திருந்தது அவன் பேச்சில். சோழ நாட்டவன் இல்லை என்பது புரிந்துவிட்டது.

சித்திரவல்லி ஏதும் பேசாமல் அவனை உற்று நோக்கியவள், "நீ யார்? என் பெயர் உனக்கெப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

அவன் சிரித்தான். மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டு "தங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளாவிடில் நான் இவ்வளவு காலமாக ஒற்றர் படையில் இருந்து என்ன பிரயோசனம்?" என்றான்.

"எந்த ஒற்றர்படை?" சித்திரவல்லியின் நெற்றியில் கேள்விக் குறியால் சுருக்கங்கள் ஏற்பட்டன.

"எந்த ஒற்றர்படையில் வேண்டுமானாலும் இருப்பேன்..."

"என்னை எப்படித் தெரியும்?"

"இளவரசருடன் தாங்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன்." என்று கூறியவன் அசட்டுச்சிரிப்புடன் கண்களைச் சிமிட்டி, "ஏரிக்கரையில், கோயில் மண்டபத்தில், கோட்டை மதில்சுவரில், இன்னும் பல இடங்களில் எங்கள் இளவரசருடன் தாங்கள்..." என்று கூறினான்.

"இளவரசரா? எந்த இளவரசரைப் பற்றிச் சொல்கிறீர்கள்?"



"ஏன், எங்கள் இளவரசரைப் பற்றித்தான். தெரிந்தும் தெரியாததுபோல் கேட்பது ஒன்றே தங்கள் சாமர்த்தியத்தைப் புலப்படுத்துகிறது. இளவரசர் தங்களைச் சந்திக்குமாறு சொல்லியனுப்பினார்... கங்கைகொண்ட சோழபுரத்திற்குச் சென்று உடனே சந்திக்கச் சொன்னார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கு வழியிலே வந்துவிட்டது..."

"என்னை ஏன் சந்திக்கச் சொன்னார்...?"

"தங்களை உடனே புறப்பட்டு வருமாறு சொல்லியனுப்பினார்."

"என்னையா!..."

"ஆமாம் தேவி! தங்களையேதான் குறுக்குவழியாக அழைத்து வந்து சிதம்பரத்தில் தங்கியிருக்கும் யாத்ரிகர் கோஷ்டியுடன் சேரச் சொன்னார். யாத்ரிகர்கள் அனைவரும் போர்வீரர்கள். அவர்கள் சோழப்படைகளைப் பின்தொடர்ந்து வருவார்கள். அதெல்லாம் யுத்த ரகசியம். இப்பொழுது என்ன... வியப்பாயிருக்கிறதோ? நீங்கள் எப்படி அதற்குள் புறப்பட்டுவிட்டீர்கள்...?"

சித்திரவல்லி சிறிது நேரம் யோசித்தாள். பிறகு, "என்னிடம் உங்கள் இளவரசர் முன்பே கூறியிருந்த திட்டம்தான். மீண்டும் எதற்காக உங்களை அனுப்பினார். கங்கைகொண்டசோழபுரம் சென்றீர்களோ உடனே அகப்பட்டுக் கொண்டு விடுவீர்கள்!" என்றாள்.

அவன் சிரித்தான். "இனி ஏன் கங்கைகொண்டசோழபுரம் செல்கிறேன்? தங்களை வழியிலேயே சந்தித்துவிட்டேனே. குதிரை மீது ஏறிக்கொள்ளுங்கள்" என்றான்.

சித்திரவல்லி தலையை அசைத்தாள். "இல்லை... இல்லை... நீங்கள் போகலாம். நான் நடந்து வருகிறேன். இருவரும் ஒரே குதிரையில் ஏறிச்செல்வது சரியன்று."

அவன் மீண்டும் சிரித்தான். "நீங்கள் ஏறிக்கொள்ளுங்கள். நான் நடந்து வருகிறேன்" என்றான்.

தங்க வெயில், கொதிக்கும் குழம்பு வெயிலாக மாறி, பொன் வெயிலாகக் காட்சியளித்து, செம்பொன் சுடராகக் காட்டுமரங்களின் இலைகளின் வழியாகப் பரவி அந்திவேளையை வரவேற்றுக் கொண்டிருந்தது. வழி நீண்டு கொண்டிருந்தது. வழி நடுவே ஒரு கிராமம் நெருங்கிக்கொண்டிருந்தது. சித்திரவல்லிக்குக் களைப்பாக இருந்தது.

குளக்கரையருகே அரசமரம் சலசலவென்று காற்றில் அசைந்து இலைகளை உதிர்த்துக்கொண்டிருந்தது. சிறிது நேரம் தங்கிச் சென்றால் என்ன என்று தோன்றியது.

"இங்கே சற்றுத் தங்கலாமா?" என்று அவன் கேட்டான்.

சித்திரவல்லி தலையசைத்தாள். அவன் குதிரையினின்று இறங்கினான். குளத்தின் படிக்கட்டுகளில் இறங்கிச் சென்று நான்கைந்து தடவை குளத்துத்

தண்ணீரை எடுத்து முகத்தில் வீசிக் கொண்டாள். படிக்கட்டுகளின் மேலே நின்று அவள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

காலையில் குளிக்காமல் புறப்பட்ட சித்திரவல்லிக்கு, குளத்தைப் பார்த்தவுடன் குதித்து நீந்தி மூழ்கி மூழ்கி எழுந்திருக்க வேண்டும் போல் தோன்றியது. மாற்றுப்புடவைகூடக் கொண்டு வரவில்லை.

"நான் கிராமத்திற்குள் சென்று ஏதாவது உணவு கொண்டு வருகிறேன்... அதுவரையில் நீ இந்த மண்டபத்தில் களைப்பாறிக் கொண்டிரு." என்று கூறிய அவன் கிராமத்திற்குச் சென்றான்.

சித்திரவல்லி மகிழ்ச்சியுடன் குளத்தில் தொப்பென்று குதித்தாள். இக்கரைக்கும் அக்கரைக்குமாக நீந்தினாள். குளத்தில் கூட்டம் கூட்டமாகத் திரியும் மீன்களுடன் போட்டி போட்டு நீந்தினாள். அவை அவள் உடலின் மீது முத்தமிட்டு மொய்த்துப் போவது புதுச் சிலிர்ப்பை ஏற்படுத்தியது. அவை உள்ளங்காலில் முகர்ந்து குறுகுறுப்பை ஊட்டின. தொடையின்மீது தவழ்ந்து தனியாய்த் தவிப்பை ஊட்டின. இடைமீது சுற்றி இன்பத்தவிப்பை அளித்தன.

இந்தக் குளத்து மீன்கள் பெண்களையே பார்த்ததில்லை போலிருக்கிறது என்று கூறிக்கொண்டாள். ஆசை தீர நீந்தி விளையாடி, அந்தி மயங்கி இருள் சூழத் தொடங்கியவுடன் அவள் கரை ஏறினாள். மண்டபத்தின் ஓரமாகச் சென்று ஈரச்சேலையைப் பிழிந்தாள். நனைந்த கச்சை அவிழ்த்துப் படிக்கட்டில் காயவைத்தாள். காற்றில் அவை படபடத்தன. யாரும் இல்லாத தைரியத்தில் சேலையைப் பிழிந்து ஒரு பக்கத்தைச் சுற்றிக்கொண்டு மறுபுறத்தை கற்றூணில் சுற்றிவிட்டாள்.... கூந்தலை அவிழ்த்துக் காற்றிலே ஈரம்போகக் கோதிவிட்டுக்கொண்டாள். அந்த அமைதியான இடமும் இளங்காற்றும் நீராடிய சுகமும் அவள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை அளித்தன. ஒரு பக்கத்துச் சேலை சற்றுக் காய்ந்து விட்டது. யாரும் இல்லாத, எந்த விழிகளும் காணவில்லை என்ற தைரியத்தில் அதை அவிழ்த்து மறுமுனையைக் கற்றூணில் சுற்றினாள்.

இரு கொடிய கண்கள் அவளது ஒவ்வொரு செய்கையையும் ஆவலுடன் மறைந்து கவனித்துக்கொண்டிருக்கின்றன என்பதை அறிந்தால் அவள் துணிவுடன் அவ்வாறு செய்திருக்கமாட்டாள். அவள் இதயபீடமமர்ந்த ஜெயசிம்மனே காணாத கோலத்தை அந்த ஒற்றன் கண்டுவிட்டான் என்று தெரிந்தால் இதுவரை அவள் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வீசியிருப்பாள் - அவன் விழியை நோக்கி!

காய்ந்த கூந்தலை அள்ளிச் செருகிக் கொண்டு ஆடையைச் சீர்படுத்திக் கொண்டு மண்டபப் படிக்கட்டுகளில் அமர்ந்தபோது, அப்பொழுதுதான் வருவதுபோல் அவன் வந்தான். இலை நிறையச் சோறு, ஒரு கலயத்தில் தயிர்.

வானத்தே விண்மீன்கள் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன. உண்ட களைப்பு சித்திரவல்லியின் கண்களைத் தள்ளாடச் செய்தன.

"இப்போதே புறப்படுவோமா?" என்று கேட்டாள் சித்திரவல்லி.



"உன்னைப் பார்த்தால் மிகவும் களைப்படைந்தவள் போல் காணப்படுகிறாய்... நீந்திய களைப்பு வேறு... வைகறை வேளையில் எழுப்புகிறேன். புறப்பட்டு விடுவோம். சிதம்பரம் செல்ல ஐந்து நாழிகையாகாது" என்றான்.

"பாவம், உங்கள் இளவரசருக்கு மிகவும் சிரமம் இல்லையா!" என்றாள் சித்திரவல்லி.

"ஏன் எதற்குச் சொல்கிறாய்?"

"தான் இளவரசர் என்பதை ஒருவருக்கும் தெரியாமல் இவ்வளவு காலமாக நடித்தாரே, சிரமமில்லையா அது?"

"ஓ! அதைச் சொல்கிறாயா? தன் மனைவியைப் பிரிந்து வந்தது பற்றிச் சொல்கிறாய் என்று நினைத்தேன்."

"இளவரசருக்குக் கல்யாணமாகிவிட்டதா?"

"உனக்குத் தெரியாதா? ஆனால், உனக்கு எந்தவித தகுதியும் குறையாமல் அந்தப்புரத்தில் வைத்துக் காப்பாற்றுவார். ஒருவேளை, உன் அழகுக்கு உன்னையே இளவரசியாக்கிக் கொள்ளலாம்... அவர் மயங்கிய காரணம் இப்பொழுது புரிகிறது. உனது செழுமையான அங்கங்கள் அவரை அடிபணிய வைத்துவிட்டன..."

சித்திரவல்லி உதடுகளை மடித்துக்கொண்டாள். அவள் புரிந்து கொண்டாள். நீராடிவிட்டு வந்த நிலையை அவன் கொடுங் கண்களால் அனுபவித்து இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டாள். பேச்சை வளர்க்காமல் மண்டபத்தின் ஓர் ஓரமாகச் சேலைத் தலைப்பை விரித்துப் படுத்தாள். சிறிது நேரத்தில் உறக்கம் அவள் கண்களைச் சூழ்ந்துகொண்டது.

திடீரென்று விழித்துக்கொண்டபோது தன் அருகே மண்டியிட்டு அமர்ந்திருந்த அந்த ஒற்றனின் கரங்கள் அவன் இச்சையைப் பூர்த்தி செய்யத் துடிப்பதை உணர்ந்தாள். துள்ளி எழுந்தாள் சித்திரவல்லி. இடையில் இருந்த குறுங்கத்தியை அவன் நெஞ்சுக்கு நேரே நீட்டி, "சாளுக்கியநாட்டு ஒற்றன் என்பதால் நெஞ்சில் பாய்ச்சாமல் விடுகிறேன் பாதகா! போ! படுத்துறங்கு.... நாளையே உன் நாட்டு இளவரசியாக வரப்போகிற என்னிடம் முறை தவறாக நடக்கப் பார்க்கிறாயா?" என்று சீறினாள்.

தடால் என்று அவள் காலில் விழுந்தான் அவன். "என்னைப் பற்றி இளவரசரிடம் சொல்லிவிடாதீர்கள் தாயே! நாளைக் காலையில் எழுப்புகிறேன். இனி ஒரு விபரீதமும் நேராது" என்றான்.

சித்திரவல்லி உறங்கவில்லை.

குளிர்ந்த காற்று வீசத்தொடங்கியது. ஒற்றன் உறங்கிக் கொண்டிருந்தான்.

சந்தடியின்றி எழுந்து, குதிரைமீது ஏறிக்கொண்டு சிதம்பரம் நோக்கிப் பறந்தாள். அங்கே அவளுக்குப் பெரும் அதிசயம் காத்திருந்தது.

# 20

சிற்பி ஆடவல்லானின் சிற்பக்கூடத்திற்கு பிரம்மராயர் கைத்தடியை ஊன்றியவாறு வந்தபோது அவர் நடையில் பழைய தெம்பில்லை. சில நாட்களுக்கு முன்பு வந்தபோதிருந்த உற்சாகமில்லை. சிற்பியின் இருப்பிடத்திற்கு அவர் வரவேண்டிய அவசியமில்லை. கூப்பிட்டனுப்பியிருந்தால் ஆடவல்லான் ஓடோடி வந்துவிடுவான். இளம் வயதினன். பிரம்மராயரிடம் அவனுக்குத் தனி அன்புண்டு. மரியாதை கலந்த அன்பு. வயது முதிர்ந்த பருவத்தில் அவர் மாவலிராயர் வீட்டிற்கும் சிற்பியின் வீட்டிற்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவர் ஓரிடத்திற்குச் செல்கிறார் என்றால் எவ்வளவோ விஷயங்கள் அதில் கலந்திருக்கும். நாட்டின் நன்மைக்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கும்.

சிற்பக்கூடத்தில் 'கிணிங் கிணிங்' ஓசை எழுந்து கொண்டிருந்தது. அங்கே ஓர் உலைக்கூடம். அங்கு சிற்றுளியைப் பழுக்கக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்துக்கொண்டிருந்தனர். அங்கே சற்று நின்ற பிரம்மராயர், "இந்த உலைக்கூடம்தான் அதிகம் வளரவேண்டும். வேலும் வாளும் செய்யும் உலைக்கூடத்தைவிட நாட்டிற்குத் தேவை இதுதான்" என்று கூறினார். பிறகு சுற்று முற்றும் பார்த்து விட்டு, "தலைமைச் சிற்பி எங்கே?" என்று அங்கிருந்தவரைக் கேட்டார்.

செதுக்கப்பட்ட பாறையொன்றில் ஆடவல்லான் செவ்வரிக் கோட்டால் ஓர் இளம் பெண்ணின் நடனத்தோற்றத்தை வரைந்து கொண்டிருந்தான். அந்தத் தோற்றத்தைச் சிற்பி வரைய உதவியாக ஓர் இளம் மங்கை முன்மாதிரியாக நின்றுகொண்டிருந்தாள். ஒரு கரத்தைத் தலைமீது கவிழ்த்தும், மற்றொரு கரத்தை இடுப்பில் தாங்கியும் புன்சிரிப்புத் தவழ அவள் நிற்பதையும் ஆடவல்லான் கோடுகளால் அவ்வடிவைப் பாறையில் வரைவதையும் அமைதியாகக் கவனித்த பிரம்மராயர், தான் வந்த சுவடு தெரியாமல் நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட இளமங்கை தன் நிலையை மாற்றி வணக்கம் தெரிவித்தபோதுதான் ஆடவல்லான் திரும்பிப் பார்த்துப் பரபரப்புடன், "வரவேண்டும், வரவேண்டும். நீங்கள் வந்ததைக் கவனிக்கவில்லை" என்றான்.

"கருமமே கண்ணாயிருப்பதுதான் கலைஞருக்கு அழகு. இந்த இடத்தின் அமைதியும் கலையை வணங்கும் உன் செயலின் அமைதியும் என்னைக் கவர்ந்துவிட்டன. சிற்பத்துக்கு உயிரூட்ட இப்படியொரு உயிருள்ள மங்கையே தேவையோ?" என்று கேட்டார் பிரம்மராயர்.

"முன்மாதிரியான ஒருவரை நிற்கவைத்துத்தான் சிற்பத்தைப் படைக்க வேண்டும் எனும் கட்டாயமில்லை. ஆனால், இளவரசர் இப்படியொரு நிலையில், இயற்கை உணர்ச்சியுடன் சிற்பம் செதுக்குமாறு கூறினார்" என்று கூறிப் பேச்சை அரைகுறையாக நிறுத்தினான் ஆடவல்லான்.



"ஓகோ. இராசேந்திரசோழதேவருக்குக் கலையில் கவனம் செலுத்தவும் நேரம் இருக்கிறதா? வாள், வேல், ஈட்டி, கேடயம் இவை மட்டும்தான் தெரியும் என்று நினைத்தேன்" என்று கூறிய பிரம்மராயர் இளமங்கை நிற்கும் பக்கமாக நோக்கினார்.

அழகுக்கலையின் அத்தனை இலக்கணமும் நிறைந்த அந்த அழகு ஓவியம் நாணத்தால் தலைகுனிந்து நின்றாள்.

"உம், உனது பணி தொடரட்டும். நீ செய்யும் வேலையைக் கவனிக்க வந்தேன். இப்படி ஓர் அழகுமயிலைத் தத்ரூபமாக சிலையாகச் செதுக்குவது காண மகிழ்ச்சியாயிருக்கிறது. இளவரசரின் கலை உணர்வைப் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேனே" என்று வருந்துபவர் போல் கூறினார் பிரம்மராயர்.

"இளவரசருக்கு உள்ள கலைதாகம் இலேசானதன்று சுவாமி. சோழீச்சர விமானத்து முதல் மாடத்தில் முன்பு விடப்பட்டிருக்கும் நடனத்தோற்றங்களைப் பூர்த்திசெய்யுமாறு கூறினார். அதற்கு அவர் தேர்ந்தெடுத்தது யாரைத் தெரியுமா?"

பிரம்மராயருக்கு ஒரு கணம் கோபம் வந்தது. தெரியுமா என்று அவரையே கேட்கிறானே...

"தெரியாது. சொல்லேன். இந்தப் பெண்ணையா?"

"இல்லை சுவாமி. துவாரபாலகர் சிலையுடன் தாராபுரத்துக்கு அனுப்பினீர்களே, குணரேகா, அவளை."

"குணரேகா! நடனத்தில் கெட்டிக்காரி. ஓ! சரியான பெண்ணைத் தேர்ந்தெடுத்துள்ளார் இளவரசர். பாவம், குணரேகாவுக்கு இப்படி நேர வேண்டாம்" என்று கூறி வருத்தப்படுவது போல் முகத்துணர்ச்சியை மாற்றிக்கொண்டார். அந்த வயதிலும் அவர் சகலகலைகளிலும் தனது திறமையைப் புலப்படுத்துமாறு நேர்ந்தது.

ஆடவல்லான் திடுக்கிட்டான். அருகேயிருந்த பெண்ணின் முகத்தில் கேள்விக்குறி எழுந்தது.

"குணரேகாவுக்கு என்ன நேர்ந்தது?" ஆடவல்லான் பரபரப்புடன் கேட்டான்.

"என்ன, உனக்குத் தெரியாதா? ஊரே பேசிக் கொள்கிறது."

"தெரியாது சுவாமி. குணரேகா தாராசுரத்துக்குப் போய்விட்டாள் என்றவுடன் நான் இவளை அழைத்து வந்தேன்."

"குணரேகா தாராசுரத்துக்குப் போகவில்லை... இந்த உலகத்தை விட்டே போய்விட்டாள்." - பிரம்மராயர் இப்படிக் கூறி நிறுத்தியவுடன் அந்த அழகி,

"என்ன சுவாமி, குணரேகா காஞ்சி புரத்திற்குப் போயிருப்பதாகக் கூறினார்கள். அவள் இந்த உலகத்தை விட்டே போய்விட்டதாகக் கூறுகிறீர்களே?" என்றாள்.

பிரம்மராயர் மெல்லச் சிரித்து, "இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாயே. சிற்பிக்கு ஒன்றுமே தெரியவில்லை. நடனம், சிற்பம், அழகியின் தோற்றம் இவ்வளவே உலகம் என்று அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார். உம். இந்தக் காலத்தில் ஆண்களை விடப் பெண்கள் அரசியலில் அறிவுக்கூர்மையுடன் விளங்குகிறார்கள்" என்றார்.

அவள் நாணத்தால் தலைகுனிந்து, "சுவாமி, மன்னித்து விடுங்கள். எனக்கு அரசியலைப் பற்றி ஒன்றும் தெரியாது. நேற்று நான் கேள்விப் பட்டதைச் சொன்னேன்" என்றாள்.

"என்ன கேள்விப்பட்டாய்? யார் சொன்னார்கள்?" பிரம்மராயர் கேட்டார்.

அவள் சற்றுத் தயங்கினாள். பிறகு உதடுகள் துடிக்க, "நேற்று இரவு ஒருவர் என் வீட்டிற்கு வந்தார்" இப்படிக் கூறிவிட்டு முகத்தை மூடிக்கொண்டாள்.

"உம், சொல்லு. தவறாக நான் நினைக்கமாட்டேன். அவரவர்களுடைய தொழில் தர்மத்தைக் குறைகூறக்கூடாது" என்று பிரம்மராயர் உற்சாகப் படுத்தினார்.

"நேற்று வந்தவர் இந்த ஊர்க்காரரில்லை. அவர் வடக்கே இருந்து ராமேஸ்வரம் வரை சென்று திரும்புபவராம்..."

"ஓகோ! தலயாத்திரை செய்யும் ஒவ்வொரு ஊரிலும் தங்குவதற்கு நல்ல இடம் தேடி வைத்திருக்கிறார்."

"என்னைத் தேடிவரவில்லை. குணரேகாவைத் தேடிவந்ததாகக் கூறினார். அவள் ஊரைவிட்டுப் போய்விட்டதாகக் கூறினேன். அவர் சிரித்தார். அந்தச் சிரிப்பில் கபடம் இருந்தது. குணரேகா காஞ்சிபுரம் சென்றிருப்பதாகவும் அங்கே படைவீரர்களுக்கு உற்சாகமூட்ட நடன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் போவதாகவும் அவர் கூறினார். என்னையும் வருகிறாயா என்று கேட்டார். 'போர்வீரர்களை மகிழ்விக்க அரசரே கட்டளையிட்டு அழைத்துச் செல்வாரே... நீங்கள் யார் நடுத்தரகர்?' என்று கேட்டேன். அவர் முகத்தில் அசடு வழிந்தது. அன்று இரவு தங்கவும் அவரை நான் அனுமதிக்கவில்லை" என்றாள்.

பிரம்மராயர் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு ஆடவல்லானை நோக்கி, "சரி, இவளைப் போகச் சொல்லிவிடு. உனது சிற்பப்பணியை நாளை தொடரலாம்" என்றார்.

அழகி சென்ற பிறகு, "கங்கைகொண்டசோழபுரத்தில் சதிகாரர் நடமாட்டம் அதிகமாகிவிட்டது. நாளைக்கே கோட்டைக்கதவை மூடிவிட வேண்டியதுதான்" என்று கூறிவிட்டு, "நமது மாமன்னர் எவ்வளவோ இன்னலுக்கும் இடர்ப்பாட்டிற்குமிடையே கல்யாண புரத்திலிருந்து துவாரபாலகர் சிலையைக் கொண்டு வந்தார். அதைத் தாராசுரம் கோயிலில்



நிறுவ முடிவு செய்தார். ஆனால், மிகவும் கெட்டிக்காரத்தனமாக சாளுக்கிய ஒற்றர்கள் அபகரித்துச் சென்று விட்டார்களே" என்று வேதனையுடன் கூறினார்.

ஆடவல்லான் அதிர்ச்சியடைந்தான். அவன் உடலில் ஒரு விதப் படபடப்பு ஏற்பட்டது.

"சிலை தாராசுரம் போய்ச் சேரவில்லையா? மாமன்னருக்குத் தெரிந்தால் மனங்குன்றி விடுவாரே" என்று வருத்தத்துடன் கூறினான்.

"மனங்குன்றுதலிருக்கட்டும்... சாளுக்கியநாட்டையே வென்று புகழ்க்கொடி நாட்டி என்ன பயன் சிற்பியாரே. சிறு விஷயத்தில் பெருத்த அவமானம் ஏற்பட்டுவிட்டதே. தாங்கமுடியாத, காலகாலத்துக்கு அழியாத அவமானம். உம்." பிரம்மராயர் உண்மையிலேயே வருந்தினார். பிறகு "குணரேகாவை மிகவும் நல்லவள் என நினைத்தேன். ஆனால் அவள் சதிகாரி" என்று சீறினார்.

ஆடவல்லான் குறுக்கிட்டு, "சுவாமி, என்னை மன்னித்து விடுங்கள். குணரேகாவின் மீது இளவரசருக்கு என்றுமே பற்றும் பாசமும் உண்டு. சதிகாரி என்று அவரே அறிந்திருக்கவில்லையே," என்றான்.

"குணரேகா இறக்கவில்லை. அவள் படைவீரர்களுடன் காஞ்சிபுரம் சென்றிருக்கிறாள். அங்கே என்ன சதி புரிந்து ஆபத்தை விளைவிக்கப் போகிறாளோ? இப்போதே இளவரசரிடம் செல்கிறேன்" என்றார்.

ஆடவல்லான் திக்பிரமை பிடித்தவன் போல் நின்றான். அபூர்வ சிற்பம் களவு போய்விட்டது என்பதில் அவனுக்கு மிகுந்த வருத்தம்.

"அப்போதே சொன்னேன். துவாரபாலகர் சிலையை இங்கே சோழீசர் ஆலயத்திலேயே வைத்துக்கொள்வோம் என்றேன். இங்கேயே இருந்திருந்தால்... களவாடிச் செல்ல முடியாதல்லவா?" என்றான் ஆடவல்லான்.

"திறமைமிகுந்த சாளுக்கிய ஒற்றர்கள் மாளிகைக்குள்ளிருந்தே அபகரித்து விடுவார்கள். போர்க்களத்திலே என்னென்ன செய்யப் போகிறார்களோ" என்று கூறியவர் உடனே அங்கிருந்து புறப்பட்டார்.

இளவரசர் இராசேந்திர சோழதேவர், இராசாதிராசனின் தம்பிக்கு இளவரசப் பட்டம் சூட்டிய சோழ மன்னர், இராசாதிராசன் அவருக்குத் தன்னந்தனியே படைகளை நடத்திச் சென்று வெற்றிவாகைசூடும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். பாண்டிய மண்டலத்தில் இராசேந்திரன் வெற்றிப்புகழ் கொடிகட்டிப் பறந்தது. சாளுக்கிய நாட்டுப் போரில் தனக்கு வாய்ப்பு இல்லையே எனும் மனக்குறை அவருக்குப் பெரிதும் உண்டு.

இளவரசரைத் தேடி பிரம்மராயர் வந்தார். அவரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் இளவரசருக்கு உண்டு. ஆனால், சாளுக்கிய நாட்டுப் படையெடுப்பின் போது அரசருடன் தானும் உடன் செல்ல முடியாதபடி செய்தது பிரம்மராயராக இருக்குமோ என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது.

எழுந்து வாயிற்படியருகே சென்று பிரம்மமாராயரை வரவேற்று அழைத்து வந்து இருக்கையில் அமரச் செய்தார். சிறிதுநேரம் அங்கு மௌனம் நிலவியது.

''சிற்பக் கூடத்திற்குப் போயிருந்தேன்'' என்று பிரம்மராயர் பேச்சைத் தொடங்கினார்.

சிற்பம் என்றவுடன் தாராசுரத்திற்கு போய்ச்சேராத சிலையைப் பற்றிப் பேசப் போகிறார் என்ற எண்ணத்தில், ''கேள்விப்பட்டேன், சுவாமி! இப்படியொரு தலைகுனியும் செயல் சோழநாட்டில் நடைபெற்றுவிட்டது. ஒற்றர்படைக்கே அவமானம்'' என்றார் இளவரசர்.

பிரம்மராயர் அதைப் பற்றி அக்கறை காட்டாதவர் போல் ''சோழீசர் கோயிலின் முதல் மாடத்தில் நடனத் தோற்றங்களைப் பூர்த்திசெய்யுமாறு கட்டளையிட்டீர்களாம்.... உங்கள் கலை ஆர்வம் என்னைக் கவர்ந்தது'' என்று பேச்சைத் தொடங்கினார்.

''என் பாட்டனார் ராஜராஜரும் தந்தை ராஜேந்திரரும் அளித்த அருள் ஆசிதான் என் கலை ஆர்வம். நாம் அழிந்து விடுவோம்... இந்த ராஜ்யமும் ஒரு காலத்தில் அழிந்துவிடலாம். ஆனால், கோயிலும் சிற்பமும் அழியாதல்லவா? சிற்பி ஆடவல்லானின் திறமைக்கு வாய்ப்பளிக்க வேண்டுமே. அவனுடைய கலைக்கு அனுசரணையாக நடனமாது குணரேகா இருப்பாள் என்று எண்ணினேன். சிலையைத் திருடிச் சென்றவர்கள் அவள் உயிரையும் கவர்ந்து விட்டார்கள். உடல் கூடக் கிடைக்கவில்லையாமே. சக்ரவர்த்தி வடக்கே போயிருக்கும் இந்த வேளையில் இப்படி அவப்பெயரா? ஒற்றர்படையை உடனே மாற்றி அமைக்க வேண்டும்'' என்று இளவரசர் மளமளவென்று பேசினார்.

''அவள் கலை மீது தங்களுக்கு மதிப்பா, அல்லது...'' பிரம்மராயர் தன் பேச்சில் மறைமுகக் குத்தலிருப்பது தெரியாதிருக்க மெல்லச் சிரித்தார்.

இளவரசரும் சிரித்துவிட்டார். ''சுவாமி, தங்களிடம் எப்படி ஒளிக்க முடியும்? அன்பும் காதலும் நாணயத்தின் இருபக்கங்கள். எப்படி வேண்டுமானாலும் உருண்டு மாறும். அவளுடைய நாட்டியத் திறமையைச் சமீபத்தில்தான் அறிந்தேன். என் மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டது உண்மையே. ஆனால், என் மனம் அவளுக்குப் புரியுமுன்பே அவள் மறைந்துவிட்டாள்.''

''இளவரசே, அவள் மறையவில்லை. அவளை உயிருடன் நீங்கள் கண்டுவிட்டால்?''

''இதென்ன மாயமந்திரம்! அவள் உயிருடன் இருக்கிறாளா? எங்கே இருக்கிறாள்? எல்லாம் புதிராக இருக்கிறதே...?'' - இளவரசரின் முகத்தில் வியப்பு மிகுந்திருந்தது.

''புதிரல்ல இளவரசே. சாளுக்கியர்களின் திறமை. வெறும் பலத்தை மட்டும் கொண்டு ஒரு நாட்டை வென்றுவிட முடியாது. பெண்கள் அரசியலில்



நுழைந்து தங்கள் திறமையைப் புலப்படுத்தும் காலம். குணரேகா காஞ்சியில் இருக்கிறாள் என்று ஒரு பெண் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இளவரசே! என் உள்ளத்துணர்ச்சி கூறுகிறது... ஏதோ ஆபத்து நேரப்போகிறது என்று. படைபலத்துடன் அபகரிக்கப்பட்டு, சிலை சாளுக்கிய நாட்டுக்குச் சென்றுவிட்டது. நீங்கள் உடனே புறப்பட வேண்டும். சிலையை மீட்க முடிந்தால் குணரேகாவையும் மீட்கலாம்!''

''நான் புறப்படுவதா? சக்ரவர்த்தியின் உத்தரவு இல்லாமலா?''

''ஆபத்து வேளையில் அதையெல்லாம் பார்க்க நேரமில்லை,'' என்று கூறிய பிரம்மமாராயர் இளவரசர் செவிகளில் மட்டும் கேட்கும் வகையில் ஏதோ கூறினார்.

இளவரசர் வீறுகொண்டெழுந்தார்.

மறுநாள் சூரியோதயத்தின் போது இளவரசர் இராசேந்திரரின் படை வடக்குக் கோட்டைவாயில்வழியே போர் முழக்கத்துடன் சென்று கொண்டிருந்தது!

## 21

போர்வீரர்களை மகிழ்விப்பதற்காக நடத்தப்பட்ட அந்த நாட்டிய நிகழ்ச்சி நடுநிசியையும் தாண்டி முடிவடைந்தது. நேரம் போனதே வீரர்களுக்குத் தெரியவில்லை. உணர்ச்சி மிகுதியால் சில சமயம் ஹூங்கார மிட்டனர். ஆவேச மிகுதியால், ''வெற்றிவேல்! வீரவேல்!'' என்று பெருமுழக்கமிட்டனர்.

மேடையிலே ராஜராஜவிஜயம் எனும் நாட்டிய நாடகத்தைப் பெண்கள் நடனத்தின் மூலம் நடித்துக்காட்டியது வீரர்களை மட்டுமல்லாது சோழ சக்ரவர்த்திக்கும் புதுத்தெம்பை ஊட்டியது.

ராஜராஜவிஜயம் ராஜராஜசோழதேவரின் வீரப் பிரதாபங்களையும் ஆட்சி முறையையும் பக்திச் சிறப்பையும் விளக்கிக் கூறியது. சக்ரவர்த்தி ராஜாதிராஜர் தன் பாட்டனாரின் பெருமையை நன்கு அறிவார். நாட்டியமாக மேடையில் காணும் போது அவரும் பரவசமடைந்தார்.

குணரேகாவின் திறமை அந்த நடன நிகழ்ச்சியில் சிறப்பாகப் புலப்பட்டது. பம்பரம்போல் சுழன்றாடினாள். பாதங்கள் பூமியில் பரவுகின்றனவோ என்று சந்தேகப்படும் அளவுக்குத் துள்ளி ஆடினாள். மின்வெட்டினைப் போல் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்தாள். நாணல் போல் வளைந்தாள். நாகத்தின் விரிந்த படம்போல் நிமிர்ந்து ஆடினாள். காதல் மடப்பிடிப் போல் ஒயிலாக நடந்தாள். காட்டாற்று வெள்ளம் போன்ற வேகம் காட்டினாள். அலங்கரிக்கப்பட்ட தேர் போல் அசைந்தாடினாள்.

நிகழ்ச்சியின் முடிவில் சிகரம் வைத்தது போல் குணரேகா உணர்ச்சியின் உச்சகட்டத்தில் மேடையிலே மயங்கி வீழ்ந்தாள். அதுவும் நிகழ்ச்சியில் ஒன்று எனக் காண்பவர்கள் எண்ணினர். வீரர்கள் தத்தம் இருப்பிடங்களுக்குச் செல்லும்போது தங்கள் திருநாட்டின் பெருமையை இதயத்தில் தேக்கித் தங்கள் கடமையை முடிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சென்றனர்.

குணரேகா கண் விழித்தபோது பொழுதுபுலர்ந்து வெகு நேரம் ஆகியிருந்தது. சோழசக்ரவர்த்தி அவள் இருப்பிடம் தேடி வந்துவிட்டார். அவளது உடல்நிலையைக் கவனித்துக்கொள்வதற்கு மருத்துவரிடம் கட்டளை இட்ட பிறகு இரவு உறங்கச் சென்றார் மன்னர். காலையில் எழுந்தவுடன் குணரேகாவைக் காண்பதற்கு முதல் காரியமாக வந்துவிட்டார்.

குணரேகா அரசரைப் பார்த்தவுடன் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றாள். அரசர் கையமர்த்தி உடல்நலம் விசாரித்து, "குணரேகா, உனது நாட்டியத்தைக் கோயிலில் இறைவனின் முன்பு கண்டு பரவசமடைந் திருக்கிறேன். ஆனால், பல்லாயிரக்கணக்கான வீரர்களும் படைத்தலைவர் களும் நானும் மெய்சிலிர்க்கும் வகையில் நீ ஆடுவாய் என்று எனக்கு இப்போதுதான் தெரிந்தது" என்றார்.

குணரேகாவின் முகத்தில் பெருமை ஒருகணம் ஒளிவீசியது. ஏதோ கூற வாயெடுத்தாள். ஆனால், அரசர் அவளைப் பேசவிடாமல் "வீரர்களுக்கு மகிழ்வூட்ட நடனமாதர்களை உடன் அழைத்து வந்தவர்கள் அந்தக் கோஷ்டியில் உன்னைச் சேர்க்க மறுத்து விட்டோமே என்று வருந்தினர். ஆனால், நான் சொன்னேன், 'குணரேகாவைத் தாராசுரத்திற்கு அனுப்பியதே நான்தான். அவள் அங்கு போகாமல் இங்கே வந்தது நமக்கு அதிர்ஷ்டம்தான்' என்றேன்" என்று கூறிச் சற்று மௌனமாக இருந்தவர், "காஞ்சிக்கு வரவேண்டும் என்று உனக்கு எப்படித் தோன்றியது?" என்று கேட்டார்.

பெருமையால் ஒளிவீசிய முகத்தில் ஒரு கணத்தில் பயம் குடிகொண்டது. 'காஞ்சிக்கு எப்படி வர நேர்ந்தது? என்ன காரணம் சொல்ல முடியும்?' என்று கவலை அடைந்தாள்.

சக்ரவர்த்தி புன்சிரிப்புடன், "ஆமாம். எப்படி வந்திருப்பாய்? காந்தம் கவர்ந்திருக்கும். உன் பிரியத்திற்குப் பாத்திரனான ஜெயசிம்மனைக் காண வந்திருப்பாய்... அதை எப்படி என்னிடம் கூறமுடியும்? கவலைப்படாதே! ஜெயசிம்மன் வெற்றி வாகை சூடி விரைவில் திரும்பிவிடுவான். அதில் ஓர் இடரிருக்கிறது. ஜெயசிம்மனை மற்றொரு பெண்ணும் காதலிக்கிறாள். அவன் யாருக்கு மாலையிடுவான்?" என்றார். பிறகு பலத்த சிரிப்புடன், "இரண்டு பேருக்குமே அவன் மாலையிடட்டுமே!" என்றார்.

குணரேகா படுக்கையைவிட்டு எழ முயன்றாள். அவளை மீண்டும் படுக்கையில் அமரச் செய்து "இன்று முழுவதும் ஓய்வு எடுத்துக்கொள், குணரேகா! நாளைய தினம் காலையில் படைகள் புறப்படப் போகின்றன. நீயும் வரலாம். உன் போன்ற நடன மாதர்களும் உடன் வருகிறார்கள் என்றால் வீரர்களின் உற்சாகம் மேலும் அதிகமாகும். ஆனால், ஒரு நிபந்தனை. நீ ஜெயசிம்மனைச் சந்திக்கவே கூடாது. போர்த்தந்திரத்தில் வல்லவனான அவன் கவனத்தை நீ திருப்பி விடக்கூடாது. கல்யாணபுரத்தில் வெற்றிக் கொடி நாட்டி வெற்றிவிழா கொண்டாடும் அன்று உனது நாட்டிய விருந்து. என்ன?" என்று கூறி மீண்டும் உற்சாகமாகச் சிரித்தார் அரசர்.



குணரேகாவின் விழிகளில் நீர் ததும்பியது. திடீரென்று அவரது பாதத்தில் விழுந்து, "சக்ரவர்த்திகளே! என்னை மன்னித்து விடுங்கள்... நான் ஜெயசிம்மனைக் காணவரவில்லை... நான் வந்தது..." என்று கூற வாயெடுத்த போது சக்ரவர்த்தி அவளைத் தூக்கி நிறுத்தி, "உடலை வருத்திக்கொள்ளாதே. எனக்கு எல்லாம் தெரியும். ஓய்வு எடுத்துக்கொள்" என்று அவள் எதிர்பாராதவிதமாகத் தன் கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றைக் கழற்றி அவளிடம் அளித்து, "நேற்றைய உனது திறமையான நடனத்திற்கு இது பரிசு" என்றார். பிறகு மிகவும் கம்பீரமாக நடந்து அங்கிருந்து சென்றார்.

குணரேகா தன் முகத்தை இருகரங்களாலும் மூடிக்கொண்டு விம்மினாள். முத்து முத்தாகக் கண்ணீர் உதிர்ந்தது.

"முத்துமாலை சிதறுண்டதோ, விழிநீர்தான் முத்தாக மாறியதோ?" என்ற குரல் கேட்டுக் குணரேகா திடுக்கிட்டு நோக்கினாள்.

ஜெயசிம்மன் நின்றுகொண்டிருந்தான். குணரேகா வியப்புடனும் திகைப்புடனும் அவனைப் பார்த்தாள்.

"எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். உனக்கு நடனம் மட்டுமே கைவரும் என நினைத்தேன். நடிப்பும் நன்றாக வரும் என்பதைப் புரிந்துகொண்டேன்" என்றான் ஜெயசிம்மன். குரலில் ஏளனம் நிறைந்திருந்தது.

"நடிப்பில் தங்களை மிஞ்சமுடியுமா?" என்று கலங்கிய விழிகளிலும் குறும்புத்தனம் மிளிரக் கேட்டாள்.

"என் நடிப்பு நாட்டிற்காக" என்றான் ஜெயசிம்மன்.

"என் நடிப்பு தங்களுக்காக" என்றாள் குணரேகா.

"என்னைக் காணவரவில்லை என்று சொன்னாய். வந்த காரணத்தைச் சொல்ல முற்பட்டாய். உண்மையைச் சொல்லி யிருப்பாயோ, பொய்யைச் சொல்லியிருப்பாயோ, தெரியாது. உண்மையைச் சொல்லியிருந்தால் மறுகணமே உன்மீது இளஞ்சென்னியைக் கொன்ற குற்றம் சுமத்தப்பட்டிருக்கும்" என்று கூறினான் ஜெயசிம்மன்.

குணரேகா சிரித்தாள். அதில் குரோதமிருந்ததா, கோபமிருந்ததா ஏளனமிருந்ததா என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

"இளஞ்சென்னியைக் கொன்றது நீங்கள். அதை இப்போதே இங்கேயே பறைசாற்றிவிடுவேன். உங்கள் முகமூடியைக் கிழித்தெறிந்து விடுவேன்.

என்மீது பழிசுமத்தி எனக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுக்குமுன்பு சாளுக்கியநாட்டு இளவரசரின் சமாதியைக் காஞ்சிமாநகரில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துவிடுவேன். நான் நாட்டியப் பெண் மட்டுமல்லள் நாகப்பாம்பு! அடிபட்ட வேங்கை... இருதயத்தில் குத்துண்டு ரத்தத்தைச் சிந்தாமல் தேக்கி வைத்திருப்பவள்...'' என்று குணரேகா கூறிக் கொண்டே போகும் போது ஜெயசிம்மன் பாய்ந்து அவள் வாயை ஒரு கையால் பொத்தி மறுகையால் அவள் இடையைத் தழுவி, ''குணரேகா, நாம், நாம் இருவரும் இப்படிச் சண்டை போட இதுவா இடம்? என்னைப் பழிக்குப்பழி வாங்க இதுவா நேரம்?'' என்று குழைந்தான்.

அவனிடமிருந்து விடுபடாமல் மேலும் அவன்மீது சாய்ந்து வாயை மூடியுள்ள அவனது கரத்தை மெல்ல நீக்கி, ''கோபத்தால் என்னைத் தழுவும் கரங்கள் என் தாபத்தைத் தீர்க்கக்கூடாதா?'' என்றாள்.

''நான் உன்னைத் தழுவவில்லையே!'' என்றான் ஜெயசிம்மன் அப்போதும் கௌரவத்தை விடாமல்.

''வலதுகரம் வாயைப் பொத்தியது. இடதுகரம் என்ன செய்தது?'' குணரேகா சிரித்தவாறு கேட்டாள்.

''சே... காமமே உனக்கு எப்போதும் நினைவு... உன் தொழிலே அதுதானே?'' ஜெயசிம்மன் சிரித்துக்கொண்டான்.

''அவரவர்கள் தொழிலை அவரவர்கள் செய்வதில் தவறில்லை. ஆனால், மற்றொரு முறை 'தொழில்' என்று என்னைப் பார்த்துச் சொன்னால் உங்களைக் கிழித்து மாலையாகப் போட்டுக்கொள்ளும் காளியாகி விடுவேன்...''

குணரேகாவின் சீற்றத்தைக் கண்டு ஜெயசிம்மன் உண்மையிலேயே நடுங்கிவிட்டான்.

''நான் இப்போது விவாதிப்பதற்கு வரவில்லை குணரேகா...'' என்று குரலைத் தாழ்த்திக்கொண்டான் ஜெயசிம்மன். ''உன்னை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நீ சோழ அரசரிடம் என்ன சொல்ல முற்பட்டாய்?'' என்று கேட்டான்.

குணரேகா கண்டிப்பு நிறைந்த குரலில், ''சோழசக்ரவர்த்தி நீங்கள் நினைப்பதுபோல் ஒன்றும் தெரியாதவரல்லர். அவர் என்னையும் சித்திர வல்லியையும் உங்களுடன் இணைத்துப் பேசுகிறார். எப்படித் தெரிந்து கொண்டார்? அந்தக் கவலையினால் தான் நான் ஏதோ கூறி மழுப்பமுற்பட்டேன்'' என்றாள்.

''பேசும்போது ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். என்னைக் காட்டிக் கொடுப்பதால் உனக்கு என்ன லாபம்? என் சொந்த நலனுக்காகவா இவ்வளவு கஷ்டப்படுகிறேன்? உயிரையே பணயம் வைத்துள்ளேன். சாளுக்கியநாட்டின் மானத்தைக் காக்க வந்த என்னைச் சொந்த நாட்டிலேயே சந்தேகிக்கிறார்களாம்.



எனக்கு விரோதமாகச் சதி உருவாகிறதாம். அங்கே அப்படி... இங்கே நீயோ?'' என்று குரல் தழதழக்கப் பேசிய ஜெயசிம்மனை மெல்ல அணைத்துக் கொண்டு குணரேகா, ''நான் என்றுமே உங்கள் பக்கம்தான். ஆனால், நீங்கள்தான் என் பக்கமில்லை. ஒரே ஒரு தடவை என் விருப்பத்திற்கு இணங்கக்கூடாதா?'' என்றாள்.

ஜெயசிம்மன் சிரித்தான். ''ஒரு பெண் இவ்வளவு பகிரங்கமாகத் தன் விருப்பத்தைத் தெரிவிக்கமாட்டாள். அதனால் நான் சொல்கிறேன், உனது தொழிலைப் பற்றி உனக்குக் கோபம் வந்துவிடுகிறது. எனக்குப் பெண் சபலம் இருந்தால் சித்திரவல்லியை எனது விருப்பத்திற்குப் பயன்படுத்தியிருக்க மாட்டேனா?'' என்றான்.

''வீணே நாம் பேசிக்கொண்டிருப்பதில் பலனில்லை. நான் கடைசியாக ஒன்று சொல்வேன். அழுத்தமாகக் கூறுவேன். என் விருப்பத்திற்கு இசைந்தால் நான் என்னையே தியாகம் செய்வதற்கும் தயங்கமாட்டேன்'' என்றாள் குணரேகா.

குணரேகாவின் பேச்சு ஜெயசிம்மனுக்கு ஆத்திரத்தை விளைவித்தாலும் சூழ்நிலையை அறிந்து, ''குணரேகா, உன் இலட்சியம் சாளுக்கியநாட்டிற்கு உதவ வேண்டும் என்பதுதானே?'' என்று கேட்டான்.

''இதற்கு மறுமொழி கூறமுடியாது. என் கேள்விக்கு என்ன சொல்கிறீர்கள்?''

''குணரேகா, உன் இதயம் எனக்குப் புரிகிறது. இன்னும் ஏழே நாட்கள். மகத்தான மாறுதல் ஏற்படப் போகிறது. அதுவரையில் பொறுத்திருக்கக் கூடாதா?''

''ஏழு நாள்கள் என்ன, ஏழாயிரம் நாள்கள் காத்திருக்கத் தயார். என் ஆசையை நிறைவேற்றுவீர்களா?''

''என் லட்சியம் நிறைவேறிய பின் நமது நாடு பகைவர்களின் அபாயத்திலிருந்து நீங்கிய பிறகு உனது இதயதாபத்தை நிறைவேற்றுவேன்.''

''உங்கள் இந்தச் சொல் உறுதியானதுதானா? உங்களுடைய இதயராணி எதிர்த்தால்? உங்களுடைய இல்லத்தரசி எதிர்த்தால்...''

''இல்லத்தரசியையும் மீறி இதயராணி என்று மற்றொருத்தியை ஏற்றால் உன்னையும் ஏன் ஏற்கக்கூடாது?''

''நிச்சயமாகவா?''

''ஆமாம்...''

''கல்யாணபுரத்தில் நீங்கள் இளவரசராகத் திகழும்போது என்னை ஏற்பீர்களா?''

''இளவரசர் என்ன... நான்தான் அரசர்...!''

''அதுவரை காத்திருக்கிறேன். என்ன செய்ய வேண்டும்?''

"நான் சொல்வதைச் செய்வாயா?"

"கட்டளையிடுங்கள்!"

"குணரேகா, நீ உடனே இங்கிருந்து சென்று விட வேண்டும்."

"படைகளுடனே வருமாறு மன்னர் கட்டளையிட்டிருக்கிறாரே?"

"கவலைப்படாதே. நான் பார்த்துக்கொள்கிறேன். நீ விரைந்து செல்ல வேண்டும். துவாரபாலகர் சிலை வடபெண்ணை ஆற்றங்கரையில் காத்திருக்கும். அதை மிகவும் ஜாக்கிரதையாகக் கல்யாணபுரத்தில் கொண்டு சேர்க்கவேண்டும்."

"சிலையைப் பற்றி இனி என்ன பயம்? அதற்கு நான் தேவையா?"

"இனிமேல்தான் பயம். கல்யாணபுரத்தில் நீ செய்யவேண்டிய முக்கியமான காரியம் ஒன்றிருக்கிறது. பிறகு சொல்கிறேன். நீ உடனே புறப்பட்டு விட வேண்டும். பகலிலே புறப்பட்டால் யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். விரைந்து செல்லும் ஜாதிக்குதிரை பூட்டிய ரதம் தருகிறேன். அதிலே நிறைய ஆயுதங்களையும் ஏற்றித் தருகிறேன். புறப்பட்டுவிடு!"

குணரேகா ஜெயசிம்மனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். ஜெயசிம்மன் விடுவித்துக்கொண்டான்.

குறிப்பிட்ட நேரத்தில் குணரேகா காஞ்சி வடக்கு வாயில் கோட்டை வழியே புறப்பட ஆயத்தமாக இருந்த ரதத்தில் ஏறி அமர்ந்தாள்.

அவளுக்கு முன்பே அங்கே சித்திரவல்லி ரதத்தில் அமர்ந்திருந்தாள்!

## 22

சிதம்பரத்து எல்லையை அடைந்தவுடனேயே குதிரையை ஒரு மரத்தின் மறைவில் கட்டிவிட்டு விரைந்து நடக்கலானாள் சித்திரவல்லி. வழியில் சிற்றோடை ஒன்று குறுக்கிட்டது. வந்த களைப்பு நீங்க ஓடையில் இறங்கி ஒரு வாய்த் தண்ணீரைக் குடித்து விட்டு, முகத்திலும் தெளித்துப் புடவைத்தலைப்பால் துடைத்துக் கொண்டாள். கரை ஏறத் திரும்பியவுடன், "வாங்க, வாங்க! உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்ற குரல் கேட்டது.

கங்கைகொண்டசோழபுரத்தினின்று புறப்பட்டது முதல் எதிர்பாராத சம்பவங்கள் நடப்பதையும் இப்போது தன்னை ஒருவர் இன்னார் என்று தெரியாமல் வரவேற்பதையும் கண்டு சித்திரவல்லி திகைத்தாள். திகைப்பை வெளியே புலப்படுத்தாமல் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

அசட்டுச்சிரிப்புடன் அவர், "என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால், தங்களை எனக்குத் தெரியும்" என்றார்.



சித்திரவல்லி திடுக்கிட்டாள். 'என்னை எப்படி இவருக்குத் தெரியும்? அப்படியே தெரிந்திருந்தாலும் நான் கங்கைகொண்ட சோழபுரத்தினின்று புறப்பட்டு வரப்போகிறேன் என்பது இவருக்கு எப்படித் தெரியும்?' என்று ஆச்சரியப்பட்டாள்.

சித்திரவல்லி மௌனமாக இருப்பதை அறிந்த அவர் "இரண்டு நாட்களாகவே தங்களுக்காகக் காத்திருக்கிறேன்" என்றார்.

சித்திரவல்லிக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்தாள். மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேண்டும் என்று முடிவுசெய்தாள்.

"இளவரசர் சொன்னார்... சிலையை ஏற்றிக்கொண்டு வண்டி முன்பே வந்துவிட்டது. தங்களைக் காணவில்லை. மாறுவேடத்தில் தாங்கள் வருவீர்கள் என்றார். எந்த வேடத்தில் என்று எப்படிக் கண்டுபிடிப்பது... நல்லவேளையாகக் குதிரையை அடையாளம் கண்டுகொண்டோம். மறைவான இடத்தில் குதிரையைக் கட்டிவிட்டு வந்தது நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கும்..." என்றார் அவர்.

குதிரையை அடையாளம் கண்டுகொண்டேன் என்று அவர் கூறியவுடன் சித்திரவல்லிக்குச் சிரிப்பு வந்தது. ஆள்மாறாட்டம் நன்றாக நடந்திருக்கிறது. பல உண்மைகளை இவர் மூலமே அறியவேண்டும் என்று முடிவுசெய்த சித்திரவல்லி மேலும் உறுதி செய்துகொள்வதற்காக, "தங்களை நான் பார்த்ததில்லையே...?" என்றாள்.

"என்னை எப்படி நீங்கள் பார்த்திருக்க முடியும்? தங்களையும் நான் பார்த்ததில்லை. கங்கைகொண்டசோழபுரத்தில் பல ஆண்டுகளாக வசித்து வருகிறீர்களாம். நன்றாக நடனமாடுவீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார்.

சித்திரவல்லியின் சந்தேகம் தெளிவடைந்தது. தன்னைக் குணரேகா என்று எண்ணிவிட்டார் அவர். அப்படியே சிறிது நேரம் நடிப்போம் என்று முடிவுசெய்த அவள், "இளவரசர் என்ன சொன்னார்?" என்று கேட்டாள்.

"சிலையை ஏற்றிவந்த வண்டி வடபெண்ணை ஆற்றங்கரையில் காத்திருக்கும். நீங்கள் காஞ்சியில் தங்காமல், நேரே வடபெண்ணை ஆற்றங்கரைக்குச் செல்லவேண்டும். சிலையைக் கல்யாணபுரத்தில் சேர்த்தவுடன் அவரது தேவியாரைச் சந்திக்க வேண்டும்..." என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

சித்திரவல்லி தன் இதயப்படபடப்பைச் சற்றுப் பிரயாசையுடன் அடக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. 'இளவரசர், மணமானவர் -

அவரை முழுமனதுடன் நம்பினோமே! ஒருவருக்குமே இடமளிக்காத இதயத்தில் அவருக்கு முழுஇடமளித்தோமே! காதலுக்குக் கண் இல்லை

என்பார்கள். அறிவுகூட இல்லாமல் போய்விட்டதே... சோழநாட்டிற்குப் பெருந்தீங்கு செய்துவிட்டோம். பிறந்த பொன்னாட்டின் பெருமையை ஒரு கணத்தில் காதல் வயப்பட்டு அழிக்கத் துணையாய் இருந்துவிட்டோம். ஐயோ - பிரம்மமாராயர் என்ன நினைப்பார்? சோழ இளவரசர் என்ன எண்ணுவார்? எனது தந்தை இந்த அதிர்ச்சியைத் தாங்கமாட்டாரே... இளஞ்சென்னி சொல்லியிருப்பான் உண்மையை. அதைக் கேட்ட என் தந்தை, உயிர் தாங்கமாட்டாரே. நாம் மட்டும் எதற்காக உயிர் வாழவேண்டும்? முன்பே மணமான ஒருவரைக் காதலித்து மணக்கப்போகிறோம் என்று மனப்பால் குடித்து உலகில் உலவவா வாழவேண்டும்?...'

"தேவியைச் சந்திப்பது அவ்வளவு எளிதன்று... கல்யாணபுரத்தில் இப்போது அரச குடும்பத்தில் சிறிது குழப்பம். மகாராணியார் இளவரசரை வெறுக்கிறார்..." என்று அவர் சொல்லிக்கொண்டே போவது சித்திரவல்லியின் காதில் இலேசாக விழுந்தது.

"முறையாக இளவரசருக்குத்தான் சாளுக்கியநாடு சேரவேண்டும். சோழப்படைகளை நிர்மூலமாக்கிய பிறகு இளவரசரே அரியணையில் அமர விரும்புகிறார். மகாராணிக்கு விருப்பமில்லை. சோழர்படைகள் எல்லையை அடைந்தவுடனேயே மகாராணியார் தேவகிதேவிக்கு ஏதாவது ஆபத்தை விளைவிக்கலாம்..." என்றார்.

"என்ன! ஆபத்தா?..." சித்திரவல்லி ஏதோ நினைவாகக் கேட்டாள்.

"ஆமாம், அந்த ஆபத்தைத் தவிர்க்கவே தங்களைக் கல்யாணபுரத்திற்கு விரைந்து செல்லுமாறு சொல்லியிருக்கிறார் அமைச்சர்" என்றார் அந்த ஒற்றர்.

சித்திரவல்லி கனவுலகிலிருந்து மீண்டாள். திடீரென்று நம்பிக்கை அவள் இதயத்தில் துளிர்விட்டது.

"நீங்கள் எல்லாம் எப்போது கல்யாணபுரத்துக்கு வருவீர்கள்...?" என்று கேட்டாள்.

"நாங்கள் இங்கேயே இருப்போம். தோற்று ஓடிவரும் சோழர் படைகளுக்குத் தொல்லை கொடுக்கத் திட்டம் வகுத்துள்ளோம்..."

"சோழர்படை தோற்றுவிடும் என்று உறுதியாக நம்புகிறீர்களா?"

"உறுதியா! சோழர்கள் வீரர்களாக இருக்கலாம். இப்போதெல்லாம் அறிவு மழுங்கிவிட்டது. இல்லாவிட்டால் பெருஞ்சிலையொன்றைப் பட்டப்பகலில் குதிரைகள் பூட்டிய வண்டியில் பகிரங்கமாகக் கொண்டுவந்தோமே... அவர்களால் தடுக்க முடிந்ததா? சாளுக்கிய இளவரசர், சோழநாட்டின் பெரும் பதவி வகித்து எல்லா ரகசியங்களையும் அறிந்துகொண்டாரே அவர்களால் கண்டுபிடிக்க முடிந்ததா? பெரும் சோழசக்ரவர்த்தி - மகாவீரர் அவர் சாளுக்கிய இளவரசரை மிகவும் நம்பித் தன் அருகேயே அழைத்துச் செல்கிறார். அவரது புத்தி மழுங்கியதை என்னவென்று சொல்வது...?"



சித்திரவல்லியின் மெய்சிலிர்த்தது. ஆகா... சோழநாட்டினரை முட்டாள் களாக்கிய கைங்கரியத்தில் தனக்கும் பங்கு உண்டு என்பதை நினைக்கும் போது இடையில் மறைத்து வைத்திருக்கும் குறுவாளால் குத்திக்கொண்டு மாளலாம் என்ற வேகம் உண்டாகியது.

'காதலாம், காதல்! ஏ, பேதைப்பெண்ணே! நீ உயிருக்குயிராய்க் காதலித்த ஜெய்சிம்மன் சோழசக்ரவர்த்தியின் மிக அருகே இருக்கிறான். எந்தக் கணத்திலும் சக்ரவர்த்திக்கு ஆபத்தை விளைவிக்கலாம் ஓடு, ஓடு... ஆபத்தைத் தடுத்துவிடப் பறந்து செல்'.

நீ ராஜாளியாகிப் பாசறை மீது பறந்து சென்று ஜெயசிம்மனைத் தூக்கிக் கொண்டே போய்விடு.

நீ ஒரு காகமாகி, கூடாரத்தின் மேல் அமர்ந்து அரசர் காதில் மட்டும் விழுமாறு ஆபத்தை எடுத்துக் கரை. நீ ஓர் ஆந்தையாகி, படைகள் நடுவே சென்று, அலறி, அலறி ஆபத்தை எடுத்துச் சொல்லு...

ஓ! அதெல்லாம் வேண்டாம். நீ கருநாகமாகிவிடு. வளைந்து வளைந்து விரைந்து ஊர்ந்து சென்று, சோழசக்ரவர்த்திக்குத் தீங்கு விளைவிக்க நினைக்கும் ஜெயசிம்மனை விஷப்பற்களால் தீண்டிவிடு...

சித்திரவல்லி விம்மினாள். 'காதலித்தவரையே விஷமிட்டுக் கொல்வதா... முடியாது. முடியாது. அதைவிட நானே உயிரை மாய்த்துக்கொள்வேன்...'

'சாளுக்கியநாட்டுக்குச் செல்வதாம்! கல்யாணபுரத்துக்குச் செல்வதாம்! சோழர்களை முட்டாள்களாக்கிக் கவர்ந்து வந்த துவார பாலகர் சிலையை என் கையால் அங்கே சேர்ப்பிப்பதாம்! தேவகி தேவியைச் சந்திப்பதாம். இதைவிடக் கொடிய தண்டனை வேறு வேண்டுமா...'

சித்திரவல்லி திடுக்கிட்டாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஏனம்மா அழுகிறீர்கள்? இளவரசருக்கு ஆபத்து ஒன்றும் வராது. அவர்தான் வருங்கால சாளுக்கிய சக்ரவர்த்தி. சோழநாட்டையும் சேர்த்து ஒரு குடைக்கீழ் ஆளப்போகிறவர். அப்போது நமது சேவை போற்றப்படும். தக்க வெகுமதி கிடைக்கும். நீங்கள் காலை உணவை முடித்துக்கொண்டு புறப்படுங்கள். காஞ்சிபுரத்தின் கோட்டைக்கு வெளியே எல்லையில் எப்போதும் தயாராக விரைந்து செல்லக்கூடிய நான்கு குதிரைகள் பூட்டிய ரதம் காத்திருக்கும். உங்களுக்கு உதவியாக இருக்க இந்த அடையாள மோதிரம்..."

சித்திரவல்லி கண்களைத் துடைத்துக்கொண்டாள். மோதிரத்தை வாங்கிக்கொண்டாள். ஒரு குருட்டுத்தைரியம் பிறந்தது. ஓர் உறுதி உள்ளத்தில் எழுந்தது. ஒன்று, ஜெயசிம்மனின் மனத்தை மாற்றி, சோழர்களின் நண்பராகவே மாறும்படி செய்வது. அதற்காக சோழசக்ரவர்த்தியிடம் மன்றாடிச் சாளுக்கிய நாட்டைப் பரிசாக வாங்கித் தர முயல்வது. முடியாவிட்டால், அவரால் ஏற்படவிருக்கும் ஆபத்தினின்று சோழநாட்டைக் காப்பாற்றுவது...

சித்திரவல்லி காஞ்சியை அடைந்தபோது சோழர்படைகள் அங்கு தண்டு இறங்கி இருந்தன. கோட்டைக்கு வெளியே நான்கு குதிரைகள் பூட்டிய ரதம் நின்றுகொண்டிருந்தது. ரதசாரதியிடம் பேச்சுக் கொடுத்து விவரம் அறிந்துகொண்டாள். இரண்டு நாள் - மூன்று நாள் - என்று நாள்கள் ஓடிக்கொண்டிருந்தன. குணரேகாவுக்காக ரதம் காத்திருப்பதை அவள் அறிந்துகொண்டாள். தன்னைக் குணரேகா என்று கூறிக்கொண்டு ரதத்தில் பறந்திருக்கலாம். ஆனால், சித்திரவல்லி குணரேகாவைச் சந்திக்க விரும்பினாள். குணரேகாவின் துணையுடன் சில காரியங்களைச் சாதிக்க விரும்பினாள்.

ரதசாரதியிடம் அடையாள மோதிரத்தைக் காட்டி ரதத்தில் ஏறி அமர்ந்து காத்திருந்தாள். அவள் எதிர்பார்த்தது போல் நடந்தது. குணரேகா விரைந்து வந்து ரதத்தில் ஏறினாள். சித்திரவல்லி அங்கே அமர்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்தாள்.

''என்னை எதிர்பார்க்கவில்லை, இல்லையா குணரேகா...?'' என்றாள் சித்திரவல்லி. ''உனக்குப் பிடிக்காவிட்டால் நான் இப்போதே இங்கிருந்து சென்று விடுகிறேன்'' என்று கூறி தேரினின்று இறங்க முற்பட்டாள்.

''வேண்டாம், வேண்டாம். உன்னைக் கண்டவுடன் முதலில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது உண்மை. எல்லா உண்மைகளும் தெரிந்துவிட்டனவோ என்று பயந்ததும் உண்மை... ஆனால்...'' என்று கூறிச் சற்று நிறுத்திய குணரேகா சித்திரவல்லியின் விழிகளைக் கூர்ந்து நோக்கினாள்.

''உம்... சொல்லு... ஆனால்...'' சித்திரவல்லி உற்சாக மூட்டினாள்.

''என் பயம் தெளிந்துவிட்டது... இன்னும் உண்மை வெளிப்பட வில்லை...'' குணரேகா சிரித்துக்கொண்டே கூறினாள்.

''இல்லை... உண்மை தெரிந்துவிட்டது. இளஞ்சென்னியைத் தாக்கி, சிலையுடன் நீங்கள் தப்பி வந்தது தெரிந்துவிட்டது'' அழுத்தந்திருத்தமாகச் சித்திரவல்லி கூறினாள்.

குணரேகா மௌனமாக இருந்தாள். பிறகு ''நாமிருவருமே இந்த ரதத்தினின்று இறங்கி விரைந்து சென்று சோழச்சக்ரவர்த்தியிடம் உண்மையைச் சொல்லிவிடுவோமா?'' என்று கூறினாள்.

''வேண்டாம்... வேண்டாம். ரதத்தை விரைவாக ஓட்டச் சொல். வடபெண்ணை ஆற்றங்கரையில் சிலை காத்திருக்கும்... சிலையைச் சாளுக்கிய சக்ரவர்த்திகளிடம் சேர்ப்பிக்க வேண்டும். தேவகி தேவியைச் சந்திக்க வேண்டும்...!''

குணரேகா திகைத்தாள். ''உனக்கு எப்படித் தெரியும் சித்திரவல்லி... அந்தக் காரியத்தைச் செய்யவே என்னை ஜெயசிம்மன் அனுப்பினார்.''



''என்னையும் அனுப்பினார்'' என்று சித்திரவல்லி தன்னிடமிருந்த அடையாள மோதிரத்தைக் காட்டினாள். மேலும் தொடர்ந்து, ''வடக்குக் கோட்டை வாயில் அருகே ரதம் காத்திருக்கும் என்று சொன்னார்'' என்றாள்.

குணரேகாவுக்கு வியப்பு, பயம், கோபம் எல்லாம் ஒன்று கலந்து தோன்றின.

''என்னிடமும் கூறி, உன்னிடமும் கூறி வந்திருக்கிறாரா! ஜெயசிம்மன் பொல்லாதவர். நம்பக்கூடாது...'' என்று குணரேகா சீறினாள்.

''நான் நம்பி ஏமாந்தேன். உனக்குக்கூடவா அந்த நிலை!''

''நான் ஏமாறவில்லை. ஆனால், ஏதோ ஒருவிதத் தாபத்தால், மகுடியில் மயங்கிய நாகம் போலிருக்கிறேன்...'' என்று வேதனையுடன் கூறினாள் குணரேகா.

''கண்ணும் செவியும் பாம்பிற்கு ஒன்றுதான். நாகம் என்று உன்னை வர்ணித்துக்கொண்டது சரியே. இளஞ்சென்னியை ஏன் கொலைசெய்ய முயன்றாய்?'' என்று சித்திரவல்லி சீறினாள்.

''நான் கொல்ல முயலவில்லை. என்னிடம் தவறாக நடக்க அந்த அசடு முற்பட்டபோதும் நான் ஒன்றும் செய்யவில்லை. ஜெயசிம்மன் தான் அவனைக் கொல்ல முற்பட்டது. அங்கே அப்படிச் செய்து இங்கே என்னையும் நம்பாமல் உன்னை அனுப்பியிருக்கிறார். அவரது வேடத்தைக் கலைத்துவிடுகிறேன். அவரது சூழ்ச்சியை அம்பலப்படுத்தி விடுகிறேன். அதற்காக இனி காத்திருக்கப் போவதில்லை. இப்போதே ரதத்தைத் திருப்பிக் காஞ்சிக்கு ஓட்டட்டும். சோழசக்ரவர்த்திகளைச் சந்தித்து உண்மையைச் சொல்லிவிடுகிறேன்.... அதற்கு நீ எனக்கு உதவுவாயா?'' என்று பரபரப்புடன் கூறி விரைந்து செல்லும் ரதத்தை நிறுத்த முற்பட்டாள் குணரேகா.

வாயில் நுரை கக்க ஓடிய குதிரைகளை இழுத்து நிறுத்தினான் தேரோட்டி.

## 23

கல்யாணபுரத்து மன்னர் மாளிகை கலகலப்பு மிகுந்து காணப்பட்டது. சென்ற முறை சோழர்களின் படையெடுப்பின் போது பழுதுபட்ட இடங்களை மிக வேகமாகப் புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். மாளிகையில் முன்புறம் ஒழுங்கற்று வளர்ந்திருந்த தேவையற்ற செடிகொடிகளையும் மண்டிக்கிடந்த புதர்களையும் வெட்டிச் சீர்செய்து கொண்டிருந்தார்கள். நகரில் பல சாலைகள் செப்பனிடப்பட்டன. முக்கியமான கட்டடங்களுக்குச் சுண்ணம் அடித்துப் புதிய தோற்றத்துடன் விளங்கச் செய்து கொண்டிருந்தார்கள்.

மன்னர் ஆகவமல்லனிடம் அந்தரங்கமாகப் பேச வாய்ப்பே கிடைக்காத பட்டத்தரசிக்கு நடுநிசிக்குமேல் மந்திராலோசனைக் கூட்டம் முடிவடைந்த பிறகு சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"இன்று எப்படியும் தங்களைச் சந்தித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டேன்," என்றாள் தேவி. ஆகவமல்லன் முகத்தில் இப்பொழுதெல்லாம் புதிய ஒளி வீசிக்கொண்டிருந்தது. முன்பிருந்த சோர்வும் கவலையும் பறந்தோடி விட்டன. தேவி கூறியதைக் கேட்டு உற்சாகமாக நகைத்து, "கங்கணம்தானே? நானும் இதோ கட்டிக்கொண்டிருக்கிறேன் பார்! கூடல் சங்கமத் துறைக்கு நீராட வந்த துறவி என்னைச் சந்தித்தார். அவரைப் பயபக்தியுடன் வணங்கினேன்." என்று கூறிய அரசரின் பேச்சின் இடையே, "வணங்கினீர்களா? சாமியார், துறவி என்றால் தங்களுக்குப் பிடிக்காதே. கஷ்டம் வரும்போது தெய்வம், துறவி, சாமியார், மந்திரவாதி என்று நாடிச் செல்லத் தோன்றும்" என்றாள் தேவி.

"அப்படியில்லை தேவி. வாழ்க்கையில் பாடம் கற்றுக்கொள்ளப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட வேண்டும். தெய்வத்துணை நமக்கு வேண்டும். தெய்வத்தின் துணை துறவிகளால் ஏற்படும்" என்றார் ஆகவமல்லன்.

"தனது துவாரபாலகரைச் சோழர்கள் கவர்ந்து சென்றபோது, தெய்வத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்றால் திடீரென்று பக்தி செய்தால் காப்பாற்றிவிடுமா?" என்று சுவாரசியமில்லாது கூறினாள் தேவி. ஏனென்றால் அவள் அவசரமாகப் பேசவந்த விஷயம் வேறு. அதைப் பேசமுடியாமல் மன்னர் வேறு ஏதோ திசையில் செல்கிறாரே என்ற கோபம்.

"மனம் திருந்திய தன் குழந்தையை என்றுமே தெய்வம் காப்பாற்றும். இல்லாவிட்டால் ஜெயசிம்மனைச் சோழ நாட்டிற்கனுப்பியிருக்குமா? அங்கே எதிரிகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் அவன் சோழமன்னருடனேயே வருவானா? கவர்ந்து செல்லப்பட்ட சிலை திரும்பி வருமா தேவி? எல்லாவற்றிற்கும் மேலாகப் படைகள் வருவதற்கு முந்தியே சிலையை ஏற்றிக் கொண்டு வண்டி வருகிறது. நாகார்ஜுனர் வரவேற்கப் போயிருக்கிறார். என்னையும் சாளுக்கியநாட்டையும் சிலையைக் கவர்ந்து சென்றதன் மூலம் அவமானப்படுத்தி விட்டதாகக் கர்வம் கொண்டிருக்கும் சோழனது கொற்றம் அடக்கத் தெய்வம் நம் பக்கம்..." ஆகவமல்லன் கூறும்போதே தேவி நகைத்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் தேவி?"

"தெய்வம் தங்கள் சகோதரர் பக்கம். எதிரியின் நாட்டில் அவர் சிக்காமல் காப்பாற்றியது. இங்கே சாளுக்கியநாட்டில் பாதியை அவருக்கு வாங்கித் தரப்போகிறது. சிலை வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? நாட்டை இழக்கப் போகிறோம் நாம். அதை நினைக்கும் போது சிரிப்பு வந்தது."



"தேவி, உன் மனத்தில் ஏன் இப்படிப் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிகிறது? ஜெயசிம்மன் சேவைக்காக இந்த நாட்டையே கொடுக்கலாம். அவனில்லாவிடில் இந்த நாட்டையே இழந்து ஓடி ஒளிந்திருப்போமே."

"அப்படியென்றால் நாட்டைப் பறிகொடுப்பதில் பூர்ண திருப்தியா தங்களுக்கு?"

"என்ன வார்த்தை சொல்கிறாய்? வேறு யாராவது சொல்லியிருந்தால் நா துண்டித்துத் துள்ளி வீழ்ந்திருக்கும்."

"ஏன், இப்பொழுதே துண்டித்துவிடலாமே. நல்லவேளையாக நான் முன்பே தகுந்த திட்டங்களை நிறைவேற்ற உத்தரவிட்டு விட்டேன்."

"என்ன உத்தரவு... எனக்குத் தெரியாமல்?"

"தங்களிடம் தெரிவிக்கவே வந்தேன். பாதிராஜ்யம் பெறுவதற்கான திட்டத்துடன் மட்டும் தங்கள் சகோதரர் வரவில்லை. முழுநாட்டையும் அபகரிக்க முடிவுசெய்து விட்டார். அந்த எண்ணத்தை வடபெண்ணை ஆற்றங்கரையிலேயே விட்டுவிட யோசனை சொல்லியுள்ளேன். அதற்காகத் தகுந்த மனிதரை அனுப்பியுள்ளேன்."

ஆகவமல்லன் தேவியின் சொற்களைக் கேட்டுச் சற்று மௌனமாக இருந்தார்.

"ஏன் மௌனம்? அந்த மனிதர் இளவரசரை என்ன செய்து விடுவாரோ என்ற பயமா?" என்று தேவி கேட்டாள்.

"பெண்புத்தி பின்புத்தி என்பார்கள். அரசியும் அதற்கு விலக்கல்ல. வடபெண்ணை ஆற்றங்கரையில் விரோதிப்படைகள் வரும் வேளையில் ஏதாவது சிக்கலில் அகப்பட்டுக்கொள்ளப் போகிறாரோ உனது 'மனிதர்'. அவர் அகப்பட்டுக்கொண்டாலும் பரவாயில்லை. ஜெயசிம்மனை அடையாளம் கண்டுகொண்டால்? பெண்ணை ஆற்றங்கரையிலேயே பலிபோட்டு விட்டால்?"

"சாளுக்கிய சாம்ராஜ்யம் வாழ முதல் பலி என்று நாடே மகிழும்."

இந்தச் சொற்களைக் கேட்டு ஆகவமல்லன் சீறியெழுந்தார். "இந்த நாட்டுப் பட்டத்தரசி என்பதால் உனது புத்திக் குறைவற்ற செய்கையை நான் ஏற்றுவிட மாட்டேன். எனக்குத் தெரியாமல் யாரை அனுப்பினாய்? என்ன சொல்லி அனுப்பினாய்? மன்னருக்குத் தெரியாமல் சதிசெய்த குற்றத்திற்கு உன்னை இப்பொழுதே பாதாளச் சிறையில் தள்ளலாம். உம், சொல்லு. என்ன சொல்லி அனுப்பினாய்?... யாரை அனுப்பினாய்?" என்று கர்ஜித்தார்.

தேவி நடுநடுங்கிவிட்டாள். சமீப காலத்தில் மன்னர் இப்படி வெகுண்டெழுந்தது கிடையாது. மேலும் தன்மீது மிகவும் அன்புடைய அரசர்

தனது சொற்களைத் தட்டமாட்டார் என்றே எண்ணினாள். ஆனால், வீறுகொண்டெழுந்த நாகம் போல் முகத்தில் சீற்றம் படமெடுத்தாடியது.

"உம். சொல்லு. யாரை அனுப்பினாய்? சோழர்படைகள் விரைந்து வரும் நேரத்தில் இப்படியொரு முட்டாள்தனமான செய்கையா?"

"நாகார்ஜுனரை அனுப்பினேன். சிலையை வரவேற்கச் சென்ற அவர், இளவரசரைச் சந்தித்து அவரது திட்டத்தை அறியுமாறும் நாட்டாசையை அவர் மாற்றிக்கொள்ளாவிடில் அந்த இடத்திலேயே அவருக்கு ஒரு முடிவுகட்டி விடுமாறும் சொன்னேன்..." இதைச் சொல்லும்போது, மிகக் கம்பீரமாகச் சொல்ல வேண்டும் என்று எண்ணிய அவள் குரலில் பெரும் நடுக்கம் ஏற்பட்டது.

ஆகவமல்லன் திடீரெனச் சிரித்தார். ஏளனமும் கோபமும் கலந்திருந்தன.

"நாகார்ஜுனரா?" என்று கூறி மீண்டும் நகைத்தார் மன்னர்.

"தேவி, உன்னைப் புத்திசாலி என்று எண்ணியிருந்தேன். நாகார்ஜுனரையா அனுப்பினாய்? ஐயோ பாவம். அவர் இந்த நாட்டிற்குப் பெரும் துரோகச் செயல்கள் பல செய்துள்ளார். அவரது துரோகத்தனத்திற்குப் பரிசு கொடுக்கவே அவரை வடபெண்ணை யாற்றங்கரைக்கு அனுப்பினேன்... பாவம்..." என்று கூறி மீண்டும் நகைத்தார் மன்னர்.

தேவியின் நடுக்கம் அதிகமாகியது. கண்களில் நீர் ததும்பியது.

"தேவி, நீ நமக்கு நல்லதைச் செய்யத் திட்டமிட்டாய். நாம் வாழ வேண்டும் என்று முடிவுசெய்தாய். ஆனால், நானோ இந்த நாடு வாழவேண்டும் என்று முடிவுசெய்துள்ளேன். ஜெயசிம்மனது அந்தரங்கத் திட்டம் எனக்குத் தெரியும். சோழர்கள் நடத்தும் இந்தப் போர்தான் கடைசிப் போர். இந்த யுத்தம் சோழநாட்டின் தலைவிதியையே மாற்றியமைக்கப் போகிறது. துறவி கட்டினாரே கங்கணம் - அது என்ன தெரியுமா? கங்கணம் கட்டிய இந்தக் கரத்தில் வாளேந்தி நான் போர்க்களம் சென்று சோழனை நேருக்கு நேர் சந்திப்பேன். வாளால் அவன் தலையை உருள வைப்பேன். அதற்கு ஜெயசிம்மன் வழிவகுத்துள்ளான். நீயோ மகத்தான திட்டத்தையே குலைத்துவிட்டாய். நாகார்ஜுனன் இந்த நாட்டின் பெரும் துரோகி. இங்குள்ள செய்திகளைச் சோழநாட்டிற்கு அவ்வப்போது அனுப்பி வந்த துரோகிக்குச் சோழப்படைவீரர்கள் கையாலேயே முடிவு தரவேண்டும். அந்தத் திட்டத்துடன் அனுப்பியுள்ளேன்... நீ காரியத்தைக் கெடுத்துவிட்டாய். எனது திட்டம் பாழானால் உன்னை மன்னிக்கமாட்டேன்" என்றார்.

தேவி அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி, விம்மினாள். ஆகவமல்லன் அவளைத் தூக்கி அணைத்துக்கொண்டு "கவலைப்படாதே, தேவி! நீ சொல்லியனுப்பியது மட்டுமல்ல, தேவகிதேவியும் அந்த



நாகார்ஜுனனைப் பயன்படுத்திக் கொண்டுள்ளாள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் இருவரது பூசலும் இத்துடன் நிற்கட்டும். வெற்றி விழாக் கொண்டாடத் திட்டம் வகுப்பதில் உங்கள் கருத்தைச் செலுத்துங்கள்" என்று கூறியவர், வாயிற்புறம் நோக்கி, "யாரங்கே" என்று உரத்த குரலில் கேட்டார்."

தேவகிதேவி நடுங்கியவாறு வந்து மன்னரது பாதங்களில் வீழ்ந்தாள். இதுவரை அங்கே நடைபெற்ற சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

"தேவகிதேவி என்று மட்டும் அழைக்கக்கூடாது. இளவரசி என்று அழைக்க வேண்டும். உனது பேச்சைக் கேட்டுப் படைகளை அனுப்பாமல் உன் தந்தை இருந்திருந்தால், சாளுக்கியநாட்டின் பரம்பரை விரோதியாகியிருப்பார்... நல்லவேளை. அவரது படைகளும் வந்து சேர்ந்துவிட்டன. நள்ளிரவு நேரத்தில் நீங்கள் ஏன் விழித்திருக்கிறீர்கள்? போய் நன்றாகத் தூங்குங்கள். பொறாமை, சதியாலோசனை - இவற்றை மனத்திலிருந்து ஓட்டி விடுங்கள், வெற்றிவிழாவுக்கு நகரை அலங்கரிக்க ஏற்பாடு செய்யுங்கள். அஷ்டமி சந்திரனைப் பார்த்தீர்களா? பௌர்ணமியன்று இதே சந்திரன் நமது வெற்றிவிழாவில் குதூகலமாகக் கலந்துகொள்வான்" என்று உற்சாகமாகப் பேசினார்.

தேவியர் இருவரும் சென்ற பிறகு படைத்தளபதி விரைந்து வந்தார். ஒற்றர்படையினர் மூலம் அவர் அறிந்த செய்தியை மன்னரிடம் அவர் சுருக்கமாக விவரித்தார். உற்சாகமாயிருந்த மன்னரின் முகத்தில் கவலைரேகை தென்பட்டது.

"காஞ்சியைவிட்டுச் சோழர்படைகள் என்றைக்கு புறப்படுகின்றன?" என்று ஆகவமல்லன் கேட்டார்.

"இன்று அதிகாலையில் புறப்பட்டிருக்கும்" என்றார் தளபதி.

"இன்றா? நாளை மறுநாள்தான் புறப்படும் என்று ஜெயசிம்மன் செய்தி அறிவித்திருந்தானே. மேலும் இன்று அஷ்டமி அல்லவா? அஷ்டமியிலா புறப்பட்டுவிட்டார்கள். அழிவு நிச்சயம்" என்று குதூகலம் ஒருபுறமும் கவலை ஒருபுறமுமாகக் கேட்டார் மன்னர்.

"திட்டமிட்டபடி நடவாமல் சோழர்கள் ஏன் போர்த்திட்டத்தை மாற்றிக்கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. நமது படைகளும் நாளையே புறப்பட்டால்தான் சரியாயிருக்கும் என்று தோன்றுகிறது" என்றார் தளபதி.

"வேண்டாம். வேண்டாம். நவமி தாண்டட்டும்."

"ஒருநாள் தவக்கம் பல மாறுதல்களை உண்டாக்கிவிடும் அரசே."

''தளபதி! நமது படைபலத்தை மட்டும் நம்பி இந்தப் போரில் இறங்க வில்லை. ஜெயசிம்மனுடைய பக்கபலம் நமக்கு உதவும். அவனிடமிருந்து செய்தி வருகிறதா என்று கவனமாகக் கவனித்தால் போதும்.''

தளபதி விடைபெற்றுக் கொண்டார். ஆகவமல்லன் இரவெல்லாம் உறங்கவில்லை. பலபல சிந்தனைகள். சிந்தனை களிடையே குதூகலம் அவர் இதயத்தில் நிறைந்திருந்தது.

அவர் எழுந்தார். தனது அறையின் மூலையில் இருந்த பெரும் மட்குடங்களைப் பார்த்தார்.

ஒன்றில் சிவப்பு வண்ணம், மற்றொன்றில் கறுப்பு வண்ணம்.

'இராசாதிராசா! தூது வந்த எனது அமைச்சர்களை மொட்டை யடித்தாய். செம்புள்ளி, கரும்புள்ளி குத்தினாய். பெண் வேடம் அணிவித்தாய். அதை உனக்குத் திருப்பி அளிக்கவே இந்த வண்ணங்கள். உன்னை உயிரோடு பிடித்து, தலையை மழித்து, சிவப்பு கறுப்புத் தீட்டி ஆஹ்ஹா ஆஹ்ஹா,' என்று தனக்குத் தானே நகைத்துக்கொண்டார்.

விடிவெள்ளி உதயமாகிவிட்டது. ஆகவமல்லன் கண்களை உறக்கம் பலவந்தமாகத் தழுவியது.

அவர் விழித்தெழுந்த போது விடிந்துவிட்டது. பொற்கதிரவன் ஆகவ மல்லனது உற்சாகத்தைக் குறைக்கும் செய்தியைக் கொண்டு வந்தான் ஒற்றர்கள் மூலம்.

''அரசே! வடபெண்ணை ஆற்றங்கரையில் சிலையை ஏற்றி வந்த வண்டி அச்சு முறிந்து விழுந்து விட்டது. நாகார்ஜுனன் தப்பிச் சோழநாட்டிற்கு ஓடிவிட்டான்'' என்ற செய்தி ஆகவமல்லனைத் திடுக்கிட வைத்தது.

அவரது உற்சாகம் குறைவது போலிருந்தாலும் அடுத்து அவர் அறிந்த செய்தி ஆகவமல்லனுக்குப் புத்துணர்ச்சியை அளித்தது.

''அச்சு முறிந்த அந்த வண்டி சரிப்படுத்தப்பட்டது. ஆற்றைக் கடந்து வண்டி வந்துகொண்டிருந்தது. நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியை நமது வீரர்கள் பாதுகாவலோடு ஓட்டி வருகிறார்கள்.''

ஆகவமல்லன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''வண்டியைத் தொடர்ந்து வரும் ரதத்தில் இரண்டு அழகிய பெண்கள் வருகிறார்கள். அவர்களை இளவரசர் ஜெயசிம்மன் அனுப்பியுள்ளாராம்.''

''பெண்களா? அழகிய பெண்களா? வெற்றித் திருமகள் நமது நாட்டிற்கு வருகிறார்கள். உடனே போய் இந்தச் செய்தியை அரசியிடம் சொல்லுங்கள்'' என்று குதூகலமாகக் கூறினார் சாளுக்கிய சக்ரவர்த்தி.



## 24

குணரேகாவைப் பார்த்துச் சித்திரவல்லி சிரித்தாள். ''இப்பொழுது ரதத்தை நிறுத்தி என்ன செய்வது?'' என்று கேட்டாள்.

''என்ன செய்வதா? காஞ்சியை நோக்கித் திரும்பிச் செல்வது. சோழசக்ரவர்த்தியிடம் நடந்ததை ஒன்றுவிடாமல் கூறுவது...'' என்று பெரிய திட்டத்தைக் கூறுவது போல் சொல்லப்போன குணரேகாவை நோக்கி மீண்டும் நகைத்து, ''நல்லயோசனை தான். ஜெயசிம்மனுக்கு உடனே மரணதண்டனை விதித்துவிடுவார்கள்'' என்றாள் சித்திரவல்லி.

''அந்தத் தண்டனையை, அளிக்காவிட்டால் சோழ சக்ரவர்த்திகளுக்கும் சோழநாட்டிற்கும் பெருந்தீங்கு ஏற்பட்டு விடும்'' என்றாள் குணரேகா.

''சாளுக்கிய இளவரசருக்கு மரணதண்டனை அளிக்கப் படுவதை நான் விரும்பவில்லை'' என்றாள் சித்திரவல்லி.

குணரேகா திகைத்து, ''ஏன், காதலனுக்கு மரணதண்டனை கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் சொல்கிறாயா? எனக்குக் கூடத்தான் இளவரசர் மீது கொள்ளை ஆசை. காதலைவிட காமம் வலுவுடையது, தெரியுமா?'' என்றாள்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. சாளுக்கியநாட்டு இளவரசருக்கு மரணதண்டனை கொடுப்பார்களோ, மாட்டார்களோ அது வேறு விஷயம். முதலில் எனக்குத் தூக்குத்தண்டனை கொடுத்துவிடுவார்கள். ஜெயசிம்மன் என்னைக் காதலிப்பதைச் சக்ரவர்த்திகள் அறிவார். விரோதி நாட்டு ஒற்றனுக்கு உதவியதற்கு அதுதான் தண்டனை. எனக்கு மரணதண்டனை அளிக்க வேண்டும் என்பது உனது விருப்பமா? என்னை ஒழித்துவிட்டால் நீயும் இளவரசரும் சந்தோஷமாக இருக்கலாம் என்பதுதானே உன் எண்ணம்?''

சித்திரவல்லி சீறியது கண்டு குணரேகா திடுக்கிட்டாள். ஒன்றும் பேசமுடியாமல் மௌனமாக நின்றாள். சித்திரவல்லியே தொடர்ந்து பேசினாள்.

''குணரேகா! இந்த இடத்தில் நாம் நின்று வீணே தர்க்கம் செய்து கொண்டிருப்பதில் பலன் இல்லை. சோழசக்ரவர்த்திகள் ஜெயசிம்மனைப் பூரணமாக நம்புகிறார். நீ சொன்னாலோ அல்லது நானே போய்ச் சொன்னாலோ அவர் நம்பமாட்டார். மேலும் அவர் மீது குற்றத்தை நிரூபிப்பதும் எளிதன்று.''

குணரேகா சலிப்புடன், ''என்னதான் செய்யச்சொல்கிறாய் சித்திரவல்லி? உன்னைப் புரிந்துகொள்ளவே முடியவில்லையே. இப்படியே கங்கநாட்டுக்கு ஓடிவிடலாமா என்றுகூடத் தோன்றுகிறதே'' என்று கூறினாள்.

"குணரேகா, நீ மனத்தில் என்ன திட்டம் வைத்திருக்கிறாயோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஜெயசிம்மன் கூறியவற்றை நிறைவேற்ற முடிவுசெய்து விட்டேன். எனக்கு ஒரு நம்பிக்கை, கடைசி நிமிடத்தில் உண்மையிலேயே அவரது மனத்தை மாற்றி, சோழர்களிடம் விசுவாசமுள்ளவர்களாகச் செய்துவிட முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்" என்றாள் சித்திரவல்லி.

"எனக்கென்னவோ நம்பிக்கையில்லை. சாளுக்கியநாடு கிடைக்கப் போகிறதே அதை விடுவாரா? சோழர்களுக்கு விசுவாசியாகி விடுவாரா?" என்றாள் குணரேகா.

"சாளுக்கியநாடுதானே? சோழசக்ரவர்த்திகளிடம் சொல்லி அவர் கரத்தாலேயே மகுடம் சூட்டுமாறு ஏற்பாடு செய்கிறேன்!"

"உன்னால் அரச பதவியை வாங்கித் தர முடியும். அப்பொழுது தானே நீ ராணியாகலாம்?" என்று குணரேகா கண்களில் குறும்புத்தனம் ஒளிவீசக் கூறினாள்.

"என்ன குறும்புப் பேச்சு, குணரேகா? எனக்கு சாம்ராஜ்யமும் வேண்டாம். ராணிபதவியும் வேண்டாம். ராணி ஆவதற்கு கட்டிய மனைவி இருக்கிறாள். அன்புக்கு ஆசைநாயகி நீ இருக்கிறாய். சோழ நாட்டைக் காப்பாற்றினால் அதுவே எனக்குச் சுவர்க்கம் கிடைத்ததுபோல்" என்றாள் சித்திரவல்லி.

குணரேகா அவளைத் தாவி அணைத்து, "என்ன இருந்தாலும் உன்னைப் போல நாட்டுப்பற்று மிகுந்த ஒருத்தியை இதுவரை நான் பார்த்ததில்லை" என்றாள்.

குணரேகாவின் அணைப்பின் அழுத்தத்தில் உடல் சிலிர்த்துக் கொண்ட சித்திரவல்லி, "இந்த அணைப்பு, புரிய இயலாத சுகத்தை எனக்கே அளிக்கிறதே. போதை மிகுந்த ஆடவர்கள் அதை அடைய உன்னைச் சுற்றி ஏன் வரமாட்டார்கள்?"

"சரி, சரி... நாம் வீணே பேசிக் கொண்டிருக்க வேண்டாம். இன்று மாலைக்குள் வடபெண்ணை ஆற்றங்கரையை அடைந்து விடுவோம். ஆகவேண்டியதைப் பிறகு பேசிக் கொள்ளலாம்," என்றாள் குணரேகா.

சற்றே ஓய்வு எடுத்துக்கொண்ட பின்னர் ரதம் பறந்தது.

பொழுதுசாய்வதற்கு முன்னே வடபெண்ணை ஆற்றங்கரையைச் சித்திரவல்லியும் குணரேகாவும் அடைந்தார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திகைக்க வைத்தது.

சாளுக்கியச் சிற்பத்தை ஏற்றி வந்த வண்டிச்சக்கரம் ஒன்று முறிந்து வண்டி ஒருபக்கம் சாய்ந்திருந்தது. வண்டியைச் சுற்றிச் சாளுக்கிய வீரர்கள்



நின்றுகொண்டிருந்தார்கள். தங்களை நோக்கி அழகிய இரு பெண்கள் வருவதைக் கண்டு சாளுக்கிய வீரர்களுக்கு உற்சாகம் பிறந்தது.

சிலை அருகே செல்ல முயன்ற அவர்கள் இருவரையும் வீரர்களின் தலைவன் தடுத்து நிறுத்தினான்.

குணரேகா துணிவுடன் கேட்டாள். "நீங்கள் யார்? ஏன் இந்தச் சிலைக்குக் காவலாய் இருக்கிறீர்கள்?"

"நீங்கள் யாரம்மா? நினைத்தவர்களுக்கெல்லாம் மறுமொழி சொல்லிக்கொண்டிருக்க முடியாது" என்று சற்று அழுத்தத்துடன் கேட்டான் தலைவன்.

"சொல்லாவிட்டால் சாவுங்கள். நாளை மறுநாள் சோழர்படைகள் வரப்போகின்றன. அவர்கள் உங்களைக் கேள்வி கேட்கமாட்டார்கள். நீங்கள் மறுமொழி கூறவேண்டிய அவசியமும் நேரிடாது" என்று குறுநகையுடன் கூறினாள் குணரேகா.

"வரட்டுமே... அதுவரையில் நாங்கள் இங்கு இருக்க மாட்டோம். நாகார்ஜுனர் அடுத்த கிராமத்திற்குப் போயிருக்கிறார். சக்கரத்தைச் சரிசெய்து வர. வந்தவுடனேயே புறப்பட்டு விடுவோம்" என்றான் தலைவன்.

குணரேகா சிரித்தாள். "வண்டிச்சக்கரத்தை எப்பொழுது பழுது பார்ப்பது? எப்பொழுது பூட்டுவது? வகையாய்ச் சிக்கிக்கொள்ளப் போகிறீர்கள். இதை எதிர்பார்த்துத்தான் இளவரசர் எங்களை அனுப்பினார்" என்றாள்.

"எந்த இளவரசர்?" படைத்தலைவன் அதட்டினான்.

"யாரை இளவரசர் என்று அழைக்க முடியும்? எல்லாம் உங்கள் இளவரசர்தான். சித்திரவல்லி. அடையாள மோதிரத்தைப் படைத்தலைவரிடம் காட்டு" என்றாள் குணரேகா. அதற்குமேல் உரத்த குரலில்.

தலைவன் திடுக்கிட்டான். சற்று பயந்தான் என்றும் கூறலாம்.

அடையாள மோதிரம் பளபளத்தது சித்திரவல்லியின் விரல்களில்.

"ஆகா! இளவரசருடைய மோதிரம்! அம்மாமார்களே, நல்ல சமயத்தில் வந்தீர்கள். வண்டியைப் பழுதுபார்த்துத் தலைநகருக்கு அனுப்பிவிட்டு எங்களை மறைந்திருக்குமாறு நாகார்ஜுனர் கட்டளையிட்டுள்ளார்" என்றான் தலைவன்.

"எதற்காக?" சித்திரவல்லி கேட்டாள்.

"சாளுக்கிய இளவரசரைக் கொன்றுவருவதற்காக. நல்ல வேளையாக நீங்கள் வந்துவிட்டீர்கள்" என்று பதைப்புடன் கூறினான் தலைவன்.

"பாவம், நாகார்ஜுனருக்கு முடிவுகாலம் வந்துவிட்டது. நான் சொல்கிறபடி கேளுங்கள். நீங்கள் எவ்வளவு வீரர்கள் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் குணரேகா.

"நாற்பது பேர்!"

"நாற்பது பேருமாகச் சேர்ந்து அந்தச் சிலையை எங்கள் ரதத்தில் வைத்துவிட முடியுமா?"

தலைவன் சிறிது நேரம் யோசித்தான். சிலையை ஒருமுறை சுற்றி வந்தான்.

"இது கல்தானே அம்மா?" என்று கேட்டான்.

"உன்னைப் போன்ற மூடர்களுக்கு இது ஒரு கல். சோழ சக்ரவர்த்திகளுக்கும் சாளுக்கிய சக்ரவர்த்திகளுக்கும் இது ஒரு கலைப்பொக்கிஷம். நமது இளவரசருக்கு இது ஒரு வெற்றிச் சின்னம்" என்று குணரேகா கூறவும் தலைவன் புரியாமல் திகைத்தான்.

"நம் ஊரில் வேண்டிய அளவுக்குச் சிலை இருக்கிறதே. இதை ஏன் வீணே எடுத்துவரச் சொல்கிறார்கள் என்றுதானே நீ நினைக்கிறாய்? முதலில் படைவீரர்கள் மேலிடத்துக் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். குறுக்குக்கேள்விகள் கேட்கக்கூடாது. இருந்தாலும் வீரர்களுக்கு இருக்க வேண்டிய தேசபக்தியைப் பற்றிச் சொல்லுகிறேன். சோழர்கள் நமது நாட்டை வென்றார்கள். கொளுத்தினார்கள். செல்வங்களைக் கொள்ளையிட்டார்கள். இழந்த நாட்டை மீட்க முடியும். இதோ சோழர்கள் தோற்கப்போகிறார்கள். கொள்ளையிட்ட செல்வங்களைப் போல் சாளுக்கியர்களால் சம்பாதிக்க முடியும். ஆனால், ஒரு நாட்டின் இந்த கலைச் செல்வங்களை மீண்டும் பெறமுடியாது. அபூர்வமான துவாரபாலகர் சிலையைச் செய்ய அந்தச் சிற்பியே மறுபிறவி எடுத்தால்கூட முடியாது. அதனால்தான் நமது ஜெயசிம்ம இளவரசர் சோழ நாட்டிற்குச் சென்று இழந்த சிலையை மிகவும் சாமர்த்தியமாக மீண்டும் கொண்டுவந்து விட்டார். இந்தச் சிலையைத்தான் கல்யாணபுரத்திற்கு அனுப்புகிறோம். பாதி வழியில் வண்டிச்சக்கரம் பழுதாகிவிட்டது. சோழர் படைகள் விரைந்து வந்து கொண்டிருக் கின்றன. உன் முட்டாள்தனத்தால் திரும்பவும் சிலையைச் சோழர்கள் அபகரித்துவிடலாமா?" என்று குணரேகா கேட்டாள்.

"கூடாது... கூடாது..." என்று தலைவன் கூவினான்.

"சிலையை மீட்டுத்தந்த இளவரசரைக் கொல்லவும் துடிக்கிறார்கள்," என்றாள் குணரேகா.



"நாங்கள் துடிக்கவில்லை. மேலிடத்துக் கட்டளை. எங்களுக்கு நாகார்ஜுனரின் கட்டளை. நாகார்ஜுனருக்கு..."

"அரசியின் வேண்டுகோள்..."

"உங்களுக்கு எப்படிம்மா தெரியும்? உங்கள் அழகிற்கும் பேச்சுச் சாமர்த்தியத்திற்கும் நீங்கள்தான் இளவரசியாக இருக்க வேண்டும்" என்றான் தலைவன்.

குணரேகா மெல்லச் சிரித்துக்கொண்டு, "இந்தச் சதித்திட்டம் இளவரசருக்கும் தெரியும். அதனால்தான் எங்களை அனுப்பினார். என்னைப் புகழ்ந்தாயே, இதோ நிற்கும் பேரழகி இளவரசருக்கு வலது கரம்" என்றாள் சித்திரவல்லியைச் சுட்டிக்காட்டி.

தலைவன் அவர்கள் இருவரையும் பார்த்துச் சொல்வது, செய்வதறியாமல் திகைத்தபோது நாகார்ஜுனர் விரைந்து வந்தார். குணரேகா தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள். சிலையைப் பற்றிய தன் திட்டத்தையும் கூறினாள்.

நாகார்ஜுனருக்கும் அது சரியெனப் பட்டது. சிலையை ஏற்றி அதே ரதத்தில் மங்கையர் இருவரையும் அனுப்பிவிட்டால், வீரர்களுடன் மறைந்திருந்து தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் குணரேகா கூறியதற்குச் சரியென்று ஒப்புக்கொண்டார்.

நாற்பது வீரர்களும் சிலையை மெல்லத் தூக்கினார்கள். போர்க்களத்தில் வாளைச் சுழற்றிக் குதிரைகளையும் யானைகளையும் மல்லர்களையும் ஓட்ட வல்ல வீரர்களால் சிற்பியின் படைப்பால் உருவான சிலையை நகர்த்துவது பெரும் பாடாகப்பட்டது. பெரும் யுத்தம் ஒன்றில் முழுமூச்சுடன் ஈடுபடுவது போல் முனைந்தனர். பெரும் ஒலி எழுப்பினர்.

நாகார்ஜுனர், "உம், உம்... சீக்கிரம்" என்று துரிதப்படுத்தினார்.

அவருக்குக் குணரேகாவையும் சித்திரவல்லியையும் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. மங்கையரிருவரும் அந்த இடத்தைவிட்டு ஒழிந்தால் போதும் என்று அவருக்குத் தோன்றியது.

சிற்பம் மெல்ல நகர்ந்தது.

நாகார்ஜுனரும் குணரேகாவும் சிற்பத்தின் கால்பக்கம் நின்று கொண்டார்கள்.

"இவ்வளவு சிரமப்படுகிறோம். சோழர்கள் ஒரு நொடியில் கொண்டு சென்று விட்டார்கள்" என்றாள் குணரேகா.

"இளவரசரும் எவ்வளவு சாமர்த்தியமாகக் கொண்டுவந்து விட்டார்!" என்றான் தலைவன்.

தலைவன் கூறியது நாகார்ஜுனருக்குப் பிடிக்கவில்லை. இளவரசரின் பெருமையைப் பற்றிப் பேசுகிறேனே!

"உம்... சிலையைக் கொண்டுவந்து என்ன பலன்? சாளுக்கிய நாட்டையல்லவா அபகரிக்கத் திட்டமிட்டுச் சோழசக்ரவர்த்தியுடன் சேர்ந்து வருகிறார்" என்றார் நாகார்ஜுனர்.

படைவீரர்கள் சிலர் அந்தச் செய்தியை அறிய ஆவலுடன், "என்ன... என்ன?" என்று கேட்கவும், கவனச்சிதறலால் தூக்கிய பிடி சற்று நழுவவும் அந்தப் பிரமாண்டமான சிலை கால்பகுதியில் சற்றுச் சாய்ந்தது.

"ஓ...ஓ!" என்ற ஓலம், கால்பக்கத்திலிருந்து எழுந்தது.

"ஐயோ... ஐயோ - செத்தோம்..." என்ற பயங்கரக் குரல்.

சாய்ந்த சிற்பத்துக்கடியில் நான்கு பேர் சிக்கிக்கொண்டனர்.

"ஐயோ குணரேகா!" என்று கூவினாள் சித்திரவல்லி.

"நாகார்ஜுனர்! நாகார்ஜுனர்!" என்று பரபரத்தார் தலைவர்.

சாய்ந்த சிலையடியில் நான்கு ஜீவன்கள் துடித்துக் கொண்டிருந்தன.

## 25

**சா**ளுக்கிய வேந்தர் ஆகவமல்லனுக்குக் குதூகலம் ஒருபுறம். பரபரப்பு மற்றொரு புறம். பல சிறு பிரிவுப் படைகளின் அதிபதிகளுக்கு எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டுக்கொண்டே இருப்பார். திடீரெனச் சிற்பிகளையும் கலைஞர்களையும் அழைத்துப் பேசுவார்.

"இழந்த சிலை மீண்டும் வருகிறது. நம் நகரத்திற்கு மீண்டும் தைரிய லட்சுமி திரும்பி வருகிறாள். அஷ்டலட்சுமிகளுள் ஏழு லட்சுமிகளும் நமது நகரத்தை விட்டுப்போன போதுகூட நான் கலங்கவில்லை. தைரியலட்சுமி கடைசியாக விடைபெற்றுக் கொண்டுபோக வந்தாள். நான் கண்கலங்கினேன். 'தேவி, நீயுமா போகிறாய். உனது உறுதுணை ஒன்று மட்டும் இருந்துவிட்டால் நான் மற்ற லட்சுமிகளை மீண்டும் அடைந்து விடுவேன். போகாதே தாயே...' என்று வேண்டிக்கொண்டேன். தைரியலட்சுமி புன்முறுவல் பூத்தாள். தைரியலட்சுமி ஜெயசிம்மன் வடிவில் வந்தாள். இழந்த துவாரபாலகர் சிற்பம் மீண்டும் வருகிறது சிற்பியாரே! சோமேசுவரரது காவல்காரனை எடுத்துச் சென்றானே சோழன். அவன் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு எனது தம்பி கொண்டு வருகிறான். தான் வருவதற்கு முன் "அந்தச் சிற்பத்தை அனுப்பிவிட்டான். நாலுகால் பாய்ச்சலில் வருகிறார் துவார பாலகர்...." என்ற பெருமையுடன் பேசினார் சாளுக்கிய மன்னர்.



"சிலைக்கு ராஜமரியாதை கொடுப்போம். கோயிலை அலங்கரிக்கச் சொல்லுங்கள். வீதியிலே தோரணங்கள் கட்டுங்கள். வீட்டு வாசலிலே நீர் தெளித்துக் கோலமிடுங்கள். யுத்தகளத்திற்குச் செல்லும் வீரர்களுக்கு வழியனுப்பும் திருவிழாவாகத் திகழட்டும். வெற்றித் திருமகளை வரவேற்கும் திருநாளாகத் திகழட்டும். காற்றிலே அசைந்தாடும் கொடிகள், அணிவகுத்துச் செல்லும் வீரர்களை 'ஜெய விஜயீ பவ' என்று அசைந்து அசைந்து வழியனுப் பட்டும். ரதத்திலே வரும் துவாரபாலகரை, 'வருக, வருக! சிவாலயத்துக் காவலரே வருக' என்று வரவேற்று மகிழட்டும்" என்று குதூகலமாகப் பேசினார்.

மன்னரது உற்சாகம் நிறைந்த சொற்கள் வீரர்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்தன. "ஒரு நாட்டிலிருந்து பெரிய சிற்பமொன்றைப் போர்க்களத்தில் கொண்டுவருவது என்றால் மகத்தான செய்கைதான். நமது இளவரசர் அந்த அற்புதச் செயலைச் செய்துவிட்டார் என்றால் வெற்றியும் நமது பக்கமே" என்று வீரர்கள் பேசிக்கொண்டார்கள். சுயநம்பிக்கை ஒரு யானை பலத்தை அளித்தது.

"சோழசக்ரவர்த்தியைப் பற்றி மிக உயர்வாகப் பேசிக் கொள்கிறார்களே... அவரை மிகச் சுலபமாக ஏமாற்றிவிட்டாரே நமது இளவரசர். அவருடனே வருகிறார். போர்முறைகள் எல்லாம் அவர் வகுத்தபடிதான் நடக்கின்றனவாம். சோழர்படைகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து அனுப்ப ஜெயசிம்மன் திட்டமிட்டிருக்கிறாராம். சோழசக்ரவர்த்திக்கு அந்தத் திட்டத்தில் பரமதிருப்தியாம். மும்முனைத் தாக்குதலால் சாளுக்கியர்கள் துவண்டு விடுவார்கள் என்று சக்ரவர்த்திகள் நினைத்து, ஜெயசிம்மனை மிகவும் புகழ்ந்தாராம்" என்று படைகளின் உயர்தா அதிகாரிகள் பேசிக் கொண்டனர்.

எல்லாம் சரிவர, திட்டமிட்டபடி நடைபெறுகின்றன என்பதில் ஆகவமல்லனுக்குப் பூரண திருப்தி. நகர எல்லையிலேயே சிலையை வரவேற்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். எல்லையை நெருங்குவதற்கு முன்பே நான்கு இளஞ்சிற்பிகளை அனுப்பி, சிலையில் பீடத்திலுள்ள எழுத்துக்களை அழித்துவிடுமாறு கட்டளையிட்டிருந்தார்.

"அமைச்சரே! ராசாதிராசசோழனின் அகம்பாவத்தைப் பார்த்தீர்களா? சிலையின் பீடத்தில் 'ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீ விஜய ராசேந்திர தேவர் கல்யாணபுரத்தை எறிந்து கொண்டுவந்த துவார பாலகர்' என்று செதுக்கச் சொல்லியிருக்கிறாராம். என்ன அநியாயம்! காலாகாலத்திற்குச் சாளுக்கிய நாட்டிற்கு அழியாத அவமானத்தை உண்டாக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். முதலில் அந்தத் தமிழ் எழுத்துக்களை அழித்துவிட வேண்டும். அதற்காகச் சிற்பிகளைத் தயாராக நகர எல்லையிலே நிற்கச் சொல்லி யிருக்கிறேன்" என்று அமைச்சரிடம் பெருமையாகக் கூறினார் ஆகவமல்லர்.

அமைச்சர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு, ''சக்ரவர்த்திகளே! எனக்கு ஒரு சந்தேகம். சென்ற முறை படையெடுத்து வந்தது ராசாதிராசரா அல்லது அவரது தம்பி ராசேந்திரரா?'' என்று கேட்டார்.

ஆகவமல்லன் அமைச்சரின் கேள்வியை முதலில் விளையாட்டாகக் கருதினார். பிறகு ஆழ்ந்து சிந்தித்து, ''ஏன் ராசாதிராசர்தான் படையெடுத்து வந்தார். உமது முகத்தில் கறுப்பு, சிவப்புப் புள்ளிகளை இட்டதை மறந்து விட்டீரா?'' என்று கேட்டார்.

''ஆமாம், என்னை அவமானப்படுத்தியது ராசாதிராசர்தான். ஆனால் சிற்பத்தின் அடிப்பீடத்தில் சிலையைக் கொண்டுசென்றவர் ராசேந்திரர் என்று செதுக்கியிருப்பதாகத் தெரிவித்தீர்களே'' என்றார் அமைச்சர்.

''எனக்குத் தெரியாது. ஜெயசிம்மன் எழுதி அனுப்பிய ஓலையில் அப்படித்தான் இருந்தது. ராசாதிராசராயிருந்தால் என்ன, ராசேந்திரராயிருந்தால் என்ன? அவமானம் தரும் பெயர்களை அழித்து விடவேண்டியதுதானே?'' என்று கேட்டார்.

''ஆமாம், ஆமாம்'' என்று எல்லோரும் தலையசைத்தனர்.

திட்டமிட்டபடி காரியங்கள் வெற்றிகரமாக நடந்து வந்தன. துவாரபாலகர் சிலை வடபெண்ணை ஆற்றங்கரையிலிருந்து விரைந்து செல்லக்கூடிய ரதத்தில் ஏற்றி அனுப்பப்பட்டது.

சித்திரவல்லிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி நீங்குவதற்கு வெகு நேரமாகியது. தோய்ந்த ரத்தவெள்ளத்தில் கிடந்த நாகார்ஜுனரைக் கிராம மக்கள் உதவியால் அப்புறப்படுத்தி அடக்கம் செய்யச் சொல்லிவிட்டுக் குணரேகாவின் உயிரைக் காப்பாற்றுவதில் சித்திரவல்லி முனைந்தாள்.

சோழர்படைகள் மறுநாள் அங்கே வந்துவிடலாம். சோழ சக்ரவர்த்திக்கு விஷயம் தெரிந்துவிடும். சித்திரவல்லி நடுநடுங்கினாள். ஆனால், மனித எண்ணப்படி ஏதும் நடப்பதில்லையே...

கல்யாணபுரத்து எல்லையில் திரளாக மக்கள் கூட்டம். அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர் மண்டலத்தாரும் கூடியிருந்தனர். வராகக் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது.

அரசி வந்திருந்தாள். தேவகிதேவி வந்திருந்தாள். சிலையுடன் இரண்டு பெண்கள் வருகிறார்களே, அவர்களைக் காணும் ஆவலில் அவர்கள் வந்திருந்தார்கள்.

''இரண்டு பெண்கள் யார்? எதற்காக வருகிறார்கள்?'' என்று அரசி ஆகவமல்லனைக் கேட்டாள்.

உதட்டில் விஷமப்புன்னகையுடன், ''என் தம்பி அதிர்ஷ்டக்காரன். அவனைக் காதலிக்கின்றனர் இரண்டு அழகிகள். சோழநாட்டினின்று



வெற்றித்திருவைக் கொண்டுவருவதுடன் அழகுத் திருமகள் இருவரையும் கொண்டுவருகிறான்'' என்றார் அரசர்.

தேவகிதேவியின் முகத்தில் கடுமை பரவியது. அதைக் கவனித்த அரசர், ''தேவகி, கவலைப்படாதே. உனது கணவரின் குணம் எனக்குத் தெரியும். ராமபிரானின் மறுஅவதாரம் அவன்; பிற பெண்களை நாடவேமாட்டான். அவனுக்கு ஏற்படப்போகும் தொல்லையை நான் தீர்த்துவைத்து விடுகிறேன்'' என்றார்.

அரசி சீறினாள் ''ஓகோ! உங்களுக்கு இன்னும் சபலம் போகவில்லையா? ஏதோ, விந்தியமலைக்காடுகளுக்குச் சென்று மீதி நாட்களை அமைதியாகக் கழிக்கப்போவதாகக் கூறினீர்களே'' என்றாள்.

''ஆமாம், உண்மைதான். ஜெயசிம்மனுக்கு நாட்டைக் கொடுக்க நீ சம்மதித்தால் நான் துறவியாகிவிடவும் சித்தமாயிருக்கிறேன்...'' என்றார் அரசர்.

தேவகிதேவிக்கு அவர் பேசுவதன் உள்ளர்த்தம் புரியவில்லை. என்றாலும் சோழநாட்டிலிருந்து வரும் அழகிகள் இருவரும் தன் கணவனைக் காதலிப்பவர்கள் என்பது அவள் அறிந்ததே. 'அவர்களை வராமல் தடுக்கமுடியாதா இறைவா!' என்று மனத்திற்குள்ளே நினைத்துக்கொண்டாள்.

ஆகவமல்லன் எதிர்பார்த்த ரதம் வந்துவிட்டது. நான்கு வெண் புரவிகளும், ''ஹா... ஹா...'' என்ற ஒலியுடன் வாயில் வெண்நுரை கக்க வந்து நின்றன. முன்கால்களைத் தூக்கிக் கனைத்தன. வண்டிச் சக்கரங்களில் பலவித வண்ணப் புழுதிகள்.

கம்பீரமான சிலை வண்டியில் கிடத்தப்பட்டிருந்தது. வைக்கோலும் துணிகளும் போட்டு மூடியிருந்தார்கள். சிலை பழுதுபடாமல் மிகக் கவனத்துடன் பாதுகாத்திருந்தார்கள்.

''மற்றொரு ரதம் வருகிறதா?'' என்று கேட்டார் அரசர். அவரது கண்கள் அழகிகளைத் தேடின. அரசி தேவகிதேவியும் விழிகளை நாலாபுறமும் சுழலவிட்டாள்.

மிகவும் பயபக்தியுடன் வீரர்களுள் ஒருவன் அமைச்சரிடம் செய்தியைச் சொன்னான். அமைச்சர் ஆகவமல்லனிடம் கூறினார்.

''என்ன... வடபெண்ணை ஆற்றங்கரையில் நடந்த விபத்தில் நாகார்ஜுனர் கொல்லப்பட்டாரா?'' என்று பரபரப்புடன் கேட்டார் அரசர்.

''ஆம், அரசே! பளுவான சிலையை மெல்ல நகர்த்தினோம் இந்த ரதத்திற்கு. சிலையை ஒரு பக்கம் சரிவரத் தூக்காததால் சிலை சரிந்தது. நமது வீரர்கள் நால்வர் நசுங்கி அந்த இடத்திலேயே இறந்தனர். நாகார்ஜுனர் வகையாகச் சிக்கிக்கொண்டார். ரதத்தில் வந்த ஒரு பெண்ணும்...'' என்று வீரன் கூறினான்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
... 600 002

"இரண்டு அழகிகள் ரதத்துடன் வருவதாகக் கூறியிருந்தாரே இளவரசர்?" ஆகவமல்லன் ஆவலுடன் கேட்டார்.

"ஒருத்தி சிலையில் அடியில் சிக்குண்டாள். மற்றொருத்தி இறந்தவர்களை அடக்கம் செய்ய அங்கேயே இருந்துவிட்டாள். இளவரசரைச் சந்தித்த பிறகு வருவதாகக் கூறினாள். சிலையை மிகவும் ஜாக்கிரதையாக ஒப்படைக்குமாறு அவள் கேட்டுக் கொண்டாள்" என்றான் வீரன்.

"அவள் பெயர் என்ன?"

"சித்திரவல்லி.... இளவரசருடன் வருவதாகக் கூறிவிட்டாள்... அவளிடம் முத்திரை மோதிரம் இருக்கிறது."

ஆகவமல்லனுக்கு மற்றச் செய்திகள் முக்கியமாகப்படவில்லை. உடனே சிலையைக் கோயிலுக்குக் கொண்டுசெல்ல வேண்டும். அன்றே பிரதிஷ்டை செய்திட வேண்டும். சிலை கிடைத்துவிட்ட செய்தியைப் போர்க்களம் புகுமுன்பு சோழமன்னர் ராசாதிராசர் செவியில் கேட்குமாறு செய்ய வேண்டும். வெற்றியின் சின்னமாகக் கொண்டுவரப்பட்ட சிலை மீண்டும் சாளுக்கிய நாட்டை அடைந்து விட்டது என்பதை அறிந்தவுடனேயே சோழமன்னரின் பலம் பாதி குறைந்துவிடும். அதிர்ச்சியும் வெறுப்பும் சேர்ந்திருக்கும் போதே தாக்குதலைத் தொடங்கினால் –

"ஹஹ்ஹா!" வெற்றிச் சிரிப்பைப் படரவிட்டார் ஆகவமல்லன்.

கோயில்வாசலில் பூசை செய்யும் குருக்கள், கோயிலின் அதிகாரிகள் பூரணகும்ப மரியாதையுடன் சிலையை வரவேற்றனர். அயல்நாட்டில் அஞ்ஞாதவாசம் செய்த சிலைக்குச் சில பிராயச் சித்தங்கள் செய்ய வேண்டும் என்று குருக்கள் கூறினார்.

"உம்... என்னென்ன செய்ய வேண்டுமோ, உடனே செய்யுங்கள். தாமதமே கூடாது. சிலை அதற்கான இடத்தில் அமர்வதைக் கண்ட பிறகே நான் போர்க்களம் புக வேண்டும்" என்று கூறினார் ஆகவமல்லன்.

சிலையைச் சுற்றியிருந்த போர்வைகளை அகற்றும் வேலை வேகமாக நடந்தது.

தாமதமாவதைச் சற்றும் விரும்பாத அரசர் அமைதியின்றிப் பரபரப்புடன், "இந்தக் காரியங்களை நகர எல்லையிலேயே செய்திருக்கலாம். சிலையின் பீடத்திலுள்ள அவமானச் சொற்களை அழிக்குமாறு கட்டளையிட்டிருந்தேன். அவசரத்திலும் பரபரப்பிலும் மறந்துவிட்டது" என்றார்.

சிலை பிரிக்கப்பட்டது. அதன் மீது குடம் குடமாகத் துங்கபத்திரை, கிருஷ்ணை ஆற்று நீர் கொட்டப்பட்டது. சிலையையே பார்த்துக் கொண்டிருந்த



சிற்பி ஒருவன் பரபரப்புடன் அமைச்சர் அருகே ஓடி வந்து, "ஐயோ, மோசம் போய்விட்டோம்... ஏமாந்துவிட்டோம்" என்று கூறினான்.

குதூகலமும் கோலாகலமும் ஆரவாரமும் வெற்றிச்சிரிப்பும் கேளிக்கைக் குரலும் மந்திரகோஷங்களும் வாழ்த்தொலியும் திடீரென நின்றன. பெரும் அமைதி நிலவியது.

அதே போன்ற அமைதி நிலவிக்கொண்டிருந்த கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரம்மராயரின் வீட்டுத்திண்ணையில் பிரம்மராயரும் சித்திரவல்லியின் தந்தையும் அமர்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தனர்.

பேச்சைவிட மௌனமே அதிகம் நிலவியது. படைகளுடன் சென்ற ராசாதிராசனைப் பற்றிய செய்தி ஏதும் இரு திசையிலும் வரவில்லையே என்ற கவலை பிரம்மராயருக்கு. தன் மகள் என்ன ஆனாளோ, என்ன நேர்ந்ததோ என்ற கவலை சித்திரவல்லியின் தந்தைக்கு.

"எல்லாம் நன்மையாக முடியும் என்றுதான் தோன்றுகிறது. ஆனால், வானத்தில் தூமகேது நட்சத்திரம் தோன்ற ஆரம்பித் திருக்கிறதே... அரசருக்கு ஆகாது என்பார்களே என்று கவலையாயிருக்கிறது." என்றார் பிரம்மராயர்.

"ஏன் சுவாமி, நேற்றுத் தெரிய ஆரம்பித்த வால்நட்சத்திரம் சோழநாட்டில் மட்டும்தான் தெரியுமா, அல்லது சாளுக்கிய நாட்டிலும் தெரியுமா?" என்று கேட்டார் சித்திரவல்லியின் தந்தை.

"வடக்கேதான் தெளிவாகத் தெரியும் என்று சோதிடர் கூறினார்" என்றார் பிரம்மராயர்.

நிம்மதிப் பெருமூச்சு விட்ட சித்திரவல்லியின் தந்தை, "எப்படியோ நல்லது நடந்தால் சரி. என் மகளும் நல்லபெயருடன் திரும்பிவர கங்கைகொண்டசோழீசர் அருள் புரியவேண்டும்" என்றார்.

"கவலைப்படாதே, உன் மகள் தக்க சமயத்தில் என்னை எச்சரித்து விட்டுத்தான் சென்றாள். என் காலடியில் ஓலையொன்றை வைத்துவிட்டுச் சென்ற பிறகுதான் முழு விவரங்களை அறிந்து கொண்டேன். எல்லாம் நன்மையாக முடியும்" என்று அவர் கூறினாரே தவிர, அவர் உள்ளத்தில் சொல்லமுடியாத வேதனை தோன்றியது. சக்ரவர்த்தியும் அவரது தம்பி இளவரசரும் போர்க்களத்தில் ஒரே சமயத்தில் சென்றிருப்பது அவருக்கு வேதனையை அளித்தது. இளவரசரைக் களத்திற்குச் செல்லுமாறு அவர்தாம் யோசனை கூறினார். 'அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்... அதிகப் படை பலத்துடன் செல்லாமல் குறைவான படை வீரர்களுடன் செல்கிறார்... சாளுக்கியர்கள் மறைந்திருந்து தாக்கலாம். துரோகிகள் எந்த வடிவத்தில் இருப்பார் என்பது தெரியாது' இவ்வாறாக எண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில் தலைமைச் சிற்பி ஓடோடி வந்தார். அவர் மிகுந்த பரபரப்புடன் இருந்தார்.

"சுவாமி, உடனே சிற்பக்கூடத்திற்கு வாருங்கள். என் கண்களையே நம்பமுடியவில்லை" என்று பதட்டத்துடன் கூறினார் சிற்பி.

பிரம்மராயர் மிகவும் அமைதியுடன் அவரைப் பின் தொடர்ந்தார்.

சிற்பக்கூடத்தில் பிரம்மராயர் கண்ட காட்சி! அவரது கண்களை அவரால் நம்பமுடியவில்லை.

எந்தச் சிலையைச் சாளுக்கியர்கள் கவர்ந்து சென்று விட்டனர் என்று எண்ணினார்களோ அதே துவாரபாலகர் சிலை கம்பீரமாகக் கிடந்தது. அதன் மீது துணிகள் போட்டு மூடப்பட்டிருந்தது.

"கவர்ந்து சென்றது எந்தச் சிலை?" என்று பிரம்மராயர் கேட்டார்.

"துவாரபாலகர் சிலையைப் போல் மற்றொன்று செய்தேனே, அதைத் தவறுதலாக எடுத்துப்போய் விட்டார்கள்." சிற்பி பெருமையுடன் கூறினார்.

"அவர்கள் எடுத்துப்போய் விட்டார்களா? தாராசுரத்திற்குச் சிலையை அனுப்பும் போது நீதான் புதிய சிலையை அனுப்பி யிருக்கிறாய். தவறு ஒரு விதத்தில் நல்லதாகப் போய்விட்டது" என்றார் பிரம்மராயர்.

இவ்வாறு, கங்கைகொண்டசோழபுரத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடினாலும் கல்யாணபுரத்தில் ஆகவமல்லன் கோபாவேசமாய்த் தாண்டவமாடிக் கொண்டிருந்தார்.

"ஜெயசிம்மன் என்னை ஏமாற்றிவிட்டான்" என்று கர்ஜித்தார் ஆகவமல்லன்.

## 26

சிலையின் அடியில் சிக்குண்ட நால்வரில் மூவர் அந்த இடத்திலேயே பலியாயினர். குணரேகாவின் உயிரைக் குடிக்காமல் அங்கத்தை மட்டும் அந்தச் சிலை எடுத்துக்கொண்டது. சதங்கை அணியும் பாதங்கள் நசுங்கின. தாளத்துக்குத் தக்கபடி நடனமாடும் பாதங்கள் உருக்குலைந்தன.

சித்திரவல்லி மயங்கி விழாத நிலைதான். ஆனாலும் அவள் தன் இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டாள். அதைவிட அதிர்ச்சியை எதிர்பார்த்துக் கங்கைகொண்டசோழபுரத்தைவிட்டுப் புறப்பட்ட வளல்லவா? அதனால் இந்தக் கோர விபத்தைக் கண்டு ஒரே கணம் தயங்கினாலும் மறுகணம் அடுத்து நிகழ வேண்டியவற்றைத் துரிதமாகக் கவனிக்கலானாள். பொத்தப்பி கிராம மக்கள் அவளுக்கு வேண்டிய உதவியைச் செய்தனர். மூன்று பேரின் உடலை அடக்கம் செய்தனர். குணரேகாவின் பாதங்களில் ஏற்பட்ட ரணத்திற்குச்



சிகிச்சை செய்ய வைத்தியர் அழைத்து வரப்பட்டார். எந்த நேரத்திலும் சோழர்படைகள் அந்தப் பக்கம் வந்துவிடும். சிலை அங்கேயிருப்பது பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்ற எண்ணத்தில் உடனே கல்யாணபுரத்திற்குக் கொண்டுபோகுமாறு துரிதப்படுத்தினாள் சித்திரவல்லி. அசலான சிலை அதுவன்று என்பதைத் தெரிந்து கொண்டிருந்தால் நடந்த சம்பவமே வேறு விதமாயிருக்கும். சிலை பறிபோனாலும் ஜெயசிம்மனைச் சந்தித்து அவன் மனத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் அவள் அங்கேயே தங்கியிருந்தாள். சோழர்படைகள் வரும் போது குணரேகாவை ஒப்படைத்துவிட்டால் அவர்கள் பிறகு நடக்க வேண்டிய சிகிச்சைகளை கவனித்துக் கொள்வர் என எண்ணினாள்.

வைத்தியர் வீட்டு முற்றத்தில் படுத்திருந்த குணரேகா இரண்டு நாட்களுக்குப் பிறகு கண் விழித்தாள். அவள் கண்ணிலிருந்து நீர்த்துளிகள் கீழே சிந்தச் சித்தமாயிருந்தன. சித்திரவல்லியின் கரங்களைப் பிடித்துக் கொண்ட குணரேகா நெஞ்சு தழுதழுக்க, "என்னை ஏன் காப்பாற்றினாய் சித்திரவல்லி? சிவன்கோயில் துவார பாலகர் சிலை அடியிலேயே கைலாயம் சென்றிருப்பேனே. கங்கை கொண்டசோழீசருக்கு எத்தனையோ ஆண்டுகள் நிருத்யாஞ்சலி செய்து வந்த நான் அவர் பாதத்தடியில் சேர்ந்திருப்பேனே! சிறந்த வைத்தியரை அழைத்து வந்து என்னை ஏன் காப்பாற்றினாய்?" என்று கேட்டாள்.

அவளது கரங்களை மெல்லத் தடவிக் கொடுத்து, விழிநீரைத் துடைத்து, "குணரேகா, உயிரைப் பறிப்பதற்கு நமக்கு உரிமையில்லை. காப்பாற்றுவது கடமை. அந்த மனிதாபிமானக் கடமையுடன் மற்றொன்றும் சேர்ந்தது. அதனால்..." என்று சித்திரவல்லி மெல்லக் கூறவும், "மற்றொன்று? அது என்ன சித்திரவல்லி?" என்று கேட்டாள்.

"சாளுக்கிய இளவரசரை நான் சந்தித்து அவர் மனத்தை மாற்ற முயல்வேன். அதில் வெற்றி பெற்று விடுவேன் என்று நம்பிக்கை எனக்கிருக்கிறது. வெற்றியின் பரிசாக உன்னை ஏற்றுக்கொள்ளுமாறு நான் வேண்டுவேன். சாளுக்கியநாட்டின் அரசராக அவர் ஆகும்போது அவரது அபிமானவல்லியாக நீ இருக்க வேண்டாமா? அந்தக் கடமை..." என்று சித்திரவல்லி கூறி வரும்போது குணரேகா சற்று அழுத்தமான குரலில், "என்ன சொல்கிறாய் சித்திரவல்லி? என்னை அவருக்கு அளித்துவிட்டு நீ என்ன செய்யப் போகிறாய்? கற்பனை செய்வதையும் சரியாகச் செய்ய வேண்டாமா? நடக்காத காரியத்தைப் பற்றிக் கனவு காண்கிறாய். ஜெயசிம்மன் ஒரு துரோகி. அவரது மனத்தை நீ மாற்றவே முடியாது. அவருக்கு அவரது நாடு ஒன்று தான் இலட்சியம். சித்திரவல்லி, நீ பெரிய தவறு செய்து விட்டாய். அச்சு முறிந்த வண்டியை அப்படியே இருக்கவிட்டிருக்க வேண்டும். சோழர்படைகள்

வரும்வரை சிலை பெண்ணை ஆற்றங்கரையிலேயே இருக்கச் செய்திருக்க வேண்டும். கையும் களவுமாக ஜெயசிம்மன் அகப்பட்டுக்கொண்டிருப்பார். நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட்டாய். சிலையும் போய்ச் சேர்ந்திருக்கும். சாளுக்கியர்களுக்கு அது முதல் வெற்றியாக அமைந்திருக்கும். இரண்டாவது வெற்றியைப் பற்றி எனக்குச் சொல்லவே நடுங்குகிறது. சதிகார ஜெயசிம்மன் உடன் இருந்து உறவாடியே சோழர் படைகளைப் பெரும் ஆபத்தில் சிக்க வைக்கப் போகிறார். அதையாவது தடுத்துவிடு. சித்திரவல்லி, நீ பயந்தால் நான் சக்ரவர்த்திகளிடம் சொல்கிறேன்'' என்று கூறினாள்.

சித்திரவல்லி சிரித்தாள். அந்தச் சிரிப்பு குணரேகாவின் அறியாமையைச் சுட்டிக்காட்டியது.

''மறுபடியும் மறுபடியும் தவறான திட்டத்தையே சொல்கிறாய். நீயும் நானும் முதலிலேயே சோழநாட்டிற்குத் தவறிழைத்து விட்டோம். நான் தெரிந்து துரோகம் செய்யவில்லை. ஆனால் எனது செய்கை ஆபத்துக்கே உதவியது என்பதை மறுக்க முடியாது. எனது செயலுக்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்புகிறேன். ஜெயசிம்மனைக் காதலித்த குற்றத்திற்காக அவரது காலடியில் விழுந்து அவர் மனத்தை மாற்றிச் சோழர்களிடம் விசுவாசமுடையவராகச் செய்யப் போகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் கடத்தப்பட்ட சிலையைச் சக்ரவர்த்திகள் பார்த்துவிட்டால் காரியமே கெட்டுவிடும். உனக்கும் எனக்கும் ஜெயசிம்மனுக்கும் மரண தண்டனை தான் கிடைக்கும். இதை எவ்வளவு தடவை சொல்வது?'' என்றாள் சித்திரவல்லி.

குணரேகாவுக்குச் சிரிப்பு வந்தது. ''உன் திட்டம் நிறைவேறும் என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டாள்.

''என்னை அவர் காதலித்தது உண்மையானால் காதலின் பெயரால் கேட்கிறேன்.'' சித்திரவல்லி நம்பிக்கையுடன் பேசினாள்.

''அவருடைய காதல் சாளுக்கிய நாட்டிடம். அதற்காக உன் காதலைத் துச்சமாக மதிப்பார். வீணே ஏமாற்றமடைந்து வேதனையடையப் போகிறாய். அதனால் சோழநாட்டிற்கு என்ன லாபம்? உண்மையிலேயே சோழநாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று நீ எண்ணினால் உடனே ஜெயசிம்மனின் சதியை வெளிப்படுத்துவது தான் நல்லது. அதற்காக நான் மரணதண்டனை ஏற்கவும் சித்தமாயிருக்கிறேன்'' என்றாள் உறுதியுடன் குணரேகா.

''உயிருக்குப் பயப்படவில்லை. உயிரைத் துரும்பென மதித்துத் தந்தையிடம் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவந்திருக்கிறேன். எதற்காக? கடைசி வினாடியிலாவது எனது நாட்டிற்கு நல்லது செய்வதற்காக.'' சித்திரவல்லி கம்பீரமாகப் பேசினாள்.



''முடியாமல் போனால்...'' என்று குணரேகா கேட்கவும் சித்திரவல்லி மறுமொழி கூற முடியாமல் சிலையென நின்றாள். ஆம். ஜெயசிம்மன் மனத்தை மாற்ற முடியாது போனால்? அதனால் சோழச் சக்ரவர்த்திகளுக்கு ஆபத்து நேர்ந்துவிட்டால்?

''குணரேகா, நீ கூறுவதும் சரிதான். சக்ரவர்த்திகளிடம் எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை..'' என்று உற்சாகமில்லாமல் கூறினாள் சித்திரவல்லி.

''நான் பார்த்துக்கொள்கிறேன். சக்ரவர்த்தியிடம் எனக்கு ஏற்பட்ட விபத்தைப் பற்றிச் சொல்லு. என்னைக் காண அவர் வருவார். பிறகு பக்குவமாகச் சதியை எடுத்துச் சொல்கிறேன்'' என்றாள் குணரேகா.

மறுநாள் காலையில் அமைதி நிறைந்த அந்தக் கிராமத்தில் படை வீரர்கள் அணிவகுத்துச் செல்லும் ஓசையும் துந்துபி முழக்கமும் எக்காளச் சத்தமும் பேரிகை ஓசையும் முரசொலியும் கேட்டன.

''படை வருகிறது, படை வருகிறது'' என்று பரபரப்புடன் சித்திரவல்லி தெருவில் ஓடினாள்.

நூறு போர்கள்கூட இருக்கமாட்டார்கள். புலிக்கொடி பிடித்த முன்னணிப் படை வீரர் குதிரையில் செல்ல, போர்முக வாத்தியம் இசைப்பவர்கள் அதற்கடுத்தபடி செல்ல, யானை மீது அம்பாரியில்-

சித்திரவல்லி கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தாள். 'இது என்ன, சோழர்படைகளா? கடல் போன்ற படைகள் எங்கே? என்னவோ திருவாரூருக்கு அரசர் பவனி செல்லும் போது உடன் செல்லும் மெய்க்காவல் படைகள் போல் குறைந்த எண்ணிக்கையில்... ஹூம்.' என்று சித்திரவல்லி கவலைப்பட்டாள்.

யானைமீது அம்பாரியில் இளவரசர் அமர்ந்திருந்தார். சித்திரவல்லிக்கு அதிசயமாகவும் இருந்தது; அதிர்ச்சியாகவுமிருந்தது. இளவரசர் எப்போது வந்தார்? ஏன் வந்தார்? சக்ரவர்த்திகள் எங்கே?

சித்திரவல்லி நிற்பதை இளவரசர் பார்த்துவிட்டார். அன்று அங்கு பாடி வீடமைக்கக் கட்டளையிட்ட இளவரசர் சித்திரவல்லியை அழைத்துவரச் சொன்னார்.

சித்திரவல்லி இளவரசரைச் சந்தித்து குணரேகாவுக்கு ஏற்பட்ட விபத்தை எடுத்துக் கூறினாள்.

''சிலையைப் பகைவர்கள் கொண்டு செல்வதை நீங்கள் இருவரும் பார்த்துக்கொண்டிருந்தீர்களா?'' என்று கர்ஜித்தார். சித்திரவல்லி அமைதியான குரலில், ''இளவரசே! சிலையை மட்டும் மீட்பதற்காக நான் வரவில்லை. சோழநாட்டின் மானத்தைக் காப்பாற்றவும் வந்திருக்கிறேன். சிலையைத் தடுத்து நிறுத்துவதால் எந்தவிதப் பலனும் ஏற்பட்டுவிடாது என்பது தெரியும்.

சிலையைச் சாளுக்கிய மன்னரிடம் ஒப்படைக்கும் பொறுப்பை நானும் குணரேகாவும் ஏற்றுக்கொண்டோம். தெரிந்தே ஏற்றுக் கொண்டோம். விரோதிகள் நாட்டில், அரசரின் மிக அருகே இருப்பதால் பலவித அனுகூலங்கள் ஏற்படும் என்று எண்ணினேன். மற்றொன்று - ஒரு வேளை ஜெயசிம்மனது மனத்தை மாற்றி அவரது அறிவையும் ஆற்றலையும் நமது நாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் எனும் ஆசை...'' என்று சித்திரவல்லி கூறி முடிப்பதற்குள் ''சித்திரவல்லி, எனக்கு எல்லாம் தெரியும். நான் புறப்பட்டு வந்ததே உனது தூண்டுதலினால்தான் - பிரம்மராயர் கூறினார். சக்ரவர்த்தி போர்க் களத்திற்கு வரக்கூடாது என்று தடைவிதித்திருந்தும் நான் ஓடோடி வந்ததே நீ தெளிவுப்படுத்தியதால்தான். உன்னைச் சந்தேகிக்க வில்லை... ஆனால் குணரேகாவுக்கு ஏற்பட்ட விபத்து தான் என் மனத்தை வாட்டுகிறது. வா, அவளைப் போய்ப் பார்ப்போம்'' என்று புறப்பட்டார் இளவரசர்.

தன்னைக் காண இளவரசர் அங்கு வருவார் என்று குணரேகா எதிர்பார்க்கவில்லை. பாதங்களில் பெரும் கட்டுடன் கிடந்த அவளை ஒரு கணம் இமை கொட்டாமல் நோக்கிய இளவரசர் ராசேந்திரர், ''பரதம் பழகிய பாதங்கள் இப்படி பழுதாகி விட்டனவே!'' என்று வருந்தினார். ''இந்தக் கிராமத்தில் தக்க மருத்துவ உதவி இல்லாமல் தங்கியிருப்பதில் பயனில்லை. கால்களையே வெட்டி விடும்படியான நிலை ஏற்படலாம். உடனே கங்கைகொண்டசோழபுரத்திற்கு உன்னை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன். உன்னுடன் துணையாகச் சித்திரவல்லியும் செல்லட்டும். அரச வைத்தியர் தக்கபடி சிகிச்சை செய்வார். வெற்றி முழக்கத்தோடு திரும்பி வரும் விழாவில் உனது நடனத்தைக் கண்டு நான் ரசிக்க வேண்டும்,'' என்றார்.

உடனே ரதம் ஏற்பாடு செய்யப்பட்டது. குணரேகாவுடன் செல்லச் சித்திரவல்லிக்கு மனமில்லை.

கடைசி நேரத்தில் இளவரசர் சித்திரவல்லியை அழைத்து ''நீ போக வேண்டாம். உனக்கு நிறைய வேலை இருக்கிறது.'' என்றார்.

தெற்குநோக்கி குணரேகாவும் வடக்குநோக்கிச் சோழ இளவரசருடைய படைகளுடன் சித்திரவல்லியும் பிரிந்தனர். இருவர் விழிகளிலும் நீர் ததும்பி நின்றது. ''விரைவில் திரும்பி வந்துவிடு சித்திரவல்லி!'' என்று கூறும் போது குணரேகாவின் நா தழுதழுத்தது.

மின்னல் வேகத்தில் சோழர்படைகள் துங்கபத்திரையையும் கடந்து கிருஷ்ணை ஆற்றங்கரையை நெருங்கிவிட்டது. மலைகள் சூழ்ந்த பகுதியில் பாடி வீடமைத்துக் கொண்டார் சோழசக்ரவர்த்தி. யானைகளும் குதிரைகளும் போர்வீரர்களுக்கு உணவு கொண்டு வந்த ஊர்திகளும் தங்குவதற்கு



வெகுதூரத்துக்கு வெகுதூரம் இடம் தேவைப்பட்டது. ஓய்வாகத் தங்கியிருக்கும் சமயம் எதிரிகள் திடீர்த் தாக்குதல் நடத்திவிடாதபடி விழி மூடாமல் நூற்றுக்கணக்கான வீரர்கள் காத்து வந்தனர்.

ஜெயசிம்மன் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. அவனுடைய திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும் வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் மந்திராலோசனை சபை கூட இருந்தது. சோழசக்ரவர்த்தி படைப் பகுதித் தலைவர்களையும் பிரதம தளபதியையும் ஒற்றர்படைத் தலைவரையும் கலந்தாலோசிக்க அழைத்திருந்தார்.

தீவத்தியின் ஒளியில் சோழநாட்டின் திறமைமிக்கவர்கள், தோள்வலிமை மிக்கவர்கள் திட்டம் வகுப்பதில் வல்லவர்கள் அனைவரும் முகத்திலே வீரஉணர்ச்சியும் கம்பீர உணர்ச்சியும் திகழ வீற்றிருந்தனர். அவர்கள் எதிரே சித்திர வேலைப்பாடு மிகுந்த கம்பளம் ஒன்று விரிக்கப்பட்டது. மஞ்சள் நிறக் கம்பளத்தில் கிருஷ்ணை ஆறு வளைந்து வளைந்து ஓடியது. மலைகள் பழுப்பு நிறத்தில் திகழ்ந்தன. கரிய நிற யானைகள் அணிவகுத்து நின்றன. குதிரைகள் பாய்ந்து சென்று தாக்க வேண்டிய பகுதிகள் குறிக்கப்பட்டிருந்தன.

சக்ரவர்த்தி கம்பீரமாக அங்கே வந்தார். வெள்ளிப் பூண்போட்ட மெல்லிய பிரம்பின் துணைகொண்டு படைத்தலைவர்களுக்கு ஒவ்வொரு இடமாக சக்ரவர்த்தி விளக்கி வந்தார்.

''கிருஷ்ணை ஆற்றை யானைப்படைகள் மெல்ல மெல்லக் கடந்து செல்லும். இரண்டு நாட்கள் அதற்கு ஆகலாம். அவற்றைத் தொடர்ந்து குதிரை வீரர்கள் வியூகம் போல் வளைந்து செல்வார்கள். பின்னணியில் நமது வீரர்கள் அணிவகுத்துச் செல்வார்கள். வெற்றித் திரு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறாள் - எனது தந்தையாரை அமர வைத்துப் பெருமை கொண்ட பட்டத்து யானை மீது நான் அமர்ந்து முன் செல்வேன்...'' என்று சக்ரவர்த்தி கூறும்போது படைத் தலைவனொருவன் குறுக்கிட்டு ஏதோ சொல்லவும் கனல் பறக்கும் விழிகளுடன் அரசர், ''இந்த யுத்தம் எனக்கும் ஆகவமல்லனுக்கும் நடக்கும் யுத்தம். உங்களுக்குத் தெரியுமா? ஆகவமல்லன் தனது மூன்று கம்பீரமான யானைகளைப் போர்க்களத்துக்குக் கொண்டு வந்துள்ளானாம். அந்த யானைகளின் கம்பீரத்தை ஜெயசிம்மன் நேற்று வர்ணித்தது முதல் அவற்றை உயிருடன் கைப்பற்ற வேண்டும் எனும் அவா என்னுள்ளத்தில் எழுந்துள்ளது. சத்துரு பயங்கரன். சுரபத்திரன், மூலபத்திரன் - பெயர்களைப் பார்த்தீர்களா? உயிருடன் அவற்றைச் சிறைப் பிடிக்கவேண்டும். அந்தப் பெருமையை நான் அடைய வேண்டும். நமது யானைப்படைகள் சாளுக்கியப்படைகள் மீது திடீரென மோதும். படைவீரர்கள் சிதறுண்டு ஓடும்போது குதிரை வீரர்களும் நமது வீரர்களும் வளைத்துப் பிடித்துத் துவம்சம் செய்ய வேண்டும்... எப்படி என் திட்டம்...'' என்று முழங்கினார்.

ஜெயசிம்மன் பெருமூச்சு விட்டான். சக்ரவர்த்தியின் திட்டம் அவனைத் திடுக்கிட வைத்தது. உடனே ஆகவமல்லனிடம் சோழ சக்ரவர்த்தியின் திட்டத்தைத் தெரிவிக்க துடித்தான்.

யானைப்படைகள் கிருஷ்ணை நதியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடந்துகொண்டிருந்தன. இரண்டு நாட்கள் கழிந்தன.

ஜெயசிம்மன் தனது கூடாரத்தில் அமர்ந்து சிந்தித்த வாறிருந்தான். தனது தாய்நாட்டு மண்ணில் எதிரிகள் நடமாடத் தொடங்கி விட்டனர். பெரும் தாக்குதல்களுக்குத் திட்டமிட்டுள்ளனர். இதைப் பார்த்துக்கொண்டு இருப்பதா அல்லது அங்கிருந்து தப்பிச் சென்று சோழர்களின் திட்டங்களை ஆகவமல்லனிடம் தெரிவிப்பதா எனும் சிந்தனையில் மூழ்கியவாறிருக்கும் போது கூடாரத்தின் வாயிலிலுள்ள திரையசைந்தது.

"யாரது?" ஜெயசிம்மன் துள்ளி எழுந்தான், தன் கையிலிருந்த துணிச் சுருளை மறைத்தவாறு போர்முறைகளும் படைகளின் நடமாட்ட விவரமும் தாக்குதலைப் பற்றிய திட்டங்களும் நிறைந்த வரைபடம் அது. அதை ஆகவமல்லனிடம் எவ்வாறு அனுப்புவது என்று யோசித்துக்கொண்டிருந்த போதுதான் அந்த உருவம் உள்ளே நுழைந்தது. தலை முதல் கால் வரை போர்த்தியிருந்த அந்த உருவம் சற்று நின்றது.

"யாரது?" என்று அதட்டும் குரலில் கேட்டவாறு ஜெயசிம்மன் வாளை உருவிக்கொண்டு அந்த உருவத்தை நெருங்கினான். ஒரு வேளை சக்ரவர்த்தி வந்திருக்கிறாரோ எனவும் அஞ்சினான். அல்லது சாளுக்கியவேந்தர் தன் நம்பிக்கைக்கு உரிய ஒற்றரை அனுப்பியிருக்கலாம்.

அசையாது நின்றுகொண்டிருந்த அந்த உருவத்தின் மௌனம் ஜெயசிம்மனுக்கு எரிச்சலை ஊட்டியது. "இந்த நேரத்தில் முகமூடி அணிந்து கோழைபோல் வந்து நிற்கும் நீ யார்?" என்று சீறினான் ஜெயசிம்மன்.

"நான்தான்!" என்று மெல்லக் கூறிய சித்திரவல்லி போர்வையை விலக்கினாள்.

"நீயா, சித்திரவல்லியா? இந்த நேரத்திலா... இங்கா?" என்று கேட்ட ஜெயசிம்மன் குரலில் வியப்பு, அச்சம், அதிர்ச்சி யாவும் கலந்துநின்றன!

# 27

சித்திரவல்லி எதற்காக வந்திருக்கிறாள் என்பதை ஜெயசிம்மன் புரிந்துகொண்டு விட்டான். சித்திரவல்லியின் மனத்தை ஜெயசிம்மன் மாற்றப் போகிறானா அல்லது சித்திரவல்லி ஜெயசிம்மனின் மனத்தை மாற்றப் போகிறாளா என்பதைச் சில நிமிட நேரம்தான் முடிவுசெய்யப் போகிறது.



"சிலை களவு போய்விட்ட விஷயம் சக்ரவர்த்திகளுக்குத் தெரிந்து விட்டால் தங்கள் உயிருக்கு ஆபத்து... தங்களுடைய நாட்டிற்காகத் தாங்கள் பட்டபாடு வீணாகிவிடும் என்ற கவலையில் கடைசி கடைசியாக மன்றாடிக் கேட்கிறேன். எனக்கு ஒரு வரம் தரக்கூடாதா?" என்று சித்திரவல்லி அவனை நெருங்கினாள்.

ஜெயசிம்மன் சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். செடியிலிருக்கும் போது மலருக்கு உள்ள தள தளப்புத் தனிதான். பல காத தூரம் வந்திருக்கும் சித்திரவல்லியின் உடல் இளைத்திருந்தது. முகத்தில் சோர்வு தெரிந்தது.

"வரமா...? கைகேயி கேட்ட வரம், சத்யபாமா கேட்ட வரம் எனக்கு நினைவுக்கு வருகிறது" என்று ஜெயசிம்மன் அவள் கரத்தைப் பிடிக்க நெருங்கினான்.

"சற்றுப் பொறுங்கள். என்னையே கடைசி கடைசியாக ஒப்படைக்க ஓடிவந்திருக்கிறேன். நீங்கள் கூறிய இருவரும் தங்கள் நன்மைக்காக வரம் கேட்டார்கள். நான் நாட்டின் நன்மைக்காகக் கேட்கிறேன். இருநாடுகளின் நன்மைக்காகக் கேட்கிறேன். கிருஷ்ணா நதிக்கரையில் ஆயிரக்கணக்கான சோழவீரர்கள் பாடி வீடமைத்துக் கொண்டிருக்கின்றனர். சாளுக்கிய வீரர்களும் மறுபுறம் குவிந்து கொண்டிருக்கின்றனர். நீங்கள் மனது வைத்தால் ஒன்று போரை நிறுத்தலாம். அல்லது துரோகி என்ற பட்டப்பெயர் வாங்காமலாவது இருக்கலாம்" என்று கூறிக்கொண்டே சென்ற சித்திரவல்லியை ஜெயசிம்மன் தடுத்து, "துரோகி என்ற பெயர் ஏதாவது ஒரு பக்கத்திலிருந்து வரத்தான் செய்யும். சோழநாட்டினர் எனக்கு அத்தகைய பட்டத்தைக் கொடுத்தால் எங்கள் நாட்டில் பெரும் பகழ் பெற்று விடுவேன்... எனது நாட்டில் அப்பெயர் பெற்றால் எனது சந்ததிக்கே அழியாத பெயர். எதை ஏற்கச் சொல்கிறாய்?" என்றான்.

சித்திரவல்லி ஒரு கணம் திகைத்தாள். பிறகு, "இரு பக்கங்களிலும் நல்லபெயரைப் பெற்றுத் தர நான் முயன்றால்? நீங்கள் விரும்பியவாறு சிலை உங்கள் நாட்டைச் சேர்ந்தடைந்து விட்டது. சோழசக்ரவர்த்திகளிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டு சிலையைச் சாளுக்கியர்களிடம் சேர்த்தது சரியென்று சம்மதிக்கச் செய்கிறேன்" என்றாள்.

ஜெயசிம்மன் சிரித்தான். "நடக்காத காரியம்."

"நடத்தி முடித்துவிடும் துணிவு எனக்குண்டு."

"கடைசிக் கட்டத்தையும் தாண்டி விட்டோம். சாளுக்கியப் படைகள் நேருக்கு நேர் வந்திருக்கும். சிலை கிடைத்த மகிழ்ச்சியில் வெற்றிவிழா கொண்டாடி இருப்பார்கள். இரட்டிப்புப் பலம் ஏற்பட்டிருக்கும். இந்தச் சமயத்தில் எந்த முயற்சியும் எனக்குப் பாதகமே. எனக்குத் துன்பம் ஏற்பட, என் உயிருக்கு முடிவு ஏற்படுத்த விரும்புகிறாயா?"

"உங்கள் உயிர் பிழைக்க, உங்கள் பெயர் பிழைக்கக் காடு மலையெல்லாம் தாண்டி வந்திருக்கிறேன்."

"மற்றொன்றையும் நீ யோசிக்க வேண்டும். சித்திரவல்லி, நீ கங்கை கொண்டசோழபுரத்திலிருந்து இங்கு வந்ததே மகத்தான தவறு. சிலை கல்யாணபுரம் போய்ச் சேர்ந்துவிட்ட விஷயத்தைச் சோழசக்ரவர்த்திகள் அறிந்து, அதைக் கொண்டுசேர்த்தவள் நீ என்பதையும் அறிந்துவிட்டால் அந்த இடத்திலேயே உன்னை வெட்டிப்போட்டு விடுவார்கள். யுத்தகளத்தில் முதல் களப்பலியாக நீ விரும்புகிறாயா?"

"சோழபுரத்தில் நான் இருந்திருந்தால் எனக்குப் பெரும் அவமானம். இப்போதே என் தந்தை என்ன பாடுபடுகிறாரோ... அவருடைய நிலங்களைப் பறிமுதல் செய்திருப்பார்கள். அவரையும் சிறையிலடைத்திருப்பார்கள். இளஞ்சென்னியைப் படுகாயப்படுத்தியது நீங்கள்தான் என்பது தெரிந்திருக்கும்."

"ஏன், இளஞ்சென்னி இன்னும் உயிருடன் இருக்கிறானா?"

ஜெயசிம்மன் இப்படிக் கேட்டவுடன் சித்திரவல்லி திடுக்கிட்டாள். இதயமற்ற ஒருவர் மீது அன்பு செலுத்தினோமே என்று துடிதுடித்தாள். இவருக்கு நல்லபெயரை வரவழைப்பதை விடச் சோழ சக்ரவர்த்திகளின் கரத்தால் வெட்டுண்டு மாள்வதே சிறந்தது என எண்ணினாள்.

"இளஞ்சென்னி இறந்திருப்பான் என நினைத்தேன். அவன் எனது செய்கையை அறிந்துகொண்டு விட்டான்" என்றான் ஜெயசிம்மன்.

"உங்களுக்கு இருக்கும் நாட்டுப்பற்றைப்போல் இளஞ்சென்னிக்கும் இருக்காதா? உங்கள் நடவடிக்கையை ஆரம்ப முதலே சந்தேகித்து எச்சரித்து வந்தான் அவன்."

"என்னிடம் சொல்லவில்லையே?"

"நான் தங்களைச் சந்தேகிக்கவில்லை. காதல் என் அறிவையே மறைத்துவிட்டது. நாட்டுப்பற்றையும் காதல்போதை மறைத்து விட்டது. ஆனால்..."

"ஆனால் என்ன?"

"இன்னும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தங்கள் மனத்தை மாற்றிவிட முடியுமென்று"

ஜெயசிம்மன் ஏதும் பேசவில்லை. மௌனமாக இருந்தான். பிறகு, "சித்திரவல்லி, களைத்துப்போய் வாடி வந்திருக்கும் வேளையிலும் நீ அழகாக இருக்கிறாய். மங்கிய ஒளியில் உனது எழில் பிரகாசிக்கிறது. உனது விழிகளில் அன்புஒளி சுடர்விடுகிறது. நீ பேசும்போது உன் இதழ்கள் இனிமையை அள்ளி வீசுகின்றன. உன்னைத் தாவி அணைக்க என் இரு கரங்கள் துடிக்கின்றன.



சோழபுரத்தில் பல அருமையான வாய்ப்புகள். உன் பூ உடலை என் தோளுக்கு மாலையாக்கி அணிந்திருப்பேன். உனது மேனியெனும் இனிய தடாகத்தில் அமிழ்ந்து குளித்திருப்பேன். எந்த ஓர் ஆணும் அழகியின் மிக அருகே இருந்து இன்பத்தைத் துய்க்காமல் இருக்கமாட்டான். அப்படி இருந்திருந்தால் ஒன்று - அவன் மரக்கட்டையாக இருக்க வேண்டும். இல்லாவிடில்..."

சித்திரவல்லி குறுக்கிட்டு அவனை மிக நெருங்கி, "இல்லாவிடில்?" என்றாள்.

"என்னைப் போல் திருமணமானவனாக இருக்க வேண்டும். முன்பே எனக்கு மனைவி இருக்கிறாள் என்பதை உன்னிடம் சொல்லவில்லை. என்னை மன்னித்துவிடு. அதை மட்டுமா சொல்லவில்லை? சாளுக்கியநாட்டு இளவரசன் என்பதையும் கூறவில்லை" என்றான் ஜெயசிம்மன்.

"திருமணமானவராக இருந்தால் என்ன, என்னை நீங்கள் காதலித்தது உண்மையானால் உங்கள் விருப்பப்படி என்னிடம் நடந்திருக்க முயன்றிருக்கலாம். அப்படி நீங்கள் செய்யவில்லை. அந்த உங்கள் குணத்தைப் போற்றினேன். திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணைத் தொடுவது தவறு எனும் சோழநாட்டுப் பண்பை அறிந்தவர் என்று புகழ்ந்தேன்." என்று சித்திரவல்லி கூறியபோது பெருமிதம் தெரிந்தது.

"சித்திரவல்லி, அது மட்டுமா காரணம்? இன்னும் நீ புரிந்து கொள்ள வில்லையா? எனக்கு நாடு தான் முதன்மையானது. என் நாட்டைக் காப்பாற்றவே உயிரைத் துரும்பென மதித்து உங்கள் நாட்டிற்கு வந்தேன். உன்னைக் காதலித்ததும் என் சுயநலத்திற்காகவே" என்று கூறிய போது சித்திரவல்லி குரல் தழுதழுக்க, "அப்படியென்றால், மனம் விரும்பி என்னை நீங்கள் விரும்பவில்லையா?" என்று கேட்டாள்.

"அது நேற்றுவரை இருந்த நிலை. இன்று - இந்தக் கணத்தில் - வேறுவிதமாக மாறிவிட்டது. நீயும் உயிரைப் பணயம் வைத்துச் சோழ நாட்டினின்று சாளுக்கியநாட்டிற்கு வந்துவிட்டாய்..."

"காதலுக்காகவும் நாட்டிற்காகவும் அப்படி வந்தேன். காதலில் தோல்வி என்பது தெரிந்துவிட்டது."

"அவசரப்படாதே சித்திரவல்லி! காதல் இந்த இடத்தில், இந்தக் கணத்தில் இரவின் நடுப்போதில் மலர்ந்துவிட்டது. நீ என் அபிமானவல்லி. சாளுக்கிய இளவரசனைக் காதலித்ததால் மிக உயர்ந்துவிட்டாய்" என்று உற்சாகமாய்ப் பேசினான்.

"இல்லை, இல்லை. நான் தங்களைச் சோழநாட்டவராக ஆக்கிக் கொள்ளவே வந்தேன். எனக்கும் நாடு பெரிது." சித்திரவல்லியின் குரலில் கம்பீரம் பிறந்தது.

''மிகவும் தாமதமான தீர்மானம். உன்னையும் துரோகி என்று பட்டம் சூட்டியிருப்பார்கள். எதிரியைக் காதலித்தவள் என்று குற்றம் சாட்டியிருப்பார்கள். ஓர் உண்மையைச் சொல்கிறேன் சிறிதுநேரம் முன்புவரை, உன்னைச் சந்திக்கும் வரை இருந்த என் முடிவு வேறு. இப்போது ஏற்பட்டிருக்கும் முடிவு வேறு.'' ஜெயசிம்மன் சித்திரவல்லியின் கரங்களைப் பற்றினான்.

''என்ன முடிவு? என்ன முடிவு? என் வேண்டுகோளை நீங்கள் ஏற்றுவிட்டீர்களா?''

''உனது காதல் கோரிக்கையை ஏற்றுவிட்டேன். சாளுக்கிய இளவரசரை மணந்தால் புகுந்த வீட்டுப் பெண்ணாகத்தானே நீ ஆகவேண்டும்? இன்னும் சிறிது நேரத்தில் நான் இங்கிருந்து புறப்பட்டுவிடப் போகிறேன். கிருஷ்ணை நதியைக் கடந்து என் சகோதரரிடம் செல்லப்போகிறேன். சில முக்கியமான ரகசியப் போர் முறைகளைக் கூற வேண்டும். நீயும் என்னுடன் வந்துவிடு. இந்த ஆண்உடை உனக்குப் பொருத்தமாக இருக்கிறது. ஒருகணம்கூடத் தாமதிக்கக்கூடாது'' என்று கூறிய ஜெயசிம்மன், அவளைத் தன் மார்புடன் தழுவிக்கொண்டான்.

முதன்முறையாக ஆடவனின் ஸ்பரிசத்தை உணர்ந்த சித்திரவல்லியின் உடல் சிலிர்த்தது! பிறகு நடுங்கியது. அவனிடமிருந்து விலகிக்கொண்டாள்.

''இன்னும் உங்கள் போக்கை மாற்றிக்கொள்ளமாட்டீர்களா?'' சித்திரவல்லி கெஞ்சினாள்.

''என்னைத் துரோகம் செய்யச் சொல்கிறாயா? உனக்கு நான் வேண்டுமா அல்லது உனது நாடு வேண்டுமா? சித்திரவல்லி, உனக்கு இப்போது பெரும் ரகசியத்தைக் கூறப்போகிறேன். நான் வகுத்திருக்கும் திட்டப்படி இந்தப் போரில் சோழர்படைகள் சர்வ நாசமாகிவிடும். சோழசக்ரவர்த்தி நாளை சூரியாஸ்தமனத்திற்குள் சிறை பிடிக்கப்படுவார். தோற்றுஓடும் எஞ்சிய சோழர்படைகளையும் அங்கே மறைந்திருக்கும் சாளுக்கியப்படைகள் நசுக்கிவிடும். சோழநாடு என்ற நாடு இருக்கவே இருக்காது. கங்கைகொண்ட சோழபுரத்தில் வராகக்கொடி பறக்கும். கல்யாணபுரத்து அரியணையில் என் சகோதரர் அமர்ந்திருப்பார். சோழ சிங்காதனத்தில் நான் அமர்வேன். என் அருகே நீ அமர்வாய். நீ விரும்பியவாறு சோழ நாட்டிலேயே இருப்பாய். இப்போது சொல், நான் வேண்டுமா அல்லது உனக்கு அழியப்போகும் சோழநாடு வேண்டுமா?''

சித்திரவல்லி திடுக்கிட்டாள். 'நீறுபூத்த நெருப்புடன் பழகினோம். மறைந்திருக்கும் எரிமலை மீது ஏறி அமர்ந்தோம்' அவன் கரங்களில் துவண்ட போதே ஒரு முடிவுக்கு வந்தாள். அவனது கரத்தினின்று விடுபட்டு, ''இப்போது போனால் மீண்டும் திரும்பி வந்துவிடுவோமல்லவா?'' என்று கேட்டாள்.



''ஆமாம், ஆமாம். நான் விடிவதற்குள் திரும்பிவந்து விடுவேன். ஆனால், உன்னை அந்தப்புரத்தில் ஒப்படைத்து விடுவேன். வெற்றி முழக்கத்துடன் சாளுக்கியப்படைகள் கல்யாணபுரத்திற்குள் நுழையும் போது உன்னைச் சந்திப்பேன். சரிதானே?'' என்று அவள் கரத்தை மீண்டும் தாவிப் பிடிக்கப் போனான்.

''உம்... நேரமாகிறது. நீங்கள் சீக்கிரம் திரும்பவேண்டு மல்லவா? நாம் செல்வதை யாராவது சந்தேகிக்கமாட்டார்களா?''

ஜெயசிம்மன் நகைத்தான். ''என்னைச் சந்தேகிக்க இனிமேல் ஒரு மனிதன் உலகில் பிறக்க வேண்டும். சித்திரவல்லி, நீ சாளுக்கிய ராணி. வா, போவோம்'' என்றான்.

''நான் சோழகுலவல்லி,'' என்று சித்திரவல்லி சிரித்தாள்.

ஜெயசிம்மனும் சிரித்தான்.

அடர்ந்த இருளில், குறுக்குப்பாதையில் சித்திரவல்லியின் கரத்தைப் பற்றி வேகமாக இழுத்துக்கொண்டு ஜெயசிம்மன் நதிக்கரையில் குறிப்பிட்ட இடத்தை அடைந்தான். ஆற்றைக் கடக்கப் படகு தயாராக இருந்தது. எதிர்க்கரையை நோக்கிப் படகு சென்றது.

சில்லென்ற காற்று சித்திரவல்லியின் இமைகளைத் தழுவியது. அவள் விழித்தபோது படகு கரை சேர்ந்திருப்பதையும், அவர்களைச் சுற்றிப் பல வீரர்கள் நீட்டிய வாளுடன் நிற்பதையும் கண்டு திடுக்கிட்டாள்.

''நான் யார் தெரியுமா?'' என்று கர்ஜித்தான் ஜெயசிம்மன்.

''தங்களையும் தெரியும் தங்கள் அருகே நிற்பவளையும் தெரியும். சக்ரவர்த்தியின் உத்தரவு... உடனே தங்களைச் சிறைசெய்து அழைத்து வருமாறு'' என்று வீரர்களின் தலைவனாயிருந்தவர் கூறினார்.

''முட்டாள்களா! உங்கள் முட்டாள்தனத்தால்தான் நாட்டைச் சோழர்களிடம் அடிமைப்படுத்தினீர்கள். இப்போது தவறாக என்னைச் சிறைப்படுத்தி நாடு நகரத்தை அழியவிடப் போகிறீர்கள். எதிரிகளின் படைகள் அக்கரையில் பாடி வீடமைத்து விட்டார்கள். விரைவில் சென்று சக்ரவர்த்தியைச் சந்தித்துப் புதிய தாக்குதலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்... என்னைச் சிறைசெய்து சாளுக்கியநாடே அழிவதற்கு வழிவகுக்கப் போகிறீர்களா?'' என்றான் ஜெயசிம்மன் அதிகாரக் குரலில்.

''சக்ரவர்த்திகளிடம்தானே செல்ல வேண்டும்? சக்ரவர்த்தி களின் உத்தரவுதான் தங்களைச் சிறைசெய்து அழைத்து வருமாறு. சாளுக்கிய நாட்டிற்கு அவமானத்தை விளைவித்து எதிரியுடன் சேர்ந்து சதிசெய்யும்

தங்களை உடனே சிறைசெய்ய உத்தரவிட்டார்கள்'' என்று வீரர் தலைவன் கூறவும் ஜெயசிம்மன் திடுக்கிட்டு, ''என்ன, நான் சதிகாரனா? புதிராக இருக்கிறதே. உங்கள் சக்ரவர்த்திக்கு மூளைக்கோளாறா?'' என்று சீறினான்.

''சக்ரவர்த்தி தெளிவாகத்தான் இருக்கிறார். அவர் சொன்னபடி தான் நடந்திருக்கிறது. ஜெயசிம்மன் இரவுக்கிரவே நமது நாட்டிற்குள் நுழைவான். உடன் ஒரு பெண்ணையும் அழைத்து வருவான்' என்று சொன்னார். அப்படியே நடந்தது!...''

சித்திரவல்லியின் மனத்தில் அந்த ஒரு நொடியில் மகத்தானதொரு திட்டம் உருவாகிவிட்டது.

''உம்... சக்ரவர்த்தியைச் சந்திப்போம். யார் சதிகாரர் என்பதை எடுத்துக்கூறுவோம். ஏதோ தவறு நடந்திருக்கிறது'' என்று ஜெயசிம்மனைப் பார்த்துக் கூறினாள்.

சாளுக்கிய வீரர்கள் சூழ, ஜெயசிம்மனும் ஆணுடையில் இருந்த சித்திரவல்லியும் ஆகவமல்லன் தங்கியிருந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.

## 28

சாளுக்கிய வீரர்கள் தன்னைச் சிறைப்படுத்திச் சென்று ஆகவமல்லன் முன் நிறுத்துவார்கள் என்று கனவில்கூட ஜெயசிம்மன் நினைக்கவில்லை. சோழர்களின் போர்முறை அடங்கிய மஞ்சள் கம்பளத்தைக் கொண்டு கொடுத்து மகத்தான சாதனையைப் புரிந்தோம் என்ற பெருமையை அடைய நினைத்த ஜெயசிம்மனுக்கு ஆகவமல்லனின் கூற்று அதிர்ச்சியை அளித்தது. தன்னுடன் சித்திரவல்லியையுமல்லவா வேல்முனையில் கொண்டு சென்று நிறுத்தியுள்ளார்கள்?

''என் உயிரையே துரும்பென மதித்துச் சோழநாடு சென்று வந்த எனக்கு இதுதான் வரவேற்பா?'' என்று குமுறினான் ஜெயசிம்மன்.

ஆகவமல்லன் சிரித்தான். ''நீ உயிரை மதியாது சென்றது உனது சொந்த நன்மைக்காக. சோழமன்னரைத் தந்திரமாக அழைத்து வந்து போர்க்களத்தில் அவரை வெற்றியடையச் செய்து நாட்டை நீயே அபகரிக்க முடிவுசெய்த செய்தி எனக்கு முன்பே வந்துவிட்டது. ஆனால் நான் நம்பவில்லை. சிலை என் கண்ணைத் திறந்தது'' என்றார்.

''சிலை உங்கள் கண்ணை மூடிவிட்டது. சாளுக்கிய நாட்டின் இழந்த மானத்தைத் திரும்பிப் பெறுவதற்காக தாராசுரம் செல்ல வேண்டிய சிலையைக்



கல்யாணபுரத்திற்கு யுத்த சமயத்தில் சோழர்கள் அறியாமல் கொண்டுவந்தேனே அது எனது நன்மைக்காகவா?'' ஜெயசிம்மன் சீறினான்.

ஆகவமல்லன் அலட்சியமாகச் சிரித்தார். ''மீதி விளக்கத்தையும் சொல்லு.''

''சிலையுடன் இரண்டு கண்மணிகளை அனுப்பினேன். ஒருத்தியின் கால் நசுங்கியது. மற்றொருத்தி சிறைப்பட்டு உங்கள் முன் நிற்கிறாள். சாளுக்கிய நாட்டிற்காக இவளைக் காதலிப்பது போல் நடித்தேன். அவள் மூலமே சிலையையும் அனுப்பினேன். இதெல்லாம் எதற்காக?'' ஜெயசிம்மன் குமுறினான்.

''எல்லாம் உனது சொந்த நன்மைக்காக ஜெயசிம்மா. நீ பலம் நிறைந்தவனாயிருக்கலாம். அறிவில் மேதையாக இருக்கலாம். ஆனால், நான் உனக்கு முன்பிறந்தவன் என்பதை நினைவில் வைத்துக்கொள். இந்த நாட்டை நானே விரும்பி உனக்குத் தர எண்ணினேன். ஆனால் நீ? என்னைக் கொன்று நாட்டை அபகரிக்கச் சூழ்ச்சி செய்தாய். என்னை அவமானப்படுத்தப் போலியான சிலையை அனுப்பினாய். உனது நடிப்பை என்னிடமே புலப்படுத்தி விட்டாய்'' என்று ஆகவமல்லன் கூறியபோது ஜெயசிம்மன், ''போலியான சிலையா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டான். சித்திரவல்லியும் அதிர்ச்சி அடைந்தாள்.

சிலையைச் சென்று பார்த்தபோது ஜெயசிம்மனுக்குப் பேச நாக்கு எழவில்லை. தன் திட்டத்தையே சரியவைத்தவள் சித்திரவல்லியாகத் தானிருக்க முடியும் என்று எண்ணும்போது எரிமலையாயிற்று அவன் உள்ளம்.

''பார்த்தாயா, உனது துரோகத்தனத்தை? உனக்குப் பரிசு நாடு அன்று சிறைச் சாலைதான். நீயும் உனது அருமைக் காதலியும் சிறையிலே சல்லாபமாகக் கழியுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

''அண்ணா, என் பேச்சைக் கேளுங்கள். இதோ பாருங்கள் சோழர்களின் யுத்தமுறை. இதைக் கொண்டு சோழசக்ரவர்த்தி போர்க்களத்தில் தனித்து நிற்கும் சமயம் அவரை வீழ்த்தி, அவர் மகுடத்தைப் பறித்து உங்கள் முடியில் சூட்ட நினைத்தேனே'' என்று அலறியது ஆகவமல்லனின் காதில் விழவில்லை.

சிறைச்சாலையில் சித்திரவல்லியும் ஜெயசிம்மனும் ஒன்றாக அடைக்கப் பட்டார்கள். ஜெயசிம்மன் ஏதும் பேசவில்லை. ஏதோ சிந்தனையிலிருந்தான். 'பொழுதுபுலரும் போது சோழர்படைகள் போர் முரசம் கொட்டும். ஆயிரக்கணக்கான படைவீரர்கள் சாளுக்கிய நாட்டையே நிர்மூலமாக்கி விடுவார்களே. நாம் போட்ட திட்டமே, சோழ மன்னர் அருகே இருந்து அவரைத் தக்க சமயம் பார்த்து கொன்று விடுவதல்லவா... அந்தத் திட்டம் பாழாகிவிட்டதே' என்று மனத்துக்குள் புலம்பினான்.

சித்திரவல்லி கடைசியாகக் கேட்டாள். ''அன்பே! தங்களைச் சாளுக்கிய மன்னர் சந்தேகித்துவிட்டார். இன்னும் நேரமிருக்கிறது. சோழசக்ரவர்த்தி

களுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளுங்கள். தங்கள் மனத்தை மாற்றித் தங்களை சோழநாட்டினரின் அன்பராக மாற்றி வெற்றியுடன் வருவதாகக் கூறிவந்தேன். எதிரியைக் காதலித்தவள் என்ற அவப்பெயர் எனக்கு என்றென்றும் ஏற்படச் செய்யாதீர்கள்,'' என்று மன்றாடினாள்.

ஜெயசிம்மன் மௌனமாயிருந்தான். இரவு உணவு அளிக்கக் காவலாள் ஒருத்தன் வந்தான். அவன் இளவரசருக்கு வணக்கம் தெரிவித்தான். குனிந்து வணங்கிய போது ஜெயசிம்மன் அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டு அவனுடைய உடையை அணிந்துகொண்டு சிறையினின்று விரைந்தான்.

நடுநிசியையும் தாண்டிய அதே வேளையில் ஜெயசிம்மன் சோழர் பாசறையை நோக்கி ஓடினான்.

கீழ்வானம் வெளுத்தது. செம்பொற்கோடுகளை வானச்சுவரில் கதிர் ஓவியன் தீட்டத் தொடங்கிவிட்டான். நாள்தோறும் அவன் வரையும் எழில்கோலம்தான் அது என்றாலும் அன்றைய தினம் அவ்வோவியத்தில் ஏதோ மாறுதல் புலப்படுவது போல் தோன்றியது.

சுழன்று சுழன்று ஓடும் கிருஷ்ணை நதியின் வெள்ளத்தில் இன்று புதுச் சுழல் தென்பட்டது.

உதயகீதம் இசைக்கும் புள்ளினங்களின் குரலொலியில் சுருதி பேதம் எழுவது போன்றிருந்தது.

வீசும் சில்லென்ற காற்றில்கூட வித்தியாசம்.

பெரும் குன்று நகர்வது போல் சோழர்களின் யானைப்படைகள் இருள் பிரிந்து மெல்லிய ஒளிபடர்ந்த வேளையில் நதிக்கரையில் நகர்ந்து கொண்டிருந்தன.

பாயும்புலியைக் கொடியில் தாங்கிய குதிரை வீரர்கள் பிறைமதி வடிவில் வளைந்து மறுபுறத்தில் நடனகதியில் வந்து கொண்டிருந்தார்கள்.

'தம் தம்' என்று முரசு அதிர்ந்தது. யானையின் பிளிறலை நினைவு படுத்தும் கொம்பின் ஒலியும் 'டமர டமர டமர டம்' என்ற பறை ஓசையும் 'பூஊம் பூஊம்' என்ற சங்கின் நாதமும் அன்றைய பொழுதை வித்தியாசம் நிறைந்ததாக வரவேற்றன.

சோழநாட்டின் பட்டத்துயானை கம்பீரமாக நடைபோட்டது. சோழ மன்னரைத் தனது முதுகின் மீது அமைக்கப்பட்டிருந்த அம்பாரியில் அமர்த்தி, பல வெற்றிகளைக் கண்ட அந்த வேழம் அசைந்து அசைந்து சென்றது. போர்க்களம் என்பது அதற்கு விருந்து மண்டபமோ?

இராசாதிராசதேவர் இருள் சூழ்ந்திருக்கும் போதே எழுந்து நீராடி, வெண்ணீறணிந்து, ஆடவல்லானைத் தொழுது தன் மெய்க் காவலருக்குச்



சைகை செய்தவுடன் போர்க்களம் புகப் படைவீரர்கள் கம்பீர நடை போடத் தொடங்கிவிட்டனர். இருளோடு இருளாக அவர்கள் சாளுக்கியப்படைகளைத் தாக்கப் புறப்பட்டு விட்டனர். இமைக்கும் நேரத்தில் பிரிந்து ஒளிவருவதுபோல் தம்மிடம் விட்டுப் போர்க்களம் புகுந்தனர்.

கேடயமும் வாளும் ஈட்டியும் வேலும் சூலமும் ஏந்திய அவர்கள், ''வெற்றிவேல் வீரவேல்'' என்று முழக்கம் செய்தது தாரகமந்திரமாய் ஒலித்து, பாடும் புள்ளினங்களைக்கூட வாயடைக்கச் செய்தது. ஓடும்நதியின் இரைச்சலை அமைதிப்படுத்தியது. எங்கோ பறந்துகொண்டிருந்த கழுகுகளை இங்கு வா என்று அழைத்தது.

''ஜெயசிம்மன் எங்கே?'' என்று சோழசக்ரவர்த்தி கேட்டார். புறப் படுவதற்கு முன்பு ''எங்கே?' என்று மீண்டும் கேட்டார். யானையின் மீது ஏறி அமர்ந்தபோது அவரது விழிகள் ஜெயசிம்மன் எங்கே என்று தேடின. அவருள்ளத்தில் ஒருவிதச் சந்தேகம்.

வேழம் அசைந்து அசைந்து நடந்தபோது அருகே இருந்தவர்களிடம் ''ஜெயசிம்மன் எங்கே?'' என்று மீண்டும் கேட்டார். ''திட்டமிட்டபடி நமது படைகள் தாக்குதலைத் தொடங்கட்டும்'' என்றார் சேனைத்தலைவரிடம்.

''சாளுக்கியர்களின் முப்பெரும் கொடிய யானைகளுடன் ஆகவமல்லன் தாக்கவருவானல்லவா? அப்போதுதானே நாம் விரைந்து தாக்கவேண்டும்?'' என்று கேட்டார் சேனைத்தலைவர் .

''இதென்ன கேள்வி? ஜெயசிம்மன் இங்கே இருந்திருந்தால் கேட்டிருக்க மாட்டார். சாளுக்கியர்கள் யானைப் படைகளுடன் தான் நம்மைத் தாக்க வருவர் - என்ன?'' என்று சக்ரவர்த்தி கூறினார்.

''ஆம்.''

''யானைப்படைகளை நமது குதிரைப்படை வீரர்கள் பின்புறமாகவும் முன்புறமாகவும் வந்து சூழ வேண்டும். யானைகளின் விழிகளை நோக்கி அம்பெய்ய வேண்டும்...''

''அப்படியே சக்ரவர்த்திகளே!''

''விழியின் மீது சிறு தாக்குதல் வீழ்ந்தால் தாங்காது யானை. உடனே பயங்கரமாகப் பிளிறும். மதம் பிடித்து ஓடும். யானை மீது ஆகவமல்லன் வருவான். அவனை இந்த ஈட்டியை எறிந்து தாக்குவேன்.'' - இராசாதிராசன் கம்பீரமாகப் பேசினார்.

யுத்தகோஷம். போர் முரசம் பயங்கர நிகழ்ச்சிக்கு மேலும் பயங்கரத்தை ஊட்டிக்கொண்டிருந்தது. நாரணன் கைத் திகிரி போல் சுழன்று சுழன்று கதிரவன் வானத்தே எழுந்துகொண்டிருந்தான்.

நீலவான் மெல்ல மெல்லக் கரிய வானமாய் மாறிக் கொண்டிருந்தது. ஆயிரமாயிரம் குதிரைகளும் யானைகளும் வீரர்களும் வருவதால் எழும் தூசு வானத்தில் வேகமாய் பரந்து கொண்டிருந்தது.

சாளுக்கியப்படை வீரர்கள் பாய்ந்து வருவதை அறிவிக்கும் முரசங்கள், ஒலிகள், சப்தங்கள், முழக்கங்கள் எங்கும் நிறைந்தன.

"சக்ரவர்த்திகளே! சாளுக்கியப்படைகள் பாய்ந்து பாய்ந்து வருகின்றன...," என்று ஒரு வீரன் அறிவித்துச் சென்றான்.

இராசாதிராசனின் யானை மெல்ல மெல்ல அசைந்தது. அவரைச் சுற்றியிருந்த யானைகளும் குதிரைகளும் பிரிந்து நான்குபுறமும் பாய்ந்தோடின! தன்னந்தனியாய் யானை சென்றது.

"பேரரசே! சாளுக்கியர்களின் குதிரைப்படைகள் விரைந்து வந்து தாக்குகின்றன" என்று ஓடிவந்து கூறினான் மற்றொரு வீரன்.

"நமது படைகள் சர மழை பொழியட்டும். மின்னல் போல் வாளை வீசட்டும். இடியோசை போல் நமது யானைகளை விட்டு மோதச் செய்யட்டும்," என்று உத்தரவிட்ட சக்ரவர்த்தி, "யாரங்கே! ஜெயசிம்மனை அழைத்து வா. அவனுக்குத் தெரியும், ஆகவமல்லன் நிற்குமிடம். அவனுக்குத் தெரியும் சாளுக்கியப்படைகளின் தலைவர்கள் அணிவகுத்து வரும் இடம். விரைவில் அழைத்து வாருங்கள்" என்று உற்சாகமாகக் கூறினார்.

ஒரு யுகம் முடிந்து மற்றொரு யுகம் பிறக்கும் போது பிரளயம் ஏற்படும் என்று கூறுவார்கள். கிருஷ்ணை நதிக்கரையில் மகா பிரளயம் உருவாகியது.

குதிரைகளும் குதிரைகளும் மோதின. புலிக்கொடி பிடித்த சோழர்ப் படைகள் வராகக்கொடி பிடித்த சாளுக்கியப்படைகள் மீது பாய்ந்து மண் எனும் நல்லாளுக்குச் சாளுக்கியர்களின் சிரத்தை அஞ்சலி செய்வித்தன.

ஜெயசிம்மனைச் சோழவீரர்கள் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால், பாதாளச் சிறையினின்று தப்பி ஓடிய ஜெயசிம்மன் இருளில் பதுங்கிப் பதுங்கிப் பொழுதுபுலரும் போது போர்க்களத்தை அடைந்து விட்டான். அவன் உடலில் பெரும் பரபரப்பு. கைகள் துறுதுறுவென இயங்கின. அவன் அணிந்திருந்த சோழர்படை வீரர்களின் உடை, அல்லோலகல்லோலமுற்றுப் பெரும் தாக்குதலும் நடைபெற்ற சமயத்தில் சோழ வியூகத்திற்குள் எளிதில் நுழைய உதவியது. அவனைத் தடுத்து நிறுத்துவாரில்லை. தடுத்து நிறுத்திய ஒருவர் அவனைச் சக்ரவர்த்தி அழைப்பதாகக் கூறினார்.

கீழே சாய்ந்த வீரனைச் சுமந்திருந்த குதிரை ஒன்று அவனுக்குக் கிடைத்தது. அவன் இலட்சியம் நிறைவேறும் நேரம் வந்துவிட்டது. அவனுக்குத் துரோகப்பட்டம் கொடுத்து ஆகவமல்லன் சிறையில் தள்ளி



அவனது சகாபதத்தையே ஒழித்து விட முனைந்துவிட்டான். ஆகவமல்லனின் சதி பலிக்காது. இதோ ஜெயசிம்மன் குறிபார்த்துத் தாக்கப் போகிறான். அவனது வலதுகரம் உயர்ந்துவிட்டது. குறிபார்த்து எறியும் சக்திவாய்ந்த அவனது கரம் சோழப்பட்டத்து யானையின் மத்தகத்தை நோக்கிப் பாயப்போகிறது. யானையின் மண்டை இரண்டாகும். சோழசக்ரவர்த்தி கீழே வீழ்வார். அவர் மகுடம் மண்ணில் உருளும். அவனுக்கு வேண்டியது அவ்வளவே. சோழ நாட்டின் பரம்பரை மகுடத்தை அவன் கையில் ஏந்திக்கொள்வான். ஓடுவான் ஓடுவான் - ஆகவமல்லனை நோக்கி. அவரிடம் மகுடத்தை இரு கரங்களிலும் சுமந்து நீட்டுவான்.

"அண்ணா, நான் துரோகியா? இப்பொழுது சொல்லுங்கள்!" அவன் கம்பீரமாகக் கேட்பான்.

"அருமைத் தம்பி! எனக்குப் பிறகு - ஏன், இப்போதே நீதான் சாளுக்கியநாட்டு மன்னன். உன்னைத் தவறாக நினைத்து விட்டேன்" என்பார்.

ஜெயசிம்மன் முகத்தில் தன் ஒளி பெருமிதம். "அண்ணா, மகுடம் கொண்டுவந்தேன். மண்ணில் புரளும் அவரது தலையே வேண்டுமா?"

"வேண்டாம், தம்பி. வேண்டாம்" என்பார் ஆகவமல்லன்.

இதோ ஜெயசிம்மன் கை உயர்ந்துவிட்டது. திண்தோளின் தசைகள் இயங்கத் தொடங்கிவிட்டன. பாயப் போகிறது வேலாயுதம்!

ஆ! இதென்ன கொடுமை! அவன் கையிலிருந்த வேல் ஏன் துவள்கிறது? ஜெயசிம்மன் கையில் பிடித்திருந்த வேல் குறிதவறி விட்டதே... அது எங்கோ பாய்கிறது. அவன் எதிர்பார்த்த இடம் நோக்கி அல்ல... அவனது பரந்த மார்பைப் பொங்கி வரும் ரத்தம் நனைத்து விட்டதே!

ஓ... ஓ... ஓ... இதென்ன பயங்கரம்! ஆகவமல்லன் எறிந்த வேல் சோழர்படையைத் தாக்கிவிட்டதே. ஆகவமல்லன் நேருக்குநேர் வந்து விட்டான். யானை பயங்கரமாகப் பிளிறுகிறது. அங்குமிங்கும் ஓடுகிறது. இராசாதிராசனை நோக்கி அம்புக்கணைகள் பாய்ந்து வருகின்றன... சர... சர... சர...

'கம்பிலிச் சயத் தம்பம் நட்டதும்... கடியரண் கொள் கல்யாணர் கட்டறச்' செய்த இராசாதிராசன் செங்குருதி கொப்புளிக்க மண்மீது வீழ்ந்தான். குன்றென நின்ற உடல் மண்ணில் சாய்ந்தது.

சோழர் பரம்பரை மகுடம் மண்ணிலே வீழ்ந்தது... இல்லை... இல்லை... ராஜராஜனும் ராசேந்திரனும் அணிந்த சிபி சக்ரவர்த்தியின் பரம்பரை மகுடம் மண்ணிலே வீழவில்லை. இளம் வீரன் ஒருவன் அதைக் கையில் தாங்கிக்கொண்டான். அதோ ஓடுகிறானே...

ஜெயசிம்மன் தள்ளாடித் தள்ளாடி ஓடி வருகிறான். அவன் ஓடும் வீரனைப் பார்த்துவிட்டான். "ஏய்... நில்... நில்... உன்னை அடையாளம் தெரியாது என்று எண்ணாதே... சித்திரவல்லி! மகுடத்தைக் கொடுத்துவிடு. என் உயிர் போவதற்கு முன்பு என் அண்ணனின் காலடியில் சமர்ப்பிக்க வேண்டும். ஏய்... என்று ஜெயசிம்மன் கூவித் தொடர்ந்து ஓட முயன்றான். முடியவில்லை. ஆனால், அவனைவிட வேகமாகச் செல்லவல்ல குறுவாள் சித்திரவல்லியின் முதுகைத் தொடர்ந்து பாய்ந்தது.

"காதல் பரிசு!" அவன் உதடுகள் முணுமுணுத்தன.

"இளவரசர் அவர்களே! எழுந்திருங்கள். தாமதிக்காதீர்கள்" என்ற குரல் கேட்டு இராஜேந்திரசோழதேவர் தான் தங்கியிருந்த இடம் விட்டு ஓடிவந்தார். அவர் இரவெல்லாம் உறங்கவில்லை. என்ன செய்தி வருமோ என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார். கடல் போன்ற படைகளுடன் சென்றிருக்கும் தனது அண்ணன் ராசாதிராச சோழதேவருக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய தனது படைகளும், தானும் எந்தவிதத்தில் உதவமுடியும்? 'ஏன் வீணே இங்கே காத்திருக்கிறோம்?' என்று நினைத்தார். ஆனால், ஏதோ ஒரு வித கலக்கம் அவரை முதல் நாளிலிருந்து வாட்டியது.

"இளவரசே! உடனே புறப்படுங்கள். சக்ரவர்த்திகளின் மார்பைச் சாளுக்கியர்களின் அம்பு மாரி துளைத்துவிட்டது!" இதைச் சொல்வதற்குள் சித்திரவல்லியின் பேச்சில், நடையில் தடை ஏற்பட்டு விட்டது. முதுகில் பாய்ந்த விஷக்கத்தி தன் வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டது.

"இளவரசே, இப்படிச் சிறிது நில்லுங்கள். அணிந்துள்ள இளவரசருக்கான கிரீடத்தைக் கழற்றுங்கள். இதோ சோழரின் பரம்பரை மகுடம். இதை அணிந்துகொள்ளுங்கள்."

"கிருஷ்ணைநதிக் கரையில், கொப்பம் எனும் இந்தச் சிற்றூரில் மேலே கதிரவனும் கீழே பூமாதேவியும் அருகே ஓடும் நதியும் சாட்சியாக, சோழநாட்டுச் சாதாரணக் குடிமகளாகிய நான் தங்களுக்கு இந்த மகுடத்தை அணிவிக்கிறேன். மண்ணில் வீழ்ந்தார் நமது மாமன்னர் இராசாதிராசர். அதே மண்ணில் எழுகிறார் நமது கோப் பரகேசரிவர்மர் உடையார் ஸ்ரீ ஸ்ரீ இராசேந்திர சோழதேவர்" என்று கூறி அவரது தலையில் மகுடத்தைச் சூட்டினாள். நாட்டைத் தனது உயிரினும் மேலாகக் கருதிய சித்திரவல்லி கைகூப்பினாள். அவர் காலடியில் வீழ்ந்தாள்.

கங்கைகொண்டசோழபுரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆனால், அதில் சோகமும் கலந்திருந்தது.

கோட்டைக்கு வடக்குவாயிலில் பிரம்மராயர் முதலான பலரும் "ஜெயவிஜயீபவ" என்று கூறி வெற்றிக்களிப்புடன் வரும் இராசேந்திர சோழதேவரை வரவேற்கக் கூடியிருந்தனர். ஆனால், அதில் வருத்தமும் கலக்காமலில்லை.



கங்கைகொண்டசோழீசர் கோயிலின் முன்புள்ள பரந்த வெளியில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்களின் முன்னிலையில் மகுடம் சூடிய இராசேந்திரசோழதேவர் பேசுவார்!

"என் அருமைச் சோழநாட்டு மக்களே! பல காத தொலைவில் போர்க்களத்தில் சோழநாட்டுச் சக்ரவர்த்தியாக நான் மகுடம் சூடிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. உங்களை அந்த விழாவுக்கு அழைக்க முடியவில்லை. உங்கள் சார்பில் சித்திரவல்லி மகுடாபிடேகத்தை நடத்திக் கொடுத்தாள். போர்க்களத்தே வீர மரணம் எய்திய எனது அருமைச் சகோதரரின் மகுடத்தை மாற்றாரிடம் சிக்காமல் உங்களிடம் மிகவும் மதிப்பு வாய்ந்த சித்திரவல்லி காப்பாற்றிக் கொடுத்தாள்.

"அவள் அங்கு இல்லாதிருந்தால் சரித்திரமே மாறி இருக்கும். போர்க்களத்தில் யானை மீதிருந்து கீழே விழுந்து அரசர் இறந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் நமது வீரர்கள் கதிகலங்கி நாலா திசையும் ஓடத் தலைப்பட்டனர். யானைகள் தாறுமாறாக ஓடின. எங்கும் பீதி. சரியான சமயத்தில் சித்திரவல்லி என்னை அங்கு அனுப்பாதிருந்தால் என்ன ஆகியிருக்கும்? பயந்து ஓடிவரும் நமது படைகளை நசுக்கியிருப்பார்கள். நானும் அவர்களிடம் சிக்கியிருப்பேன். 'ஓடாதீர்கள்... நில்லுங்கள்... திருப்பித் தாக்குங்கள்' என்று கர்ஜனை புரிந்தேன். நமது படைவீரர்கள் என்னை அந்தச் சமயத்தில் எதிர்பார்க்கவில்லை.

"கதிரொளியில் பளபளவென்று மின்னும் மகுடத்தை என் முடியில் கண்ட வீரர்கள் பயத்தை ஒழித்தனர்.

"தோற்றுவிட்டோம். இனி சர்வநாசம்தான் என்று எண்ணிப் பயந்து ஓடிய வீரர்களுக்குப் புதுத்தெம்பு பிறந்தது.

"வெற்றிவேல், வீரவேல் என்ற கோஷம் எழுந்தது. புது உற்சாகம் ஏற்பட்டது. தங்களைத் துரத்திவரும் சாளுக்கியர்களைத் திரும்பித் தாக்கத் தொடங்கினர். பல மடங்கு புதுப்பலம். அவ்வளவுதான். ஹதா ஹதம். புலிகேசி, தசபன்மன், அசோகையன், ஆரையன், நன்னி, நுளம்பன் போன்ற சாளுக்கிய மாவீரர்களை அங்கேயே வெட்டி வீழ்த்தினேன். ஆகவமல்லனும் அவனைச் சேர்ந்தவர்களும் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடிவிட்டார்கள். ஜெயசிம்மன் போர்க்களத்தே மாண்டுகிடப்பதைக் கண்டேன். நல்ல பரிசு!

"எனது மதிப்புக்குரிய சோழநாட்டு மக்களே! சாளுக்கிய நாட்டினின்று சத்துருபயங்கரன், சரபத்திரன் மூலபருத்திரன் என்ற பட்டத்து யானைகளையும் ஏராள செல்வங்களையும் கொண்டு வந்தது மட்டும் வெற்றியல்ல... எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய சக்ரவர்த்திகள் வீழ்ந்த இடத்தில் வெற்றித் தூணையும் நாட்டிவிட்டேன்.

நான் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை... இந்தப் பொன்னி வளநாட்டின் சக்ரவர்த்தியாக முடிசூடிக் கொள்வேன் என்று.

அந்த மாபெரும் செயலுக்கு எனதருமை மாவலிராயன் மகள் சித்திரவல்லி தான் காரணம்.

சித்திரவல்லி நாட்டின் மானத்தைக் காக்கத் தன் உயிரையும் காதலையும் துரும்பென எண்ணினாள் - காதலா, கடமையா என்ற கேள்விக்குத் தக்க விடை பகன்று விட்டாள்.''

குணரேகா விழியில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''உன் சேவையையும் நான் கேள்விப்பட்டேன். சோழீசருக்கு நடனாஞ்சலி செய்ய முடியாமல் போய்விட்டதே என்று வருந்துகிறாயா?'' என்று சக்ரவர்த்தி கேட்டார்.

''நந்தவனத்து மலர் எடுத்துப் புஷ்பாஞ்சலி செய்து காலத்தைக் கழிக்கிறேன்'' என்றாள் குணரேகா.

சில நாட்கள் கழிந்தன. மாவலிராயர் குடிலின் எதிரே சோழ சக்ரவர்த்தி இராசேந்திர சோழதேவர் தனது பரிவாரங்களுடனும் பிரம்மராயருடனும் வந்தார். மாவலிராயர் பயபக்தியுடன் அரசரை வரவேற்றார். இளஞ்சென்னி கைகட்டி மிக மரியாதையுடன் நின்று கொண்டிருந்தான்.

''உனது மகளுடைய தியாகத்தை இந்த நாடு என்றும் மறக்காது. சோழசாம்ராஜ்ய மக்களின் நன்றிக்காணிக்கையாக மூன்று கிராமங்களை இறையிலியாக அளிக்கிறேன்'' என்று கூறிச் சாசனம் பொறிக்கப்பட்ட செப்புப்பட்டயத்தை வழங்கினார்.

மாவலிராயன் செப்புப்பட்டயத்தை வாங்கி உள்ளே எடுத்துச் சென்று வண்ண ஓவியத்தின் முன்பு வைத்தான். சித்திரவல்லியின் உருவத்தைத் தன் இதயத்தில் பதித்திருந்தவாறு வண்ண ஓவியமாக இளஞ்சென்னி வரைந்திருந்தான். குணரேகா தொடுத்த மலர் மாலையை அணிவித்திருந்தான். அடுத்த பிறவியிலாவது சித்திரவல்லியை அடைய வேண்டும் என்பதே அவன் பிரார்த்தனை.

பிரம்மராயர் மாவலியின் தோளில் தன் கரத்தைப் பதித்து, ''மாவலி! உன் மகள் தியாகி மட்டுமல்லள். பெரும் வீராங்கனை. சாளுக்கியநாட்டுப் பாதாளச்சிறையினின்று தப்பி ஜெயசிம்மனைத் தொடர்ந்து வந்த திறமை ஒன்றை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. சக்ரவர்த்தியை ஜெயசிம்மன் குறிவைத்தபோது அந்தக் குறிதவறச் செய்தவளே அவள்தானாம்.



தன் முதுகில் பாய்ந்த விஷக்கத்தியுடன், கையில் மகுடத்துடன் இளவரசர் தங்கியிருக்குமிடம் ஓடிச்செல்லாதிருந்தால்... நினைக்கவே பயங்கர மாயிருக்கிறது. கன்னிமலராக இறைவன் பாதத்தை அடைந்து விட்டாள்'' என்று பாராட்டினார்.

''சுவாமி! என் மகள் நாட்டிற்குத் தன் கடமையைச் செய்தாள். எல்லாம் தங்களுடைய தீர்க்கதரிசனம். போர்க்களத்துக்கு நமது இராசேந்திர சோழதேவரை நீங்கள் அனுப்பாதிருந்தால்... என்ன ஆகியிருக்கும்? தங்களைப் போன்ற அறிவாளிகளின் துணை நாட்டுக்கு என்றும் வேண்டும்'' என்று பூரிப்புடன் கூறினான் மாவலிராயன்.

அதை ஆமோதிப்பது போல் சோழீசர் கோயிலின் மணி ஓசை 'டாண் டாண்!' என்று ஒலித்தது!

# தியாக வல்லபன்

## 1. குழந்தை மலர்கள்

வெள்ளை நிற விநாயகருக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிப்பது போல், காவிரி நதி அங்கே வலம் வந்து கொண்டிருந்தது.

இளவேனில் காலத்தில், ஒருநாள் இளங்காலைப் பொழுது கதிரவனின் உதயத்தை அறிவிக்க, வானத்திரைச் சீலையில் வண்ணச் சித்திரங்கள் எழுந்தன. மெல்லிய செம்பொற் கதிர்கள் சலசலவென்று ஓடும் பொன்னி ஆற்றில் மெல்லத் தவழ்ந்து வந்தன. நீராடு துறையில் நீராட வருவோரும், இருள் பிரியுமுன்பே நீராடி, நனைந்த ஆடையை உடுத்தியவரும், கவிழ்ந்து வளைந்திருந்த மரக்கிளைகளின் மீதிருந்து ஆழமான இடத்தில் குதித்து நீந்துவோருமாக நீராடு துறை களை கட்டிவிட்டது.

கரையோரமாகத் திகழும் தோப்புகளினின்று மிக மிக அவசரமாகப் புள்ளினங்கள் பறந்து சென்றன. எருமைகள், சிறுவீடு மேய்ந்து கொண்டிருந்தன.

திருவலஞ்சுழி ஆலயத்தை ஒட்டியுள்ள பூந்தோட்டத்தில் மல்லி யண்ணன், அன்றலர்ந்த இளமலர்களைக் கொய்து கொண்டிருந்தான். முல்லையையும், இருவாட்சியையும் செண்பகத்தையும் அவன் பார்த்துப் பார்த்துக் கொய்யும் விதமே தனிதான். ஏதோ அந்த மலர்களை அன்று தான் முதன் முதலாகப் பார்ப்பது போன்ற ஒருவிதப் பிரமிப்பு அவனிடமிருந்தது. காலை இளம் போதில் அவன் பூக்கொய்யும் பணியைச் செய்து பல மாதங்களாகி விட்டன. சிறிது நேரம் சென்றால் உதவி செய்யப் பணியாட்கள் வந்துவிடுவர். அவனுடைய அருமை மகள் அல்லிவிழி இருள் பிரியா முன்னர் எழுந்திருந்து பூக்களைப் பறிப்பாள். திருவேரகத்துச் சுவாமிநாதன் திருமார்பை அலங்கரிக்கவும், திருவலஞ்சுழி கற்பகநாதருக்குக் காணிக்கையாக்கவும் அந்த மலர்கள் செல்லும். அரசர் இராஜராஜன் திருமார்பை அலங்கரிக்கப் பழையாறை மாளிகைக்குச் செல்லும். ஆயிரத்தளி மாளிகையிலுள்ள அந்தப்புரப் பெண்டிர் கூந்தலை அழகுபடுத்தச் செல்லும்.



"அல்லி!" என்று குரல் கொடுத்தான் மல்லியண்ணன். சில நாள்களாகவே அல்லி அதிகாலைப் போதில் எழுந்திருப்பதில்லை. விழித்துக் கொண்டாலும் பாயில் படுத்துக் கொண்டு ஏதோ சிந்தித்தவாறிருக்கிறாள். அவள் விழிகளிலிருந்து நீர் கசிந்துருகித் தலையணையை நனைக்கின்றன. மல்லியண்ணனுக்குத் தெரியும் மகளின் துயரம். குழந்தை இறந்த துயரத்தால் வாடும் மகளை என்ன கூறி அவனால் தேற்ற முடியும்?

தோட்டத்து வாவியிலுள்ள செங்கழுநீர் மலரைப் பார்த்துச் சிரிப்பாள். பூத்துக் குலுங்கி நிற்கும் மல்லிகைப் பந்தல் அருகே செல்வாள். பூமித்தாய்க்கு அர்ச்சனை செய்தாற்போல் பரவிக் கிடக்கும் பவழ மல்லிகை மலர்களைக் கை நிறைய எடுத்துக் கண்களில் ஒத்திக் கொள்வாள். இருவாட்சியும், சாமந்தியும் பூத்து நிற்கும் செடிகளருகே செல்வாள். அவை எல்லாம் அவளது குழந்தைகளாகத் தோன்றும். அவளுடைய துயரத்தை மாற்றுவதற்கு மாறாக அவை அதிகப்படுத்தும். பூச்செடிகளின் சூழலிலிருந்து ஓடோடி வந்து நந்தவனத்து நடுவே திகழும் குடிலின் உள்ளே நுழைந்து தரையில் படுத்து விடுவாள்.

மல்லியண்ணன் பெருமூச்சு விடுவான். குழந்தையைப் பறிகொடுத்த துக்கத்தை எப்படி மாற்றுவது என்று தெரியாமல் திண்டாடுவான். தன்னந்தனியனாகப் பூக்களைப் பறித்து வந்து மகளருகே தொடுத்துக் கொடுக்கக் குவிப்பான்.

"அல்லி" என்று மீண்டும் குரல் கொடுத்தான் மல்லியண்ணன். இன்று இருள் பிரியுமுன்பே, அல்லி விழித்து எழுந்து விட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். அவனது குரலுக்கு மறுமொழி வரவில்லை. ஆனால், இனிய இசை மிதந்து வந்தது.

*'என்ன புண்ணியம் செய்தனை*
*நெஞ்சமே! இருங்கடல் வையத்து*
*முன்னம் நீ புரி நல்வினைப்*
*பயனிடை முழுமணித் தாளங்கள்*
*மன்னு காவிரி சூழ்திரு*
*வலஞ்சுழி வாணனை வாயாரப்*
*பன்னி ஆதரித்து ஏத்தியும்*
*வழிபடும் அதனாலே.....!'*

மல்லியண்ணன் சாளரம் வழியே எட்டிப் பார்த்தான்.

அல்லியின் கரங்கள் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. இருவாட்சியும், மல்லிகையும் அவள் விரல்களின் ஸ்பரிசம் பட்டுச் சிரித்தன. கோக்கப்பட்ட மலர்கள் வளைந்து நெளிந்து மாலையாகத் தரையில் திகழ்ந்தன. இனிய குரலெடுத்து அவள் பாடிப் பல மாதங்களாகி விட்டன. அல்லியின் மனத்துயர் மெல்லக் குறைவதையறிந்தான் மல்லியண்ணன்.

யாரோ, நந்தவனத்துச் சுற்று வேலிப் படலைத் திறந்து கொண்டு வருவது தெரிந்தது. மல்லியண்ணன் உற்றுப் பார்த்தான். போர்த்தியிருந்ததால் அவனால் அடையாளம் காணமுடியவில்லை.

''யாரது?'' என்று குரல் கொடுத்தான், மல்லியண்ணன். ''ஸ்'' என்று உதட்டின் மேல் விரலை வைத்துச் சைகை செய்த உருவம் அருகே வந்து போர்வையை விலக்கியது.

''ஆ, தாங்களா?'' என்று வியப்புடன் கூவிய மல்லியண்ணன், ''ஐயா, வாருங்கள் வாருங்கள். இந்தக் குடில் என்ன பாக்கியம் செய்ததோ?'' என்று பரபரப்புடன் அவரை உட்கார வைக்க இருக்கையைத் தேடினான்.

பெருமான் நம்பிப் பல்லவராயன் சுற்றும் முற்றும் கம்பீரமாகப் பார்த்தார். சக்கரவர்த்தி இரண்டாம் இராஜராஜ சோழரின் வலக்கரம்போல் விளங்கும் அவர், சோழநாட்டுப் படைத்தலைவர்.

''மல்லியண்ணா! உள்ளே பாடுவது உன் மகள் தானே?'' என்று கேட்ட அவர், ''உன் மகளுக்குக் குரலினிமை சிறந்திருக்கிறது'' என்றார்.

''ஆமாம், ஐயா! அவள் பாடிப் பல நாள்களாகின்றன. குழந்தையைப் பறிகொடுத்த பிறகு அவள் ஊமையாகி விட்டாள். இன்று தான் அவள் பறவைபோல் கலகலப்பாக இருக்கிறாள்'' என்றான் மல்லியண்ணன்.

''அடடா, குழந்தை இறந்த ஏக்கமா? உனக்குப் பெயரனைப் பிரிந்ததால் வருத்தமிருக்கும். உன் மருமகனார் எங்கே இருக்கிறார்?'' என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டார் பெருமான் நம்பி.

''அவனை உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. ஐயா! ஆயிரத்தளி அரண்மனையில் பணியாற்றுகிறான். குழந்தையைப் பறி கொடுத்த அல்லிக்கு ஆதரவாயிருந்து அவள் துயர் துடைக்காமல் வீட்டுப்பக்கம் வராமல் எங்கோ சுற்றுகிறான்'' என்று மல்லியண்ணன் குறைப்பட்டுக் கொண்டான்.

''குழந்தையைப் பறி கொடுத்த ஏக்கமும், கணவனின் பிணக்கும் என் மகளைப் பித்துப் பிடித்ததுபோல் செய்துவிட்டன. இன்று நல்லநாள். தங்கள் வருகையால் இந்த நந்தவனமே மணக்கிறது....'' என்று கூறிய மல்லியண்ணனைக் கையமர்த்தி, ''மல்லியண்ணா! நன்றாகப் பேசுகிறாய். நான் வராமலேயே இந்த நந்தவனத்துக்கு மணமிருக்கிறது. அதிகம் பேச நேரமில்லை. உன் மகளாலும், உன்னாலும் எனக்கு மிகப்பெரிய காரியமாக வேண்டும். அதனால் தான் நானே வந்தேன்....'' என்று மெல்லிய குரலில், அழுத்தமாகப் பேசிய பெருமான் நம்பி மேல் போர்வையைச் சரிசெய்து கொண்டார்.

உள்ளேயிருந்து கேட்ட பாடல் ஒலி நின்றது. ''அல்லி'' என்று குரல் கொடுத்த மல்லியண்ணனை நோக்கி, ''உம்... இப்போது அவளை இங்கே அழைக்காதே. நான், சொல்வதை விவரமாகக் கேள். பிறகு உன் மகளிடம் கூறலாம்'' என்றார்.



''ஐயன்மீர், கட்டளையிடுங்கள். நான் காத்திருக்கிறேன். இட்ட பணியை நிறைவேற்றுமாறு கட்டளையிடத் தாங்களே நேரே வரவேண்டுமா? சொல்லி யனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேனே?'' என்று மல்லி பணிவும் பரிவும் நிறைந்த குரலில் கூறினான்.

இதுவரை நின்று கொண்டிருந்த பெருமான் நம்பி திண்ணையில் உட்கார்ந்தார். திண்ணை நன்றாக மெழுகப்பட்டு மாக்கோலம் இடப்பட்டிருந்தது.

பெருமான் நம்பி நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டார். களைப்பு என்பதே அறியாத அவருக்குச் சில நாள்களாகக் களைப்பு தலைதூக்குகிறது. கவலையின் காரணமாக இருக்கலாமே தவிர முதுமை அவரை வாட்டுகிறது என்பதனால் இருக்க முடியாது.

''மல்லியண்ணா! கூப்பிட்டனுப்பியிருந்தால் நீ ஓடி வந்து விடுவாய் என்பது எனக்குத் தெரியாதா? ஆனால், நானே இந்தக் காலைப் பொழுதில் உன்னைத் தேடி வந்திருக்கிறேன் என்றால் அதிலுள்ள முக்கியமும், அவசரமும் தான் காரணம். உன் குடும்பத்தால் அரச குலத்துக்கு, இந்தச் சோழ நாட்டுக்கு, ஆக வேண்டிய மகத்தான காரியமொன்றிருக்கிறது....'' - பெருமான் நம்பி சொல்லிக் கொண்டே போகும்போது, மல்லியண்ணன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் பார்வையில் கம்பீரமிருந்தது. மார்பை நிமிர்த்திக் கொண்டான்.

''சோழ நாட்டிற்கு என் குடும்பத்தால் ஆக வேண்டியதைச் சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள். மலர் தொடுத்தளித்துச் செய்யும் கைங்கர்ய பலன் இன்று கைமேல் கிட்டிவிட்டது. இந்த ஏழையால் சோழ நாட்டிற்கும் ஏதாவது துரும்பு எடுத்துப்போட முடியுமென்றால் அதைவிட ஆனந்தமளிக்கும் செய்தி வேறென்ன இருக்கிறது.... சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள்....'' என்று கூறிக் குடிலுக்குள் செல்ல எத்தனித்த மல்லியண்ணனை நோக்கி பெருமான் நம்பி.

''மல்லி! நீ உள்ளே செல்ல முயல்வதன் காரணம் எனக்குத் தெரிகிறது. இந்தக் காலை வேளையில் மோர் விட்டுக் கூழ் கரைத்துக் கொண்டு வருவாய். வேண்டாம்; தொல்லைப்படாதே. அதற்கெல்லாம் நேரமில்லை. ஆக வேண்டியவற்றை நான் கூறிவிட்டு மன்னரைக் காணப் பழையாறைக்குச் செல்லவேண்டும்'' என்றார்.

''ஐயா! இந்த ஏழைக்குக் கிடைத்துள்ள அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இந்த நாட்டிற்கு என் குடும்பத்தார் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள். என் குடும்பம் என்பது இப்போது என் மகளையும் என்னையும் தவிர வேறு யாருமில்லை. என் மருமகன் மீது எனக்கு நம்பிக்கையில்லை... அவன் திருந்தி வந்து, என் மகளை மகிழ்வித்தால் அது வலஞ்சுழி கற்பகநாதர் அளிக்கும் அருளால் தான் முடியும்'' என்று மல்லி உணர்ச்சி பொங்கக் கூறினான்.

''மல்லியண்ணா, இந்த நாட்டில் நடக்கும் விவகாரங்களை அறிந்து கொள்வதில் நீ எப்போதாவது ஆர்வங்காட்டியதுண்டா?'' என்று பெருமான் நம்பி பீடிகையுடன் தொடங்கினார்.

மல்லி மெல்ல நகைத்து, ''எனக்கு அதற்கெல்லாம் நேரமேது ஐயா? நந்தவனத்தைப் பண்படுத்துவது, உரமிடுவது, களை பிடுங்குவது, பூக்கும் புதுமலரைக் கண்டு ஆனந்திப்பது இவை தவிர நான் சிந்தனையை வேறெதிலும் செலுத்துவதில்லை. வலஞ்சுழி கற்பகநாதர் அருளும், சேர, பாண்டியர்களை நடுநடுங்க வைத்த தங்களைப் போன்ற பெரும் படைத்தலைவர்களும் இருக்கும்போது என்னைப் போன்றவர்கள் அதில் நாட்டங்கொள்வதெதற்கு?'' என்றான்.

''மல்லி! அப்படிச் சொல்லாதே. சோழ நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம் நாட்டைப் பற்றிக் கவலைகொள்ளும் காலம் வந்துவிட்டது. சோழ மன்னர் ராஜராஜனுக்கு எதிராகத் திட்டமிடுகிறார்கள் சிலர்....''

''ஐயா! நான் கேள்விப்பட்டது உண்மையா? சோழ மகாராஜா உடல்நலம் சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கிறார் களாமே...'' என்று மல்லியண்ணன் கவலையுடன் கேட்டான்.

'ஆமாம், மல்லி! அதைப் பயன்படுத்திக் கொண்டு வேண்டியவர்கள் போல் நடித்துச் சிலர் சதிசெய்கிறார்கள். சோழநாட்டையே தங்களுடையதாக்கிக் கொள்ள விரும்புகிறார்கள்'' என்று பெருமான் நம்பி கூறும்போது ''ஆ... அப்படியா?'' என்று மல்லி கூவினான்.

''மல்லி! அதிகமாக வளர்த்துக் கொண்டு பேச நேரமில்லை. நீயே புரிந்து கொள்வாய். உன் நந்தவனத்து மலரைப் போல் எண்ணிச் சோழ மன்னரின் மீதும் நீ கவனம் செலுத்தப் போகும் காலம் நெருங்கி வந்துவிட்டது. மிக நம்பிக்கைக்கு உரிய ஒருவரை நான் சில நாள்களாகத் தேடி வந்தேன். மற்றவர்கள் கவனத்தில் படாது ஒதுங்கித் தன் வேலையும் தானுமாய் இருக்கும் ஒருவரைத் தேடி வந்தேன், அதற்கு ஏற்றவன் நீ தான்....''

பெருமான் நம்பி இவ்வாறு சொல்லச் சொல்ல மல்லியின் பரபரப்பு அதிகமாகியது.

''மல்லி! நமது மாமன்னருக்குப் பிறகு நாட்டைத் தாமே ஆளவேண்டும் என்று சிலர் துடிக்கிறார்கள். மன்னருக்கு வாரிசு இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்'' - என்று பெருமான் நம்பி கூறினார்.

''எனக்குக் கூட கவலையாக இருக்கிறது ஐயா! நமது மகாராஜா யாருக்கு இளவரசர் பட்டம் சூட்டப் போகிறார்....?'' என்று மல்லி கேட்டான்.

''அதைப் பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்க நான் வரவில்லை. எல்லாரும் நினைப்பது போல் மாமன்னருக்கு வாரிசு இல்லாமல் போகவில்லை.



சோழசூரியன் அஸ்தமித்து விடவில்லை. மன்னருக்கு வாரிசு இருக்கிறது. இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்கள்....'' என்று கூறிச் சற்று நிறுத்தினார் பெருமான்நம்பி.

''நமது மாமன்னருக்கு இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்களா?'' மல்லி ஆவலுடனும் அதிசயத்துடனும் கேட்டான்.

''ஆம்; கங்கை கொண்ட சோழபுரத்தில் இருக்கிறார்கள். உன் மகள் பெற்ற குழந்தையை இழந்து பரிதவிக்கிறாள். ஆனால் அங்கு இரு பாலர்களும், பெற்ற தாயை இழந்து, சீராட்ட, பாலூட்டத் தக்கவரின்றித் தவிக்கிறார்கள். அந்த இரு குழந்தைகளையும் கொன்றுவிடத் திட்டமிடுபவர்களைப் பற்றிய செய்தி இப்போது தான் எனக்குக் கிடைத்தது. அதனால் அக்குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை உணர்ந்து நான் இங்கே ஓடோடி வந்தேன்...''

பெருமான் நம்பி, மல்லியின் முகத்தையே உற்றுப் பார்த்தவாறு பேச்சைச் சற்று நிறுத்தியவுடன், மல்லி மிகுந்த பரபரப்படைந்தான்.

''ஐயா! நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உடனே சொல்லுங்கள். பாலின்றிப் பாலர்கள் பரிதவிப்பதை மாற்ற அரச குடும்பத்தில் எத்தனையோ பேர் இருப்பார்கள். நாங்கள் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள்....'' என்று துடிதுடிப்புடன் கூவினான்.

''மல்லி! அந்தத் தாயில்லாக் குழந்தைகளுக்குப் பாலூட்டும் பொறுப்பை உன் மகள் ஏற்க வேண்டும்'' என்ற நம்பியின் குரல் கேட்டு, அதுவரை அங்கு கதவருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த அல்லி தன் மார்பை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு விழிகளை மெல்ல மூடிக் கொண்டு விம்மினாள்.

''ஆகா, அந்தப் பாக்கியம் என் மகளுக்குக் கிடைக்கிறதா? சோழ சக்கரவர்த்தியின் குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கும் பொறுப்பு அல்லிக்குக் கிடைக்கிறதா? சற்று முன்பு பாடினாளே என்ன புண்ணியம் செய்தேனோ என்று - முற்பிறவி புண்ணியத்துக்கான பலன் கிடைத்து விட்டது... சொல்லுங்கள்... ஐயா சொல்லுங்கள்... நான் என்ன செய்ய வேண்டும்? உடனே சொல்லுங்கள்'' என்று பரபரத்தான் மல்லியண்ணன்.

பெருமான் நம்பி சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு மெல்லிய குரலில், ''மல்லி! நீ மிகவும் எச்சரிக்கையுடன் கவனமாகச் செயல்பட வேண்டும். உன் மகள் இன்று இரவே கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறாள். அங்கே பெரிய நாச்சியார் அம்மங்கை தேவி இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உன் மகள் இரு குழந்தை களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அழும் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். அரசியின் குழந்தைகள் அவை. அக்குழந்தை களை இன்னும் சில நாள்களிலே கொன்று விட, உடன் கூட்டத்தார் சதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குள் குழந்தைகளை இங்கே கொண்டு வர வேண்டும்.''

பெருமான் நம்பி, திட்டத்தைக் கூறியவுடன் மல்லிக்கு உடனே ஏதும் பேசத் தோன்றவில்லை. ''ஆகா! கங்காபுரியில், அம்மங்கை தேவியார் இன்னமும் உயிருடன் இருக்கிறார்களா? கங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழதேவரின் திருமகளார் பெரிய நாச்சியாரான அம்மங்கை தேவியாருக்கு எழுபது பிராயத்துக்கு மேல் இருக்குமே?'' என்று மல்லியண்ணன் தன் பிரமிப்பை வார்த்தைகளால் புலப்படுத்த முயன்றான்.

''மல்லி! அரச குழந்தைகளை எடுத்துவரப் படைவீரர்களும், பரிவாரங்களும், பணிப் பெண்களும், அந்தப்புரத்து மாதரும் இருக்கும்போது உன் சிறிய மகள் எப்படிக் காப்பாற்றுவாள் என்று கவலைப்படுகிறாயா? தில்லையம்பல நடராசர் அருளால் உன் மகளுக்கு மகத்தான திறமை வரப்போகிறது. கங்கை கொண்ட சோழபுரத்து அந்தப்புரத்தில் வசிக்கும் அரச குடும்பத்து மகளிர் அனைவரையும் மாளிகையோடு தீயிட்டுக் கொளுத்தி கூண்டோடு கயிலாயம் அனுப்பத் திட்டமிட்டிருக்கும் சதிகாரர்களின் திட்டம் நிறைவேறாமல் எனது பரிவாரங்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால், அந்தக் குழப்பத்தில் அரச பாலகர்களுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது. பசியால் பால் நினைந்து அழும் குழவிகளின் குரல் வெளியே ஒலித்தால் திட்டம் பாழாகி விடுமே! அதனால் தான் மகவை இழந்த உன் மகள் தாயற்ற அக்குழந்தைகளை அழாமல் காப்பாற்றுவாள் என்று உறுதியுடன் நம்புகிறேன்'' என்றார். இயற்கையாகவே கம்பீரமான தோற்றமுடைய நம்பி இப்போது விழிகள் ஜ்வலிக்க நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

மல்லியண்ணன் உணர்ச்சி பொங்க விம்மினான். அவர்கள் பேசுவதைக் கதவருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த அல்லியின் மார்பகத்தினின்று தாய்மை உணர்ச்சி பிரவகித்தது.

''மல்லி! மிகமிக எச்சரிக்கையுடன் நீ நடந்து கொள்ள வேண்டும். சுவாமிமலைக் கோயில் அருகே கூண்டு வண்டி ஒன்று இன்றைய மாலைப் பொழுதில் நிற்கும். அதில் பல பயணிகள் இருப்பர். உன் மகளும் அவர்களுடன் கங்காபுரிக்குச் செல்லும் பூக்காரியைப் போல் பயணமாகிறாள். தக்க சமயத்தில் அவளுக்கு ஆலோசனைகளும், உத்தரவுகளும் உதவிகளும் வரும். இதோ இந்த முத்திரை மோதிரத்தை அவளிடம் கொடு. சமயத்துக்கு இது பெரும் உதவி புரியும்'' என்று கூறி விட்டு உடனே புறப்பட்டார் பெருமான் நம்பி.

அவர் போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்த மல்லி, சோழ அரசிளங்குமாரர்களைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு தனக்களிக்கப் பட்டிருப்பதைப் பற்றிப் பெருமகிழ்ச்சியடைந்தான். அல்லியோ இரு குழந்தை களை அணைத்து அமுதூட்டும் சுகமான கற்பனையில் மிதந்தாள்.

அந்தச் சமயம் இவ்வளவு நாள்களாக வராத அவள் கணவன் குடிலின் வாயிலில் வந்து நிற்பதை அவர்கள் இருவரும் கவனிக்கவில்லை.



# 2. அரசத் துரோகம்

அல்லிவிழியின் கணவன் கோவிந்தன் தொண்டையைக் கனைத்துக் கொண்ட பிறகு தான், மல்லியண்ணன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, தன் மருமகன் வந்திருப்பதை அறிந்தான். அவனை வரவேற்கக் கூடத் தோன்றாமல் அல்லியை நோக்கி, ''அல்லி, யார் வந்திருக்கிறார்கள் பார்!'' என்று குரல் கொடுத்தான். பிறகு ''வாங்க மருமகப்பிள்ளை, வாங்க வாங்க'' என்று அழைத்தான்.

கோவிந்தனின் விழிகள் சிவந்திருந்தன, இரவு உறக்கமில்லாமல். அல்லி தன் விழிகளில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு, தன் கணவனை நோக்கிப் புன்முறுவல் புரிந்தாள்.

''ஏன் விழிகளெல்லாம் சிவந்திருக்கின்றன? இரவு தூக்க மில்லையா?'' என்று கேட்டாள்.

கோவிந்தன், நந்தவனத்து வாயிலை உற்று நோக்கிவாறு, ''தலை முதல் கால் வரை போர்வையைப் போர்த்திக் கொண்டு இப்போது சென்றது யார் மாமா?'' என்று கேட்டான்.

தந்தையும் மகளும் திடுக்கிட்டு ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

''நம்ப சாம்பவன் தான். குளிர் காய்ச்சல்; வீட்டுக்குப் போகிறான்'' எனறான் மல்லியண்ணன்.

''ஓ! எனக்குக் கூட இன்னும் இரண்டு நாள்களில் காய்ச்சல் வந்து விடும்'' என்று கூறிய கோவிந்தன் தொடர்ந்து, ''இப்படி நான் இரவெல்லாம் கண் விழித்துக் கொண்டிருந்தால் மயக்கங்கூட வந்து விடும்'' என்று தன் அசதியைப் புலப்படுத்தினான்.

குடிலுக்கு வந்து சென்றவன் தளபதி என்பதை கோவிந்தன் கண்டு கொள்ளவில்லை என்பதை அறிந்து கொண்ட தந்தையும், மகளும் ''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டனர்.

அல்லி கணவனருகே வந்து அவன் தோளைப் பற்றியவாறு நின்று கொண்டாள்.

''இவ்வளவு நாள்களாக எங்கே சென்றிருந்தீர்கள்? ஏன் இரவெல்லாம் கண் விழிக்கிறீர்கள்? இங்கே நான் கண் விழித்துக் கண்ணீர் சிந்தி வேதனைப்படுவது போதாதா?'' என்று துயரம் நெஞ்சையடைக்கக் கேட்டாள் அல்லி.

''ஆயிரத்தளி மாளிகையில், நமது சக்கரவர்த்தி நோயுற்றுப் படுத்திருக்கிறாரே உனக்குத் தெரியாதா?'' என்று கோவிந்தன் கேட்டான்.

தெரியாது என்பதற்கு அறிகுறியாக அல்லி தலையசைத்தாள். கோவிந்தன் தன் மாமனை நோக்கி ''மாமா! தங்களுக்கும் தெரியாதா?'' என்று கேட்டான்.

அவனும் தெரியாது என்று தலையசைக்கவே, "மாமா! நமது சோழ நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஒன்று நெருங்கு கிறது. நமது மாமன்னர் திடீரென்று மயங்கிக் கீழே விழுந்து விட்டார்!" என்று கோவிந்தன் கூறினான்.

தந்தையும், மகளும் ஒரே சமயத்தில், "ஐயோ!" என்று வாய்விட்டுக் கூவினர்.

"நாள்தோறும் மாளிகைக்கு மலர் மாலைகளை அனுப்புகிறேனே, மன்னர் அணிவதில்லையா?" என்று மல்லியண்ணன் கேட்டான்.

"மன்னர் அணியாவிட்டால் என்ன? அந்தப்புர மாதர் அணிகிறார்கள். இல்லாவிடில் அரசிலாற்றங்கரை மாளிகையில் வந்து கூடியிருக்கும் குறுநில மன்னர்கள் அணிகிறார்கள்" என்றான்.

இராஜராஜ சோழரைச் சந்திப்பதற்காக, பழையாறைக்குத் திருக்கோவிலூரி லிருந்து மலையமானும், சேந்தமங்கலத்திலிருந்து காடவராயரும் வந்திருக் கின்றனர். அதற்கு முன்பே சம்புவராயர் பரிவாரங்களுடன் வந்திருந்தார். அவர்களுக்கு வேண்டிய சுக சௌகரியங்களைக் கவனிக்கவே பணியாட்கள் நியமிக்கப்பட்டனர். சந்தனமும் பன்னீரும், வாசமுள்ள மலர்களும், மாளிகைக்கு ஏராளமாகச் சென்றன.

சக்கரவர்த்தி திடீரென்று மயக்கமுற்று வீழ்ந்தவுடன் மாளிகை மருத்துவர் ஒருவரையும் சந்திக்க அனுமதிக்காமல் ஓய்வாக அரசர் இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டதனால் சிற்றரசர்கள் ஆமிரத்தளிக்கு வரமுடியாமல் போய்விட்டது. தளபதி பெருமான் நம்பிப் பல்லவராயர் அரசரிடம் ஒருவரையும் நெருங்கவிடாமல் பார்த்துக் கொண்டார். அதனால் குறுநில மன்னர்களால் சக்கர வர்த்தியைச் சந்திக்க முடியவில்லை.

கோவிந்தனுக்கு அரசர் படுத்திருக்கும் கூடத்தில் நின்று பணிபுரிய வேண்டிய பொறுப்பு அளிக்கப்பட்டது. இரவு பகல் முழுதும் அவன் அங்கேயே இருக்க நேர்ந்தது. கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அவன் அரசிலாற்றங்கரை யிலுள்ள மாளிகை ஒன்றுக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் பேசிவிட்டுத் திரும்பி வருவான். அந்த மாளிகை பாழடைந்த நிலையில் காணப்பட்டது. ஆனால் கம்பீரமாகத் திகழ்ந்தது. ஒரு காலத்தில் அரச குடும்பத்தார் வசிக்கும் மாளிகையாக விளங்கியது. சோழர் குலத்தின் ஒளிவிளக்காக விளங்கிய அருண்மொழிவர்மர் என்றழைக்கப்பட்ட முதலாம் இராஜராஜரின் வழிவந்த அதிராஜேந்திரனுக்குப் பல மனைவியர். அந்த மனைவியரின் புதல்வர்களுள் ஒருவரான சோழேந்திர சிங்கன் எப்பொழுதும் ஆட்சிக்குத் தொல்லை கொடுத்து வந்தான். அவன் அந்த மாளிகையில் வசித்து வந்தான். அரச குடும்பத்தவரைச் சேர்ந்தவன் என்ற முறையில் அவனுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அவனது பரம்பரையில் வந்தவர்கள், சோழநாடு தங்களுக்கு உரிமை உடையது என்று சொல்லி வந்தனர்.



இப்போது அதே பரம்பரையில் வந்த மலலப்பதேவன் மறைமுகமாகத் தனக்கு ஆதரவு தேடி வந்தான். சக்கரவர்த்தி ராஜராஜன் நோய்வாய்ப்பட்ட திலிருந்து அவன் சுறுசுறுப்புடன் இயங்கி வந்தான். சோழ நாட்டின் ஆணைக்குட்பட்ட சிற்றரசர்களைச் சந்தித்துப் பேசிவந்தான். அவர்களுடைய உதவியைப் பெறுவதற்கு ஒவ்வோர் ஊராகச் சென்று வந்தான். பழையாறை மாளிகையில் ராஜராஜனைச் சந்திக்க வருபவர்கள் யார், யார், அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பவையெல்லாம் கேட்டறிய, கோவிந்தனைப் பயன்படுத்தி வந்தான். கோவிந்தன், ஓய்வு கிடைத்த நேரங்களில் அரசிலாற்றங்கரை மாளிகைக்குச் சென்று, அரச மாளிகையில் நடைபெறுவனவற்றைச் சொல்லி வருவான். அதனால் அவனுக்கு ஓய்வென்பதே இல்லாமல் போய் விட்டது. நந்தவனக் குடிலுக்குச் சென்று மனைவியைச் சந்திக்கவும் முடியாமல் போய் விட்டது.

இன்று ஓய்வு கிடைத்தது.

அதனால் அல்லியைக் காண ஓடோடி வந்தான்.

"இரவும் பகலும் கண் விழித்து உங்கள் உடலையும் கெடுத்துக் கொண்டு, என் உள்ளத்தையும் வேதனைப்படுத்த அப்படி என்ன முக்கியமான வேலையோ?" என்று அல்லி அவனைக் கேட்டாள். அதில் மெல்லிய கோபமும் கலந்திருந்தது.

"அல்லி! எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது. நிறையப் பொன்னும், பொருளும் கிடைக்கப் போகின்றன. நீ அரசி போல் வாழ வேண்டாமா? இப்போது நான் உண்மையாக நடந்து கொண்டால் தானே பிறகு சுகமாக வாழ வழி கிடைக்கும்?" என்றான். அல்லியின் மெல்லிய கரங்களைப் பிடித்துத் தன் கன்னங்களில் வைத்துக் கொண்டான். மெல்ல அவனிடமிருந்து கொடி நழுவுவது போல் நழுவிய அல்லி, "நீங்கள் செய்வது அரசத் துரோகக் காரியமல்லவா? என்ன பாபம் செய்தோமோ, முதலில் நமக்குப் பிறந்த ஆண் குழந்தை நோய் ஏதுமில்லாமல் இருந்தும் பிறந்த ஒரே மாதத்தில் இறந்துவிட்டது. மறுபடியும் தெரிந்து பாபம் செய்யாதீர்கள். நமக்குச் சந்ததியே இல்லாமல் போய்விடப் போகிறது" என்று கூறி விம்மினாள் அல்லி.

அல்லியின் விழிநீரைத் துடைக்கத் தோன்றாமல் கோவிந்தன், கோபத்துடன், "எது அரசத் துரோகம்? உனக்கு அரச விவகாரங்கள் தெரியுமா? இந்தச் சோழநாடு யாருக்குச் சொந்தமென்று நினைக்கிறாய்? இப்போது அரியணையிலிருக்கும் ராஜராஜருக்கா? கிடையவே கிடையாது. மலலப்ப தேவரே உரிமையானவர். அவர் தக்க ஆதாரங்களை வைத்திருக்கிறார். அது போகட்டும். குழந்தை இறந்தது நம்முடைய பாவச் செயல்கள் என்கிறாயே, அப்படி யென்றால் நமது மன்னர் தான் பெரும் பாவம் செய்தவர். அதனால் அவருக்கு வாரிசு இல்லை. அவரது பட்டத்து அரசிக்கோ, மற்ற அரசிகளுக்கோ ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. இனியும் பிறக்கும் என்பது என்ன உறுதி?

உனது கொள்கைப்படி அவர் மகாபாவம் செய்தவர் இல்லையா? அல்லி, பாவ புண்ணியத்தைப் பற்றிப் பேச வேண்டாம். நம் அரசரே சோழ நாட்டின் நியாயமான வாரிசு அல்லர். அவருக்குப் பிறகு இந்தநாடு மல்லப்பருக்கே சொந்தமாக வேண்டும். அதற்கான முயற்சியில், குறுநில மன்னர்களின் ஆதரவை, உதவியைத் திரட்டுவதில் அவர் ஈடுபட்டிருக்கிறார். நான் அவருக்கு உதவியாக இருக்கிறேன். அவர் தம் முயற்சியில் வெற்றியடைந்தால் இந்தச் சோழ நாட்டின் மாமன்னர் அவரே. நான் அப்போது...'' என்று பேச்சைப் பாதியில் நிறுத்தி விட்டுக் கம்பீரமாக மார்பை நிமிர்த்தி நின்று அல்லியை நோக்கினான் கோவிந்தன். அல்லி கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

''நான் அப்போது...'' என்று கூறி நிறுத்திய கோவிந்தன், ''எனக்கென்ன பதவி கிடைக்கும்?'' என்று தன்னையே கேட்டுக் கொண்டான். அவனைப் பார்த்து அல்லி சிரித்து விட்டாள்.

''தங்களுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும் அரசாங்கத்துக்கு எதிராகச் சதிசெய்பவனுக்கு ஆயுள் தண்டனை என்று சொல்வார்கள்'' என்றாள்.

''ஒரு காலுமில்லை. அல்லி! நீயும் பார்க்கத்தான் போகிறாய். குறுநில மன்னர்கள் இராஜராஜபுரத்து மாளிகையில் கூடியிருக்கிறார்கள். மன்னரைச் சந்தித்து அடுத்து இளவரசர் பட்டம் சூட்டுவதைக் குறித்துப் பேசப்போகிறார்கள். இன்னும் சில நாள்களிலேயே முடிவாகி விடும். நேற்றே முடிவாகியிருக்க வேண்டும். திடீரென மன்னருக்கு மயக்கமேற்பட்டு விட்டது.'' என்று பேசிக் கொண்டே போன கோவிந்தனின் பேச்சின் போக்கை வெளித்திண்ணையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மல்லியண்ணன் மாற்ற விரும்பி உள்ளே நுழைந்து, ''மருமகப்பிள்ளை! வெயில் ஏறிக் கொண்டே போகிறது. எழுந்து ஆற்றில் அமிழ்ந்து குளித்து விட்டு வாருங்கள். மணக்க மணக்க முருங்கைக் காய் குழம்பு வைக்கச் சொல்கிறேன். பசியாற உண்டு, படுத்து உறங்குங்கள்'' என்றான்.

''ஆமாம், ஆமாம். இன்று நான் அரண்மனைக்குப் போகப் போவதில்லை. இங்கே தான் நாள் முழுவதும் - இரவு கூட இருக்கப் போகிறேன்'' என்று அல்லியைப் பார்த்துக் கண் சிமிட்டியவாறு கூறினான்.

கணவர் இதுவரை வீட்டுக்கு வரவில்லையே என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த அல்லி, அது கேட்டுத் திடுக்கிட்டாள். தந்தையின் முகத்தை நோக்கினாள். தனது கங்கை கொண்ட சோழபுரப் பயணம் என்னாவது என்பதை அவள் விழிகள் கேட்டன. தப்பித் தவறிக்கூட அதைப் பற்றிப் பேசி விடாதே என்று மல்லியண்ணன் விழிகள் மகளை எச்சரித்தன.

''மாமா! நான் குளித்து விட்டு வருகிறேன். நான் பேசியவற்றை ஒருவரிடம் கூட மூச்சு விடாதீர்கள். வெளியே தெரிந்தால் திட்டங்கள் சிதைந்து விடும். அந்தக் கழுகுக் கண் பெருமான் நம்பியின் செவியில் வீழ்ந்தால் காரியம் கெட்டு விடும். உம்....'' என்று கடுமையாக எச்சரித்து விட்டு நீராடப் புறப்பட்டான் கோவிந்தன்.



சோழப் படைத் தளபதி பெருமான் நம்பியின் கட்டளைப்படி அன்று மாலையில் கணவன் அறியாது கங்கை கொண்ட சோழபுரத்துக்கு எப்படிப் புறப்படுவது என்று தவியாய்த் தவித்தாள் அல்லி.

## 3. மறைந்திருக்கும் இரகசியம்

பழையாறை நகரிலுள்ள ஆயிரத்தளி அரண்மனை கடந்த சில நாள்களைப் போலன்றி, சற்று மகிழ்ச்சியுடன் காணப்பட்டது. ஆயிரத்தளி அரண்மனை பரம்பரைச் சிறப்பு வாய்ந்தது. சோழர் குலத்து அரச குடும்பத்தினர் வசிக்கும் மாளிகையாகவும் அது திகழ்ந்து வந்தது. கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராஜராஜனின் தலைநகராக விளங்கினாலும், தம் ஆட்சியின் பெரும் பொழுதைப் பழையாறையிலுள்ள ஆயிரத்தளி மாளிகையிலேயே கழித்தார். அவர் மகிழ்ச்சியுடன் இருந்ததும் அந்த மாளிகையில் தான். இப்போது நோய்வாய்ப்பட்டு உடலும் உள்ளமும் நொந்து வாழ்வதும் அந்த அரண்மனையில் தான்.

மன்னர் திடீரென்று ஒருநாள் மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்து விட்டார் என்பதும், நினைவு திரும்பப் பல நாழிகைகள் பிடித்தன என்பதும் அறிந்த பெருமான் நம்பி அரண்மனைக்கு விரைந்தார். சோழர்களின் பரம்பரை மருத்துவர் மன்னரின் உடல்நிலையைச் சோதித்து, சில நாள்களுக்கு ஒருவரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று தடுத்து விட்டார்.

பெருமான் நம்பி உடனே முன் யோசனையுடன் இயங்கினார். வேளக்காரப் படை வீரர்களை அழைத்தார். ஒரு பகுதியினரை ஆயிரத்தளி அரண்மனை யிலும், ஒரு பகுதியினரைக் கங்கை கொண்ட சோழபுரத்திலும் கண்ணுங் கருத்துமாகக் காவல் காக்குமாறு கட்டளையிட்டார்.

ஆயிரத்தளி அரண்மனையை மிகமிகக் கவனத்துடன் பாதுகாப்பது நியாயமே. மன்னரைக் காக்க வேண்டியது கடமை. கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையில் பாதுகாவல் அவசியமா? அப்படி முக்கியமானவர்கள் அங்கு யார் இருக்கிறார்கள்?

யார் இருக்கிறார்கள் என்பதைக் குறித்துப் பெருமான் நம்பி வேளக்காரப் படையினரிடம் கூறவில்லை. அவர் உத்தரவென்றால் உத்தரவு தான். மன்னரைத் தவிர மற்றவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத வேளக்காரப் படை வீரர்கள் பெருமான் நம்பியின் உத்தரவுக்கு மறுபேச்சுப் பேச மாட்டார்கள்.

பழையாறை ஆயிரத்தளி மாளிகைக்குள் பெருமான் நம்பி நுழைந்து நேரே மன்னர் படுத்திருக்குமிடத்துக்குச் சென்றார். பெருமான் நம்பியைக் கண்டவுடனேயே இராஜ ராஜனுக்குப் புதுத் தெம்பு பிறந்து விட்டது. அவர் முகத்தில் புதிய ஒளி பரவுவதை நம்பி உணர்ந்தார்.

பெருமான் நம்பியின் கரங்களைப் பற்றிக் கொண்ட மன்னரின் விழிகள் கலங்கின. நம்பி உடனே ஏதும் பேசவில்லை. அங்கிருந்த பணிப்பெண்களைச் சற்று வெளியேயிருக்குமாறு கூறினார்.

''நம்பி'' என்று அழைத்தார் இராஜராஜன். அந்தச் சொற்களில் கனிவு இருந்தது. பல காலம் பிரிந்திருந்த ஒருவரைச் சந்திக்கும் போது ஏற்படுவதைப் போன்ற உணர்ச்சி இருந்தது.

''நம்பி, நான் பிழைந்தெழுந்து உன்னைச் சந்திக்க முடியும் என்று நினைக்கவே இல்லை. ஐராவதேச்வரரைத் தரிசனம் செய்து விட்டு வந்து உட்கார்ந்தேன். நெஞ்சு வலித்தது. உடலெல்லாம் படபடத்தது. உடல் முழுவதும் வியர்த்தது. கண்கள் இருண்டன. ஐராவதேச்வரர் ஆலயத்து மேல் மாடத்துக்குச் செல்வது போல தோன்றியது. சோழர் குலம் விளங்க வைத்த என் பாட்டனுக்குப் பாட்டன் இராஜராஜ சோழதேவர் அங்கே நின்று கொண்டு என்னைக் கனிவுடன் அழைப்பது போல் தோன்றியது. ஆகா! அவருடைய எழிலுடைத் திருமேனியின் வடிவழகை என்னவென்று கூறி வர்ணிப்பேன்? பொன்னார் மேனியுடைய அவரது நீண்ட கரங்களையும், பரந்த மார்பினையும் நான் கண்டு அதிசயித்தேன். அவருடைய திருநாமத்தை எனக்கு எதற்காகச் சூட்டினார்கள் என்று எண்ணியபோது நான் வெட்கமுற்றேன். அவர் கம்பீரம் என்ன, அவரது வடிவழகு என்ன? பெரிய விமானம், பெரிய நந்தி, பெரிய நடராசர் சிலை என்று எல்லாவற்றையும் மிகப்பெரியதாகப் படைத்த அவரது ஆற்றல் என்ன! அவர் சோழநாட்டுக்கு ஆற்றிய பணிகள், செய்த நன்மைகள் ஆகியவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தேன்.

அந்த மாபெரும் மன்னருக்குப் பொருந்திய இராஜராஜர் என்கிற பெயர் எனக்கு எள்ளளவும் பொருந்தாது என்று தோன்றி விட்டது.... நம்பி....'' இராஜராஜன் பேச முடியாமல் திணறினார்.

''அரசே!'' என்று பெருமான் நம்பி பரபரப்புடன் அவர் அருகே சென்று அவர் மார்பைத் தடவிக் கொடுத்து அவர் நெற்றியில் துளித்த வியர்வையைத் தனது மேலங்கியில் ஒத்தியெடுத்து, ''தாங்கள் இவ்வாறு உணர்ச்சி வசப்படலாமா? தங்களைத் தாங்களே குறை கூறிக் கொள்ளலாமா? தங்களுக்கு எந்தவித நோயுமில்லை. தங்கள் உள்ளத்தில் வெளியிட முடியாது அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒன்று தங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. அரசர்க்கரசே! இளம்பிராயம் முதல் தங்களிடம் நெருங்கிப் பழகிய என்னிடம் கூடச் சொல்லாமல் இதயப் பேழையில் தாங்கள் பாதுகாத்துவரும் இரகசியத்தை நான் அறியலாமா?'' என்று பெருமான் நம்பி அரசருக்கு மட்டும் கேட்கும் குரலில் கேட்டார்.

இராஜராஜன், நம்பியின் கரங்களை அழுத்தமாகப் பற்றிக் கொண்டார்.

''நம்பி! என்னை விட்டு நீ எங்கும் சென்றுவிடாதே. சொல்ல முடியாத பய உணர்ச்சி என்னுள்ளே குமுறி என்னை வாட்டுகிறது. இந்தச் சோழ



நாட்டுக்குப் பெருந்துன்பம் ஏதோ நேரப் போகிறது என்று என் உள்ளுணர்வு கூறுகிறது....'' பேச முடியாமல் பேசினார் அரசர்.

நம்பி தன் மடியிலிருந்த பையிலிருந்து திருநீற்றை எடுத்து இராஜராஜனது நெற்றியில் இட்டு அவர் மார்பிலே தடவி, ''அரசே! தில்லையில் ஆனந்த நடனமிடும் பாதனின் பிரசாதம் இது. தங்கள் நலமும் நாட்டின் நலமும் மிக வேண்டி நடராசப் பெருமானிடமிருந்து பெற்றுவந்த திருநீறு. மந்திரமாகும் இந்த நீறு தங்கள் மனக்கவலையைப் போக்கிவிடும். சில நாள்களாகச் சோழநாட்டில் ஆங்காங்கே சிலர் பேசிக் கொள்வதை நானும் அறிந்தேன். தங்களுக்குப் பிறகு இந்த நாட்டுக்கு யார் வாரிசு என்ற கேள்வியை எழுப்பி அவர்களே மறுமொழியையும் கூறிக் கொள்கிறார்கள்'' என்று உள்ளம் நெகிழச் சற்று மெல்லிய குரலில் பேசிய நம்பி, திடீரென்று, ''அவர்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? உங்களுடைய இறுதிநாளை அவர்களே உறுதிப் படுத்திக் கொண்டு விட்டார்களா?'' என்று உரத்த குரலில் கேட்டார்.

மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் புன்னகையின் கீற்று இராஜராஜனின் முகத்தில் தோன்றியது.

''அவர்கள் பேசுவதில் நியாயம் இருக்கிறது'' என்றார் மன்னர்.

''எது நியாயம்? அவர்கள் உங்களுடைய இறுதிநாளை எதிர்பார்ப்பது தான் நியாயமா? உங்களால் இந்த நாட்டு மக்களுக்குக் கடுகளவாவது துன்பம் ஏற்பட்டிருக்கிறதா? 'தந்தையிலோர்க்குத் தந்தையாகவும், தாயிலோர்க்குத் தாயாகவும், மைந்தரில்லோர்க்கு மைந்தராகியும், மன்னுயிர்கட்குயிராகியும் விளங்கும்' தங்களைக் கண்டுமனம் வெறுப்பவர்களும் இருக்கிறார்களா?''

இராஜராஜன் இப்போது கலகலவென்று சிரித்தார்.

''அவர்கள் என் இறுதி நாளை எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்ல மாட்டேன். எனக்குப் பிறகு நான் யாருக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறேன் என்று எதிர்பார்ப்பது நியாயம் தான். அந்த எதிர்பார்ப்பின் பலனைத் தாங்களே அடைய நினைப்பவர்கள் கூடித்திட்டம் வகுப்பதும் இயற்கை தானே?'' என்று கூறியவர், ''நம்பி! இப்போதுநீ கூறினாயே, 'மைந்தரில்லோர்க்கு மைந்தராகி' என்று எனக்கு மைந்தரில்லை, எனக்கு நானே மைந்தனாக முடியுமா? என் விஷயத்தில் அது பொய்த்துவிட்டது என்று தான் அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். நம்பி! உனக்குத் தெரியாமலிருக்க முடியாது. எனக்கு வாரிசு இல்லை என்று பலர் நினைக்கிறார்கள். என் குழந்தைகளைக் குறித்து நான் பெருமைப் படாமல் அதை ஓர் இரகசியமாகவே இதுவரை காப்பாற்றி வந்திருக்கிறேன்'' என்று கூறும் போது, பெருமான் நம்பி, குறுக்கிட்டு, ''அரசே! நான் அறிவேன்...'' என்று மட்டும் கூறி நிறுத்தினார்.

இராஜராஜன் திடுக்கிட்டுத் திகைத்தார். ''நம்பி! உனக்குத் தெரியுமா? தெரிந்தும் அதைப் புலப்படுத்திக் கொள்ளவில்லை ஐயா! உன்னுடைய இடத்தில் மற்றொருவர் படைத்தளபதியாக இருந்தால் என்னைப் பற்றி நினைப்பதே

வேறாக இருந்திருக்கும். நீ சேனாதிபதி என்ற உயர் அதிகாரி என்பது இருக்கட்டும்; நீயும் நானும் சமவயதுடையவர்கள். கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒன்றாகவே கல்வி கற்றோம். உன்னைவிட எனக்குக் கல்வியில் அதிக நாட்டம் சென்றது இல்லையா?'' என்று கூறிய போது இருவரும் மெல்ல நகைத்தனர்.

''இராச பண்டிதன் என்று என்னை உடன் படித்த மாணவர்கள் புகழ்ந்தார்கள். நான் அரசனானேன். நீ அதற்குள் புஜபலமிக்க பெருவீரனாக விளங்கினாய். சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று வந்தாய். உன்னைப் படைத்தலை வனாக்கினேன்....'' என்று கூறிச் சற்று நிறுத்தி இளைப்பாறினார்.

மன்னரை மேலும் பேசவிடாமல், ''அரசர்க்கரசே! நீங்களும் நானும் பிள்ளைப் பிராயத்தில் பழகிய இன்ப நினைவுகளைப் பல நாள்களுக்குப் பேசிக் கொண்டிருக்கலாம். என்னைப் படைத் தலைவனாக்கினீர்கள். பல்லவரையர் என்ற பட்டம் கொடுத்துச் சிறப்பித்தீர்கள். என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறு அது. அவ்வாறெல்லாம் கௌரவித்த தாங்கள் தங்களுக்குக் குழந்தைகள் பிறந்ததை என்னிடம் தெரிவிக்கவில்லை என்பதை நான் தவறாகக் கருதவில்லை. அதற்கு ஏதோ ஒரு காரணமிருக்கிறது என்று முடிவு செய்து கொண்டேன்'' என்றார்.

''ஆம், பெருமான் நம்பிப் பல்லவரையரே! அதற்குக் காரணம் இருக்கிறதென்பது உண்மை தான். அதை உன்னிடம் இதுவரையில் சொல்லாது மறைத்து வைத்திருந்தேன். தக்க சமயத்தில் சொல்ல எண்ணினேன். அதற்கான சமயம் இப்போது வந்து விட்டது'' என்றார் இராஜராஜன்.

மன்னர் கூறப்போகும் அந்தச் சம்பவத்தைக் கேட்க நிமிர்ந்து உட்கார்ந்தார் சோழநாட்டுப் படைத்தலைவர், பெருமான் நம்பிப் பல்லவரையர்.

## 4. இராஜராஜன் கூறிய இரகசியம்

படைத்தலைவர் பெருமான் நம்பி பல்லவரையர், தான் இரகசியம் என்று கருதியவற்றை அறிந்திருக்கிறார் என்பதறிந்த சோழச் சக்கரவர்த்தி இராஜராஜர் முகத்தில் வியப்பின் பிரதிபலிப்பு நிழலாடியது. அவர், நம்பியின் முகத்தையே உற்று நோக்கினார்.

நம்பியின் இதழ்களில் புன்முறுவல் நெளிந்தது. ''ஆம் அரசே! எனக்குத் தெரியும், சோழ நாட்டின் வாரிசு உருவாகி விட்ட செய்தி. ஆனால், அந்தச் செய்தி பரம இரகசியமாகக் கடந்த இரண்டாண்டு களாகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பது தான் வியப்புக்குரியது. சோழ மன்னருக்குக் குழந்தை பிறந்தது என்றால், நாடே குதூகல மடையும். பட்டி தொட்டி எங்கும்



கோலாகலமாகக் கொண்டாடப் படும். அதிலும், சோழநாட்டுக்கு வாரிசு ஏற்பட்டு விட்டதால் நாட்டு மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்காமல் என்ன செய்வர்? இனிய செய்தியை ஏன், இரகசியமாக்கினீர்கள்?'' நம்பி கேட்டார்.

இராஜராஜன் உடனே மறுமொழி கூறவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார்.

'ஒருவருமில்லை அரசே! மனம் விட்டுப் பேசுவதற்காகத் தான் பணிப்பெண்களைக் கூட வெளியே அனுப்பி விட்டேன். தேவைப்படும் போது திருமந்திர ஓலை நாயகத்தை மட்டும் அழைக்கலாம்'' என்று நம்பி கூறியவுடன் மன்னர் நிமிர்ந்து உட்கார்ந்து, ''நம்பி! நல்ல செய்தியை இரகசியமாக வைக்க வேண்டும் என்ற எண்ணமே எனக்குத் தோன்றவில்லை. எனது நான்கு மனைவியருள் ஒருத்தி கருத்தரித்திருக்கிறாள் என்றால் அதைவிட ஆனந்தம் வேறு உண்டா? இரகசியமாக அந்தச் செய்தியைக் காப்பாற்றுவதும் முறையில்லை'' என்று கூறும்போது நம்பி குறுக்கிட்டார்.

''பட்டத்தரசி கருத்தரிக்காமல் மலையமான் மகள் அவனி முழுதுடை யாளுக்கு அந்தப் பேறு கிடைத்துவிட்டது தங்களுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். அதனால்....''

இராஜராஜன் பரபரப்புடன், ''அதெல்லாம் தவறான செய்தி. நம்பி! உனக்குத் தெரியாமல் எனக்குப் பிடித்தவர் - பிடிக்காதவர் என்ற பேத உணர்ச்சி இருக்க முடியுமா? மலையமானுக்கும் எனக்கும் சிறிது காலமாக மனவருத்தம் உண்டு. ஆனால் அது மலையமான் மகளிடம் பிரதிபலிக்கவில்லை என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கூறினார்.

நம்பி குறும்புப் புன்னகை மிளிர, ''அரசே! எனக்கு நன்றாகத் தெரியும். பட்டத்தரசியை விட மலையமான் மகளிடம் தங்களுக்கு அந்தரங்க அன்பு உண்டென்று தெரியும். திருத்தலங்களுக்குச் செல்லும்போது மலையமான் மகளைத் தானே அழைத்துச் செல்வீர்கள்? அவர்களிடம் தங்களுக்கு அன்பு அதிகமென்பதும் நானறிவேன்... ஆனால் அவர்கள் சூலுற்ற செய்தியைத் தாங்கள் பரம இரகசியமாக வைத்திருந்தது தான் அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது....'' என்றார்.

''நம்பி! இதிலென்ன இரகசியம்? பகிரங்கமாக எல்லாரும் அறிய வில்லையே தவிர, பரவலாக மக்கள் அறிவர். எனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்ற நல்ல செய்தி கிடைத்தவுடனேயே எனக்கு இந்த அவனியே அஸ்தமித்தது போலாகிவிட்டது. ஒருவருடன் பேசவும் பிடிக்கவில்லை. நான் பழையாறை மாளிகையை விட்டு வெளியே எங்கும் செல்லவில்லை. கங்கை கொண்ட சோழபுரம் சென்று மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. நம்பி! உன் சொந்த ஊருக்கு நீ சென்று மீனாட்சி அம்மனுக்குக் கோயில்கட்டும் பணியில் ஈடுபட்டுவிட்டாய். நான் அந்தரங்கத்தை யாரிடம் பகிர்ந்து கொள்வேன்? 'வாரிசு

ஏற்பட்டு விட்டது' என்ற இனிய செய்தி எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அது தான் இரகசியம். அது உனக்குத் தெரியுமா நம்பி?'' என்று இராஜராஜன் கேட்டார்.

நம்பியின் எண்ணங்கள் எங்கோ பறந்து சென்று கொண் டிருந்தன. இரண்டாண்டுகள் அரசரின் மௌனம், கங்கை கொண்ட சோழபுரம் பக்கமே செல்லாத நிலை நாட்டில் எத்தகைய மறைமுகக் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டன என்று எண்ணினார்.

மலையமானுடன் இராஜராஜனுக்கு உள்ள மனத்தாங்கல் பெரிதாக வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால், மலையமானுக்கு ஒரே திருப்தி, கங்கை கொண்ட சோழபுரத்தில் வளரும் தன் பெண் வயிற்றுக் குழந்தைகள் நாளை சோழநாட்டு அரியணை ஏறப் போகின்றன என்பதே. அதனால் பெருமான் நம்பியும், மலையமான் கோபத்தையும் பிணக்கையும் தவிர்க்கவே முயன்று வந்தார்.

ஆனால், கோவிந்தனையும் சிற்றரசர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு மல்லப்பதேவன் சோழநாட்டின் இளவரசுப் பட்டத்தைத் தனக்கே சூட்ட வேண்டும் என்று திட்டமிடுவது தான் பெருமான் நம்பிக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. அவனது திட்டங்களை முறியடிக்க நம்பி முயன்று கொண்டிருந்தார். அரசரிடமும் உடனே அச்செய்தியைக் கூறத் துடித்தார். அதைப்பற்றிய சிந்தனையில் நம்பி இருந்தார். ''நம்பி! அந்த இரகசியம் என்னவென்று கேட்காமல், ஏதோ சிந்தனையில் இருக்கிறாயே'' என்று இராஜராஜன் நம்பியைப் பார்த்துக் கேட்ட பிறகு தான் நம்பி தம் நிலை உணர்ந்தார்.

''உம்.... உம் சோழ நாட்டின் வாரிசாக ஒரே ஒரு குழந்தை பிறக்கக் கூடாதா என்று தவம் செய்து கொண்டிருந்த தங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்ததும் தாங்கள் மகிழ்ச்சியடைய வில்லையே ஏன்? அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தாங்கள் தான் சொல்லவேண்டும்'' என்றார் நம்பி. அரசர் நடந்தவற்றைக் கூறக் கூற நம்பிக்கு வியப்பு கூடியது.

தன் அன்புக்கினிய அரசி, மலையமான் மகள் கருத்தரித் திருக்கிறாள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைக் கேசவ சுவாமியிடம் தெரிவிக்க இராஜராஜன் விரைந்தோடினார். கேசவ சுவாமிகளிடம் இராஜராஜன் மதிப்பும் மரியாதையும் மிக்கவர். வடமொழியில் பெரும் புலமை வாய்ந்த கேசவ சுவாமி முக்காலும் உணர்ந்தவர். சோதிடக் கலையில் வல்லவர்.

கேசவ சுவாமி சிறிது நேரம் இராஜராஜனை உற்று நோக்கிய வாறிருந்தார். பிறகு, ''இராஜராஜா! நாம் உடனே ஆயிரத்தளி அரண்மனைக்குச் செல்வோம். அங்கே நான் மாளிகைத் தெய்வமான காளியை வேண்டித் துதிக்கிறேன். காளியின் கருணை எவ்வாறு உள்ளது என்று அறிந்து சொல்கிறேன்'' என்றார்.



மகிழ்ச்சி என்னும் புரவியில் ஏறிப் பறந்து வந்த இராஜராஜனுக்கு, ஒரு கணம் இதயத்தை யாரோ பிடித்து அழுத்துவது போல தோன்றியது. நல்ல செய்தியைச் சொன்னவுடன் கேசவ சுவாமி, ஆனந்தம் மிக அடைந்து ஆசி கூறுவார் என்று எண்ணப்போக, கேசவ சுவாமியின் முகத்தில் சந்தோஷத்தின் அறிகுறியைக் காணவில்லை என்பதைக் கவனித்தார். ஆயிரத்தளி அரண்மனையின் தெற்கு வாயிலில் குடிகொண்டிருக்கும் துர்க்கையின் சந்நிதானத்துக்குக் கேசவ சுவாமியும் இராஜராஜனும் வந்து சேர்ந்தனர்.

கேசவ சுவாமி துர்க்கையின் எதிரே தியானத்தில் அமர்ந்தார். நெடுநேரம் நிஷ்டையிலிருந்து தெளிந்த கேசவ சுவாமி, இராஜ ராஜனிடம் குங்குமப் பிரசாதத்தை அளித்து, ''இராஜராஜா! உனது மகிழ்ச்சியை மாற்றக் கூடிய செய்தியை நான் சொல்ல வேண்டி யுள்ளது. நாளை முதல் குழந்தை பிறக்கும் வரை அருமை அரசி அவனி முழுதுடையாளை நீ சந்திக்கக் கூடாது. குழந்தை பிறந்த பிறகு மீண்டும் அதன் நட்சத்திரத்தைப் பார்த்து, பின் விளைவுகளைக் கூறுகிறேன்'' என்றார்.

இராஜராஜன் திடுக்கிட்டான். ''அவனி முழுதுடையாளை நான் சந்திக்கக் கூடாதா? அதெப்படி முடியும் சுவாமி? என் அன்புக் கினியாளை நான் பார்க்காமலிப்படி இருப்பது? சோழர் குலத்தை விளங்க வைக்கப்போகும் மாமணியைத் திருவயிறு கொண்டவளை நான் எப்படிப் பார்க்காமலிருக்க முடியும்?'' என்று கதறினார்.

கேசவ சுவாமி அவரைத் தேற்றி, ''இராஜராஜா! இதற்கெல்லாம் கலங்கலாமா? ஓராண்டுகாலம் ஓடி மறைந்து விடும். இப்போது உன் கால பலன் சரியில்லை. உன் அன்புக்கினிய அரசியின் நன்மைக் காகத் தான் சொல்கிறேன். அவள் பெற்றுப் பிழைத்து நலமாகக் காலமெல்லாம் வாழ வேண்டுமானால் அவளைப் பார்க்காது தான் இருக்க வேண்டும். இது காளியின் கட்டளை'' என்றார்.

கேசவ சுவாமியின் சொற்களைச் சிரமேற கொண்டு நடக்கும், இராஜராஜன் அவர் கட்டளையை ஏற்று அவ்வாறே இருந்தார்.

கங்கை கொண்ட சோழபுரத்து அந்தப்புரததை அரசி அவனி முழுதுடையாள் அடைந்தாள். கங்கை கொண்ட சோழபுரத்தில் தங்கிய பிராட்டி அம்மங்கைதேவி, தமது வாழ்நாளை மிக அமைதியுடன் கழித்துக் கொண்டிருந்தாள்.

எண்பது பிராயத்துக்கு மேல் கடந்த பெரிய பிராட்டியின் பராமரிப்பில், அவனி முழுதுடையாளை ஒப்படைத்து விட்டு, பழையாறை அரண்மனையை வந்தடைந்தார் இராஜராஜன்.

இதுவரை இராஜராஜன் கூறியவற்றை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பெருமான் நம்பி, 'அரசே! கேசவ சுவாமியின் வாக்குப்

பொய்க்காதே. தாங்கள் அரசியாரைச் சந்திக்காமல் மிகக் கட்டுப்பாட்டுடன் இருந்தும், எவ்வாறு, அரசியாருக்கு மரணம் சம்பவித்தது?'' என்று கேட்டார்.

இராஜராஜன் தமதுவிழிநீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, ''விதியை யாரால் மாற்ற முடியும் நம்பி? உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மிகுந்த கட்டுப்பாட்டுடன் தான் நான் இருந்தேன். சூலுண்ட அரசியைச் சந்திக்க முடியாத வாழ்வு ஒரு வாழ்வா என்று நான் விரக்தியடைந்ததுண்டு. அப்படியொரு சோர்வும் பிரிவாற்றாமையும் என்னை வாட்டும் போது பழையாறையை விட்டுப் புறப்பட்டு விடுவேன். நினைவிருக்கலாம், உன் ஊருக்கு வந்து மீனாட்சியம்மனைத் தரிசித்துச் சில நாள்களைக் கழித்தேன். அப்போதும் உன்னிடம் கூறவில்லை. இரகசியமாக என் ஆருயிர்த் தேவியைச் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு எனக்கு அதிகமானது. ஐயிரண்டு திங்கள் ஓடி மறைந்தன. குழந்தை பிறக்கும் நாள் நெருங்கும் போது நான் கேசவ சுவாமியை அழைத்துக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். ஓராண்டுகாலமாகத் தலைநகருக்குச் செல்லாத என் வருகையை அறிந்த மக்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

''கேசவ சுவாமி கலகலப்புடன் காணப்படவில்லை. ஆண் குழந்தை பிறந்தது என்ற செய்தியைத் திருமந்திர ஓலை நாயகம் விரைந்து வந்து தெரிவித்தான். நாள்தோறும் வானத்தையும் கையில் உள்ள பஞ்சாங்கச் சுவடியைப் பார்ப்பதும் ஏதோ மனத்துக்குள்ளேயே கணக்கிடுவதுமாக இருந்தார் கேசவ சுவாமி.

''சுவாமி! ஆண் குழந்தை பிறந்து விட்டான். வாருங்கள்! போய் தாயையும், சேயையும் பார்க்கலாம்'' என்று மகிழ்ச்சியால் பரபரப் படைந்து கூறினேன்.

கேசவ சுவாமி கையசைத்தார். கூடாது என்பதற்கு அடையாள மாகத் தலையை அசைத்தார். 'இராஜராஜா! நீ குழந்தையையும், தாயையும் காணும் தருணம் இன்னும் வரவில்லை'' என்று மட்டுமே கூறினார்.

''பாசம், என் மதியை மறைத்தது. பற்றுதல் என் உணர்ச்சியைக் கட்டுக்கடங்காமல் செய்தது. ஒரு கணம் ஜோதிட சாத்திரத்தையே வெறுக்கத் தோன்றியது. பத்து நாள்கள், இருபது நாள்கள் என்று நான் கேசவ சுவாமியின் அருகேயே கட்டுப்பாட்டுடன் இருந்தேன். என் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சோழர் குலவிளக்கை மிக அருகே வைத்துக் கொண்டு அதைப் பாராமல் தடுக்கும் எந்தச் சக்தியையும் மீறிவிட முடிவு செய்தேன். என் அருமை அரசி என்னைக் காணாமல் எப்படித் துடித்துக் கொண்டிருப்பாள் என்று எண்ணினேன். நம்பி! உன்னிடம் மனம் விட்டுச் சொல்வதில் என்ன வெட்கம்?'' என்று கூறி இராஜராஜன் சற்றுப் பேச்சை நிறுத்தினார்.

நம்பி மெல்ல நகைத்து ''கட்டுப்பாட்டையும் தடையையும் மீறியதால் தான் மற்றொரு குழந்தையும் தங்களுக்குப் பிறந்தது என்பதும் எனக்குத் தெரியும். கேசவ சுவாமியின் சோதிடம் பொய்த்து விட்டது என்று கைகொட்டி



முழங்கினீர்கள். கேசவ சுவாமி கோபித்துக் கொண்டு சோழ நாட்டை விட்டே போய் விட்டார். இதெல்லாம் நான் அறிவேன்'' என்றார்.

நம்பியின் மெல்லிய சிரிப்பொலியுடன் இராஜராஜனும் சேர்ந்து கொண்டார். கேசவ சுவாமி கோபத்துடன் வெளியேறு முன்பு என்னிடம் வந்து, 'இராஜராஜா!, விதிப்பயனை வெல்ல இந்தக் கேசவனால் கூட யோசனை கூற முடியாது. ஆனால் விதியை மதியால் வெல்லலாம். உன் மதியைக் கட்டுக்கடங்கி வைத்துக் கொள், மற்றொரு முறையும் எச்சரிக்கிறேன். உனக்கு மற்றொரு குழந்தையும் பிறக்கப் போகிறது' என்று கூறினார்.

''என் செய்கையைக் கண்டு நானே பிறகு வெட்கிப் போனேன். என் அன்புக்கினியவள் மீண்டும் கருத்தரித்தாள். கேசவ சுவாமி புறப்படும் முன்பு கூறினார் : ''இராஜராஜா! அடுத்துப் பிறப்பதும் ஆண் குழந்தை தான். உனக்கு ஏனோ சோதிடத்தின் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. இருந்தாலும் நான் சொல்லுகிறேன்; சில ஆண்டுகள் வரையிலாவது இந்தக் குழந்தைகள் மறைந்தே வாழட்டும். குழந்தை பிறந்ததைப் பற்றிப் பிரபலப்படுத்தாதே. இரண்டாண்டுகள் கழிந்த பிறகு மீண்டும் குழந்தையின் பிறந்த கோளைப் பார்த்து அதன்பலன் கூறுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டார். அவரை நான் எவ்வளவோ தடுத்தும் கேசவ சுவாமி கேட்கவில்லை. புறப்பட்டு விட்டார். ''மீண்டும் இரண்டு ஆண்டுகள் கழித்து வருகிறேன்'' என்று கூறிச் சென்றார். அவர் சென்ற பிறகு ஏனோ என் உள்ளத்தில் ஒருவித பயம் பிடித்துக் கொண்டது. அவர் சொல்லை மீறி நான் அரசியைச் சந்தித்திருந்தது தவறோ என்று நினைத்தேன்.... அதன் பலன் ஓராண்டுக்குள் மற்றொரு குழந்தையை அரசி ஈன்றெடுத்தாள். ஆனால்.... ஆனால்.... நம்பி!...'' என்று மேலே பேசுவதற்குள் மன்னரின் நாத்தழுதழுத்தது. குழந்தை போல் விம்மினார்.

நம்பி அவரைத் தேற்றி, ''அரசே! நடந்ததை நினைத்து வருத்தப் படாதீர்கள். ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்தறியாத தங்களுக்கு இத்தகைய சோதனை வந்திருக்கக் கூடாது தான். இறைவன் செயல். முதல் குழந்தை பெற்ற உடல்நிலை தேறு முன்னர் மற்றொரு குழந்தைக்கு அரசி தாயாகியதால் உடல் பலவீனப்பட்டு விட்டது. குழந்தையைப் பெறுவதற்கு அரசியார் மிகவும் துன்பப்பட்டார் என்றும் பழுவூரினின்று மருத்துவர் வந்து மிகவும் பிரயாசையின் மீது அந்தக் குழந்தையைப் பூவுலகத்துக்குக் கொண்டு வந்தார் என்றும் நான் அறிவேன். சேய் பிழைத்தது. தாயைக் காப்பாற்ற முடியவில்லை. சோழகுலத்து வாரிசு கிடைத்தது. ஆனால் இரு குழந்தைகளுக்குத் தாயான அரசி அவனி முழுதுடையாளைக் காப்பாற்றித் தர முடியவில்லை. மலையமான் மகள் இறையடி சேர்ந்த சேதியைத் தங்களால் தாங்க முடியவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், தாயற்ற அந்தக் குழந்தைகளை இன்னும் அநாதைக் குழந்தைகளைப் போல் கங்கை கொண்ட சோழபுரத்திலேயே இரகசியமாக வளர்க்கும் இரகசியம் என்ன...?'' என்று நம்பி கேட்டார்.

விம்மல் ஒலி தணிந்து இதய வேதனையைக் கண்ணீரால் கரைத்து, மெல்லத் தன்னைத் தானே தேற்றிக் கொண்ட பரகேசரி எனும் பட்டமுடைய இராஜராஜ சோழன், "நம்பி! அந்த இரகசியத்தை உன்னிடம் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்? இதுவரை படைத்தலைவராகவும் என் நண்பனாகவும் மட்டுமிருந்த நீ இன்று முதல் அமைச்சராகவும் ஆகப்போகிறாயே - உன்னிடம் அதைச் சொல்லாமல் இருக்க முடியுமா? சொல்லி வைத்தாற்போல் கேசவ சுவாமி துக்க நிகழ்ச்சிக்குப்பிறகு என்னைத் தேடிவந்தார்" என்று கூறிய அரசர், சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

கேசவ சுவாமி பாதங்களில் வீழ்ந்து இராஜராஜன் கதறினார். அவர் அரசனைத் தேற்றி, "இராஜராஜா! நடக்க வேண்டியதைத் தடுக்க நம்மால் முடியாது. அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனின் திருவுளப்படியே எல்லாம் நடக்கும். இனியும் நீ துயரத்தில் ஆழ்ந் திருக்கக்கூடாது. இதுவரை விரோதிகளே இல்லாது வாழ்நாளைக் கழித்த உனது காலம் இப்படியே செல்லப் போவதில்லை. உடனே சோழ நாட்டின் அரசுரிமையை அடுத்து ஏற்க வாரிசு ஒருவனைத் தேடு. அவனுக்குத் தாமதமின்றி இளவரசுப் பட்டம் சூட்டிவிடு" என்றார்.

இராஜராஜன் திடுக்கிட்டார். "சோழ நாட்டுக்கு வாரிசா? நான் தேடுவதா? தேடி அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதா? சுவாமி! புதிர் போடுகிறீர்களே. கங்கை கொண்ட சோழபுரத்தில் வளர்கிறார் களே, என் இரு செல்வங்கள், அவர்கள் நினைவு தங்களுக்கு வரவில்லையா?" என்று இராஜராஜன் கேட்டான்.

"நினைவு இல்லாமலா நான் இங்கு வந்தேன்? இரண்டாண்டுகள் கழித்து வருவதாகச் சொன்னேன். சொன்ன வாக்குத் தவறாமல் கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். குழந்தைகள் சரியான பராமரிப்பின்றி வாடுகின்றனர். வாழப்பிறந்த குழந்தைகள் தாயற்ற அநாதையாய்த் தவிக்கின்றனர்" என்று கேசவசுவாமி கூறிவரும் போது பரபரப்புடன் குறுக்கிட்ட இராஜராஜன், "சுவாமி! கங்காபுரியில் அவர்கள் ஏன் வாடவேண்டும்? இங்கே கொண்டு வந்துவிடுகிறேன். இரு குழந்தைகளுள் மூத்தவன் இருக்கும் போது இளவரசுப் பட்டத்திற்கு *மண்டை கவிழ்க்க வேறு ஒருவனை ஏன் தேடவேண்டும்?" என்று கேட்டார்.

கேசவ சுவாமி நகைத்தார். "என்ன செய்வது? அந்தக் குழந்தைகளின் அதிர்ஷ்டம் அப்படி. இராஜராஜா! மீண்டும் சொல்கிறேன். அந்தக் குழந்தைகள் பிறந்தவேளை சரியில்லை. பதினெட்டு ஆண்டுகள் வரையில் அந்தக் குழந்தைகள் உன்னிடமிருந்து பிரிந்து தான் இருக்க வேண்டும். அதுவரை அந்தக் குழந்தைகளுக்கு அரியணை ஏறும் யோகம் இல்லை. பிறகு எப்படி நடக்கும் என்று இப்போது சொல்ல முடியாது. அது போகட்டும், இப்போது

* இளவரசருக்குச் சூட்டும் முடி



இன்னும் நான்கு ஆண்டுகள் வரை அந்தக் குழந்தைகளுக்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது. அதனால் தான் இளவரசுப் பட்டத்துக்கு ஏற்ற வேறு ஒருவனைத் தேடி அழைத்து வா என்கிறேன்" என்றார்.

கேசவ சுவாமி கூறியது கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். கேசவ சுவாமி சொல்வதை இன்னும் அலட்சியம் செய்வது மிகத்தவறு என்ற முடிவுக்கு வந்து விட்டேன். என்ன செய்வது என்றே எனக்குப் புரியவில்லை. உன்னை உடனே அழைத்து வர மெய்க்காவலரை அனுப்பினேன். நம்பி! இளவரசுப் பட்டத்துக்கு வாரிசு தேடுவது இருக்கட்டும்; என் இரு கண்மணிகளுக்கும் ஆபத்தான காலம் என்று சுவாமி சொன்னாரே, நீதான் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும். சோழநாட்டின் பிரதம மந்திரியாக இன்றே பொறுப்பேற்று உடனே குழந்தைகளைக் காப்பாற்ற வழி செய்" என்று கூறி இராஜராஜன் பெருமான் நம்பியின் இருகரங்களையும் பலமாகப் பற்றினார்.

பெருமான் நம்பியும் உணர்ச்சி வசப்பட்டார். "சோழப் பெருநாட்டு மாமன்னரே! கேசவ சுவாமியின் ஆரூடத்தைப் பற்றி அறியும் முன்பே நான் இரு குழந்தைகளையும் காப்பாற்ற நடவடிக்கை எடுத்துவிட்டேன். யார் யார் சோழ நாட்டின் வாரிசு உரிமைக்காக சதித்திட்டங்கள் தீட்டுகிறார்கள் என்பதை அறிந்த நான் தாங்கள் கட்டளையிடும் முன்பே கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து இரு குழந்தைகளையும் காப்பாற்ற ஏற்பாடு செய்து விட்டேன். கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள இரு குழந்தைகளையும் சில நாள்களில் கொன்று விடத் திட்டமிட்டிருக்கும் செய்தியும் எனக்குக் கிடைத்தது. அதற்குள் குழந்தைகள் காப்பாற்றப்பட்டு விடுவர். இது சத்தியம்" என்றார்.

இராஜராஜன் முகத்தில் புத்தொளி பரவியது. அவர் உடலை விட்டு நோயெல்லாம் பறந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"நம்பி! யார் யார் சதித்திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்? அதில் மலையமானுக்கும் பங்கு உண்டா? வேண்டியவர் வேண்டாதவர் என்று பாராமல் சதியிலீடுபட்டவர்களைச் சிறையில் அடைத்துவிடு. குழந்தைகளுக்கு ஒருவித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்று" என்று அரசர் கூறி நம்பியின் தோள்களைத் தொட்டார்.

அப்போது கங்கை கொண்ட சோழபுரத்தை நோக்கிச் செல்லும் கூண்டு வண்டியில் அல்லி சென்று கொண்டிருந்தாள். புதிய அனுபவத்தால் ஒருவிதப் பரபரப்பும், தன் கணவனின் சதிச் செயலால் ஒருவிதக் கவலையும் எழுந்து கொண்டிருந்தன.

மற்றொருபுறம் இரு குழந்தைகளையும் கவர்ந்து எடுத்துச் செல்வதற்குச் சிலர் கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தனர் என்பதும் அந்தக் கூட்டத்தில் அல்லியின் கணவனும் இருந்தான் என்பதும் அல்லி அறிய நியாயமில்லை.

# 5. மாளிகைக்கு வழி

இரட்டை மாடுகள் கட்டிய கூட்டு வண்டி மெல்ல மெல்ல அசைந்தாடிப் புறப்பட்டது. மாடுகளின் கழுத்து மணிகள் ஓசையும், கால்களில் கட்டிய சலங்கை ஒலியும் தாளம் தவறாது எழுந்தன. மாலைச் சூரியனின் சாயும் கிரணங்கள் வண்டிக்குள்ளும், பொற்சரடு போல் ஊடுருவிச் சென்றன. வண்டிக்குள்ளிருந்தவர்கள் அனைவரும் பெண்டிர். ஒவ்வொருவர் ஒவ்வோரிடத்துக்குச் சென்று கொண் டிருந்தனர். சிலர் வழியிலேயே இறங்கிவிடுவர். ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டனர். தனக்குத் தாயாகவும் விளங்கிய தந்தையை விட்டுப் பிரியும்போது சிறிது கண்கலங்கினாள் அல்லி.

''கண்களைத் துடைத்துக் கொள், அல்லி! மிகவும் சந்தோஷத்துடன் ஏற்று நடத்தும் பணி இது. சோழ நாட்டுத் தளபதி, திருச்சிற்றம்பலம் உடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர், நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி மாபெரும் காரியத்தைப் பணித்திருக்கிறார். மகளே! மலர்ந்த முகத்துடன் செல்'' என்று மல்லியண்ணன் மகளது நெற்றியில் திருநீற்றை இட்டான்.

அல்லி விழிநீரைத் துடைத்துக் கொண்டாள். ''அப்பா! நந்தவனத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். தொழுவத்தில் நந்தினியும் நாகுவும் பசி தாங்க மாட்டா. வேளைக்கு வைக்கோல் போடுங்கள். அவர் வந்து கேட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று, விடை பெறும்போது தந்தையிடம் கேட்டாள்.

அவள் கணவன் கோவிந்தன் குளித்து விட்டு வருகிறேன் என்று சென்றவன் தான். உச்சி வேளை தாண்டி மஞ்சள் வெயில் சாயத் தொடங்கிய பிறகும் வரவில்லை. பெருமான் நம்பி இட்ட கட்டளையை நிறைவேற்ற முடியாமல் புறப்படும் பொழுது தன் கணவன் எங்கே வந்து விடுகிறானோ என்ற கவலையிலிருந்த அல்லிக்கு அந்த நேரம் வரை அவன் வராதது சற்று ஆறுதலாயிருந்தது.

அன்று காலை வரை கணவனின் பிரிவாற்றாமையைத் தாங்காது, மார்பின் கனம் தாளாது தவித்துக் கொண்டிருந்த அல்லி கணப்பொழுதில் மாறி விட்டாள். கங்கை கொண்ட சோழபுரத்தில் இரட்டைக் குழந்தைகளைக் காணப் போகிறோம், கொஞ்சப் போகிறோம், அவற்றுக்குப் பாலூட்டப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் குளிக்கச் சென்ற கணவன் திரும்பி வராததை மறந்தே விட்டாள்.

''அல்லி!, நீ கவலைப்படாமல் போ. அவன் வந்து கேட்டால் நான் ஏதாவது சொல்லிக் கொள்கிறேன். பொறுப்பற்ற மருமகன் எனக்கு வந்து வாய்த்து விட்டான். எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாக அவன் இருந்து விட்டால் கூட நான் கவலைப்பட மாட்டேன். ஆனால், அரசத் துரோகியாக



அவன் இருப்பது தான் எனக்கு ஆத்திரமூட்டுகிறது. இன்று அவன் எங்கே வரப்போகிறான்?'' என்றான் மல்லியண்ணன்.

பழையாறையை விட்டு வேறு ஊருக்குப் பயணம் செய்வது அல்லிக்குப் புதிய அனுபவம் தான். முற்றிலும் புதிய மனிதர்களுடன் வண்டியில் செல்வது அவளுக்குச் சிறிது அச்சத்தையும் அளித்தது.

மாலைக் கதிரவன் மிக வேகமாக மறைந்தான். அந்திவானத்து குருதிக் கோடுகள் மறைந்து இருள் எங்கும் சூழ்ந்து கொண்டது. கூட்டையடையும் பறவைகள் இடும் கூச்சல் இருளின் பயங்கரத்தை அதிகப்படுத்தின. விடிய விடிய வண்டி சென்று கொண்டிருந்தது. பொழுது புலரும் முன்பு கொள்ளிடத்தைக் கடந்து வடகரையில் சிறிது தங்கியது.

வண்டியிலுள்ளவர்கள் தூங்கி வழிந்தனர். வண்டியின் ஆட்டத்துக்கேற்ப அவர்கள் தலை ஆடி அசைந்து வண்டிக் கூண்டுக்குள் மோதின. சில சமயம் தலைகள் இரண்டும் மோதிக் கொண்டன.

கிருஷ்ண பட்சத்து அஷ்டமி சந்திரன் சந்தனக் கிண்ணத்தைக் கவிழ்த்தது போல் வானத்தில் ஒளிவீசிக் கொண்டிருந்தான். நிசப்தமான அந்த வேளையில் அல்லி மட்டும் உறங்காமல் விழித்திருந்தாள். என்ன துணிவுடன் இந்தப் பொறுப்பை ஏற்றோம் என்று அவள் எண்ணினாள். நம் துணிவு இருக்கட்டும் படைத்தலைவர் நம்மைத் தேர்ந்தெடுத்ததில் அவருக்குத்தான் மிகுந்த துணிவு என்று எண்ணினாள்.

கொள்ளிட மணலில் வண்டிச் சக்கரங்கள் புதைய ஆற்றை வண்டி மெல்லக் கடந்து கொண்டிருக்கும் போது பொழுது புலர்ந்து விட்டது. ஆற்றின் ஓர் ஓரமாகச் சலசலவென்று தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காலை இளங்காற்றும், கால்களில் பரவிய நீரும் சுகமாக இருந்தன. கணுக்கால் வரை நனைந்தோடிய நீரில் அல்லி நடந்து சென்றாள். ஒரு கையெடுத்து முகத்தில் தெளித்துக் கொண்டாள்.

ஆற்றங்கரைத் தோப்பைத் தாண்டிய உடனேயே கங்காபுரி என்று அழைக்கப்படும் கங்கை கொண்ட சோழபுரப்பெரும் நகரின் வெளிமதில் கம்பீரமாக உயர்ந்து நிற்பது தெரிந்தது. பெரும் மதிலுக்குள் மதிலாக விளங்கும் கோட்டையின் நுழைவாயில்களைக் கடந்து செல்ல வேண்டும் என்று நினைக்கும் போதே அல்லிக்குப் பிரமிப்பாக இருந்தது.

ஆயிரத்தளி மாளிகையையும், இராசராசேச்வரக் கோயிலையும் அதை ஒட்டிய அரண்மனையையும் பார்த்தே வியப்படைந்து திகைக்கும் அல்லிக்குக் கங்கை கொண்ட சோழபுரத்து நுழைவாயிலே பெரும் அதிசயமாகக் காட்சியளித்தது.

மதில்கள் பல கடந்து நகரத்தின் புறப்பாடிகளையும் கடந்து செல்லும் போதே கங்கை கொண்ட சோழீசர் ஆலயத்து விமானம் ஓங்கி உயர்ந்து நிற்பதை

அவள் பார்த்து விட்டாள். கங்கை கொண்ட சோழபுரத்து இறைவர் பெருவுடையாரைப் பற்றி அவள் தந்தை சொல்லியிருக்கிறார். முடிந்தால் காலையிலேயே கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு மாளிகைக்குள் செல்லலாம் என்று முதலில் எண்ணினாள். பிறகு மனத்தை மாற்றிக் கொண்டு நேரே மாளிகைக்குச் செல்வது என்று முடிவு செய்து கொண்டாள்.

கழனிக் குளம் அருகே வண்டியை நிறுத்திவிட்டார்கள். வண்டியிலிருந்து இறங்கியவர்கள் தத்தம் பேட்டைகளுக்குச் செல்லத் தொடங்கினர்.

அவள் சோழ கேரளன் திருமாளிகைக்குச் செல்ல வேண்டும் என்பதையும் அந்த மாளிகை இருக்குமிடத்தையும் தந்தை விவரித்திருந்தார். அங்கே தான் பெரிய பிராட்டியார் வசித்து வந்தார்.

அகலமான வீதிகளையுடைய கங்காபுரி விழித்துக் கொண்டு விட்டது. மக்கள் தத்தம் அலுவல்களைக் கவனிக்கப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். பெருவுடையார் திருக்கோயிலின் விமானமிருக்கும் பக்கம் நோக்கி அல்லி சென்று கொண்டிருந்தாள். அவள் சிறு மூட்டை ஒன்றை அணைத்தவாறு இங்குமங்கும் வெறித்து நோக்கும் பார்வையும், மெல்லத் தயங்கித் தயங்கி ஊருக்குள் நடப்பதும் ஊருக்கு அவள் புதியவள் என்பதைப் புலப்படுத்தின.

சோழ கேரளன் திருமாளிகை எங்கே இருக்கிறது என்று யாரைக் கேட்டறிவது என்று எண்ணியவாறு மற்றோர் அகலமான வீதியை அவள் அணுகினாள். சாலையைக் கடக்க நினைத்த போது குதிரைகள் சில வேகமாக வருவதைக் கண்டாள். புழுதிப்படலத்தை எழுப்பியவாறு சென்ற குதிரைகளில் ஒன்றில் அமர்ந்து சென்றவருள் ஒருவன் அவள் கணவனைப் போல் தோற்றமளித்ததைக் கண்டு அவள் திடுக்கிட்டு நின்றாள். குதிரைகள் விரைந்து சென்று மறைந்தன. குதிரைகள் செல்வதற்காக வழிவிட்டு நின்று ஒருவரைப் பார்த்து அல்லி கேட்டாள் : "ஐயா!, சோழ கேரளத் திருமாளிகை எங்கே இருக்கிறது?" என்று.

அவர், அல்லியை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து, "இந்த ஊருக்கு நீ புதியவளா?" என்று கேட்டார். இல்லை என்பதற்கு அறிகுறியாக அல்லி தலையசைத்தாள்.

"அப்படியென்றால் திருமாளிகை எங்கே இருக்கிறது என்று ஏன் கேட்கிறாய்?. திருமாளிகையைத் தெரியாதவர்கள் யாரிருப்பார்கள்? மாளிகை பல ஆண்டுகளாகச் சோபை இழந்திருந்தாலும், அரச குடும்பத்து முக்கியமான மகளிரெல்லாம் அங்கு தானே இருக்கிறார்கள்?" என்று அவள் கேட்காத கேள்விக்கெல்லாம் அவர் மறுமொழி கூறிவிட்டுச் சாலையைக் கடந்து சென்றுவிட்டார். சாலையைக் கடந்து மறுபக்கம் சென்றவருக்கு என்ன

மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002



தோன்றியதோ, "பெண்ணே! அதோ வருகிறதே சிவிகை அதைத் தொடர்ந்து சென்றால் திருமாளிகையை அடையலாம்" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் சென்று விட்டார்.

சிவிகை சுமப்பவர்கள் ஒருவித ஒலியை எழுப்பிக் கொண்டு வந்தனர். சிவிகைக்கு முன்பு, குதிரை மீது வீரனொருவன் பாது காவலாகச் சென்று கொண்டிருந்தான். குதிரை மெல்லிய கதியில் சென்றதால் அதன் மீது அமர்ந்திருந்த வீரன் குதித்துக் கொண்டு செல்வது போல் தோன்றியது. சிவிகையின் இருபுறங்களிலும் தொங்கிய திரைகளில் புலியின் உருவம் தீட்டப்பட்டிருந்ததால், அரச குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமானவரொருவர் சென்று கொண்டிருக் கிறார் என்பதை அறிய முடிந்தது. வழிப்போக்கன் கூறியதைப் போல் அல்லி சிவிகையைப் பின் தொடர்ந்தாள்.

சிவிகை சென்று கொண்டேயிருந்தது.

காலை வெயில் மெல்ல மெல்ல மாறிக் கொண்டே வந்தது. "இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியிருக்குமோ?" என்ற கவலை அவளைப் பிடித்துக் கொண்டது. 429786/5877309

சிவிகை சென்று கொண்டே இருந்தது. வீதியின் இருபுறமும் மாடங்கள் நிறைந்த மாளிகைகள் இருந்தன. அன்னக்கொடி பறக்கும் சத்திரங்கள் இருந்தன. வேதமொலிக்கும் பாடசாலை இருந்தது. பண்ணிசைக்கும் தேவாரப் பள்ளிகள் இருந்தன. திவ்யப் பிரபந்தங்களை இசையுடன் ஓரிடத்தில் பாடிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் 'ஜல், ஜல்' என்ற சதங்கை ஒலி கேட்டது. அந்த வீட்டில் பெண்கள் நிறைந்திருந்தார்கள். மாடத்திலிருந்து சில பெண்கள் எட்டிப் பார்த்தார்கள். சிலர் முதுகுப்புறம் மட்டும் வெளியே தெரிய சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டே அல்லி மெல்ல நடை போட்டதால் சிவிகையும், குதிரை வீரனும் வெகுதூரம் போய் விட்டார்கள். அல்லி ஓட்டமும், நடையுமாய்ச் சிவிகையைப் பின் தொடர்ந்தாள். ஒரு நாழிகைப் போது அவள் நடந்திருப்பாள். கடைசியில் பெரிய மாளிகை ஒன்றின் முன்புறம் சிவிகையைக் கீழே இறக்கி வைத்தார்கள். மாளிகையைச் சுற்றிப் பெரிய மதில் இருந்தது. பெரிய மரக்கதவுகள் மதில் வாயிலை மூடியிருந்தன. வாயிற்கதவின் திட்டி வாசல் திறந்திருந்தது. சிவிகை வந்ததைக் கண்ட வீரர்கள் பெரிய மரக்கதவுகளைச் சிறிது திறந்தார்கள். சிவிகையினின்று மூதாட்டியார் இறங்கினார். எண்பது பிராயத்துக்கு மேல் ஆகியும் அவர்கள் திடகாத்திரத்துடன் இருந்தார்கள். தும்பை மலரைப்போல் தலைமுடி நரைத்திருந்தது. வெண்ணிறப் பட்டாடை அணிந் திருந்தார்கள். தோளையும், சிகையையும் இழுத்துப் போர்த்தி மூடி மறைத்திருந்தார்கள். நெற்றியில் வெண்ணீறு துலங்கியது. கையில் கம்பளப்பை இருந்தது. வாயிற் காவலர்கள் வணக்கம் தெரிவித்து உள்ளே

செல்ல வழி விட்டு மரியாதை செலுத்தினார்கள். சிவிகையைக் கீழே இறக்கி வைத்திருக்கும் சிவிகை சுமப்போர் வணங்கியவாறு நின்றிருந்தனர். பெரிய பிராட்டியாரான மதுராந்தகித் தேவி மெல்ல நடந்து, வழியே உள்ள வாயிற்வழியே நுழைந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த அல்லி, பிராட்டியை நோக்கி விரைந்து ஓடினாள். என்ன கூறி அவர்களை அழைப்பது என்று புரியாமல் வார்த்தைகள் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டன.

வாயிற் கதவுகள் மூடப்பட்டன. உள்ளே செல்ல விடாமல் வாயிற் காவலர் அவளைத் தடுத்து விட்டனர். தன் கையிலிருந்த பெருமான் நம்பி கொடுத்த அடையாளச் சின்னத்தைக் காட்டலாமா என்று ஒரு கணம் அவள் எண்ணினாள். தான் தளபதியால் அனுப்பப்பட்டவள் என்பதைத் தெரிவிக்கலாமா என எண்ணினாள்.

''நான் யார் தெரியுமா? பழையாறையிலிருந்து வருகிறேன். என்னை இந்த நாட்டுத் தளபதி அனுப்பினார்'' என்று அல்லி சொல்லி முடிப்பதற்குள் அவள் உடல் வியர்த்தது.

''ஹோ ஹோ'' என்று காவலாளிகள் நகைத்தனர். ''காலையி லிருந்து எவ்வளவு பேர் இப்படி வருவீர்கள், தளபதி அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டு?'' என்று கூறி மீண்டும் அவர்கள் சிரித்தார்கள். அல்லி ஒன்றும் புரியாமல் விழித்தவாறு நின்றாள். திடீரென்று அவர்கள் சிரிப்பொலி நின்றது.

''உம். இந்த இடத்தில் வழியை மறைத்துநிற்காதே. அப்படி நிழல் பக்கமாக மரத்தடியில் போய் நில்'' என்று கடுமையாகக் காவலர்கள் கூறவே அல்லிக்கு அழுகை வரும்போல் ஆகியது. என்ன செய்வது என்று புரியாமல் அவள் மெல்ல நடந்து மரத்தடிக்கு வந்தபோது அவளருகே குதிரை வந்து நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்.

குதிரையின் மீது அவளுடைய கணவன் அமர்ந்திருந்தான். அவளுக்கு வியப்புத் தாங்கவில்லை. காண்பது கனவா? கங்கை கொண்ட சோழபுரத்தி லிருக்கிறோமா அல்லது பழையாறை யிலிருக்கிறோமா என்ற சந்தேகம் அவளுக்கு ஒரு கணம் எழுந்தது.

''அல்லி, நீயா? இங்கு எங்கே, ஏன் வந்தாய்?'' என்று அவன் கேட்டான்.

அல்லியின் உடல் நடுங்கியது. நடுவீதியில் கணவர் என்ன சொல்வாரோ என்ற பயம் அவளைப் பிடித்தது. இருந்தாலும் உறுதியை வரவழைத்துக் கொண்டு ''உங்களைத் தேடித் தான் வந்தேன்'' என்று ஒரு பெரும் பொய்யைத் தூக்கிப் போட்டாள்.

கோவிந்தன் திடுக்கிட்டான். கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அவன் மல்லப்ப தேவனுடன் வந்திருப்பதும், மன்னனின் குழந்தைகளைக் கொன்றுவிட முடிவு செய்திருப்பதும் அல்லிக்குத் தெரிந்து விட்டதா? பயம் அவனை ஆட்கொண்டது.



## 6. யார் அந்த வாரிசு?

பழையாறை நகரம், கங்கை கொண்ட சோழபுரத்தை விடக் கலகலப்பு மிகுந்து காணப்பட்டது. காவிரியின் அரவணைப்பால் இயற்கையாகவே வளம் பெற்றிருந்தது அந்நகரம். இராஜராஜ சோழதேவர் இப்போது சில ஆண்டுகளாகப் பழையாறையைத் தம் இருப்பிடமாகக் கொண்டிருந்தாலும் பல நாட்டவர்கள் வணிகம் கருதி வந்து செல்வதாலும் மேலும் அது சிறப்பு பெற்றிருந்தது.

அந்த நகரத்தில் சில நாள்களாகச் சோழ நாட்டுக் குறுநில மன்னர்கள் பலரின் வருகையால் ஆரவாரம் மிகுந்து காணப்பட்டது. ஒவ்வொரு சிற்றரசரும் தம்முடன் ஒரு பரிவாரத்தையே கொண்டு வந்திருந்தனர். இரட்டைக் குதிரைகள் பூட்டி ஓடிய ரதங்களும், சூரியன் ஒளியில் தக தகக்கும் ஒளிவீசும் முக படாங்களையுடைய யானைகளும், குதிரைகளும், சிவிகைகளுமாகப் பழையாறை வீதிகள் திருவிழாக் கோலம் பூண்டு திகழ்ந்தன.

பழையாறை நகரின் ஒரு பகுதியான இராசஇராசபுரத்து மாளிகையில் அனைவருக்கும் விருந்தளிக்கப் பெருமான் நம்பி பல்லவரையர் ஏற்பாடு செய்திருந்தார். அதற்கிடையில் நம்பி ஒவ்வொரு குறுநில மன்னரையும் தனித்தனியே சந்தித்து மனம் விட்டுப் பேசி அவர்கள் கருத்தை அறிந்திருந்தார். அனைவரையும் ஒருசேர விருந்து மண்டபத்தில் சந்திக்கும் திட்டத்தை அறிவித்த வுடன் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரச் சம்மதித்தனர்.

இராசஇராசபுரத்து மாளிகையின் நடுக்கூடத்தில் ஒளி வீசிய விளக்குகள் இரவை வென்று, பகலாக்கிக் கொண்டிருந்தன. காடவராயரும், சம்புவரை யரும், முத்தரையரும் கடம்பராயரும் தத்தம் உடன் கூட்டத்தார்களுடன் வந்து சேர்ந்தனர். பேச்சொலியாலும், சிரிப்பொலியாலும் மண்டபமே அதிர்ந்தது.

குறுநில மன்னர்களைச் சிறிது நேரம் மகிழ்விக்கப் பலவித இசைக் கருவிகளுடன் இசைவாணர்கள் வந்திருந்தனர். யாழும், வீணையும், மத்தளமும், குழலும் இன்னிசை எழுப்ப ஐராவதேச்வரர் கோயிலில் தேவ தொண்டாற்றும் ஆடல் அணங்குகள் ஆடலால் மகிழ்விக்க வந்திருந்தனர். ஆடலழகியரின் நாட்டியச் சிறப்பையும் இசை விருந்தையும் அளித்து, தளபதி எங்கள் கருத்தை எளிதில் மாற்றி விட முடியாது'' என்று சம்புவரையர் குரல் கொடுத்தார். அவரது இடி முழக்கம் போன்ற குரலால், மண்டபத்தில் ஏற்பட்டிருந்த களிப்பும், கும்மாளமும் ஒரு கணம் நின்று அமைதி நிலவியது.

''சம்புவரையர் என்னதான் சொல்ல விரும்புகிறார்?'' என்று பல்லவ ராதித்தன் கேட்டான். அங்கு வந்திருப்பவர்களுள் வயதில் சிறியவன். இராஜராஜ சோழரின் சார்பில் கங்கநாட்டின் அரசப் பிரதிநிதியாக விளங்குபவன்.

''தம்பி! மனத்திலுள்ள அனைத்தையும் சொல்லவே இங்கு கூடியுள்ளோம். நாம் வந்த வேளை அரசர் உடல் நலம் சரியில்லா திருக்கிறார். ஆனால்,

பெருமான் நம்பி நம்மைச் சந்தித்து நமது கருத்தைக் கேட்க இசைந்திருப்பதால் நாம் ஒளிவு மறைவு இன்றி எடுத்துச் செல்லலாம்'' என்றார் காடவராயர். அவரது முன்னோர்கள் திருமுனைப்பாடி நாட்டு நாடு காவல் அதிகாரியாகப் பல தலைமுறையினராக இருந்துவருகிறார்கள்.

'மனத்திலிருப்பதைச் சொல்ல வேண்டுமென்றால், ஒவ்வொரு வரும் சோழநாட்டு இளவரசர் பதவி தங்களுக்கே வேண்டுமென்று கொண்டிருக்கும் ஆசையைத் தெரிவிக்கும்படி இருக்கும்'' என்றான் பல்லவராதித்தன், குறும்புச் சிரிப்புடன்.

''தம்பி, நீ எப்படிக் கூறலாம், எங்களுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிக் கொள்ள ஆசையென்று? ஒருவேளை உனக்கு அப்படிப்பட்ட எண்ணம் மனத்தின் அடித்தளத்தில் இருக்கலாம். இளம்பிள்ளை. நம் அரசருக்கு மிகுந்த அபிமானம் உன்னிடம் உண்டு. அதனால் இளவரசராகலாம் எனப் பகற்கனவு கண்டிருக்கலாம். எங்களையும் அப்படிச் சொல்லி விட்டாயே?'' என்று வங்கார முத்திரையன் சீறினார்.

பல்லவராதித்தன் 'ஹோ ஹோ' வென்று பெரிதாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் பின்னணியில் சீற்றமிருந்தது.

''நான் இளைஞன் தான். எனக்கும் உங்கள் அனைவரையும் போல் ஆசைகள் உண்டு. சோழநாட்டின் இளவரசராக வேண்டும் என்ற பேராசை எனக்கு இல்லை. சோழச் சக்கரவர்த்திக்கு வாரிசு இல்லை என்றால் நாம் ஆசைப்படுவதில் அர்த்தமிருக்கிறது. வாரிசில்லாத அரசர் என்று அவரை நினைத்துவிட்டீர்களா?'' என்று அவன் குத்திக் காட்டினான்.

மிக அமைதியாக ஒரு தூணின் ஓரமாக அமர்ந்திருந்த கடம்பராயர், ''நம் சக்கரவர்த்திகளுக்குக் குழந்தைகள் பிறந்திருக் கின்றனர் என்ற செய்தியை இப்போதுதான் நான் அறிந்தேன். சக்கரவர்த்திகள் ஏன் இந்த நற்செய்தியை வெளியே சொல்லாமல் மறைத்து விட்டார்? தம் குழந்தைகள் தமக்குப் பின் ஆள வேண்டாம் என்று அவர் கருதுவதில் ஏதோ ரகசியமிருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் அவருடைய வாரிசுகளாக இல்லாமலிருப்பதற்கு வேறு ஏதாவது காரணமிருக்க வேண்டும்'' என்று கூறி முடிப்பதற்குள், ''என்ன சொன்னீர் காடவராயரே?'' என்று ஹூங்காரத்துடன் ஒருவர் சீறி எழும் குரல் கேட்டது.

திருக்கோவலூர் மலையமான் வாளை உருவிக் கொண்டு ஆவேசத்துடன் பேசினார் :

''கடம்பராயரே! என்ன சொல்லி விட்டீர்கள்? தெரிந்து சொன்னீர்களா? தெரியாமல் தான் சொன்னீர்களா? அறியாமை என்றால் மன்னித்து விடுகிறேன். அறிந்து அகம்பாவ வார்த்தை என்றால், இதோ இந்த வாளுக்கு மறுமொழி கூறும். சோழச் சக்கரவர்த்திகளுக்கும் எனக்கும் பலவித மனத்தாங்கல் உண்டு.



அதனால் என மகள் அவனிமுழுதுடையாளைக் காண்பதற்கு ஒரு தடவை கூடப் பழையாறைக்குச் செல்லவில்லை. சோழநாட்டுப் பட்டத்தரசியாக என் மகள் தானிருந்திருக்க வேண்டும். அந்த விஷயத்தில் ஏற்பட்ட கோபம் தணியவே இல்லை. படைகளைத் திரட்டி மன்னரைப் போருக்கு இழுக்கவும் திட்டமிட்டேன். ஆனால் ஒரு சமயம் வாரிசற்ற அவரை நினைக்கும் போது பரிதாபமாக இருக்கும். அவரது செய்கையை மறந்து மன்னித்து விடத் தோன்றும். உலகெலாம் காக்கும் எங்கள் குலதெய்வம் திருநாராயணப் பெருமாளை நான் பிரார்த்திக்காத நாளில்லை. என் பிரார்த்தனை பலித்தது. என் மகள் கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தி கிடைத்தது. ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் அந்த நல்ல செய்தி எட்டியது. என் மீதுள்ள கோபம் என் மருமகரான சோழ சக்கரவர்த்திக்கு தீரவில்லை என்பது. என் மகளைச் சந்திக்கச் சீர்வரிசைகளுடன் நான் வந்தபோது தெரிந்தது. என் மகளை - சோழ அரசியை -- காணவும் அவர் அனுமதிக்கவில்லை. என் மகள் பழையாறையில் இல்லை என்பதும் தெரிந்தது. தாங்க முடியாத கோபத்தை நான் அடக்கிக் கொண்டேன். ஆண் குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்று பெருமாளை வேண்டிக் கொண்டேன். என் பிரார்த்தனைக்கு நாராயணன் மீண்டும் செவி சாய்த்தார். ஆண் குழந்தை பிறந்த செய்தியும் பலதிங்கள் கழித்தே எனக்குத் தெரிந்தது. சக்கரவர்த்தி மீதுள்ள கோபம் பறந்தோடி விட்டது. சோழ நாட்டுக்கு வாரிசு பிறந்து விட்டான்; மலையமான் குலக் கொழுந்து ஆண் குழந்தையைப் பெற்றளித்துவிட்டாள் என்று மகிழ்ந்தேன். பொன்னும் மணியும், பட்டாடையும் சீர்வரிசையாக எடுத்துக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். ஆனால் என் மகளைப் பார்க்கமுடியவில்லை. எனதருமை குறுநில மன்னர்களே! அந்தச் சோகக் கதையை விவரிக்க விரும்பவில்லை. என் மகள் மற்றோர் ஆண் குழந்தையையும் பெற்றாள். பெற்ற பிறகு இவ்வுலகை விட்டே மறைந்து விட்டாள் என்ற செய்தியும் எனக்குப் பல நாள்கள் கழித்தே கிடைத்தது. பெற்ற மகளின் ஈமச்சடங்குக்கு அழைக்காத சோழ அரசன் ஓர் அரசனா? நேரே சந்தித்து என் கோபத்தைப் புலப்படுத்தவே இங்கு வந்தேன். உங்கள் அனைவரையும் போல் இளவரசுப் பட்டத்துக்குப் போட்டியிட அன்று. நான் சக்கரவர்த்தியுடன் வாதிடுவது பிறகு இருக்கட்டும்; சோழர்குல வாரிசாக இரு குழந்தைகள் பிறந்திருக்கும் போது நீங்கள் எல்லாம் என்ன திட்டமிடுகிறீர்கள்? உங்களுடைய பிள்ளைகளுள் ஒருவனை இளவரசராக்க அரசரிடம் வற்புறுத்தப் போகிறீர்களா? என்ன நியாயமிது? அநியாயத்தைப் பற்றிப் பேசவா நாம் இங்குக் கூடியுள்ளோம்? அதற்கு ஒரு விருந்து, இசை, நாட்டிய நிகழ்ச்சிகள்....'' மலையமானின் வார்த்தைகள் தணல் துண்டங்களாக வீழ்ந்து, அங்கு அதுவரை நிலவி வந்த இனிய சூழ்நிலையை மாற்றின.

பயங்கர அமைதி குடிகொண்டது. ஒருவரும் பேசத் துணிய வில்லை. அப்போது தான் மண்டபத்துக்குள் நுழைந்த பெருமான் நம்பிப் பல்லவரையர்,

"வாரிசுக்குப் போட்டியிட யோசனை கூறத் தங்களை எல்லாம் நான் இங்கு அழைக்கவில்லை; எனது மதிப்புக்குரிய சம்புவரையரே, கடம்பராயரே, காடவராயரே! சக்கரவர்த்திகளுக்குத் தெரியாத யோசனையையா, நாம் தெரிவிக்கப் போகிறோம்? மதிப்புக்குரிய மலையமான் மகள், சோழநாட்டுக்கு வாரிசை அளித்து விட்டுச் சென்றிருப்பது முக்காலும் உண்மை. நாளைக்கே அக்குழந்தைக்கு இளவரசுப் பட்டம் சூட்ட முடியுமா? பிஞ்சுக் குழந்தையின் தலையில் மகுடங் கவிழ்க்க முடியுமா? சொல்லுங்கள்." என்றார்.

சபை மண்டபத்தில் ஒருவரிடமிருந்தும் மறுமொழி வரவில்லை. பெருமான் நம்பியே பேசினார்.

"இரு குழந்தைகளும் பிறந்த வேளை சரியில்லை என்று கேசவசுவாமி சொல்லிவிட்டார். குழந்தைகளுக்கு ஆபத்து ஏதாவது நேரலாம் என்றும் கூறியுள்ளார்" என்று கூறும் போது மௌனமா யிருந்த மண்டபத்தில் குரல்கள் பல பொங்கி எழுந்தன.

"ஆபத்தா, யாரிடமிருந்து? உடனே சொல்லுங்கள். சோழர் குலக் கொடியைச் சிதைக்க முயல்பவர் யார்?" என்று ஒரே சமயத்தில் பலர் முழங்கினர்.

"யார் என்று இப்போதுநான் சொல்ல விரும்பவில்லை. அப்படி ஆபத்து ஏற்படுத்த முயல்பவரை நீங்கள் அடையாளம் கண்டுபிடித்துத் தக்க தண்டனை அளியுங்கள்...." என்றார் நம்பி.

"உறுதியுடன் செய்வோம், சோழர்குல வாரிசு நீடுழி வாழ்க! சோழச் சக்கரவர்த்தி நீடுழி வாழ்க!" என்று பல குரல்கள் எழுந்தன.

"பெரியவர்களே! பொறுப்புள்ளவர்களே! மிகவும் மகிழ்ச்சி! குழந்தைகள் பெரியவர்களாகும் வரை அவர்கள் சார்பில் இளவரசுப் பொறுப்பை ஏற்க யாராவது முன் வர வேண்டாமா? நீங்களே ஒன்று கூடி ஒருவரது பெயரைச் சொல்லுங்கள். அவருக்கு மண்டை கவிழ்த்து இளவரசுப் பட்டம் உடனே சூட்டுவோம். ஆனால், இளவரசராக வரப்போகிறவர் எந்த நொடியும் குழந்தைகளுக்காக ஏற்றுக் கொண்ட உரிமையை விட்டுக் கொடுக்கச் சித்தமாக இருக்கவேண்டும். எந்தக் கணத்திலும் இளவரசுப் பட்டத்தைத் துறக்கத் தயாராயிருக்கவேண்டும், யார் வருகிறீர்கள்? சொல்லுங்கள். உடனே சொல்லுங்கள். உங்கள் கருத்தை அரசரிடம் சென்று தெரிவிக்கிறேன்" என்று பெருமான் நம்பிப் பல்லவரையர் நாற்புறமும் திரும்பிக் குறுநில மன்னர்களைப் பார்த்துக் கேட்டார்.

ஒருவரிடமிருந்தும் மறுமொழி வரவில்லை. "நான் சொல்லட்டுமா? இளவரசுப் பட்டம் ஏற்றுக் கொள்ளத் தகுதியானவர் பெயரை நான் இப்போது சொல்லட்டுமா?" என்று பெருமான் நம்பி கேட்டார்.

"சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று குரல் எழுந்தன.



சற்று மௌனமாயிருந்த பெருமான் நம்பி, இளவரசுப் பட்டம் சூட்டத் தகுதியானவரின் பெயரைத் தெரிவித்தார். சிறிது நேரம் மௌனமாயிருந்த குறுநில மன்னர்கள், தங்களுக்குள் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினர். ஒருவர்க்கொருவர் மெல்லிய குரலில் பேசுவதே பெரும் ஒலியாக வியப்பும் திகைப்பும் நிறைந்த ஒலியாகச் சபை மண்டபத்தில் எதிரொலித்தது.

# 7. நெறியுடைப் பெம்மாள்

சோழநாட்டின் இளவரசராகப் பட்டம் சூட்டப் பெற இருப்பவனின் பெயரை, பெருமான் நம்பிப் பல்லவரையர் கூறிய வுடன், மற்ற குறுநில மன்னர்கள் என்ன நினைத்தனரோ, என்னவோ? திருக்கோவலூர் மலையமான் கரிய பெருமாள் முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி வீசியது.

சோழ மன்னர் இராஜராஜனுடன் அதுவரை கொண்டிருந்த பிணக்குகள் யாவும் அந்தக் கணமே மறந்து விட்டவராய், "பல்லவரையரே! தாங்கள் சொல்வது சக்கரவர்த்திகளின் கருத்தா, அல்லது தாங்களே அப்பெயரைச் சொந்தக் கருத்தாகச் சொல்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை, இல்லை. என் கருத்தைத் தெரிவிக்குமுன்பே, அரசரே, அப்பெயரைத் தெரிவித்துவிட்டார். ராஜகுரு கேசவ சுவாமியிடமும் அவர் தெரிவித்து ஆசி பெற்றுவிட்டார்" என்றவுடன் சம்புவரையர் சூள் கொட்டி, "ஒ, அந்தப் பிள்ளையின் ஜாதகத்தையும் பார்த்துச் சொல்லியிருப்பாரே?" என்று ஏளனமாகக் கூறினார்.

"அப்படிச் சொல்லாதீர்கள் சம்புவரையரே! கேசவ சுவாமியின் சக்தி உங்களுக்குத் தெரியாது. அவர் முக்காலும் உணர்ந்தவர். அவர் கூறுவது பலிக்கும். சோழநாடு அவரைக் குருவாகப் பெற்றிருப்பது நமது பாக்கியம்." என்று கரியபெருமாள் சம்புவரையருக்கு மறுமொழி கூறிவிட்டு, பெருமான் நம்பியைப் பார்த்து, "நான் இப்போதே சக்கரவர்த்திகளைச் சந்திக்க வேண்டும். இளவரசுப்பட்டம் அவர் யாருக்கு வேண்டுமானாலும் சூட்டிவிட்டுப் போகட்டும். என் பெயரர்கள் நிலை என்ன என்பதை நான் அறிந்து கொள்ள வேண்டும். திருக்கோவலூருக்கு அழைத்துச் சென்று வளர்க்கிறேன். அவர்கள் வளர்ந்து ஆளானவுடன் இந்தநாட்டை அவர்களிடம் ஒப்படைப்போம் என்ற உறுதியைப் பெற்றுக் கொண்ட பிறகு தான் நான் திருக்கோவலூர் திரும்பப் போகிறேன்" என்றார். கூறியதுடன் நில்லாமல் மற்ற குறுநில மன்னர்களைப் பார்த்து, "பெரியவர்களே! உடன் பிறந்தவர்களே! நான் புறப்படுகிறேன். எப்போதும் போல் நாம் சோழ நாட்டின் உயர்வுக்கும், வெற்றிக்கும் உழைப்போம். உறுதுணையாய் இருப்போம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். சபை கலைந்தது.

கரிய பெருமாள் பெரிய நாயகனான நரசிங்க மலாடுடையார் மலையமான் நேருக்கு நேர் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தார்.

தங்கத் தாம்பாளங்களில் ஆபரணங்கள், பட்டாடைகள், முக்கனிகள் நிறைந்திருக்க அவற்றை அரசரின் முன்பு வைத்துவிட்டு வணங்கி நின்ற காட்சி மாமனாரும் மருமகனும் சந்திப்பதுபோல் தோன்றவில்லை. மும்முடிச் சோழ மண்டலத்து அதிபரும், குலோத்துங்க சோழரின் பெயரரும், பாண்டியரும் சேரரும் இரட்டர்களும் கங்கர்களும் மற்றும் குறுநில மன்னர்களும் அடிபணிந்து நிற்கும் சோழ சக்கரவர்த்தியை ஒரு குறுநில மன்னர் சந்தித்துத் திறையளித்து வணங்குவது போலிருந்தது.

இராஜராஜன் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. அவர் கண்கள் கலங்கியிருந்தன. மஞ்சத்திலிருந்து மெல்ல எழுந்து "மாமா! இதெல்லாம் என்ன - தாங்கள் திறைப் பொருளுடன் வந்துஎன்னை வணங்கலாமா? அபசாரம், அபசாரம்" என்று அவர் மலையமானின் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டார்.

அந்த அழுத்தத்தில் எத்தனை எத்தனையோ அர்த்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பேசுவதற்குச் சொற்கள் வந்து நிற்கவில்லை. கைவிரல்கள் ஒன்றோடொன்று பேசின. விழிகள் பேசிக் கொண்டன. துடிக்கும் உதடுகள் பேசிக் கொண்டன. இதயங்கள் இரண்டு இதுவரை சந்தித்துப் பேசாத நாள்களின் சம்பவங்கள் அனைத்தையும் பேசிக் கொண்டன. இருவர் விழிகளினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடின.

"மாமா!" என்று மீண்டும் மன்னர் விளித்தார். "திருக்கோவலூரில் தங்கள் இளைய மகள் நலமா? தங்கள் இளைய சகோதரர் நலமா? திரிவிக்கிரம நாராயணர் கோயிலில் புதிய திருப்பணிகள் ஏதாவது செய்தீர்களா?" என்று குசலம் விசாரித்து, நாட்டு வளப்பம் விசாரித்து, மெல்ல மெல்ல இதயத்தில் படிந்துள்ள குரோத உணர்ச்சியைத் துடைத்துக் கொள்ள முயன்றார்.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. திடீரெனக் கரியபெருமாள், "சோழர்குல வாரிசுகளாகப் பிறந்துள்ள என் பெயரர்களை நான் பார்க்க வேண்டாமா? அவர்கள் எங்கே? உடனே நான் பார்க்க ஏற்பாடு செய்யுங்கள். குழந்தைகளை விட்டுப் பிரிந்து ஒருகணங்கூட நான் இருக்க மாட்டேன்!" என்று ஆவலுடன் கேட்டார்.

மன்னர் மறுமொழி ஏதும் பேசவில்லை.

"குழந்தைகள் எங்கே இருக்கின்றனர்? கங்கை கொண்ட சோழபுரத்தில் இருப்பதாக அறிந்தேன். புறப்படுங்கள். நாம் இருவரும் போய்ப் பார்த்து விட்டு வருவோம். குழந்தைகளை நான் திருக்கோவ லூருக்கு அழைத்துச் செல்கிறேன். குழந்தைகளைப் பார்த்தால் என் இளைய மகள் சந்தோஷப் படுவாள். மலையமான் மகள் பெற்றெடுத்த அரச குமாரர்களைக் கண்டு எங்கள் நாடே ஆனந்தப்படும்" என்றார்.



மன்னர் பேசவில்லை. அருகிலிருந்த பெருமான் நம்பியும் மன்னரின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஏதும் பேசவில்லை.

"ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? தவப் புதல்வர்களைக் காணவேண்டும் என்ற ஆசை தங்களுக்கு இல்லையா? அவர்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற ஆவல் தங்களுக்கு இல்லையா? என்னிடம் ஒப்படையுங்கள். என் மகள் வளர்ப்பாள். அவளுடைய சகோதரியின் குழந்தைகளை தன் குழந்தைகள் போல் வளர்ப்பாள்" என்று பரபரப்புடன் கேட்டார்.

பெருமான் நம்பி மெல்லச் சிரித்தார். அப்போதும் அரசர் பேசவில்லை.

"இதில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது நம்பி?" என்று எரிச்சலுடன் கேட்டார் மலையமான்.

"தங்கள் இளைய மகளுக்கு எப்போது திருமணம் செய்தீர்கள்? எங்களுக்கெல்லாம் சொல்லவில்லையே?" என்று கேட்டார் நம்பி.

மலையமான் திடுக்கிட்டு, "திருமணமா, என் மகளுக்கா? நான் ஏதோ கேட்கிறேன். நீங்கள் ஏதோ சொல்கிறீர்கள். பெருமான் நம்பி! என்னிடம் சிறுபிள்ளை போல் விளையாடுகிறீரா?" என்று கேட்டார் கோபம் மிகுந்து.

"மலையமான் மகளுக்குத் திருமணமாகிக் குழந்தைகள் பிறந்திருந்தால் அல்லவா இந்தக் குழந்தைகளைத் தன் குழந்தைகள் போல் வளர்க்க முடியும்? அதை நினைத்த போது சிரிப்பு வந்தது" என்றார் நம்பி.

நம்பியின் பேச்சியிலுள்ள நகைச்சுவையை அப்போது தான் புரிந்து கொண்ட மலையமான் மீண்டும் பேசத் தொடங்குவதற்குள், நம்பி சற்று அழுத்தமான குரலில், "நரசிங்க மலாடுடையாரே! கங்கை கொண்ட சோழபுரத்தில் குழந்தைகள் இருவரும் வாடி வருவதை அறிந்தேன். பாலூட்டி வளர்க்கத் தகுந்த தாதியை ஏற்பாடு செய்து விட்டேன். குழந்தைகளை வளர்க்கும் பிரச்னை தான் இருக்கட்டும். அதைவிட எந்த நேரத்திலும் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. சதிகாரர்களைக் கண்டுபிடித்து அவர்களின் திட்டங்களை முறியடிக்கும் வரை எனக்கு உறக்கமில்லை..." என்றார்.

"அதனால் தான் சொல்கிறேன், குழந்தைகளைத் திருக்கோவ லூருக்கு எடுத்துச் சென்று வளர்க்கிறேன் என்று. சிறு துரும்பும் குழந்தைகள் மீது படவிடுவேனா?" என்றார் கரியபெருமாள்.

இப்போது இராஜராஜனே பேசினார். "நரசிம்ம மலாடுடையாரே! சோழர் குல விளக்குகளின் மீது தங்களுக்குள்ள அன்பை அறிந்து மகிழ்கிறேன். அவர்களுக்குத் தாங்கள் பாட்டனார். தாங்கள் எப்போது வேண்டுமானாலும் அவர்களைப் பார்க்கலாம். கொஞ்சி மகிழலாம். ஆனால், நான்.... நான்.... குழந்தைகளைப் பார்க்கவே கூடாது. மலாடுடையாரே, நான் பார்க்கவே கூடாது" என்று கூறி, மன்னர் சிறு குழந்தைபோல் விம்மினார்.

பெருமான் நம்பி இப்போது குறுக்கிட்டு, மலையமானிடம் கேசவசுவாமி எச்சரித்துள்ளவற்றை எடுத்துக் கூறி, குழந்தைகளுக்கு எட்டாண்டுகள் வரை போதாத காலம் என்றும், மிகவும் இரகசியமான இடத்தில் வளர்க்க வேண்டும் என்றும் மன்னரும் குழந்தைகளைச் சந்திக்கக் கூடாது என்றும் தெரிவித்தார்.

மலையமான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் வேதனை ததும்பி நின்றது. திடீரென்று அவர், ''குழந்தை களுக்குப் போதாத காலம்; மறைந்துவாழ வேண்டும் என்பன போன்றவற்றை நீங்களுமா நம்புகிறீர்கள்? தோள் வலியும், வாள் பலமும் இருக்கும் போது எந்தச் சதிகாரர்களால் என்ன செய்ய முடியும் என நினைக்கிறீர்கள்? அரசே! எழுந்திருங்கள். குழந்தைகளைப் பார்க்கப் போகலாம் வாருங்கள். குழந்தைகளுள் மூத்தவனை உடனே இளவரசாக்குங்கள்'' என்று உரத்த குரலில் கூறினார்.

பெருமான் நம்பி மிக அமைதியான குரலில், ''மலாடுடையாரே! கேசவ சுவாமிகளின் சொற்களை நம்பாதிருக்க முடியாது. தங்களைப் போன்று சுவாமிகளின் பேச்சை நம்பாததால் மன்னர் கண்கூடாகப் பல தொல்லைகளை அனுபவித்து விட்டார். சோழ நாட்டரசியை, குழந்தைகளின் தாயை, தங்கள் மகளை இழந்ததே கேசவ சுவாமிகளின் பேச்சை அலட்சியப்படுத்தியதால் தான்...'' என்றார்.

மலாடுடையார் தலையை அசைத்தார். ''கேசவ சுவாமியிடம் எனக்குள்ள நம்பிக்கையும், பக்தியும் மற்ற எவருக்கும் குறைந்ததன்று. எட்டாண்டுகளுக்குப் பிறகாவது பட்டத்துரிமை அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதற்கு உறுதி என்ன?'' - சற்று கோபமாகவே கேட்டார்.

''நான் உறுதி கூறுகிறேன். இந்த வாளின் சாட்சியாக உறுதி கூறுகிறேன். அதனால் தான் படைத்தலைவர் பொறுப்போடு, முதல் அமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருக்கிறேன். என்னை நம்பலாம். நான் சொன்ன சொல் தவறினால், சோழநாட்டில் எல்லாச் சிற்றரசர்களும் சேர்ந்து முச்சந்தியில் நிறுத்தி எனக்கு தண்டனையளிக்கலாம்....'' என்று உருக்கமாகப் பேசினார் பெருமான் நம்பி. மலாடுடையார் மௌனம் சாதித்தவாறு அமர்ந்திருந்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவரைப்போல, மன்னரை நோக்கி, ''தங்கள் இளவரசுப் பட்டத்துக்குத் தேர்ந்தெடுத்திருப்பவரை நான் சந்திக்க வேண்டும். அதற்காவது வழி செய்வீர்களா?'' என்று கேட்டார்.

இராஜராஜன் முகத்தில் ஒளி பிறந்தது. ''மலாடுடையாரே! இளவரசுப் பட்டத்துக்கு நான் தேர்ந்தெடுப்பவன் வேறு அந்நியன் அல்லன். எனது சொந்த உடன் பிறந்தாள் அறவளர்ச் செல்வியின் மகன் தான்...'' என்று கூறும் போது மலாடுடையார், உற்சாகம் நிறைந்த குரலில், ''யார் நெறியுடைப் பெம்மாளின் மகனா? வளர்ந்த மகன் அவளுக்கு இருக்கிறானா?'' என்று தம் வியப்பைத் தெரிவித்தார்.



இராஜராஜ சோழதேவரின் அருமைச் சகோதரி நெறியுடைப் பெம்மாள் எனும் அறம்வளர்ச் செல்வி. தன் சகோதரியின் மீது மன்னருக்கு மிகுந்த அன்புண்டு. அழகும், தெய்வபக்தியும் இணையப் பெற்ற அவளைச் சேர நாட்டுப் படைத்தலைவனுக்கு மணம் செய்து கொடுத்தார். சிறிது காலம் அவர்கள் இன்பமாக வாழ்ந்தனர். வல்லபன் எனும் ஆண் குழந்தை அவர்களுக்குப் பிறந்தபிறகு, அவள் கணவன் சென்ற இடம் தெரியவில்லை. அரச குடும்பத்தில் பிறந்தவள் தெய்வபக்தி நிறைந்தவளாக இருந்ததால், வாழ்க்கைச் சோதனைகளை இறைவன் திருவிளையாடல் என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தன் மகன் வல்லபனை அறிவுடையவனாகவும், ஆற்றலுடையவனாகவும் வளர்ப்பதில் கவனம் செலுத்தினாள். வேங்கியில் உள்ள சிறிய பாட்டனாரிடம் சில காலமும், கங்கை கொண்ட சோழபுரத்தில் சில காலமுமாக வல்லபன் வளர்ந்து வந்தான்.

''நெறியுடைப் பெம்மாள் எங்கே இருக்கிறாள்? நான் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தது. சேரநாட்டுக்குத் திருமணமாகிச் சென்ற பிறகு நான் அவளைப் பார்க்கவில்லை'' என்றார் மலாடுடையார்.

''நாமிருவருமே கங்கை கொண்ட சோழபுரம் செல்வோம். நெறியுடைப் பெம்மாளைச் சந்திப்போம்'' என்று கூறினார் நம்பி.

''உடனே புறப்படுங்கள். இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு ஏற்ற நாளைக் கேசவ சுவாமி கணித்துக் கொடுத்திருக்கிறார். என் சகோதரியைச் சந்தியுங்கள். பழையாறைக்கு வருமாறு வல்லபனுக்குச் செய்தி அனுப்பச் சொல்லுங்கள். அவளையும் உடனே இங்கு வரச் சொல்லுங்கள்'' என்று இராஜராஜன் கூறினார்.

கங்கை கொண்ட சோழபுரத்து சோழ கங்கப் பேரேரிக்கருகே, தோப்பின் நடுவே பர்ணசாலை போன்று அமைந்திருந்த குடிலில் இராஜராஜனின் சகோதரி அறம்வளர் செல்வி, சிவபூஜை செய்வதிலும், பசுக்களைப் பராமரிப்பதிலும் தன் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் குடிலின் வாயிலில் இரண்டு வெண் புரவிகள் வந்துநின்றன. அதன் மீது கம்பீரமாக அமர்ந்திருந்த பெருமான் நம்பிப் பல்லவரையரும், கரிய பெருமாள் நரசிங்க மலாடுடையாரும் இறங்கிக் குடிலுக்குள் நுழைந்தனர்.

குடிலின் ஒருபுறத்தே நடராசர் படிமம் மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மலரின் மணத்துடன் தூப மணமும் கலந்து அந்த இடம் திருக்கோயிலொன்றின் கருவறையை நினைவுபடுத்தின. நடராசர் படிமத்தின் முன் நெறியுடை பெம்மாள் அறச்செல்வ அமர்ந்து தன்னை மறந்து தியானித்துக் கொண்டிருந்தாள். அவள் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

''உலகமெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனே, நிலவு உலா விடும் நீர்மலி வேணியனே, அலகில் சோதியனே, அம்பலத்தாடும் எம் பிரானே, உன் மலர்ச் சிலம்படியல்லாது மற்று வேறொன்றும் நான் நினைப்பதில்லை. என்றும்

உன்னை மறவாதிருக்கும் என் வாழ்வில பல சோதனைகளை உண்டாக்கினாய். எனக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளையெல்லாம் உன்னடியை நினைத்தவாறு தாங்கிக் கொள்வேன். ஆனால், என் மகன், அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து உயர்பதவியை அடைந்து வாழ வேண்டும் என்று நான் பல காலமாக வேண்டுவதை மட்டும் நிறைவேற்றாது இருந்து விடாதே. என் மகனுக்காகவே நான் உயிர் வாழ்கிறேன். அவனுக்கு வலிமையைக் கொடு. உயர்மதியைக் கொடு; உயர்ந்த வாழ்வைக் கொடு'' என்று மனமுருக வேண்டி, நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டி நிமிர்ந்த அவள் நம்பியையும் மலாடுடையாரையும் கண்டு திகைத்தாள்.

கற்பூரத் தட்டை அவர்களிடமும் நீட்டினாள் செல்வி. வந்திருப்பவர்கள் இன்னார் என்று அவள் அறிந்து கொள்ள முடியவில்லை.

''நல்ல தருணத்தில் தான் வந்திருக்கிறோம். தாங்கள் வேண்டிக் கொண்டவற்றை நிறைவேற்ற அம்பலவாணனே அனுப்பியது போல் வந்திருக்கிறோம்'' என்றார் நம்பி.

நெறியுடை பெம்மாள் இப்போது அவர்களை அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள். அவளிடம் பரபரப்பு அதிகமாகியது. ''வாருங்கள், வாருங்கள்'' என்று கூற முயன்றபோது அவளுக்குச் சொற்கள் வரவில்லை.

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் இதுவரை எட்டிப் பார்க்காத அந்தக் குடிலுக்கு முதலமைச்சர், மலையமானுடன் வந்திருக்கிறார் என்றால் அதில் ஏதோ விசேஷமிருக்கிறது என்று அவள் எண்ணினாள்.

''இந்தக் குடில் பல ஆண்டுகளுக்குப் பிறகு பாக்கியம் செய்திருக்கிறது. இந்தக் குடிசையிலிருந்து ஆடவல்லானை விடாது வேண்டிக் கொண்ட தங்கள் பிரார்த்தனை பலிக்கும் காலம் எதிரே நிற்கிறது'' என்று நம்பி கூறினார்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று திகைப்புடன் கேட்டாள் செல்வி. அவர்கள் ஏதோ நல்ல செய்தியைக் கூற வந்திருக்கிறார்கள் என்று அவளது உள்ளுணர்வு உணர்த்தியது. என்ன செய்தியாக இருக்கக் கூடும்?

''மன்னருக்கு என் நினைவு இப்போது தான் வந்திருக்கலாம். என்னைப் பழையாறைக்கு அழைக்கலாம், மாளிகையில் வாழுமாறு வற்புறுத்தலாம். அல்லது, பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு என்னைப் பிரிந்து சென்ற கணவரைப் பற்றிய செய்தி ஏதாவது கிடைத்து அதைத் தெரிவிக்கப் பெருமான் நம்பி வந்திருக்கலாம்'' என்று எண்ணினாள்.

''தேவி! தங்கள் பிரார்த்தனை பலிக்கும் காலம் வந்து விட்டது'' என்று திரும்பவும் ஒரு முறை அழுத்தமான குரலில் கூறினார் நம்பி.

சொல்ல வந்ததை உடனே சொல்லாமல் தாமதப்படுத்துகிறாரே என்ற பரபரப்பு மிக, ''பெருமான் நம்பி அவர்களே, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதை என்னால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை. நானே மனத்தில் கற்பனை செய்து வந்த காலம் போய்விட்டது. எல்லாம் அவன் செயல் என்று அவனிடம் ஒப்படைத்து விட்டேன். என் மகன் வல்லபன் கங்காபுரியும், வேங்கியுமாக அலைந்து கொண்டிருக்கிறான். வேங்கியில் அவனுக்கு நியாயமாகச் சேரவேண்டிய அரசுரிமைக்காக இப்போது பாடுபடு கிறான். அவனுடைய இலட்சியம் ஈடேற வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை.'' என்றாள் செல்வி.



மலாடுடையார் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''தங்கள் பிரார்த்தனை பலித்துவிட்டது என்று நம்பி இப்போது கூறியதைக் கேட்கவில்லையா? தங்கள் மகன் எதிர்பாராமலேயே அரச பதவி அவனைத் தேடி வந்திருக்கிறது'' என்றார்.

செல்வி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளது விழிகள், ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்காமல் கேட்டன.

''தேவி! நாங்கள் இருவரும் சக்கரவர்த்தி அனுப்பி இங்கு வந்திருக் கிறோம். தங்களை உடனே பழையாறைக்கு சக்கரவர்த்தி அழைத்து வரச் சொன்னார்'' என்றார் நம்பி. இன்னும் அவர் விஷயத்தை முழுமையாகச் சொல்லவில்லை.

''நான் நினைத்தேன்; என் சகோதரருக்கு என் நினைவு வந்து விட்டது. பாவம் அவர் தான் என்ன செய்வார்? அன்புக்குரிய அவனி முழுதுடையாளைப் பறி கொடுத்த துக்கம் இன்னும் மாறியிருக்காது. சொந்தச் சகோதரனின் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளப் பழையாறைக்குச் சென்றேன். என்னை அங்கே யார் இலட்சியம் செய்கிறார்கள்? துயரம் நெஞ்சையடைக்கத் திரும்பி வந்து விட்டேன். இப்போது அரசர் எதற்காக என்னை அழைக்கிறார்? பெருமான் நம்பி அவர்களே! என் அமைதியைக் கெடுக்காதீர்கள்...'' என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

''நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. பெற்ற மகளின் முகத்தைக் கூடப் பார்க்காத மலாடுடையாருக்கு நேர்ந்த துயரத்தை விட மற்ற ஒருவருக்கு நேரப்போமா? தன் பெயரர்களைப் பார்க்க முடியாமல் தவித்து நிற்கிறாரே, அதைவிட வேதனை தரும் நிகழ்ச்சி வேறு வேண்டுமா?'' - நம்பி கேட்டார்.

செல்வி விழிகளை மெல்லத் துடைத்துக் கொண்டாள். ''சோழர் குலம் தழைக்க வாரிசை அளித்துச் சென்றாள், மகராசி மலையமான் மகள். ஒன்றுக்கு இரண்டு குழந்தைகள்! ஒரு வேளை குழந்தைகளை வளர்க்கத் தான் என்னை மன்னர் அழைக்கிறாரோ?'' என்று கேட்டாள்.

''தேவி! அதற்கும் மேல் - சோழநாட்டை வளர்க்கத் தங்களை மன்னர் அழைக்கிறார்'' என்றார் நம்பி.

செல்வியிடமிருந்து மெல்லிய நகைப்பொலி பிறந்தது.

''நான் சோழ நாட்டை வளர்ப்பதா? என் அருமைச் சகோதரரை விடப் பொன்னி பாயும் வளநாட்டைக் கட்டிக்காக்க வேறு ஒருவரால் முடியுமா?

திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் என்ற மகத்தான மனிதர் சோழ நாட்டின் தூணாக இருந்து காத்துநிற்கும் போது நான் - ஒரு பெண் என்ன செய்ய முடியும்? சோழநாட்டின் குறுநில மன்னர்கள், மலாடுடையாரைப் போன்றவர்கள் இருக்கும் போது, என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து மன்னர் அழைக்கிறாரா?'' என்று செல்வி கேட்டாள்.

''ஆமாம், தேவி! மன்னருக்கு உடல்நலக் குறைவு அவ்வப்போது ஏற்படுகிறது. சமீபத்தில் மயக்கமடைந்து வீழ்ந்து, பலநாள்கள் படுத்த படுக்கையாய்க் கிடந்தார்...'' என்று பெருமான் நம்பி கூறவும், செல்வி திடுக்கிட்டு, ''ஆ?'' என்று பயத்தால் கூவினாள்.

''மன்னரை மனவேதனை - உடல் வேதனை இரண்டும் வாட்டுகின்றன. தக்கவருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது...'' என்று நம்பி கூறிவரும் போது, ''பிறந்த குழந்தைகளுக்கு எப்படி இளவரசுப் பட்டம் சூட்டுவது?'' என்று செல்வி சந்தேகத்தை எழுப்பினாள்.

''ஆமாம், குழந்தைகளுள் ஒருவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவது இயலாத காரியம்.''

''சக்கரவர்த்தி வேறு யாருக்குப் பட்டம் சூட்டப் போகிறார்'' என்று செல்வி ஆவலுடன் கேட்டாள்.

''அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம், தங்கள் உதவியை நாடி. சோழநாட்டின் வருங்காலம் தங்களிடமிருக்கிறது. மன்னர் தங்களை அழைத்து வரச் சொன்னது அதற்காகத் தான்'' என்றார்.

செல்வி ஒரு கணம் மௌனமாயிருந்தாள். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தங்களுடைய திருக்குமாரன் வல்லபனுக்குச் சோழநாட்டு இளவரசுப் பட்டத்தைச் சூட்ட விரும்புகிறார் மன்னர். தங்கள் சம்மதத்தைக் கேட்கவும், தங்களிடம் உறுதிமொழி ஒன்றைப் பெறவுமே தங்களைச் சந்திக்க மன்னர் விரும்புகிறார்'' என்று நம்பி கூறினார்.

நெறியுடைப் பெம்மாள் எங்கோ வானவீதியில் பறப்பதைப் போல உணர்ந்தாள். சோழநாட்டின் இளவரசுப் பட்டமா? என் மகனுக்கா? நான் கேட்பது உண்மை தானா? தன்னெதிரே பெருமான் நம்பி நிற்பதும், மலாடுடையார் நிற்பதும் உண்மை தானா?

விழிகளை ஒரு முறை கசக்கிக் கொண்டாள். திருச்சிற்றம் பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையரும், மலாடுடையாரும் அங்கே நிற்பது உண்மை. அவர்கள் சொல்வதும் உண்மை.

'கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசனாவதற்கு என் மகன் முயல்வது சரியா; சோழநாட்டின் இளவரசனாக, அமர்வது சரியா?' - செல்வி சிந்தித்தாள்.



''தேவி! நாம் இங்கே அதிகம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. அரசப் பல்லக்கு இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வரும். தாங்கள் பழையாறைக்குப் பயணமாகிறீர்கள். அங்கே சென்றவுடன் இளவரசனின் தாய் என்ற மதிப்புடன் வரவேற்கப்படுவீர்கள். ஆனால், தாங்கள் உறுதியாக ஒரு முடிவுடன் செல்ல வேண்டும். மன்னருக்குத் தாங்கள் ஓர் உறுதிமொழி அளிக்கவேண்டும். அதிலிருந்து என்றும் மாறக்கூடாது என்பதற்குத் தங்கள் மகன் சார்பில் உறுதி தர வேண்டும்'' என்றார் நம்பி.

''ஆம்; தங்கள் உறுதிமொழியை நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பேன். அதிலிருந்து தாங்கள் சிறிதும் மாறக்கூடாது'' என்றார் மலாடுடையார்.

''நான் என்ன செய்யவேண்டும்? என்ன உறுதிமொழி கொடுக்க வேண்டும்? நான் கொடுக்கும் உறுதிமொழியை என் மகன் ஒப்புக் கொள்வான் என்பது என்ன நிச்சயம்? பெயருக்கு ஏற்ப அவன் எதிரிலிப் பெருமாள். கட்டுப்படாதவன். இருந்தாலும் சொல்லுங்கள். நான் என்ன உறுதியோடு மன்னரிடம் செல்லவேண்டும்?'' என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டாள்.

''தங்கள் மகன் எதிரிலிப் பெருமாள், தான் ஏற்கப் போகும் பதவியை எந்தக் கணமும் விட்டு விடத் தயாராயிருக்க வேண்டும். அப்படித் தங்கள் மகன் ஒப்புக் கொள்வானா? தாங்கள் சம்மதிப்பீர் களா? ஒரு முடிவுடன் தாங்கள் மன்னரைச் சந்திக்கச் செல்லுங்கள்'' என்றார் நம்பி.

நெறியுடைப் பெம்மாள் என்று அழைக்கப்படும் அறம்வளர் செல்வி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். இப்படி ஒரு கட்டுப் பாட்டுடன் தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் தேவையா? என்ற கேள்வி செல்வியின் உள்ளத்தில் எழுந்தது.

## 8. கண்டறியாதன கண்டாள்!

''உங்களைத் தேடிவந்தேன்'' என்று பெரும் பொய்யைக் கூறியது கேட்டு அல்லியின் கணவன் கோவிந்தன் திடுக்கிட்டான். தான் எதற்கு வந்து மாளிகை வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தால் கணவன் கோபங் கொள்வானே என்ற அச்சமும் அல்லியின் மனத்தில் எழாமலில்லை. கோவிந்தனும் அல்லியும் என்ன சமாதானம் சொல்வது என்று ஒருவருக்கொருவர் யோசித்துக் கொண்டிருந்தனர்.

கோவிந்தனே முதலில் பேச்சை ஆரம்பித்தான். ''அல்லி! என்னைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்? வழி தெரிந்ததா?'' என்று குரலில் ஆசை தவழக் கேட்டான். ''ஏன் வந்தாய்?'' என்று கேட்கவில்லை.

அல்லிக்குக் கோபம் வந்தது. ''நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டாள். என்ன சொல்வது என்று ஒரு கணம் திகைத்தான் கோவிந்தன்.

திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் என்ற மகத்தான மனிதர் சோழ நாட்டின் தூணாக இருந்து காத்துநிற்கும் போது நான் - ஒரு பெண் என்ன செய்ய முடியும்? சோழநாட்டின் குறுநில மன்னர்கள், மலாடுடையாரைப் போன்றவர்கள் இருக்கும் போது, என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து மன்னர் அழைக்கிறாரா?'' என்று செல்வி கேட்டாள்.

''ஆமாம், தேவி! மன்னருக்கு உடல்நலக் குறைவு அவ்வப்போது ஏற்படுகிறது. சமீபத்தில் மயக்கமடைந்து வீழ்ந்து, பலநாள்கள் படுத்த படுக்கையாய்க் கிடந்தார்...'' என்று பெருமான் நம்பி கூறவும், செல்வி திடுக்கிட்டு, ''ஆ?'' என்று பயத்தால் கூவினாள்.

''மன்னரை மனவேதனை - உடல் வேதனை இரண்டும் வாட்டுகின்றன. தக்கவருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது...'' என்று நம்பி கூறிவரும் போது, ''பிறந்த குழந்தைகளுக்கு எப்படி இளவரசுப் பட்டம் சூட்டுவது?'' என்று செல்வி சந்தேகத்தை எழுப்பினாள்.

''ஆமாம், குழந்தைகளுள் ஒருவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவது இயலாத காரியம்.''

''சக்கரவர்த்தி வேறு யாருக்குப் பட்டம் சூட்டப் போகிறார்'' என்று செல்வி ஆவலுடன் கேட்டாள்.

''அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம், தங்கள் உதவியை நாடி. சோழநாட்டின் வருங்காலம் தங்களிடமிருக்கிறது. மன்னர் தங்களை அழைத்து வரச் சொன்னது அதற்காகத் தான்'' என்றார்.

செல்வி ஒரு கணம் மௌனமாயிருந்தாள். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தங்களுடைய திருக்குமாரன் வல்லபனுக்குச் சோழநாட்டு இளவரசுப் பட்டத்தைச் சூட்ட விரும்புகிறார் மன்னர். தங்கள் சம்மதத்தைக் கேட்கவும், தங்களிடம் உறுதிமொழி ஒன்றைப் பெறவுமே தங்களைச் சந்திக்க மன்னர் விரும்புகிறார்'' என்று நம்பி கூறினார்.

நெறியுடைப் பெம்மாள் எங்கோ வானவீதியில் பறப்பதைப் போல உணர்ந்தாள். சோழநாட்டின் இளவரசுப் பட்டமா? என் மகனுக்கா? நான் கேட்பது உண்மை தானா? தன்னெதிரே பெருமான் நம்பி நிற்பதும், மலாடுடையார் நிற்பதும் உண்மை தானா?

விழிகளை ஒரு முறை கசக்கிக் கொண்டாள். திருச்சிற்றம் பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையரும், மலாடுடையாரும் அங்கே நிற்பது உண்மை. அவர்கள் சொல்வதும் உண்மை.

'கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசனாவதற்கு என் மகன் முயல்வது சரியா; சோழநாட்டின் இளவரசனாக, அமர்வது சரியா?' - செல்வி சிந்தித்தாள்.



''தேவி! நாம் இங்கே அதிகம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. அரசப் பல்லக்கு இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வரும். தாங்கள் பழையாறைக்குப் பயணமாகிறீர்கள். அங்கே சென்றவுடன் இளவரசனின் தாய் என்ற மதிப்புடன் வரவேற்கப்படுவீர்கள். ஆனால், தாங்கள் உறுதியாக ஒரு முடிவுடன் செல்ல வேண்டும். மன்னருக்குத் தாங்கள் ஓர் உறுதிமொழி அளிக்கவேண்டும். அதிலிருந்து என்றும் மாறக்கூடாது என்பதற்குத் தங்கள் மகன் சார்பில் உறுதி தர வேண்டும்'' என்றார் நம்பி.

''ஆம்; தங்கள் உறுதிமொழியை நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பேன். அதிலிருந்து தாங்கள் சிறிதும் மாறக்கூடாது'' என்றார் மலாடுடையார்.

''நான் என்ன செய்யவேண்டும்? என்ன உறுதிமொழி கொடுக்க வேண்டும்? நான் கொடுக்கும் உறுதிமொழியை என் மகன் ஒப்புக் கொள்வான் என்பது என்ன நிச்சயம்? பெயருக்கு ஏற்ப அவன் எதிரிலிப் பெருமான். கட்டுப்படாதவன். இருந்தாலும் சொல்லுங்கள். நான் என்ன உறுதியோடு மன்னரிடம் செல்லவேண்டும்?'' என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டாள்.

''தங்கள் மகன் எதிரிலிப் பெருமான், தான் ஏற்கப் போகும் பதவியை எந்தக் கணமும் விட்டு விடத் தயாராயிருக்க வேண்டும். அப்படித் தங்கள் மகன் ஒப்புக் கொள்வானா? தாங்கள் சம்மதிப்பீர் களா? ஒரு முடிவுடன் தாங்கள் மன்னரைச் சந்திக்கச் செல்லுங்கள்'' என்றார் நம்பி.

நெறியுடைப் பெம்மாள் என்று அழைக்கப்படும் அறம்வளர் செல்வி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். இப்படி ஒரு கட்டுப் பாட்டுடன் தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் தேவையா? என்ற கேள்வி செல்வியின் உள்ளத்தில் எழுந்தது.

## 8. கண்டறியாதன கண்டாள்!

''உங்களைத் தேடிவந்தேன்'' என்று பெரும் பொய்யைக் கூறியது கேட்டு அல்லியின் கணவன் கோவிந்தன் திடுக்கிட்டான். தான் எதற்கு வந்து மாளிகை வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தால் கணவன் கோபங் கொள்வானே என்ற அச்சமும் அல்லியின் மனத்தில் எழாமலில்லை. கோவிந்தனும் அல்லியும் என்ன சமாதானம் சொல்வது என்று ஒருவருக்கொருவர் யோசித்துக் கொண்டிருந்தனர்.

கோவிந்தனே முதலில் பேச்சை ஆரம்பித்தான். ''அல்லி! என்னைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்? வழி தெரிந்ததா?'' என்று குரலில் ஆசை தவழக் கேட்டான். ''ஏன் வந்தாய்?'' என்று கேட்கவில்லை.

அல்லிக்குக் கோபம் வந்தது. ''நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டாள். என்ன சொல்வது என்று ஒரு கணம் திகைத்தான் கோவிந்தன்.

''குளிப்பதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றேனா? அங்கு என்னைத் தேடி மல்லப்பதேவனின் அந்தரங்க ஆட்கள் வந்து விட்டனர். உடனே வருமாறு என்னை வற்புறுத்தினர். மாற்றுடை கூட எடுத்துக் கொள்ளவில்லை. உன்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டேன்'' என்று மெல்லச் சிரித்தவாறு கூறினான். பிறகு, ''நான் இங்கு வந்திருப்பேனென்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று இவன் கேட்ட போது அசட்டுத்தனம் அதில் ஒளி வீசியது.

''எனக்குத் தெரியாதா? உங்கள் நடவடிக்கைகள் எனக்குப் புரிந்து விட்டன. உங்கள் துரோகச் செயலுக்கு எல்லையே கிடையாதா?'' என்று அல்லி சீறினாள்.

''என்ன துரோகம் செய்துவிட்டேன்?'' - என்று அவளை எரித்து விடுபவன் போல் பார்த்து அவன் கேட்டான்.

''இதோ இங்கே வந்திருக்கிறீர்களே இதுவும் துரோகச் செயல் தான்'' என்றாள் அல்லி.

''இது எப்படித் துரோகம் ஆகும்? என் கடமையைச் செய்யத்தான் வந்திருக்கிறேன்.''

''எது கடமை?''

''என் கடமை எது, என்ன என்று நீ கேட்பது சரியில்லை. ராஜாங்கத்தில் வேலை செய்பவன், மேலதிகாரிகளின் உத்தரவுப்படி நடப்பது கடமை.''

''உங்கள் மேலதிகாரி படைத்தலைவர். அவர் சொல்படி நடக்கிறீர்களா? உரிமை அற்ற ஒருவர் அரசருக்குத் துரோகம் செய்யப் பார்க்கிறாரே, அவர் சொல்படித் தானே நடக்கிறீர்கள்?'' - அல்லியின் சொற்கள் அழுத்தம் திருத்தமாகப்பாய்ந்தன.

அல்லியின் பேச்சு அவனுக்குத் திகைப்பை அளித்தது. இவ்வளவு திறமையுடன் பேச அல்லி எப்போது கற்றுக் கொண்டாள்? அவள் தன்னைத் தேடி வரவில்லை என்பதை அ;வனுடைய உள்ளுணர்வு கூறியது.

''குடிலை விட்டு வேறு எங்கும் சென்றறியாத நீ இங்கு எப்படி வந்தாய்?'' என்று கோவிந்தன் கேட்டான்.

''மாட்டு வண்டியில் மிக்க வசதியுடன் வந்தேன்'' என்றாள் அல்லி.

''வந்தாய். என்னை எங்கே தேட நினைத்தாய்?''

''நகரம் முழுமையும், துரோகிக் கூட்டம் எங்கிருக்கிறதோ அங்கெல்லாம்.''

''அப்படியென்றால் மாளிகையின் வாசலில் ஏன் நிற்கிறாய்?''

''மாளிகையில் நீங்கள் இருப்பீர்கள் என்று நினைத்தேன்.'' அல்லி இவ்வாறு கூறியவுடன், கோவிந்தன் திடுக்கிட்டான். எனினும் வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல், ''சரி, அப்படியென்றால் மாளிகையின் வெளியே ஏன் நிற்கிறாய்?'' என்று கேட்டான்.



அல்லிக்கு எரிச்சல் வந்தது. ''நீங்கள் உள்ளே இருப்பீர்கள் என்று நான நினைக்கவில்லை. ஆனால் அந்தக் குழந்தைகள் இருவரும் உள்ளே இருக்கின்றனர். நான் அவர்களைப் பார்த்தாக வேண்டும். பொழுது விடிந்து இவ்வளவு நேரமாகி விட்டது. குழந்தைகள் துடித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை நினைத்தால் என் உடல் துடிக்கிறது'' என்றாள் அல்லி.

கோவிந்தன் புரிந்து கொண்டு விட்டான். குழந்தைகளைப் பறிக்க அவன் வந்திருக்கிறான். வளர்க்க அவள் வந்திருக்கிறாள்! அல்லிக்கு யாரோ சதித்திட்டம் முழுமையையும் சொல்லியிருக் கிறார்கள். அவளிடமிருந்து மெல்ல உண்மையை அறிவதற்காகச் சிரிப்பை உதடுகளில் பிறக்க வைத்து, ''குழந்தையைத் தேடி இங்கு வருவானேன்? குழந்தை வேண்டுமென்றால் நமது குடிலுக்கே வராதா?'' என்று சம்பந்தமில்லாமல் பேசினான்.

அல்லிக்கு ஆத்திரம் அதிகமாகியது.

''குழந்தை குடிலுக்கு வருமாம்! இருந்த குழந்தையைத் தான் பறிகொடுத்துவிட்டு நிற்கிறேனே! குழந்தை இறந்த துக்கத்தை மாற்றுவதற்கு என் அருகில் இல்லாமல் வீட்டுக்கும், நாட்டிற்கும் துரோகம் செய்யத் துணிந்து விட்டீர்களே! நீங்கள் செய்திருக்கும், செய்யப்போகும் பாபச் செயலுக்குப் பரிகாரம் தேட வந்திருக்கிறேன்'' என்று அல்லி அழுத்தம் திருத்தமாகப் பேசினாள்.

''ஓ! நான் செய்வது பாபச் செயல். நீ செய்வது? கணவனுக்கு விரோதமாகச் செயல்பட வந்து விட்டாயே, அது பாபமல்லவா?'' என்று கோவிந்தன் கேட்டான்.

''நாட்டுக்கு விரோதமாகச் செயல் புரியும் கணவனைத் திருத்துவது நியாயமானதே. ஆனால், நான் சொல்லி நீங்கள் திருந்தப் போவதில்லை. என்றாலும் உங்கள் செயலைத் தடுத்து நிறுத்த முடியுமா என்று பார்க்கவே இங்கு வந்தேன்'' என்றாள்.

கோவிந்தன் திகைத்தான். தன் மனைவியின் துணிகரமான பேச்சைக் கேட்டுத் திகைத்தான். அவன் எதிர்பார்த்தது போல் தன் திட்டங்களை முறியடிக்க யாரோ இவளை ஏவியிருக்கிறார்கள் என்று முடிவு செய்து கொண்டான். அதிக நேரம் அங்கே நின்று விவரித்துக் கொண்டிருக்க அவனால் இயலவில்லை. மல்லப்ப தேவன் காத்திருப்பான். அன்று பகல் பொழுதுக்குள் மிக முக்கியமான முடிவை எடுத்தாக வேண்டும். சோழ கேரளன் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு திடீரெனத் தாக்கத் திட்டம் வகுக்க வேண்டும். யார் யார் எங்கெங்கு நிற்பது என முடிவு செய்துகொள்ள வேண்டும். மாளிகைக்குள் ஊடுருவிச் சென்று மறைந்து நிற்பவர்கள் யார், அந்தப்புரத்தில் குழந்தைகள் இருக்கும் மேல் மாடப் பகுதியில் இருந்து பார்த்துக் குழந்தைகளைக் கவர்ந்து செல்பவர் யார் என்ற முடிவை மிகத் துல்லியமாக முடிவு செய்யவேண்டும்.

அவன் திட்டத்தை நிறைவேற்ற வந்திருக்கிறான். அவள் மனைவி அதை முறியடிக்க வந்திருப்பாளோ?

அப்போதே, மிகக் கண்டிப்புடன் பேசி, அல்லியைத் திரும்பி ஊருக்குப் போகுமாறு செய்து விடலாம். ஆனால், கோவிந்தன் ஒரு கணம் சிந்தித்தான். அல்லியை விட்டுப் பிடிக்க வேண்டும். அல்லியை வைத்துக் கொண்டே சதித்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்த யோசனையைச் சொன்னால் மல்லப்பதேவன் பாராட்டுவார் என்று முடிவு செய்து கொண்ட கோவிந்தன், அந்த இடத்திலிருந்து புறப்படுவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்த போது நான்கு குதிரைகள் வேகமாக வருவது அவனுக்குத் தெரிந்தது. அவர்கள் கோவிந்தனுடைய கூட்டாளிகள். அவன் அங்கு நிற்பதைக் கண்டால் கோபப் படுவார்கள்.

கோவிந்தன் விரைந்து குதிரை மீது ஏறி, அல்லியின் செவிகளில் மட்டும் விழுமாறு, ''அல்லி! உன்னைப் பிறகு சந்திக்கிறேன். என் செயலில் குறுக்கிட்டு வெற்றியடைந்து விடலாம் என்று ஒரு காலும் நினைக்காதே. நீ இனி செய்யப்போகும் ஒவ்வொரு செயலும் எனக்கு உதவியாகத் தான் இருக்கப் போகிறது. அதுதான் உத்தமமான மனைவிக்கு இலட்சணம்'' என்று கூறிக் குதிரையைத் தட்டி விட்டு விரைந்தான்.

அவன் போகும் திக்கையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்த அல்லி, எவ்வளவு நேரம் மரத்தடியிலேயே நின்று கொண்டிருப்பது என்று கவலை கொண்டாள். அடையாள மோதிரத்தைக் காட்டி மாளிகைக்குள் நுழைந்து விடுவோமா என எண்ணினாள்.

மிக விரைவில் மாளிகைக்குள் செல்ல வேண்டும். பெரிய பிராட்டியாரைச் சந்தித்துக் குழந்தைகளின் பராமரிப்பை ஏற்க வேண்டும். இந்நேரம் அந்தப் பச்சிளங்குழந்தைகள் பாலின்றி வாடி அழுதிருக்கும். அன்புடன் அரவணைக்க ஆளின்றிக் கதறியழுது கொண்டிருக்கும். நேரத்தை வீணடித்து விட்டோமே என்ற எண்ணம் தலை தூக்கியவுடன் எப்படியாவது மாளிகைக்குள் நுழைந்து விடுவது என்று முடிவு செய்து விட்டாள்.

அப்போது இருபது முப்பது பேர் பெண்கள் சேர்ந்து கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். சிலர் தலையில் கூடைகள் இருந்தன. கீரைக் கட்டுகள் இருந்தன. துணி மூட்டைகள் இருந்தன. வளையல்கள் கோத்துத் தோளில் ஒரு பெண் தொங்கவிட்டிருந்தாள். அவர்களைப் பார்க்கும்போது அவர்கள் மாளிகையில் உள்ளவர்களுக்குப் பண்டங்கள் விற்பவர்கள் போல் தோன்றினர். மாளிகைக்குள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், உறவினர்களும் வசித்து வந்தனர். வயது முதிர்ந்த இளையராணிகள் பலரும், குலோத்துங்கனின் உறவினர்களும் வாழ்ந்து வந்தார்கள்.

அல்லிக்கு ஒரு கணத்தில் யோசனை பளிச்சிட்டது. தானும் அவர்களுள் ஒருத்தியாக உள்ளே நுழைந்து விட முடிவு செய்தாள். தன்னிடமிருந்த துணி மூட்டையைத் தலையின் மீது வைத்துக் கொண்டாள்.



காவலர்கள் ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த்தே உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தனர். அதோ - அவள் நெருங்கி விட்டாள். அல்லிக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. தன்னையும் எங்கே தடுத்துநிறுத்தி விடுவார்களோ என்று பயந்தாள். கடவுளை வேண்டிக் கொண்டாள். தன் தந்தையின் நல்லாசியை நினைத்துக் கொண்டாள். பெருமான் நம்பி தனக்கு இட்ட கட்டளையை நினைத்துக் கொண்டாள். ஏன் அவள் கவலைப்பட வேண்டும்? அடையாள மோதிரத்தைக் காட்டிச் சுலபமாகச் சென்று விடலாம். ஆனால், மிகமிகத் தேவைப்பட்டால் தான் அதை உபயோகிக்க வேண்டும் என்று தன் தந்தை எச்சரித்திருந்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அவள் காவலரைக் கடந்து உள்ளே சென்று விட்டாள். இனி அவளுக்குப் பயமில்லை. உள்ளே நுழைந்தவுடன் எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் திகைத்தாள். அருகே சென்று கொண்டிருந்த ஒருத்தியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''பெரிய பிராட்டி எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள். அவள், அல்லியை ஏற இறங்கப் பார்த்து ''இந்த மாளிகையின் கோடியில் மேல் மாடத்தில் இருக்கிறார். நீ யாரம்மா? பெரிய பிராட்டியைப் பார்க்க வேண்டுமா?'' என்று அன்பாகக் கேட்டது. அல்லியின் மனத்தில் புதிய தெம்பை அளித்தது.

மேலும் அந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்து, அவளைப் பற்றித் தெரிந்து கொண்டாள்.

''நாங்கள் எல்லாம் கோட்டைக்கு வெளியே புறப்பாடியில் வசிப்பவர்கள். வேளாண் குடி மக்கள். மாளிகையில் வசிப்பவர்களுக்கு வேண்டிய நவதான்யங்கள், காய்கறிகள் துணிகள் போன்றவற்றை விற்பனைக்குக் கொண்டு வருவோம்'' என்று சொன்னாள்.

''நீங்கள் ஏன் வர வேண்டும்? அந்தப்புரப் பெண்டிருக்கு பணிப்பெண்கள் இல்லையா? அவர்கள் வந்து வாங்கிச் செல்லமாட்டார்களா?'' என்று அல்லி கேட்டாள்.

அந்தப் பெண் பெருமூச்சு விட்டாள். ''மாளிகையில் இப்போது பணிப்பெண்களும், தாதிகளும், செவிலியர்களும் குறைந்து விட்டார்கள். அவர்கள் வேண்டிய பொருள்களை வாங்க மாளிகை யிலிருந்து வெளியே வருவதுமில்லை. அதனால் வாரம் ஒரு முறை நாங்களே மாளிகைக்குக் கூட்டம் கூட்டமாக வந்து விற்கிறோம். வாரம் ஒரு முறை அரச குலத்து மக்களைச் சந்திப்பதில் எங்களுக்கும் மகிழ்ச்சி, வாங்கும் பண்டங்களுக்கு உரிய விலையைக் கொடுப்பதுடன், சமயத்தில் பரிசுப் பொருள்களும் தருவார்கள். எங்களுடன் கலகலப்பாகப் பேசுவதில் அவர்கள் ஆனந்த மடைவார்கள்'' என்று கூறினாள், நடந்துகொண்டே.

"கங்கை கொண்ட சோழபுரத்து மகாராஜா வருவதே யில்லையா?" என்று அல்லி கேட்டாள்.

"அவர் வந்து பலமாதங்களாகி விட்டன. அவர் இங்கே வந்தால் அவருக்குத் துக்கம் இன்னும் அதிகமாகி விடுமாம்" என்றாள் அந்தப் பெண்.

"அவருக்கு என்ன துக்கம்?" - அல்லி அறியாதவள் போல் கேட்டாள்.

"உனக்கு ஒன்றுமே தெரியாதா? அவர் தன் அருமை மனைவியைப் பறிகொடுத்துப் பித்துப் பிடித்தவர் போல் பழையாறையிலேயே தங்கியிருக்கிறாரே..."

"மனைவியைப் பறி கொடுத்ததற்காக ஓர் அரசர் இப்படி வருத்தப் படலாமா? ஒரு மனைவி போனால் அந்தப்புரத்தில் வேறு மனைவிகள் இல்லையா? அவர் என்ன இராமபிரானா, ஒரே மனைவியுடன் வாழ?" அல்லி கேள்வி கேட்டுத் தூண்டினாள்.

பண்டம் விற்கும் அந்தப் பெண் கோபத்துடன், "என்ன சொன்னாய்? நமது மகாராஜா மலையமான் மகளிடம் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார். சோழர் குலத்துக்கு வாரிசாக ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்த பெருமை அவளுக்கு உண்டு. அதனால் மலையமான் மகள் இறந்த பிறகு மன்னர் அதிர்ச்சி அடைந்ததில் ஆச்சரியமில்லை" என்றாள்.

அவள் கோபத்தை மாற்ற விரும்பிய அல்லி, "இரண்டு குழந்தைகளா? நீங்கள் அந்தக் குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தக் குழந்தைகளுக்கு யார் பாலூட்டி வளர்க்கிறார்கள்?" என்று ஆவல் நிறைந்த குரலில் கேட்டாள்.

"குழந்தைகளைப் பார்க்க யாருக்கும் அனுமதி இல்லை. பெரிய பிராட்டி தனது மேற்பார்வையில் குழந்தைகளை வளர்க்கிறாள்" என்றாள் அவள்.

"பெரிய பிராட்டிக்குக் கண் தெரியவில்லை என்று சிலர் சொல்கிறார்களே?" என்று கேட்டாள் அல்லி.

"இந்த வயது முதிர்ந்த பருவத்தில் அவர்கள் திடமுடன் வாழ்வது எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாயிருக்கிறது. கண் பார்வை மங்க வில்லை; நடை தளரவில்லை. கவனம் குறையவில்லை. ஆனால் தன் கண் எதிரே மாளிகையில் பல துக்ககரமான நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது ஏற்படும் அதிர்சி அவர்களுக்கு ஒரு வேளை உடலில் தளர்ச்சியை ஏற்படுத்தலாம்" என்றாள்.

அல்லியும் அந்தப் பெண்ணும் பிரியும் இடம் வந்து விட்டது. பெரிய பிராட்டி இருக்குமிடத்தை அவள் சுட்டிக் காட்டினாள்.

அல்லி தன் பசியை மறந்தாள். களைப்பை மறந்தாள். கடுங்கோடையின் அனல் காற்றை மறந்தாள். பெரிய பிராட்டி இருக்கும் மாளிகையை நோக்கி ஓடினாள்.



பெரிய பிராட்டி வசிக்கும் இடம் தனித்திருந்தது. மூன்று அடுக்கு மாடங்கள் கொண்ட அந்த மாளிகை புதுச் சுண்ணம் பூசப்படாமல், பொலிவிழந்து காணப்பட்டது. மாளிகை அருகே மரஞ்செடி கொடிகள் வளர்ந்திருந்தன.

மாளிகையின் கீழ்க் கூடத்தில் அவரவர்கள் தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அல்லியை யார் என்று ஒருவரும் கேட்க வில்லை. அல்லி முதல் மாடம் ஏறினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். குழந்தைகள் எங்கே இருக்கின்றனர் என்று தேடினாள். மூன்று நான்கு வயதுடைய சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் அரச குமாரர்கள் அல்லர்.

அல்லி திகைத்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். 'குழந்தைகள் எங்கே? பெரிய பிராட்டி எங்கே?' - ஒருவரையும் கேட்கத் துணியவில்லை.

மூன்றாவது மாடத்துப் படிகளில் மெல்ல ஏறினாள். ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. யாரோ மெல்ல இருமும் ஓசை கேட்டது. தொடர்ந்து குழந்தையின் அழுகுரல். குழந்தை அழுதது. பிறகு தொடர்ந்து குரலை எழுப்பியது. கதறி அழுதது. யாரோ மெல்லச் சமாதானப் படுத்த முயலும் ஒலி கேட்டது.

அல்லி படிக்கட்டுகளில் தாவி ஏறிக் கூடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

கூடத்தின் ஓர் ஓரத்தே இருந்து மஞ்சத்தில் பெரிய பிராட்டியார் கையில் விசிறியுடன் அமர்ந்திருந்தாள். நடுக்கூடத்திலிருந்த தொட்டிலில் குழந்தை ஒன்று உறங்கிக் கொண்டிருந்தது.

மற்றொரு குழந்தை கீழே விரிக்கப்பட்டிருந்த பஞ்சணையில் வீரிட்டு அழுது கொண்டிருந்தது. பணிப்பெண் ஒருத்தி சங்கில்பாலை ஊற்றி அதற்குப் புகட்ட முயன்று கொண்டிருந்தாள். குழந்தையைச் சரியாக அணைத்து வைத்துக் கொள்ளக் கூட அவளுக்குத் தெரியவில்லை. குழந்தை அழுகையை நிறுத்தவில்லை.

அல்லி கண்டறியாதன கண்டவளைப் போல் ஒரு கணம் நின்றாள். மறுகணம் "என் செல்வங்களா!" என்று கூவியவாறு குழந்தைகளிடம் ஓடினாள். தொட்டிலில் உறங்கும் குழந்தையைக் குனிந்து முத்தமிட்டாள். பிறகு கீழே கதறி அழும் குழந்தையைத் தாதியிடமிருந்து பெற்றுக் கொண்டாள்.

அவள் உடலெங்கும் ஒரு புத்துணர்ச்சி. ஆனந்த அனுபவம். மார்புக் கச்சை நனைந்தது. குழவியின் செம்பவள உதடுகளின் ஸ்பரிசம் அவளை இந்த உலகத்தை மறக்கச் செய்தது. அவள் கங்காபுரியை மறந்தாள். சோழ கேரள மாளிகையை மறந்தாள். அருகே, வியப்புடனும் திகைப்புடனும் நோக்கும் தாதியை மறந்தாள். குழந்தை அழுகுரலை நிறுத்தியதையும், குழந்தைகளுக்குப் பெண் ஒருத்தி பாலூட்டுவதையும் கண்டு மெல்ல தன்னிருக்கையிலிருந்து எழுந்து வரும் பெரிய பிராட்டியை மறந்தாள். அவள் சஞ்சரிக்கும் உலகம்

தனியானது. விசித்திரமானது. சுவர்க்க போக இன்பங்களையும் விடப் பேரின்பம் அளிக்க வல்லது. தன் வயிற்றில் பிறந்து ஐந்தே நாள்கள் இருந்து இறந்து விட்ட அதே குழந்தை மீண்டும் தன் மடியிலிருந்து பால் குடிப்பது போன்ற உணர்வு அல்லிக்கு.

"யாரம்மா நீ? இதுவரை உன்னைப் பார்த்ததில்லையே! குழந்தைக்குப் பாலூட்டும்படி யார் உனக்குச் சொன்னது?" என்று பெரிய பிராட்டியார் அவள் அருகே வந்து அவளை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள்.

இந்த உலகத்துக்குப் பிடித்துத் தள்ளப்பட்டாள் அல்லி. குழந்தை அழுகையை நிறுத்தி உறங்கி விட்டிருந்தது.

"நானா.... நானா...?" என்று அல்லி, பெரிய பிராட்டியைப் பார்த்தவாறு ஏதோ சொல்ல முயன்றாள். குழந்தையைக் கீழே கிடத்த அவளுக்கு மனமில்லை.

அவள் தடுமாறுவதைப் பார்த்த பெரிய பிராட்டி கையமர்த்தி, "அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தும் மாயசக்தியை வைத்திருக்கிறாயே, பெண்ணே நீ யார்?" என்று வியப்புடன் கேட்டாள்.

"மாயசக்தி ஒன்றுமில்லை அம்மா! தாய்மையின் சக்தி தான்" என்று கூறித் தன்னை, பெருமான் நம்பி அனுப்பிய செய்தியை விவரமாகக் கூறி, "இளவரசரைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது முன்பிறவிப் புண்ணியம் தான்" என்றாள். பிறகு குழந்தையைக் கீழே மெல்லக் கிடத்திவிட்டு, பெரிய பிராட்டியை மண்டியிட்டு வணங்கி "என்னை வாழ்த்தி ஆசி கூறுங்கள்" என்றாள்.

"பெண்ணே! ராஜராஜனின் மகனைக் காப்பாற்றும் யாரும் நீடுழி வாழ்வார்கள்" என்று கூறினாள்.

"குழந்தைக்காக நான் நோய் நொடியின்றி உயிருக்கு அபாயமின்றி வாழ்ந்தாக வேண்டும். மாளிகைக் காவல்காரர்களிடம் கூறி இங்கே உடனே காவலுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்" என்றாள்.

பெரிய பிராட்டி மெல்லச் சிரித்தவாறு, "பெண்ணே! நீ அஞ்ச வேண்டாம். நமக்கு யாரம்மா விரோதிகள் இருக்கிறார்கள்? குழந்தைக்கு ஒன்றும் நேராது" என்றாள்.

ஆனால் அல்லிக்கு ஒவ்வொரு கணமும் பயம் தோன்றிக் கொண்டே வந்தது. இரவு நெருங்க நெருங்க அவளுடைய அச்சம் அதிகமானது. தொட்டிலில் தவழும் மூத்த குழந்தை ஒரே வயது நிறைந்த குழந்தைக்குத் தாய்ப்பால் தேவைப்படவில்லை. இரண்டாவது குழந்தை ஒரே மாதம் நிறைந்த குழந்தை. அல்லியின் மடியை விட்டுப் பிரியவில்லை.

மாளிகை அயர்ந்து கண் உறங்கும் நேரம் காற்றில் மரங்கள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. பின்னிலவுச் சந்திரனின் மங்கிய ஒளி இருளை எதிர்த்துப் போரிட முயன்று கொண்டிருந்தது. பாதியில் விழித்துக் கொண்ட பறவைகள் சில 'சடசட' என்று ஓசையை ஏற்படுத்தின. அல்லி தூங்கியும் தூங்காமலும் அருகே குழந்தையை அணைத்தவாறு படுத்துக் கொண்டிருந்தாள்.



'சடக்' என்ற மெல்லிய காலடி ஓசை கேட்டது. திறந்த சாளரத்து வழியே வீசிக் கொண்டிருந்த மதிஒளியில் ஓர் உருவம் நகர்ந்து வருவது தெரிந்தது.

அல்லி நன்றாக விழித்துக் கொண்டாள். கண்களை மலர விழித்துப் பார்த்தாள். குழந்தையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். அடிமேல் அடி வைத்து நகர்ந்து வரும் உருவம் கோவிந்தன் என்பதை ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டாள் அல்லி.... அவள் உடல் நடுங்கியது.

## 9. விழிக்குத் துணை

துங்கபத்திரை ஆற்றங்கரையை ஒட்டி அமைந்திருந்த சிறு வீட்டில் நால்வர் அமர்ந்து தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். மூன்று பேர் கொச்சைத் தமிழில் பேசினர். அவர்களுள் வயதில் இளைஞன் ஒருவன் மட்டும் தெளிவாகத் தமிழில் பேசியதுடன், தெலுங்கிலும் வார்த்தைகள் சிதையாமல் பேசினான்.

அவன் பேசும்போது அவனுடைய முகத்தையே மற்றவர்கள் காந்தத்தால் கவரப்பட்டவர்கள் போல் உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அவனுடைய பேச்சும், பேசும்போது ஏற்படும் முகபாவமும் அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும். அகன்ற நெற்றியும் ஒளிவீசும் விழிகளும் அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும். ஒளி விழிக்கு நிகரான அழகிய நாசியும் நாசியின் கீழே சற்றுப் பெண்மையின் சாயலை அளிக்கும் அதரங்களும் அவர்களை மகுடியில் கட்டுண்ட நாகம்போல் கவர்ந்திருக்க வேண்டும்.

அவனை விட வயதில் மூத்தவர்களான மூன்று பேரும் அவனிடமிருந்து வரும் யோசனைகள் ஒவ்வொன்றையும் உற்சாகமாக வரவேற்றதிலிருந்து அவர்களுக்கு, அந்த இளைஞனிடம் பரிபூரண நம்பிக்கை இருப்பது தெரியவந்தது.

"வல்லபா! கடைசியாக, உன் முடிவு தான் என்ன? ஒரு வார்த்தை உம் என்று சொன்னால் நாங்கள் படைகளுடன் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு உன் சிற்றப்பனைத் தாக்கிக் கொன்று விடுவோம்!" என்று ஒருவன் பரபரப்புடன் கூறினான். அப்போதே எழுந்து சென்று விடுவது போன்ற துடிப்பு அவனிடமிருந்தது. அவனுடைய கரம் உடைவாளைத் தொட்டுக் கொண்டிருந்தது. மற்ற இருவரும் மீசையை மெல்ல முறுக்கிவிட்டுக் கொண்டிருந்தனர்.

வல்லபன் மெல்ல நகைத்தான். சிரிக்க வேண்டிய சமயம் அதுவன்று. சீற்றமுடன் கிளர்ந்தெழுந்து ''வாருங்கள், புறப்படுவோம்'' என்று பொங்கி எழும் பொழுதில், வல்லபன் 'அமைதி அமைதி' என்று கை அமர்த்தினான். தாக்குவது, மல்லுக்கு நிற்பது, வாளெடுத்து நேருக்கு நேர் போரிடுவது போன்றவற்றில் மிகத் திறமை படைத்த வல்லபன் அமைதியை உபதேசித்தான்.

அவனுடைய நலனுக்காகத் தான் அந்த மூவரும் அங்கே அடிக்கடி வருகிறார்கள்; யோசிக்கிறார்கள். திட்டமிடுகிறார்கள். கீழைச்சாளுக்கிய நாட்டின் படை வீரர்களிடையே முக்கிய பதவி வகிப்பவர்கள் அவர்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மீசை அரும்பாப் பாலகனாய் வந்தபோதே அவன் தான் வேங்கியின் அரியணையில் அமரவேண்டிய நியாயமான வாரிசு என்பதை உணர்ந்து கொண்டார்கள். வல்லபன் என்ற பெயரே அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. அவனுடைய வடிவழகு, திண் தோள்கள் யாவும் அவர்களைக் கவர்ந்தன. கீழைச்சாளுக்கிய நாட்டை ஆளக்கூடிய நியாயமான வாரிசு வல்லபன் தான் என்பதை அறிந்து கொண்டார்கள். வல்லபனுடைய சோகக் கதையை அவர்கள் கேட்டறிந்தார்கள். அவனுடைய தந்தை கரூரில் சேரநாட்டு அரசப் பிரதிநிதியா யிருந்தவர், திடீரெனச் சென்ற இடம் தெரியவில்லை. கணவனைக் காணாத துயரத்தால் வாடிய அவன் தாய் அறிவுடைச் செல்வி, வல்லபனின் திருமுகத்தைப் பார்த்தே தன் துயரத்தை மறந்து வாழ்ந்து வந்தாள்.

தன் மகன் என்றாவது ஒருநாள் அரசனாவான் என்று அவளுடைய உள்ளுணர்வு சொல்லிக் கொண்டேயிருந்தது. கீழைச் சாளுக்கிய நாட்டில் வாரிசு இல்லாது, அரசர் இறந்து விடவே வல்லபன் தான் நியாயமான உரிமை உடையவன் என்பதை அறிந்தாள் செல்வி.

கங்கை கொண்ட சோழபுரத்தில் எளிய வாழ்க்கை நடத்தத் தொடங்கிய செல்வி, தன் மகனை வீரனாகவும், அறிவுடைய வனாகவும் வளர்த்தாள். தன் சகோதரனும் வல்லபனின் மாமனுமான சோழ மன்னர் இராஜராஜன் தன்னைத் திரும்பியும் பாராது அலட்சியமாக இருப்பதாகப் பல முறை அவளுக்குத் தோன்றிய துண்டு. அதனாலெல்லாம் அவள் வேதனைப்பட்டதில்லை. வருத்தப் பட்டதில்லை. கோபங் கொண்டதும் இல்லை. அவளுடைய இலட்சியமெல்லாம் தன் மகன் கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசனாக வேண்டும், முப்பாட்டனார்களான குலோத்துங்கன், விமலாதித்தன் போல் சிறந்த மன்னராக வேங்கியில் இருந்து அரசாள வேண்டும் என்பதே.

ஆஞ்சநேயரின் வீரத்தையும், இராமபிரானின் சீலத்தையும், வீர அபிமன்யுவின் தீரத்தையும், அர்ஜுனனின் தீரப் பிரதாபங்களையும் தன் மகனுக்குக் கதைபோல் எடுத்துக்கூறி அவன் உள்ளத்தில் வீர உணர்ச்சியை வளர்த்தாள். கீழைச் சாளுக்கிய நாட்டின் பெருமையையும், வேங்கி நகரத்தின் சிறப்பையும் அவ்வப்போது எடுத்துக் கூறுவாள். வல்லபன் உள்ளத்தில் வேங்கி நகருக்குச் செல்ல வேண்டும் என்ற உணர்ச்சி பெரிதும் வளர்ந்தது.



முதலில் தக்க துணையுடன் அவனை அனுப்பி வைத்தாள். வல்லபன் சில மாதங்கள் வேங்கியில் மட்டும் தங்கியிருந்து திரும்பி வந்தான். வரும்போதே வாள் வீச்சைக் கற்று வந்தான். ஒவ்வொரு முறையும் சென்று வரும் போதும் வல்லபன் திறமையை வளர்த்துக் கொண்டதுடன் உரிமையை உணர்ந்து கொண்டான். வேங்கியில் அவனுக்குப் பலர் நண்பர்களானார்கள்.

இம்முறை வல்லபன், கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து புறப்படும் போது அவன், ''தாயே! எனக்கு ஆசி கூறுங்கள். வேங்கியின் அரியணையில் என்னை அமர்த்தி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என்று படைத் தலைவர்கள் பலர் உறுதி கொண்டிருக்கின்றனர். என்னுடைய முயற்சி வெற்றி அடைய வாழ்த்தி அருளுங்கள் அம்மா!'' என்று வேண்டி வணங்கி எழுந்த போது, செல்வி அவனுடைய நெற்றியில் திருநீற்றை அணிவித்து, 'மகனே! என் இலட்சியம், நீ அரசனாக வேண்டும் என்பதே. இந்தக் கங்காபுரியில் சிறுகுடிலில் வாழப்பிறந்தவனல்லன் நீ. சிறு வயதிலேயே உன்னை வேங்கிக்கு அனுப்பிய காரணம் நீ கீழைச் சாளுக்கிய நாட்டு அரசனாக வேண்டும் என்பதே. வேங்கியினின்று வந்தவர்களிடமிருந்து நான் தெரிந்து கொண்டேன். உனக்கு அங்கு ஆதரவு இருக்கிறதென்று. உன் வீரத்தைக் கண்டு அங்கு வியப்படையாதவர்களே இல்லையாமே? மேலைச் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவர்கள் அவ்வப்போது எல்லையை மீறி வந்து பசுக்களையும் ஆடுகளையும் கவர்ந்து சென்று விடுகிறார்களாம். ஒரு சமயம் நீ தன்னந் தனியனாக அவர்களை எதிர்த்துப் போரிட்டு மாடுகளை மீட்டு வந்தாயாம். எதிரிலிப் பெருமாள் என்று உன்னை எல்லாரும் கொண்டாடுகிறார்களாமே! என்னிடம் இவற்றை யெல்லாம் நீ ஏன் சொல்லவில்லை? மகனே! என்னுடைய பூரண ஆசி உனக்கு உண்டு. உன்னுடைய பாட்டனார் குலோத்துங்க சோழரைப் போல் நீ வீரப்பிரதாபங்களுடன் வாழ ஆசி கூறுகிறேன்... ஆனால்...'' என்று கூறி நிறுத்தினாள் செல்வி.

''சொல்லுங்கள் தாயே... நீங்கள் சொல்வதிலிருந்து அணு அளவும் நான் மீற மாட்டேன்!'' என்று வல்லபன் தாயின் முகம் பார்த்து நின்றான்.

''வல்லபா! உன் உரிமையை மிகவும் அமைதியான முறையில் வற்புறுத்து. அமைச்சர்களிடம் எடுத்துக்கூறி வாதாடு. மக்களின் கருத்தைத் திரட்டி உருவாக்கு. இவை ஏதும் பலனளிக்காவிடில் கடைசியாகப் போருக்குப் புறப்படு. போர் என்று அதைச் சொல்ல மாட்டார்கள். கலகம் என்பார்கள். கலகக்காரர்களைக் கொண்டு அரியணையைப் பிடிப்பது என் கருத்துக்கு ஏற்றதாயில்லை. உன்னை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கு. பிறகு என் சகோதரன் - உன் மாமனிடம் நான் உதவி கேட்கிறேன்'' என்றாள்.

வல்லபன் தாயின் சொல்லை அப்படியே ஏற்றுக் கொண்டான். விடை பெற்றுப் புறப்பட்டான்.

''எதிரிலிப் பெருமாள், எதிர்ப்பிலிப் பெருமாளாக எடுத்த காரியம் முடித்துத் திரும்பி வருக'' என்று தாய் ஆசி கூறினாள்.

''எதிரிலிப் பெருமாள்'' என்று ஒருமுறை அவன் தனக் குள்ளேயே சொல்லிப் பார்த்துக் கொண்டான். குதிரை மீது செல்லும்போது பயணத்தின் இடையே அந்த வார்த்தையை மற்றொரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். அவன் இதழ்க்கடையில் நகை மலர் பூத்தது. அது இனிய மணத்தை வீசியது. அந்த மணத்துக்கு உரிய இளநங்கை தன்னருகே குதிரை மீதமர்ந்து வருவது போன்ற உணர்வு தோன்றியது.

அவள் தன் காதருகே நெருங்கி, 'எதிரிலிப் பெருமாள்' என்று கூறி முல்லைப் பற்கள் தெரிய நகைப்பது போல் தோன்றியது. அவன் கரங்கள் அவளது கன்னங்களை வருடவேண்டும் என்பதற்காக அசைந்தது. குதிரை கனைப்பது கேட்ட பிறகு தான், குதிரை மீதேறிப் பயணம் செய்யும் நினைப்பு அவனுக்கு வந்தது.

அவன் தன்னிலையை அறிந்து இப்போது சிரித்துக் கொண்டான். அவன் உடல் ஒருமுறை சிலிர்த்தது. இப்படித்தான் முதன் முதல் அவன் ஸ்பரிசம் அவனுடைய மார்பிலே பட்டபோது அவன் உடல் முழுவதும் சிலிர்த்தது. ஓர் இளமங்கையின் மென்னுடலின் பூங்காற்று அவனை மெல்லத் தொட்டுச் சென்றது. அது தான் முதன் முதல் அனுபவம்.

அந்தச் சம்பவத்தை மீண்டும் இப்போது நினைத்துக் கொள் வதால் அந்த இனிய நினைவுகள் பயணக் களைப்பைப் போக்கிவிடும் என்று எண்ணினான்.

பல மாதங்களுக்கு முன்பு மேலைச் சாளுக்கியர்களிடமிருந்து பசுக் கூட்டங்களை மீட்டு வந்த பிறகு அவன் களைப்பாறிக் கொண்டிருக்கும் போது வயது முதிர்ந்த ஒருவரும், அவரைத் தொடர்ந்து இளமங்கையும் அவனைத் தேடி வருவதைக் கண்டு அவன் திகைத்தான்.

அந்தப் பெண் பெரிய கூடையை இடுப்பில் சுமந்து கொண்டிருந் தாள். அவள் ஒயிலாக, ஒரு புறம் சாய்ந்தவாறு நடந்து வரும் அழகை அவன் ரசித்திருந்த போது முதியவரின் குரல் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

''தம்பி! உன்னை எங்கெல்லாம் தேடிவந்தேன்? இந்த ஆற்றங் கரையில் தன்னந்தனியாக இருக்கிறாய் என்பதை அறிந்தேன். உனக்கு நன்றி சொல்லி விட்டுப் போக வந்தேன். இவள் என்னுடைய பெயர்த்தி சந்திரப்ரபா. இவளுடைய தந்தை இவளையும் பசு மந்தைகளையும் விட்டு விட்டு, இதே போல் அந்தக் கொடிய சாளுக்கியர்களை எதிர்த்துப் போரிட்டபோது இறந்து விட்டான். அந்தக் கொள்ளைக்காரர்களுக்கு எப்போதுமே, எங்களுடைய பசுமந்தைகளின் மீது ஒரு கண். நீ இருந்திராவிடில் எனது செல்வம் முழுதும் பறிபோயிருக்கும். நீ தன்னந்தனியனாக ஒருவனே அவர்களை விரட்டி



யிருக்கிறாய். எனது நன்றியைத் தெரிவிக்க வந்தேன். எனக்குக் கண்பார்வை இப்போது குறைந்து வருகிறது. அதனால் துணையாக இவளை அழைத்து வந்தேன்'' என்றார்.

பாட்டனாரின் அருகே நின்று கொண்டிருந்த அவளை ஏற இறங்க வல்லபன் பார்த்ததைக் கண்ட அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''வழிக்குத் துணையாக வந்திருக்கிறாள். வாழ்க தங்கள் பார்வைக் குறைவு...'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

''என்ன தம்பி சொல்கிறாய்?'' என்று முதியவர் கேட்டார்.

அவன் முணுமுணுத்தது சந்திரப் பிரபாவுக்குக் கேட்டுவிட்டது. அவள் சிரித்துக் கொண்டாள். வல்லபனும் அவளைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே ஏற்பட்ட புதுவித உணர்ச்சிகள் மெல்ல மெல்ல உள்ளத்தே நுழைந்து கொண்டிருக்கும் பருவம்.

''இதெல்லாம் எதற்குப் பாட்டா?'' என்று வல்லபன் முதியவரை நோக்கிக் கேட்டான். அவள் கூடையை இறக்கிக் கீழே வைத்திருந்தாள். அதில் மாங்கனிகள் இருந்தன. ஒரு குலை வாழைப்பழம் இருந்தது.

''எங்களது நன்றியைத் தெரிவிக்க இவை'' என்றாள் அவள். கனியை விடக் கன்னியின் குரலில் இனிமை இருந்தது. மற்றுமொரு முறை வல்லபன் அவளை நோக்கினான். அவள் தரையில் கால் விரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

''தம்பியை வீட்டுக்கு அழைக்க வந்தோம். அங்கே உனக்கு விருந்தளித்து, புத்தாடைகள் தருவதாக எண்ணியுள்ளோம்'' என்று முதியவர் கூறினார். குரலில் நன்றி நிறைந்திருந்தது. வல்லபன் மறுக்கவில்லை.

வல்லபன் ஒருமுறை அவர்கள் வீட்டுக்குச் சென்றான். பிறகு பலமுறை அவள் அவனைத் தேடி ஆற்றங்கரை வீட்டுக்கு வந்தாள். ஒருமுறை வல்லபன் தெற்கே கங்காபுரிக்கு வந்து விட்டுச் சென்றபோது பிரிந்திருந்த ஆறு மாதங்கள் அவளுக்குப் பலயுகங்களைப் போல் தோன்றின. இப்பொழுது வல்லபன் கங்காபுரிக்குச் செல்லும்போது, அவளிடம் விடைபெறும் போது அவள் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. ஏதோ விட்ட குறை தொட்ட குறை போல் அவள் வருந்தினாள்.

வல்லபன் கங்காபுரியிலிருந்து திரும்பி விட்டான் என்றறிந்த போது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இந்த ஆறு மாதங்கள் அவளிடையே பெரிய மாறுதலை ஏற்படுத்தியிருந்தன. பருவத்தின் அபிஷேகம் உடல் முழுவதும் பரவியிருந்தது.

வல்லபன் வந்த நாளிலிருந்து அவள் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தாள். அவனைச் சந்திக்க வரும்போதெல்லாம் அவனுடன் யாராவது இரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பார். குடிலின் முன் வாயில் ஓரமாகப் பேச இயலாமல் நின்று

விட்டுப் போய் விடுவாள். அவள் புரிந்து கொண்டாள். வல்லபன் மேற்கொண்டுள்ள உரிமைப் போராட்டத்தை.

வல்லபன் அரச பரம்பரையைச் சேர்ந்தவன் என்று அறிந்த போது ஏற்பட்ட குதூகலத்தின் அளவைச் சொல்லி முடியாது. பாட்டனாரிடம் சென்று அவர் தோளைக் குலுக்கி, ''தாத்தா, அவர் ஓர் அரச குமாரரா?'' என்று கேட்டாள்.

''அவர் என்றால்.... யாரையம்மா சொல்கிறாய் குழந்தாய்?'' என்று முதியவர் கேட்டார்.

அவள் முகம் சிவந்தது. அந்த நாணம் திடீரென அவள் முகத்தில் வந்து கலந்து கொள்ள என்ன காரணம்? அந்த நாணம் இவ்வளவு காலம் எங்கே சென்றிருந்தது? அவள் உடலில் இலேசான அதிர்ச்சி ஏற்பட்டு, புதிய புரிய முடியாத இன்பத்தை ஏற்படுத்துகிறதே, அந்த அனுபவம் இவ்வளவு நாளும் எங்கே சென்றிருந்தது? வல்லபனைக் காணும்போது இதயம் படபடக்கிறதே. இந்தப் படபடப்பு இவ்வளவு காலம் எங்கே மறைந்திருந்தது?

முதியவர் மெல்ல நகைத்துக் கொண்டார். அவருக்குப் புரிந்துவிட்டது. ''யாரைச் சொல்கிறாய்? எதிரிலிப் பெருமாளையா? நானும் அவனைச் சாதாரணப் படைவீரன் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் இந்த நாட்டை ஆளும் உரிமை பெற்றவன். அவன் தன் கட்சிக்கு நியாயமானவர்களைச் சேர்த்துக் கொண்டு வருகிறான். தன் உரிமையை நிலை நாட்ட அரசிடம் நேரே சென்று கேட்கப் போகிறானாம்'' என்றார்.

''நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை தானா?'' என்று சந்திரப் பிரபா கேட்டாள். அவள் வழக்கத்துக்கு மாறாக வல்லபனின் மிக அருகே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகம் அவனை நோக்கி நிமிர்ந்திருந்தது.

''என்ன கேள்விப்பட்டாய் பிரபா?'' என்று வல்லபன் அவளுடைய கூந்தலை மெல்லக் கோதியவாறு கேட்டான்.

''தாங்கள் இந்த நாட்டின் அரியணையில் அமரும் உரிமை பெற்றவராமே?'' என்று பிரபா கேட்டாள். வல்லபன் மெல்ல அவளது முகவாயைத் தட்டி, ''உரிமை மட்டுமா, தகுதி பெற்றிருக்க வில்லையா?'' என்று கேட்டான்.

உடனே அவனுடைய பேச்சுக்கு அவளால் மறுமொழி கூற முடியவில்லை. தலையை அசைத்து, ''இரண்டும் தான்'' என்றாள். பிறகு ''உரிமை, தகுதி இரண்டும் என்னிடமில்லையே'' என்றாள். அவள் கண்கள் மெல்லக் கலங்கத் தொடங்கின.

வல்லபனுடைய கரங்கள் அவளுடைய கூந்தலின் அழகை மெல்ல அனுபவித்து, பிறகு அவளுடைய பரந்த முதுகின் மென்மையை உணரத் தொடங்கின.

''உரிமை தகுதி இரண்டும் இருப்பதால் தான் என்னை இவ்வளவு எளிதில் கவர்ந்து விட்டாய்'' என்றான் வல்லபன்.



''உன்னைப் பிரிந்திருக்க முடியாததால் தான் கங்காபுரியினின்று விரைவில் புறப்பட்டு விட்டேன்'' என்று தொடர்ந்து வல்லபன் கூறியபோது அவள் நாணிக் கண் புதைத்தாள்.

''இந்த நாட்டின் அரசரான பிறகும் நீங்கள் கங்காபுரிக்குச் சென்று தான் வருவீர்களா?'' என்று சந்திரப்பிரபா கேட்டாள்.

வல்லபன் சிறிது யோசித்தான். வேங்கி அரண்மனையில் அமர்ந்தபிறகு கங்காபுரிக்குச் செல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? என்று எண்ணினான். தாய் இருப்பதனால், தெற்கே கங்கா புரிக்குச் செல்கிறோம். பிறகு தாய் எதற்காக என்னைப் பிரிந்திருக்க வேண்டும்? ராஜமாதாவாக மாளிகையில் வாழ வேண்டிய என் தாயைச் சிறுகுடிசையில் வாடவிடுவேனா?

''பிறகு நான் கங்காபுரிக்குச் செல்லவேண்டிய அவசியமே நேராது. நான் வேங்கியின் மன்னன். அந்த நாட்டு மன்னரின் அழைப்பு இருந்தால் சோழநாட்டுக்குச் செல்வேன்'' என்றான்.

சந்திரப்பிரபா பெருமூச்சு விட்டாள். அவள் ஏதோ ஒன்றைக் கேட்கத் துடித்தாள். ஒவ்வொரு முறையும் அவள் கேட்க முனைந்து விடுவாள். ஆனால் சொற்கள் நெஞ்சோடு நின்றுவிடும். நாள்கள் ஓடிக் கொண்டிருந்தன.

அதன் பிறகு வல்லபனையும் அவளால் சந்திக்க இயலவில்லை. வேங்கி மன்னருடன் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றிடையவில்லை. மீண்டும் ஆலோசனைக் கூட்டம். இப்போது வல்லபனை ஆதரிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகியது. போரா – அமைதியா என்ற முடிவுக்கு வல்லபன் வந்தாக வேண்டும்.

ஒரு நாள் வல்லபனைத் தேடிக் கங்காபுரியினின்று தூதுவன் ஒருவன் வந்தான். அவன் பல காத தூரம் நடந்து வந்திருந்தரன். அவன் செல்வியிட மிருந்து ஓலையொன்று கொண்டு வந்திருந்தான். வல்லபனைத் தேடி ஆற்றங்கரை வீட்டில் கண்டுபிடித்துக் கொடுத்தான்.

அவன் தாய் எழுதி அனுப்பியிருந்த செய்தியை ஒரு முறை பரபரப்புடன் முதலில் படித்தான். பிறகு, இரு முறை, பலமுறை படித்தான் வல்லபன். அவனுக்கு ஏற்பட்ட பரபரப்பில் எதிரே சந்திரப்பிரபா இருப்பதையும் மறந்தான்.

படித்து முடிந்தவுடன் வல்லபன் துள்ளி எழுந்தான். ''நான் இன்றே புறப்பட வேண்டும்'' என்று பரபரப்புடன் கூறினான்.

ஓலையைப் படித்தவுடன் வல்லபனிடம் திடீரென்று ஏற்பட்ட மாறுதல் சந்திரப் பிரபாவையும் வியப்புறச் செய்தது.

''எங்கே புறப்பட வேண்டும்?'' என்று மெல்லக் கேட்டாள் சந்திரப் பிரபா.

''கங்காபுரிக்கு. என் அருமைத் தாய் எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள், என்னை உடனே புறப்பட்டு வருமாறு'' என்று வல்லபன் குரலில் உற்சாகம் பொங்கக் கூறினான்.

"சில நாள்களுக்கு முன்பு சொன்னீர்கள், இனி கங்காபுரிக்குப் போகுமாறு நேராது என்று. இப்பொழுது போகவேண்டும் என்று துடிக்கிறீர்களே" என்று சந்திரப் பிரபா துக்கம் நெஞ்சை வந்து முட்டக் கேட்டாள்.

வல்லபன் குரலில் உற்சாகம் இருந்தது. "ஆமாம். வேங்கியின் அரசனானால், தெற்கே செல்லுமாறு நேராது. ஆனால் நான் அரசனாக முடியவில்லையே" என்று வல்லபன் கூறினான்.

"தங்களுக்காகப் போரிடத் துடிப்பவர்களையும் தாங்கள் தடுத்து நிறுத்தியுள்ளீர்கள், முயற்சி எடுக்காவிடில் வேங்கி அரியணை தானே கிட்டுமா?" என்று சந்திரப் பிரபா கேட்டாள்.

"வேங்கி அரியணையைத் தற்போது நான் மறந்துவிட வேண்டும். என் தாய் என்னைக் கங்காபுரிக்கு வருமாறு அவசரக் கட்டளை பிறப்பித்துள்ளாள். அங்கே எனக்கு மிகப்பெரிய அதிர்ஷ்டம் காத்திருக்கிறதாம்" என்று உற்சாகத்துடன் கூறினான் வல்லபன்.

சந்திரப் பிரபாவினால் உடனே பேசமுடியவில்லை. பிரிவுத்துயர் அவளைப் பீடித்துக் கொண்டது. மிகப்பெரிய அதிர்ஷ்டம் என்னவாக இருக்கும்? அவள் யோசித்தாள்.

"ஐயோ, இவரிடம் ஏன் பழகி மனத்தைப் பறிகொடுத்தோம்? தாத்தா கூறியது சரிதான். 'அந்தஸ்து வித்தியாசத்தில் ஏற்படும் காதல் மிகவும் சோதனையைத் தரும். மறந்து விடுவது மேல்' என்று அவர் எனக்காகத் தான் கூறினாரோ?"

சந்திரப் பிரபாவின் முகத்தில் ஏற்பட்ட வாட்டத்தைக் கண்ட வல்லபன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டு, "பிரபா! திடீரென முகவாட்டம் ஏன்? கங்காபுரிக்குச் சென்று தாய் இட்ட பணியை நிறைவேற்றி விட்டு உடனே திரும்பி விடுவேன். உன்னைப் பார்க்காமல் என்னால் அங்கே ஒரு கணமும் இருக்க முடியாது" என்றான்.

சந்திரப்பிரபா விம்மினாள். "நான் எப்படி பிரிந்திருப்பேன்? இதற்கு முன்பெல்லாம் தாங்கள் சென்று வரும் போது என் பிள்ளை மனம் பிரிவைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. இப்பொழுது பிரிவு பெரும் பிளவுபோல் காட்சி தருகிறது. நானும் தங்களுடன் வந்துவிடட்டுமா?"

வல்லபன் அவளது விழிநீரைத் துடைத்து; "கங்காபுரிக்குச் சென்று விரைவில் திரும்புவேன். என் வார்த்தையை உறுதியாக நம்பலாம்" என்று கூறியவன், தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிச் சந்திரபிரபா எதிர்பாராவிதமாக அவள் விரலில் அணி வித்தான்.

சந்திரப்பிரபா நெகிழ்ந்தாள். வல்லபனின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "விரைவில் திரும்பி வந்து விடுவீர்களல்லவா? தாங்கள் வரத் தாமதமானால் நான் வேங்கியினின்று தங்களைத் தேடி அங்கு வந்து விடுவேன்" என்று கூறி விம்மினாள்.



மோதிரம் அணிந்த அவள் கையைப் பிடித்தான். அதன் மேல் தன் கையை வைத்தான். "விரைவில் வருவேன், உறுதி" என்றான்.

வல்லபன் பிரியாவிடை பெற்றுக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் நோக்கிப் புறப்பட்டான். அங்கே அவனுக்கு மாபெரும் அதிர்ஷ்டம் காத்திருந்தது.

## 10. "குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்!"

இருளில் வந்த உருவம் தன் கணவர் தான் என்று அல்லி புரிந்து கொண்டுவிட்டாள். இந்தநேரத்தில் மாளிகைக்குள் எப்படி வந்தார் என்றெல்லாம் அவளுக்குச் சிந்திக்க நேரமில்லை. இளம் குழந்தை ஆவலுடன், பாலைச் சுவைத்துக் கொண்டிருந்தது. அந்த இன்பத்தில் விழிகளை மூடி மெய்மறந்திருந்த அல்லி மெல்ல விழிகளைப் பாதி தான் திறந்தாள். கோவிந்தன் அவள் அருகே வந்து அமர்ந்து கொண்டான்.

அவள் உடல் நடுங்கியது. குழந்தையை இழுத்து அணைத்துக் கொண்டாள். "ஐயோ, இது அவராக இல்லாமல் இருக்கக் கூடாது?" என்று சுவாமிமலை முருகனை வேண்டிக் கொண்டாள்.

"முருகா! உன் பன்னிரு முகங்களில் ஒரு முகம் அன்புடையவர் துதிக்க அவர்களுக்கு விருப்பத்துடன் வரத்தைக் கொடுக்கக் கூடியதாயிற்றே! எனக்கு உதவக் கூடாதா?" என்று வேண்டினாள்.

அவள் தந்தை கற்பித்திருந்த முருகன் துதியைச் சொல்லிக் கொண்டாள்.

"அல்லி, அல்லி" என்று மெல்ல அழைத்தான் கோவிந்தன். அந்தச் சொற்களில் கமழும் அன்பை இனிமையை அவளால் ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை. வாய் திறவாமலும், விழிகளைத் திறவாமலும், நன்றாக உறங்குபவள் போல் இருந்து விட்டால், அவன் போய் விடுவான் என்று எண்ணினாள். இதுபோன்ற இருளில் குடிலில் கணவன் வந்து மெல்லத் தொட்ட சம்பவம் நினைவில் வந்தவுடன் அவள் உடல் சிலிர்த்தது. அப்போது அவன் கரங்களைத் தன்னிடம் பற்றி இழுத்து இறுக அணைத்துக் கொண்டது நினைவுக்கு வந்தவுடன் அவள் இதழ்களில் புன்முறுவல் நெளிந்தது. ஆனால் மறுவிநாடியே அதை மறைத்துக் கொண்டாள். "அல்லி! அல்லி!" என்று அப்போது அவன் அவளைத் தொட்டு எழுப்பினான். அல்லி மெல்ல முனகுவது போல் பாசாங்கு செய்தாள். "உஸ் சப்தம் போடாதே நான் தான்" என்று, மெல்லிய ஆனால் கரகரத்த குரலில் பேசினான் கோவிந்தன்.

அப்படியே படுத்திருக்க அல்லி விரும்பவில்லை. அதற்கு மற்றொரு காரணமுமிருந்தது. கோவிந்தனின் கரங்கள் குழந்தையை நோக்கி நீண்டன. குழந்தை பாலைச் சுவைத்துக் கொண்டிருப்பதைக் கூட அவன் இலட்சியம் செய்யாததை அறிந்த அல்லி தன் அன்புக்கு ஏங்கி அவன் இங்கு வரவில்லை, அரக்க குணத்துடன் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவனது கரத்தை அல்லி ஒதுக்கித் தள்ளினாள். அவளது விழிகள் அந்த இருளிலும் அக்னித் துண்டம்போல் ஜ்வலித்தன.

''இங்கே ஏன் வந்தீர்கள்? போய் விடுங்கள்....'' என்று மெல்லிய குரலில் கூறினாள் அல்லி. அதில் எச்சரிக்கை பிரதிபலித்தது.

''அல்லி! குழந்தையை எடுத்துக்கொணடு என்னுடன் வந்துவிடு. முடியாவிட்டால் குழந்தையையாவது என்னிடம் கொடுத்துவிடு'' என்று அவள் கரத்தைப் பற்றினான் கோவிந்தன்.

அவன் காத்தைப் பலத்துடன் தள்ளிய அல்லி, ''போய் விடுங்கள், இங்கிருந்து. இருள் வேளையில் இப்படி இரகசியமாக வருவது உங்களுக்கே நியாயமாக இருக்கிறதா?'' என்றாள்.

''நான் உன்னை மட்டும் தேடி வரவில்லை. இப்போது உன்னைவிட அந்தக் குழந்தை தான் எனக்கு வேண்டும்'' என்றான் கோவிந்தன்.

''என்னையும் தரமாட்டேன். குழந்தைகளையும் தாமாட்டேன். வீணே வாதிடாதீர்கள். மெல்லிய குரல் இன்னும் வலுவடையும். பணிப்பெண்கள் எழுந்து விடுவார்கள். பிறகு நீங்கள் அகப்பட்டுக் கொள்வீர்கள். உங்கள் மனைவி என்று என்னை மற்றவர் அடையாளம் கண்டு கொண்டவுடன், 'பூதகி' என்று என்னை நினைத்து என்னையும் உங்களுடன் சிறையிலடைத்து விடுவார்கள்'' என்று அல்லி மீண்டும் அவனுக்கு நல்லுரை கூறினாள்.

''என்னை யாரும் சிறைப்படுத்த முடியாது. நான் வீணே வாதிட விரும்பவில்லை. இந்த மாளிகைக்குப் பெரும் ஆபத்து வர இருக்கிறது. மாளிகையைச் சுற்றி என் ஆட்கள் சூழ்ந்து கொள்ளப் போகிறார்கள். சோழ வம்சத்துத் துளிரையும், பிஞ்சையும் கருக்கி விடப் போகிறார்கள். அதற்கு முன்பு நான் உன் மீதுள்ள காதலால் உன்னை எச்சரித்து, உன்னையும் தப்பிக்கச் செய்து குழந்தையையும் எடுத்துக் கொண்டோடி விட வந்தேன்'' என்று கூறினான். மெல்லப் பேசுவதிலும் இவ்வளவு பயங்கரச் செய்திகளைக் கூற முடியு மென்பதை அப்போதுதான் உணர்ந்தாள். அல்லியின் மெய் சிலிர்த்தது.

''தங்கள் எண்ணம் நிறைவேறாது. நான் இப்போது கூக்குர லிடுவேன். என் கரத்தாலேயே தங்களைப் பிடித்துக் கொடுத்து விடுவேன்'' என்று அல்லி சீறினாள். அது நல்ல பாம்பின் சீறலாய்த் தெரிந்தது.

பல்லைக் கடித்துக் கொண்ட கோவிந்தன் ''பெண் ஒரு பேதை என்று நன்றாகச் சொன்னார்கள். உன் கூக்குரலால் பயனில்லை. நான் நொடியில் தப்பிவிடுவேன். ஆனால் விடிவதற்கு ஒரு ஜாமத்துக்கு முன்பு இந்த சோழ கேரளத் திருமாளிகைக்கு என்ன கதி ஏற்படப் போகிறது பார். இந்த மாளிகையின் வாசலில் தான் காவல்காரர்கள் இருக்கிறார்களே தவிர, மற்ற மாளிகைக்குப் பாதுகாப்பு போதாது என்பது உனக்குத் தெரியாது. மல்லப்ப தேவனின் உதவியாளர்கள் பயங்கர ஆயுதங்களுடன் மாளிகையைத் தாக்கப் போகிறார்கள். அப்போது குழந்தை என்றும், பெரிய ராணி என்றும் பார்க்க மாட்டார்கள். என்னுடைய மனைவி என்றும் பரிதாபப்பட்டு உன்னை விட்டு விட



மாட்டார்கள்... அதற்காகத் தான் உன்னைக் காப்பாற்ற வந்தேன். நான் இங்கு வந்தது மல்லப்ப தேவருக்குத் தெரியாது. தெரிந்தால் என்னைக் கண்டதுண்டமாக வெட்டி விடுவார்''. அல்லி உடனே என்னுடன் புறப்பட்டுவிடு'' என்று கோவிந்தன் பரபரப்புடன் அவளை வற்புறுத்தினான்.

அல்லியின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. ''நீங்கள் எந்த இடத்திலும் உண்மையாக இருக்கமாட்டீர்கள் போல் தோன்றுகிறது.. இப்போது உங்கள் தலைவருக்குத் துரோகம் இழைக்கிறீர்கள். என்னை மட்டும் ஏன் காப்பாற்ற விரும்புகிறீர்கள்? இங்கிருந்து போய் விடுங்கள். உம்.... போய்விடுங்கள்...'' என்று சற்று உரத்த குரலிலே பேசினாள்.

கோவிந்தன் தலையைப் பலமாக அசைத்தான். அல்லியிட மிருந்து குழந்தையைப் பறிக்க முற்பட்டான்.

அல்லி குழந்தையை அணைத்துக் கொண்டாள். குழந்தை விழித்துக் கொண்டு விட்டது.

''இங்கிருந்து போய் விடுங்கள். நான் கூச்சலிடுவேன்...'' என்று கூறி அல்லி குழந்தையை மேலும் பாதுகாப்பாக அணைத்துக் கொண்டாள்.

குழந்தை சிணுங்கியது. திடீரென்று வீரிட்டு அழுதது. அல்லியைப் பிடித்து அவன் தள்ள எத்தனித்தபோது அல்லி ''ஆபத்து ஆபத்து.... உடனே ஓடி வாருங்கள்'' என்று கூவினாள். குழந்தையை எடுத்துக் கொண்டு இருளில் தடுமாறியவாறு நடுக்கூடத்தை அடைந்தாள்.

யாரோ நடமாடும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு விழித்தெழுந்த பணிப்பெண் ஒருத்தி 'என்ன என்ன' என்று கேட்டவாறு எழுந்து வருவது தெரிந்தது.

கோவிந்தன் கணத்தில் தாவிக் குதித்தோடி இருளில் மறைந்தான்.

''அல்லி! கனவு ஏதாவது கண்டாயா?'' என்று பணிப்பெண் கேட்டாள். விளக்கு ஏற்றப்பட்டது. அல்லிக்கு ஏற்பட்ட உடல் நடுக்கம் இன்னும் தீரவில்லை: பெரிய பிராட்டியும் எழுந்து விட்டாள். குழந்தை அழுது கொண்டிருந்தது.

கீழ் மாடத்திலும் யாரோ எழுந்து பரபரப்புடன் பேசும் குரல் கேட்டது. பறவைகள் சில தமது சிறகுகளைச் 'சடசட'வென்று அடித்துக் கொண்டு பறந்து சென்றன. ஓரிரு வௌவால்கள் அங்கும் இங்கும் பறந்தன. கூடத்தில் ஏற்றப்பட்ட ஒரே ஒரு விளக்கின் ஒளியில் அங்கு நிற்பவர்களின் நிழல் பயங்கரமாகத் தெரிந்தது.

அல்லி அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தியவாறு தொட்டிலில் உறங்கும் குழந்தையை நோக்கிச் சென்றாள். அந்தக் குழந்தை கவலை யில்லாமல் உறங்கிக் கொண்டிருந்தது. நல்ல உறக்கத்தில் ஏதாவது கனவு கண்டிருக்க வேண்டும். உதடுகளைக் குவித்து அது சிரித்தது.

பெரிய பிராட்டியின் எதிரே போய் நின்ற அல்லி, "அம்மா! எனக்குப் பயமாக இருக்கிறது. காவலர்களை உடனே அழையுங்கள்" என்றாள்.

"ஏன், இப்படி நடுங்குகிறாய்? துர்சொப்பனம் ஏதாவது கண்டாயா?" - பெரிய பிராட்டி கேட்டாள்.

"கெட்ட சொப்பனம் அல்ல தாயே. கொடிய நனவு தான் தாயே; உண்மைச் சம்பவம் தாயே; கனவு அல்ல. உடனே இங்கே தக்க பாதுகாவல் தேவை..." என்று அல்லி கூறினாள். அவள் குரலில் நடுக்கம். உடலில் நடுக்கம். பெரிய பிராட்டி மெல்லச் சிரித்தாள். "அல்லி! உனக்குப் புதிய இடம். ஏதாவது தீக்கனவைக் கண்டு பயந்திருப்பாய். கடவுளைத் துதித்து விட்டுப் படுத்துறங்கு. பயமாயிருந்தால், இங்கே இப்படி நடுக்கூடத்தில் உறங்கு..." என்று கூறி விட்டுப் பெரியபிராட்டி சென்று விட்டாள்.

அல்லி செய்வதறியாது, சொல்வதறியாது திகைத்து நின்றாள். காற்று வேகமாக அடித்து எரிந்த விளக்கையும் அணைத்தது. மரக்கிளைகள் பலமாக அசைந்தன. யாரோ பலர் வேகமாக ஓடிவரும் காலடி ஓசை கேட்டது.

"தாயே!... நான் கண்டது கனவன்று. குழந்தைகளுக்கு ஆபத்து நெருங்குகிறது தாயே! நான் சொல்வதைக் கேளுங்கள் தாயே!..." என்று அல்லி வாய் விட்டலறினாள்.

அவள் அஞ்சியது போல் ஆபத்து நெருங்கி விட்டது. தீவர்த்தியை ஏந்திய பலர், மாளிகை வாசலிலிருந்து ஓடி வருவது தெரிந்தது. அவர்களை நோக்கி மாளிகைக் காவலர்கள் கூச்சலிட்ட வாறு தொடர்வதும், "பிடியுங்கள்.... பிடியுங்கள்" என்று கூச்சலும், 'கிணிங் கிணிங்' என்று வாளுடன் வாள் மோதும் ஓசையும், வேல் பாய்ந்தால் 'ஆ' வென்று பயங்கர ஓலமும் மிக நெருக்கத்தில் கேட்டன.

இருள் திடீரென விலகி, செந்தணலின் நாக்குகளால் அந்த இடத்தில் பெரும் வெளிச்சம்.

"குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்" என்று அல்லி கூக்குர லிடுவது பெருங்கூச்சலிடையே கேட்டது.

## 11. விதியின் எழுத்து

நெறியுடைப் பெம்மாள் என்று புகழ்ந்து போற்றப்படும் இராஜராஜ சோழனின் சகோதரி அறம்வளர் செல்வி தன் மகனான தியாகனைப் பழையாறை அரண்மனையில் சந்தித்தபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன் தாயைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தால் எவ்வாறு பாசம் பொங்கிப் பாயுமோ அது போன்ற உணர்ச்சியைத் தியாகன் அடைந்தான். தாயின் முகத்தில் முன் எப்போதுமில்லாத பாச உணர்ச்சியுடன் பெருமை உணர்வும் பொங்கி வழிவதைக் கண்டான்.



"தியாகா! வந்துவிட்டாயா? நீ வருவதை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்" என்றாள் செல்வி அவனைத் தழுவி உச்சி முகர்ந்து, கண்ணேறு கழித்து கன்னத்தில் முத்தமிட்டு மஞ்சத்தில் அமரச் செய்து, அவன் வழிநடைப் பயண விவரங்களைக் கேட்டறிந்த போது, தியாகன் ஆவலை அடக்க முடியாமல், "தாயே! உடனே வருமாறு என்னை வரவழைத்த காரணத்தைச் சொல்லுங்கள். நான் செய்ய வேண்டிய பணி ஏதாவது இருப்பின் உடனே சொல்லுங்கள். நிறைவேற்றிவிட்டு நான் உடனே வேங்கிக்குத் திரும்ப வேண்டும். எனக்கு உதவி செய்ய அங்குப் பெரும் படையே திரண்டிருக்கிறது. நான் வேங்கியின் மன்னனாக வேண்டும் என்ற தங்கள் ஆசையை நான் நிறைவேற்றும் தருணத்தில் வந்துவிட்டது" என்றான்.

செல்வி பெருமிதம் ததும்பும் பார்வையுடன், "வல்லபா! என் பிரார்த்தனை பலித்து விட்டது. என் ஆசை நிறைவேறப் போகிறது. வேங்கிக்கு நீ திரும்பிச் சென்று அரச பதவியை அடைய வேண்டிய நிலைமை மாறிவிட்டது" என்றாள்.

வல்லபனுக்குப் புரியவில்லை. "நான் வேங்கிக்குத் திரும்ப வேண்டாமா? போரிட வேண்டாமா? என்ன காரணம்? சொல்லுங்கள் தாயே, சொல்லுங்கள்" என்று பரபரத்தான். "சோழ நாட்டின் அரியணை உனக்காகக் காத்திருக்கிறது. தொண்ணூற்றாறு விழுப்புண்களைப் பெற்ற விஜயாலய சோழதேவர் அமர்ந்திருந்த சோழ சிங்காதனம் உனக்குக் கிடைக்கப் போகிறது" என்று கூறும்போது மகிழ்ச்சியால் வார்த்தைகள் வராமல் தடைப்பட்டன.

வல்லபன் திடுக்கிட்டான். "சோழநாட்டு அரியணையா? அம்மா, என்ன சொல்கிறீர்கள்? கனவில் நடக்கும் செய்தியைப் போல் ஏதோ கூறுகிறீர்கள் அதற்காக என்னைப் பல காத தொலைவிலிருந்து வரவழைத்தீர்களா?" என்று கேட்டான். குரலில் நம்பிக்கைக் குறைவு இருந்தது.

"இல்லை... இல்லை... கனவு இல்லை. கற்பனையில்லை" உண்மைதான், மகனே! நாள்தோறும் நான் வணங்கித் துதித்த அம்பலவாணன் அருள் புரிந்து விட்டான். உன் தாய்மாமன் விரும்பி உனக்கு அளிக்கும் பதவி" என்று செல்வி, நடந்த செய்தியை விவரமாகக் கூறினாள்.

"இளவரசர் பட்டத்தை உனக்குச் சூட்ட அவர் விரும்புகிறார். சோழநாட்டு முதலமைச்சரும் திருக்கோவலூர் மலையமானும் அப்போது உடனிருந்தார்கள். உன்னை உடனே வேங்கியிலிருந்து வரைவழைக்குமாறு கூறினார்கள். நான் உன்னைக் கேட்காமலேயே மன்னரிடம் சம்மதம் தெரிவித்து விட்டேன். ஆனால்...." என்று கூறிச் செல்வி நிறுத்தினாள்.

தாய் சொல்வது கற்பனையன்று. கனவின் நிகழ்ச்சி அன்று. உண்மை தான் என்று அறிந்தான் தியாகன். சோழநாட்டின் மாபெரும் இளவரசப் பட்டம் மிக எளிதில் இளம் வயதில் தனக்குக் கிடைக்கிறது என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

''வல்லபா! என்ன யோசிக்கிறாய்?'' என்று தாய் அவன் முகத்தை உற்று நோக்கியவாறு கேட்டாள்.

''சோழநாட்டு இளவரசுப் பொறுப்பு என்பது சாதாரணமானதா? ஆதித்த சோழரும் சுந்தர சோழரும் அருள்மொழிவர்மரும், இராசேந்திரசோழரும் குலோத்துங்க மாமன்னரும் இளவரசராயிருந்து தங்கள் திறமையை, வலிமையைப் புலப்படுத்திய இடத்தில் எளிய வல்லபனால் அந்தப் பொறுப்பை நிர்வகிக்க முடியுமா? என்று சிந்திக்கிறேன்'' என்று வல்லபன் கூறினான்.

தாய் செல்வி சிரித்தாள். ''மகனே! கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசராக முயலும் நீ இங்கே இளவரசர் பதவியை ஏற்க ஏன் அஞ்சுகிறாய்? நானோ நீயோ கனவில் கூட எதிர்பாராத பதவி இது. உன்னுடைய திறமையை மன்னர் கவனித்து வந்திருக்கிறார். உன்னுடைய திறமை, வலிமை அவருக்கு நன்றாகத் தெரிந்திருக் கின்றன. பெற்ற தாய்க்கு மகனின் திறமை தெரியாதா? இப்போது அதைப் பற்றிய கருத்து வேற்றுமை யாரிடமும் இல்லை. ஆனால் நான் வாக்குறுதி ஒன்று கொடுத்திருக்கிறேன். அதை நீ நிறைவேற்ற வேண்டும்'' என்றாள் செல்வி.

''தாயே! தாங்கள் கொடுத்த வாக்குறுதி என்னவென்று இன்னும் என்னிடம் சொல்லவில்லையே'' என்று வல்லபன் கேட்டான்.

''மகனே! என் சகோதரரும், உன் தாய் மாமனுமான இராஜராஜ சோழ தேவருக்கு இவ்வளவு காலம் வாரிசை நிலைநாட்டக் குழந்தை இல்லை. ஓராண்டுக்கு முன்பு அவருக்குக் குழந்தை பிறந்து ஓராண்டு நிறைவேறு வதற்குள் மற்றொரு குழந்தையும் பிறந்துவிட்டது. ராஜகுருவின் யோசனையின் படி, சக்கரவர்த்தி எட்டாண்டுகள் அந்தக் குழந்தைகளைப் பார்க்கவே கூடாதாம். ஆனால் உடனே சோழ நாட்டின் இளவரசுப் பட்டத்திற்குரியவரை நியமித்தாக வேண்டும். ஒருவேளை ஈசன் செயலால் துரதிருஷ்டவசமாகச் சக்கரவர்த்தி களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் நீதான் சோழநாட்டுச் சக்கரவர்த்தி. ஆனால், இராஜராஜரின் குழந்தைகள் தக்க வயதை அடைந்து விட்டால் அவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விடவேண்டும். இந்த உறுதிமொழியைச் சக்கரவர்த்தி என்னிடம் கேட்டார். முதல் அமைச்சர் பெருமான் நம்பிப் பல்லவரையரும் அவ்வாறே கேட்டார். குழந்தைகளின் பாட்டன் திருக்கோவலூர் மலையமான் ஒருபடி மேலேயே உறுதிமொழி கேட்டார். 'குழந்தை களுக்குச் சோழ அரியணையை விட்டுக் கொடுப்பதாக உறுதி கொடுத்தால் தான் இளவரசர் பொறுப்பை இப்போது ஏற்கலாம். அந்தச் சம்மதத்தை வல்லபன் இப்போதே சத்தியம் கூறியாக வேண்டும்' என்று...'' எனக் கூறிச் செல்வி நிறுத்தினாள்.

வல்லபன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். ''தாயே! தாங்கள் அதற்கு என்ன மறுமொழி சொன்னீர்கள்?'' என்று மெல்லக் கேட்டான்.

''என் மகனை உறுதியை ஏற்குமாறு நான் செய்கிறேன். அவன் என் சொல்லுக்குக் கட்டுப்படுவான் என்று வாக்குக் கொடுத்து விட்டேன்'' என்று கூறி மகனின் முகத்தில் எழும் பிரதிபலிப்பை உற்று நோக்கினாள் செல்வி.



வல்லபன் சிரித்தான். கடகடவென்று சிரித்தான். சிரிப்பை ஒருவாறு அடக்கி, ''தாயே! இதென்ன விசித்திரமான வாக்குறுதி? இதுவரையில் சோழநாட்டிலே நடைபெறாத ஒரு செயலைச் செய்யுமாறு என்னை வற்புறுத்துகிறீர்களே!'' என்று அவன் கேட்டான்.

''ஏன்! இதற்கு முன்பு நடந்திருக்கிறது. உனக்குப் பழைய வரலாறு தெரியுமா? பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழநாட்டில் தஞ்சையில் பராந்தக சோழர் ஆண்டு கொண்டிருந்தார். அவருக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி என்று நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். மூத்த மகன் இராசாதித்தன் போரில் கொல்லப்பட்டு வீரசுவர்க்கம் அடைந்தான். அவனுக்குப் பிறகு கண்டராதித்த தேவர் அரியணை ஏறினார். அவர் சிவபக்தி மிக்கவர். பல ஆண்டுகள் கழித்து அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சில நாள்களிலேயே தன் மகன் சிறு குழந்தை என்பதால் தன் இளைய சகோதரன் அரிஞ்சயனுக்குக் கண்டராதித்தன் பட்டம் சூட்டினார். மதுராந்தகன் தக்க பருவம் அடைந்ததும் அவனிடம் அரசு உரிமையைத் தருமாறு கூறிய கண்டராதித்தர் சேரநாட்டிற்கு சிவத்தலங்களைத் தரிசிக்கச் சென்றார். பிறகு அங்கிருந்து மேற்குத் திசையிலுள்ள நாடுகளுக்குக் கலமேறிப் புறப்பட்டார். பல ஆண்டுகள் திரும்பியே வரவில்லை. அவரைப் பற்றிய செய்தியும் தெரியவில்லை. இளவரசுப் பட்டம் சூட்டப்பட்ட அரிஞ்சயன் அரசரானார். என்ன துர்ப்பாக்கியம் தெரியுமா, சில ஆண்டுகளிலேயே அரிஞ்சயன் போர் ஒன்றில் உயிர் துறந்தார்...''

''பிறகு என்ன நேர்ந்தது?'' வல்லபன் ஆவலுடன் கேட்டான்.

''அது ஒரு பெரிய கதை! பிறகு சொல்கிறேன். சோழநாட்டில் இளவரசுப் பதவிக்கு எந்த விதத்திலும் போட்டி ஏற்படாமல் முதலமைச்சரும், குறுநில மன்னர்களும் ஒழுங்குபடுத்தி விடுவார்கள். இப்போதும் அவ்வாறே குழந்தைகள் பெரியவர்களான பிறகு அவர்களிடம் ஒப்படைக்க நீ சம்மதித்தால் இளவரசுப் பட்டத்தை ஏற்கலாம். உன் முடிவு என்ன?'' என்று செல்வி கேட்டாள்.

வல்லபன் மௌனமாயிருந்தான். பிறகு அவன் சொன்னான். ''தாயே! எனக்குப் பழைய கதை தெரியும். அரிஞ்சயன் மகன் மதுராந்தகன் சிறு குழந்தையாயிருந்தார். ஆனால் அவருக்கு இளவரசுப் பட்டம் கிடைக்க வில்லை. அரிஞ்சயன் மகன் சுந்தர சோழரும், அவர் மகன் ஆதித்த கரிகாலனும் பிறகு அவரது சகோதரர் அருண்மொழியும் தொடர்ந்து இளவரசர்களாக விளங்கினார்கள். இப்போது மட்டும் என்னை விட்டுக் கொடுக்குமாறு ஏன் உறுதிமொழி கேட்கிறார்கள்?'' என்று வல்லபன் கேட்டான்.

செல்வி திடுக்கிட்டாள். தான் சொன்னவுடன் அப்படியே தன் மகன் ஒப்புக்கொள்வான் என்று நினைத்தது போக அவன் விவாதத்தில் இறங்குகிறானே என்ற கவலை கொண்டாள்.

ஆனால் அவள் கவலையைப் போக்க வந்ததுபோல் முதலமைச்சர் பெருமான் நம்பிப் பல்லவரையர் "தக்க சமயத்தில் பதவியை விட்டுக் கொடுத்த பழைய கதையை நான் சொல்கிறேன்" என்று கூறிக் கொண்டே அங்கே வந்தார்.

## 12. நள்ளிரவில் உதவி

இருள் பகலானதைப்போன்று எங்கும் வெளிச்சம். சிவந்த தீ நாக்குகள் இருளை விழுங்குவது போல் இருளை நோக்கி நீண்டன. 'ஹோ' 'ஹா' என்ற கூக்குரல் எங்கும் கேட்டது. பெண்களின் அபயக்குரல் பயங்கரத்தை அதிகம் செய்ததுமாகச் ஓடுபவர்களும், ஓடுபவர்களைத் துரத்துபவர்களும், ஓடுபவர்களை 'விடாதே' விடாதே' என்று கூக்குரலால் பயமுறுத்தப் பார்ப்பவர்களுமாக அந்த இரவின் பின் ஜாமத்தில் அந்த மாளிகை அல்லோல கல்லோலப் பட்டது. சோழ கேரளன் திருமாளிகையின் ஒரு பகுதி எரிந்து கொண்டிருந்தது.

செய்வதறியாது ஒரு கணம் குழந்தையை அணைத்துக் கொண்டு நின்ற அல்லியினருகே வந்த பெரிய பிராட்டி, "நீ ஏதோ கனவு கண்டு உறக்கத்தில் பிதற்றுகிறாய் என்று நினைத்தேன். உண்மையாகி விட்டதே" என்றாள். அந்த முதிய உடலிலும் நடுக்கம் இருந்தது. சிறிது நேரம் செய்வதறியாது இங்கும் அங்கும் நடந்தாள். பிறகு அல்லியின் அருகே வந்தாள். "அல்லி! பயப்படாதே. நம் வீரர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள்" என்றாள்.

திடீரென்று மாளிகையைத் தாக்கி எரியூட்டச் சிலர் முயல்வதன் காரணம் பெரிய பிராட்டிக்குப் புரியவில்லை. கங்கை கொண்ட சோழபுரத்தைத் தாக்கும் பகைவர்கள் யார் இருக்கப் போகிறார்கள் என்று யோசனை செய்யக் கூட பெரிய பிராட்டிக்கு அப்போது தோன்றவில்லை.

"ஏன் இப்படித் திடீரென்று கலகம்? இடங்கை, வலங்கைப் படையினரின் கலகம் பல வருடங்களுக்கு முன்பு நடந்தது. மீண்டும் அப்படி கலகஞ் செய்பவர்கள் ஒருவருமில்லையே?..." என்று முணுமுணுத்துக் கொண்டாள் பெரிய பிராட்டி.

"அம்மா! குழந்தைகளைத் தூக்கிச் செல்லச் சிலர் சதி செய்கின்றனர்!" என்று அல்லி வார்த்தைகள் முழுமையையும் சொல்லவில்லை.

மேல் மாடத்தை நோக்கிச் சிலர் ஓடிவரும் அரவம் கேட்டது. கீழ்த் தளத்திலுள்ளவர்களின் ஓலம் அல்லியை நடுநடுங்க வைத்தது.

"காப்பாற்றுங்கள்" என்று அல்லி கூவியவாறு இங்குமங்கும் ஓடினாள். இப்போது அனைவரும் விழித்தெழுந்து விட்டனர். பணிப் பெண்கள் செய்வதறியாது திகைத்தனர். அரச குலத்து உறவின் முன்னோர்கள் என்ன நடக்கிறது, என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு மூலையில் பயந்து நின்றனர்.



அல்லி தொட்டிலிலிருக்கும் குழந்தைகளை எடுத்துக் கொண்டாள். இரண்டு குழந்தைகளையும் தோளில் சாய்த்துக் கொண்டாள். தூக்கம் கலைந்ததால் அவை வீரிட்டழுதன. படிக்கட்டுகளில் ஏறி ஓர் உருவம் அங்கே வந்தது. அந்த உருவத்தைத் தொடர்ந்து இரண்டு வீரர்கள். அல்லி பயத்தால் அலறினாள்.

"அல்லி!" என்று பயந்து அந்த உருவம் குரல் கொடுத்தது. "பயப்படாதே. என்னைப் பின் தொடர்ந்துவா. ஒரு குழந்தையை என்னிடம் கொடு" என்றது அந்த உருவம்.

"நீங்கள்.... நீங்கள்..." என்று அல்லி ஏதோ கேட்க வாயெடுத்தாள்.

"உம்.... அதற்கெல்லாம் நேரமில்லை. பெரிய பிராட்டியையும் மற்றவர்களையும் வீரர்கள் அழைத்துச் செல்வார்கள். நீ என்னைத் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக வரவேண்டும்" என்று கட்டளையிட்டது அந்த உருவம்.

சின்னஞ்சிறு சிறு கைகளும், கால்களும் பூவினும் மென்மை யான மேனியும் கொண்ட சிறிய குழந்தையை அல்லி எடுத்துக் கொண்டாள். தொட்டிலிலிருந்த குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டது அந்த உருவம். இரண்டு எட்டில் அந்த உருவம் விரைந்தது. அல்லியும் பின் தொடர்ந்தாள்.

மாளிகையைச் சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் நடுவில் இருந்த சிறு மண்டபமொன்றை அவர்கள் அடைந்தனர். மண்டபத்தின் நடுவே சுரங்கவழி திறந்திருந்தது. பூமியின் அடியில் இறங்கப் படிக்கட்டு இருந்தது. படிக்கட்டில் அகல்விளக்கு சிறு ஒளியை வீசிக் கொண்டிருந்தது. முன்பே பழக்கப்பட்டவர் போல் அல்லியை அழைத்துக் கொண்டு அந்த உருவம் சென்றது. சிறிது தொலைவு சென்றவுடன் தீவர்த்தியை ஏந்தியவாறு ஒருவன் நின்று கொண்டிருந்தான். சுரங்கப்பாதை மிகக் குறுகலாக இருந்தது. இயற்கையாகக் காற்று வீசுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருந்த தால் மூச்சுத் திணறாமல் அவ்வழியில் செல்ல முடிந்தது. பின் தொடர்ந்து சிலர் வருவதும் சில கணத்திற்குள் புலப்பட்டது.

"நம்மை யாராவது பின் தொடர்கிறார்களா?" என்று அல்லி நடுக்கத்துடன் கேட்டாள். இரு குழந்தைகளும் அழுது கொண்டிருந்தன.

"பெரிய பிராட்டியாரையும், மற்றும் பெண்கள் சிலரையும் வீரர்கள் அழைத்து வருகிறார்கள்" என்று மட்டும் குரல் கொடுத்தது அவ்வுருவம்.

தன்னைக் காப்பாற்றி அழைத்துச் செல்வதாகத் தான் அல்லி நம்பினாள். அவளால் அந்த உருவத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. தலையில் பெரிய முண்டாசுடன், போர்வையை முழங்கால் வரை மறைத்துக் கொண்டிருந்தாலும் மறைக்கப்படாத முகத்திலிருந்து அவளால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

சிறிது தொலைவு சென்ற பிறகு, "அல்லி! உனக்குச் சந்தேகமிருக்கும், நான் குழந்தையைக் காப்பாற்ற வந்தவன் தானா என்று. உன்னிடமிருப்பது போன்ற அடையாள மோதிரம் என்னிடமும் இருக்கிறது, இதோபார்!" என்று தன் கை விரல்களைக் காட்டியது அந்த உருவம். அல்லியின் சந்தேகமும், பயமும் நீங்கின. "இனி குழந்தைகளுக்கு அபாயம் இருக்காதல்லவா?" என்று அல்லி கேட்டாள்.

"இனி என்ன?... எப்போதும் குழந்தைகளுக்கு அபாயம் கிடையாது. ஆனால், குழந்தைகளைத் தக்க இடத்தில் மிகவும் கவனமாக வளர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த மாளிகையினின்று, வெளியே கொண்டு செல்கிறேன்" - நடந்தவாறு கூறியது அந்த உருவம்.

"மாளிகையினின்று பெரிய பிராட்டியை ஏன் அழைத்துச் செல்கிறீர்கள்?" அல்லி கேட்டாள். அவள் கேட்டதற்கு உடனுக்குடன் அந்த உருவம் மறுமொழி கூறியது.

"இனியும் ஆபத்து ஏற்படாமலிருக்க."

"அப்படியென்றால் கங்காபுரியில் அரச குடும்பத்திற்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லுங்கள்..."

"ஆமாம், எதிர்ப்பு வலுவடையலாம்..."

"நம் வீரர்களை எதிர்த்துக் கலகஞ் செய்யக் கூடியவர்களும் இருக்கிறார்களா?"

"குழந்தைகளைக் கொல்லத் திட்டமிட்டுள்ள கலகக்காரர்களை அடக்குவதற்குப் பழையாறையிலிருந்து ஏராளமான படைவீரர்கள் வந்து விட்டார்கள். இந்த நேரத்துக்குள் மாளிகையைத் திடீரென்று தாக்கியவர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்திருப்பார்கள். அனைவரையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் பிடித்துவிட வேண்டும் என்பதற்காகவே விட்டுப் பிடித்தோம்...."

இதைக் கேட்ட அல்லி நடுங்கினாள். அவளுடைய கணவனின் கதி?

"ஒருவர் கூடத் தப்பிவிட மாட்டார்களில்லையா?" அல்லியின் குரலில் பயத்துடன் கவலையும் இருந்தது.

"ஆமாம்; உன் கணவன் கூட அகப்பட்டுக் கொண்டிருப்பான்" என்று கூறியவுடன் அல்லி திடுக்கிட்டாள்.

இவர் யார்? எல்லாச் செய்திகளையும் தெரிந்து வைத்திருக்கிறாரே என்ற கவலை அவளைப் பீடித்தது. இவர் யார்?

"ஐயா! நான் தங்களைப் பார்த்ததேயில்லை. சகல விஷயங் களையும் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, தாங்கள் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று அல்லி பயத்துடன் கேட்டாள்.



அவர் திரும்பிப் பார்த்தார். "அல்லி! நீ என்னைப் பார்த்திருக்க நியாயமில்லை. நான் பல ஆண்டுகளாக இந்தப்பக்கமே வரவில்லை. நான் தான் இந்தக் குழந்தைகளின் பாட்டனார்" என்று கூறினார் மலையமான்.

அல்லி அடைந்த வியப்பு ஒருவிதக் குரலோசையாக வெளிப்பட்டது.

"ஐயா! தக்க சமயத்தில் தான் வந்தீர்கள்" என்று அல்லி நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

"தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தேன். நான் காலையி லிருந்தே கங்காபுரியில் தான் இருக்கிறேன். சதிகாரர்களின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருந்தேன். சரியான சமயத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். என் பெயரர்கள் இருவரையும் அழித்துவிடுவதன் மூலம் சோழ குலத்தையே நசுக்க முடிவு செய்துவிட்டார்கள். முடியுமா? சோழநாட்டை என் பெயரன் ஆளுவதினின்று தடுக்க ஒருவராலும் முடியாது" என்றார்.

சுரங்கப்பாதை முடிவடையும் இடம் வந்து விட்டது. தீவர்த்தி ஏந்தியவன் படிக்கட்டுகள் வழியாக மேலே ஏறுவது தெரிந்தது.

"ஐயா! ஒரே ஒரு சந்தேகம் கேட்கலாமா? இந்த இரு குழந்தைகளும் சேர்ந்தே நாட்டை ஆளப்போகிறார்களா?" என்று அல்லி கேட்டாள். அவர்களைக் காப்பாற்ற வந்த திருக்கோவலூர் மலையமான் பெரிதாகச் சிரித்தார்.

"நல்ல கேள்வி கேட்டாய் அல்லி! பெரியவர்கள் ஆனபிறகு யாராவது ஒருவன் தான் நாட்டை ஆள முடியும். அதனால் தான் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளப் போகிறேன். நீ ஓர் உதவி செய்ய வேண்டும். திருக்கோவலூர் அரண்மனை வரை குழந்தைகளைக் காப்பாற்றி அழைத்து வரவேண்டும்" என்றார்.

அல்லி திடுக்கிட்டாள். "திருக்கோவலூருக்கா? நம்பி அவர்கள் அப்படிச் சொல்லவில்லையே, அவருடைய உத்தரவு இல்லாமல் செய்யமாட்டேன்" என்றாள்.

மலையமான் ஒரு கணம் திகைத்தார். படிக்கட்டுகளில் நின்றவாறு, "என்ன சொன்னாய் பெண்ணே! என்னிடம் ஒப்படைக்க மாட்டாயா?" என்றார்.

"ஆம்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் அல்லி.

"பெருமான் நம்பி சொன்னால் கேட்பாயா?"

"அவரது கட்டளையை மீற முடியுமா?"

"நான் குழந்தைகளின் பாட்டனல்லவா? நான் குழந்தைகளை அழைத்துச் செல்வதில் உனக்கென்ன ஆட்சேபம்?"

"எனக்கு அரச குடும்ப விவகாரங்கள் தெரியாது, புரியாது. குழந்தைகளைப் பாதுகாத்து ஒப்படைக்க வேண்டுமென்று படைத்தலைவர் உத்தரவிட்டார். அதன்படி தான் நடப்பேன்"

மலையமான் மீண்டும் நகைத்தார். "அல்லி! இன்னும் சிறிது நேரத்தில் சுரங்கப்பாதை வெளியே நீ பெருமான் நம்பியைச் சந்திக்கப் போகிறாய். அவரே உன்னிடம் சொல்லுவார்" என்றார்.

சுரங்கப்பாதை கோட்டைக்கு வெளியே வந்து முடிந்தது. வெப்பக் காற்று நீங்கி வெளி உலகக் குளிர் காற்று புத்துணர்ச்சியை அளித்தது. அழுது கொண்டிருந்த குழந்தைகளும் அழுகையை நிறுத்தினர்.

மலையமான் கூறியது போல் பெருமான் நம்பிப் பல்லவரையர் வீரர்களுடன் அங்கே நின்று கொண்டிருந்தார்.

அவர் தமது வலக் கை நான்கு விரல்களையும் மடித்துக் கொண்டு கட்டை விரலை மட்டும் உயர்த்திக் காட்டினார்.

மலையமானும், "பெயரர்களைப் பத்திரமாகக் கொண்டு வந்து விட்டேன்" என்று அவருக்கு மறுமொழி போல் கூறினார்.

"சோழ குலத்து அரசரை என்று சொல்லுங்கள்" என்று அவரைத் திருத்தினார் பல்லவரையர் "ஆகா, அப்படியே சொல்கிறேன். சோழ சக்கர வர்த்தியை பத்திரமாக அழைத்து வந்து விட்டேன்" என்று கூறிய மலையமான் அல்லியைப் பார்த்தவாறு, "நம்பி! நீங்கள் தேர்ந்தெடுத்த பெண் அல்லி மிகக் கெட்டிக்காரியாக இருக்கிறாள். குழந்தைகளைத் தங்கள் அனுமதியில்லாமல் என்னிடம் ஒப்படைக்க மாட்டாளாம்" என்றார்.

"அவள் சொல்வது நியாயம் தானே? அவளிடம் தான் குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தேன்" என்றார் பெருமான் நம்பி.

"அல்லி என்ன படைவீரர்களைத் தனக்குத் துணையாக வைத்துக் கொண்டிருக்கிறாளா குழந்தைகளைப் பாதுகாக்க?" என்று கேட்டார் மலையமான்.

"படை வீரர்களை விட மிகப்பெரிய ஆயுதம் அவளிடம் இருக்கிறது" என்று குறும்புச் சிரிப்புடன் கூறினார் நம்பி.

அல்லி புரிந்து கொண்டாள். தலையைக் குனிந்து கொண்டாள். மலையமான் புரிந்து கொள்ளவில்லை. நம்பி, அவர் காதருகே மெல்லக் கூறினார்.

"அதற்கென்ன, அல்லியையும் திருக்கோவலூருக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கே தங்கியிருந்து குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கட்டும்" என்றார் மலையமான்.

"மலையமான் அவர்களே! குழந்தைகளிருவரையும் தக்கவர் களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை என்னிடம் அளியுங்கள். குழந்தை களைத் திறமையுடன் வளர்க்கும் பொறுப்பை நானும் ஏற்க வேண்டாம். நீங்களும் ஏற்க வேண்டாம். விரோதிகள் நெருங்காத இடத்தில் அவர்களைக் கொண்டு சேர்ப்போம்" என்றார் பெருமான் நம்பி.



"என்ன சொல்கிறீர்கள், எனக்குப் புரியவில்லையே?" என்று கேட்டார் மலையமான்.

"முதலில் நாம் கங்காபுரியை விட்டுக் குழந்தைகளைக் கொண்டு சென்று விடுவோம்" என்றார் நம்பி.

பழையாறைக்குச் செல்வதை விடத் திருக்கோவலூருக்கு என் அரண்மனைக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்வது நியாயமாகத் தோன்றவில்லையோ தங்களுக்கு? மன்னர் சில ஆண்டுகளுக்குக் குழந்தைகளைப் பார்க்கவே கூடாது என்று ராஜகுரு சொல்லி யிருக்கிறாரே, மறந்து விட்டீர்களா?" என்று மலையமான் கேட்டார்.

"ஆம். அதனால் தான் பழையாறைக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லப்போவதில்லை. பெரிய பிராட்டியும், மற்ற அரச குலப் பெண்டுகள் மாத்திரம் ஆயிரத்தளி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்..." என்று கூறி நம்பி நிறுத்தினார்.

"பிறகு, குழந்தைகள்?" - மலையமான் ஆவலுடன் கேட்டார்.

"கேசவ சுவாமியும், அரச அவைக் கவிஞர் கூத்தர் பிரானும் இராசராசபுரம் மாளிகையில் நமக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களிடம் குழந்தைகளை அழைத்துச் செல்வோம். யார் எந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்கிறார்களோ அவரிடம் ஒப்படைத்து விடுவோம்" என்றார் நம்பி.

மலையமான் சிறிது யோசித்தார். பிறகு, "நல்ல திட்டம் தான். கேசவ சுவாமி வடமொழியிலும், தர்க்கசாஸ்திரங்களிலும் ஜோதிடக் கலையிலும் வல்லவர். ராஜரீக முறைகளைத் திறம்படக் கற்றுக் கொடுப்பவர். பெரிய குழந்தையை அவரிடம் ஒப்படைப்போம். ஒட்டக்கூத்தர் மகாமேதை. மூன்று தலைமுறையாக அவர் அரச அவைக் கவிஞராக இருந்து மாபெரும் காப்பியங்களைப் படைத்தவர். முதிர்ந்த அறிவும், ஆற்றலும் மிக்கவர். ஒரு குழந்தையை அவர் ஒளிமிக்க மாமேதையாக ஆக்கட்டும்" என்றார்.

"யார் எந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்வார் என்பதை நாம் முடிவு செய்ய வேண்டாம். கேசவசுவாமியும், கூத்தர் பிரானும் முடிவு செய்யட்டும்" என்றார் பெருமான் நம்பி. அப்போது அல்லியிட மிருந்து விம்மும் ஒலி கேட்டது.

"அப்படியென்றால் நான் குழந்தைகளைப் பிரிந்து பழை யாறைக்குச் சென்றுவிட வேண்டியது தானா? பழையபடி பூந்தோட்டத்தில் மாலைகளைக் கட்டியவாறு சோகத்தில் மூழ்க வேண்டியதுதானா? என் கணவரைப் பிரிந்தேன். இந்தப் பச்சிளம் குழந்தை முகத்தைப் பார்த்தாவது வாழ்வில் அமைதியைத் தேடிக் கொள்ளலாம் என்று கனவு கண்டேன். என்னிடமிருந்து குழந்தைகளைப் பிரிக்காதீர்கள். நீங்கள் பிரித்தாலும் இந்தத் தெய்வங்களை நான் பிரிய மாட்டேன்." என்று கூறிக் கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள், அல்லி.

"அல்லி! வருந்தாதே. உன்னிடமிருந்து குழந்தையைப் பிரிக்கும் யோசனை எனக்கில்லை. பாலூட்டிப் பராமரிக்க வேண்டும் என்பதற்காகத் தானே உன்னை கங்காபுரிக்கு அனுப்பினேன்? பால் மறக்காச் சிறிய சிசுவை யார் வளர்க்க ஏற்றுக் கொள்கிறார்களோ அவரோடு அங்கேயே நீ இருக்கலாம்" என்றார் நம்பி.

இரு குழந்தைகளுள், சின்னஞ்சிறு பாலனை ஏற்றுக் கொள்ளப் போவது கேசவ சுவாமியா அல்லது கூத்தர் பிரானா என்ற ஆவல் அல்லிக்கு மட்டுமென்ன மலையமானுக்கும் பெருமான் நம்பிப் பல்லவரையருக்கும் ஏற்பட்டது.

## 13. இளவரசனுக்கு ஓர் இளவரசி!

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜசோழ தேவரைச் சந்திக்கப் போகும் முன்பு, தன்னிடம் உறுதிமொழியைத் தரவேண்டும் என்று சோழ நாட்டு முதல் அமைச்சரும் மாதண்ட நாயகருமான திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர் வல்லபனிடம் எதிர்பார்த்தார். தன்னை வேங்கியினின்று வரவழைத்த தாயும் தனது விழியாலேயே தன் சம்மதத்தை எதிர்பார்க்கிறாள்.

இப்போது சின்னஞ்சிறு குழந்தைகளாக இருக்கும் மன்னர் பிரானின் புதல்வர்களுள் ஒருவரிடம் தான் இளவரசுப் பதவியைப் பிறகு ஒப்படைக்க வேண்டுமாம்.

வல்லபன் மெல்லத் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

"இளவரசரே! தங்களுக்குள்ளேயே மெல்லச் சிரித்துக் கொள்ளும் காரணத்தை நான் அறியலாமா?" என்று நம்பி கேட்டார். செல்வியும் மகனுடைய முகத்தையே கூர்ந்து நோக்கியவாறிருந்தாள்.

"வேங்கியிலிருந்தால் நான் கீழைச் சாளுக்கிய நாட்டு மன்னர். சோழ நாட்டிலோ இளவரசர்! அதுவும் நிரந்தரமற்ற பதவி. விட்டுக் கொடுக்க வேண்டிய பதவி. நாளைக்குச் சாதாரணப் பிரஜையாக சோழநாட்டிலும் இருக்க முடியாமல், வேங்கியிலும் வாழ முடியாத நிலை ஏற்படுமே என்பதை நினைக்கும் போது சிரிப்பு வந்தது!" என்றான் வல்லபன். பிறகு உடனே தொடர்ந்து, "பெருமான் நம்பி அவர்களே! என்னை இளவரசர் என்று அழைக்கிறீர்களே அந்தப் பதவியைத் தர முடிவு செய்து விட்டீர்களா?" என்று கேட்டான்.

"இளவரசரே! கீழைச் சாளுக்கியநாட்டு அரசர் பதவியை விடச் சோழநாட்டு இளவரசர் பதவி உயர்ந்தது என்பது தங்களுக்குத் தெரியாததா?" என்று நம்பி கேட்டார்.

"எந்த விதத்தில் என்று அறியலாமா?" வல்லபன் கேட்டான்.



"கீழைச் சாளுக்கிய நாடு, சோழ மன்னர்கள் அளித்த பிச்சை என்பதும், இன்றளவும் சோழநாட்டுக்குத் திறைப்பணம் செலுத்தி வரும் சிற்றரசர்கள் தாம் அவர்கள் என்பதும் தங்களுக்குத் தெரியாதா?" என்று நம்பி கூறியதும் வல்லபன் திகைத்தான். என்றாலும், தாயை நோக்கி, "அம்மா! தங்களுடைய இலட்சியமெல்லாம் என்னை வேங்கி சிங்காதனத்தில் அமர வைத்துப் பார்ப்பது ஒன்று தானே? சோழ இளவரசர் பதவி குறித்துத் தாங்கள் இப்போது ஆசை கொண்டது ஏன்?" என்றான்.

"மகனே! வேங்கியில் நீ அரசனாக அமரவேண்டும் என்று எண்ணியது உண்மை தான். அது உன்னுடைய உரிமை இடம். ஆனால், சோழநாட்டு இளவரசர் பதவியை என் சகோதரர் உனக்கு விரும்பி அளிக்கிறார். இளவரசர் பதவிக்கு ஏற்றவன் நீதான் என்று உறுதியாக அவர் முடிவு செய்தபடியால் நான் உன்னை வரவழைத்தேன்" என்றாள் செல்வி.

"சக்கரவர்த்திகளின் எண்ணம் நியாயமானதாயிருக்கலாம். ஆனால் நிபந்தனை விதிப்பதைத் தான் என்னால் ஏற்க முடியவில்லை."

"இளவரசரே! நிபந்தனையை இப்போதே விதிக்காவிடில் பிறகு பல தொல்லைகள் ஏற்படக் கூடும். சோழநாட்டின் பட்டத்துக்கு எந்தவிதப் போட்டியும் பூசலும் வருங்காலத்தில் இருக்கக் கூடாது என்பதை எண்ணியே முன் எச்சரிக்கையாக நானும், மற்ற பெரியவர்களும் முடிவு செய்தோம்" என்ற நம்பி மேலும் தொடர்ந்தார்.

"சக்கரவர்த்திகளுக்குத் தன் வாழ்நாளைப் பற்றிய ஏதோ ஓர் ஐயப்பாடு மனத்தில் குடி கொண்டிருக்கிறது. தன் வாழ்நாளின் இறுதி நெருங்குவதாக அவருக்குத் தோன்றுகிறது. சோழநாட்டின் வருங்காலத் திட்டம் தெளிவாக இப்போதே முடிவாக வேண்டும் என்றும், தாம் அந்திம காலத்தை அமைதியாகக் கழிக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்" என்று நம்பி கூறும்போது அவர் உணர்ச்சி வயப்பட்டவராகத் தோன்றினார்.

சிறிது நிறுத்திப் பிறகு தொடர்ந்து, "இளவரசரே! சோழநாடு இன்று எந்தவித பூசலுமின்றி அமைதியாக இருக்கிறது. ஆனால் நாளைக்கே பெரும் இடர்கள் ஏற்படலாம். பாண்டியர்கள் அப்போதே படைகளைத் திரட்டுவதாகக் கேள்வி. ஈழத்து அரசர்கள், சோழநாட்டின் மீது படை எடுத்துக் கைப்பற்றப் பெரும் சதித்திட்டம் வகுப்பதாக நமது ஒற்றர்கள் தெரிவித்துள்ளார்கள். இவற்றை யெல்லாம் எதிர்பார்க்கும் போது சோழநாட்டில் திறமையுடன் பலமும் ஆற்றலும் மிகுந்த தலைமை இருக்கவேண்டும். சக்கரவர்த்திகள் இவற்றையெல்லாம் முன்பே திட்டமிட்டுச் செய்ய விரும்புகிறார். சின்னஞ்சிறு குழந்தைகள் தாம் சோழநாட்டு வாரிசு. அவர்களை எளிதில் வென்று விடலாம் என்று எதிரிகள் மனப்பால் குடிக்கக் கூடாது. அதனால் தான்..." என்று நம்பி கூறி முடிப்பதற்குள், வல்லபன் குறுக்கிட்டான்.

''பெருமான் நம்பி அவர்களே! தங்களை விட அறிவும் பலமும் நிறைந்தவர்கள் இருக்கும்போது சோழநாட்டிற்கு என்ன பயம்? குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் வரையில் தாங்களே ஆட்சியை நடத்தலாமே?'' என்று கூறினான்.

செல்வியும், நம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். நம்பி புன்முறுவல் பூத்தார்.

''முதலமைச்சர் சோழநாட்டை ஆண்டதாக இதுவரையில் சரித்திர மில்லை'' என்று விடை பகர்ந்த நம்பி சற்றுக் குரலை உயர்த்தி, ''இளவரசரே! சோழநாட்டு இளவரசர் பதவியை விட, வேங்கியின் சிற்றரசர் பதவி தான் தங்களுக்குப் பிடித்தமானதா? சொல்லுங்கள்?'' என்று கேட்டார்.

வல்லபன் சிறிது யோசித்தான். ''என் திறமையை நம்பி எனக்குச் சோழ இளவரசப் பதவியைச் சக்கரவர்த்திகள் அளிக்கிறார்கள் என்றால் அது என் முன்னோர்கள் செய்த புண்ணியம். என் தாய் என்ன கட்டளையிடுகிறாரோ, என்ன விரும்புகிறாரோ அதுவே என் விருப்பம்'' என்றான்.

இதுவரை தன் மகன் என்ன சொல்லப்போகிறானோ என்ற கவலையில் வாடிய செல்வியின் முகத்தில் புதிய ஒளி மிளிர்ந்தது. ''மகனே!'' என்று ஆவலுடன் அழைத்து, அவனை அணைத்து ஆறத்தழுவி உச்சி முகர்ந்து முத்தமிட்டு ஆசி கூறினாள்.

பெருமான் நம்பிப் பல்லவரையர் எழுந்து நின்றார். ''இளவரசரைப் பெற்றெடுத்த புண்ணியவதியே! சோழ நாடு புண்ணியம் செய்து விட்டது. இளவரசர்க்கான மண்டை கவிழ்க்கும் சடங்குகளைச் செய்ய நல்ல நாளை உடனே பார்க்க வேண்டும். அந்த நாள் மகத்தான சோழ வள நாட்டின் வரலாற்றிலே திருப்பு முனையான நாள் : நான் இப்போதே தங்கள் மகனைச் சக்கரவர்த்தி களிடம் அழைத்துச் செல்கிறேன். நான் கேட்ட உறுதியை இன்னும் தாங்கள் இருவரும் ஏற்றதாகக் கூறவில்லையே'' என்றார்.

''தாங்கள் விரும்பிய வண்ணம் உறுதியை அளிக்கிறேன்'' என்றான் வல்லபன்.

''என்னிடமோ, சக்கரவர்த்திகளிடமோ உறுதியளிப்பதை விட, வருங்கால சோழ அரசரிடமே உறுதிமொழியை அளித்தால் போதும்'' என்றார் நம்பி.

''சோழநாட்டின் இளவரசராகவும், பிறகு சக்கரவர்த்தியாகவும் திகழப்போகும் அந்தக் குழந்தைகள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? அந்தப் புண்ணிய பூபதிகளை நான் காண வேண்டாமா?'' என்றான் வல்லபன்.

''என் அருமைச் சகோதரரின் செல்வங்களை நானும் இன்றளவும் பார்க்கவில்லை. ஆயிரத்தளி மாளிகைக்குக் கங்காபுரியிலிருந்து அந்தப்புர மகளிர் எல்லாரும் வந்துவிட்டார்கள் என்று கேள்விப் பட்டேன். குழந்தைகளும் அங்கே தான் இருக்கிறார்களா?'' என்று செல்வி கேட்டாள்.



''கங்காபுரியில் நேர இருந்த பெரும் ஆபத்திலிருந்து தப்பிய அந்தப்புரப் பெண்கள், பெரியபிராட்டி அனைவருமே இராச ராசபுர மாளிகையில் இருக்கிறார்கள். ஆனால் அரச குமாரர்கள் அங்கில்லை'' என்றார் நம்பி.

''அவர்கள் எங்கே?'' என்று செல்வியும் வல்லபனும் ஒரே குரலில் கேட்டார்கள்.

''குழந்தைகளைக் கொன்றுவிடச் சதித்திட்டம் தீட்டியவர்களின் சதியை முறியடித்துக் குழந்தைகளைக் கொண்டு வந்து தக்க இடத்தில் சேர்த்து விட்டோம்...'' என்றார் நம்பி.

''நான் உடனே குழந்தைகளைப் பார்க்க வேண்டும்'' என்று பரபரப்பும் ஆவலும் மிகக் கேட்டான் வல்லபன்.

''இளவரசே! தாங்கள் குழந்தைகளை உடனே பார்க்கத்தான் போகிறீர்கள். குழந்தையின் எதிரே வாள்மீது ஆணையிட்டுத் தாங்கள் உறுதி எடுத்துக் கொள்ள போகிறீர்கள். முதலில் நாம் சக்கரவர்த்தி யின் சமூகத்தைக் காணச் செல்கிறோம். அங்கிருந்து குழந்தை களைக் காணப் பயணமாகிறோம்'' என்றார் நம்பி.

''பயணமாகிறோமா? அப்படியென்றால் குழந்தைகள் பழை யாறையிலோ, இராசராச புரத்திலோ இல்லையா?'' என்று வல்லபன் கேட்டான்.

நம்பி தலையை அசைத்தார். ''இளவரசரே! தங்களுடைய பட்டாபிஷேகம் முடியும் வரை குழந்தைகள் இருக்குமிடத்தை மிக இரகசியமாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. பிறகு...'' என்று கூறிய நம்பியை நோக்கிய வல்லபன், ''பிறகு...?'' என்று கேட்டான்.

''பிறகு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது இளவரசரின் பொறுப்பு'' என்று கூறிச் சிரித்தார்.

''ஆகா, சோழநாட்டு வாரிசுகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பது என்னுடைய பொறுப்பு பல்லவரையரே! கண்ணை இமை காப்பது போல் நான் காப்பாற்றுவேன்'' என்றான் வல்லபன்.

திருச்சிற்றம்பலமுடைய பெருமான் நம்பி பல்லவரையர் வல்லபனை நோக்கி, ''இளவரசரே! முதலில் தாயை வணங்கி ஆசிபெற்று அரசரைக் காணப் புறப்படுவோம்'' என்றார்.

வல்லபன், செல்வியை வணங்கியபோது நம்பி செல்வியை நோக்கிக் கூறினார்: ''நெறியுடைப் பெம்மாள் என்ற புகழ்பெற்ற தாங்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் தங்கள் மகனை எதிரிலிப் பெருமாளை - சக்கரவர்த்திகளிடம் அழைத்துச் செல்கிறேன். தங்கள் மகன் சொன்ன சொல்லைக் காப்பாற்றுமாறு பார்த்துக் கொள்வது தங்கள் பொறுப்பு'' என்றார்.

செல்வியின் மலரடியில் தன் சிரசைப் பதித்துப் பாதங்களில் கண்ணீர்த் துளிகள் சிந்த, எதிரிலிப் பெருமாள் ஆன வல்லபன் கூறினான். "முதலில் என் தாயின் மீது ஆணை, தாய் சொல்லை என்றும் தட்டவே மாட்டேன்."

சோழச் சக்கரவர்த்திகளைச் சந்தித்த பிறகு வல்லபனுக்குப் புதுப் பிரச்னையொன்று எழுந்தது. இளவரசுப் பட்டம் சூட்டும் நாளைக் குறிக்க அரசர் கட்டளையிட்டு விட்டார். அதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யுமாறும் அதிகாரிகளுக்கு உத்தர விட்டார். அத்துடன், பெருமான் நம்பியிடம் அவர் கூறிய மற்றொரு செய்தி வல்லபனைத் திடுக்கிடச் செய்தது. அது, திடுக்கிடும் படியான செய்தி இல்லை தான். குதூகலிக்க வேண்டிய மங்கலச் செய்தி தான் அது.

இளவரசர் பட்டம் சூட்டிக் கொள்ளத் தக்க வயது வந்தவர்க்கு உடன் திருமணத்தையும் முடித்து வைக்கும் பரம்பரைச் சம்பிரதாயம் தான் அது.

"பெருமான் நம்பி அவர்களே! இரண்டு முக்கியமான செயல்களைத் தாங்கள் செய்ய வேண்டும். வல்லபனுக்கு அபிடேகப் பெயர் ஒன்று சூட்ட வேண்டும். அவனுக்கு மணம் முடிக்க நமக்கு வேண்டிய அரச குல மங்கை நல்லாள் ஒருத்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

பெருமான் நம்பி சற்று யோசித்தார். "அபிடேகப் பெயரைச் சூட்டுவதைக் குறித்து நாம் உடனே கலந்து ஆலோசித்து விடலாம். அதில் கூட நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இளவரசுப் பட்டம் சூட்டும் போது அபிடேகப் பெயர் அவசியமில்லை. தக்க அரசகுலப் பெண்டிரைத் தேர்ந்தெடுப்பதில் தான் தீர்க்காலோசனை தேவை. மற்றவர்களைக் கலந்து யோசிப்பதை விடத் தாங்களே முடிவு செய்து அறிவிப்பது தான் சரி என எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

அப்போது மலையமான் அங்கு வந்தார். வல்லபனுக்குத் திருமணம் என்ற செய்தி அவரைச் சிந்திக்க வைத்தது. திருமணப் பிரச்னை மூவரைச் சிந்திக்க வைத்தது.

பெருமான் நம்பிக்குத் தன் பெண்ணைச் சோழ அரச குலத்தவரொரு வருக்கு மணம் முடித்து அரசகுலத்தவருடன் சம்பந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உடனே எழுந்தது.

மலையமான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். அவரது சகோதரருக்கு அழகிய மகள் இருந்தாள்.

வல்லபனுக்கு இளவரசுப் பட்டம் என்பது உறுதியாகி விட்டது. மலையமான் குலத்துப் பெண்ணை மணம் புரிவித்துச் சோழர்களுடன் மீண்டும் ஏன் தொடர்பு கொள்ளக் கூடாது? இந்த நல்வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்று முடிவு செய்து கொண்டார். பெருமான் நம்பியும் மலையமானும் அரசரிடம் தக்க தருணம் பார்த்துத் தனித்தனியே சொல்ல விரும்பினர்.



வல்லபன் கவலை தோய்ந்த முகத்துடன் தாயிடம் சென்றான்.

"அன்றலர்ந்த செந்தாமரையினை வெல்லவேண்டிய உன் முகம் கூம்பிப் போயிருக்கிறதே. என்ன நேர்ந்தது வல்லபா?" என்று கேட்டாள் செல்வி பரபரப்புடன்.

"தாயே! எனக்குத் திருமணமும் உடனே நடந்தாக வேண்டுமாம்! பட்டமேற்பு விழா நிகழ்ச்சியின் போது இளவரசர் இளவரசியுடன் அமர வேண்டுமாம்! அம்மா இங்கே விரைவாக நடப்பன எல்லாம் மிகவும் விசித்திரமாக இருக்கின்றன" என்றான்.

செல்வி அவ்வாறு கலகலவென்று நகைத்துப் பல ஆண்டுகளாகி விட்டன.

"மகனே! இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது? என் மகன் இளவரசன்! என் மகனுக்குத் திருமணம்! எனக்கு மருமகள் வரப்போகிறாள்! ஆகா, இதை விட மகிழ்ச்சியான செய்தி வேறென்ன இருக்கிறது?" என்றாள்.

தாயின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கண்ட வல்லபன் தன் எண்ணத்தை எப்படி வெளியிடுவது என்று திகைத்தான்.

வேங்கியில் உள்ள சந்திரப்பிரபாவின் அந்த இரு விழிகள் அவன் கண் முன்னே தோன்றின. விரைவில் திரும்பி வருவதாக உறுதி கொடுத்து வந்த போது ஏக்கம் நிறைந்த விழிகளுடன் விடை கொடுத்த அந்த முகம் நினைவுக்கு வந்தது.

"வேங்கியிலிருந்து சந்திரப்பிரபாவை இங்கே வரவழைத்துத் திருமணம் செய்து கொள்ளக் கூடாதா? சோழ நாட்டு இளவரசியாக அவள் ஆகக் கூடாதா? அருமைக் காதலி வேங்கியில் இருக்கும் போது, மற்றொரு பெண்ணை நான் எவ்வாறு மணப்பது?" என்ற கவலை அவன் மனத்தில் சுழன்றது.

"மகனே! ஏன் மௌனமாகி விட்டாய்? ஏன் உன் முகத்தில் சோகம் நொடிக்கு நொடி வளர்கிறது? உன் உள்ளத்தில் தோன்றி யுள்ள வேதனை தான் என்ன?" என்று செல்வி கேட்டாள்.

வேங்கியில் தனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள் என்பதைத் தாயாரிடம் சொல்லி விடலாமா என்று வல்லபன் எண்ணினான். தாய் வருத்தப்படுவாளே என்பதை நினைக்கும் போது, அந்த இரகசியத்தைச் சொல்லாமலே இருக்கலாம் என்றும் தோன்றியது.

ஆனால், செல்வி அவனை மிகவும் வற்புறுத்திக் கேட்ட பிறகு வல்லபன், தான் காதலித்திருக்கும் கீழைச் சாளுக்கிய நாட்டு மங்கை சந்திரப் பிரபாவைக் குறித்துச் சொன்னான். அது கேட்டுச் செல்வி திடுக்கிட்டாள்.

# 14. நம்பியின் மகள்

இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கான நாள் குறித்து அந்தச் செய்தியைச் சோழ நாட்டிலுள்ள குறுநில மன்னர்களுக்கு மட்டும் அறிவிக்குமாறு சோழ மாமன்னர் இராஜராஜன் கட்டளையிட்டார். பாண்டிய, கீழைச் சாளுக்கிய, கங்க நாட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டாம் என்று அவர் கூறியதன் உள்ளர்த்தம் மற்றவர்களுக்குப் புரியவில்லை.

மகிழ்ச்சி நிறைந்த இந்தச் செய்தியால் வல்லபன் மனத்தில் எந்தவித உற்சாகமுமில்லை. அவனுக்கு ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு புதுக் கவலையை அளித்துவந்தது. பட்டமேற்பு விழாவின் போது திருமணச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டும். மணப்பெண் யார்? தன் மனத்துக்கு இனிய சந்திரப் பிரபாவை மணந்துகொள்ள முடியவில்லை. தாயும் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. விரைவில் திரும்பி வருவேன் என்று சந்திரப் பிரபாவுக்கு வாக்குக் கொடுத்தது என்ன ஆவது? இளவரசர் வாக்குத் தவறிவிட்டார் என்ற அவப்பெயர் ஏற்பட வேண்டுமா?

திருக்கோவலூர் மலையமானின் வேண்டுகோள், அதிகாரக் கட்டளையாகத் தோன்றியது. தன் சகோதரனின் மகளை வல்லபனுக்கு மணம் புரிவித்தே ஆகவேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு அவர் பலம் தேடிக் கொண்டிருந்தார். சோழச் சக்கர வர்த்திகளிடமும் அதைப் பற்றி அவர் கண்டிப்புடன் விவாதித்ததாகத் தெரிந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது வேறொரு பிரச்னை.

சோழச் சக்கரவர்த்திகளின் இரு குழந்தைகளை - சோழ நாட்டின் நியாயமான வாரிசுகளைக் - காண பெருமான் நம்பி அழைத்துச் செல்வதற்கு முன்பு செல்லும் வழியில் வீட்டுக்கு வல்லபனை வரவேற்றார்.

சோழ நாட்டின் மாதண்ட நாயகரும், பிரதம மந்திரியுமான பெருமான் நம்பியின் இல்லம் பெரும் மாளிகையாக இருக்கும் என்று எண்ணிச் சென்ற வல்லபனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

காவிரிக் கரை ஓரமாகச் சின்னஞ்சிறிய தோட்டம். தோட்டத்தின் நடுவே, சிறுவீடு. மாடமில்லை. கூட கோபுரமில்லை. மதில் சுவரில்லை. ஓர் ஓரம் அமைதியாக, புலிக்கொடி தவழ்ந்து பறந்து கொண்டிருந்தது. விசாலமான திண்ணை, தாழ்வாரம், ஓடு வேயப்பட்ட அந்தவீடு, கோடை நாள்களிலும் குளுமையாக இருக்கும் வகையில் வேம்பு, மா மரங்களின் கிளைகள் சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்தன. சலசலவென்று காற்றில் ஓசை எழுப்பிக் கொண்டிருக்கும் அரசமரம் ஒன்று, ஓடும் அருவியின் நினைவை அவ்வப்போது ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மெல்லிய குரலில் புள்ளினங்கள் அவ்வப்போது குரல் எழுப்பி விட்டுப் பறந்து சென்றவாறிருந்தன. அணிலொன்று மிகச் சுறுசுறுப்பாக இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தது.



வல்லபனும், பெருமான் நம்பியும் வரும்போது பசுமாட்டுக்குத் திலக மிட்டுத் தட்டில் வாழைப்பழங்களை வைத்து தூபங்காட்டிக் கொண்டிருந்தாள் இளமங்கை நல்லாள்.

''நல்ல சகுனம்'' என்று கூறிக் கொண்டே குதிரையினின்று இறங்கினார் நம்பி. வல்லபனும் இறங்கி, நம்பி எதைக் குறித்து அவ்வாறு சொல்கிறர் என்று அறியச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

மாமரத்தடியில் சோலைத் தேவதை போல் அழகு மங்கை, கோபூஜை செய்வதைக் கண்டான். நம்பி அதைத் தான் சொல்கிறாரோ? சோழ நாட்டில் ஆவினத்துக்கு நல்ல மரியாதை. வேங்கியிலும் இதுபோன்று பசுவுக்கு மரியாதை செலுத்தும் வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பூஜை செய்து கொண்டிருந்த பெண், புதியதாக அங்கு வந்திருக்கும் வல்லபனை ஒரேஒரு கணத்தில் விழிக்கோணத்தால் அளவெடுத்துவிட்டு, பூஜைப் பொருள்களை அப்படி அப்படியே வைத்து விட்டு வீட்டுக்குள் விரைந்து சென்று மறைந்தாள்.

நம்பி திகைத்தார். இரு கைகூப்பி வாருங்கள் என்று இன்முகம் காட்டித் தன் மகள் வரும் இளவரசரை வரவேற்பாள் என்று நம்பி நினைத்து விட்டாரோ? தாயற்ற அவரது மகள் திலகதேவி, அந்தக் குடிலுக்குத் தலைவி போல் இருந்து, வீட்டுவேலைகளை ஒன்று விடாமல் ஓய்வே இல்லாமல் செய்து கொண்டிருப்பாள். பணியாட்களுக்கு வேலையிடுவதும் ராஜாங்கக் காரியமாக வரும் அதிகாரிகளுக்குத் தந்தையின் சார்பில் மறுமொழி கூறுவதுமாக, ஓர் ஆண்மகனுக்குண்டான தைரியத்துடன் விளங்குபவள். இப்போது புதிய ஓர் இளைஞனைக் கண்டவுடன் மின்னலென மறைந்துவிட்டாள்.

நம்பி மெல்ல நகைத்துக் கொண்டார். ''பெண்களுக்கே இயற்கையான நாணம் அவளிடம் தோன்றியதில் தவறில்லை. ஆனால், பாதியிலேயே பூஜையை நிறுத்தலாமா?'' என்று மனத்துள் நினைத்துக் கொண்ட நம்பி, ''திலகா, திலகா'' என்று குரல் கொடுத்தார்.

மாமரத்தின் அடியில் இடப்பட்டிருந்த கருங்கல் மேடையில், நம்பியும் வல்லபனும் அமர்ந்தார்கள்.

''இளவரசருக்கு இந்தக் கல் ஆசனம் அளிக்கத் தான் இந்த ஏழையின் இல்லத்தில் வசதியிருக்கிறது. பொறுத்தருள வேண்டும்'' என்றார்.

சோழநாட்டு சேனைத் தலைவர் மனம் வைத்திருந்தால் இதுவரை பெரிய மாளிகையைக் கட்டியிருக்கலாம். நூறு நூறு பணியாளர்கள் இங்குமங்குமாக நடந்து உற்ற ஏவல்களைச் செய்யக் காத்திருக்குமாறு செய்திருக்கலாம். யானை தந்தத்தாலான இருக்கைகள், மாளிகையில் அதிகம் அமைத்திருக்கலாம். ஏனோ நம்பி அடக்கமும், எளிமையும் தம் இல்லத்திலிருந்து முதலில் தொடங்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறார்.

தேவநேய... மாவட்ட ... நூலகம் சென்னை - 600 002

அது நியாயமானது. எடுத்துக்காட்டு மிக்கது. அரசு அதிகாரி களைப் போல் தானே மக்கள் வாழ விரும்புவர்? சோழ நாட்டு முதல் அமைச்சர் எளிய முறையில் வாழ்ந்தால் மக்களும் அவ்வாறே வீண் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டு வாழ்வார்கள். வல்லபன் இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும் போது, "இளவரசே! பலமான சிந்தனையிலாழ்ந்து விட்டீர்கள் போல் தோன்றுகிறது" என்று கூறி அவன் கவனத்தைத் திருப்பினார்.

"கல் ஆசனம் உறுதியானது. அதில் அமர்ந்து ஆள்பவர்களும் உறுதியுடன் இருக்க வேண்டும் என்று இந்த இருக்கை தெரிவிக்கிறது." என்று வல்லபன் கூறும்போது நம்பி அவனது முகத்தையும், அவன் பேசும் விதத்தையும் பேச்சிலுள்ள கருத்தினையும் கூர்ந்து நோக்கியவாறிருந்தார்.

"பாறை என்றும் அழியாதது. உயரிய கலைஞர்கள் தமது நோக்கத்துக்கு ஏற்றவாறு அதை மாற்றி உருப்படுத்துவார்கள். அதுபோல் சோழ அரியணையும் அழியாதது. அதில் அமரும் மன்னர்கள் உயரிய கலைஞர்களைப் போல், நாட்டைச் செம்மையாக உருவாக்க வேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்" என்று நம்பி கூறியபோது, அவர்கள் பேச்சைத் தடைப் படுத்துவது போல் அந்தப் பகல் வேளையிலும் ஒரு பூரண மதி அங்கு ஒளி வீசியது.

திலகதேவி ஒரு தட்டில் இரண்டு குவளைகள் நிறைய மோருடன் வந்தாள். அமுத கலசம் ஏந்தி அழகுத் தேவதை பவனி வருவது போல் தோன்றியது.

"திலகா! பாதி பூஜையில் நிறுத்திவிட்டு ஓடிவிடலாமா? பூஜையை முடித்துவிட்டு எங்களுக்கு உபசரணை செய்வதை, வந்திருக்கும் விருந்தினர் தவறாக நினைக்கமாட்டார்" என்று கூறி, நம்பி வல்லபன் பக்கம் திரும்பி நோக்கினார். இதுவரை, திலக தேவியின் எழில் முகத்தையும் அவள் ஒயிலாக நடந்துவந்த நடை அழகையும் குனிந்து அவள் பணிவும் பரிவும் மிகுந்து தட்டை நீட்டியதையும், விழிகள் இரண்டும் மிகப் பொல்லாத்தனமாகத் தான் பார்க்காதபோது தன்னை நோக்குவதையும், தான் நோக்கும் போது நிலம் நோக்குவதையும், பிறகு இதழ்களில் மெல்லிய பூ நகையை மலர விடுவதையும் ரசித்தாவறிருந்த வல்லபன், நம்பி தன்னை நோக்குகிறாரென்று அறிந்தவுடன், திலகதேவியிடமிருந்து விழிகளைத் திருப்பி, மாமரத்தில் பூத்திருக்கும் மாம் பூக்களையும், பிஞ்சுகளையும் பார்த்து ரசிப்பது போல் நடிக்கலானான்.

"திலகா, வந்தவரை அறிமுகப்படுத்தாமல் இருந்து விட்டேனே! விருந்தாளி என்று சாதாரணமாகக் கூறிவிட்டேன். சொல்லப்போனால் நாம் தான் அவரது மிகப்பரந்த சோழநாட்டின் நிரந்தர விருந்தாளி. இவர் - வல்லபன் - நாளைக்கே பராந்தகன் என்றோ, குலோத்துங்கன் என்றோ, வீர இராஜேந்திரன் என்றோ, இராஜாதிராஜன் என்றோ பட்டப்பெயர் சூட்டப்பெற்று அரியணையில் அமரப்போகிறார். அடுத்த பத்தாவது நாள் பழையாறையில் இவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள். கோலாகலமாக அந்த விழாவில் கலந்து கொள்ளப் போகிறோம்" என்று கூறியவுடன், திலகதேவி தன் அகன்ற விழிகளை மடல்



அவிழ்ந்த தாமரை போல் மேலும் பரக்க விரித்து, வல்லபன் திருமுகத்தை ஒரு கணம் ஆழ நிமிர்ந்து நோக்கி, இதயத்தில் அழியாது பதித்துக் கொண்டாள். அந்தப் பார்வையில் அரசகுலத்துக்கு உரிய அசாதாரணமான கம்பீரம் இயற்கையாக அமைந்திருந்தது. மறுகணம் அந்தச் சந்திரவதனி தலை குனிந்து, முகத்தில் செவ்வண்ணம் பரவ, நாணம் அந்தப் பூங்கொடியின் உடலில் தழுவ, மான் விழியில் மருட்சி ததும்ப, அதரங்கள் ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் கொண்டிருப்பதைச் சொல்ல நினைத்தது போல் துடிக்க அங்கிருந்து துள்ளி ஓடிக் குடிலுக்குள் நுழைந்தாள். ஆனால் விழிப்பார்வை, உள்ளிருந்து நோக்குகின்றன என்பதை வல்லபன் கவனிக்காமலில்லை.

சோழநாட்டுச் சிற்பிகளின் கை வண்ணத்தை வல்லபன் அறிந்திருக்கிறான். இராஜ ராஜேச்வரக் கோயிலில் எழில்மிகு மங்கையர் சிற்பங்களை அழகு வடிவமாகச் சிற்பி படைத்திருப்பதைக் கண்டிருக்கிறான். இத்தகைய அழகு வடிவங்களைப் படைக்கச் சிற்பிக்குக் கற்பனை எவ்வாறு உதயமாயிற்று என்று அவன் எண்ணியதுண்டு. இப்போதுதான் அவன் அந்த உண்மையை அறிந்து கொண்டான். நம்பியின் மகளைப் போன்ற அழகிகளை மனத்தில் உருவகப்படுத்தி அற்புதச் சித்திரங்களைச் சிற்பி அமைத்தான் என்று அறிந்து கொண்டான்.

குடிலைச் சுற்றிப் பார்க்க வல்லபனை நம்பி அழைத்தார். குடிலைத் தழுவி ஓடும் காவிரி ஆற்றில் சிறிது நேரம் நின்று வர வல்லபன் விரும்பினான். பொன்னித்தாயின் எழில் கோலங்களைச் சிறிது நேரம் ரசித்துவிட்டு வல்லபன் குடிலை அடையும் போது, குடிலில் உள்ள அறையிலிருந்து திலகதேவியும், நம்பியும் பேசும் உரையாடலில் ஒரு பகுதி வல்லபன் செவிகளில் விழுந்தது. வல்லபன் நின்று கேட்டான்.

"சக்கரவர்த்தி மிகத் திறமைமிக்கவர் அப்பா! தகுந்தவரையே இளவரசராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்" - இது திலகதேவி.

"திலகா! வல்லபன் அதிர்ஷ்டசாலி மட்டுமல்லன். அறிவும், ஆற்றலும் மிக்கவன். வீரமும் அழகும் ஒன்று கூடியதால் சோழநாட்டின் மற்றும் ஓர் அருள்மொழி வர்மர் பிறந்து விட்டாரோ என்றே எண்ணத் தோன்றுகிறது. அவருடைய திருக்கரத்தைப் பிடிக்கும் அதிர்ஷ்டசாலி யாரோ தெரியவில்லை" - என்று நம்பி பெருமூச்சு விட்டவாறு கூறுகிறார்.

"அப்பா! நான் கோபூஜையை முடிக்கும் சமயம், என் மனத்தில் ஒன்றை வேண்டிக் கொண்டேன். 'கோமாதா! இந்த சோழநாட்டு இளவரசியாக ஆகும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா? என் தந்தை இந்த சாம்ராஜ்யத்தின் வளர்ச்சிக்கு உண்மையுடன் உழைத்து, நாட்டைக் காப்பதற்கு நம்பிக்கையுடன் தொண்டாற்றுவது உண்மை யென்றால், அவருக்கு, தாயே! நீ அரசகுலத் தொடர்பை ஏற்படுத்திக் கொடு; காமதேனு தாயே! கோமாதா என உள்ளம் நெகிழ வேண்டிக் கொண்ட அந்தக் கணம் நீங்கள் 'நல்ல சகுனம்' என்று கூறியவாறு வந்தீர்கள். என் மனத்திலும் புதிய ஒளி தோன்றியது. நிமிர்ந்து ஒரே கணம் அவரை நோக்கினேன்" - திலகவதி உணர்ச்சிவசப்பட்டுக் கூறுகிறாள்.

நம்பி மெல்ல நகைக்கும் ஒலி கேட்டது.

"திலகா! இளவரசரைப் பாதாதி கேசம் நன்றாகப் பார்த்துக் கொண்டாயா? அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா? இளவரசர் என்பதற்காக அவரை மணம் புரிந்து கொள்வதாக நீ நினைக்கக் கூடாது. உன் மனத்துக்கு அவரைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார்.

திலகதேவி நாணத்தால் பேச வார்த்தைகளின்றி ஏதோ கூற முயல்வது மட்டும், ஒலிக் கோவையாகக் கேட்டது. நகையொலி எழுந்தது.

"திலகா! இளவரசரை வெளியே காக்க வைத்துவிட்டு உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். என்றும் மறவாது சிந்தையில் துதிக்கும் தில்லை அம்பலவாணர் அருள் இருந்தால் சோழ அரச குடும்பத்துடன் மணத்தொடர்பு ஏற்படட்டும். சோழச் சக்கரவர்த்தி களை இதுபற்றிக் கேட்பதற்கு முன்பு, இளவரசர் வல்லபனையே கேட்கப்போகிறேன். உன்னை அவர் ஒருமுறை காணவேண்டும் என்பதற்காகவே அரச அவைக் கவிஞர் கூத்தர் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு இங்கு அழைத்து வந்தேன். இப்போது கூத்தனூர் செல்கிறோம். திரும்பும்போது ஒரு வேளை, நல்ல செய்தியுடன் நான் திரும்பலாம். சோழநாட்டின் இளவரசியாக ஆகும் அதிர்ஷ்டம் உனக்கு இருக்க ஆண்டவன் அருளட்டும்" என்றார்.

நம்பி, குடிலுக்குள்ளிருந்து வெளியே வருவதற்குள், வல்லபன் ஏதும் கேட்காதவன் போல், ஏதும் அறியாதவன் போல் - மரத்தடிக்குச் சென்று விட்டான்.

குழந்தைகளைக் காணக் கூத்தர் வசிக்கும் கூத்தனூர் நோக்கிப் பயணப் படும் போது எந்தக் கணமும், அமைச்சர் பெருமான் நம்பி தன்னிடம் திருமண விஷயமாகப் பேசுவார், தன் மகளை மணந்து கொள்ளுமாறு வேண்டுவார் என்று வல்லபன் எதிர்பார்த்தான்.

நம்பியின் கேள்விக்கு என்ன மறுமொழி கூறுவது என்று வல்லபன் சிந்திக்கலானான்.

## 15. வல்லபனின் உறுதி

அரிசிலாற்றங்கரை ஓரமாகச் சென்ற சாலையில் பெருமான் நம்பியும், வல்லபனும் குதிரை மீது அமர்ந்து சென்று கொண்டிருந்தனர். இன்னும் ஒரு காத தூரம் சென்றால் கூத்தனூரை அவர்கள் அடைந்து விடுவர். முதுபெரும் புலவரும் சோழ அரசவைப் புலவருமான ஒட்டக்கூத்தரின் இல்லத்துக்கு இருவரும் சென்று கொண்டிருந்தனர். சில நாள்களுக்கு முன்பு பெருமான் நம்பி அதே சாலை வழியே சென்றிருக்கிறார். இரவு நேரம் பிறைச்சந்திரனின் ஒளியில் துணைக்குக் குதிரை வீரன் ஒருவன் தீவர்த்தி ஒளி ஏந்தி வர அவர்



விரைந்திருக்கிறார். அவர் சென்ற சிறிது நேரம் கழித்துத்தான், சிவிகையில் அல்லியும் சோழ குலத்துக் குழந்தைகளும் வந்தனர். அரச சிவிகை அது. குழந்தைகளும் அரச குழந்தைகள். அல்லி பட்டாடை அணிந்திருந்தாள். அவள் முகத்தில் கவலைக் கோடுகள் இல்லை. பால் கொடுத்து வளர்க்கும் பொறுப்பேற்றிருந்த இளைய குழந்தை அவள் மடியில் துயின்று கொண்டிருந்தது.

'ஹேறா ஹேறா' 'ஹறா ஹேறா' என்று சிவிகை சுமப்பவர் எழுப்பும் ஒலி குழந்தைக்குத் தாலாட்டு பாடுவது போலிருந்தது. சிவிகை இப்படியும், அப்படியும் அசைவது தொட்டில் ஆட்டுவதைப் போலிருந்தது. இரு குழந்தைகளுள் முதலில் பிறந்த இரு வயது நிறைந்த குழந்தையைத் தாம் வளர்ப்பதாக கேசவ சுவாமி ஏற்றுக் கொண்டுவிட்டார். இரண்டு குழந்தைகளும் ஒரே இடத்தில் வளர வேண்டாம் என்பது முதலமைச்சரின் யோசனை. இரண்டாவது இளைய குழந்தையைத் தாம் வளர்ப்பதாக சோழநாட்டு அரசவைக் கவிஞர் ஒட்டக் கூத்தர் ஏற்றுக் கொண்டார்.

நிசிக்குச் சிறிது நேரம் முன்பு, பெருமான்நம்பி ஒட்டக்கூத்தர் வீட்டு வாயிற் கதவைத் தட்டினார்.

பழங்கால வீடு. யானையும், குதிரையும், பல்லக்கும் சோழ மன்னர்கள் வேண்டுமளவுக்குப் பரிசாக அளித்திருந்தனர். அந்த ஊரையே கவிஞருக்குப் பரிசாக அளித்திருந்தார் மன்னர் இராஜராஜன். இராஜராஜனுக்குக் கூத்தர் பிரானிடம் மிகுந்த மரியாதை, அன்பு, பற்றுதல். எண்பது பிராயத்தையும் கடந்து விட்ட அந்த நிலையிலும் அவரை ஆதரித்து மிக மரியாதையுடன் நடத்தி வந்தார். அந்த ஊருக்கே கூத்தனூர் என்று பெயரிட்டு இறையிலி கிராமமாக அளித்தார். கவிஞர் எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் நிம்மதியாக வாழவழி செய்திருந்தார். கரியும், பரியும், பணியாட்களுமாக அவரது நலங்களைக் காக்க அரசாங்க அலுவலர்களையும் அளித்துக் கௌரவித்தார்.

கூத்தரும் மன்னர் இராஜராஜனிடம் மிகுந்த மரியாதையும் அன்புங் கொண்டார். இராஜராஜனுலா பாடி வேண்டிய பொன் பரிசில் பெற்றார்.

தன் மகன்களுள் ஒருவரைப் பாதுகாத்து வளர்க்கத் தக்கவர் கவிஞரவர்களே என்று அரசர் கருதினார். மூத்த குழந்தையை கேசவ சுவாமி ஏற்றது மிகவும் பொருத்தமுடையது என்று இராஜராஜன் கருதி, இளைய குழந்தையைக் கூத்தரிடம் ஒப்படைக்கும் யோசனையைப் பெரிதும் பாராட்டினார்.

நடுநிசியில் கூத்தர் வீட்டுக் கதவை உரிமையுடன் தட்டக் கூடியவர் பெருமான் நம்பி ஒருவரே. உறக்கம் கலைந்து எழுந்து வந்த கூத்தர், வாயிலில் சோழநாட்டு மாதண்ட நாயகர் முதல் அமைச்சர் நம்பி நிற்பது கண்டு, வியப்படைந்து தம் சோர்வும் உறக்கக் கலக்கமும் மறந்து வரவேற்றார். சிறிது நேரத்தில் சிவிகையும் வந்து சேர்ந்தது.

அல்லியின் கரத்தில் தவழ்ந்த பச்சிளம் பாலகனை அரசுக் கவிஞர் கூத்தர் கண்டார்.

"அம்பலவாணா! உன் திருவிளையாடலை என்னென்று கூறுவேன்? மூன்று பெருவேந்தர்கள் காலத்தில் நான் பெருவாழ்வு வாழ்ந்துவிட்டேன். சோழநாட்டு அரசிளங்குமாரனை வளர்த்து ஆளாக்கும் வரையில் நான் வாழ்ந்தாக வேண்டும் என்பது உன் திருவுளமோ?" என்று கூறிக் குனிந்து குழந்தையின் செவ்விதழில் முத்தமிட்டார்.

நம்பி மெல்ல முறுவல் பூத்து, "அரசவைப் பெருங்கவிஞரே! மூன்று அரசர்களைப் பற்றி உலா பாடிய தாங்கள் இந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகு உலா பாடும் வரை நீடுவாழ வேண்டும்" என்று கூறினார்.

"எல்லாம் கலைவாணியின் அருள்" என்று கூறிய கூத்தர் குழந்தையை மிகச் சிறப்பாக வளர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒரே ஒரு வீரனை மட்டும், சில ஆண்டுகள் கழித்து அனுப்புங்கள். வாள்வீச்சு, வேல் எறிதல் யானை - குதிரை ஏற்றம் கற்றுக் கொடுக்க" என்றார்.

"ஆகா, தமிழுடன் ஆய கலைகளும் சோழகுலச் செல்வனுக்குக் கற்றுக் கொடுக்கும் கடமையை ஏற்ற தங்கள் இல்லத்தருகே போதுமான வீரர்கள் எப்போதும் இருப்பார்கள்" என்றார்.

வல்லபனை அழைத்துக் கொண்டு குழந்தையைக் காட்ட வந்த நம்பி வழியில், சோழநாட்டு அரசு அமைப்பைப் பற்றியும் உற்றவர்கள், விரோதிகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள அடையாளங்களையும் கூறி வந்தார்.

மெல்ல மெல்லத் தம் மகளை அவனுக்கு மணம் புரிவிக்கும் தம் விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார். வல்லபன் உடனே ஏதும் பேசவில்லை. தர்ம சங்கடமான திருமணப் பிரச்னையை எப்படி தீர்ப்பது என்று அவனுக்குப் புரியவில்லை. வேங்கியில் தான் விரும்பி வாக்களித்து வந்திருக்கும் மங்கையைக் குறித்துச் சொல்லி விட விரும்பினான்.

கூத்தர் வீட்டுக் கூடத்துத் தொட்டிலில் சோழகுலக்கொடி உறங்கிக் கொண்டிருந்தது. சோழநாட்டின் இளவரசரை வரவேற்கக் கூத்தர் காத்திருந்தார்.

வல்லபன், கூத்தர் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றுத் தொட்டிலில் உறங்கும் குழந்தையைக் காணச் சென்றான். அல்லி அங்கே நின்று கொண்டு வல்லபனின் வனப்பு மிகுந்த கம்பீரத் தோற்றத்தை வியந்தவாறு இருந்தாள்.

"கூத்தர் வீட்டில் வளரும் குழந்தையா, கேசவ சுவாமியின் வீட்டில் வளரும் குழந்தையா எதுநாளைக்கு நாட்டை ஆளும் உரிமையடையப் போகிறதோ - அவ்வாறு உரிமை வயதை அடையும் போது, இவர் தம் உரிமையை விட்டுக் கொடுப்பாரா?" என்று அல்லி எண்ணினாள்.



"இளவரசர் அவர்களே! தங்களை இங்கே அழைத்து வந்த நோக்கமே, குழந்தையைக் காணவேண்டும் என்பது மட்டுமன்று. அரச அவைக் கவிஞர் எதிரே உறுதிமொழி பெறுவதற்கே. மனத்தை நன்றாகத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். அரச வாழ்வின் சுகபோகங்களை அனுபவித்து விட்டு, அதைத் தியாகம் செய்வது என்பது எளிதாக காரியமன்று. பார்வையற்ற குருடனுக்கு விழியை அளித்துப் பிறகு பறிப்பது போல, ஊமைக்குக் குரல் கொடுத்து பிறகு பறித்து விடுவது போல... வரலாற்றில் மிக முக்கியமான கட்டம் வருங்காலத்தவர் என்னையும் சேர்த்தே குறை கூறுவார்கள். பட்டத்துக்கு உரிமையுடையவனை மறைத்து வேறு ஒருவருக்கு நாட்டை ஆள உரிமையாக்கியவர்களுள் முதல் அமைச்சர் நம்பியும் பெரும்பங்கு வகித்தார் என்று செப்பேட்டில் எழுதி விடுவார்கள். இளவரசர் வல்லபர் அவர்களே! அரச அவைக் கவிஞர் எதிரே, பச்சிளம் பாலகனுக்கு உறுதி செய்து கொடுக்கவே அழைத்து வந்தேன்..." என்றார் நம்பி.

"இரு குழந்தைகளின் முன்னிலையிலும் உறுதி செய்து கொடுப்பது தானே முறை?" என்றார் கூத்தர்.

"ஆம், நாளைக்குக் கேசவ சுவாமியைச் சந்திக்கச் செல்கிறோம்" என்றார் நம்பி.

"ஆகா; கேசவ சுவாமியா? முக்காலும் உணர்ந்தவர் அவர். அவருக்குத் தெரியும் வருங்காலம்...." என்றார் கூத்தர்.

"அவர் வருங்காலம் உணர்ந்து கூறியபடிதான் எல்லாம் நடக்கின்றன. குழந்தைகளை அரசர் பார்க்கக் கூடாது என்ற அவர் கருத்துப்படி குழந்தைகளை வெவ்வேறிடங்களில் வளர விடுகிறோம். எட்டாண்டுகள் வரை குழந்தை களுக்குப் போதாத காலமாம். பகைவர்கள் எந்தக் கணமும் உயிருக்கு ஊறு விளை விக்கலாம். பிறகு சிறுகுழந்தைகளுள் ஒருவரிடம் நாட்டை அளித்துவிட்டு இளவரசர் விலக வேண்டும். கேசவ சுவாமி கூறிய சொல்லை அப்படியே கூறுகிறேன்" என்றார் நம்பி.

கூத்தர் பிரான், வல்லபனின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். பிறகு மெல்ல நகர்ந்து, கூடத்தில் அம்பலவாணர் சிலைக்கு அருகே சென்று, அங்கிருந்த திருநீற்றுக் கிண்ணத்திலிருந்து திருநீறு எடுத்து வந்து வல்லபனுக்கும் நம்பிக்கும் அல்லிக்கும் அளித்து "எல்லாம் அவன் செயல். குறைவின்றி நடக்கும். இருப்பினும் என் உள்ளத்தின் ஒரு மூலையில் அச்ச உணர்வு சிறிது படர்கிறது. சோழ நாட்டில் சில நாள்களில் துக்ககரமான சம்பவமொன்று நடைபெறுமோ என்ற கவலை தோன்றுகிறது. தில்லை அம்பலவாணர் அருளால் எல்லாம் நன்மைக்கே" என்று கூறித் தாமும் நெற்றியில் விபூதியை அணிந்து கொண்டார்.

நம்பியின் உடல் மெல்ல நடுங்கியது. ''கவிஞர் பிரானே! கேசவ சுவாமியும் இது போன்றே கூறினார். எதற்கும் அஞ்சாத என் உள்ளத்திலும் சிறிது அச்ச உணர்வு ஏற்படுகிறது'' என்றார்.

''பெருமான் நம்பி அவர்களே! தாங்கள் அருகிலிருக்கும் வரை ஒருவித இடரும் இந்த நாட்டை அணுகாது. மேலே ஆக வேண்டி யதைக் கவனியுங்கள். இளவரசுப் பட்டம் சூட்டும் கோலாகலத் திருவிழாவை நடத்துங்கள்'' என்றார்.

வல்லபன் தலைநிமிர்ந்து நின்றான். தன் இடையிலிருந்து வாளை உருவினான்.

''சிபிச் சக்கரவர்த்தி கோச்செங்கணான், விஜயாலயர் வழிவந்த சோழநாட்டின் இளவரசுப் பொறுப்பை ஏற்கும் நான், இங்குள்ள முதல் அமைச்சர், அரச அவைக் கவிஞர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி. வேங்கிக்கும், கங்காபுரிக்குமாக அலைந்து கொண்டிருந்த எளியவனுக்கு இறையருளால் சோழநாட்டு இளவரசுப்பட்டம் கிட்டுகிறது. இங்கு தொட்டிலில் உறங்கும் பாலகனும், கேசவசுவாமியிடத்து வளரும் பாலகனும் இளவரசராகக் கூடிய பருவத்தை அடையும்போது அவர்களுள் ஒருவருக்கு இளவரசர் பொறுப்பை அளிப்பேனென்றும், இளவரசராகும் செல்வன் என்று வேண்டுகிறாரோ அன்று அரசுப் பதவியையும் துறந்து செல்லச் சித்தமாயிருக்கிறேன் என்றும் உறுதி கூறுகிறேன். என் தாயின் கட்டளைப்படி அவ்வாறு சொல் மாறாமல் நடப்பேன் என்று உறுதி கூறுகிறேன். இங்குள்ள பெரியவர்கள் முன்னிலையில் நான் உரைத்த உறுதியை மீறமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.''

இவ்விதம் கம்பீரமான, உறுதியான குரலில் கூறினான். நம்பியின் கண்களில் இன்பக் கண்ணீர் பெருகியது. கூத்தர் உணர்ச்சி வயப்பட்டார். வைத்த விழி எடுக்காமல் நோக்கியவாறிருந்த அல்லி, தொட்டிற் குழந்தையின் கன்னங்களைத் தொட்டு திருஷ்டி சுற்றினாள்.

குழந்தை விழித்துக் கொண்டது. தன் பொக்கை வாய் காட்டிச் சிரித்தது.

''என் செல்வமே!'' என்று எடுத்து அல்லி அணைத்துக் கொண்டாள்.

கூத்தரின் ஆசிபெற்றுப் புறப்பட்ட வல்லபனும் நம்பியும், கேசவ சுவாமியிடம் சென்றனர். அங்கும் வல்லபன் உறுதிமொழி ஏற்றுக் கொண்டான்.

''பெருமான் நம்பி அவர்களே! எல்லாம் நல்லபடியாக நடக்கும். வல்லபனின் மிக அருகே அதிர்ஷ்ட தேவதை நிற்கிறாள். கிரக பலன்கள் மிகவும் உதவும் வகையில் உள்ளன. மகத்தான புகழோடு வல்லபன் விளங்குவான். ஆனால் - வருங்காலத்தில் இந்தக் குழந்தைகளுள் ஒருவருக்கு விட்டுக் கொடுக்காமல் உடும்புப் பிடியாக அரியணையில் அமர்ந்திருந்தால், சோழநாட்டிற்கு பெரிய ஆபத்து வருவது உறுதி'' என்றார்.



''சுவாமி, தங்களுக்குத் தெரியாதா? நான் எத்தகைய குணமுடையவன் என்பதைத் தாங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்களா?'' என்று கேட்டான் வல்லபன்.

''விதியை மாற்ற எந்த ஞானியாலும் சர்வேசுவரனாலும் முடியாது. அவன் இட்ட விதியை அவனாலேயே மாற்ற முடியாது. எல்லாம் அவன் ஆணைப்படி நடக்கும். வல்லபா! நீ எதிர்பார்த்ததை விட மகத்தான அதிர்ஷ்டங்கள் பதவிகள் உன்னை மிக விரைவில் நெருங்கப் போகின்றன. என்னிடம் வளரும் குழந்தையா, கூத்தரிடம் வளரும் குழந்தையா? யார் வருங்கால அரசர் என்று இப்போது சொல்லமுடியாது. அதனால் தான் இரண்டு குழந்தைகளின் எதிரிலும் உறுதி எடுத்துக் கொள்ளுமாறு சொல்லியிருந்தேன். உலகிலேயே மிக முக்கியமான கடமைகள் மூன்று. தாய் சொல் தட்டாமை, கொடுத்த வாக்கு மீறாமை, பிறர் உடைமையை அபகரிக்காமை. ஆட்சிப் பொறுப்பில் அமர்பவர்கள் பின் இரண்டு தர்மங்களைக் கடைப்பிடிப்பது மிகவும் சிரமம். கடைப்பிடித்தாலோ அழியாப் புகழ் உறுதி'' என்று கூறி வாழ்த்தி அனுப்பினார்.

கேசவ சுவாமியிடம் தனியாக நெருங்கின பெருமான் நம்பி, வல்லபன் திருமணத்தைக் குறித்துக் கேட்டார். தம் மகளை மணம் புரிவிக்க வேண்டிய ஓர் எண்ணம் தன்னிடம் உதித்திருப்பதைக் கூறி யோசனை கேட்டார்.

கேசவ சுவாமி சிறிது நேரம் தியானத்தில் இருந்து விட்டு, ''நம்பி! உன் எண்ணம் நிறைவேற வேண்டுமானால் நீ பலருடன் விரோதம் கொள்ள வேண்டும். ஆனால், வல்லபனுக்கோ பலதார யோகமிருக்கிறது. இதில் திட்டமாக நான் ஏதும் சொல்லமுடியாது. வல்லபனின் தாய் என்ன சொல்கிறாளோ அதன்படி நடக்கட்டும்'' என்றார்.

நம்பி வீட்டை அடைந்தவுடன், ஆவலுடன் காத்திருந்த அவருடைய மகள் கேட்டாள்; ''என்ன முடிவு ஏற்பட்டது அப்பா?'' என்று. நடந்தவற்றை விவரித்த நம்பி, ''நானே கேட்கவில்லை, வல்லபனே பேசினான். உன்னை ஒரு கணம் பார்த்ததிலிருந்தே அவனுக்கு உன்னைப் பிடித்துவிட்டது. ஆனால் நான் அறிந்த வரை வேங்கியில் அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். அந்தக் காதலைத் தடை செய்ய என்னால் முடியும். ஆனால், திருக்கோவலூர் மலையமானின் குறுக்கீட்டைத் தடைசெய்ய வேண்டுமானால், நான் அவருடன் விரோதம் கொள்ள வேண்டும். என்ன செய்வதென்று புரியவில்லை. எல்லாம் அம்பலவாணன் அருள்'' என்றார்.

வல்லபன் தன் தாயிடம் நடந்தவற்றைக் கூறி ''இளவரசுப் பட்டம் ஏற்கும் போது, எனக்குத் திருமணம் நடந்து தான் ஆக வேண்டுமாம். நான் வேங்கியிலிருந்து சந்திரப்பிரபாவை உடனே வரவழைக்கட்டுமா?'' என்று கேட்டான்.

வல்லபனின் தாய் செல்வி திடுக்கிட்டாள். கோபங் கொண்டாள். வல்லபன் திருமணம் குறித்து அவள் கூறிய யோசனை வல்லபனைத் திகைக்க வைத்தது.

## 16. வாக்குத் தவறாதவர்!

துங்கபத்திரை ஆறு பெரும் சுழலுடன் ஓடிக் கொண்டிருந்தது. நதிக்கரையில் படித்துறையில் அமர்ந்து சந்திரப் பிரபா, ஓடும் பெரும் வெள்ளத்தையே உற்று நோக்கியவாறிருந்தாள். அவள் உள்ளத்தில் எழுந்த பெரும் சுழற்சி, சிந்தனைப் பிரவாகமாய்ப் பெருக்கெடுத்துக் கரையை மீறிப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

அவள் ஓட்டிவந்த கன்று காலிகள் நதிக்கரை ஓரம் மேய்ந்து கொண்டிருந்தன. அவள் நேரம் போவது தெரியாமல் அமர்ந்து கொண்டிருந்தாள். இன்று வருவார், நாளை வருவார் என்று அவள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வல்லபன் வரவில்லை. தெற்கே கங்காபுரிக்கு எதற்காகச் சென்றார் என்று அவள் அறியாமல் பல நாள்கள் இருந்தாள். பிறகு தந்தையை வற்புறுத்திச் செய்தி அறிந்துவரச் செய்தாள்.

இரண்டு நாள்களுக்கு முன்பு அந்தச் செய்தி வந்திருந்தது. அவளுடைய தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன் வல்லபன் சோழநாட்டு இளவரசராகப் போவதைக் குறித்துத் தெரிவித்தார். தம் மகள் மனம் மகிழ்ச்சியால் துள்ளும் என்று எண்ணினார். ஆனால், அதற்கு மாறாகச் சந்திரபிரபா மௌனமாகி விட்டாள். சரியாக உண்பதில்லை. உறக்கத்திலும் வல்லபன் நினைவு தான். நதிக்கரைக்குச் சென்றால் ஓடும் நீரைப் பார்த்தவாறு நேரம் போவது தெரியாமல் இருந்தாள். தாயற்ற அவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் அவள் தந்தை தவித்தார்.

"மகளே! இப்படி நீ கவலையுடன், ஊண் உறக்கமின்றி இருந்தால் உன் உடல் நிலை என்னவாகும்?" என்று அவள் தந்தை கூறி அவளைத் தேற்ற முற்பட்டார்.

சந்திரப்பிரபாவின் விழிகளில் நீர் தளும்பியது. "நான் அவரைப் பார்க்க வேண்டும் அப்பா!" என்று கூறி விம்மினாள் அவள்.

அவள் தந்தை திடுக்கிட்டார். "அவரைச் சந்திப்பது என்பது அவ்வளவு எளிதான செயலா, மகளே?" என்று கவலையுடன் கேட்டார்.

"என்னைப் பொறுத்தவரை எளிதுதான்" என்றாள் சந்திரபிரபா.

"தெற்கே வெகுதொலைவில் கங்காபுரி இருக்கிறது" என்றார் அவள் தந்தை.

"இருக்கட்டுமே! என் மனம் இப்போது அங்கு தான் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அவர் இளவரசராகப் போகிறாராம். இப்போதுஅவர் என்ன செய்து கொண்டிருப்பார் என்று நினைத்துப் பார்க்கிறேன்" என்று, நதியின் ஓட்டத்தைப் பார்த்தவாறு கூறினாள் சந்திரபிரபா.



"இப்படியே நினைத்துக் கொண்டிருந்தால் அவரைப் பார்த்தது போலாகி விடுமா?" என்று அவள் தந்தை சலிப்புடன் கேட்டார்.

"அவரை நான் அதோ காண்கிறேன், என்னைப் பார்த்து அவர் புன்முறுவல் பூக்கிறார். நான் அவரைப் பார்த்துப் பேசுகிறேன். 'என்னை மறந்து விட்டீர்களா?' என்று கேட்கிறேன். அவர் அதோ தலையை அசைக்கிறார். அவர் என்னை மறக்கவில்லை" என்று உணர்ச்சி நிறைந்த குரலில் பேசினாள்.

"மகளே! அவர் உன்னை மறக்காமலிருக்கலாம். ஆனால், அவர் இப்போது இளவரசராகப் போகிறார். அவரை அடைய உன்னால் முடியாது. அவரை நீ மறந்து விடுவது தான் உனக்கும் நல்லது; அவருக்கும் நல்லது" என்று கூறி மகள் மனத்தை மாற்ற முயன்றார் தந்தை.

சந்திரப்பிரபா தந்தையை நோக்கிச் சீறினாள். "அதெப்படி அப்பா முடியும்? எங்களிடையே ஏற்பட்ட காதல் பதவி, அந்தஸ்து, பட்டம் ஆகியவற்றிற்கு மேம்பட்டது. இதே துங்கபத்திரை நதிக்கரையில் அவர் என்னைச் சந்திப்பார். அவரது இலட்சியங்கள் சாதாரணமானவையாக இருக்கவில்லை. அவர் வேங்கியின் அரியணையில் அமர்வதற்கு முயன்று கொண்டிருந்தார்..." என்று அவள் கூறும்போது, அவள் தந்தை குறுக்கிட்டு, "ஆமாம். அவருக்கு நானே பொருளும், ஆள் பலமும் கொண்டு உதவ முன் நின்றேன். நிற்கிறேன்" என்றார்.

"அப்படியென்றால், அவர் இந்த நாட்டு அரசராவார் என்பது உறுதி தானே?" - சந்திரபிரபா கேட்டாள்.

"ஆமாம்; அதிலென்ன சந்தேகம்? வல்லபன் தெற்கே கங்காபுரிக்குச் செல்லாமல் இருந்திருந்தால் நிச்சயம். அரண்மனையை முற்றுகையிட்டு, ஆட்சியைப் பிடித்திருக்க முடியும்" என்றார்.

"அது அவருக்கும் தெரியுமில்லையா?"

"ஆகா; வல்லபன் நன்றாக அறிவான். என்றாவது ஒருநாள் தன் பாட்டனாரின் வாரிசாக, கீழைச் சாளுக்கிய நாட்டு அரசராகி விடுவோம் என்ற உறுதி அவனுக்கு இருந்தது. அதனால் தான் கங்கா புரியினின்று பலமுறை வேங்கிக்கு வந்து சென்றிருக்கிறார்."

"கீழைச் சாளுக்கிய நாட்டு அரசராகும் உறுதி படைத்த அவர் என்னைக் காதலித்தார் என்பதைத் தாங்கள் அறிவீர்களல்லவா?"

"ஆமாம் மகளே!"

"வேங்கியின் அரசருக்குச் எளிய குடிமகளின் மீது அன்பு ஏற்படக் காரணம் என்ன?"

சந்திரப்பிரபா இவ்வாறு கேட்டவுடன் அவள் தந்தை மெல்ல நகைத்தார். "மகளே! இதற்கு விடை கூற எனக்குத் தெரியாது. காதல் எந்தக் கட்டுப் பாட்டையும் மீற வல்லது என்று இளம் வயதினர் சொல்கிறார்கள். இளம் வயதினர்

எந்தக் காலத்திலும் அப்படித்தான் சொல்லி வந்தார்கள். அதனால் நீ அவ்வாறு சொல்வதிலும் தவறில்லை. வல்லபனுக்கு உன் மீது அழியாத அன்பு இருக்கிறது என்று எப்படி நீ உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்?'' என்றார்.

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதே நதிக்கரையில் இதே மண்டபத்தில் அமர்ந்து அவர் உறுதியளித்திருக்கிறார். அதற்குச் சாட்சியாக அவர் தனது மோதிரத்தை எனக்கு அளித்திருக்கிறார்'' என்றாள்.

அவள் தந்தை மெல்லச் சிரித்தார். அதில் நம்பிக்கை மிகக் குறைவாக இருப்பது புலப்பட்டது.

''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சந்திரப்பிரபா.

''இளம் பெண்களிடம் வாக்குறுதியளிப்பது வாலிபர்கள் வழக்கம். பெரிய மலைகளின் மீது ஏறுவதாகவும், வானத்தை எட்டிப் பிடிப்பதாகவும் கூறுவார்கள். துஷ்யந்தன், சகுந்தலை கதை தெரியுமல்லவா?'' என்றார் அவள் தந்தை.

''தெரியும் அப்பா! ஆனால் அவர் துஷ்யந்தரல்லர். அவர் வாக்குத் தவறாத சோழர் பரம்பரையில் வந்தவர். அவர் ஏமாற்ற மாட்டார்.'' என்றார் சந்திரப்பிரபா.

''விரைவில் வருவதாக உன்னிடம் உறுதியளித்துச் சென்றார். கங்காபுரியில் இளவரசர் பதவி காத்திருப்பது அவருக்குத் தெரிந்திராதா? தெரிந்தும் உறுதி அளித்துச் சென்றிருக்கிறார். இனி அவர் வேங்கிக்குத் திரும்ப மாட்டார். எனக்குக் கிடைத்த செய்தியிலிருந்து இளவரசர் பட்டாபிஷேகத்துக்கான நாள் குறிப்பிட்டு விட்டார்களாம். மகோன்னதமான சோழநாட்டின் இளவரசராகிறவர், நினைத்த போது வேங்கிக்கு ஓடி வருவார் என்று கனவு காண்கிறாயா மகளே?'' என்றார்.

''கனவு இல்லை, தந்தையே! உறுதியாக நம்புகிறேன். அவர் வருவார். என்னைத் தேடிவருவார்.....'' என்று சந்திரப்பிரபா கூறும் போது அவள் குரலில் அழுத்தம் நிறைந்திருந்தது.

இப்போதும் அவள் தந்தை நகைத்தார். ''மகளே! சோழநாட்டின் இளவரசராக வல்லபன் பதவி ஏற்கும் போது தன்னருகே இளவரசியை அமர வைத்துக் கொள்ள வேண்டும். அரச குடும்பத்து மங்கையை இந்த நாள்களில் தேர்ந்தெடுத்திருப்பார்கள். சாதாரணக் ''குடிமகன் வயிற்றில் பிறந்த உன்னை, வல்லபன் ஏன் நினைக்கப் போகிறான்?'' என்றார்.

சந்திரப்பிரபா திடுக்கிட்டாள். ''ஒரு நாட்டின் எளிய குடிமகள் அரசியாக முடியாதா? இளவரசியாக முடியாதா? காதல் என்பது அரச குலத்துக்கு மட்டும்தானா? அவள் மனத்தில் இப்போது அச்சம் தோன்றியது. மகளுடைய முக மாற்றத்தைக் கண்ட அவள் தந்தை, ''ஆமாம் மகளே! வல்லபன் இப்போது சாதாரண வல்லபன் அல்லன். இப்போது மிக மரியாதைக்குரிய சோழ நாட்டிளவரசர் வல்லபன். அவருக்கு மணம் முடிக்க மலையமான் தீவிரமாக



இருக்கிறார். சோழநாட்டுப் படைத்தலைவர் தன் மகளை மணம் புரிவிக்க முனைந்திருக்கிறார். அந்தக் கடும்போட்டியினிடையே நீ... ஆடிக்காற்றில் பறக்கும் துரும்பு! மகளே, வல்லபனை மறந்துவிடு'' என்று கண்டிப்பாகக் கூறினார்.

சந்திரப்பிரபா நதிச்சுழலைப் பார்த்தவாறிருந்தவள் ஆவேசம் வந்தவள் போல், ''முடியாது, முடியாது, மறக்க முடியாது. அவரே என்னை மறந்துவிட்டாலும் நான் மறக்கமாட்டேன். அதோ அவர் கையை அசைக்கிறார். 'உன்னை நான் மறக்கவில்லை.' என்கிறார். கையை நீட்டி என்னை அணைத்துக் கொள்ள அழைக்கிறார். நான் இதோ புறப்படுகிறேன்'' என்று கூறி நதிப் பிரவாகத்தில் பாய முற்பட்டவளை, நொடியில் தந்தை தடுத்து, ஆற்றங்கரைக்கு அருகே உள்ள மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

''என்ன காரியம் செய்யத் துணிந்தாய் மகளே! இந்த நதி கங்கா புரிக்குச் செல்லவில்லை. சமுத்திர ராஜனை நோக்கி விரைகிறது. அங்குச் செல்லவா நீ விரும்புகிறாய்? நான் எதிர்பார்த்து எச்சரிக்கையாக இல்லாவிடில் என் அருமை மகளை இழந்திருப்பேன். வல்லபனும் அருமைக் காதலியை இழந்திருப்பான்...'' என்று வேதனையும், கணநேரத்தில் நிகழ இருந்த ஆபத்திலிருந்து மகளைக் காப்பாற்றியதால் ஏற்பட்ட பரபரப்பும் மிகப் பேசினார்.

''அருமைக் காதலியை இழந்திருப்பார்...'' சந்திரபிரபா ஒரு முறை தனக்குத்தானே முணுமுணுத்தாள். அப்பொழுதுதான் தான் செய்ய இருந்த செயலின் பயங்கரத் தன்மை அவளுக்குப் புரிந்தது.

இரு கரங்களையும் முகத்தில் புதைத்துக் கொண்டு விம்மினாள். அவள் தந்தை அவளை மெல்ல அணைத்துக் கொண்டு. கண்ணீரைத் துடைத்து, ''பிரபா! மனத்தைத் தேற்றிக் கொள். எட்டாத கனியை எண்ணிக் காலமெல்லாம் வேதனையுடன் வாழக்கூடாது. வல்லபனை மறந்து விடு. நம் உறவினருள், உனக்கேற்ற வரனை நான் முடிவு செய்திருக்கிறேன். நமது செல்வம் அழியாதது. அரசுச் செல்வம் அழிந்துவிடும். நம் மந்தையிலுள்ள பசுக்களின் எண்ணிக்கை உனக்குத் தெரியுமா? இருபதினாயிரம் பசுக்கள்...! நீ ஓர் அரசிபோல் வாழலாம். வல்லபனை மறந்துவிடு மகளே!'' என்றார்.

அவருடைய கரங்களை விலக்கி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''முடியாது, முடியவே முடியாது. அவரை மறக்கவே முடியாது. நான் இப்போது அவரைப் பார்த்தாக வேண்டும். அப்பா! நான் அவரை உடனே சந்தித்தாக வேண்டும்'' என்றாள்.

அவளுடைய தந்தைக்குப்பயம் ஏற்பட்டுவிட்டது. வல்லபனைச் சந்திக்கப் போகிறேன் என்று நதிவெள்ளத்தில் குதித்துவிடப் போகிறாளே என்ற அச்சத்தில், ''வேண்டாம் மகளே, வீணே உயிரை மாய்த்துக் கொள்ளாதே மகளே! நீ இந்த உலகை விட்டுப் போனபிறகு நான் மட்டும் யாருக்காக வாழவேண்டும்?'' என்று கண் கலங்கிக் கூறினார்.

பிரபாவின் முகத்தில் புன்முறுவல் பூத்தது.

''நான் உயிரைவிட விரும்பவில்லை அப்பா! எதற்காக நான் சாகவேண்டும்? என் உயிருக்குயிரானவர் என்னை மறந்து விட்டார் என்றாலோ, மறுத்து விட்டார் என்றாலோ தான் நான் இந்த உலகை விட்டுப் பிரிய முற்படுவேன். என்னை அவர் இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள்.

''மகளே! நீ என்ன சொல்கிறாய்? கங்காபுரிக்குச் சென்று, அங்கே அவர் இளவரசராக விளங்குவதைப் பார்த்து நீ வருத்தப்படப் போகிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை, இல்லை. நான் கங்காபுரிக்குச் செல்ல வேண்டும். அங்கே அவரை ஒரே ஒரு முறையாவது பார்க்கவேண்டும். என்னை அவர் பார்த்து விட்டால் அவர் என்னை மறுக்க மாட்டார். என்னை உடனே கங்காபுரிக்கு அழைத்துச் செல்லுங்கள். என் அருமைத் தந்தையே!'' என்று அவள் குழைந்தாள்.

அவள் தந்தை பலவாறு எடுத்துச் சொல்லிப் பார்த்தார். கங்காபுரிக்குச் செல்லப் பலநாள்களாகுமென்றார். பயணத்தில் பல துன்பங்கள் நேரும் என்றார். காரணங்களை அவள் ஏற்கவில்லை.

கடைசியில், பிரபாவின் வேண்டுகோள் வென்றது. கங்கை கொண்ட சோழபுரத்திற்கு சந்திரப்பிரபாவை அழைத்துச் செல்வதென்று அவள் தந்தை முடிவு செய்தார்.

வல்லபன் தன் காதலைக் குறித்துத் தன் தாயிடம் கூறியவுடன் செல்வியின் முகம் மாறியது. வேங்கியில் தான் மனத்திலே ஏற்றிக் கொண்ட சந்திரப்பிரபாவை மனைவியாக ஏற்றுக் கொள்ள தாய் சம்மதிப்பாள் என்று வல்லபன் உறுதியாக நம்பினான்.

ஆனால் செல்வி தலையை அசைத்து விட்டாள்.

''மகனே! திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். நீ செய்து கொள்ளும் திருமணம் இந்த நாட்டின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடியதாக அமைந்து விடக் கூடாது. இந்த நாட்டின் இளவரசனாக நீ விளங்கி ஆற்றும் கடமையில் உன்னை மணக்கப்போகும் இளவரசிக்கும் சம பங்கு உண்டு. அதனால், சக்கரவர்த்தி என்ன சொல்கிறாரோ அதன்படி நீ நடந்து கொள்வதுதான் நியாயம்....'' என்று அறிவுரை வழங்கினாள்.

வல்லபன் திடுக்கிட்டான். ''வேங்கி மகள் சந்திரபிரபாவை நான் மணக்கக் கூடாதா? அரசர் தேர்ந்தெடுக்கும் மங்கையைத் தான் நான் மணக்க வேண்டுமா? இது என்ன நியாயம்?'' என்று வல்லபன் குமுறினான்.



சோழச் சக்கரவர்த்தி ராஜராஜனைச் சந்திக்க வல்லபன் விழைந்தான். வல்லபன் அவரைச் சந்திக்கச் சென்றபோது, திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர் சக்கரவர்த்தியிடம் வல்லபன் திருமணம் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தார்.

வல்லபனுக்குத் தன் மகளை மணம் புரிவித்து சோழ குலத்தோடு மணவினைத் தொடர்பு கொள்ள விரும்புவதாக அவர் தம் உள்ளக் கிடக்கையைத் தெளிவாகப் புலப்படுத்தினார். சோழநாட்டிற்கு அவர் இதுவரை உண்மையாக ஆற்றிய தொண்டிற்கு ஒரு பரிசாக அவர், மன்னரிடம் அதைக் கேட்டார்.

நம்பியிடமிருந்து இப்படியொரு வேண்டுகோள் வரும் என்று ராஜராஜ சோழர் எதிர்பார்க்கவில்லை.

## 17. மறக்க வேண்டியது தான்

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜ சோழதேவர் மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்தார். திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர் அவரது நம்பிக்கைக்குப் பெரிதும் உரியவர். அவர்களுடைய நட்பு அந்தஸ்துக்கு அப்பாற்பட்டது. நம்பியின் உண்மை உள்ளத்தை அரசர் அறிவார். சோழவள நாட்டிற்குத் தளபதி என்ற முறையில் அவர் ஆற்றிய தொண்டைப் பட ஓட்டக்கூத்தர் தான் வரவேண்டும். அவர் மனம் மாறியிருந்தால் சோழநாட்டைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டிருப்பார். அரசரை ஆட்டிப் படைத்திருப்பார். இளவரசர் பதவிக்குத் தன் சகோதரியின் மகனை அவர் தேர்ந்தெடுத்தபோது, அதற்கு அவர் கூறிய காரணங்களை ஏற்றார். இரு குழந்தைகளுக்கும் ஆபத்து நேரவிருந்தபோது, அதை ஒற்றர்கள் மூலம் அறிந்து முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்து, கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து காப்பாற்றினார். காப்பாற்றியதுடன் குழந்தைகளை வளர்ப்பதற்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து ஒப்படைத்தார்.

சோழ குலத்துக்கே பெரும் தொண்டாற்றிய நம்பியின் உள்ளக்கிடக்கை தம் மகளை, வல்லபனுக்கு மணம்செய்து கொடுக்க வேண்டும் என்பது. ராஜராஜரின் இரண்டு குழந்தைகளுள் ஒருவன் வளர்ந்து, தக்க பருவம் அடையும் போது, வல்லபன் தன் பதவியை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். எட்டு ஆண்டுகளோ, பத்து ஆண்டுகளோ! அந்தக் காலம் வரை தன் மகள் இளவரசியாகத் திகழ்வாள்!

திருச்சிற்றம்பலத்து இறைவனிடம் அளவற்ற பக்தி கொண்ட நம்பி, இச்சிறு ஆசையைத் தன் உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டாம். ஆவலை அரசரிடம் தெரிவித்திருக்க வேண்டாம்.

வெளிப்படுத்தி விட்டார். சக்கரவர்த்திக்கும் சங்கடம் தான். என்ன முடிவைக் கூறுவார்? இரவெல்லாம் அவருக்கு உறக்கமில்லை. திருக்கோவலூர் மலையமான் தன் சகோதரரின் மகளைத் தான் மணம் புரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

நம்பியிடம் தம் கருத்தை உடனே எப்படிச் சொல்லுவார் ராஜராஜர்! சுற்றி வளைத்துப் பேசத் தொடங்கினார்.

''முதல் குழந்தையைக் கூத்தர் வளர்ப்பார் என்று எதிர்பார்த்தேன்'' என்று பேச்சைத் தொடங்கினார் அரசர்.

''கேசவசுவாமியின் விருப்பப்படியே நான் செய்தேன். அல்லியை விட்டு இளவல் பிரியமாட்டேன் என்கிறான். அவளும் தன் சொந்தக் குழந்தையைப் போல் அவனை வளர்க்கிறாள். கூத்தர்பிரானும் தம் முதிய பருவத்தில் குழந்தையைக் கொஞ்சும் அழகே அழகு'' என்றார் நம்பி.

சக்கரவர்த்தி பெருமூச்சு விட்டார். ''குழந்தைகளின் பால் முகத்தைப் பார்க்கக் கூடக் கொடுத்து வைக்காத பாவி நான். நம்பி! நான் முன் பிறவியில் என்ன பாபம் செய்திருப்பேன்?'' என்று கண்களில் நீர் மல்கக் கேட்டார்.

''சக்கரவர்த்திகள் இப்படி மனத்தைக் கலங்க விடக் கூடாது. குழந்தைகள் தக்க இடத்தில் நலமுடன் வளர்ந்து மாமேதைகளாக வீரர்களாக ஆவார்கள். சில வருடங்களே. கேசவ சுவாமி எப்போது உத்தரவிடுகிறாரோ, அப்போது இரண்டு குழந்தைகளும் பழையாறை மாளிகைக்கு வந்து விடுவார்கள். வருங்காலத்து மாமன்னராக விளங்கப்போகும் இளவரசரை கேசவசுவாமி வளர்க்கிறார் என்றால் தாங்கள் முன் பிறவியில் புண்ணியம் அன்றோ செய்திருப்பீர்கள்'' என்று சமாதானப்படுத்தினார் நம்பி.

''நம்பி! தங்களிடம் என் மனத்திலுள்ளதை நான் ஏன் மறைக்க வேண்டும்? என் மனத்துக்குள்ளே ஏதோ அச்சுறுத்திக் கொண்டிருக் கிறது. நான் அதிக காலம் உயிருடன் இருக்கமாட்டேன் என்று தோன்றுகிறது... அதற்குள் ஒரு முறை என் மழலைச் செல்வங்களைப் பார்க்கக் கூடாதா? என்னைப் பார்க்க அனுமதிக்க மாட்டீர்களா?'' என்று நெஞ்சு தழுதழுக்கப் பேசினார்.

நம்பி உரிமையுடன் சினங்கொண்டவராக, ''சக்கரவர்த்தி அவர்களே!ந தங்களுக்கு நான் அறிவுரை வழங்குவதற்கும், சற்றுக் கண்டிப்பாகப் பேசுவதற்கும் மன்னிக்க வேண்டும். தாங்கள் பல்லாண்டுகள் வாழ வேண்டும். வாழ்வீர்கள் என்பது என் நம்பிக்கை. கேசவ சுவாமிகளின் ஆசியும் அப்படித்தான். ஆனால், குழந்தை களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை, உள்ளத் துடிப்பைச் சற்று அடக்கிக் கொள்ளுங்கள். தாங்கள் குழந்தைகளைச்



சந்திக்கக் கூடாது என்பதற்காகத் தான், பழையாறையிலிருந்து தள்ளிச் சிற்றூரில் குழந்தைகளை வளர்க்க ஏற்பாடு செய்தேன். தங்கள் உடல்நிலை சற்று அபிவிருத்தி அடைந்து வரும் சமயத்தில், இப்படி மனத்தில் கவலையை ஏற்படுத்திக் கொள்ளலாமா?'' என்றார்.

சக்கரவர்த்தி மெல்ல நகைத்தார் : ''நம்பி! ஒரு கவலை ஏற்படுகிறது'' என்றார்.

''இப்போது புதிய கவலைக்குக் காரணமில்லையே!'' என்று கேட்டார் நம்பி. ''பாண்டிய நாட்டினின்று தாக்குதல் ஏதாவது ஏற்படும் என்ற கவலை சில ஆண்டுகளுக்கு இல்லை. அண்ணன் தம்பி சண்டை தான் இப்போது அங்கே புகையத் தொடங்கியிருக்கிறது. இரு குழந்தைகளையும் கொல்லத் திட்டமிட்டவர்களையும் சிறையில் அடைத்து விட்டேன். உட்பகைக்கு இடமில்லை. வேங்கியினின்று வந்துள்ள தங்கள் சகோதரியின் குமாரன் மிகத் திறமைசாலி. தக்க இளவரசரைத் தான் தாங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்... வேறு கவலை ஏது அரசே?'' என்று நம்பி கேட்டார்.

''இளவரசரைப் பற்றிய பிரச்னை தான்.''

''இளவரசரைப் பற்றியா? பட்டம் சூட்டுவதற்கான நாளைக் குறித்து விட்டார் கேசவசுவாமி. இளவரசியைத் தேர்ந்தெடுக்க வேண்டியது தான்...''

''அது தான் பிரச்னை.''

''அதில் என்ன பிரச்னை இருக்கிறது சக்கரவர்த்தி?''

''இளவரசி யார் என்று தேர்ந்தெடுப்பதில் தான்...'' என்று கூறி மெல்ல நகைத்தார் ராஜராஜர்.

நம்பி புரிந்து கொண்டு விட்டார். அங்கே மௌனம் நிலவியது. மௌனத்தை அரசர் கலைத்தார்.

''நம்பி அவர்களே! தாங்கள் என் நிலையிலிருந்தால் என்ன சொல்வீர்கள்? சோழநாட்டுக்குத் தன்னலமற்ற சேவை புரிபவரது அருமை மகள். சோழநாட்டின் முதுகெலும்பு போன்ற திருக்கோவலூர் மலையமான். அவருக்கு என் மீது எப்போதும் கோபம். தன் மகளை இழந்த துக்கம் மாறுமுன்பு, தன் பெண் வயிற்றுப் பெயரன் இளவரசனாகவில்லையே என்ற ஏக்கம் வேறு. அவர் குலம், சோழ நாட்டுடன் பல ஆண்டுகளாக மணமகளை அளித்து உறவை உறுதிப்படுத்தி வருகிறது. இப்போது மலையமான் தன் சகோதரரின் மகளை வல்லபனுக்கு அளிக்க முன் வருகிறார். நான் யாரைத் தேர்ந்தெடுப்பது?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

நம்பிக்குக் கோபம் மெல்ல மெல்ல முளைத்தது. அரசரிட மன்று. மலையமானிடம் தான்.

''சக்கரவர்த்தி அவர்களே! மலையமானுக்கு எப்போதும் யார் மீதாவது கோபம் தான். தங்கள் மீது ஏன் கோபப்பட வேண்டும்? ஒரு வயதுக் குழந்தையை இளவரசராக்க முடியாது என்று அவருக்கே தெரியுமே? இன்று இல்லாவிடில் இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகு அவருடைய பெயரன் தான் இளவரசன். பிறகு, இந்த நாட்டுப் பேரரசர். வல்லபனுக்கு இப்போது கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்னும் சிறிது காலத்துக்குத்தான்...'' என்று கூறியபோது மன்னர் குறுக்கிட்டார்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''அந்த நிபந்தனையின் பேரில் தானே வல்லபன் இளவரசர் பட்டத்தை ஏற்கிறான். இன்றுள்ள இளம் பிஞ்சு தக்க வயதடையும் போது வல்லபன் விட்டுக் கொடுக்க வேண்டியதுதானே? அப்படிச் செய்வதாக, வல்லபன் சம்மதித்துக் குழந்தைகள் எதிரே உறுதி எடுத்திருக்கிறான். அந்த உறுதியை வல்லபன் மீறமாட்டான். இளவரசர் பட்டத்தை உதறித் தள்ளி, தியாகம் செய்து தியாக வல்லபனாக மாறும் ஒருவனுக்கு மலையமான் மகளை மணம் புரிவிக்கச் சம்மதிக்கிறாரா? தாங்கள் உறுதியாகக் கேட்டீர்களா?'' என்று நம்பி கோபமாகப் பேசினார்.

மன்னர் பேச முற்படுவதற்குள், ''மலையமானுடைய சகோதரர் மகள் இளவரசியாக வாழ்ந்தவள் தன் பதவியை இழக்கச் சம்மதிப்பாளா? வருங்காலத்தில் மலையமானும், அவரது சகோதரரும் மன வேற்றுமை கொண்டு ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்கள் என்பது என்ன உறுதி?'' என்று கடுமையான குரலில் கேட்டார்.

மன்னர் மிக அமைதியாக, ''நம்பி! இந்த வாதம் தங்களுக்கும் பொருந்தும் அல்லவா? தங்கள் மகள் பதவி இழக்கச் சம்மதிப்பாளா?'' என்று கேட்டார்.

நம்பி உணர்ச்சி வசப்பட்டவராக, ''என் மகள் பதவி காரணமாக வல்லபனை மணக்க முன் வரவில்லை. முதல் பார்வையிலேயே வல்லபனிடம் அவள் மனத்தைப் பறிகொடுத்துவிட்டாள். வல்லபன் இளவரசனாகப் போகிறான் என்று கூட அவளுக்குத் தெரியாது. தாயற்ற அவள் குணத்தை நான் எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. தெய்வ பக்தி மிகுந்தவள். அவள் கண் எனப்போற்றும் நந்தினியையும், காவிரிக் கரையையும், நதிக்கரைக் குடிலையும், விட்டு வருவதற்கு அவள் என்றுமே விரும்பமாட்டாள். அடக்கத்தில் குன்று அவள். நான் தான் கனவு காண்கிறேன், என் மகளுக்கு ஏற்ற வல்லபனுக்கு அவளை மணம் புரிவிக்க வேண்டும் என்று. அவளுக்கு இளவரசியாகும் ஆசை இல்லை. சக்கரவர்த்தி அவர்களே! என் இதயத்தின் மூலையில் தான் என் மகளை இளவரசியாக்க வேண்டும் என்ற ஆசை....'' என்று



நம்பி கூறிவரும் போது மன்னர் குறுக்கிட்டு, ''நம்பி! உம் ஆசை மிக நியாயமானது. உமது சேவைக்கு இந்த நாடு ஏழேழு தலைமுறைக்கும் கடமைப்பட்டுள்ளது. ஆனால், இந்த அந்தஸ்து, அரச குலம் என்ற பரம்பரை நிர்ப்பந்தம் மட்டும் இல்லாவிடில், உமக்கு ஒரு மகன் இருந்திருந்தால் இளவரசுப் பட்டத்தை அவனுக்கே சூட்டியிருப்பேன்...'' என்றார்.

''அப்போது மட்டும் குலம், பரம்பரை நிர்ப்பந்தம் குறுக்கிடாதோ?... அரசர்க்கரசே! நாம் இத்துடன் பேச்சை விட்டு விடுவோம். தங்கள் உடல் நிலைக்கு இதனால் ஏதாவது ஊறு நேர்ந்து விடப் போகிறது...'' என்று கூறிக் கொண்டிருக்கும் போது, வல்லபன் அங்கு வந்து வணங்கி நின்றான். அவன் அந்தக் கூடத்து வாயிலில் வந்து நின்று கொண்டிருந்த போது சக்கரவர்த்தியும், நம்பியும் உரையாடிக் கொண்டிருந்தவற்றின் சில பகுதிகளைக் கேட்டான். ஒரு கணம் திகைத்தான். மறுகணம் சிரித்தான்.

சக்கரவர்த்தி அவனை உற்று நோக்கியது அவன் நகைத்ததற்குக் காரணத்தை வினவியது போலிருந்தது. நம்பியும் அவனை நோக்கினார்.

''சக்கரவர்த்தி அவர்களே! இளவரசர் பட்டத்தை நான் ஏற்கும் நாளன்று என் அருகே இளவரசி அமர்ந்திருக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

''ஆமாம், சாஸ்திரம் சொல்கிறது'' என்று மன்னர் சார்பில் மறுமொழி கூறினார் நம்பி.

''அப்படியென்றால் இளவரசியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கு உண்டல்லவா?'' என்று வல்லபன் கேட்டபோது, மன்னரும் நம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''உண்டு, ஆனால்....'' என்றார் நம்பி.

''ஆனால்... என்ன? முழுக் காரணமும் சொல்லுங்கள்....'' என்றான் வல்லபன்.

''பெரியவர்களாகப் பார்த்துத் தக்கவளை மணம்புரிவிக்க வேண்டும் என்பது முறை'' என்றார் நம்பி.

''எனக்கு யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்?''

''அதைப் பற்றித் தான் இப்போது விவாதித்துக் கொண்டிருக் கிறோம்...'' என்றார் நம்பி, மன்னரை நோக்கியவாறு.

''மன்னருக்கு அதனால் சிறிது சங்கடங்கூட... இல்லையா...?''

''அப்படியெல்லாம் இல்லை. ஆனால் மன்னர் அதிர்ச்சியடையும் படியாக ஏதும் சொல்லக் கூடாது. செய்யக் கூடாது என்று எண்ணுகிறோம்'' என்றார் நம்பி.

"நானும் அதைத் தான் சொல்கிறேன். மலையமான் மகளா, நம்பியின் புதல்வியா என்று விவாதித்து மன்னருக்கு வேதனை தராமல் நான் முடிவு கூறுகிறேன்" என்று வல்லபன் கூறியபோது, மன்னரும், நம்பியும் அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று எதிர்பார்த்தனர்.

வல்லபன் தன் மனத்திலுள்ளதைத் தெரிவித்தான். தன் தாயிடம் விவாதித்ததைத் தெரிவித்தான். வேங்கியில் தன் மனத்துக்குகந்த சந்திரபிரபா தனக்காக காத்திருப்பதைத் தெரிவித்தான்.

மன்னரும், நம்பியும் திடுக்கிட்டனர். மன்னர் தலையை அசைத்தார். முடியாது, முடியவே முடியாது என்பதற்கு அறிகுறியாகத் தலையைப் பலமாக அசைத்தார்.

"வல்லபா! நீ வேங்கி மகளை மறந்துவிட வேண்டியது தான்" என்றார்.

நம்பி மௌனமாக நின்று கொண்டிருந்தார். "நம்பி, பார்த்தீர்களா? இப்போது புதிய பிரச்னை உருவாகி விட்டது. நான் எப்படி அமைதியாக இருக்க முடியும்?" என்றார் மன்னர். அவர் குரலில் பரபரப்பும் கவலையுமிருந்தன. அவர் முகம் மாறியது.

நம்பி அ;தைக் கவனித்தார். "மன்னர்பிரானே! நான் உடனே சென்று தங்கள் சகோதரியை இங்கே வருமாறு செய்கிறேன். நெறியுடையப் பெம்மாள் நல்வழி கூறுவாள்" என்று கூறிவிட்டு விரைந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வல்லபனின் தாய் செல்வி அங்கு வந்து சேர்ந்தாள். தன் சகோதரியைக் கண்டவுடன் ராஜராஜன் தம் மனத்திலுள்ளதைத் தங்கு தடையின்றிக் கொட்டி, "செல்வி! உன் மகன் வேங்கி மகளை மறந்து விட வேண்டியதுதான்" என்றார்.

"நானும் அவ்வாறு தான் யோசனை கூறியுள்ளேன். வல்லபன் அதை ஏற்பான் என்று நினைக்கிறேன்" என்று செல்வியும் கூறினாள்.

வல்லபன் ஆழ்ந்த சிந்தனையுடன் தலைகுனிந்தவாறு நின்றான்.

## 18. "நான் உங்கள் அடைக்கலமே"

திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் பணியாட்களுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தார். இரண்டு பெரிய பெட்டிகளில் ஆடை, அணிகளை எடுத்து வைக்குமாறு சொன்னார். சில ஓலைச் சுவடிகளை எடுத்து வைக்குமாறு மகள் திலகதேவிக்குக் குரல் கொடுத்தார்.



திலகதேவி மாணிக்கவாசகர் பாடல்கள் எழுதப்பட்ட ஓலைச் சுவடியை எடுத்து வந்து தந்தையின் அருகில் நின்றாள்.

"நீயும் உடன் வருகிறாய் மகளே!" என்றார் நம்பி. எங்கே செல்கிறார், எப்போது புறப்படுவார், எப்போது வருவார் என்று யாரும் அவரைக் கேட்கத் துணியமாட்டார்கள். வீட்டின் முன் தோட்ட வாயிலில் சிவிகை வந்திருந்தால் பழையாறை அரண்மனைக்குச் செல்கிறார் என்று பொருள். வேப்பமரத்து நிழலில் வெள்ளைக் குதிரை கனைத்தவாறு நின்றிருந்தால் வெளியூர் செல்வதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று அவர் மன்னரைச் சந்தித்துவிட்டு வந்தபிறகு சிறிது நேரம் ஒருவருடனும் பேசாமல் அமைதியாக இருந்தார். அம்பலவாணர் திருவுருவத்தின் எதிரே கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருந்தார். நெற்றியில் திருநீறெடுத்து அணிந்து கொண்டு பெருமூச்சு விட்ட வண்ணம், பயணம் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானாள்.

"திலகா! நாம் சிதம்பரத்துக்குப் புறப்படுகிறோம்" என்றார் நம்பி.

திலகதேவிக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. வெளியூருக்குச் செல்வ தென்றால் அவளுக்கு ஏற்படும் குதூகலத்திற்குக் குறைவிருக்காது. ஆற்றங்கரையையும், சோலைப் புட்களையும், வீட்டுப் பசுக்களையும் தினந்தினம் பார்ப்பதில் அலுப்பு ஏற்படுவதில்லை என்றாலும், சிவிகையில் அமர்ந்து மெல்ல ஆடி அசைந்தவாறு அது செல்கையில் சாலையின் இருபுறத்து இயற்கை நடனத்தைக் காண்பதில் ஏற்படும் இன்பம் தனி தான்.

"தில்லைச் சிற்றம்பலத்திற்கா அப்பா! இதோ நொடியில் எனக்கு வேண்டியவற்றை எடுத்துவைத்துக் கொள்கிறேன்" என்றாள் திலகா.

"நாம் எப்போது திரும்புவோம் என்று சொல்ல முடியாது. உடைகளைப் போதுமானதாக எடுத்து வைத்துக் கொள்" என்றார் நம்பி.

திலகா அவர் முகத்தை நோக்கினாள். சிதம்பரத்தில் நீண்ட நாள்கள் தங்கப் போகிறாரா? - அப்படியென்றால்?

'அப்படியென்றால்?' என்று கேட்க அவளுக்குத் துணிவு இல்லை. எப்போதும் அவரே கேள்விகளைக் கேட்பார். விடை களையும் அவரே கூறிவிடுவார். குறுக்கே பேசுவது அவருக்குப் பிடிக்காது.

மகள் தன்னை ஏறிட்டு நோக்குவது புரிந்தது. "ஆமாம் மகளே! தில்லைச் சிற்றம்பலத்து அம்பலவாணர் சந்நிதியில் நம்மை மறந்து இருப்பது போன்ற பேரின்பம் வேறென்ன இருக்கிறது? எனக்குச் சோழ நாட்டு வாழ்க்கை அலுத்து விட்டது" என்றார்.

நம்பி இவ்விதம் சொல்லவே மாட்டார். அவருக்குச் சோழநாட்டுப் பழையாறையை, கங்காபுரியை, சோழ சக்கரவர்த்தி களை விட்டுப் பிரியவே மனமிராது. நாள்தோறும் ஒற்றர்களைச் சந்திப்பதும், நால்வகைப் படைத் தலைவருடன் அளவளாவுவதும், அயல் நாட்டிலிருந்து வரும் அரசப் பிரதிநிதிகளைச் சந்தித்து அளவளாவுவதுமாக நேரம் போதாமல் தவிப்பவருக்கு சிதம்பரத்துக்குச் சென்றால் பொழுது எப்படிப் போகும்?

அவர் முடிவு செய்து விட்டார். எப்போதும் திட்டமிட்டுக் கொண்டிருப்பதால் மனத்தில் ஏற்படும் உளைச்சல், தூக்கமின்மை ஆகியவற்றிற்கு விடுதலை தர முடிவு செய்துவிட்டார்.

சிவிகையில் மகளுடனேயே அமர்ந்து கொண்டார். சிவிகை சுமப்பவரின் 'ஹோ, ஹோ' ஒலி மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது. இலேசாகச் சிவிகை அசைந்தாடிச் சென்று கொண்டிருந்தது.

திலகதேவி ஏதும் பேசவில்லை; இளவரசர் வல்லபனைச் சந்தித்து அவருடைய மன எண்ணத்தைத் தெரிந்து கொள்வதாகச் சொன்னாரே, இளவரசர் ஏதும் மறுமொழி கூறவில்லையா?

திருமண நினைவு அவளுக்கு இப்போது ஏற்பட்டது தான். அவளொத்த தோழிகள் திருமணம் புரிந்து கொண்டு கணவர் வீட்டுக்குச் சென்று விட்டாலும், திலகதேவி குடிலைச் சுற்றி வருவதும், பசுவைப் பராமரிப்பதும், தோப்பிலுள்ள பறவைகளுடன் பேசி மகிழ்வதுமாகக் காலத்தை கழித்து வந்தாள். அவளுடைய தந்தை தான் இளவரசருக்கு மணம் புரிவிக்கலாம் என்ற நினைவை ஏற்படுத்தினார். இப்போது அவர் அதைப் பற்றிய கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. பழையாறையை விட்டு, சிதம்பரத்திற்குப் புறப்படுகிறார்.

அவராகவே பேச்சைத் தொடங்கினார். 'திலகா! சிதம்பரத்தில் பொழுது போகாது என்று நீ கவலைப்பட வேண்டாம்'' என்றார்.

திலகதேவி மெல்ல நகைத்தாள். ''தில்லை அம்பலவாணர் சந்நிதியில் நான் அமர்ந்து நேரம் போவதே தெரியாமல் குஞ்சித பாதத்தைக் கண்டு குதூகலித்துக் கொண்டிருப்பேன். பொன் விமானத்தைப் பார்த்தவாறு நிற்பேன். சிவகங்கைக் குளத்தில் கால்களை நனையவிட்டு, சின்னஞ்சிறு மீன்களின் மென்தொடுதலில் மெய்மறந்து நிற்பேன்'' என்று திலகதேவி உற்சாகத்துடன் கூறினாள்.

நம்பி தலையை அசைத்தார். 'நான் என்ன செய்வதாக நினைத் திருந்தேனோ அதைத் தானே, என் மகளும் செய்யப் போவதாகக் கூறுகிறாள்' - என அவர் நினைக்கும்போது அவருக்குப் புதிய உற்சாகமே ஏற்பட்டது.



''திலகா! இதைவிட வேறு இன்பம் உலகத்தில் இருப்பதாக நினைக் கிறாயா? போர்க்களங்களும், நாடு பிடித்தலும் எதிரிகளை முறியடிப்பதும், அதைப் பற்றிய சிந்தனையை எப்போதும் கொண்டிருப்பதுமாக எனக்கு அலுப்பே ஏற்பட்டு விட்டது. சிற்றம்பலத்தில் பேரின்பத்தைக் கண்டுகளிக்கப் போகிறேன்'' என்றார் நம்பி.

தந்தை எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று திலகதேவிக்குப் புரிந்துவிட்டது. ஒரு வேளை சோழநாட்டு முதலமைச்சர் பதவியையும், மாதண்ட நாயகர் பதவியையும் உதறி விட்டாலும் வியப்பில்லை.

''அப்பா! பழையாறையிலிருந்து ஒவ்வொரு சிறு யோசனைக்கும் சிதம்பரத்திற்கு வருவதென்றால் நேரம் வீணாகாதா?'' என்று திலகதேவி கேட்டாள்.

நம்பி மெல்லத் தமக்குத் தாமே நகைத்துக் கொண்டார்.

'பழையாறையிலிருந்து, இனி என்னை எதற்கு யோசனை கேட்க வேண்டும்? இவ்வளவு காலமாக ஆலோசனை கூறித் தொண்டாற்றியது போதும். என்னைவிட அறிவு மிக்கவர்களுக்கு வாய்ப்பளிப்போம் - நம்பி ஒருவரால் தான் சோழநாடு பிழைத்திருக்கிறதா?, - இதை நினைக்கும் போது அவருக்குச் சிரிப்பு வந்தது.

இல்லை - இல்லை; அவருடைய திடீர் முடிவுக்கு இது காரணமில்லை; அவரது உள்ளத்தின் அடித்தளத்தில் வேறு ஏதோ ஒன்று இப்போது முளைத்தெழுந்து உறுத்துகிறது.

''தங்களுடைய திடீர்ப் பயணம் எனக்கு வியப்பாய் இருக்கிறது. அரசர் பட்டமேற்கும் வைபவத்திற்கு மீண்டும் நீங்கள் பழையாறை செல்வீர்களா?'' என்று திலகதேவி கேட்டாள்.

ஆமாம்; நம்பி இல்லாமல் பட்டமளிப்பு வைபவம் நடக்குமா?

''என்ன கேட்டாய்? பட்டமேற்கும் வைபவமா? அழைத்தால் போவேன். எனக்குச் சோழ நாட்டிடம் என்ன கோபம்? இளவரசரிடம் என்ன கோபம்? வல்லபன் நல்ல குணமுள்ளவன். சோழநாடு செய்த பாக்கியம் அவனை இளவரசனாக அடைகிறது'' என்று கூறி நிறுத்திய அவர், மீண்டும் தொடர்ந்து. ''வல்லபனைப் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்து விட்டது. எனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேரமே இதுவரை இல்லாதிருந்தது. ஆனால், வல்லபனைப் பார்த்தவுடன் ஒரு சிறு சபலம். பெண்களுக்கு ஏற்பட வேண்டிய சபலம் எனக்கு ஏற்படலாமா? வல்லபனை என் மருமகனாக ஏற்க ஆசைப்பட்டேன். உள்ளூற சோழ அரச குலத்துடன் நெருங்கிய தொடர்பு

கொள்ள வேண்டும் என்ற ஆசையும் கொண்டேன். அப்படி நான் ஆசைப்பட்டது தவறு என்று இப்போதுதான் புரிகிறது....'' என்று கூறி நிறுத்தினார். பிறகு சிறிது கோபத்துடன் ''மலையமான் பரம்பரை தான் சோழநாட்டுடன் மணத்தொடர்பு கொள்ள வேண்டுமா? சோழநாட்டின் உயர்வுக்கு உண்மையாக உழைத்த இந்த நம்பிக்கு அந்தக் கௌரவம் கொடுக்கக் கூடாதா? ராஜராஜருக்கு என் இதயம் நன்றாகப் புரியும். இருந்தாலும் அவர் தலையசைத்து விட்டார். திலகா! உனக்கு வல்லபன் இல்லை. நீ சோழநாட்டு இளவரசி ஆகப் போவதில்லை. இந்த நம்பிக்கு நாட்டைக் காப்பாற்றும் ஒரே கடமை தான் உண்டு. நம்பியின் பெயரன் அரியணையில் அமரக்கூடாது. அப்படித்தான் அரசர் நினைத்து விட்டார். மன்னரின் உணர்ச்சியைப் புரிந்து கொண்ட பிறகு பழையாறையில் ஏன் இருக்க வேண்டும்? சோழநாட்டு முதல் மந்திரியாக நானிருக்கலாம்; மாதண்ட நாயகனாக இருக்கலாம். எனக்கும் மனிதனுக்குரிய இயற்கையான வக்கிர குணங்கள் ஏற்படலாம்... சோழ நாட்டைத் தம் வசப்படுத்த முயற்சிகளில் இறங்கலாம். வேண்டாம், வேண்டாம். கொடிய எண்ணத்திற்கு இடமேற்பட வழியின்றி, மனமாற்றம் ஏற்பட வாய்ப்பின்றிப் பழையாறையினின்று புறப்பட்டு விடுவோம்.''

நம்பி அத்தகைய முடிவுடன் தான், தில்லை நகரை நோக்கிப் பயணமானார். இனி அவர் பழையாறைக்குத் திரும்பி வருவாரா? மன்னருக்கு இந்தச் செய்தி தெரியுமா?

சோழநாட்டில் பரபரப்பான நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இது ஓர் அறிகுறியா?

பெருமான் நம்பி, சிதம்பரத்தை நோக்கித் தம் மகளுடன் சென்று கொண்டிருக்கும் போது பழையாறைக்கு அடுத்த ராஜராஜேச்சுரத்து மாளிகையில், ஒரு பகுதியில் வல்லபனின் தாய் செல்வி தங்கியிருந்த இடத்தில் வாயிற்கதவை ஓர் இளம் பெண் வந்து தட்டினாள்.

வல்லபனின் வருகையை எதிர்பார்த்திருந்த செல்வி, சந்திரப் பிரபாவைக் கண்டவுடன் யார் என்று புரிந்து கொள்ளாமல் திகைத்து நின்றாள்.

சந்திரப்பிரபா குனிந்து மண்டியிட்டு வணங்கி தான் கொண்டு வந்த கனிவகைகளை எடுத்துவைத்து மிக மரியாதையுடன் நின்றாள்.

''குழந்தாய்! யாரம்மா நீ? எனக்குப் பார்வை இப்போது சிறிது குறைந்துவருகிறது. அடையாளம் தெரியவில்லை. ஒருவேளை, பெருமான் நம்பியின் மகளா? அல்லது மலையமானின் புதல்வியா?'' என்று கேட்டாள். அக்குரலில் அன்பு இருந்தது. வல்லபனைப் பெற்றெடுத்த பாக்கியசாலியின் குணநலன்கள் மிக உன்னதமாக இருப்பதில் வியப்பென்ன?



வாயிற்படியருகே நின்றவாறு பேசவிரும்பாமல் சந்திரப்பிரபாவை உள்ளே அழைத்து மஞ்சத்தில் அமரச் சொன்னாள்.

சந்திரப்பிரபா உட்காரவில்லை. நின்று கொண்டே இருந்தாள்.

''பெண்ணே! நீ யார் என்று சொல்லவில்லையே'' என்று செல்வி அவளை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள்.

''அம்மா!....'' என்று சந்திரப்பிரபா அழைத்தாள். அந்தக் குரலின் இனிமை செல்வியை மெய்சிலிர்க்க வைத்தது.

''அம்மா! நீங்கள் நினைப்பது போல் சோழநாட்டு மாதண்ட நாயகரின் மகள் அல்லள். மலையமானின் புதல்வியும் அல்லள். நான் ஒரு எளியக் குடிமகனின் திருக்குமாரி. வேங்கிநாட்டினின்று வருகிறேன். தங்களையும் தங்கள் புதல்வரையும் தேடி என்னை ஒப்படைத்துக் கொள்ள வந்தேன்'' என்றாள்.

செல்விக்குப் புரிந்துவிட்டது. வேங்கியில் தன் மகனைக் காதல் வலையில் சிக்கவைத்த பெண்ணா என்று நினைக்கும் போது செல்விக்கு ஒரு கணம் சீற்றம் பொங்கியது.

## 19. 'என் செல்வமே!'

இருள் பிரிவதற்கு இரண்டு நாழிகைக்கு மேலிருந்தது. பறவைகள் மெல்லத் தம் சிறகுகளை அசைத்து, அன்றைய தம் பணியைத் தொடங்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. கிழக்கே முளைத்த வெள்ளியின் பனிரென்ற ஒளி கருநீல வானில் கதிரவனுக்குக் கட்டியங்கூறுவது போல் அமைந்தது.

கேசவ சுவாமி தடியை ஊன்றிக் கொண்டு கொள்ளிடக் கரையை நோக்கிச் சென்றார். கரை ஓரமாகச் சலசலவென்று ஓடும் நீரில் அமிழ்ந்து நீராடி விஷ்ணுவின் ஆயிரத்தெட்டுத் திருநாமங்களை மெல்ல உச்சரித்தவாறு, ஈர உடையுடன் குடிலை நோக்கித் திரும்புவார். திருப்பெயரைச் சொல்வதற்கும் அவர் குடிலை அடைவதற்கும் நேரம் சரியாக இருக்கும்.

அவர் வருவதற்குள் அவர் சீடர்கள் எழுந்து நீராடிக் கண்ண பிரான் திரு உருவத்தின் முன் விளக்கேற்றி அமர்ந்து, பாசுரங்களைப் பாடுவர். கீதையின் சில பகுதிகளைக் கூறுவர்.

கேசவ சுவாமியும் சேர்ந்து சொல்லுவார். பிறகு சீடர்களில் ஒருவன் நந்தவனத்தில் பூக்கொய்யச் செல்வான். ஒருவன், கொட்டடியிலுள்ள பசுக்களுக்கு வைக்கோல் போடச் செல்வான். ஒருவன் அடுப்பை மூட்டி

நைவேத்தியத்துக்கு ஆயத்தம் செய்வான். இப்போது மற்றொரு கடமையும் சீடன் ஒருவனுக்குச் சேர்ந்து விட்டது. கேசவ சுவாமி அவனிடம் அந்தப் பணியை ஒப்படைத்திருந்தார். சோழ சக்கரவர்த்தி ராஜராஜனின் குழந்தைகளுள் சற்று வயதில் மூத்தவனை வளர்க்க ஒப்புக் கொண்டிருந்தார்.

சீடனுக்கு அரசிளங்குமரனைத் தான் பேணிப்பாதுகாக்கிறோம் என்பது தெரியாது. சுவாமியின் கட்டளை, "குழந்தையை நன்றாக வளர்க்கவேண்டும். அறிவுடையவனாக வளர்க்கவேண்டும். பக்திமானாக வளர்க்க வேண்டும் என்பது தான்.

சுவாமி இல்லாதபோது சீடர்கள் பேசிக் கொள்வார்கள். சுவாமியின் வயதான காலத்தில் இந்தக் குழந்தையை தாயில்லாத குழந்தையை வளர்ப்பதாக ஏன் ஏற்றுக் கொண்டார் என்று சந்தேகத்தை எழுப்புவார்கள்.

"தாயின் பாலையே குழந்தை சுவைத்ததில்லையாம், நமது நந்தினியின் பால் இருக்கும் வரை கவலையில்லை" என்று பசுவின் பெருமையைப் பேசுவார்கள்.

"குழந்தையின் முகத்தைப் பார்த்தால், சாதாரணக் குடிமகன் வீட்டுக் குழந்தை போல் தெரியவில்லை. முகத்தில் ராஜகளை ததும்பி நிற்கிறது" என்பான் ஒரு சீடன். "இந்தக் குழந்தையை வளர்த்துப் பெரியவனாக, மேதையாக ஆக்கி, தனக்குப் பின் வாரிசாக நியமிக்கப் போகிறாராம்" என்று ஒரு சீடன் கூறுவான்.

ஆக, சீடர்கள் எல்லாருமே குழந்தையைப் பற்றிய கதையை அறிந்து கொள்ள விரும்பினாலும், கேசவ சுவாமிக்குப் பயந்து வம்புப் பேச்சை மறந்திருந்தனர். குழந்தையின் அழுகுரல் கேட்காவண்ணம் வளர்த்தனர்.

கிருஷ்ண பகவான் எதிரே சீடர்களும், கேசவ சுவாமியும் தம்மை மறந்து பாடும் போது ஒன்றரை வயதே நிறைந்த குழந்தை உட்கார்ந்து கொண்டு தாளம் போடும்.

நெற்றியில் கீற்றுச் சந்தனமிட்டு, இடையில் பட்டுக் கட்டி, 'என் கண்ணே, கிருஷ்ணா!' என்று கேசவசுவாமி கொஞ்சுவார்.

சோழ அரச குலத்துக் குருவாக இருந்தாலும் எளிமையைத் தவிர வேறு அறியாத, எதன் மீதும் பற்று வைக்காத சுவாமிக்குக் குழந்தையிடம் அழுத்தமான பற்றும் பாசமும் ஏற்பட்டது. சீடர்களுக்குப் பெருவியப்பை அளித்ததில் வியப்பு இல்லை.

"இன்னும் சில நாள்களில் நாம் வடக்கேயுள்ள திருத்தலங் களைக் காணப் புறப்படுகிறோம். திருக்கச்சி, திருவல்லிக்கேணி, திருவேங்கடம், சிங்கவேள் குன்றம் என்று எம்பெருமான் உறையும் இடங்களைப் பார்த்துக் கொண்டே பத்ரி வரை போகிறோம்" என்று சுவாமி சீடர்களிடம் தெரிவித்தார்.



"இளவரசுப் பட்டாபிஷேகத்துக்குத் தாங்கள் இருந்து விட்டு பிறகு தானே புறப்படத் திருஉளம்?" என்று பிரதம சீடன் கேட்டான்.

"ஆமாம். அதற்காகத் தான் காத்திருக்கிறேன். அந்த வைபவம் நடந்த சில நாள்களுக்குள் சோழ நாட்டில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்படப் போகிறது." என்று தம் விழிகளை மூடிக் கொண்டு, வருங்காலத்தில் நடப்பதை எதிரே காண்பது போல் கூறினார்.

சீடனின் உடல் சிலிர்த்தது. "சுவாமி! சோழ நாட்டில் இன்னும் என்ன மாறுதல் நிகழப் போகிறது? இப்போதே சோழப் பரம்பரை மாறி வேறு ஒருவரிடம் தான் செல்ல இருக்கிறது. இன்னும் மாறுதல் உண்டா...?" என்று கேட்டான்.

கேசவசுவாமி மெல்ல நகைத்தார். "இப்போது சோழ பரம்பரை எங்கே மாறியிருக்கிறது? எதைக் கொண்டு அவ்வாறு கூறுகிறாய்?" என்று கூறிவிட்டு, "எல்லாம் கண்ணன் திருவிளையாடல். அவன் சித்தம் எப்படியோ, அப்படித்தான் எல்லாம் நடக்கும். வல்லபனின் முடிசூட்டு விழா முடிந்தவுடன் நாம் புறப்படுகிறோம்" என்றார்.

"இந்தப் பாலகனையும் எடுத்துக் கொண்டா?" சீடன் கேட்டான்.

"ஆமாம்; குழந்தை நம் கூட்டத்தில் ஒருவன். தாயும் தந்தையும் நாம் தான். இறைவனின் குழந்தை இந்தப் பாலகன். அவனது செவிகளில் எப்போதும் இறைவன் திரு நாமமே கேட்கவேண்டும். அவன் பெரிய அறிஞனாக வளரவேண்டும்..." என்று கூறினார்.

கேசவசுவாமி அந்தப் பாலகனைத் தம் இரு கரங்களாலும் தூக்கி எடுத்து அணைத்து, உச்சி முகர்ந்து, ஆரத்தழுவி, முத்தம் பொழிந்து, கொஞ்சிக் குலவி வெளியே கொணர்ந்து உட்கார வைத்தார். பாலகன் தன் பிஞ்சுக்கரம் கொட்டி நகைத்தான். எதிரே இருந்த சிறு தேரை உருட்டினான். யானை, ரிஷபம், மான், மயில் போன்று மண்ணால் செய்யப்பட்ட உருவங்களைக் கரங்களால் தூக்கியும், கீழே வீசியும் கலகலவென்று சிரித்தான்.

கேசவசுவாமி பாலகனின் பால்வடியும் வதனத்தையே நோக்கியவாறு இருந்தார். அவர் ஏனோ பெருமூச்சு விட்டார்.

அப்போது யாரோ வந்துநிற்கும் அரவமும் மெல்ல விசும்பும் ஓசையும் கேட்டன. சுவாமி திரும்பி நோக்கினார். பரபரப்புடன் எழுந்தார்.

"அரசே! வரவேண்டும் வரவேண்டும்" என்று வரவேற்றார். சீடர்களை அழைத்து இருக்கை கொண்டுவரச் சொன்னார்.

சோழமன்னர் ராஜராஜன் கேசவ சுவாமியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று, "சுவாமி தங்களுக்குத் தெரிவிக்காமல் வந்து விட்டேன். மன்னிக்க வேண்டும்" என்றார்.

"நீடுவாழ்க' என்று ஆசிகூறிய கேசவ சுவாமி மேலும் தொடர்ந்தார்.

"மன்னவா! இங்கே வருவதற்கு முன் அறிவிப்பு வேண்டுமா? நாளை புறப்பட்டுப் பழையாறைக்கு வர நானே எண்ணியிருந்தேன். ஆனால்..." என்று கூறி சுவாமி நிறுத்தினார்.

மன்னர் விழிகளில் நீர் ததும்பி நின்றது. உதடுகள் என்ன - உடலே மெல்லத் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கேசவசுவாமி வாயிலை நோக்கினார். மன்னருடன் பரிவாரங்கள் காணவில்லை. பவனி புறப்படும் போது அணியும் ஆடை ஆபரண மகுடம் ஆகிய எதையும் மன்னர் அணியவில்லை. உடைவாளும் இல்லை.

"சுவாமி! என்னுடன் மெய்க் காவலர் யாரும் வரவில்லை. நான் இங்கே வருவது ஒருவருக்கும் தெரியாது. இரவெல்லாம் உறக்க மில்லை. பொழுது புலருவதற்காகக் காத்திருந்தேன். நேற்றெல்லாம் மனத்திலே பலவிதப் போராட்டங்கள்; குழப்பங்கள். நாம் திட்டமிட்டபடி இளவரசுப் பட்டாபிஷேக விழா நடைபெறுமா என்ற சந்தேகம் எனக்கு எழுந்துவிட்டது. வல்லபன் தன் திருமணத்தைக் குறித்துத் தனக்கென்று ஓர் எண்ணம் கொண்டிருக்கிறான்..." என்று கூறிச் சற்றுப் பேச்சை நிறுத்தித் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார் அரசர்.

கேசவசுவாமி ஏதும் பேசாது மௌனமாக இருந்தார். குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. மண்ணால் ஆன தேரை இழுத்தது. வந்த வேகத்தில் தேர் கவிழ்ந்தது. குழந்தை கை கொட்டிச் சிரித்தது.

சோழ மன்னர் குழந்தையைப் பார்த்தார். அவரது செல்வம், சோழ நாட்டின் வாரிசு, மாளிகையில் தாதியர் மடியில் கம்பீரமாக இருந்து தங்கத்தால் ஆன பதுமைகளுடன் விளையாடிக் கொண்டிருக்க வேண்டிய பாலகன், குடிலின் புழுதியில் மண் பொம்மையுடன் விளையாடினான். நறுமணத் தைலம் தடவி வாரி விடப்படவேண்டிய அவன் கூந்தல் சரிவர எண்ணெய் காணாமல் பழுப்பு நிறம் பரவியிருந்தது.

திருச்சிற்றம்பலமுடையார் நம்பி பல்லவரையர் மார்த்தாண்ட நாயகர். அவரது சேவைக்காக அவரை முதல் அமைச்சர் ஆக்கினேன். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் என் உயிர் நண்பர். குழந்தைகளை என் கண்ணில் படாமல்



வளர்க்க வேண்டும் என்றால் இப்படி சந்நியாசியிடமா ஒப்படைப்பது? தன் உணவுக்கே பிறர் கையை எதிர்பார்த்து இருக்கும் முனிவரிடம் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைக்கலாமா? நாளை இந்த நாட்டை அரசாளப் போகும் அரசகுமாரனை அநாதைபோல் வளர்ப்பதா?

"குழந்தாய்! என் செல்வமே" என்று ஓடிச் சென்று வாரியணைத்து முத்தமாரி பொழிந்து குழந்தை திக்பிரமையுடன் கதறும் வரை அழுத்தமாக முகத்துடன் அணைத்துக் கொண்ட ராஜராஜர், "மகனே! உன்னைப் பிரிந்திருக்க என்னால் முடியாதடா, வானத்துச் சூரியனே! குலம் விளங்க வந்த கோதிலாப் பூங்கொத்தே" என்று பலவாறாகக் கூறி, தம் ஆசையைப் பாசத்தை வெளியிட்டார். பலவந்தமாக வெளியிட்ட ஆசையால் அதிர்ச்சியுற்ற குழந்தை கதறி அழுதது.

"ஏ, ராஜன்! இப்படித் தள்ளி வாரும். என்ன காரியம் செய்து விட்டீர்?" என்று கேசவசுவாமி கர்ஜித்து, குழந்தையை அவரது அணைப்பினின்று பறித்துப் பிரித்து, சீடனை அழைத்து, "குழந்தையை உள்ளே கொண்டு போ" என்று கூறினார்.

திகைத்து நின்ற அரசரைப் பார்த்து, "மன்னவா! நீர் செய்தது சரியென்று உமக்குப்பட்டதா?" என்று சீற்றத்துடன் கேட்டார்.

கேசவ சுவாமியை நோக்கித் திக்பிரமையுடன் நின்ற ராஜராஜன், தழுதழுத்த குரலில், "நான் என்ன பிழை செய்து விட்டேன் சுவாமி?" என்று கேட்டார்.

"நீங்கள் இங்கு வந்தது தவறு."

"இரவு முழுவதும் தூங்காமலிருந்த என் உள்ளத்தில் ஏற்பட்ட பீதியை, வேதனையைக் கூற வந்தேன்."

"குழந்தையைக் காண வரவில்லையா?"

"குழந்தை இங்கு வளருகிறான் என்பதே என் நினைவிலில்லை."

"நினைவை விட்டு அகன்றிருக்கும் ஒரு நிகழ்ச்சி திடீரென்று எவ்வாறு நினைவுக்கு வந்தது?"

"இங்கு வந்தேன். பிள்ளைப் பாசம் என் மதியைக் கட்டி விட்டது."

"இதன் விளைவு உமக்குத் தெரியுமா?" கேசவசுவாமி இப்படி கடுமையான குரலில் கேட்கவும், சொல்வதறியாது திகைத்து நின்றிருந்த அரசரை நோக்கி, "சோழநாட்டு மாமன்னரே! என் மீது உமக்கு நம்பிக்கை உண்டா?" என்று கேட்டார்.

''ஆகா; என்ன கேள்வி கேட்டு விட்டீர்கள்? தாங்கள் என் குரு. எங்கள் குலகுரு. இந்த நாட்டின் குரு. நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்ட கேள்வியே என்னைச் சுட்டுக் கொல்கிறது'' என்று பயபக்தியுடன் கூறினார்.

''நான் கூறியது நினைவிருக்கின்றதா? இந்தக் குழந்தைகள் இந்த சந்நியாசியின் வீட்டிலும், மற்றொரு கவியரசர் வீட்டிலும் வளர் வதற்குக் காரணம் தெரியுமா?'' என்று கேசவசுவாமி சுற்றி வளைக் காமல் கேட்டார். மன்னரின் உடல் சிலிர்த்தது. மெல்ல நடுங்கியது. ''குழந்தைகளை நான் பார்க்கவே கூடாது என்று கட்டளை யிட்டிருந்தீர்கள்'' என்றார் மன்னர்.

''எப்பொழுதுமே தங்கள் அருகில் மாளிகை சுகங்களுடன் வளரவேண்டிய குழந்தைகளை ஏன் நான் பிரித்தேன்? உங்களுடைய நன்மைக்காகத் தான், மன்னரே! உம்முடைய நன்மைக்காகத் தான்!''

ராஜராஜன் உடல் நடுங்கியது.

''நீங்கள் இன்னும் சிறிது காலம் வாழ வேண்டும் என்பதற்காகத் தான். குழந்தைகளுக்குப் பல ஆண்டுகள் வரை கிரக பலன் சரியில்லை. இந்த மூத்த குழந்தையை விட இளைய குழந்தைக்குப் பலன் சரியில்லை...''

கேசவசுவாமியின் விழிகள் மூடியிருந்தன.

''நல்லவேளை, இளையவனை நீங்கள் பார்க்கப் போக வில்லை....''

''இங்கே வந்து பார்த்துப்பிறகு, கவிஞர் வீட்டிற்கும் செல்ல எண்ணினேன்.''

''அரசே! இப்படியே திரும்பிச் செல்லுங்கள். அடுத்த திங்கட்கிழமை வல்லபனுக்கு மண்டை கவிழ்த்து விட வேண்டும்... உடனே ஆக வேண்டும்... புறப்பட்டுச் செல்லுங்கள்...'' சுவாமியின் பேச்சு கட்டளையைப் போலிருந்தது.

மேல் உத்தரீயத்தினால் கண்களைத் துடைத்துக் கொண்ட சோழ மன்னன், நெஞ்சு தழுதழுக்க, ''சுவாமி! பட்டாபிஷேகம் நடைபெறாது போல் தோன்றுகிறதே! அதைக் கூறத் தானே ஓடோடி வந்தேன்'' என்றார்.

''எல்லாம் நடக்கும்...''

''பெருமான் நம்பி பழையாறையை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்; அவருக்கு என் மேல் கோபம் தான். தன் மகளை வல்லபனுக்கு மணம் புரிவிக்கவில்லையாம்'' என்றார் அரசர்.

''யார் யாரை மணக்கப் போகிறார்கள் என்ற முடிச்சு அதோ, அங்கே கண்ணபிரானால் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் உடனே பழையாறைக்குச் செல்லுங்கள், நம்பியை உடனே அழைத்து வர வேதனமுடையாரை அனுப்புங்கள்'' என்றார்.



''சுவாமி! வல்லபன் எண்ணம் வேறாக இருக்கிறதே...'' என்றார் அரசர்.

''நாம் இங்கே பேசி எல்லாவற்றையும் முடிவு செய்து விட முடியாது. நீங்கள் குழந்தையைப் பார்த்ததே பெரிய தவறு. உடனே புறப்படுங்கள். வல்லபனுக்கு மகுடாபிஷேகம் செய்விக்க ஏற்பாடு செய்யுங்கள்...'' என்று கூறிய கேசவசுவாமி, ஏதோ சொல்லக் கூடாததைக் கூறிவிட்டது போல் 'கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

குதிரை விரைந்து சென்று கொண்டிருந்ததே தவிர, ராஜராஜனுக்குக் குழந்தையின் நினைவு தான். குழந்தைகளைப் பழையாறை மாளிகைக்கே திரும்பவும் வரவழைத்து விட்டால் என்ன?... எனக்குத் தானே ஆகாது... ஆகாமல் போகட்டும். ஆனால் குழந்தைகள் சுகமாக வளருமல்லவா?'' என்ற எண்ணத்துடன் அரண்மனையை அடைந்தார்.

அங்கே அவருக்குக் காத்திருந்த செய்தி அதிர்ச்சி தரக்கூடியதாயிருந்தது. வல்லபன் இளவரசர் பொறுப்பை ஏற்காமல் தியாகம் செய்துவிட்டுப் புறப்பட்டுப் போய் விட்டான் என்பதே அச்செய்தி.

## 20. மகுடாபிஷேகம்

சந்திரப்பிரபா வந்து சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் வல்லபன் அங்கு வந்தான். நெறியுடைப் பெம்மா தன் மனக்கவலை முகத்தில் பிரதிபலிப்பதை மாற்றிக் கொண்டாள்.

''அம்மா! சற்று முன்பு இங்கு யாராவது வந்து சென்றார்களா?'' என்று வல்லபன் கேட்டான்.

தாய் அவன் முகத்தையே உற்று நோக்கினாள். வேங்கியினின்று சந்திரப்பிரபா வந்து சென்றாள் என்பதை அவள் மறைக்க விரும்பவில்லை. தன் மகனுடைய மனத்தை மாற்ற முடியும் என்றே நம்பினாள்.

''ஆம், மகனே! உனக்கு வேண்டியவர்கள் வந்தார்கள்'' என்று கூறிச் செல்வி மெல்லிய முறுவலை உதடுகளில் பிரதிபலித்தாள்.

வல்லபன் ஒரு கணம் திகைத்தான். அவனுடைய தீர்மானம் சரியாகத் தான் இருக்கும்.

''வேங்கியிலிருந்து சந்திரப்பிரபா வந்திருக்கிறாளா?'' என்று மிகுந்த பரபரப்புடன் கேட்டான்.

தன் மகனுடைய பரபரப்பைக் கவனித்த செல்வி, ''உனக்கு வேண்டியவர்கள் என்றவுடன் நீ அவளைக் குறிப்பிட்டது எனக்கு வியப்பை அளிக்கிறது'' என்றாள்.

"ஆம் தாயே! இந்த உலகத்தில் எனக்கு வேண்டியவர்கள் இருவர். ஒருவர் என்னைப் பெற்றெடுத்து உருவாக்கி, என் நலனையே என்றும் சிந்தனையில் கொண்டிருக்கும் தாங்கள். மற்றவள் - பல காத தூரத்தில் எனக்காகவே காத்திருக்கும் வேங்கி நாட்டு மங்கை சந்திரப்பிரபா. நாடும் ஊரும் அற்றவனாக நான் வேங்கிக்கு வந்த போதே என்மீது நம்பிக்கை வைத்து, தன் இதயத்தைப் பறிகொடுத்தவள். எனக்கு வேங்கி கிடைக்கும் என்றோ, அல்லது சோழநாட்டு இளவரசனாக ஆகும் பாக்கியம் பெறுவேன் என்றோ அவள் எதிர்பார்க்காமல் தன்னை என்னிடம் ஒப்படைத்தாள். அதனால் வேண்டியவர் என்றவுடன் அவள் நினைவு வராமல் வேறு யார் நினைவு வரும் தாயே?" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கேட்டான். பிறகு தொடர்ந்து 'தாயே! அவள் எங்கே? வேங்கியினின்று என்னைத் தேடிவந்த அவள் என்னைக் காண எங்கெல்லாம் அலைந்தாளோ?" என்றான்.

"என் மகன் வல்லபனைத் தேடிக் கண்டு பிடிப்பதில் தொல்லை ஏது? உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் விழா நாள் நெருங்க, நெருங்க, உன்னைப் பற்றி அறியாதார் இந்த நகரத்தில் யார் இருக்கப் போகிறார்கள்? கங்காபுரிக்குச் சென்று அங்கு நீ இல்லாததால் இங்கு தேடிவந்து விட்டாள்" என்றாள் செல்வி.

வல்லபன் இருக்கையை விட்டு எழுந்து, "தாயே, அவள் எங்கே? எங்கே தங்கியிருக்கிறாள். உடனே நான் கண்டாக வேண்டும்" என்றான் பரபரப்புடன்.

"அமைதி கொள் மகனே! உள்ளத்து உணர்ச்சியை வெளிக்கு உடனே புலப்படுத்திக் கொள்ளாமையும், எடுத்த முடிவை முகத் தோற்றத்திலிருந்து அறிய முடியாமையும் ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய கலை" என்றாள் செல்வி.

"கடும் புயல் வீசும் போதும், கடல் கொந்தளிக்கும் போதும், சட்டமும் கட்டுப்பாடும் நிலைத்து நிற்குமா?" வல்லபன் குரலில் பொறுமையின்மை பொங்கி நின்றது.

"இளவரசுப் பதவியை ஏற்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்து நிற்கும் நீ புயல், கொந்தளிப்பு என்று பேசலாமா?" என்று செல்வி கேட்டாள்.

"ஆம்! தாயே! என் மனத்தில் புரிய முடியா வேதனை. நான் சூடப்போகும் மகுடம் முள் போல் தோன்றுகிறது. அளிக்கப்படும் உடைவாள் நாக சர்ப்பம் போல் காட்சியளிக்கிறது" என்றான் வல்லபன்.

"மகனே! என்ன நேர்ந்து விட்டது உனக்கு? உன்னைத் தேடி வந்த மகுடத்தை முள் என்கிறாயே?"

"ஆம் தாயே! என்னுடைய சுய சுதந்திரத்தைப் பறிக்கும் மகுடத்தை வேறு எப்படி அழைப்பேன்?"

"பொன் விளையும் நாடு, விஜயாலயர் வளர்த்த நாடு, அதன் இளவரசுப் பட்டம் சாதாரணமானதா? உன் சுதந்திரத்தைப் பறிக்கிறதா? உனக்கு மணம்



முடிக்கத் திருக்கோவலூர் மலைய மானும், முதல் அமைச்சர் நம்பியும் போட்டி போடும் போது பதவியின் முக்கியத்துவம் உனக்கு தெரியவில்லையா?"

"தெரிந்துதான் சொல்கிறேன். நான் இளவரசன் என்றறிந்த மலையமான் தம்மகளைக் கொடுக்க முன் வருகிறார். ஆனால் நம்பி அவர்கள் என் பதவிக்காகத் தன் மகளை மணம் முடிக்க முன் வரவில்லை. ஆனால் நம்பியின் எண்ணம் ஈடேறவில்லை. அவர் தில்லை நகரை நோக்கிப் புறப்பட்டு விட்டார்" என்று வல்லபன் கூறியவுடன், செல்வி திடுக்கிட்டு, "பெருமான் நம்பி பழையாறையை விட்டுப் போய் விட்டாரா?" என்று கேட்டாள். பிறகு, "வல்லபா! சக்கரவர்த்தியின் முடிவுப்படி நான் நடக்க வேண்டும். நான் அவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்" என்றாள்.

வல்லபன், தாய் கூறியதைக் கேட்டுக் கொள்ளாமலேயே, "நான் சக்கரவர்த்தியிடம் கூறிவிட்டேன். திருமண விஷயத்தில் அவர் யோசனையை ஏற்க விரும்பவில்லை. சந்திரப்பிரபாவுக்குக் கொடுத்த வாக்கை நான் மீற விரும்பவில்லை..." என்றான்.

"வல்லபா! நான் கூறுவதைப் பொறுமையுடன் கேள். நான் சந்திரப் பிரபாவிடம் மனம் விட்டுப் பேசிவிட்டேன். சோழநாட்டு இளவரசுப் பதவிக்குக் குறுக்கே அவள் நிற்க விரும்பவில்லை..." என்று செல்வி கூறியபோது, வல்லபன் கோபக் குரலில், "நீங்கள் என்ன சொல்லி விட்டீர்கள்?..." என்று கேட்டான்.

"நான் எல்லாம் சொல்லி விட்டேன். என் மகன் வல்லபன் அரச குலத்து மங்கையை மணந்தாக வேண்டும் என்று கூறிவிட்டேன். அவள் மிகவும் குணமுடையவள். உண்மையிலேயே உன் நலனைத் தான் விரும்புகிறாள். சோழ நாட்டு இளவரசனாகப் போகும் பேறு பெற்றிருக்கிறாய் என்பது இதுவரை அவளுக்குத் தெரியாதாம்..."

"அம்மா! என்னைக் கேட்காமல் நீங்கள் அவளிடம் என்ன பேசினீர்கள்?"

"உன்னைக் கேட்காமலேயே, உன்னை இளவரசனாக ஆக்கும் முயற்சிக்கு ஆதரவு தந்து, வாக்குக் கொடுத்தேனே, அதுபோல்..."

"இது ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயம்."

"நானும் ஒரு பெண் தானே வல்லபா? மற்றொரு பெண்ணுக்குத் தீங்கு செய்வேனா?"

"என்ன முடிவு எடுத்தீர்கள்?"

"வேங்கி மகள் மிக நல்லவள். அவள் வேங்கிக்குத் திரும்பவும் செல்லப் புறப்படுகிறாள்..."

"ஆ! என்னைப் பார்க்காமலே புறப்படுகிறாளா? அம்மா, இதைவிடக் கொடுமை எனக்குத் தாங்கள் செய்ய முடியாது. பெண் மற்றொரு பெண்ணுக்குத்

தீங்கு செய்ய மாட்டாள் என்கிறீர்கள். வேங்கியிலிருந்து என்னைத்தேடி ஒரு பெண் தன்னந்தனியாகக் கங்கை கொண்ட சோழபுரம் வந்து, அங்கும் காணாமல், பழையாறைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறாள் என்றால், அது ஒரு பெரிய தியாகமல்லவா?''

''இருக்கலாம். அவள் தனியாக வரவில்லை, அவளுடைய சகோதரர்களுடன் வந்தாள். தக்க வசதியுடன் வந்தாள். ஆனால் அவளுடைய சகோதரர்கள். புரிந்து கொண்டு விட்டனர் நீ சோழநாட்டு இளவரசராகும் வாய்ப்பைக் கெடுக்க அவர்கள் விரும்பவில்லை.''

''ஒரு பெண்ணின் தியாகம் சாதாரணமானதன்று. ஒரு கணமாவது அவள் என்னைச் சபிப்பாள்.''

''இல்லை; அவள் மகிழ்வுடன் செல்கிறாள். நான் அவளுக்கு ஒரு வரமும் கொடுத்துள்ளேன்...''

''தியாகம் செய்து உள்ளம் நொந்தவளுக்குக் கொடுக்கும் வரத்தால் என்ன பலன்?''

''மகத்தான பலன், உன்னை என்றும் அவள் உள்ளத்தில் ஏற்றி வைத்திருக்கும் உரிமையை அளித்தேன்.''

''அவள் உள்ளத்தில் என்னை அழிக்காமல் வைத்திருப்பதற்கு மற்றவர் உரிமை தர வேண்டுமா?''

''ஆமாம்; நீ சாதாரணக் குடிமகனல்லன்; அரச குடும்பத்தைச் சேர்ந்தவன். இப்போது இளவரசனாவதால் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாகிறாய் என எண்ணிவிடாதே. ஏற்கெனவே நீ வேங்கியின் மன்னனாகும் உரிமை பெற்றவன். நீ யாரை மணக்கவேண்டும், யாரை நேசிக்கவேண்டும் என்று சொல்ல மற்றவருக்கு உரிமை உண்டு.''

''நான் விரும்பவில்லை. அப்படிப்பட்ட அரச குலத்தொடர்பு வேண்டாம். பட்டம் வேண்டாம்; பதவி வேண்டாம். நான் முன்பே முடிவு செய்து விட்டேன். எனக்கு இளவரசுப் பதவி வேண்டாம். சக்கரவர்த்தியிடம் முடிவைக் கூறிவிட்டேன். சந்திரப்பிரபா இல்லாத பதவியை நான் வேண்டேன்.''

''அவள் அரச குடும்பப் பெண் இல்லை வல்லபா!''

''தாயே! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் முடிவு செய்து விட்டேன். அதைத் தெரிவிக்கவே வந்தேன். வேங்கியிலிருந்து என் அபிமான வல்லி வந்திருப்பதைக் கேட்டவுடன் என் முடிவு உறுதியாகி விட்டது. தாயே! என்னைத் தவறாக நினைக்காதீர்கள். நல்ல வேளையாக இளவரசுப் பட்டம் சூட்டும் விழா நடைபெறவில்லை. வேறு தக்கவர் கிடைக்காமல் போய்விட



மாட்டார்கள்'' என்று கூறி நிறுத்திய வல்லபன், தான் உடுத்தியிருந்த அரச குல உடைகளைக் களைந்து விட்டு, எளிய உடையை அணிந்து கொண்டு, தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

பிறகு எழுந்து, ''தாயே! எனக்கு விடை கொடுங்கள்.'' நான் சந்திரப் பிரபாவைச் சந்திக்க உடனே செல்லவேண்டும்; பலகாத தொலைவிலிருந்து, சோழநாட்டுக்கு வந்த திருமகளை உடனே திரும்பிச் செல்லுமாறு செய்வது நியாயமன்று. நான் சென்று தடுத்து நிறுத்துகிறேன். இனி என் சுதந்திரத்தில் ஒருவரும் தலையிட்டுத் தடை செய்ய முடியாது'' என்றான். குரலில் கம்பீரம் இருந்தது.

செல்வி திடுக்கிட்டாள். ''வல்லபா! நான் சொல்வதைக் கேள். அருண்மொழித் தேவரும், மதுராந்தகரும் வகித்த மகத்தான இளவரசர் பதவியை ஒரு பெண்ணின் காதல் நிமித்தம் உதறித் தள்ளாதே'' என்றாள்.

வாயிற் கதவருகே சென்ற வல்லபன், திரும்பி வந்தான். ''தாயே! என்னை மன்னித்து விடுங்கள் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஒரு பெண்ணின் தூய அன்பை விடச் சோழநாட்டு இளவரசுப் பதவி பெரிதன்று. வருகிறேன்'' என்று கூறிவிட்டு, விரைந்து சென்றான், கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி.

சந்திரப்பிரபா வல்லபனை அங்கே எதிர்பார்க்கவில்லை. மீண்டும் வேங்கிக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வர அவளது சகோதரர்கள் வெளியே சென்றிருந்தார்கள்.

வல்லபனைக் கண்டவுடன் சந்திரப்பிரபா ஒரு கணம் திகைத்தாள். அவளுக்குப் பேச நா எழவில்லை. மறுகணம் ஓடிடோடி வந்து, வல்லபன் தோள்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

''என்னை மறந்து விடுங்கள்...'' என்று கூறுவதற்குள் அவள் பட்ட பாடு...

வல்லபன் அவளது கூந்தலை மெல்லக் கோதியவாறு, ''சந்திரப்பிரபா! உன்னை எப்படி மறக்கமுடியும்?'' என்று கூறினான்.

''மறந்துதான் ஆகவேண்டும். என்னை விட நாடு பெரிது.''

''அப்படி நான் நினைக்கவில்லை. எனக்கு நீதான் பெரியவள். இதயத்தில் அமர்ந்தவள். நான் இளவரசுப் பட்டத்தை நிராகரித்து விட்டேன்.''

வல்லபன் இவ்வாறு கூறியவுடன், தீயை மிதித்தவள் போல் சந்திரப்பிரபா அவனிடமிருந்து விலகி நின்றாள்.

''நான் தங்கள் தாயிடம் வாக்களித்து விட்டேன். தங்கள் பதவிக்கு என்னால் இடையூறு வரக்கூடாது. நான் இங்கு வந்ததே பெரும் பிழை. நாளை நான் புறப்படுகிறேன். ஆனால், நான்.... நான் தங்களை ஒரு நாளும் மறக்கமாட்டேன்'' என்று கூறித் தலையைக் குனிந்து கொண்டு விம்மினாள். இருகரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

''சந்திரப்பிரபா! நானும் உன்னுடன் வேங்கிக்கு வருகிறேன்.... எப்படியும் வேங்கியின் அரியணை எனக்கு உறுதி. நீ அரசியாவது உறுதி'' என்றான்.

''தாங்கள் என்னுடன் வரக்கூடாது. உங்கள் தாயிடம் கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்'' என்று அவனைத் திரும்பிப் பாராமலேயே பேசினாள்.

''சந்திரப்பிரபா! நான் என் முடிவைச் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து விட்டேன். என் தாயிடமும் கூறிவிட்டேன். நான் உன்னுடன் வருவது உறுதி. பதவி எனக்குத் துரும்பு?'' என்று கூறிக் கொண்டிருக்கும் போது, வெளியே, யாரோ வரும் அரவம் கேட்டது.

சந்திரப்பிரபா தங்கியிருந்த குடிலின் வெளியே சிவிகை வந்து நின்றது. குதிரைகளில் வீரர்கள் வந்து இறங்கினார்கள். அலங்கரிக்கப் பட்ட தேர் வந்து நின்றது. இரட்டைக் குதிரைகள் தேரில் பூட்டப்பட்டிருந்தன.

குதிரை மீதிருந்து திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் இறங்கி, வல்லபனை நோக்கி வந்தார்.

''இளவரசே! தங்களை எங்கெல்லாம் தேடுவது? புறப்படுங்கள், புறப்படுங்கள். மிக அவசரம்'' என்றார். அவர் முகம் வாடியிருந்தது. அங்கே நின்ற வீரர்கள் தலையைத் தாழ்த்தியவாறு நின்று கொண்டிருந்தனர்.

வல்லபன் திகைத்தவாறு நின்றான். ''நான் இளவரசன் அல்லன் வல்லபன் என்றே என்னை அழைத்தால் போதும்'' என்றான்.

நம்பி அவன் கூறியவற்றைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''இளவரசே! நாம் எதிர்பாராதது நடந்துவிட்டது. நேற்று எனக்குச் செய்தி வந்தது. சக்கரவர்த்தியின் உடல் நிலை மோசமாகி விட்டது என்று கேள்விப்பட்டவுடன் நான் புறப்பட்டுப் பழையாறைக்கு வந்தேன். நான் மனத்தாங்கலுடன் புறப்பட்டது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போது உணர்கிறேன். இளவரசே! சோழநாட்டுக்குக் கைம்மாறு கருதாப் பணிகள் பல செய்துள்ளேன். அரசர் வேறு நான் வேறு என்று கருதியதே இல்லை... ஆனால், கடைசியில் சோழர் குடும்பத்துடன் மணத்தொடர்பு கொள்ள வில்லையே என்ற எண்ணத்தில், மாதண்ட நாயகர் பதவியையும், முதல் அமைச்சர் பதவியையும் துறந்து, சிதம்பரத்திலேயே தங்கி விட முடிவு செய்து புறப்பட்டு வந்து விட்டேன். தாங்களும், வேங்கி மகளை மணம் புரிந்து கொள்வதில் பிடிவாதம் காட்டினீர்கள். இளவரசர் பதவியைத் தியாகம் செய்து விட்டீர்கள்.

''சக்கரவர்த்தி இதை அறிந்தவுடன் மிக அதிர்ச்சி அடைந்து விட்டார். எதைச் செய்யக் கூடாது என்று கேசவசுவாமி தடுத்திருந் தாரோ அதைச் செய்தார். உடல்நிலை திடீரென்று மோசமாகியது. இதய வலி ஏற்பட்டது. நான் வந்து சேர்ந்தவுடன் என் மடியில் தம் தலையை வைத்துக் கொண்டு ஓரிரு வார்த்தைகள் பேசிய பிறகே உயிரை நீத்தார். அவரது கடைசிச் சொற்கள் தங்கள்



இளவரசுப் பட்டத்தைக் குறித்ததே. காதலுக்காகத் தாங்கள் தியாகம் செய்ததை நான் அறிவேன். தியாக வல்லபனான தாங்கள் மற்றொரு தியாகம் செய்து தான் ஆகவேண்டும். தாங்கள் இப்போது சோழநாட்டின் இளவரசர் மட்டும் அல்லர். சோழ நாட்டின் சக்கரவர்த்தி, இராசாதி ராசர் என்ற பெயரைத் தங்களுக்குச் சூட்டி, சோழ மாமன்னராக ஆக்க கேசவ சுவாமிகள் யோசனை கூறிவிட்டார்கள்...' என்று நம்பி கூறி வரும்போது, வல்லபன், ''ஆ! சக்கரவர்த்தி இறந்துவிட்டாரா?'' என்று அலறினான்.

''இளவரசே! தங்களுக்கு உடனே இளவரசர்க்குரிய மகுடத்தைச் சூட்டவேண்டும். இராஜராஜருக்கு இறுதிச் சடங்குகள் செய்த பிறகு, தங்களுக்கு நல்லதொரு நாளில் மகுடாபிஷேகம் செய்யவேண்டும். இராஜராஜரின் புதல்வருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும். முன்பு தாங்கள் எடுத்துக் கொண்ட உறுதியை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இளவரசுப் பட்டம் சூடப்போகும் குழந்தை வளர்ந்து தக்க வயதடையும் போது நாட்டை அவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். உம். புறப்படுங்கள்'' என்றார்.

பேரதிர்ச்சி தரும் மன்னரின் மரணச் செய்தியை அறிந்த நிலையிலும் வல்லபன் ஒன்று கேட்டான் :

''சின்னஞ்சிறு இளவரசர் பட்டமேற்பு விழாவில் சிறு குழந்தைக்கும் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமல்லவா? அரச குடும்பப் பெண் எங்கு பிறந்திருக்கிறாள் என்று தேடிப் பார்க்க வேண்டியது நமது கடமை. எனக்கு ஏற்பட்டது போன்ற பிரச்னை சிறுவனுக்கு ஏற்படாது?'' என்றான் சிறுமுறுவலுடன்.

''இளவரசே! விவரித்துக் கொண்டிருக்க நேரமில்லை. சக்கர வர்த்தியின் உடலைத் தைலமிட்டுப் பாதுகாத்து வைக்கச் சொல்லி இங்கு விரைந்து வந்திருக்கிறேன். உடனே புறப்படுங்கள்'' என்றார்.

''நான் வேங்கிக்குப் புறப்படத் திட்டமிட்டிருக்கிறேன்'' என்றான் வல்லபன்.

''தெரியும். தங்கள் தாய் எல்லாம் கூறினார்கள். நீங்கள் புறப்பட்டு வந்தவுடன் தங்கள் தாய் அதிர்ச்சி மிக அடைந்து படுத்த படுக்கையா யிருக்கிறாள். சோழநாடே தங்களை எதிர்பார்க்கிறது'' என்று துரிதப்படுத்தினார்.

''அமைச்சரவர்களே! நான் வேங்கி மகளுக்குக் கொடுத்தவாக்கு என்னாவது?'' என்று வல்லபன் கேட்டான்.

நம்பி பெரியதாகச் சிரித்தார். கூடத்தில் அங்கு நடப்பனவற்றைக் கவனித்தவாறு நின்று கொண்டிருந்த சந்திரப்பிரபாவைப் பார்த்தவாறு, ''வேங்கி மகளை மறந்து விடுமாறு நான் சொல்லவில்லை. நமது சக்கரவர்த்தி ராஜராஜன் முப்பாட்டனார் ராஜராஜ சோழதேவர் பட்டத்து அரசியாக அரச குல மங்கையை

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்

ஏற்றார். அதனால் தான் காதலித்த இன்பவல்லியை மறக்கவில்லை. அபிமானவல்லியாக அவள் ராஜராஜரின் இதயத்தில் என்றும் வீற்றிருந்தாள். அரசர்கள் ஒன்றுக்கு மேல் பல பெண்களை மணப்பது மரபு தானே?'' என்று நம்பி கூறி சந்திரபிரபாவைப் பார்த்து, ''வேங்கி மகளே! நீதான் இப்போது சொல்ல வேண்டும். உன்னை இவர் மறக்கவே மாட்டார். சோழநாட்டு அரசராகப் போகும் இவருக்கு நல்ல யோசனை கூறம்மா'' என்றார்.

பிறகு, ''இளவரசரே! தாமதப்படுத்தாதீர்கள். நீங்கள் பழையாறைக்கு வந்துதான் சக்கரவர்த்திகளின் இறுதிச் சடங்குகள் ஆகவேண்டும். பழையாறை நகரமே தங்களை எதிர்நோக்குகிறது. காதலுக்காகப் பதவியைத் துறக்க முற்பட்ட தியாக வல்லபனைக் காண அவர்கள் காத்திருக்கிறார்கள். தியாக வல்லபன் இராசாதிராசனாக மாறி மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டாமா?'' என்று மிக உருக்கமாகக் கேட்டார். 4297866/5877309

வல்லபன் சந்திரப்பிரபாவை நோக்கினான். அவள் சைகை மூலம் இதயத்தைச் சுட்டிக் காட்டி, ''என்றுமே என் இதயத்தில் இடமுண்டு; சக்கரவர்த்தியானதும் தாங்கள் என்னை மறந்து விடக்கூடாது'' என்றாள்.

''பெண்ணே! வல்லபன் உன்னை மறக்க விடமாட்டேன்'' என்றார் நம்பி.

வல்லபன் நம்பியின் கரங்களைப் பிடித்துக் கொண்டு ''அமைச்சர் பெருமானே! தங்கள் வேண்டுகோளை ஏற்கிறேன். தங்களுடைய பக்கபலம் இருந்தால் தான் நான் சோழநாட்டின் மாபெரும் பொறுப்பை ஏற்பேன். தியாக வல்லபனாகவே என் பெயர் என்றும் விளங்கக் காதலையும் தியாகம் செய்யத் துணிவதே இந்த சோழ நாட்டுக்காகத் தான்'' என்றான்.

நம்பி அந்தத் துயரம் நிறைந்த வேளையில் பெரிதாக நகைத்து, ''தியாகவல்லபன் என்ற பெயர் ஒரே ஒரு காரணத்துக்காகத் தான் தங்களைத் தேடிவந்த இளவரசர் பதவியைத் துரும்பாக எண்ணி உதறி விட்டுப் புறப்பட்டீர்களே, அதற்காகத் தான். காதலைத் தியாகம் செய்ய நான் அனுமதிக்க மாட்டேன். இராசாதிராசனாக பழையாறையில் மகுடாபிஷேகம் செய்து கொண்ட பிறகு வேங்கி மகள் சந்திரப்பிரபாவையும், கங்கைபுரி அரண்மனை அந்தப்புரத்தில் அழைத்து வந்து அமர்த்திவிடுவேன்'' என்றார்.

தியாகவல்லபன், சந்திரப்பிரபாவிடம் 'விரைவில் சந்திப்பேன்' என்று விடை பெற்றுக் கொண்டு பழையாறை நோக்கி வீரர்கள் புடைசூழ, திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் உடன்வர சோழநாட்டின் மகுடத்தை ஏற்கப் புறப்பட்டான்.

முற்றும்